லெனின்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு தொகுதிகளில்

✻

தொகுதி

9

பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும்

முதலாளித்துவ ஜனநாயகம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய ஆய்வுரைகளும் அறிக்கையும் (கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது காங்கிரஸ்)

ரு.க.க. (போ)இன் எட்டாவது காங்கிரசின் ஆவணங்கள் (1919, மார்ச் 18-23)

மாபெரும் தொடக்கம்

T. 11977

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!



வி. இ. லெனின், அக்டோபர் 1918 (நூல் திரட்டு, தொகுதி 37)

வி. இ. லெனின்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி

9

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

В. И. Ленин

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

ТОМ 9

на тамильском языке

© தமிழ் மொழிபெயர்ப்பு

முன்னேற்றப் பதிப்பகம், 1982

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102-194}{014(01)-82}$ 805—81 0101020000

பொருளடக்கம்

பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும் 7

முன்னுரை 7
மார்க்சை ஒரு சாமானிய மிதவாதியாக காவுத்ஸ்கி எவ்வாறு மாற்றினுர் 11
முதலாளித்துவ ஜனநாயகமும் பாட்டாளி வர்க்க ஜனநாயகமும் 28
சுரண்டப்படுவோருக்கும் சுரண்டுவோருக்கும் இடையே சமத்துவம் இருக்க முடியுமா? 41
சோவியத்துகள் அரசு அமைப்புகள் ஆக முடியாது. . 52
அரசியல் நிர்ணய சபையும் சோவியத் குடியரசும். 63
சோவியத் அரசியல் சட்டம் 76
சர்வதேசியவாதம் என்றுல் என்ன? 91
''பொருளாதாரப் பகுத்தாய்வு'' எனும் வேடத்தில் முதலாளித்துவ வர்க்கத்துக்கு அடிமைப்படல் . . 114
பிற்சேர்க்கை 1. அரசியல் நிர்ணய சபை மீதான ஆராய்ச்சியுரைகள் 155
பிற்சேர்க்கை 2. அரசு பற்றிய வண்டர்வேல்டின் புதிய புத்தகம் 155

கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது காங்கிரஸ். 1919, மார்ச் 2-6 166

முதலாளித்துவ ஜனநாயகம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய ஆய்வுரைகளும் அறிக்கையும். மார்ச் 4 166

ரு.க.க. (போ)யின் எட்டாவது காங்கிரஸ். 1919, மார்ச் 18-23 194

1. கட்சியின் வேலைத்திட்டம் பற்றிய அறிக்கை. மார்ச் 19 194
2. கட்சி வேலைத்திட்டம் மீதான விவாதத்தை முடித்து வைத்து ஆற்றிய உரை. மார்ச்19. 228
3. நாட்டுப்புறப் பகுதிகளில் நடந்த வேலை பற்றிய அறிக்கை. மார்ச் 23 246
4. நடுத்தர விவசாயிகள் குறித்த உறவு நிலை பற்றிய தீர்மானம் 275

கிழக்கு முனையில் காணும் நிலைமை பற்றி ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யின் மத்தியக் கமிட்டியின் ஆய்வுரைகள் 281

ஹங்கேரிய தொழிலாளர்களுக்கு வாழ்த்து . 286

மாபெரும் தொடக்கம். போர்முனையல்லாத உட்பகுதிகளில் தொழிலாளர்களின் தீரம். ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' குறித்து 294

தெனீக்கினை எதிர்த்து முழுவேகப் போராட்டம்! கட்சி நிறுவனங்களுக்கு ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யின் மத்தியக் கமிட்டி எழுதிய கடிதம். . 335
இந்தத் தருணத்தின் பிரதானக் கடமை 336
கல்ச்சாக் மற்றும் தெனீக்கின் பற்றிய மெய்விவரம் மக்களுக்கு விளக்கப்பட வேண்டும் 339
இராணுவ சேவைக்குத் திரட்டப்பட்டோர் மத்தியில் வேலை 340
துறந்தோடுவோர் மத்தியில் வேலை 341
சேனைக்கு நேரடி உதவி 343
போருக்கு அல்ல வேலையைச் சுருக்குதல் 345
போர் முனை மண்டலத்தில் வேலை 350
இராணுவ நிபுணர்கள் பாலான தோரணை 353
பின்னணியில் எதிர்ப்புரட்சியை எதிர்த்துப் போராட்டம் 357
மக்கள் அனைவரும் போருக்கு ஒன்றுதிரட்டப்பட வேண்டும் 362
''புரட்சிகர வழியில் வேலை செய்தல்'' 364

பதிப்பாளர் குறிப்புகள் 366

பெயர்க் குறிப்பகராதி 402

பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும்

முன்னுரை

வியன்னுவில் அண்மையில் வெளியிடப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனும் காவுத்ஸ்கியின் சிறுபிரசுரம் (Wien, 1918, Ignaz Brand, p. 63). இரண்டாம் அகிலத்தின்[1] படுமோசமான, அவமானகரமான திவால் நிலைமைக்கு மிகவும் துலக்கமான ஓர் உதாரணமாகும். இதைப் பற்றி எல்லா நாடுகளிலும் இருக்கும் எல்லா நேர்மையான சோஷலிஸ்டுகளும் நீண்ட காலமாகப் பேசிவருகின்றனர். பாட்டாளி வர்க்கப் புரட்சி இப்போது பல நாடுகளில் ஒரு நடைமுறைப் பிரச்சினை ஆகிவருகிறது. எனவே, காவுத்ஸ்கியின் ஓடுகாலி குதர்க்கங்களையும் மார்க்சியத்தை அவர் முழுமையாகக் கைவிட்டுவிட்டதையும் குறித்து ஒரு பரிசீலனை செய்வது அத்தியாவசியமானது.

ஆயினும், மார்க்சியத்தோடு காவுத்ஸ்கி முறித்துக் கொண்டது சம்பந்தமாக, இத்த நூலாசிரியர் போரின் வெகு துவக்கம் முதலே, திரும்பத்திரும்பச் சுட்டிக்காட்டினுர் என்பதை முதன்முதலாக வலியுறுத்த வேண்டும். வெளிநாட்டில் பிரசுரிக்கப்பட்டதான *Sotsial Demokrat*[2] மற்றும் *Kommunist*[3] சஞ்சிகைகளில் 1914க்கும் 1916க்கும் இடையே வெளியிடப்பட்ட பல கட்டுரைகள் இந்த விஷயத்தை எடுத்து விளக்கின. பின்னுல் இந்தக் கட்டுரைகள் ஒன்ருகத் திரட்டப்பட்டு கி. ஸினேவியெவ் மற்றும் நி. லெனின் தந்த வெள்ளத்தை எதிர்த்து என்ற மகுடத்தின் கீழ் பெத்ரோகிராத் சோவியத்தால் வெளியிடப்பட்டன (பெத்ரோகிராத், 1918, 550 பக்கங்கள்). 1915ல் ஜினீவாவில் வெளியிடப்பட்டு அதே சமயம் ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு மொழிகளில்[4] மொழி

பெயர்க்கப்பட்டதான ஒரு சிறு பிரசுரத்தில் நான் ''காவுத்ஸ்கி வாதம்'' குறித்துப் பின்வருமாறு எழுதினேன்:

''இரண்டாம் அகிலத்தின் தலைமை நிபுணரான காவுத்ஸ்கி, மார்க்சியத்தின் சொல்லளவிலான ஏற்பு நடைமுறையில் ஸ்துரூவேயிசமாயும் பிரெண்டானேயிசமாயும் மாற்றமடைவதற்கு (அதாவது, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமல்லாத ''வர்க்கப்'' போராட்டத்தை ஏற்கும் ஒரு மிதவாத முதலாளித்துவ தத்துவமாக மாற்றப்படுவது, இதை ருஷ்ய எழுத்தாளர் ஸ்துரூவேயும் ஜெர்மன் பொருளியல் நிபுணர் பிரெண்டானேவும் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர்) எவ்வாறு இட்டுச் சென்றுள்ளது என்பதற்கு மிகவும் தனிமாதிரியான எடுப்பான உதாரணம் ஆவார். இன்னொரு உதாரணம் பிளெஹானவ். அப்பட்டமான குதர்க்கவாதம் மூலம் மார்க்சியத்தின் புரட்சிகரமான உயிர்த்துடிப்புள்ள உணர்வு அகற்றப்படுகிறது. புரட்சிகரப் போராட்ட முறைகள், இந்த முறைகளுக்கான பிரசாரம் மற்றும் தயாரிப்பு, இந்தத் திசையில் மக்கள் திரளுக்குப் போதனை அளித்தல் ஆகியவை தவிர்த்து மார்க்சியத்தில் இருக்கும் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இன்றைய போரில் தாய்நாட்டின் தற்காப்பை அங்கீகரித்தல் பற்றிய சமூக-தேசியவெறியின் அடிப்படைக் கருத்தை இரண்டகமான போலிச் சலுகையுடன்—போர்க் கடன்களுக்கான ஒட்டெடுப்பில் தாம் விலகி நிற்றல், எதிர்க்கட்சியில் இருப்பதாக சொல்லளவில் உரிமை பாராட்டல் இத்தியாதி—கோட்பாடற்ற முறையில் ''இணக்கப்படுத்துகிறார்'' காவுத்ஸ்கி. 1909ல் நெருங்கிவரும் புரட்சிகளின் சகாப்தம் பற்றியும், போர் மற்றும் புரட்சிக்கு இடையிலான தொடர்பு பற்றியும் ஒரு நூல் எழுதிய காவுத்ஸ்கி, 1912ல் நிகழவிருக்கும் போரைப் புரட்சிகரமான முறையில் சாதகப் படுத்திக் கொள்வது பற்றிய பாசெல் அறிக்கையில்[5] கையொப்பமிட்ட காவுத்ஸ்கி இப்போது சமூக-தேசிய வெறியை நியாயப்படுத்துவதிலும் அலங்கரித்துக் காட்டுவதிலும் தம்மைத் தாமே விஞ்சிவிடுகிறார், பிளெஹானவைப் போன்றே புரட்சி குறித்த எந்தச் சிந்தனையையும் உடனடிப் புரட்சிப் போராட்டத்தை நோக்கிய எல்லா நடவடிக்கை

களையும் ஏளனம் செய்வதில் முதலாளித்துவ வர்க்கத்தினருடன் சேர்ந்து நிற்கிறார்.

''இந்தப் பின்சறுக்கல் போக்கு, முதுகெலும்பற்ற தன்மை, சந்தர்ப்பவாதத்திற்கு அடிபணிதல் மற்றும் மார்க்சியத்தை இணைவரையற்று தத்துவ முறையில் கொச்சைப்படுத்தல் ஆகியவற்றை எதிர்த்து ஒரு தாட்சண்யமற்ற போராட்டத்தினை நடத்தாமல் தொழிலாளி வர்க்கம் தனது உலகப் புரட்சிகரப் பாத்திரத்தை வகிக்க முடியாது. காவுத்ஸ்கிவாதம் தற்செயலானதல்ல, அது இரண்டாம் அகிலத்தின் அகத்தே உள்ள முரண்பாடுகளின் சமூக விளைவாகும், சொல்லளவில் மார்க்சியத்திடம் விசுவாசம், செயலில் சந்தர்ப்பவாதத்துக்கு அடிபணிதல் என்பதன் கலவையின் சமூக விளைவாகும்.'' (கி. ஸினேவியெவ் மற்றும் நி. லெனின், *சோஷலிசமும் போரும்*, ஜினீவா, 1915, பக்கம் 13-14).

மேலும், 1916ல் எழுதப்பட்டு 1917ல் பெத்ரோகிராதில் வெளியிடப்பட்ட **ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் மிக அண்மையக் கட்டம்*** எனும் எனது நூலில் ஏகாதிபத்தியம் குறித்த காவுத்ஸ்கியின் வாதங்கள் அனைத்திலுமுள்ள தத்துவார்த்தத் தவறுகளை நான் விரிவாகப் பரிசீலித்தேன். ஏகாதிபத்தியம் பற்றிய காவுத்ஸ்கியின் வரையறுப்பை நான் மேற்கோள் காட்டினேன்: ''ஏகாதிபத்தியம் என்பது உயர் வளர்ச்சியடைந்த தொழில் துறை முதலாளித்துவத்தின் விளைவு. அவைகளில் எந்த மக்கள் இனம் தங்கிவாழ்ந்தாலும் சரி அந்த நிலப் (அழுத்தம் காவுத்ஸ்கியினுடையது) பிரதேசங்களையும் அதிக அளவில் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவது அல்லது வென்று சேர்த்துக் கொள்வது என்பதற்கான ஒவ்வொரு தொழிற் துறை முதலாளித்துவ தேசத்தின் வேட்கை இதில் அடங்கியுள்ளது.''** இந்த வரையறுப்பு எவ்வாறு முற்றும் பிழையானது என்பதையும், ஏகாதிபத்தியத்தின் ஆக ஆழமான முரண்பாடுகளைப் பூசி மெழுகுவதற்கும் பிறகு சந்தர்ப்பவாதத்துடன் இணக்கம்

---

* இதே பதிப்பு, தொகுதி 4, பக்கங்கள் 37-236 பார்க்க.—ப-ர்.

** இதே பதிப்பு, தொகுதி 4, பக்கம் 174.—ப-ர்.

செய்துகொள்வதற்குமாக இது எவ்வாறு ''தழுவி அமைக்கப் பட்டது'' என்பதையும் நான் எடுத்துக் காட்டினேன். ஏகாதிபத்தியத்தின் என்னுடைய வரையறுப்பை நான் மேற் கோள் காட்டினேன்: ''ஏகாதிபத்தியம் என்பது ஏகபோகங் கள் மற்றும் நிதி மூலதனத்தின் ஆதிக்கம் நிலைநாட்டப் பெறு கிற அந்த வளர்ச்சி கட்டத்திலான முதலாளித்துவம் ஆகும். இந்தக் கட்டத்தில் மூலதன ஏற்றுமதி முனைப்புடைய முக்கியத்துவம் பெற்றிருக்கும்; சர்வதேச டிரஸ்டுகளிடையே உலகம் பங்கிடப்படுவது தொடங்கியிருக்கும்; உலகக் கோளத்திலிருக்கும் எல்லா நிலப்பரப்புகளும் ஆகப்பெரிய முதலாளித்துவ வல்லரசுகளுக்கு இடையே பங்கிடப்படுவது முழுமை பெற்றிருக்கும்.''* ஏகாதிபத்தியம் குறித்த காவுத்ஸ் கியின் விமர்சனம் முதலாளித்துவ அற்பவாதியின் விமர் சனத்தை விடவும் கூடத் தாழ்ந்த மட்டத்தில் இருக்கிறது என்று நான் எடுத்துக் காட்டினேன்.

இறுதியாக, 1917 ஆகஸ்டு-செப்டம்பரில், ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடப்பதற்கு [1917 அக்டோபர் 25 (நவம்பர் 7)] முன்பாக நான் ஒரு பிரசுரத்தை எழுதி னேன். இது 1918 துவக்கத்தில் பெத்ரோகிராதில் வெளி யிடப்பட்டது. அதன் தலைப்பு: **அரசும் புரட்சியும். அரசைப் பற்றிய மார்க்சியத் தத்துவமும், புரட்சியில் பாட்டாளி வர்க் கத்தின் கடமைகளும்.**** **சந்தர்ப்பவாதிகள் மார்க்சியத்தைக் கொச்சையாக்குதல்** என்ற தலைப்புடனை இந்த நூலின் ஆருவது அத்தியாயத்தில் நான் காவுத்ஸ்கி குறித்து விசேஷக் கவனம் செலுத்தினேன். அவர் மார்க்சின் போதனையை முழுமையாகத் திரித்துப் புரட்டி சந்தர்ப்பவாதத்துக்குப் பொருத்தமாக அமைத்துக் கொண்டிருக்கிருர் என்பதையும், ''புரட்சியைச் சொல்லளவில் ஏற்றுக் கொண்டு செயலில் மறுத்து உதறிவிட்டார்'' என்பதையும் எடுத்துக் காட்டி னேன்.

---

* இதே பதிப்பு, தொகுதி 4, பக்கங்கள் 171-172.—ப-ர்.

** இதே பதிப்பு, தொகுதி 6, பக்கங்கள் 9-187 பார்க்க.—ப-ர்.

சாராம்சத்தில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய தமது சிறு பிரசுரத்தில் காவுத்ஸ்கி செய்துள்ள பிரதான மான தத்துவார்த்தப் பிழை, அரசு குறித்த மார்க்சின் போதனையைச் சந்தர்ப்பவாதப் போக்கில் திரித்துப் புரட்டி யிருப்பதேயாகும். இந்தப் புரட்டுக்களை நான் அரசும் புரட்சி யும் எனும் எனது நூலில் விரிவாக அம்பலப்படுத்தியும் இருக்கிறேன்.

இந்தப் பூர்வாங்கக் குறிப்புகள் அவசியமாக இருந்தன. ஏனெனில் போல்ஷிவிக்குகள் ஆட்சி அதிகாரத்தை மேற் கொண்டு, அதன் காரணமாகவே காவுத்ஸ்கியால் கண்டனம் செய்யப்படுவதற்கு நெடுங்காலம் முன்பே நான் காவுத்ஸ்கி ஒரு ஓடுகாலியாக இருக்கிறார் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருக்கிறேன் என்பதை இவை புலப்படுத்துகின்றன.

மார்க்சை ஒரு சமானிய மிதவாதியாக காவுத்ஸ்கி எவ்வாறு மாற்றினார்

தனது நூலில் காவுத்ஸ்கி விவாதிக்கும் அடிப்படையான விஷயம், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முக்கிய சாரமான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே. இந்த விஷயம், எல்லா நாடுகளுக்கும், குறிப்பாயும் முன்னேறிய நாடுகளுக்கு, குறிப் பாயும் போரில் இறங்கியுள்ள நாடுகளுக்கு, குறிப்பாயும் இன் றைய தருணத்தில் மாபெரும் முக்கியத்துவம் உள்ளதாகும். பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் முழுவதன் கேந்திரமான பிரச்சினை இதுவே என்று எவ்வித மிகைவுரைக் கும் இடமின்றிக் கூறலாம். எனவே அதற்குப் பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டுவது அவசியம்.

காவுத்ஸ்கி இந்த விஷயத்தைப் பின்வருமாறு முறைப் படுத்தி முன்வைக்கிறார்: ''இரண்டு சோஷலிஸ்டு போக்கு களுக்கு'' (அதாவது போல்ஷிவிக் மற்றும் போல்ஷிவிக் அல் லாத போக்குகளுக்கு) ''இடையிலான வேறுபாடு, இரண்டு அடிப்படையிலேயே மாறுபட்ட முறைகளுக்கு, ஜனநாயக மற்றும் சர்வாதிகார முறைகளுக்கு இடையே நிலவும் வேறு பாடாகும்'' (பக்கம் 3).

ருஷ்யாவில் இருந்த போல்ஷிவிக் அல்லாதவர்களை, அதாவது மென்ஷிவிக்குகள்[6] மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை[7] சோஷலிஸ்டுகள் என்று அழைக்கும் போது காவுத்ஸ்கி அவர்களது பெயர் மூலம், அதாவது சொல் மூலம் வழி நடத்தப்படுகிறாரே, தவிர பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான போராட்டத்தில் அவர்கள் வகிக்கும் மெய்யான இடத்தை வைத்து அல்ல என்பதைப் போகிற போக்கில் குறிப்பிடுகிறோம். மார்க்சியம் குறித்த எத்தனை அற்புதமான அறிவும் பிரயோகமும்! ஆனால் இதைப் பற்றிப் பின்னால் மேலும் அதிகமாக விளக்குவோம்.

தற்போதைக்கு நாம் முக்கிய அம்சம் குறித்து, அதாவது "ஜனநாயக மற்றும் சர்வாதிகார முறைகள்" இடையிலான "அடிப்படை வேறுபாடு" எனும் காவுத்ஸ்கியின் மாபெரும் கண்டுபிடிப்பு குறித்து எடுத்துக் கவனிப்போம். இதுவே இந்த விஷயத்தின் அறுதிக்கூறு. இதுவே காவுத்ஸ்கியின் பிரசுரத்தின் உள்ளடக்க சாரம். இது இத்தகைய மிக மோசமான தத்துவார்த்தக் குழப்பமாய், மார்க்சியத்தை இத்தகைய முறையில் முற்றும் கைவிடுவதாய் இருக்கும் நிலையில் காவுத்ஸ்கி பெர்ன்ஷ்டைனையே கூட மிகவும் விஞ்சிவிட்டார் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற விஷயம், பாட்டாளி வர்க்க அரசுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் உள்ள உறவும், பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்கும் முதலாளித்துவ ஜனநாயகத்துக்கும் உள்ள உறவும் பற்றிய விஷயமாகும். இது மிகவும் தெட்டத்தெளிவானது என்றே எவரும் கருதுவர். ஆனால் காவுத்ஸ்கி அதே பழைய வரலாற்று நூல்களில் இருந்து மேற்கோள் தரும் பள்ளி ஆசிரியர் போல அறவே கவர்ச்சி இல்லாதவராகி விட்டார். அதோடு இருபதாம் நூற்றாண்டு மீது தனது முதுகையும், பதினெட்டாம் நூற்றாண்டுக்குத் தமது முகத்தையும் விடாப்பிடியாகத் திருப்புகிறார். நூறாவது தடவையாக நம்பற்கரிய சலிப்பான பாணியில், வரம்பிலா அதிகாரம், மத்திய காலப் போக்கு இவற்

றுடனுன முதலாளித்துவ ஜனநாயகத்தின் உறவு சம்பந்த மாகப்பழைய கருத்தையே அசைபோடுகிருர்!

அவர் தூக்கத்தில் கந்தைகளை அசைபோடுவது போல இது தொனிக்கிறது!

எது என்ன என்பதை அவர் அறவே புரிந்து கொள்ள வில்லை என்பதே இதன் அர்த்தம்! ''ஜனநாயகத்தின் மீது அவமதிப்பு'' (பக்கம் 11) இத்தியாதிகளை பிரசாரம் செய்யும் நபர்கள் இருக்கிருர்கள் என்று தோன்றும்படி செய்ய காவுத்ஸ்கி செய்யும் முயற்சிகள் கண்டு சிரிக்காமல் இருக்க முடியாது. பிரச்சினையை மூடிமறைத்துக் குழப்புவதற்கு காவுத்ஸ்கி பயன்படுத்தும் பிதற்றல்கள் இவ்வகைப்பட்டவையாம். ஏனெனில் அவர் முதலாளித்துவ ஜனநாயகம் பற்றிப் பேசாமல் பொதுவான ஜனநாயகம் பற்றி மிதவாதிகளைப் போலப் பேசுகிருர்: இந்தத் துல்லியமான வர்க்க வரையறுப்பைப் பயன்படுத்தாது தவிர்க்கிருர், மாருக ''சோஷலிசத்துக்கு முந்திய'' ஜனநாயகம் பற்றிப் பேச முயல்கிருர். இந்த வாயாடி தமது நூலில் சுமார் மூன்றில் ஒரு பங்கு, அதாவது 63 பக்கங்களில் 20 பக்கங்களை இந்தப் பிதற்றலுக்காகவே ஒதுக்கியுள்ளார். இது முதலாளித்துவ வர்க்கத்திற்கு மிகவும் பிடித்தமானதாக இருக்கிறது. காரணம் இது முதலாளித்துவ ஜனநாயகத்தை அலங்காரப்படுத்தி பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிய விஷயத்தை மழுக்கடிக்கிறது.

ஆனுல் எப்படி இருந்தாலும் காவுத்ஸ்கியின் நூலின் தலைப்பு **பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்** என்பதே. இது தான் மார்க்சின் போதனையின் முக்கியமான சாரம் என்பதை எல்லோரும் அறிவார்கள். ஏராளமான பொருத்தமற்ற பிதற்றல்களுக்குப் பிறகு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சின் சொற்களை காவுத்ஸ்கி மேற்கோள் காட்டும் **நிர்ப்பந்தம் ஏற்பட்டது.**

ஆனுல் ''மார்க்சியவாதி'' காவுத்ஸ்கி இதைச் செய்த **பாணியைப்** பாருங்கள், அது அப்பட்டமான கேலிக்கூத்து!! இதைக் கேளுங்கள்:

''இந்தக் கருத்து'' (இதை காவுத்ஸ்கி ஜனநாயகம் மீதான அவமதிப்பு என்று கூறுகிருர்) ''கார்ல் மார்க்சின்

தனி ஒரு சொல்லின் மீது நிலைநிற்கிறது''—இதைத்தான் காவுத்ஸ்கி 20ஆம் பக்கத்தில் உண்மையிலேயே கூறுகிறார். அவர்கள் (போல்ஷிவிக்குகள்) ''சந்தர்ப்பத்துக்கு ஏற்ப இந்தச் சிறு சொல்லை நினைவு கூர்ந்தார்கள்'' (இதுவே அவர் உண்மையில் கூறுவது—des Wörtchens!!) ''1875ல் ஒரு கடிதத்தில் மார்க்ஸ் பயன்படுத்திய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய சொல் இது'' என்ற வடிவத்திலும் கூட அவர் 60ஆம் பக்கத்தில் அதே விஷயத்தைத் திரும்பவும் சொல்கிறார்.

இதோ மார்க்சின் ''சிறு சொல்'':

''முதலாளித்துவ சமுதாயத்துக்கும் கம்யூனிஸ்டு சமுதாயத்துக்கும் இடையில் ஒன்றில் இருந்து இன்னொன்றுக்கு புரட்சிகரமாக மாறிச் செல்லும் காலப் பகுதி காணக்கிடக்கிறது. இதற்கு இணையாக ஒரு அரசியல் மாறுதல் காலப் பகுதியும் உள்ளது. இதில் அரசு, பாட்டாளி வர்க்க புரட்சிகர சர்வாதிகாரம் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது.''[8]

முதலாவதாக, அவரது புரட்சிகர போதனை முழுவதையும் தொகுத்தளிக்கும் மார்க்சின் இந்த மூலச் சிறப்புடைய அறிவாய்வினை ''தனி ஒரு சொல்'' எனவும் ''சிறு சொல்'' என்றும் கூட அழைப்பது மார்க்சியத்தை அவமதிப்பதும் அதை முற்றாகக் கைவிட்டுவிடுவதுமாகும். காவுத்ஸ்கிக்கு மார்க்சின் நூல்கள் பெரும்பாலும் மனப்பாடமாகத் தெரியும் என்பதையும், அவர் எழுதியிருப்பவை அனைத்தையும் வைத்துப் பார்த்திடில் அவரது எழுதுமேசை அல்லது மூளையில் பல தகவல் மாடங்கள் இருந்தன, அவற்றில் அவர் மார்க்சால் எல்லாக் காலங்களிலும் எழுதப்பட்ட அனைத்தையும் மிகவும் கவனத்துடன் திரட்டி வைத்திருந்தார், மேற்கோள் காட்டுவதற்குத் தயாராக வைத்திருந்தார் என்பதையும் மறந்துவிடக் கூடாது. மார்க்சும் எங்கெல்சும் தமது கடிதங்களிலும் பிரசுரிக்கப்பட்ட தமது நூல்களிலும், பாரிஸ் கம்யூனுக்கு[9] முன்பும் விசேஷமாயும் அதற்குப் பின்பும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றித் திரும்பத்திரும்பக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை காவுத்ஸ்கி அறிந்திருக்க வேண்டும். ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' எனும் சூத்

திரம் முதலாளித்துவ அரசு இயந்திரத்தைத் ''தகர்க்கும்'' பாட்டாளி வர்க்கத்தின் பணியினது மேலும் வரலாற்று வழியில் ஸ்தூலமான, விஞ்ஞான வழியில் துல்லியமான வரையறுப்பே என்பதையும், இதைப் பற்றி மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரும் 1848 புரட்சிகளின், இன்னும் அதிகமாக 1871 இன் அனுபவத்தைத் தொகுத்தளித்து 1852 முதல் 1891 வரையில் நாற்பதாண்டுகளாக பேசிவந்திருக்கிறார்கள் என்பதையும் காவுத்ஸ்கி அறிந்திருக்க வேண்டும்.

மார்க்சிய போலி பண்டிதரான காவுத்ஸ்கி மார்க்சியத்தை இவ்வாறு கோரமாகத் திரித்துப் புரட்டுவதை எவ்வாறு விளக்குவது? இந்தப் புலப்பாட்டின் தத்துவவியல் வேர்களைப் பொருத்த வரை இயக்கவியலுக்குப் பதில் இவற்றில் கதம்பவாதமும் குதர்க்கவாதமும் பதிலீடு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். இந்த வகையான பதிலீடு செய்வதில் காவுத்ஸ்கி கைகண்ட நிபுணராவார். நடைமுறை அரசியலின் கருத்து நோக்கில் இருந்து பார்த்தால் இது சந்தர்ப்பவாதிகளுக்கு அடிபணிவதாகும், அதாவது கடைசியாக ஆய்வு செய்து பார்த்தால் முதலாளித்துவ வர்க்கத்துக்கு அடிபணிவதாகும். இந்தப் போர் வெடித்தது முதல் காவுத்ஸ்கி சொல்லில் மார்க்சியவாதி, செயலில் முதலாளித்துவ வர்க்கத்தின் அடித்தொண்டராக இருக்கும் கலையில் மிகவும் அதிக துரிதமான முன்னேற்றம் கண்டுள்ளார், இதில் அவர் ஒரு விற்பன்னர் ஆகிவிட்டார்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சின் ''சிறு சொல்லை'' காவுத்ஸ்கி ''வியாக்கியானம் செய்யும்'' தனிக்குறிப்பான பாணியினைப் பரிசீலிக்கும் போது இது குறித்து மேலும் அதிக திட நம்பிக்கை ஏற்படும். இதைக் கேளுங்கள்:

''இந்த சர்வாதிகாரத்தை அவர் எவ்வாறு கருத்தில் உருவாக்கினார் என்பதை நமக்கு மேலும் அதிக விவரமாக எடுத்துக் காட்ட துரதிருஷ்டவசமாகத் தவறிவிட்டார் மார்க்ஸ்...'' (இது ஓடுகாலியின் படுமோசமான பொய்யான தொடராகும், ஏனெனில் மார்க்சும் எங்கெல்சும் நமக்கு உண்மையிலேயே பல விவரமான அறிகுறிகளை வழங்கினர்

கள், இவற்றை மார்க்சிய போலி பண்டிதரான காவுத்ஸ்கி வேண்டுமென்றே புறக்கணித்தார்.) ''நேர்ப்பொருளில் சர்வாதிகாரம் என்ற சொல்லுக்கு ஜனநாயகத்தை ஒழிப்பது என்று பொருளாகும். ஆனுல் நேர்ப்பொருளில் இந்தச் சொல் எந்தச் சட்டத்தாலும் கட்டுப்படுத்தப்படாத தனி நபரின் முழுமையான தனி ஆட்சி எனவும் பொருள்படும் என்பது திண்ணம். இது ஒரு நிரந்தர அரசியல் நிறுவனமாகி விடாமல் ஒரு தற்காலிக அவசரகால நடவடிக்கையாக இருக்கும் என்ற அளவுக்கு மட்டுமே கொடுங்கோலாட்சியிலிருந்து வேறுபடுகிறது.

''எனவே, 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்' என்ற சொல் ஒரு தனி நபரின் சர்வாதிகாரமல்ல, மாருக ஒரு வர்க்கத்தின் சர்வாதிகாரமாகும். மார்க்ஸ் இதன் தொடர்பாக சர்வாதிகாரம் என்ற சொல்லின் நேர்ப்பொருளிலான அர்த்தத்தை மனதிற் கொண்டிருந்தார் என்பதற்கான சாத்தியக் கூறினை இது தவிர்த்துவிடுகிறது.

''இங்கு அவர் அரசாங்கத்தின் வடிவம் பற்றிக் குறிப்பிட வில்லை, மாருக ஒரு நிலைமையை குறிப்பிடுகிருர். பாட்டாளி வர்க்கம் எங்கெல்லாம் அரசியல் ஆட்சி அதிகாரத்தை வென்று பெற்றுள்ளதோ அங்கெல்லாம் இந்நிலைமை தவிர்க்க முடியாத வகையில் தோன்றும். இந்த இடத்தில் மார்க்ஸ் தமது மனத்தில் அரசாங்கத்தின் வடிவம் பற்றிக் கருதவில்லை என்பது, பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் இந்த மாற்றம் அமைதியாகவே, அதாவது ஜனநாயக வழியில் நடைபெறலாம் என்று அவர் கருதியிருந்தார் எனும் மெய்விவரத்தால் நிரூபணமாகிறது'' (பக்கம் 20).

''தத்துவாளர்'' காவுத்ஸ்கி கையாளும் முறைகளை வாசகர் தெளிவாகப் பார்க்கட்டும் என்பதற்காகவே இந்த வாதத்தை வேண்டுமென்றே முழுமையாக மேற்கோள் காட்டுகிருேம்.

சர்வாதிகாரம் எனும் ''சொல்''லின் இலக்கணத்தோடு தொடங்கும் வகையில் இந்த விஷயத்தை அணுக முன் வந்தார் காவுத்ஸ்கி.

மிகவும் நல்லது. ஒரு விஷயத்தை தான் விரும்பும் வழியில் அணுகுவதற்குரிய புனிதமான உரிமை எல்லோருக்கும் உண்டு. நேர்மையற்ற அணுகுமுறையில் இருந்து காரியமான நேர்மையான அணுகுமுறையினை மட்டுமே ஒருவர் வேறுபடுத்திக் கண்டறிதல் வேண்டும். இந்த விஷயத்தை இந்த



Россійская Коммунистическая Партія (большевиковъ).

Пролетаріи всѣхъ странъ, соединяйтесь!

Н. Ленинъ (Вл. Ульяновъ).

ПРОЛЕТАРСКАЯ РЕВОЛЮЦІЯ И РЕНЕГАТЪ КАУТСКІЙ.

Цѣна 3 руб.

Книгоиздательство „КОММУНИСТЪ“.

МОСКВА:
1) Срѣтенка (уг. Рыбникова пер.), д. 8. Тел. 4-70-48; 3-15-00.
2) 2-ой домъ Совѣтовъ, Театр. пл.

ПЕТРОГРАДЪ:
1) Поварской пер., д. № 2, кв. 9 и 10. Тел. 2-27-42.
2) Литейный проспектъ, д. 48.

1918.

''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி கவுத்ஸ்கியும்'' எனும் புத்தகத்தின் முகப்பு பக்கம் லெனினது குறிப்புகள் உட்பட, 1918 (தொகுதி 37, பக்கம் 236)

வழியில் அணுகுவதில் காரிய நோக்குள்ள எவரும் இந்தச் ''சொல்''லுக்குத் தனது சொந்த இலக்கணத்தினை வழங்க வேண்டும். பிறகு இந்தப் பிரச்சினை செவ்வையாகவும் முழுமையாகவும் முன்வைக்கப்படும். ஆனால் காவுத்ஸ்கி இதைச் செய்யவில்லை. ''நேர்பொருளில் சர்வாதிகாரம் எனும் சொல்லின் அர்த்தம் ஜனநாயகத்தை ஒழிப்பது என்பதே'' என்று அவர் எழுதுகிறார்.

முதலாவதாயும், இது ஒரு இலக்கணம் அல்ல. சர்வாதிகாரம் எனும் கருத்துருவின் இலக்கணத்தினைத் தராமல் தவிர்க்க காவுத்ஸ்கி விரும்பி இருந்தாரானால், இந்த விஷயம் சம்பந்தமாக அவர் ஏன் இந்தக் குறிப்பிட்ட அணுகுமுறையைத் தெரிந்தெடுத்தார்?

இரண்டாவதாக, இது தவறானது என்பது தெளிவு. பொதுவான ''ஜனநாயகம்'' பற்றிப் பேசுவது ஒரு மிதவாதி விஷயத்தில் இயல்பானதே. ஆனால் ''எந்த வர்க்கத்துக்கு?'' என்ற கேள்வியை ஒரு மார்க்சியவாதி மறவாது கேட்பான். உதாரணமாக, தொன்மைக் காலங்களில் அடிமைகள் மத்தியில் ஏற்பட்ட கலகங்களும், வலுவான கிளர்ச்சிகளும் கூட புராதன அரசு அடிமை உடைமையாளர்களின் சர்வாதிகாரம் என்பதாகவே இருந்தது என்ற உண்மையை உடனடி வெளிப்படுத்தின என்பதை எல்லோரும் அறிவார்கள் (''வரலாற்றாசிரியர்'' காவுத்ஸ்கியும் அறிவார்). இந்த சர்வாதிகாரம் அடிமை உடைமையாளர்கள் மத்தியில் அவர்களுக்கான ஜனநாயகத்தை ஒழித்ததா? அது ஒழிக்கவில்லை என்பதை எல்லோரும் அறிவார்கள்.

''மார்க்சியவாதி'' காவுத்ஸ்கி வர்க்கப் போராட்டம் பற்றி ''மறந்துவிட்டதால்'' இந்த விபரீதமான அபத்தமான பொய்யான அறிவிப்பைச் செய்தார்.

காவுத்ஸ்கியின் மிதவாதத் தன்மை கொண்ட பொய்யான துணிபுரையை ஒரு மார்க்சியத் தன்மை கொண்ட மெய்யான ஒன்றாக மாற்றுவதற்குக் கூற வேண்டுவதாவது: சர்வாதிகாரம் என்றால், இதர வர்க்கங்கள் மீது சர்வாதிகாரத்தைச் செயல்படுத்தும் வர்க்கத்தைப் பொருத்தவரை ஜனநாயகம் ஒழிக்கப்படுவதாகப் பொருள் கொள்ளத் தேவை

இல்லை. ஆனால் எந்த வர்க்கத்தின் மீது அல்லது எந்த வர்க் கத்துக்கு எதிராக இந்த சர்வாதிகாரம் செயல்படுத்தப்படு கிறதோ அந்த வர்க்கத்தைப் பொருத்தவரை ஜனநாயகம் ஒழிக்கப்படுவதாக (அல்லது ஒழிக்கப்படுவதன் ஒரு வடிவ மாக மிகவும் உருப்படியான கட்டுப்பாடாக) பொருள் கொள்ள வேண்டும்.

ஆனால் இந்தத் துணிபுரை எவ்வளவு தான் மெய்யாக இருந்த போதிலும் இது சர்வாதிகாரம் பற்றிய இலக்கணத் தைத் தரவில்லை.

காவுத்ஸ்கியின் அடுத்த வாக்கியத்தைப் பரிசீலிப்போம்:

''...ஆனால் நேர்ப்பொருளில் இந்தச் சொல், எந்தச் சட் டத்தாலும் கட்டுப்படுத்தப்படாத தனிநபரின் முழுமையான தனி ஆட்சி எனவும் பொருள்படுகிறது என்பது திண்ணம்...''

முதலில் ஒரு திசையிலும் பிறகு இன்னொரு திசையிலும் தொடர்பு இன்றி மோப்பம் பார்க்கும் ஒரு குருட்டு நாய்க் குட்டி போல காவுத்ஸ்கி தற்செயலாகவே ஒரு மெய்யான கருத்தின் (அதாவது சர்வாதிகாரம் எந்தச் சட்டத்தாலும் கட்டுப்படுத்தப்படாதது என்பதன்) மீது தடுக்கி விழுகிறார். இருந்தபோதிலும் சர்வாதிகாரம் பற்றிய இலக்கணத்தைத் தரத் தவறிவிட்டார். இதற்கும் மேலாக அவர் தெளிவாயும் ஒரு வரலாற்றுவழிப் பிசகினைச் செய்தார், அதாவது சர்வாதி காரம் என்றால் தனி ஒரு நபரின் ஆட்சி என்பதாக அவர் பொருள் கொண்டதே அந்தப் பிசகு. இது இலக்கண அடிப் படையிலும் கூடச் சரியானதல்ல, காரணம் சர்வாதிகாரத்தை விரல்விட்டெண்ணக் கூடிய நபர்களும், அல்லது ஒரு சிலராட் சியும், அல்லது ஒரு வர்க்கமும் கூடச் செயல்படுத்த முடியும்.

பின்னர் காவுத்ஸ்கி சர்வாதிகாரத்துக்கும் கொடுங்கோன் மைக்கும் இடையிலான வித்தியாசத்தைச் சுட்டுகிறார். அவர் கூறுவது தெட்டத்தெளிவாயும் சரியல்ல என்ற போதிலும் அதைப் பற்றி நாம் இங்கு விளக்கப் போவதில்லை. ஏனெனில் இது நாம் அக்கறை கொண்டிருக்கும் விஷயத்துக்கு முற்றி லும் பொருத்தம் இல்லாதது. இருபதாம் நூற்றாண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டுக்கும், பதினெட்டாம் நூற்றாண்

டிலிருந்து சம்பிரதாயத் தொன்மைக்கும் திரும்பும் காவுத்ஸ்கி யின் நாட்டம் பற்றி எல்லோரும் அறிவார்கள், ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் அதன் சர்வாதிகாரத்தைப் பெற்ற பிறகு அவரது இந்த நாட்டத்தை மனதிற் கொண்டு அவரை ஏதே னும் ஒரு கல்லூரியில் தொன்மைக்கால வரலாற்று ஆசிரி யராக நியமனம் செய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். கொடுங்கோன்மை பற்றித் தத்துவவிசாரம் செய்து பாட் டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய இலக்கணத்தைத் தட்டிக் கழிக்க முயல்வது ஒன்று தடித்தனமான முட்டாள்தனம் அல்லது விகாரமான மோசடி ஆகும்.

இதன் விளைவு, சர்வாதிகாரம் பற்றிய விவாதத்தை மேற்கொண்ட காவுத்ஸ்கி பெருமளவிலான வெளிப்படை யான பொய்களை அளப்புகிறார், ஆனால் இலக்கணம் எதுவும் வழங்கவில்லை! ஆயினும் அவர் தமது மூளையின் வினைத்திறங் களை நம்பி இருக்காமல், தமது நினைவாற்றலைப் பயன்படுத்தி சர்வாதிகாரம் குறித்து மார்க்ஸ் குறிப்பிட்டுள்ள எல்லா உதாரணங்களையும் தமது ''தகவல் மாடங்களில்'' இருந்து வெளியில் எடுத்திருக்கலாம். அவ்வாறு செய்திருப்பாரானால் அவர் ஒன்று பின்வரும் இலக்கணம் அல்லது அதனுடன் சாரத்தில் முற்றும் பொருந்திய ஒரு இலக்கணத்தை நோக்கி நிச்சயமாயும் வந்து சேர்ந்திருப்பார்:

சர்வாதிகாரம் என்பது, நேரடியாக பலப்பிரயோகத்தை அடிப்படையாக்கிய, எந்தச் சட்டத்தாலும் கட்டுப்படுத்தப் படாத ஆட்சியாகும்.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரம் என் பது, முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் பலப்பிரயோகம் பயன்படுத்தி வென்று பெற்றுக் கட்டிக் காத்துவரும் ஆட்சியாகும், எந்தச் சட்டங்களாலும் கட்டுப்படுத்தப்படாத ஆட்சியாகும்.

இந்த நேரடி உண்மையை, வர்க்க உணர்வு படைத்த ஒவ்வொரு தொழிலாளிக்கும் (அவர் மக்களைப் பிரதிநிதித்து வப்படுத்துகிறார், எல்லா நாடுகளிலும் இருக்கும் சமூக-ஏகாதி பத்தியவாதிகளைப் போன்று முதலாளிகளால் லஞ்சம் தரப் பட்ட குட்டி முதலாளித்துவக் கயவாளிகளின் உயர் பிரிவைச்

சேர்ந்தவர் அல்ல) தெட்டத் தெளிவாகத் தெரிந்த உண் மையை, தமது விமோசனத்துக்காகப் போராடிவரும் சுரண்டப்படும் வர்க்கங்களின் ஒவ்வொரு பிரதிநிதிக்கும் கண் கூடாகத் தெரியும் இந்த உண்மையை, ஒவ்வொரு மார்க்சிய வாதிக்கும் ஐயத்திற்கு இடமில்லாத இந்த உண்மையை ஆகப்படித்த திரு காவுத்ஸ்கியிடம் இருந்து ''பலப்பிர யோகம் மூலம் வெளியே எடுக்க'' வேண்டி இருக்கிறது! இதை விளக்குவது எப்படி? முதலாளித்துவ வர்க்கத்தினிடம் சேவை புரிந்து வெறுக்கத்தக்க அண்டிப் பிழைப்போர் ஆகிவிட்ட இரண்டாம் அகிலத்தின் தலைவர்களிடம் ஊறிக்கிடக்கும் கொத்தடிமை உணர்வினுல் எளிதில் விளக்கலாம்.

சர்வாதிகாரம் எனும் சொல் அதன் நேர்ப்பொருளில் தனி மனிதனின் சர்வாதிகாரத்தைக் குறிக்கிறது என்ற கண்கூடான முட்டாள் கதையினைப் பறை சாற்றியது மூலம் காவுத்ஸ்கி முதலில் ஒரு செப்பிடுவித்தை புரிந்தார். பின்னர் —இந்த செப்பிடுவித்தையின் வலிமை மீது!—ஒரு வர்க்கத் தின் சர்வாதிகாரம் பற்றிய மார்க்சின் சொற்கள் நேர்ப் பொருளில் அர்த்தப்படுத்தப்படவில்லை என்றதன் ''விளை வாக'' (சர்வாதிகாரம் புரட்சிகர பலாத்காரத்தை உணர்த்த வில்லை, மாருக முதலாளித்துவ—இதைக் குறித்துக் கொள்க —''ஜனநாயகத்''தின் கீழ் ''சமாதான முறையில்'' பெரும் பான்மையை வென்று பெறுவதையே உணர்த்துகின்றது என்று) சாற்றினுர்.

ஒருவர் ஒரு ''நிலைமை'' மற்றும் ஒரு ''அரசாங்க வடி வம்'' இவற்றிடையேயான வேறுபாட்டைக் கண்டறிய வேண்டுமாம். அற்புதமான தீர்க்கமான வேறுபாடு; இது மடத்தனமாக வாதம் செய்யும் ஒரு மனிதனின் அசட்டுத்தன மான ''நிலைமைக்கும்'' அவனது அசட்டுத்தனத்தின் ''வடி வத்துக்கும்'' இடையிலான வேறுபாட்டைக் கண்டறிவதற்கு ஒத்ததாகும்.

சர்வாதிகாரத்தை ''ஆதிக்க நிலைமை'' என்று வியாக்கி யானம் செய்வது **அவசியம்** எனக் காண்கிறுர் காவுத்ஸ்கி (இதுவே அவர் அடுத்த 21ஆம் பக்கத்தில் பயன்படுத்தும் இலக்கியத் தொடராகும்), காரணம், அப்போது புரட்சிகர

வன்முறையும் வன்முறையான புரட்சியும் மறைந்துவிடும். ''ஆதிக்க நிலைமை'' என்பது...''ஜனநாயகத்தின்'' கீழ் எந்தப் பெரும்பான்மையும் தன்னைத்தானே இருக்கக் காணும் நிலைமையாகும்! இத்தகைய மோசடியின் காரணமாக புரட்சி தக்கபடி மறைந்து விடுகிறது!

ஆனால் இந்த மோசடி மிகவும் படுமோசமானது, எனவே காவுத்ஸ்கியைக் காப்பாற்றாது. சர்வாதிகாரம் ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்துக்கு எதிராக ஓடுகாலிகளுக்கு மிகவும் பிடிக்காத புரட்சிகர வன்முறை ஏவும் ''நிலைமையை'' முன்னனுமானிக்கிறது, உணர்த்துகிறது என்ற உண்மையை மறைக்க முடியாது. ஒரு ''நிலைமைக்கும்'' ஓர் ''அரசாங்க வடிவத்துக்கும்'' இடையே வேறுபாடு காண முயல்வது வெளிப்படையாயும் அபத்தமானது. இதன் தொடர்பாக அரசாங்க வடிவங்கள் குறித்துப் பேசுவது மும்மடங்கு அசட்டுத்தனமானது, காரணம் முடியரசும் குடியரசும் அரசாங்கத்தின் இரு வெவ்வேறான வடிவங்கள் என்பதை ஒவ்வொரு பள்ளிச் சிறுவனும் அறிவான். இந்த அரசாங்கத்தின் இரண்டு வடிவங்களும் முதலாளித்துவத்தின் கீழிலான எல்லா இடைமாற்ற ''அரசாங்க வடிவங்களைப்'' போலவே முதலாளித்துவ அரசின், அதாவது முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்தின் மாற்றுருக்கள் மட்டுமே என்பதை காவுத்ஸ்கிக்கு விளக்க வேண்டும்.

கடைசியாக, அரசாங்க வடிவங்கள் குறித்துப் பேசுவது என்பது அசட்டுத்தனம் மட்டுமல்ல, மார்க்சையே படுமோசமாகப் புரட்டுதல் செய்வதாகும். இங்கு மார்க்ஸ் அரசின் வடிவம் அல்லது மாதிரி பற்றி முற்றிலும் தெளிவாகக் குறிப்பிடுகிறார், அரசாங்க வடிவங்களைப் பற்றியல்ல.

முதலாளித்துவ அரசு இயந்திரத்தை வலுக்கட்டாயமாக அழித்து அதன் இடத்தில் எங்கெல்சின் கூற்றுப்படி ''அச்சொல்லின் சரியான அர்த்தத்தின்படி இனிமேலால் அரசாக இல்லாத'' புதியது ஒன்றை நிறுவாமல் பாட்டாளி வர்க்கப் புரட்சி சாத்தியமல்ல.[10]

ஆயினும், தமது ஓடுகாலி நிலை காரணமாக காவுத்ஸ்கி இவற்றை எல்லாம் மூடி மறைக்கவும் பொய்ப்பிக்கவும் வேண்டி இருக்கிறது.

அவர் எத்தகைய கடைகெட்ட சூழ்ச்சிவாதங்களைப் பயன்படுத்துகிருர் பாருங்கள்.

முதல் சூழ்ச்சிவாதம். இந்த இடத்தில் மார்க்ஸ் அரசாங்க வடிவம் ஒன்றை கருதியிருக்கவில்லை என்பது, அவர் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் மாறுதல் அமைதி வழியில், அதாவது ஜனநாயக வழியில் நடைபெறும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார் எனும் மெய்விவரத்தால் நிரூபணமாகிறது...''

அரசாங்க வடிவத்துக்கு அதோடு அறவே எதுவும் கிடையாது, ஏனெனில் முதலாளித்துவ அரசுக்குரிய மாதிரியான இயல்பில்லாத, உதாரணமாக ராணுவ கோஷ்டி இல்லாத முடியரசுகள் உள்ளன, இந்த விஷயத்தில் முற்றும் மாதிரியாக விளங்கும், உதாரணமாக ராணுவ கோஷ்டியும் அதிகார வர்க்கமும் உடைய குடியரசுகள் உள்ளன. இது சர்வப்பொதுவாக அறியப்பட்ட வரலாற்று மற்று அரசியல் மெய்விவரம் ஆகும், இதை காவுத்ஸ்கியால் புரட்டுச் செய்ய முடியாது.

காவுத்ஸ்கி காரிய நோக்குடனும் நேர்மையாகவும் வாதிக்க விரும்பியிருப்பாரேயானுல் அவர் தன்னைத் தானே கேட்டுக் கொள்ளலாம்: புரட்சி சம்பந்தமான வரலாற்று நியதிகளில் விதிவிலக்கை அறியாதவை உள்ளனவா? இதற்கான பதில்: இல்லை, அத்தகைய நியதிகள் கிடையாது. இத்தகைய நியதிகள் தனி மாதிரியான, மார்க்ஸ் ஒரு முறை ''இலட்சியம்'' எனக் குறிப்பிட்ட, அதாவது சராசரி, சகஜமான, மாதிரி முதலாளித்துவத்துக்கு மட்டுமே பொருந்துவன.

மேலும், இப்போது நாம் விவாதித்து வரும் விஷயத்தில் இருந்து பிரிட்டனையும் அமெரிக்காவையும் தனிவிலக்கம் செய்யக் கூடிய ஏதேனும் எழுபதாம் ஆண்டுகளில் நிகழ்ந்ததா? வரலாற்றின் பிரச்சினைகள் சம்பந்தமான விஞ்ஞானத் தேவைகள் குறித்துப் பரிச்சயமுடைய அனைவருக்கும் இந்தக் கேள்வி நிச்சயமாயும் முன்வைக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகத் தெரியும். இதை முன்வைக்கத் தவறுவது விஞ்ஞானத்தைப் புரட்டுச் செய்வதற்கும், குதர்க்கவாதத்தில் இறங்குவதற்கும் சமமாகும். மற்றும் இக்கேள்வி முன்வைக்கப்பட்டதால், பதிலைப் பற்றிய ஐயம் எதுவும் இல்லை: பாட்

டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரம் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான பலாத்காரமே; இத்தகைய பலாத்காரத்தின் அவசியம் ஏற்படப் பிரத்தியேக காரணம், மார்க்சும் எங்கெல்சும் விவரமாக திரும்பத்திரும்ப விளக்கியுரைத்துள்ளபடி (குறிப்பாக பிரான்சில் உள்நாட்டுப் போர் மற்றும் அந்த நூலின் முகவுரையில்) ராணுவ கோஷ்டியும் அதிகார வர்க்கமும் நிலவுவதேயாகும். இந்த அமைப்புகளும் குறிப்பாயும் 19ஆம் நூற்ருண்டின் எழுபதாம் ஆண்டுகளிலும் (அப்போது தான் மார்க்ஸ் இந்த கருத்தறிவிப்பைச் செய்தார்) பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் இருக்கவில்லை! (இப்போது அவை பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் நிலவுகின்றன.)

தமது கொள்கைத் துரோகத்தை மூடி மறைப்பதற்காக உள்ளபடியே ஒவ்வொரு படியிலும் காவுத்ஸ்கி மோசடியைக் கையாள வேண்டியிருக்கும்!

''அமைதி வழியில், அதாவது ஒரு ஜனநாயக வழியில்'' என்று அவர் எழுதும் போது அவர் தன்னை அறியாமலே தனது வஞ்சகத்தினை அம்பலப்படுத்திக் கொள்வதைப் பாருங்கள்!!

சர்வாதிகாரத்தின் இலக்கணத்தை வகுக்கையில் இந்தக் கருத்துருவின். அடிப்படை அம்சமான புரட்சிகர பலாத்காரத்தை வாசகர்களிடமிருந்து மறைத்து வைக்க காவுத்ஸ்கி உச்சபட்சம் முயற்சி செய்தார். இப்போது உண்மை வெளியாகிவிட்டது: அமைதியான மற்றும் பலாத்காரப் புரட்சிகள் இவற்றுக்கிடையிலான வேறுபாடே இப்பிரச்சினை.

இதுவே இந்த விஷயத்தின் அறுதிக்கூறு. பலாத்காரப் புரட்சியில் இருந்து விலகி நிற்கவும், அதை அவர் கைவிட்டு விட்டதை மூடி மறைக்கவும், மிதவாதத் தொழிலாளர் கொள்கையின் பக்கம், அதாவது முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் தாம் துறந்தோடிவிட்டதை மூடி மறைக்கவும் மட்டுமே காவுத்ஸ்கி இந்த சூழ்ச்சிவாதங்கள், குதர்க்கங்கள், மோசடிப் புரட்டுக்களைக் கையாள நேர்ந்தது. இதுவே இந்த விஷயத்தின் அறுதிக்கூறு.

''வரலாற்ருசிரியர்'' காவுத்ஸ்கி மிகவும் வெட்கக்கே

டான முறையில் வரலாற்றைப் புரட்டுச் செய்கிறுர். எனவே, ஏகபோகத்துக்கு முந்திய முதலாளித்துவம்—19ஆம் நூற்றுண்டின் எழுபதாம் ஆண்டுகளிலே அதன் கொடுமுடி உண்மையில் எட்டப்பட்டது—அதன் அடிப்படையான பொருளாதார இயல்புகளின் காரணமாக பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் மிகவும் மாதிரியான வெளிப்பாட்டைக் கண்டது, ஒப்பீட்டளவில் அமைதி மற்றும் சுதந்திரத்தின் பால் அதிகப்பட்ச ஆர்வத்தை வேறுபடுத்திக் காட்டியது எனும் அடிப்படை மெய்மையை அவர் ''மறந்து விடுகிறுர்.'' மறுபுறத்தில் ஏகாதிபத்தியம், அதாவது ஏகபோக முதலாளித்துவம் இருபதாம் நூற்றுண்டில் மட்டுந்தான் இறுதியாக முதிர்ச்சியடைந்து தனது அடிப்படையான பொருளாதார இயல்புகள் காரணமாக அமைதி மற்றும் சுதந்திரத்தின் பாலான குறைந்தபட்ச ஆர்வத்தையும், அதிகப்பட்சமும் சர்வப்பொதுவுமான ராணுவ கோஷ்டியின் வளர்ச்சியையும் வேறுபடுத்திக் காட்டியது. அமைதியான அல்லது பலாத்காரமான புரட்சி எந்த அளவுக்கு தனி மாதிரியானது அல்லது சாத்தியம் என்பதை விவாதிப்பதில் இதைக் காணத் ''தவறுவது'' முதலாளித்துவ வர்க்கத்தின் மிகவும் சாதாரணமான அடிவருடியின் மட்டத்திற்கு இறங்கிவிடுவதாகும்.

இரண்டாவது சூழ்ச்சிவாதம். பாரிஸ் கம்யூன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகும், ஆனுல் அது சர்வப்பொது ஓட்டு மூலம், அதாவது முதலாளிகளின் வோட்டுரிமையை பறித்துவிடாமல், அதாவது ''ஜனநாயக வழியில்'' தேர்ந்தெடுக்கப்பட்டது. மற்றும் காவுத்ஸ்கி வெற்றிக் களிப்புடன் கூறுகிறுர்: ''மார்க்சுக்கு'' (அல்லது மார்க்சின் கருத்துப்படி)''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது, பாட்டாளி வர்க்கம் பெரும்பான்மையாக அமையும் பட்சத்தில் தூய ஜனநாயகத்தில் இருந்து தவிர்க்க முடியாத வகையில் தொடரும் ஒரு நிலைமையாகும்'' (bei überwiegendem Proletariat, S. 21).

காவுத்ஸ்கியின் இந்த வாதம் மிகவும் வேடிக்கையாக இருப்பதால் எவரும் அதன் பால் எழுப்பப்படும் அறமிகுதியான ஆட்சேபங்கள் காரணமாக பெரும் கலக்கத்துக்கு ஆளாவார். முதலாவதாயும், முதலாளித்துவ வர்க்கத்தின்

சிறந்த பேர்கள், இராணுவத் தலைமை, உயர்மட்டப் பகுதியினர் பாரிசில் இருந்து வெர்சேய்க்கு ஓடிவிட்டனர் என்பது நன்கு தெரிந்ததே வெர்சேயில் ''சோஷலிஸ்டு'' லுயீ பிளாங் இருந்தார். இதற்கிடையில், சோஷலிசத்தின் ''எல்லாப் போக்கினரும்'' பாரிஸ் கம்யூனில் கலந்து கொண்டார்கள் எனும் காவுத்ஸ்கியின் துணிபுரை பொய் என்பதை இது நிரூபிக்கிறது. இரண்டு போரிடும் முகாம்களாக—அதில் ஒன்று முதலாளித்துவ வர்க்கத்தின் திண்மையான, அரசியல் முறையில் செயலூக்கமுள்ள பகுதியைத் தழுவியதாக இருந்தது—பாரிஸ் வாசிகளைப் பிரித்திருந்ததை ''சர்வப்பொது வாக்குரிமை'' உள்ள ''தூய ஜனநாயகம்'' என்று பாவித்துரைப்பது கேலிக்கிடமாகாதா?

இரண்டாவதாக, பாரிஸ் கம்யூன் வெர்சேய்க்கு எதிராகத் தொடுத்த போர், பிரான்சின் தொழிலாளர் அரசாங்கம் முதலாளித்துவ அரசாங்கத்தை எதிர்க்கும் முறையில் நடத்தியதாகும். பாரிஸ் பிரான்சின் தலைவிதியை நிர்ணயித்து வரும் போது ''தூய ஜனநாயகம்'' மற்றும் ''சர்வப்பொது வாக்குரிமை'' ஆகியவற்றுக்கு இடமேது? பிரான்ஸ் முழுவதற்கும் சொந்தமான வங்கியைக் கைப்பற்றத் தவறியது மூலம் பாரிஸ் கம்யூன் பிழை செய்து விட்டது[11] எனும் கருத்துத் தெரிவித்த மார்க்ஸ் ''தூய ஜனநாயகத்தின்'' கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் வழியில் செல்லவில்லையா?

உண்மையில் மக்கள் ''கூட்டமாகச் சேர்ந்து'' சிரிப்பதைப் போலீஸ் தடை செய்துள்ள ஒரு நாட்டில் இருந்துதான் காவுத்ஸ்கி இதை எழுதுகிறார் என்பது கண்கூடு, இல்லையேல் அவர் ஏளனத்தாலேயே கொல்லப்பட்டிருப்பார்.

மூன்றாவதாக, மார்க்சையும் எங்கெல்சையும் மனப்பாடமாக பயன்படுத்தும் திரு. காவுத்ஸ்கிக்கு... ''தூய ஜனநாயகத்தின்'' கருத்தோட்டத்தில் இருந்து எங்கெல்சால் தரப்பட்ட பாரிஸ் கம்யூன் குறித்த பின்வரும் மதிப்பீட்டை மரியாதையுடன் நினைவூட்டுகிறேன்:

''இந்தக் கனவான்கள்'' (அதிகார பலத்தின் எதிர்ப்பாளர்கள்) ''எப்போதேனும் ஒரு புரட்சியைக் கண்டதுண்டா?

ஒரு புரட்சி, ஏற்படக் கூடிய மிகவும் அதிகார பலமுள்ள காரியங்களில் திண்ணமாயும் ஒன்றுதான். மக்களில் ஒரு பகுதி இன்னெரு பகுதியின் மீது துப்பாக்கி, துப்பாக்கி ஈட்டிகள், பீரங்கிகள் மூலம்—இவையாவும் மிகவும் அதிகார பலமான சாதனங்களே—தனது சித்தத்தை திணிக்கும் செயலாகும் இது. வெற்றி ஈட்டிய கட்சி, பிற்போக்காளரிடை தமது ஆயுதங்கள் ஊட்டும் பயங்கரம் மூலம் தனது ஆட்சியைக் கட்டிக் காக்க அவசியமாக வேண்டியிருக்கலாம். முதலாளித்துவ வர்க்கத்தின் மீது ஆயுதமேந்திய மக்களின் அதிகார பலத்தைப் பயன்படுத்தாமல் இருப்பின் பாரிஸ் கம்யூன் ஒரு நாளுக்கு மேல் நீடித்திருக்குமா? மாறாக அந்த அதிகார பலத்தை மிகக் குறைவாகவே பயன்படுத்தியதென்று அதன் மீது நாம் குறை கூறும் உரிமை இருக்கிறதில்லையா?[12]

இதோ உங்களது ''தூய ஜனநாயகம்''! வர்க்கங்களாகப் பிளவுற்றிருக்கும் ஒரு சமுதாயத்தில் ''தூய ஜனநாயகம்'' குறித்துப் பேசக் கருதிய கொச்சையான குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரை, ''சமூக-ஜனநாயகவாதி''யை (நாற்பதாம் ஆண்டுகளில் பிரெஞ்சு அர்த்தத்திலும், 1914-18ல் பொது ஐரோப்பிய அர்த்தத்திலும்) எங்கெல்ஸ் எப்படி ஏளனம் செய்திருப்பார்?

ஆனல் இது போதுமானது. காவுத்ஸ்கியின் பல்வேறு அபத்தங்களை வரிசைப்படுத்திக் காட்டுவது சாத்தியமல்ல. காரணம் அவர் பேசும் ஒவ்வொரு சொல்லும் கொள்கைத் துரோகத்தின் ஆழங்காணு படு குழியாகவே காட்சியளிக்கிறது.

மார்க்சும் எங்கெல்சும் பாரிஸ் கம்யூனை மிகவும் விரிவான முறையில் ஆய்வு செய்தனர், ''ஏற்பாடாக இருந்த அரசு இயந்திரத்தை'' தகர்த்து உடைத்தெறிவதற்கு செய்யப்பட்ட அதன் முயற்சியில்தான் பாரிஸ் கம்யூனின் பெருமை காணக்கிடக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினர்.[13] இந்த முடிவு மிகவும் முக்கியமானது என்று மார்க்சும் எங்கெல்சும் கருதியதால் 1872ல் கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையின்[14] (ஒரளவுக்கு) ''காலாவதியான'' வேலைத்திட்டத்தில் இதை மட்டுமே திருத்தமாகக் கொண்டு வந்தனர். பாரிஸ் கம்யூன் சேனையையும் அதிகார வர்க்கத்தையும் ஒழித்து வந்திருந்

தது, நாடாளுமன்ற முறையை ஒழித்து வந்திருந்தது, அந்த ''புல்லுருவித்தனமான வேண்டாத தசைப் பிண்டமான அரசை'' அழித்து வந்திருந்தது இத்தியாதி என்று மார்க்சும் எங்கெல்சும் எடுத்துக் கூறினர். ஆனால் முனிவர் காவுத்ஸ்கி தமது இரவுக்குல்லாய் அணிந்தபடி மிதவாதப் பேராசிரியர் களால் ஆயிரம் தடவைகள் ஏற்கெனவே சொல்லப்பட்ட தான ''தூய ஜனநாயகம்'' பற்றிய தேவதைக் கதைகளைத் திருப்பிக் கூறுகிறார்.

1914 ஆகஸ்டு 4ந் தேதி ஜெர்மன் சமூக-ஜனநாயகம் ஒரு நாறும் பிணம்[15] என்று ரோசா லுக்சம்பர்க் சாற்றிய தில் வியப்பென்ன?

மூன்றாவது சூழ்ச்சிவாதம். ''நாம் சர்வாதிகாரத்தை ஒரு அரசாங்க வடிவம் என்று கூறும்போது, அதை ஒரு வர்க் கத்தின் சர்வாதிகாரம் என்று சொல்ல முடியாது, காரணம் ஒரு வர்க்கம் ஆட்சி செய்யலாமே தவிர ஆளுகை செய்ய முடி யாது என்பதை நாம் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள் ளோம்...'' ''அமைப்புகளும்'' ''கட்சிகளும்'' தான் ஆளுகை நடத்துகின்றன.

இது ஒரு குளறுபடி, வெறுப்புத்தரும் குளறுபடி, திரு. ''குளறுபடி ஆலோசகர்'' அவர்களே! சர்வாதிகாரம் என் பது ஓர் ''அரசாங்க வடிவம்'' அல்ல, அப்படிச் சொல்வது கேலிக்கிடமான முட்டாள்தனம். மார்க்சும் ''அரசாங்க வடி வம்'' பற்றிக் கூறவில்லை, அரசின் வடிவம் அல்லது மாதிரி பற்றியே கூறுகிறார். இது மொத்தமாயும் வேறானது, முழு தும் வேறானது. ஒரு வர்க்கம் ஆளுகை செய்ய முடியாது என்று கூறுவதும் மொத்தத்தில் தவறு, முதலாளித்துவ நாடாளுமன்றத்தைத் தவிர வேறு எதையும் பாராத, ''ஆளும் கட்சிகள்'' தவிர வேறு எதையும் காணாத ''நாடாளு மன்ற மந்தன்'' தான் இத்தகைய அபத்தங்களைக் கூற முடியும். ஆளும் வர்க்கம் அரசாங்கம் நடத்தும் உதாரணங் களை எந்த ஐரோப்பிய நாடும் காவுத்ஸ்கிக்கு வழங்க முடி யும், உதாரணம், அவர்களது ஸ்தாபனம் போதுமானதாக இல்லாவிடினும்கூட மத்திய காலத்தில் நிலப்பிரபுக்கள் அர சாங்கம் நடத்தினர்.

தொகுத்துக் கூறுவோம்: காவுத்ஸ்கி மார்க்சை ஒரு சாமான்ய மிதவாதியாக மாற்றி மிகவும் இணைவரையற்ற முறையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனும் கருத்துருவைப் புரட்டினார், அதாவது அவரே ஒரு மிதவாதியின் மட்டத்திற்குத் தாழ்வுற்று ''தூய ஜனநாயகம்'' குறித்து அற்பத்தனமான தொடர்களை அடுக்குகிறார், முதலாளித்துவ ஜனநாயகத்தின் வர்க்க உள்ளடக்கத்தை மெருகிட்டுமினுக்கி அலங்காரம் செய்கிறார், எல்லாவற்றுக்கும் மேலாக ஒடுக்கப்பட்ட வர்க்கம் புரட்சிகர பலாத்காரத்தைப் பயன்படுத்துவதில் இருந்து பின்வாங்குகிறார். ஒடுக்குவோரை எதிர்த்து ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிகர பலாத்காரத்தை எடுத்தகற்றும் முறையில் ''பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரம்'' எனும் கருத்துருவை ''வியாக்கியானம் செய்தது'' மூலம் காவுத்ஸ்கி மார்க்சியம் குறித்த மிதவாதப் புரட்டில் உலக சாதனையைப் புரிந்துள்ளார். ஒடுகாலி காவுத்ஸ்கியுடன் ஒப்பிடும்போதில் ஒடுகாலி பெர்ன்ஷ்டைன் வெறும் நாய்க்குட்டியே.

முதலாளித்துவ ஜனநாயகமும் பாட்டாளி வர்க்க ஜனநாயகமும்

காவுத்ஸ்கி மிகவும் வெட்கக் கேடான முறையில் குளறுபடி செய்துள்ள விஷயம் உண்மையில் பின்வருமாறு.

நாம் பொது அறிவையும் வரலாற்றையும் கேலிக்கு ஆளாக்காதிருக்க வேண்டுமானால், பல்வேறு வர்க்கங்கள் நிலவுகின்ற வரையில் ''தூய ஜனநாயகம்'' பற்றிப் பேச முடியாது, வர்க்க ஜனநாயகம் பற்றி மட்டுமே பேச முடியும் என்பது கண்கூடு. (''தூய ஜனநாயகம்'' என்பது வர்க்கப் போராட்டம் மற்றும் அரசின் இயல்பு ஆகிய இரண்டைப் பற்றியும் அறிவில்லாத ஓர் அப்பாவித்தனமான தொடர் மட்டுமல்ல, அதோடு உச்ச அளவிலான வெற்றுத் தொடரும் ஆகும், காரணம் கம்யூனிஸ்டு சமுதாயத்தில் ஜனநாயகம் மாற்றமடையும் போக்கில் ஒரு பழக்கமாக மாறி உலர்ந்து உதிரும் ஆனால் என்றுமே ''தூய'' ஜனநாயகம் என்பது இருக்காது என்று இடைமுறிப்பாகச் சொல்லி வைப்போம்.)

''தூய ஜனநாயகம்'' என்பது தொழிலாளர்களை ஏய்க்க விரும்பும் ஒரு மிதவாதியின் பொய்யான தொடராகும். நிலப் பிரபுத்துவ முறையின் இடத்தை எடுத்துக் கொள்ளும் முதலாளித்துவ ஜனநாயகத்தையும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் இடத்தை எடுத்துக் கொள்ளும் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தையும் வரலாறு அறியும்.

மத்திய கால நிலைவரத்துடன் ஒப்பிடும் போது முதலாளித்துவ ஜனநாயகம் முற்போக்கானது எனவும், பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்த தனது போராட்டத்தில் அதைப் பயன்படுத்தத் தவறக்கூடாது எனவும் சாற்றும் உண்மையினை ''நிரூபிக்க'' காவுத்ஸ்கி டஜன் கணக்கான பக்கங்கள் எழுதித்தள்ளுவது உண்மையில் தொழிலாளர்களை ஏமாற்றும் உத்தேசம் கொண்ட வெறும் மிதவாதப் பிதற்றலே. இது கல்வியறிவுள்ள ஜெர்மனிக்கு மட்டும் இன்றி கல்வியறிவு பெருத ருஷ்யாவுக்கும் ஒரு வெள்ளிடை மெய்மையாகும். நவீன, அதாவது முதலாளித்துவ ஜனநாயகத்தின் முதலாளித்துவ சாரம் பற்றிக் கூறுவதைத் தவிர்க்கும் பொருட்டு ஆடம்பரமான பாவத்தில் அவர் வைட்லிங், பராகுவே ஜெசூட்கள் மற்றும் இதர பல விஷயங்களைப் பற்றிப் பேசும்போது காவுத்ஸ்கி உண்மையில் தொழிலாளர்களிடம் தாம் ''கற்றறிந்த'' ஏமாற்றுவித்தையைக் காட்டுகிருர்.

காவுத்ஸ்கி மார்க்சியத்தில் இருந்து மிதவாதிகளுக்கு, முதலாளிகளுக்கு ஏற்புடையவற்றை (மத்திய கால நிலை பற்றிய விமர்சனம், பொதுவாக முதலாளித்துவத்தின், குறிப்பாக முதலாளித்துவ ஜனநாயகத்தின் முற்போக்கான வரலாற்றுப் பாத்திரம்) எடுத்துக் கொள்கிருர், மார்க்சியத்தில் முதலாளிகளுக்கு ஏற்புடையதல்லாதவற்றை (முதலாளித்துவ வர்க்கத்தின் அழிவுக்கான அதனை எதிர்த்த பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர பலாத்காரம்) அவர் நிராகரிக்கிருர், அவை குறித்து எதுவும் சொல்லாது, மௌனமாகிருர், பூசி மெழுகுகிருர். இதனுல்தான் காவுத்ஸ்கி, அவரது அகநிலை துணிபுகள் எதுவாக இருந்த போதிலும் தமது புறவய நிலை

காரணமாக தவிர்க்க முடியாத வகையில் முதலாளித்துவ வர்க்கத்தின் அடிவருடியாகிருர்.

மத்திய கால நிலேயுடன் ஒப்பிடும் போது முதலாளித்துவ ஜனநாயகம் ஒரு மாபெரும் வரலாற்று முன்னேற்றமாக இருந்த போதிலும், அது எப்போதும்—முதலாளித்துவத்தின் கீழ் கட்டாயமாயும்—வரையறுக்கப்பட்ட, மொட்டையான, பொய்யான, போலியான ஒன்ருகவும், செல்வந்தருக்கு ஒரு சுவர்க்கமாயும், சுரண்டப்படும் ஏழை எளிய மக்களுக்கு ஒரு மாயப்பொறியாயும் மோசடியாயும் நிலவும். மார்க்சின் போதனையில் மிகவும் முக்கியமான பகுதியாக விளங்கும் இந்த உண்மையைத்தான் ''மார்க்சியவாதி'' காவுத்ஸ்கி புரிந்து கொள்ளத் தவறிவிட்டார். இதன் மீது—இந்த அடிப்படையான விஷயத்தின் மீது—ஒவ்வொரு முதலாளித்துவ ஜனநாயகத்தையும் செல்வந்தருக்குகந்த ஜனநாயகமாக்கும் அந்த நிலேமைகளே விஞ்ஞான வழியில் விமர்சிப்பதற்கு மாருக காவுத்ஸ்கி முதலாளித்துவ வர்க்கத்துக்கு ''பெருமகிழ்ச்சியை'' வழங்குகிருர்.

நமது புலமைப்பகட்டர் (முதலாளித்துவ வர்க்கத்தினரை மகிழ்விப்பதற்காக) மிகவும் அவமானகரமான முறையில் ''மறந்து விட்டதான'' மார்க்ஸ் மற்றும் எங்கெல்சின் தத்துவார்த்தக் கருத்துரைகளே மெத்தப்படித்த திரு. காவுத்ஸ்கிக்கு முதலில் நினேவுறுத்தி, பிறகு இந்த விஷயத்தை சாத்தியமான அளவு ஜனரஞ்சகமான முறையில் விளக்குவோம்.

புராதன மற்றும் நிலப்பிரபுத்துவ அரசுகள் மட்டுமன்றி ''நவீன பிரதிநிதித்துவ அரசும் மூலதனம் கூலி உழைப்பைச் சுரண்டுவதற்கான ஒரு கருவியே'' (எங்கெல்ஸ், அரசு பற்றிய தமது நூலில்).[16] ''விரோதிகளேப் பலப்பிரயோகம் மூலம் அடக்கி வைப்பதற்கு வேண்டி போராட்டத்தில், புரட்சியில் பயன்படுத்தப்படும் ஓர் இடைக்கால நிறுவனம் மட்டுமே அரசு ஆகையால் சுதந்திரமான மக்கள் அரசு குறித்துப் பேசுவது மிகவும் முட்டாள்தனமாகும்: பாட்டாளி வர்க்கத்துக்கு அரசு இன்னும் தேவைப்படுகிறது எனில், அது சுதந்திரத்தின் நலன்களுக்காக தேவைப்படுவதில்லே மாருக அதன்

விரோதிகளை அடக்கிவைப்பதன் பொருட்டே தேவைப்படுகிறது, சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமானவுடன் அரசு என்பது இல்லாது போகிறது'' (எங்கெல்ஸ் 1875 மார்ச் 28ல் பெபெலுக்கு எழுதிய கடிதத்தில்). ''உண்மையில் அரசு என்பது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்கான ஓர் இயந்திரமே தவிர வேறு எதுவுமல்ல, இது முடியரசில் போலவே சற்றும் குறையாத அளவில் ஜனநாயகக் குடியரசிலும் கண்கூடு'' (மார்க்ஸ் எழுதிய பிரான்சில் உள்நாட்டுப் போர் எனும் நூலுக்கு எங்கெல்ஸ் எழுதிய முகவுரையில்). சர்வப்பொது வாக்குரிமை ''தொழிலாளி வர்க்கத்தின் முதிர்ச்சியின் அளவுகோல் ஆகும். இன்றைநாள் அரசில் இதற்கு மேல் வேறு எதுவாகவும் இது இருக்க முடியாது, என்றும் இருக்காது (எங்கெல்ஸ், அரசு பற்றிய தமது நூலில். முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஏற்புடையதான இக்கருத்துரையின் முதல் பகுதியை திரு. காவுத்ஸ்கி மிகவும் அலுப்புடன் அசைபோடுகிறார். ஆனால் நாம் கொட்டை எழுத்தில் தந்துள்ள இரண்டாம் பகுதி முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஏற்புடையதாக இல்லாததால் ஓடுகாலி காவுத்ஸ்கி அரவமின்றி விட்டுச் செல்கிறார்!) ''கம்யூன் ஒரு நாடாளுமன்ற உறுப்பல்ல, ஒரே சமயத்தில் சட்டமியற்றும் பணி நிர்வாகப் பணி, இரண்டையும் ஆற்றும் ஒரு செயல்படும் அமைப்பாக இருக்க வேண்டியிருந்தது. மூன்று அல்லது ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆளும் வர்க்கத்தின் எந்த உறுப்பினர் நாடாளுமன்றத்தில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அடக்க வேண்டும் (ver-und zertreten) என்பதைத் தீர்மானிப்பதற்குப் பதிலாக சர்வப்பொது வாக்குரிமை கம்யூன்களில் சேர்ந்து அமைந்துள்ள மக்களுக்குச் சேவை புரிய வேண்டும், தமது தொழிலுக்குத் தேவையான தொழிலாளர்கள், கண்காணிப்பாளர்கள், கணக்காளர்களைத் தேடிப்பெற ஒவ்வொரு தொழிலதிபருக்கும் தனிப்பட்ட வாக்குரிமை எவ்வாறு சேவை புரிகிறதோ அதைப் போலத் தான். (மார்க்ஸ் பிரான்சில் உள்நாட்டுப் போர் எனும் பாரிஸ் கம்யூன் பற்றிய தமது நூலில்.)

மெத்தப் படித்த திரு. காவுத்ஸ்கிக்கு மிகவும் அருமை

யாகத் தெரிந்தவையான இந்தக் கருத்துரைகள் ஒவ்வொன்றும் அவரது முகத்தில் அறைந்த அடியாகும், மேலும் இவை அவரது துரோகத்தை அம்பலப்படுத்துகின்றன. இந்த உண்மைகளைப் பற்றிய ஆகச் சொற்பமான அறிவைக்கூட காவுத்ஸ்கி தனது பிரசுரத்தில் எங்குமே வெளிக்காட்டவில்லை. அவரது பிரசுரத்தின் உள்ளடக்கம் அனைத்தும் மார்க்சியம் பற்றிய ஒரு படுமோசமான கேலிக்கூத்தே!

நவீன அரசுகளின் அடிப்படை நியதிகளை எடுத்துக் கொள்ளுங்கள், அவற்றின் ஆட்சி நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுங்கள், கூட்டம் சேரும் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், ''சட்டத்தின் முன் எல்லாக் குடிமக்களின் சமத்துவம்'' இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்—ஒவ்வொரு திருப்பத்திலும் நேர்மையான, வர்க்க உணர்வுடைய எல்லாத் தொழிலாளருக்கும் நன்கு தெரிந்த முதலாளித்துவ ஜனநாயகத்தின் போலித்தனத்தின் அறிகுறியினைக் காணலாம். ''பொது ஒழுங்கு மீறப்படும் போது'', உள்ளபடியே சுரண்டப்படும் வர்க்கம் தனது அடிமை நிலையை ''மீறி'' அடிமைத்தனம் அற்ற முறையில் நடக்க முயலுமானால் தொழிலாளர்களுக்கு எதிராகப் படைகளை அனுப்பவும், ராணுவச் சட்டம் பிரகடனம் செய்யவும், இத்தியாதிகளை அமுலாக்க முதலாளித்துவ வர்க்கத்துக்கு உத்தரவாதம் செய்வதற்கான நுழைவிடங்கள் அல்லது தனி உரிமைகளை ஒதுக்கீடு செய்யாத எந்த ஒரு தனி அரசும்—எவ்வளவுதான் ஜனநாயகத்தன்மையுடையதாயினும் சரி—கிடையாது. காவுத்ஸ்கி வெட்கக்கேடான முறையில் முதலாளித்துவ ஜனநாயகத்தை அலங்காரம் செய்து காட்டுகிறார். அமெரிக்காவிலும் ஸ்விட்சர்லாந்திலுமுள்ள ஆக ஜனநாயகவாதிகளான, குடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு எதிராக எப்படி நடக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடாமல் விட்டு விடுகிறார்.

அறிவாளியும் படிப்பாளியுமான காவுத்ஸ்கி இவற்றைப் பற்றி எல்லாம் மௌனம் சாதிக்கிறார்! இந்த விஷயத்தில் மௌனம் சாதிப்பது வெறுக்கத்தக்கது என்பதை அந்தப் படிப்பாளி அரசியல்வாதி உணரவில்லை. ஜனநாயகம் என்பது

''சிறுபான்மையினரைப் பாதுகாப்பது'' என்ற வகையில் தொழிலாளர்களிடம் பிள்ளைக்கதைகள் சொல்ல விரும்புகிறார். இது நம்ப முடியாதது, ஆனால் உண்மை! A. D. 1918ல், உலக ஏகாதிபத்தியக் கொலைக்காண்டத்தின் ஐந்தாம் ஆண்டில் சர்வதேசியவாத சிறுபான்மையினர் (அதாவது, ரெனெடேல்கள், லொங்கேகள், ஷெய்டெமன்கள், காவுத்ஸ்கிகள், ஹெண்டர்சன்கள் மற்றும் வெப்புகள் போன்று சோஷலிசத்துக்கு இகழத்தக்க முறையில் துரோகம் செய்யாதவர்கள்) உலகின் எல்லா ''ஜனநாயகங்களிலும்'' நெரித்தழிக்கப்பட்ட போது படிப்பாளி திரு. காவுத்ஸ்கி ''சிறுபான்மையினர் பாதுகாப்பை'' புகழ்ந்து இனிமை மிக்க கீதம் பாடுகிறார்; அக்கறையுடையவர்கள் இதை காவுத்ஸ்கியின் பிரசுரத்தில் 15ஆம் பக்கத்தில் படிக்கலாம். மற்றும் 16ஆம் பக்கத்தில் இந்தப் படிப்பாளி... பேர்வழி பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இருந்த விக்குகளையும் டோரிகளையும்[17] பற்றிக் கூறுகிறார்.

என்ன அற்புதமான அறிவாழம்! முதலாளித்துவ வர்க்கத்திடம் எத்தகைய நயநாகரிகமான அடிமைத்தனம்! முதலாளிகள் முன்னால் எத்தகைய தன்மதிப்பிழந்த சரணாகதி, எத்தகைய கெஞ்சிமன்றாடல்! நான் மட்டும் க்ரூப் அல்லது ஷெய்டெமன் அல்லது கிளெமன்சோ அல்லது ரெனெடேலாக இருப்பின் நான் திரு. காவுத்ஸ்கிக்கு கோடிக்கணக்கில் பணம் தருவேன், நயவஞ்சகப் பரிசுகள் வழங்குவேன், தொழிலாளர் முன்னால் அவரைப் புகழ்ந்து அவரைப் போன்ற ''கவுரவமான'' நபர்களுடன் ''சோஷலிச ஒற்றுமை'' கொள்ளும்படி வற்புறுத்துவேன். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்துப் பிரசுரம் எழுதல், பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இருந்த விக்குகளையும் டோரிகளையும் குறித்துப் பேசுதல், ஜனநாயகம் என்பது ''சிறுபான்மையினரைப் பாதுகாப்பது'' என்று அடித்துக்கூறி அதே சமயத்தில் ''ஜனநாயகக்'' குடியரசான அமெரிக்காவில் சர்வதேசியவாதிகளை எதிர்த்து நடக்கும் இனக்கொலைகள் குறித்து மௌனம் சாதித்தல் இவையெல்லாம் முதலாளித்துவ வர்க்கத்துக்குச் செய்யப்படும் அடிவருடி சேவைகள் அல்லவா?

படிப்பாளியான திரு. காவுத்ஸ்கி... ஓர் ''அற்ப விஷயத்தை'' ''மறந்து விட்டார்''—ஒரு வேளை தற்செயலாக மறந்து விட்டார் போலும். அது என்னவெனில் முதலாளித்துவ ஜனநாயகத்தில் ஆளும் கட்சி சிறுபான்மையினர் பாதுகாப்பை இன்னொரு முதலாளித்துவக் கட்சிக்கு மட்டுமே வழங்குகிறது. அதே போதில் பாட்டாளி வர்க்கம் எல்லா முக்கியமான, ஆழமான, அடிப்படையான பிரச்சினைகளிலும் ''சிறுபான்மையினர் பாதுகாப்புக்கு'' பதிலாக ராணுவச் சட்டம் அல்லது இனக்கொலைகளையே பெறுகிறது. ஜனநாயகம் எந்த அளவுக்கு அதிக உயர் வளர்ச்சி பெற்றிருக்கிறதோ அந்த அளவுக்கு முதலாளித்துவ வர்க்கத்துக்கு அபாயகரமான எந்த ஓர் ஆழமான அரசியல் வேறுபாட்டின் தொடர்பாக அதிக வேகத்தில் இனக்கொலைகள் அல்லது உள்நாட்டுப் போர் உடனடியாக நிகழும். படிப்பாளி திரு. காவுத்ஸ்கி முதலாளித்துவ ஜனநாயகத்தின் இந்த ''நியதியை'' குடியரசுவாத பிரான்சின் டிரைஃபஸ் வழக்குடனும்,[18] ஜனநாயகக் குடியரசான அமெரிக்காவில் நீக்ரோக்களும் சர்வதேசியவாதிகளும் வதைக்கப்படுவதுடனும், ஜனநாயக பிரிட்டனில் அயர்லாந்து மற்றும் அல்ஸ்டர் சம்பவங்களுடனும்[19] ருஷ்யாவின் ஜனநாயகக் குடியரசில் 1917 ஏப்ரலில் போல்ஷிவிக்குகளை வேட்டையாடி அவர்களுக்கு எதிராக இனக்கொலைகள் நடத்தப்படுவதுடனும் தொடர்பு கொண்டு படித்தறிந்திருக்க முடியும். நான் உதாரணங்களை போர்க்கால நிகழ்வுகளில் இருந்து மட்டுமன்றி போருக்கு முந்திய சமாதான காலத்திய நிகழ்ச்சிகளில் இருந்தும் முன்கருதலோடுதான் தேர்வு செய்துள்ளேன். பசப்பிப் பேசுகிற காவுத்ஸ்கி இருபதாம் நூற்றுண்டின் இந்த மெய்நடப்புகளை காண மறுத்து இதற்குப் பதில் தொழிலாளர்களிடம் பதினெட்டாம் நூற்றுண்டின் விக்குகளையும் டோரிகளையும் பற்றி அற்புதமாயும் புதியதான, தனிச்சிறப்பாயும் சுவையான, அசாதாரணமாயும் அறிவுறுத்துகிற, நம்பற்கரிய முக்கியத்துவமுள்ள விஷயங்களைச் சொல்ல விரும்புகிறுர்!

முதலாளித்துவ நாடாளுமன்றத்தை எடுத்துக் கொள்வோம். ஜனநாயகம் எவ்வளவு அதிக உயர்வாக வளர்ச்சி

யடைகிறதோ அவ்வளவு அதிக அளவில் முதலாளித்துவ நாடாளுமன்றங்கள் பங்கு மார்க்கெட் மற்றும் வங்கி அதிபர்களால் ஆட்படுத்தப்படுகின்றன என்பதைப் படிப்பாளி காவுத்ஸ்கி கேள்விப்படவே இல்லையா? இதனுல் நாம் முதலாளித்துவ நாடாளுமன்றங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று அர்த்தமல்ல (உலகத்தில் உள்ள வேறு எந்தக் கட்சியைவிடவும் நல்ல முறையில் அதை போல்ஷிவிக்குகள் பயன்படுத்தினுர்கள், ஏனெனில் 1912-14ல் நாலாவது டூமாவில்[20] தொழிலாளர் தொகுதி அனைத்திலும் நாம் வெற்றிபெற்ருேம்). ஆனுல் காவுத்ஸ்கி செய்வது போன்று, முதலாளித்துவ நாடாளுமன்ற அமைப்பு முறையின் வரலாற்று வழிவரையறைகளையும் சார்புநிலை இயல்பினையும் ஒரு மிதவாதி மட்டுமே மறந்து விட முடியும் என்று இதற்குப் பொருளாகும். ஆக ஜனநாயகமான முதலாளித்துவ அரசிலும்கூட முதலாளிகளின் ''ஜனநாயகத்தால்'' பிரகடனம் செய்யப்படும் சம்பிரதாய சமத்துவத்துக்கும் பாட்டாளிகளை மெய்யாகவே கூலி அடிமைகளாக மாற்றும் ஆயிரக்கணக்கான மெய்யான குறைபாடுகள் மற்றும் சூழ்ச்சி முறைகளுக்கும் இடையிலான கடுமையான முரண்பாட்டை ஒடுக்கப்பட்ட மக்கள் ஒவ்வொரு படியிலும் எதிரிடுகிருர்கள். இந்த முரண்பாடுதான் முதலாளித்துவத்தின் அழுகல்தன்மை, பொய்மை, ஏமாற்று ஆகியவற்றைக் காணும் படி மக்கள் கண்களைத் திறந்து விடுகிறது. இந்த முரண்பாட்டைத்தான் சோஷலிசத்தின் கிளர்ச்சியாளர்களும் பிரசாரகர்களும் மக்களைப் புரட்சிக்குத் தயார் செய்யும் பொருட்டு அவர்கள் மத்தியில் இடைவிடாது அம்பலப்படுத்தி வருகிருர்கள்! இப்போது புரட்சிகளின் சகாப்தம் துவங்கிவிட்டதால் காவுத்ஸ்கி அதைக் கைவிட்டுவிட்டு அந்திமக்காலத்து முதலாளித்துவ ஜனநாயகத்தின் கவர்ச்சியைப் புகழத் தொடங்கியுள்ளார்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், இதன் வடிவங்களில் ஒன்றே, சோவியத் அரசாங்கம், மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு, சுரண்டப்படும் மற்றும் பாடுபடும் மக்களுக்கு உலகில் இதுகாறும் கண்டிராத வகையில் ஜனநாயகத்தை வளர்த்து விஸ்தரித்துள்ளது. காவுத்ஸ்கி செய்தது போலவே

ஜனநாயகம் பற்றி ஒரு முழு நூல் எழுதி இரண்டு பக்கங்கள் சர்வாதிகாரத்துக்கும் பல டஜன் பக்கங்கள் ''தூய ஜனநாயகத்துக்கும்'' ஒதுக்கிவிட்டு இந்த மெய்விவரத்தைக் குறிப்பிடத் தவறுவது என்ருல், இதன் பொருள் இந்த விஷயத்தை மிதவாத பாணியில் முற்றிலும் திரித்துப் புரட்டுவதேயாகும்.

அயல்துறைக் கொள்கையை எடுத்துக் கொள்வோம். எந்த ஒரு ஆக ஜனநாயகமான முதலாளித்துவ அரசிலும் கூட இது பகிரங்கமாக அனுசரிக்கப்படுவதில்லே. எல்லா இடங்களிலும் மக்கள் ஏய்க்கப்படுகிருர்கள், ஜனநாயக பிரான்சில், ஸ்விட்சர்லாந்தில், அமெரிக்காவில், பிரிட்டனில் இது இதர நாடுகளேக் காட்டிலும் ஒப்பிடற்கரியதான விரிவான அளவில், நுண்ணயமான முறையில் நடத்தப்படுகிறது. சோவியத் அரசாங்கம் அயல்துறைக் கொள்கை மீதிருந்த மாயத்திரையினே புரட்சிகரமான முறையில் கிழித்தெறிந்து விட்டது. காவுத்ஸ்கி இதைக் கவனிக்கவில்லே, இது குறித்து அவர் மௌனம் சாதிக்கிருர். கொள்ளேக்காரப் போர்கள், ''செல்வாக்கு மண்டலங்களேப் பிரித்துக் கொள்வதற்கு'' (அதாவது முதலாளித்துவக் கொள்ளேயரிடையே உலகைப் பகிர்ந்து கொள்வதற்கு) உரிய இரகசிய உடன்படிக்கைகளின் சகாப்தத்தில் இது முதன்மையான முக்கியத்துவம் உடையது, காரணம் சமாதானப் பிரச்சினேயும் கோடிக்கணக்கான மக்களின் ஜீவனும் மரணமும் இதைச் சார்ந்து நிற்கின்றன.

அரசுக் கட்டமைப்பை எடுத்துக்கொள்வோம். சோவியத் அரசியல் சட்டத்தின் கீழ் தேர்தல்கள் ''நேரடியானவை அல்ல'' என்ற வாதம் வரையிலான எல்லாவகையான ''அற்ப விவரங்களேயும்'' பொறுக்குகிருர் காவுத்ஸ்கி, ஆனல் பொருத்தமான கூறினேத் தவறவிட்டுவிடுகிருர். அரசுப் பொறியமைவின், அரசு இயந்திரத்தின் வர்க்க தன்மையைக் காணத் தவறுகிருர். முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் முதலாளிகள் ஆயிரக்கணக்கான தந்திரங்கள் மூலம்—''தூய'' ஜனநாயகம் அதிகமாக வளர வளர இவை மேலும் அதிக தந்திரமும் திறனும் உடையதாகின்றன—மக்களே ஆட்சி நிர்வாகப் பணிகளில் இருந்தும், பத்திரிகை சுதந்திரத்திட

மிருந்தும், கூட்டம் சேரும் சுதந்திரத்திடமிருந்தும் இத்தியாதி விரட்டி வெளியேற்றி விடுகின்றனர். சோவியத் அரசாங்கம் தான் மக்களை, பிரத்தியேகமாயும் சுரண்டப்பட்ட மக்களை ஆட்சி நிர்வாகப் பணிகளில் உலகத்திலேயே முதலாவதாக (அல்லது சருராகச் சொன்னால் இரண்டாவதாக, காரணம் பாரிஸ் கம்யூன் இதைச் செய்யத் துவங்கியது) ஈடுபடுத்தியது. உழைக்கும் மக்கள் முதலாளித்துவ நாடாளுமன்றத்தில் பங்கேற்பதில் இருந்து ஆயிரக்கணக்கான முட்டுக்கட்டைகளால் தடைசெய்யப்படுகிறார்கள் (முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் இது முக்கியமான பிரச்சினைகளை என்றுமே முடிவு செய்வதில்லை, இவை பங்கு மார்க்கெட் மற்றும் வங்கிகளால் முடிவு செய்யப்படுகின்றன), முதலாளித்துவ நாடாளுமன்றம் அவர்களுக்கு அந்நியமாக இருப்பதை, பாட்டாளிகளை முதலாளிகள் ஒடுக்குவதற்கான கருவியாக, பகைமை வர்க்கத்தின், சுரண்டும் சிறுபான்மையினரின் நிறுவனமாக இருப்பதை தொழிலாளர்கள் நன்றாக அறிகிறார்கள், உணர்கிறார்கள், காண்கிறார்கள், அனுபவப்படுகிறார்கள்.

சோவியத்துகள் உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்கள் தம்மின் நேரடி அமைப்புகளாகும். அவர்கள் தமது சொந்த அரசை நிறுவிக்கொள்ளவும் ஆட்சி நிர்வாகம் செய்யவும் சாத்தியமான சகல வழிகளிலும் இவை உதவுகின்றன. உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் முன்னணிப் படையான நகரப்புற பாட்டாளி வர்க்கம் பெரிய நிறுவனங்களில் சேர்ந்து இணைந்துள்ளதால் ஆகச்சிறந்த சாதகநிலையில் உள்ளது, தேர்ந்தெடுத்தலும் தேர்ந்தெடுக்கப்பட்டோர் மீது கண்காணிப்புச் செலுத்தலும் மற்ற எல்லோரையும் விட அதற்கு எளிது. சோவியத் வடிவிலான அமைப்பு, உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்கள் அனைவரையும் அவர்களது முன்னணிப் படையான பாட்டாளி வர்க்கத்தின் கீழ் ஒன்றுதிரட்ட தானாகவே உதவுகிறது. பழைய முதலாளித்துவ பொறியமைவு—அதிகார வர்க்கம், செல்வம், முதலாளித்துவக் கல்வி, சமுதாய பந்தங்கள் இத்தியாதி தனியுரிமைகள் (இந்த மெய்யான தனியுரிமைகள் முதலாளித்துவ ஜனநாயகம் மேலும் உயர் வளர்ச்சியடை

யும் தோறும் மேலும் பல்வகையாகப் பெருகும்)—இவை யாவும் சோவியத் வடிவிலான அமைப்பின் கீழ் மறைந்து விடுகின்றன. பத்திரிகை சுதந்திரம் என்பது போலியாக இருந்த நிலை ஒழிந்தது, காரணம் அச்சக நிறுவனங்களும் காகித ஸ்டாக்குகளும் முதலாளிகளிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சிறந்த கட்டிடங்கள், அரண்மனைகள், மாளிகைகள், பண்ணை இல்லங்கள் விஷயத்திலும் இதே நடவடிக்கை பொருந்தும். சோவியத் ஆட்சி அதிகாரம் ஆயிரம் ஆயிரமான இத்தகைய சிறந்த கட்டிடங்களைச் சுரண்டலாளரிடமிருந்து ஒரே அடியில் எடுத்துக் கொண்டது, இந்த வழியில் கூட்டம் சேரும் உரிமையை மக்களுக்கு **மில்லியன் மடங்கு** அதிக ''ஜனநாயகமயமாக்கியது''—இது இல்லாமல் ஜனநாயகம் என்பது ஒரு மோசடியே. வட்டாரத்தில் அல்லாத சோவியத்துகளுக்கு நேரடியல்லாத தேர்தல்கள் சோவியத்துகளின் காங்கிரசுகள் நடத்துவதை எளிதாக்கின, அவை இந்தப் பொறிமைவு முழுவதையும் அதிகச் செலவில்லாதவை ஆக்கின, மேலும் வாழ்க்கை கொதித்துக் குமுறும் போதில், ஒருவர் தமது வட்டாரப் பிரதிநிதியை மிகவும் விரைவாகத் திருப்பியழைக்கவோ அல்லது சோவியத்துகளின் பொதுக் காங்கிரசுக்கு அனுப்பவோ அவசியமாக இருக்கும் சமயத்தில் இதனை அதிக நெகிழ்வுடையதாயும் தொழிலாளரும் விவசாயிகளும் எளிதில் அணுகக் கூடியதாயும் செய்தன.

பாட்டாளி வர்க்க ஜனநாயகம் எந்த ஒரு முதலாளித்துவ ஜனநாயகத்தையும் விட **மில்லியன் மடங்கு** அதிக ஜனநாயகமானது; சோவியத் ஆட்சி அதிகாரம் ஆக ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசை விடவும் மில்லியன் மடங்கு அதிக ஜனநாயகமானது.

இதைக் காணத் தவறுபவர் ஒன்று வேண்டுமென்றே முதலாளிகளுக்குத் தொண்டு புரிபவராக இருக்க வேண்டும் அல்லது அரசியல் ரீதியில் முற்றிலும் இறந்து போனவராகி, முதலாளித்துவ நூல்களின் புழுதியடைந்த பக்கங்களின் பின்னே இருந்து மெய்யான வாழ்க்கையைப் பார்க்க இயலாதவராகி, முதலாளித்துவ ஜனநாயகத் தப்பெண்ணங்களில் முழுமையாக ஊறிப்போய், அதன் மூலம் தம்மை முதலாளித்துவ

வர்க்கத்தின் அடிவருடியாக எதார்த்தத்தில் மாற்றிக்கொள் பவராக இருக்க வேண்டும்.

இதைக் காணத் தவறுபவர், ஒடுக்கப்பட்ட வர்க்கங் களின் கருத்துக் கோணத்தில் இருந்து பிரச்சினையை முன் வைக்கத் திராணியற்றவராக இருக்க வேண்டும்:

சோவியத் ருஷ்யாவில் போன்று, சராசரி சாமான்யத் தொழிலாளி, சராசரி சாமான்ய பண்ணைத் தொழிலாளி அல்லது பொதுவான கிராமப்புற அரைப்பாட்டாளி (அதாவது ஒடுக்கப்பட்ட திரளின், மக்கள் தொகையின் மிகப்பெரிய பெரும்பான்மையின் பிரதிநிதி) அனுபவித்து வரும் ஆகச் சிறந்த கட்டிடங்களில் கூட்டம் நடத்தும் சுதந்திரம் போன்ற, தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காகவும் தமது நலன்களைக் காப்பாற்றுவதற்காகவும் ஆகப் பெரிய அச்சக நிறுவனங்களையும் மிகப்பெரிய காகித ஸ்டாக்குகளையும் பயன் படுத்தக் கூடிய சுதந்திரம் போன்ற, தனது சொந்த வர்க் கத்தைச் சேர்ந்தவர்களையே அரசை நிர்வாகம் செய்யவும் உருவாக்கவும் ஊக்குவிக்கும் உதவும் சுதந்திரம் போன்ற இத் தகைய சுதந்திரங்களை ஏறத்தாழ ஒத்ததான எதையேனும் இம்மக்கள் உலகில் வேறு எந்த நாட்டிலாவது, ஆக ஜனநாயக மான முதலாளித்துவ நாடுகள் எதிலாவது அனுபவிக்கிறார் களா?

இதற்கான பதில் குறித்து ஏதும் ஐயப்பாடுடைய ஒரு வரைக்கூட விவரமறிந்த ஆயிரம் தொழிலாளர் அல்லது பண் ணைத் தொழிலாளர் மத்தியில் இருந்து எந்த நாட்டிலும் சரி திரு. காவுத்ஸ்கியால் கண்டுபிடிக்க முடியும் என்று கருதுவது கேலிக்கிடமாகும். முதலாளித்துவப் பத்திரிகைகளில் உண் மையை ஒப்புக்கொள்ளும் செய்தித் துணுக்குகளைக் கேள்விப் படும் உலகம் முழுதுமுள்ள தொழிலாளிகள் இயல்பாகவே சோவியத் குடியரசுடன் அனுதாபம் கொள்கின்றனர், கார ணம் அவர்கள் அதைப் பாட்டாளி ஜனநாயகமாக, ஏழை மக்களுக்கான ஒரு ஜனநாயகமாகவே கருதுகின்றனர், ஆகச் சிறந்தது உட்பட்ட எல்லா முதலாளித்துவ ஜனநாயகங்களி லும் உண்மையில் இருப்பது போன்று செல்வந்தர்களுக்கான ஒரு ஜனநாயகமாக அல்ல,

நம்மீது ஆளுகை செய்பவர்கள் (மற்றும் நமது அரசை ''உருவாக்குபவர்கள்'') முதலாளித்துவ அதிகார வர்க்கத்தார், முதலாளித்துவ நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதலாளித்துவ நீதிபதிகள். இந்தச் சாமானியமான, கண்கூடான, மறுக்க முடியாத உண்மையை ஆக ஜனநாயகமானவை உட்பட்டதான எல்லா முதலாளித்துவ நாடுகளையும் சேர்ந்த கோடிக்கணக்கான மக்கள் தமது சொந்த அனுபவத்தில் இருந்து அறிகிறார்கள், ஒவ்வொரு நாளும் உணர்ந்து அனுபவப்படுகிறார்கள்.

ஆயினும், ருஷ்யாவில் அதிகார வர்க்க இயந்திரம் முழுமையாக நொறுக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது; பழைய நீதிபதிகள் அனைவரும் மூட்டை முடிச்சோடு வெளியேற்றப்பட்டு விட்டனர், முதலாளித்துவ நாடாளு மன்றம் கலைக்கப்பட்டு விட்டது—தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் தாமே மேலும் அதிகமாக அணுகிச்செயல் படத்தக்க பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது; அவர்களது சோவியத்துகள் அதிகார வர்க்கத்தினரை மாற்றீடு செய்தன அல்லது அவர்களது சோவியத்துகள் அதிகார வர்க்கத்தினர் மீது செயலாண்மை புரிந்தன, அவர்களது சோவியத்துகள் நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றன. சோவியத் ஆட்சி அதிகாரம், அதாவது குறிப்பிட்ட வடிவிலான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், ஆக ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசைக் காட்டிலும் ஒரு மில்லியன் மடங்கு அதிக ஜனநாயகமானது என்பதை ஒடுக்கப்பட்ட மக்கள் அறிந்துணர்வதற்கு இந்த மெய்விவரம் மட்டுமே போதுமானதாகும்.

ஒவ்வொரு தொழிலாளிக்கும் தெளிவாயும் கண்கூடாயும் இருக்கும் இந்த உண்மையை காவுத்ஸ்கி புரிந்துகொள்ளவில்லை; காரணம் ஜனநாயகம் எந்த வர்க்கத்துக்கு? என்ற கேள்வியைக் கேட்க அவர் ''மறந்துவிட்டார்,'' ''நினைவில் இருந்து அகற்றிவிட்டார்.'' அவர் ''தூய'' (அதாவது வர்க்க சார்பில்லாத? அல்லது வர்க்கத்துக்கு அப்பாற்பட்ட?) ஜனநாயகத்தின் நோக்கு நிலையில் இருந்து வாதம் செய்கிறார். ''பவுண்டு சதையே வேண்டும்'' வேறு எதுவுமல்ல எனும்

ஷைலக்கைப் போன்று[21] அவர் வாதிடுகிறார். எல்லாக் குடி மக்களுக்கும் சமத்துவம்—இல்லாவிடில் ஜனநாயகம் இல்லை.

படிப்பாளி காவுத்ஸ்கி, ''மார்க்சியவாதி'' மற்றும் ''சோஷலிஸ்டு'' காவுத்ஸ்கியிடம் கேட்கிறோம்:

சுரண்டப்படுவோருக்கும் சுரண்டுவோருக்கும் இடையே சமத்துவம் இருக்க முடியுமா?

இரண்டாவது அகிலத்தின் சித்தாந்தத் தலைவர் எழுதி யுள்ள ஒரு நூல் பற்றி விவாதிக்கும் போது இத்தகைய ஒரு கேள்வியை போட வேண்டி இருப்பது திகிலுண்டாக்குவதும் விசித்திரமானதுமாகும். ஆனால், ''ஏரைப் பிடித்த பிறகு பின்னால் திரும்பிப் பார்க்காதே'' என்பது போல காவுத்ஸ் கியைப் பற்றி எழுத ஒப்புக்கொண்ட பிறகு அந்தப் படித்த மனிதருக்கு, சுரண்டுவோருக்கும் சுரண்டப்படுவோருக்கும் இடையே ஏன் சமத்துவம் இருக்க முடியாது என்பதை நான் விளக்கியே தீர வேண்டும்.

சுரண்டப்படுவோருக்கும் சுரண்டுவோருக்கும் இடையே சமத்துவம் இருக்க முடியுமா?

காவுத்ஸ்கி பின்வருமாறு வாதிக்கிறார்:

1. ''சுரண்டலாளர்கள் எப்போதுமே மக்கள் தொகை யில் ஒரு சிறிய சிறுபான்மையாகவே அமைந்து வந்திருக் கிறார்கள்'' (காவுத்ஸ்கியின் நூலில் 14ஆம் பக்கம்).

இது மறுக்க முடியாத உண்மை. இதைத் துவக்கநிலை யாகக் கொண்டால் வாதம் எதுவாக இருக்க வேண்டும்? ஒருவர் ஒரு மார்க்சிய, சோஷலிஸ்டு வழியில் வாதம் செய்ய லாம். அப்படியானால் அவர் சுரண்டப்படுவோர் மற்றும் சுரண்டலாளர்கள் இடையிலான உறவில் இருந்து துவங்க வேண்டும். அல்லது ஒருவர் ஒரு மிதவாத, முதலாளித்துவ ஜனநாயக வழியில் வாதம் புரியலாம். அப்படியானால், பெரும்பான்மையினர் மற்றும் சிறுபான்மையினர் இடை யிலான உறவில் இருந்து துவங்க வேண்டும்.

மார்க்சிய வழியில் வாதம் செய்யும் பட்சத்தில் நாம் கூற வேண்டுவதாவது: சுரண்டலாளர்கள் அரசை (நாம் ஜனநாயகம் பற்றியே பேசுகிறோம், அதாவது அரசின் வடிவங்களில் ஒன்று) தவிர்க்க முடியாதபடி சுரண்டப்படுவோர் மீதான சுரண்டலாளர்களாகிய தமது வர்க்க ஆதிக்கத்தின் கருவியாக மாற்றுவர். இதனுல் பெரும்பான்மையான சுரண்டப்படுவோர் மீது ஆதிக்கம் புரியும் சுரண்டலாளர்கள் இருக்கும் வரை, ஜனநாயக அரசு தவிர்க்க முடியாத வகையில் கட்டாயமாயும் சுரண்டலாளர்களுக்கான ஜனநாயகமாகவே இருக்கும். சுரண்டப்படுவோர் அரசு நிச்சயமாயும் அத்தகைய அரசில் இருந்து அடிப்படையிலேயே வேறுபட்டதாக இருக்க வேண்டும், அது சுரண்டப்படுவோருக்கான ஜனநாயகமாகவும் சுரண்டலாளர்களை ஒடுக்குவதற்கான ஒரு சாதனமாயும் இருக்க வேண்டும். மேலும் ஒரு வர்க்கம் ஒடுக்கப்படுகிறது என்ருல் அந்த வர்க்கம் சமத்துவம் இன்றி உள்ளது, அது ''ஜனநாயகத்திடம்'' இருந்து விலக்கப்பட்டுள்ளது என்றே அர்த்தம்.

மிதவாத வழியில் வாதம் புரிவோமானுல் நாம் கூற வேண்டுவதாவது: பெரும்பான்மை முடிவு செய்கிறது சிறுபான்மை கீழடங்குகிறது. கீழடங்காதவர்கள் தண்டிக்கப்படுகின்றனர். இவ்வளவு தான். பொதுவாக அரசின் அல்லது குறிப்பாக ''தூய ஜனநாயகத்தின்'' வர்க்கத்தன்மை பற்றி எதுவும் கூறத் தேவை இல்லை, காரணம் அது சம்பந்தமற்றது; ஏனெனில் பெரும்பான்மை பெரும்பான்மையாயும் சிறுபான்மை சிறுபான்மையாயும் இருக்கின்றன. ஒரு பவுண்டு சதை ஒரு பவுண்டு சதையே, இதைப் பொருத்தவரை எல்லாம் இவ்வளவே.

இப்படிதான் துல்லியமாக காவுத்ஸ்கி வாதம் புரிகிருர்:

2. ''பாட்டாளி வர்க்கத்தின் ஆதிக்கம் ஜனநாயகத்துடன் ஒவ்வாததான ஒரு வடிவத்தை ஏன் மேற்கொள்ள வேண்டும், தவிர்க்க முடியாத படி ஏன் மேற்கொள்ள வேண்டும்?'' (பக்கம் 21). பிறகு தொடர்கிறது ஒரு மிகவும் விரிவான, மிகவும் சொல்மயமான விளக்கம், பாட்டாளி வர்க்கம் பெரும்பான்மையாக உள்ளது என்ற உட்கருத்துக்கு ஆதார

மாக மார்க்ஸ் நூல்களில் இருந்து மேற்கோள்கள், பாரிஸ் கம்யூனின் தேர்தல் புள்ளி விவரங்கள் தரப்படுகின்றன. முடிவு: ''மக்களிடம் இவ்வளவு வலுவாக வேரூன்றியிருக்கும் ஆட்சி முறை ஜனநாயகத்தின் மீது வரம்பு மீறிச் செல்லக் கிஞ்சிற்றும் ஏதுவில்லை. ஜனநாயகத்தை ஒடுக்குவதற்குப் பலாத்காரம் பயன்படுத்தபப்டும் இடங்களில் அது எப்போதும் பலாத்காரத்தைத் தவிர்க்க முடியாது. பலாத்காரத்தைப் பலாத்காரம் மூலமே சந்திக்க முடியும். ஆனால் தனக்கு மக்களது ஆதரவு இருக்கிறது என்பதை அறிந்த ஓர் ஆட்சி முறை ஜனநாயகத்தை **பாதுகாப்பதற்காகப்** பலாத்காரத்தைப் பயன்படுத்துமே தவிர அதை **அழிப்பதற்காக** அல்ல. அது தனது மிகவும் நம்பகமான அடித்தளமான சர்வப்பொது வாக்குரிமையை, வலிமை மிக்க தார்மிக அதிகாரபலத்தின் ஆழமான தலையூற்றை ஒழிக்க முயல்வது அறவே தற்கொலைத் தனமானது'' (பக்கம் 22).

காவுத்ஸ்கியின் வாதத்தில் சுரண்டப்படுவோர் மற்றும் சுரண்டலாளர்கள் இடையிலான உறவு மறைந்து போய் விட்டதை நீங்கள் காண முடியும். மீதமாக இருப்பது எல்லாம் பொதுவான பெரும்பான்மையும் பொதுவான சிறுபான்மையும் பொதுவான ஜனநாயகமும் நமக்கு ஏற்கெனவே தெரிந்த ''தூய ஜனநாயகமும்''.

இவையாவும் **பாரிஸ் கம்யூன் நிமித்தமாகவே** கூறப்பட்டது என்பதைக் குறித்துக் கொள்க! இந்த விவரங்களை மேலும் தெளிவுபடுத்த **பாரிஸ் கம்யூன் நிமித்தமாகவே** சர்வாதிகாரம் எனும் கருப்பொருள் மீது மார்க்சும் எங்கெல்சும் என்ன சொன்னார்கள் என்பதைக் காட்ட அவர்களது நூல்களில் இருந்தே மேற்கோள் தருவோம்.

மார்க்ஸ்: தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைத் தமது புரட்சிகர சர்வாதிகாரத்தினால் மாற்றீடு செய்யும் போது... முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்பை உடைப்பதற்காக... தொழிலாளர்கள் அரசுடன் ஒரு புரட்சிகரமான மற்றும் இடைமாற்றமான வடிவத்தை இணைவிக்கிறார்கள்...''[22]

எங்கெல்ஸ்: (ஒரு புரட்சியில்) ''....வெற்றி வாகை

சூடும் கட்சி அதன் ஆயுதங்கள் பிற்போக்காளரிடை ஊட்டும் பயங்கரத்தின் வாயிலாக தனது ஆட்சியைக் கட்டிக் காக்க வேண்டியிருக்கும். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக ஆயுதமேந்திய மக்களின் அதிகாரபலத்தைப் பயன் படுத்தாமல் இருந்திருக்குமாஞல் பாரிஸ் கம்யூன் ஒரு நாளைக்கு மேல் நீடித்திருக்குமா? மாருக, அந்த அதிகாரபலத்தை அது மிகவும் சொற்பமாகவே பயன்படுத்தியது என்று நாம் அதன் மீது குற்றம் கூறக் கூடாதா?..''[23]

எங்கெல்ஸ்: எனவே, தமது விரோதிகளை பலப்பிரயோகம் மூலம் அடக்கி வைத்திருக்க வேண்டும் என்பதற்காக போராட்டத்தில், புரட்சியில் பயன்படுத்தப்படும் ஓர் இடைக் கால நிறுவனமே அரசு என்பதால், சுதந்திரமான மக்கள் அரசு என்பது குறித்துப் பேசுவது படுமோசமான முட்டாள் தனமேயாகும்: பாட்டாளி வர்க்கத்துக்கு ஓர் அரசு தேவைப் படும் வரையில் அதற்கு அரசு தேவைப்படுவது சுதந்திரத் தின் நலன்களுக்காக அல்ல, மாருக அதன் விரோதிகளை அடக்கி வைப்பதன் பொருட்டே ஆகும்; சுதந்திரம் பற்றிப் பேசுவது சாத்தியமான உடனேயே அரசு என்ற முறையில் அது நிலவுதல் இல்லாது போய்விடும்....''

காவுத்ஸ்கிக்கும் மார்க்ஸ், எங்கெல்சுக்கும் இடையே விண்ணுக்கும் மண்ணுக்கும் போல, ஒரு மிதவாதிக்கும் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியாளனுக்கும் இடையே போன்ற எட்டாத்தொலைவு நிலவுகிறது. காவுத்ஸ்கி குறிப்பிடும் தூய ஜனநாயகம் மற்றும் சாமானிய ''ஜனநாயகம்'' என்பது ''சுதந்திர மக்கள் அரசின்'' வெறும் பொழிப்புரையே, அதாவது படுமோசமான முட்டாள்தனமே ஆகும். மெத்தப் படித்த செயல் தொடர்பற்ற மூடனின் படித்த பாவனை யுடனே அல்லது பத்து வயது பள்ளிச் சிறுமியின் அறியாத பாவனையுடனே காவுத்ஸ்கி கேட்கிருர்: நமக்குப் பெரும் பான்மை இருக்கும் போது நமக்கு சர்வாதிகாரம் எதற்கு வேண்டும்? மார்க்சும் எங்கெல்சும் விளக்கம் தருகிருர்கள்:

—முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்பை உடைப் பதற்கு,

—பிற்போக்காளர்களுக்கு அச்சம் ஊட்டுவதற்கு,

—முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக ஆயுதமேந்திய மக்களின் அதிகாரபலத்தைக் கட்டிக் காப்பதற்கு,

—பாட்டாளி வர்க்கம் பலப்பிரயோகம் மூலம் தனது விரோதிகளை அடக்கி வைத்திருப்பதற்கு.

காவுத்ஸ்கி இந்த விளக்கங்களைப் புரிந்து கொள்கிற தில்லை. ஜனநாயகத்தின் ''தூய்மையில்'' மோகமாய், அதன் முதலாளித்துவத் தன்மையினைப் பாராமல் கண்ணடைத் தும், அவர் பெரும்பான்மை அது பெரும்பான்மையாக இருப் பதால் சிறுபான்மையின் ''எதிர்ப்பை உடைக்கத்'' தேவை இல்லை எனவும், அதை ''பலாத்காரமாக கீழடக்கி வைக்க வும்'' வேண்டுவதில்லை எனவும்—ஜனநாயகம் மீறப்படும் செயல்களை ஒடுக்கினல் போதும் எனவும் அவர் ''நிலையுறுதி யுடன்'' வலியுறுத்துகிறார். ஜனநாயகத்தின் ''தூய்மையில்'' மோகம் கொண்ட காவுத்ஸ்கி எல்லா முதலாளித்துவ ஜன நாயகவாதிகளும் புரியும் அதே சிறு பிழையினை தம்மை அறி யாமலே புரிகிறார், அதாவது அவர் சம்பிரதாயமான சமத்து வத்தை (இது முதலாளித்துவத்தின் கீழ் ஒரு மோசடியும் போலித்தனமும் ஆகும்) மெய்யான சமத்துவமாக எடுத்துக் கொள்கிறார்! அறவே ஓர் அற்ப விஷயம்தான்!

சுரண்டலாளர்களும் சுரண்டப்படுவோரும் சமமாக இருக்க முடியாது.

இந்த உண்மை காவுத்ஸ்கிக்கு விரசமாக இருக்கலாம், இருந்த போதிலும் இது சோஷலிசத்தின் சாரமாக அமை கிறது.

இன்னொரு உண்மை: ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத் தால் சுரண்டப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் யாவும் முற்றாக அழிக்கப்பட்டாலொழிய மெய்யான நடைமுறையில் உள்ள சமத்துவம் இருக்க முடியாது.

மத்தியில் ஒரு வெற்றிகரமான புரட்சி எழுச்சியோ அல்லது சேனையில் ஒரு கலகமோ நிகழுமானல் ஒரே அடியில் சுரண்டலாளர்களை முறியடிக்க முடியும். ஆனல் மிகவும் அரி தான விசேஷ சந்தர்ப்பங்களில் தவிர மற்றபடி சுரண்டலா ளர்களை ஒரே அடியில் அழித்துவிட முடியாது. எந்த ஒரு பெரிய நாட்டிலும் எல்லா நிலப்பிரபுக்களையும் முதலாளிகளை

யும் ஒரே அடியில் உடைமை நீக்கம் செய்வது என்பது சாத்தியம் அல்ல. மேலும், உடைமை நீக்கம் மட்டுமே ஒரு சட்டபூர்வ அல்லது அரசியல் நடவடிக்கை என்ற முறையில் இந்த விவகாரத்தை வெகு தொலேவுக்குத் தீர்த்துவிடாது, காரணம் நிலப்பிரபுக்களேயும் முதலாளிகளேயும் உண்மையிலேயே உயர் நிலேயில் இருந்து அகற்ற வேண்டும், தொழிற்சாலேகள் மற்றும் எஸ்டேட்டுகளிலான அவர்களது நிர்வாகத்தை உள்ளபடியே வேறு நிர்வாகத்தால், தொழிலாளர் நிர்வாகத்தால் மாற்றீடு செய்தல் வேண்டும். தமது கல்வி, செல்வந்த வாழ்க்கை நிலேமைகள் மற்றும் பழக்கங்கள் காரணமாக பல தலேமுறைகளாக நலமுடன் வாழ்ந்துவரும் சுரண்டலாளர்களுக்கும் ஆக முன்னேறிய, ஆக ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளிலும் கூட மிதித்து அமிழ்த்தப்பட்டு, பின்தங்கியவர்களாய், அறியாமை கொண்டோராய் மிரட்டப்பட்டும், ஒற்றுமையிழந்தும் வாழ்ந்து வரும் பெரும்பான்மையான சுரண்டப்படும் மக்களுக்கும் இடையே சமத்துவம் இருக்க முடியாது. புரட்சிக்குப் பிறகு நீண்ட காலம் சுரண்டலாளர்கள் பல மாபெரும் நடைமுறை சாதகங்களேத் தவிர்க்க முடியாதபடி நீடித்து வைத்திருப்பார்கள்: அவர்களிடம் இன்னும் பணம் இருக்கிறது (பணத்தைத் திடுமென ஒழித்து விடுவது சாத்தியமல்ல என்பதால்), ஒரு சில ஜங்கமச் சொத்துக்கள் உள்ளன—இவை பெரும்பாலும் ஓரளவு கணிசமானவை; அவர்கள் இன்னும் பல தொடர்புகளே, நிறுவன ஒழுங்கமைப்பு மற்றும் நிர்வாகப் பழக்கங்களே வைத்திருக்கிருர்கள், நிர்வாகத்தின் சகல ''இரகசியங்கள்'' (வழக்கங்கள், முறைகள், சாதனங்கள், சாத்தியப்பாடுகள்) குறித்த அறிவினே வைத்திருக்கிருர்கள், அதிக உயர்வான கல்வித் தரம், உயர் தொழில்நுட்ப உயர் அலுவலர் (முதலாளிகளேப் போலவே வாழ்ந்தும் சிந்தித்தும் வருபவர்கள்) உடன் நெருக்கமான தொடர்புகள் வைத்திருக்கிருர்கள், போர்க்கலேயில், இணேயற்ற வகையில் மேலதிகமான அனுபவம் கொண்டிருக்கிருர்கள் (இது மிகவும் முக்கியம்) இத்தியாதி, இத்தியாதி.

சுரண்டலாளர்கள் ஒரு நாட்டில் மட்டுமே முறியடிக்கப்படும் பட்சத்தில்—இது தனிமாதிரியானது என்பது திண்

ணம், காரணம் பல நாடுகளில் ஏககாலத்தில் புரட்சி நிகழும் என்பது மிகவும் அரிதான விதிவிலக்கே—அவர்கள் சுரண்டப் படுவோரைவிடவும் இன்னும் அதிக வலுவுடன் இருப்பார் கள், ஏனெனில் சுரண்டலாளர்களின் சர்வதேச தொடர்பு கள் பேரளவானவை. ஆகக் குறைந்த முன்னேற்றம் கண்ட நடுத்தர விவசாயி, கைவினைஞர், இது போன்ற மக்கள் தொகையில் இருக்கும் பிரிவுகள் அடங்கிய சுரண்டப்படு வோரின் ஒரு பகுதி சுரண்டலாளர்களைப் பின்பற்றலாம், உண் மையில் பின்பற்றவே செய்கிறது என்பதை கம்யூன் உள் ளிட்ட எல்லாப் புரட்சிகளும் நிரூபித்துள்ளன (ஏனெனில் வெர்சேய் துருப்புகள்[24] மத்தியில் பாட்டாளிகள் இருந்தார் கள் என்பதை மெத்தப் படித்த காவுத்ஸ்கி ''மறந்து விட் டார்'').

இந்த சூழ்நிலைமைகளில் முற்றும் ஆழமும் காரியகரமு மான ஒரு புரட்சியில் பிரச்சினை பெரும்பான்மைக்கும் சிறு பான்மைக்கும் இடையிலான உறவினால் மட்டுமே முடிவு செய்யப்படுகிறது என்று கருதுவது அசட்டுத்தனத்தின் சிகர மாகும், ஒரு சாமான்ய மிதவாதியின் ஆக மடத்தனமான ஒருதலைப்போக்காகும், மக்களிடமிருந்து நன்கு நிலைநாட்டப் பட்ட வரலாற்று உண்மையை மறைத்து வைத்து மக்களை ஏமாற்றும் முயற்சியாகும். ஆழமான ஒவ்வொரு புரட்சி யிலும் சுரண்டப்படுவோரை விடவும் அதிகமாக முக்கியமான நடைமுறை சாதகநிலைகளைப் பல ஆண்டுகளாக வைத்திருக் கும் சுரண்டலாளர்களின் நீடித்த பிடிவாதமான மூர்க்கமான எதிர்ப்பு என்பது பொதுவிதி என்பதே இந்த வரலாற்று உண் மை. உணர்ச்சி வயப்பட்ட மூடன் காவுத்ஸ்கியின் உணர்ச்சி வயப்பட்ட கற்பனைகளில் தவிர வேறு எங்கும் சுரண்டலா ளர்கள் கடைசியான மூர்க்கமான போராட்டத்திலும் அல் லது தொடரான பல போராட்டங்களிலும் தமது சாதகநிலை மைகளைப் பயன்படுத்த முயலாமல் சுரண்டப்பட்ட பெரும் பான்மையினரின் முடிவுக்குக் கீழடங்க மாட்டார்கள்.

முதலாளித்துவத்தில் இருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்வதற்கு ஒரு முழுமையான வரலாற்று சகாப்தம் எடுக் கிறது. இந்த சகாப்தம் முடிவுறும் வரையில் சுரண்டலாளர்

கள் மீட்சிபெறும் நம்பிக்கையை தவிர்க்க முடியாதபடி நெஞ்சில் வளர்த்துவருகிருர்கள், இந்த நம்பிக்கை மீட்சிக்கான முயற்சிகளாக மாறுகிறது. தமது முக்கியமான முதல் தோல்விக்குப் பிறகு வீழ்த்தப்பட்ட சுரண்டலாளர்கள், தமது வீழ்ச்சியை எதிர்பார்க்காத, அது சாத்தியம் என்று என்றுமே கருதியிராத, அவ்வாறு சிந்திப்பதற்கே இடம்கொடாத சுரண்டலாளர்கள் பத்து மடங்கு பெருகிய ஆற்றலுடன், மூர்க்கமான ஆவேசமும் பகைமையும் நூறுமடங்கு பெருக்கெடுக்க அவர்கள் இழந்து விட்ட ''சுவர்க்கத்தை'' மீண்டும் பெறுவதற்காகப் போராட்டத்தில் குதிக்கின்றனர், இதுவரையில் இத்தகைய இனிமை மிக்க வாழ்க்கை வாழ்ந்து விட்டு இப்போது ''சாமான்ய மந்தை'' தம்மை நாசத்துக்கும் கடும்வறுமைக்கும் (அல்லது ''சாமான்ய'' உழைப்புக்கும்) தள்ளுவதால் பாதிப்புறும் தமது குடும்பங்களின் சார்பில் போராட்டத்தில் குதிக்கின்றனர். முதலாளித்துவச் சுரண்டலாளர்களைப் பின் தொடர்ந்து குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் விரிவான பகுதிகள் செல்கின்றன. அவர்கள் ஊசலாடியும் தயங்கிமயங்கியும் ஒருநாள் பாட்டாளிகளின் பின்னுல் அணிவகுத்துச் சென்றும் மறுநாள் புரட்சியின் இடர்ப்பாடுகளைக் கண்டு பீதியடைந்து தொழிலாளர்கள் அடையும் முதல் தோல்வி அல்லது அரைவாசித் தோல்வியைக் கண்டால் திகில் அடைந்து நடுக்கமுற்று இலக்கற்று ஓடித் திரிந்து, ஓலமிட்டு, ஒரு முகாமில் இருந்து இன்னொன்றுக்கு விரைந்து—நமது மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களைப் போலவே—நடந்து கொள்கிருர்கள் என்பதை எல்லா நாடுகளினதும் பல பத்தாண்டுக்கால வரலாற்று அனுபவம் உறுதிப்படுத்துகிறது.

இந்த சூழ்நிலைமைகளில், மூர்க்கமான உக்கிரமான போர் சகாப்தத்தில், மிகப் பழமைப்பட்ட, ஆயிரம் ஆண்டுக்காலத் தனியுரிமைகள் இருக்க வேண்டுமா வேண்டாமா என்ற கேள்வியினை வரலாறு முன்வைத்திருக்கும் போது—அத்தகைய நேரத்தில் பெரும்பான்மையையும் சிறுபான்மையையும் பற்றி, தூய ஜனநாயகம் பற்றி, சர்வாதிகாரம் அவசியமில்லை என்பது பற்றி, சுரண்டலாளர் மற்றும் சுரண்டப்

படுவோர் இடையிலான சமத்துவம் பற்றிப் பேசுவதா!! இதற்கு எத்தகைய அந்தமற்ற அசட்டுத்தனமும் எல்லையற்ற அற்பத்தனமும் தேவை!

ஆயினும் ஓரளவு ''அமைதியான'' முதலாளித்துவம் நிலவிய ஆண்டுகளில் 1871க்கும் 1914க்கும் இடையே அற்பவாதம், ஏலாமை, துரோகம் ஆகியவற்றின் ஆகியன் லாயங்கள்[25] சந்தர்ப்பவாதத்துக்குத் தம்மைத் தாமே தகவமைத்துக் கொண்டிருந்த சோஷலிஸ்டுக் கட்சிகளில் திரண்டு சேர்ந்தன.

* * *

மேலே மேற்கோள் காட்டப்பட்ட காவுத்ஸ்கியின் நூலில் இருந்து, ஒரு வாசகத்தில் அவர் சர்வப்பொது வாக்குரிமையை அத்து மீறும் ஒரு முயற்சி பற்றிப் பேசுகிருர் (இதற்கிடையில் சொன்ஞல் இதனை வலிமை மிக்க தார்மிக அதிகாரபலத்தின் ஆழமான தலையூற்று என்று அழைக்கிருர், அதே போதில் எங்கெல்ஸ் அதே பாரிஸ் கம்யூன் நிமித்தமாக, சர்வாதிகாரம் பற்றிய அதே விஷயத்தின் மீது முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான ஆயுதமேந்திய மக்களின் அதிகாரபலம் பற்றிப் பேசினர்—இது ''அதிகாரபலம்'' சம்பந்தமாக அற்பவாதியின் கருத்துக்கும் புரட்சிவாதியின் கருத்துக்கும் இடையிலான மிகவும் தன்மைக்குறிப்பான வேறுபாடாகும்...) என்பதை வாசகர் ஒருவேளை கவனித்திருப்பார்.

சுரண்டலாளர்கள் வாக்குரிமை இழப்பது என்ற பிரச்சினை **முற்றிலும் ருஷ்ய** வகைப்பட்ட பிரச்சினையாகும், பொதுவான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. காவுத்ஸ்கி போலி வேடத்தை வீசி எறிந்து தனது பிரசுரத்துக்கு **போல்ஷிவிக்குகளை எதிர்த்து** என்று தலைப்புச் சூட்டியிருப்பாராஞல் இந்தத் தலைப்பு இப்பிரசுரத்தின் உள்ளடக்கத்துக்குப் பொருத்தமானதாக இருந்திருக்கும், வாக்குரிமை பற்றி நேரடியாகப் பேசுவது பற்றி காவுத்ஸ்கி நியாயப்படுத்தியிருக்க முடியும். ஆஞல் காவுத்ஸ்கி பிரதானமாயும் ஒரு ''தத்துவாளர்'' ஆகவே முன்வர விரும்புகிருர். அவர் தனது பிரசுரத்தை **பொதுவான 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'** என அழைத்தார். இந்தப்

பிரசுரத்தின் இரண்டாம் பாதியில் ஆறும் பாராவில் இருந்து மட்டுமே துவங்கி சோவியத்துகள் மற்றும் ருஷ்யா குறித்துப் பிரத்தியேகமாயும் பேசுகிருர். முதல் பாகத்தில் (நான் மேற்கோள் எடுத்துள்ளதில்) விளக்கப்பட்டுள்ள கருப்பொருள் பொதுவான ஜனநாயகம் மற்றும் சர்வாதிகாரம் என்பதாகும். வாக்குரிமை பற்றிப் பேசும் போது காவுத்ஸ்கி தாம் தத்துவத்தை ஒரு செப்புக் காசுக்கும் கூட மதிக்காதவர், போல்ஷிவிக்குகளின் எதிராளி என்பதை தாமே காட்டிக் கொடுத்துக் கொண்டார். ஏனெனில் தத்துவம், அதாவது பொதுவான (தேசியரீதியில் பிரத்தியேகமானது அல்ல) ஜனநாயகம் மற்றும் சர்வாதிகாரத்தின் வர்க்க ஆதாரங்களைப் பற்றிய அறிவாய்வு, வாக்குரிமை போன்ற விசேஷ பிரச்சினையை எடுத்துக் கவனிக்கக் கூடாது, மாருக சுரண்டலாளர்கள் வீழ்த்தப்பட்டு அவர்களது அரசு சுரண்டப்பட்டோரின் அரசால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளதான வரலாற்றுக் காலப் பகுதியில் ஜனநாயகத்தை செல்வந்தருக்கும் சுரண்டலாளருக்கும் பேணிவைத்திருப்பதா என்ற பொதுவான விஷயத்தையே எடுத்துக் கவனிக்க வேண்டும்.

இந்த வழியில், இந்த வழியில் மட்டுமே,ஒரு தத்துவாளர் இந்த விஷயத்தை முன்வைக்க முடியும்.

பாரிஸ் கம்யூனின் உதாரணம் நமக்குத் தெரியும், அதன் தொடர்பாகவும் அது குறித்தும் மார்க்சியத்தின் மூலவர்கள் கூறியது அனைத்தையும் நாம் அறிவோம். இந்த விவரங்களின் அடிப்படையில் நான் உதாரணமாக அக்டோபர் புரட்சிக்கு முன் எழுதப்பட்ட அரசும் புரட்சியும் எனும் எனது நூலில் ஜனநாயகம் மற்றும் சர்வாதிகாரம் பற்றிய விஷயத்தைப் பரிசீலித்தேன். வாக்குரிமையைக் கட்டுப்படுத்துவது பற்றி நான் எதுவுமே கூறியிருக்கவில்லை.வாக்குரிமையைக் கட்டுப்படுத்துவது பற்றிய விஷயம் தேசியரீதியில் பிரத்தியேகமான ஒன்றே தவிர சர்வாதிகாரம் பற்றிய பொது விஷயம் அல்ல. வாக்குரிமையைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான விஷயத்தை எவரும் ருஷ்யப் புரட்சியின் பிரத்தியேக நிலைமைகளையும் அதன் வளர்ச்சியின் பிரத்தியேகப் பாதையையும் ஆராய்வது மூலம் அணுக வேண்டும். இது இந்த நூலில் பின்னல்

செய்யப்படும். எனினும் ஐரோப்பாவில் வரவிருக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் எல்லாம், அல்லது அவற்றில் பெரும்பான்மை, முதலாளித்துவ வர்க்கத்தின் வாக்குரிமையைக் கட்டுப்படுத்துவதை தவிர்க்க முடியாதபடி கொண்டிருக்கும் என்று முன் கூட்டியே உத்தரவாதம் செய்வது தவறாகும். அது அவ்வாறு இருக்கலாம். போர் மற்றும் ருஷ்யப் புரட்சியின் அனுபவத்துக்குப் பிறகு இது ஒருவேளை அவ்வாறு இருக்கலாம். ஆனால் சர்வாதிகாரத்தின் அமுலாக்கத்துக்கு இது அறவே அவசியமானது என்பதில்லை. சர்வாதிகாரம் என்பதன் தர்க்கரீதியான கருத்துருவின் இன்றியமையாத தன்மைக் குறிப்பல்ல இது. சர்வாதிகாரம் என்பதன் வரலாற்று மற்றும் வர்க்கக் கருத்துருவில் இது இன்றியமையாத நிபந்தனையாகப் பிரவேசிப்பதில்லை.

சர்வாதிகாரத்தின் இன்றியமையாத தன்மைக்குறிப்பும் அவசியமான நிபந்தனையும் ஒரு வர்க்கம் என்ற முறையில் சுரண்டலாளர்களை பலப்பிரயோகம் மூலம் ஒடுக்குவதே ஆகும். இதன் பின்விளைவாக இது ''தூய ஜனநாயகத்தை'', அதாவது சமத்துவம் மற்றும் சுதந்திரத்தை அந்த வர்க்கம் சம்பந்தப்பட்ட வரை, மீறுவதாகும்.

இந்த வழியில்தான், இந்த வழியில் மட்டுமே இந்த விஷயத்தை தத்துவார்த்த முறையில் முன்வைக்க முடியும். இவ்வாறு இவ்விஷயத்தை முன்வைக்கத் தவறியதன் மூலம் காவுத்ஸ்கி தாம் போல்ஷிவிக்குகளை ஒரு தத்துவாளராக எதிர்க்கவில்லை என்பதையும், மாறாக சந்தர்ப்பவாதிகள் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தினரின் முகஸ்துதியாளர் என்ற முறையிலுமே எதிர்க்கிறார் என்பதையும் புலப்படுத்தி விட்டார்.

எந்த நாடுகளில், முதலாளித்துவத்தின் எந்த தேசிய இயல்புகள் சம்பந்தப்பட்டு, சுரண்டலாளர்களுக்கான ஜனநாயகம் ஏதேனும் ஒரு வடிவில் (முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ) மீறப்படும் என்பது, இந்த அல்லது அந்த முதலாளித்துவத்தின், இந்த அல்லது அந்தப் புரட்சியின் பிரத்தியேக தேசிய இயல்புகள் பற்றியதான விஷயமாகும். தத்துவார்த்த விஷயம் வேறு: சுரண்டலாளர் வர்க்கத்தினைப்

பொருத்தவரை ஜனநாயகத்தை மீறுதல் செய்யாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சாத்தியமா?

சரிநுட்பமாயும் இந்தக் கேள்வியை, தத்துவார்த்த ரீதியில் முக்கியமானதும் அத்தியாவசியமுமான இந்த ஒரே கேள்வியைத் தான் காவுத்ஸ்கி தட்டிக் கழித்திருக்கிறார். இந்தக் கேள்விக்குப் பொருத்தமானதும் நான் மேலே மேற்கோள் காட்டியுள்ளதுமான இவற்றைத் தவிர வேறு எல்லாவகையான வாசகங்களேயும் மார்க்ஸ், எங்கெல்சின் நூல்களில் இருந்து அவர் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

காவுத்ஸ்கி நீங்கள் விரும்பும் எதை வேண்டுமாயினும், மிதவாதிகள் மற்றும் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளுக்கு ஏற்புடைய எல்லாவற்றைப் பற்றியும் அவர்களது கருத்து வட்டத்துக்கு அப்பால் செல்லாதவற்றைப் பற்றியும் பேசுகிறார், ஆனல் பிரதான விஷயம் குறித்து, அதாவது முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்பைத் தகர்க்காமல் தனது விரோதிகளே பலப்பிரயோகம் மூலம் அடக்காமல் பாட்டாளி வர்க்கம் வெற்றியடைய முடியாது என்பதும் எங்கு ''பலப்பிரயோகம் மூலமான அடக்குமுறை'' நிலவுகிறதோ, எங்கு ''சுதந்திரம்'' இல்லேயோ அங்கு நிச்சயமாயும் ஜனநாயகம் இல்லே என்பதும் குறித்து அவர் பேசுவதில்லே.

இதைக் காவுத்ஸ்கி புரிந்து கொள்ளவில்லே.

* * *

இப்போது நாம் ருஷ்யப் புரட்சியின் அனுபவத்தையும், அரசியல் நிர்ணய சபை கலேக்கப்படுவதற்கும்[26] முதலாளித்துவ வர்க்கத்திடம் இருந்து வாக்குரிமை திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கும் இட்டுச் சென்ற பிரதிநிதிகளின் சோவியத்துகளுக்கும் அரசியல் நிர்ணய சபைக்கும் இடையிலான அந்த வேறுபாட்டையும் பரிசீலிப்போம்.

சோவியத்துகள் அரசு அமைப்புகள் ஆக முடியாது

சோவியத்துகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ருஷ்ய வடிவமாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்

குறித்து ஒரு மார்க்சியத் தத்துவாளர் ஒரு நூல் எழுதுவதற்காக இந்தக் கருப்பொருளை மெய்யாகவே படித்து ஆராய்ந்தாராளுல் (காவுத்ஸ்கி செய்தது போன்று சர்வாதிகாரத்துக்கு எதிராக குட்டி முதலாளித்துவ ஒப்பாரிகளை ஓலமிட்டு மென்ஷிவிக் ராகங்களைப் பாடும் போக்கில் அன்றி) அவர் முதலில் சர்வாதிகாரம் பற்றி ஒரு பொதுவான வரையறுப்பைக் கொடுத்திருப்பார், பிறகு அதன் தனிப்பட்ட தேசிய வடிவமான சோவியத்துகளைப் பற்றிப் பரிசீலித்திருப்பார், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வடிவங்களில் ஒன்று என்ற முறையில் அவற்றைக் குறித்த தமது விமரிசனத்தை வழங்கியிருப்பார்.

சர்வாதிகாரம் குறித்த மார்க்சிய போதனையை காவுத்ஸ்கி மிதவாதப் பாணியில் ''வியாக்கியானம்'' செய்ததற்குப் பின்னர், அவரிடமிருந்து பொறுப்பான எதையும் எதிர்பார்க்க முடியாது என்பது சொல்லாமலே விளங்கும். ஆனுல் சோவியத்துகள் என்பவை எவை என்ற கேள்வியை அவர் அணுகிய முறையும், இந்த விஷயத்தை அவர் எடுத்துக் கவனித்த வழியும் மிகவும் தன்மைக் குறிப்பானவை.

1905ஆம் ஆண்டில் அவை உதித்தெழுந்ததை நினைவு கூரும் அவர், சோவியத்துகள் ''பாட்டாளி வர்க்க அமைப்பின் வடிவங்களில் மிகவும் சகலமும் தழுவிய (umfassendste) ஒன்ருகும், காரணம் இவை எல்லா கூலித் தொழிலாளர்களையும் அரவணைத்துக் கொண்டன'' என்கிருர் (பக்கம் 31). 1905ல் அவை வட்டார உறுப்புக்களாக மட்டுமே இருந்தன; 1917ல் அவை அகில ருஷ்ய அமைப்புகள் ஆயின.

காவுத்ஸ்கி மேலும் கூறுவதாவது: ''சோவியத் வடிவிலான அமைப்பு அதன் பின்னுல் ஒரு மகத்தான புகழார்ந்த வரலாற்றினை ஏற்கெனவே கொண்டிருக்கிறது, அதன்முன் மேலும் வலிமை வாய்ந்த எதிர்காலம் இருக்கிறது, இது ருஷ்யாவில் மாத்திரம் அல்ல. எல்லா இடங்களிலும் நிதி மூலதனம் தன் வசம் வைத்திருக்கும் பிரம்மாண்டமான பொருளாதார மற்றும் அரசியல் சக்திகளுக்கு எதிராக வைத்துப் பார்க்கையில் பாட்டாளிகளின் பொருளாதார மற்றும் அரசியல் போராட்டங்களின் பழைய முறைகள் போதுமானவை அல்ல'' (versagen எனும் இந்த ஜெர்மன் தொடர் ''போதுமானதல்ல''

என்பதைவிடச் சற்று வலுவானது, ''ஆற்றலிழந்தது'' என் பதைவிடச் சற்றே பலவீனமானது) என்று தோன்றுகிறது. இந்தப் பழைய முறைகளைக் கைவிட்டுவிட முடியாது; சகஜ மான காலங்களுக்கு அவை இன்னும் இன்றியமையாதவை. ஆனால் அடிக்கடி எழும் கடமைகளை அவற்றால் தாக்குப்பிடிக்க முடியாது, தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் மற்றும் பொரு ளாதாரப் பலப்பிரயோகக் கருவிகள் அனைத்தையும் இணைப் பதன் விளைவாக மட்டுமே இக்கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்'' (பக்கம் 32).

இதைத் தொடர்ந்து வெகுஜன வேலைநிறுத்தம் மீதும் ''தொழிற்சங்க அதிகார வர்க்கம்'' மீதுமான அறிவாய்வு வருகிறது—பின்னது தொழிற்சங்கங்களைவிடவும் அவசியத் தில் சற்றும் குறைந்ததல்ல, ஆனால் ''காலத்தின் சின்னமாக மேலும் மேலும் மாறிவரும் மிகப் பெரிய வெகுஜனப் போராட்டங்களை நெறியாண்மை செய்யும் நோக்கத்துக்கு இவற்றால் பயனில்லை....''

காவுத்ஸ்கி பின்வருமாறு முடிக்கிறார்: ''இவ்வாறு சோவியத் வடிவிலான நிறுவன ஒழுங்கமைப்பு நமது காலத் தின் ஆக முக்கியமான புலப்பாடுகளில் ஒன்றாகும். நாம் எதை நோக்கி முன்னே சென்று கொண்டிருக்கிறோமோ அந்த மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான மாபெரும் தீர்மானகரமான போராட்டங்களில் இது நிர்ணயமான முக் கியத்துவத்தைப் பெறும் வாய்ப்பினைத் தருகிறது.

''ஆனால் சோவியத்துகளிடமிருந்து மேலும் அதிகமாகக் கோருவதற்கு நமக்கு உரிமை உண்டா? போல்ஷிவிக்குகள் 1917 நவம்பர்'' (புதிய பாணியில், நமது பாணிப்படி அக் டோபர்)''புரட்சிக்குப் பிறகு இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சி யாளர்களுடன்[27] சேர்ந்து தொழிலாளர் பிரதிநிதிகளின் ருஷ்ய சோவியத்துகளில் பெரும்பான்மை பெற்று அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்ட பிறகு அவர்கள் அதுகாறும் இருந்து வந்ததான ஒரு வர்க்கத்தின் போராட்ட அமைப்பு என்பதில் இருந்து சோவியத்துகளை அரசு நிறுவனமாக மாற்று வதற்கு முன் வந்தார்கள். மார்ச்'' (புதிய பாணியில், நமது பாணிப்படி பிப்ரவரி) ''புரட்சியில்[28] ருஷ்ய மக்கள் வென்று பெற்ற ஜனநாயகத்தை அவர்கள் அழித்தார்கள். இதற்குப் பொருத்தமான முறையில் அவர்கள் தம்மைத்தாமே சமூக-ஜனநாயகவாதிகள் என்று அழைத்துக் கொள்வது இல்லா தாயிற்று. அவர்கள் தம்மைத் தாமே கம்யூனிஸ்டுகள் என்று

அழைத்துக் கொள்கின்றனர்'' (பக்கம் 33, அழுத்தம் காவுத்ஸ்கியினுடையது).

ருஷ்ய மென்ஷிவிக் இலக்கியம் பற்றிப் பரிசயம் உள்ளவர்கள் எவரும் காவுத்ஸ்கி எப்படி மார்த்தவ், அக்செல்ரோத், ஷ்டைன் வகையருக்களை அடிமைத்தனமான முறையில் காப்பி அடிக்கிறார் என்பதை உடனே பார்க்க முடியும். ஆம், ''அடிமைத்தனமான முறையில்தான்'', காரணம் மென்ஷிவிக் தப்பெண்ணங்களுக்குப் பரிந்து உதவும் பொருட்டு காவுத்ஸ்கி மெய்விவரங்களை கேலிக்கிடமான முறையில் திரித்துப் புரட்டுகிறார். உதாரணமாக, காவுத்ஸ்கி தனக்குத் தகவல் தந்தவர்களிடம் (பெர்லினைச் சேர்ந்த ஷ்டைன் மற்றும் ஸ்டாக்ஹோமைச் சேர்ந்த அக்செல்ரோத் போன்ற) போல்ஷிவிக்குகள் என்ற பெயரை கம்யூனிஸ்டுகள் என்று மாற்றம் செய்தல் மற்றும் அரசு நிறுவனங்கள் என்ற முறையில் சோவியத்துகளின் முக்கியத்துவம் ஆகிய பிரச்சினைகள் எப்போது எழுந்தன என்பதைக் கேட்டறியச் சிரமப்படவில்லை. இந்த சாமானிய விவரத்தை அவர் கேட்டிருப்பாராஞல் இந்த நகைப்புக்கிடமான வாக்கியங்களை அவர் எழுதியிருக்க மாட்டார். இந்த இரு பிரச்சினைகளும் போல்ஷிவிக்குகளால் 1917 ஏப்ரலில் எழுப்பப்பட்டன, உதாரணமாக 1917 ஏப்ரல் 4ந் தேதிய எனது ''ஆய்வுரைகளில்'',* அதாவது 1917 அக்டோபர் புரட்சிக்கு நெடுங் காலம் முன்பே (நிச்சயமாயும் 1918 ஜனவரி 5ல் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டதற்கு நெடுங்காலம் முன்பே) எழுப்பப்பட்டன.

ஆனால் நான் இப்போது முழுமையாய் மேற்கோள் காட்டிய காவுத்ஸ்கியின் வாதம் சோவியத்துகள் குறித்த முழுப் பிரச்சினையின் அறுதிக் கூறைச் சுட்டுகிறது. அந்த அறுதிக் கூறு என்னவெனில்: சோவியத்துகள் அரசு நிறுவனங்களாக மாற விரும்புமாயின் (1917 ஏப்ரலில் போல்ஷிவிக்குகள் ''எல்லா ஆட்சி அதிகாரமும் சோவியத்துகளுக்கே!'' என்ற கோஷத்தை முன்வைத்தார்கள், இதே மாதத்தில் நடைபெற்ற போல்ஷிவிக் கட்சி மாநாட்டில் தாம் முதலாளித்துவ

---

* இதே பதிப்பு, தொகுதி 5, பக்கங்கள் 30-38 பார்க்க.—ப-ர்.

நாடாளுமன்றக் குடியரசுடன் திருப்திப்படவில்லை எனவும் பாரிஸ் கம்யூன் அல்லது சோவியத் மாதிரியிலான தொழிலாளர், விவசாயிகள் குடியரசைக் கோருவதாயும் சாற்றினர்கள்)—அல்லது சோவியத்துகள் இதற்காக முயலாமலும், தமது கரங்களில் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்ளாமலும், அரசு நிறுவனங்களாக மாருமலும் ஒரு ''வர்க்கத்தின்'' ''போராட்ட அமைப்புகளாக'' (இந்த அப்பாவி விருப்பத்தால் அலங்கரித்து மார்த்தவ் கூறியது போல, மென்ஷிவிக் தலைமையின் கீழ் சோவியத்துகள் முதலாளிகளுக்குத் தொழிலாளிகளை அடிப்படுத்தும் ஒரு கருவியாகவே இருந்தன) இன்னும் இருக்க வேண்டுமா?

காவுத்ஸ்கி அடிமைத்தனமான முறையில் மார்த்தவின் சொற்களைத் திருப்பிச் சொல்கிறார். போல்ஷிவிக்குகளுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் இடையிலான தத்துவார்த்த சர்ச்சையில் இருந்து துணுக்குகளைப் பொறுக்கிக் கொண்டு பொதுவான தத்துவார்த்த, பொதுவான ஐரோப்பியக் களத்தில் அவற்றை விமர்சனம் இன்றியும் பொருத்தம் இன்றியும் மறுநடவு செய்கிறார். இதன்விளைவு, காவுத்ஸ்கியின் வாதத்தினைப் படித்திருக்கும் பட்சத்தில், வர்க்க உணர்வுடைய ஒவ்வொரு ருஷ்ய தொழிலாளியிடமும் இத்தகைய கலவைக் கூளமானது ஒரு தணிக்க முடியாத உரத்த சிரிப்பை எழுப்புவதாக இருக்கும்.

விவாதிக்கப்படும் விஷயம் என்ன என்பதை நாம் விளக்கும் போது ஐரோப்பாவில் இருக்கும் எல்லாத் தொழிலாளிகளும் (ஒரு சில வேர்பாய்ந்த சமூக-ஏகாதிபத்தியவாதிகள் தவிர) காவுத்ஸ்கியைப் பார்த்து இப்படித்தான் சிரிப்பார்கள்.

மார்த்தவின் பிழையை ஒரு பச்சையான அபத்தமாக வளர்த்ததன் மூலம் அவருக்கு காவுத்ஸ்கி நலம் செய்வதன் பேரில் தீங்கு புரிந்துள்ளார். உண்மையில், காவுத்ஸ்கியின் வாதங்களின் விளைவு என்ன என்பதைப் பாருங்கள்!

சோவியத்துகள் எல்லாக் கூலித் தொழிலாளர்களையும் அரவணைத்துக் கொள்கின்றன. நிதி மூலதனத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதார மற்றும் அரசியல் போராட்டத்தின் பழைய முறைகள் போதுமானவை அல்ல.

சோவியத்துகள் எதிர்காலத்தில் மாபெரும் பாத்திரம் வகிக்கப் போகின்றன, இது ருஷ்யாவில் மட்டுமல்ல. ஐரோப்பாவில் மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான மாபெரும் தீர்மானகரமான போராட்டங்களில் அவை தீர்மானகரமான பாத்திரம் வகிக்கும். இவ்வாறு காவுத்ஸ்கி கூறுகிறார்.

அருமை ஆனல் ''மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான தீர்மானகரமான போராட்டங்கள்'' இந்த இரு வர்க்கங்களில் எது அரசு அதிகாரத்தை மேற்கொள்ளும் என்பதைத் தீர்மானம் செய்யாதா?

அப்படி எதுவும் கிடையாது! ஆண்டவன் தடுப்பாராக!

எல்லா கூலித் தொழிலாளர்களையும் அரவணைத்துக் கொள்ளும் சோவியத்துகள் ''தீர்மானகரமான'' போராட்டங்களில் அரசு நிறுவனங்கள் ஆகிவிடக் கூடாது!

ஆனல் அரசு என்பது என்ன?

அரசு என்பது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்குவதற்குரிய ஒரு இயந்திரமே தவிர வேறு எதுவுமல்ல.

இவ்வாறு, ஒடுக்கப்பட்ட வர்க்கம், நவீன சமுதாயத்தில் இருக்கும் உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்கள் அனைவரின் முன்னணிப்படை, ''மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான தீர்மானகரமான போராட்டங்களை'' நோக்கி முயல வேண்டும், ஆனல் மூலதனம் உழைப்பை எந்த சாதனம் கொண்டு அடக்கி வருகிறதோ அந்த இயந்திரத்தைத் தொட்டுவிடக் கூடாது!—அந்த இயந்திரத்தை அது உடைக்கக் கூடாது!—சுரண்டலாளர்களை அடக்குவதற்கு அது தனது சர்வமும் அடங்கிய நிறுவனத்தை பயன்படுத்தக் கூடாது!

அருமை, திரு. காவுத்ஸ்கி, அற்புதம்! ''நாம்'' வர்க்கப் போராட்டத்தை எல்லா மிதவாதிகளும் ஒப்புக்கொள்வது போலவே, அதாவது முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துதல் இன்றி ஒப்புக்கொள்கிறோம்....

இங்குதான் காவுத்ஸ்கி மார்க்சியத்திடமிருந்தும் சோஷலிசத்திடமிருந்தும் முழுமையாக முறித்துக்கொண்டு விட்டது கண்கூடாகத் தெரிகிறது. உண்மையில் இது முதலாளிகளின் முகாமுக்குத் துறந்தோடுவதாகும். அவர்கள் தாம் ஒடுக்கி வரும் வர்க்கத்தின் நிறுவனங்கள் அரசு நிறுவனங்களாக

மாற்றமடைவது தவிர்த்த எல்லாவற்றையும் விட்டுக்கொடுக்க தயாராக இருக்கிருர்கள். எல்லாவற்றையும் இணக்கப் படுத்தி, வெறும் தொடர்களேக் கொண்டு ஆழமான எல்லா முரண்பாடுகளில் இருந்தும் தப்பி வெளியேறும் தனது நிலேயை காவுத்ஸ்கி இனிமேலும் பாதுகாத்துக் கொள்ள முடியாது.

காவுத்ஸ்கி ஒன்ரு, தொழிலாளி வர்க்கம் அரசு அதிகாரம் மேற்கொள்வதை முற்ருக நிராகரிக்கிருர், அல்லது தொழிலாளி வர்க்கம் பழைய முதலாளித்துவ அரசு இயந்திரத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று ஒத்துக்கொள்கிருர். ஆனுல் அது அதை உடைத்துத் தகர்த்து அதை ஒரு புதிய பாட்டாளி வர்க்க இயந்திரத்தால் மாற்றீடு செய்ய வேண்டும் என்பதை எவ்வகையிலும் ஒத்துக்கொள்ள மாட்டார். காவுத்ஸ்கியின் வாதங்களே எந்தவழியில் ''அர்த்தப்படுத்தி'' அல்லது ''விளக்கப்படுத்தி'' பார்த்தாலும், அவர் மார்க்சியத்தோடு முறித்துக் கொண்டுவிட்டதும் முதலாளித்துவ வர்க்கத்திடம் துறந்தோடி விட்டதும் கண்கூடு.

முன்னர், கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையில் வெற்றிவாகை சூடியதான தொழிலாளி வர்க்கத்துக்கு எத்தகையதான அரசு தேவை என்பதை விவரிக்கும் போது மார்க்ஸ் எழுதியதாவது: ''அரசு, அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கம்''. இப்போது, இன்னும் தான் மார்க்சிய வாதி என்று உரிமை கொண்டாடும் ஒரு மனிதர் முன்வந்து, முழுமையாக ஒழுங்கமைக்கப்பெற்று மூலதனத்தை எதிர்த்து ''தீர்மானகரமான போராட்டம்'' நடத்திவரும் பாட்டாளி வர்க்கம் தனது வர்க்க நிறுவனத்தை ஒரு அரசு நிறுவனமாக மாற்றிக்கொள்ள நிச்சயமாயும் கூடாது என்று சாற்றுவதைக் காண்கிருேம். இங்கு காவுத்ஸ்கி ''அரசிடமான மூட நம்பிக்கையை'' காட்டிக் கொள்கிருர். இது ''ஜெர்மனியில் முதலாளிகளின், பல தொழிலாளர்களினதும் ஆன பொதுவான சிந்தனேயில் கொண்டுவரப்பட்டிருந்தது''[29] என்று 1891ல் எங்கெல்ஸ் எழுதினுர். தொழிலாளர்களே, போராடுங்கள்!—நமது அற்பவாதி இதற்கு ''ஒப்புதல் தருகிருர்'' (முதலாளியும் ''ஒப்புதல் தருவது'' போல, ஏனெனில் தொழிலாளர்கள் எவ்வாறு இருப்பினும் போராடிக் கொண்டிருக்

கின்றனர், செய்யவேண்டிய ஒரே காரியம் என்னவெனில் அவர்களது வாள் முனைகளை மழுங்கச் செய்ய வழிகளை வகுப்பது தான்)—போராடுங்கள், ஆனால் வெல்லத் துணியாதீர்கள்! முதலாளித்துவ வர்க்கத்தின் அரசு இயந்திரத்தை அழிக்காதீர்கள், முதலாளித்துவ ''அரசு நிறுவனத்தை'' பாட்டாளி வர்க்க ''அரசு நிறுவனத்தால்'' மாற்றீடு செய்யாதீர்கள்''!

அரசு என்பது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்குவதற்குரிய ஒரு இயந்திரமே தவிர வேறு எதுவுமல்ல எனும் மார்க்சியக் கருத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்ட எவரும், இந்த மெய்மையை ஊன்றிப் பார்க்கும் எவரும், நிதி மூலதனத்தை முறியடிக்கும் ஆற்றலுடைய பாட்டாளி வர்க்க நிறுவனங்கள் தம்மைத்தாமே அரசு நிறுவனங்களாக மாற்றிக்கொள்ளக் கூடாது என்ற அபத்தமான முடிவுக்கு என்றுமே வர மாட்டார். ''எல்லாவற்றையும் கருத்தூன்றிப் பார்த்தால்'' அரசு என்பது வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட அல்லது வர்க்கங்களுக்கு மேலான ஒன்றாகும் என்று கருதுகிற குட்டி முதலாளித்துவ நபரைக் காட்டிக்கொடுத்தது இந்த அம்சமே. பாட்டாளி வர்க்கத்தின் மீது மட்டுமன்றி மக்கள் முழுமையின் மீதும் குட்டி முதலாளித்துவ வர்க்கம் முழுவதன் மீதும் எல்லா விவசாயிகள் மீதும் ஆட்சி புரியும் மூலதனத்துக்கு எதிராக ''ஒரு வர்க்கம்'' ஆன பாட்டாளி வர்க்கம் தொடர்ந்து அயராது போர் நடத்த அனுமதிக்கப்படுகிறது, ஆயினும் ''ஒரு வர்க்கம்'' ஆன பாட்டாளி வர்க்கம் தனது நிறுவனத்தை அரசு நிறுவனமாக மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை, இது ஏன்? காரணம் குட்டி முதலாளித்துவ வர்க்கம் வர்க்கப் போராட்டத்தை அஞ்சுகிறது, அதை அதன் தர்க்கரீதியான முடிவுக்கு, அதன் பிரதான இலக்கை நோக்கி நடத்திச் செல்வதில்லை.

காவுத்ஸ்கி தன்னைத்தானே முற்றாகக் குழப்பிக் கொண்டு தன்னைத்தான் முழுமையாக அம்பலப்படுத்திக் கொள்கிறார். மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான தீர்மானகரமான போராட்டங்களுக்கு ஐரோப்பா முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதையும், பாட்டாளி வர்க்கத்தின் பொருளா

தார மற்றும் அரசியல் போராட்டத்திலான பழைய முறைகள் போதுமானவை அல்ல என்பதையும் அவரே ஒத்துக் கொள்கிருர் என்பதைக் காணலாம். ஆனுல் இந்தப் பழைய முறைகள் துல்லியமாயும் முதலாளித்துவ ஜனநாயகம் பயன்படுத்தியவை. எனவே இதைத் தொடர்ந்து...?

என்ன தொடர்கிறது என்று நினைக்க அஞ்சுகிருர் காவுத்ஸ்கி.

...எனவே ஒரு பிற்போக்காளன், தொழிலாளி வர்க்கத்தின் விரோதி, முதலாளித்துவ வர்க்கத்தின் கையாள் மட்டுமே காலாவதியாகிப் போன பழங்காலத்தைத் திரும்பிப் பார்த்து முதலாளித்துவ ஜனநாயகத்தின் கவர்ச்சியைச் சித்திரித்து தூய ஜனநாயகம் குறித்துப் பிதற்ற முடியும். மத்திய காலத்துடன் ஒப்பு நோக்கும் போது முதலாளித்துவ ஜனநாயகம் முற்போக்கானதாக இருந்தது, அதைப் பயன்படுத்த வேண்டி இருந்தது. ஆனுல் இப்போது அது தொழிலாளி வர்க்கத்துக்கு போதுமானது அல்ல. முதலாளித்துவ ஜனநாயகத்தை பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தால் மாற்றீடு செய்யும் வகையில் நாம் இப்போது பின்நோக்கிப் பார்க்காமல் முன்நோக்கிப் பார்க்க வேண்டும். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான தயாரிப்பு வேலையும் பாட்டாளி வர்க்க சேனையை அமைப்பதும் பயிற்றுவிப்பதும் முதலாளித்துவ ஜனநாயக அரசின் கட்டமைப்புக்கு உள்ளேயே சாத்தியமாகவும் (அவசியமாகவும்) இருந்த போதிலும் இப்போது நாம் ''தீர்மானகரமான போராட்டங்களின்'' கட்டத்தை எட்டியிருக்கும் சமயத்தில் பாட்டாளி வர்க்கத்தை இந்தக் கட்டமைப்புக்குள் அடக்கி வைத்திருப்பது பாட்டாளி வர்க்க லட்சியத்துக்குத் துரோகம் செய்வதாகும், ஓடுகாலியாக இருப்பதாகும்.

மார்த்தவ் விஷயத்தில் இந்த வாதம் காவுத்ஸ்கி பயன்படுத்தாத இன்னெரு வாதத்தை அடிப்படையாக்கியதாக இருந்தது என்பதைக் கவனமாகப் பார்க்காமல் மார்த்தவின் வாதத்தைத் திருப்பிக் கூறுவது மூலம் காவுத்ஸ்கி குறிப்பாயும் தம்மைத்தாமே கேலிக்கிடமாக்கிக் கொள்கிருர்! மார்த்தவ் கூறுகிருர் (காவுத்ஸ்கி அவரைப் பின்பற்றித் திருப்பிக் கூறுகிருர்): ருஷ்யா இன்னும் சோஷலிசத்துக்குப் பக்குவ

மானதாக இல்லை, சோவியத்துகளை போராட்ட உறுப்புகள் என்பதில் இருந்து அரசு நிறுவனங்களாக மாற்றுவதற்கு இன்னும் கால அவகாசம் இருக்கிறதில்லை என்பது இதிலிருந்து தர்க்கரீதியாகத் தொடரும் (படிக்கவும்: சோவியத்துகளை மென்ஷிவிக் தலைவர்களின் உதவியுடன் தொழிலாளர்களை ஏகாதிபத்தியவாத முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு அடிப் படுத்தும் கருவிகளாக மாற்றுவதற்கு உரிய காலம் வந்துவிட்டது). எனினும் ஐரோப்பா சோஷலிசத்துக்குப் பக்குவமாக இல்லை என்று காவுத்ஸ்கியால் தீர்மானமாகச் சொல்ல முடியாது. 1909ல் அவர் இன்னும் ஓடுகாலியாக மாருத நிலையில் ஒரு உரிய காலத்திற்கு முற்பட்ட புரட்சி குறித்து அஞ்ச வேண்டிய ஏதுவில்லை எனவும், தோல்வியடைவோம் என்ற அச்சத்தால் புரட்சியைக் கைவிட்டவர்கள் எவராயினும் ஒரு துரோகியே ஆகியிருப்பார் எனவும் எழுதினர். காவுத்ஸ்கி இதைத் தீர்மானமாக கைவிட்டுவிடத் துணியவில்லை. எனவே நமக்கு குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் அசட்டுத்தனத்தையும் கோழைத்தனத்தையும் முழுமையாக வெளிப் படுத்தும் ஒரு அபத்தவாதம் கிட்டுகிறது: ஒருபுறத்தில் ஐரோப்பா சோஷலிசத்துக்குப் பக்குவமாக இருக்கிறது, மூல தனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான தீர்மானகரமான போராட்டங்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது; ஆனல் மறுபுறத்தில் போராட்ட நிறுவனம் (அதாவது போராட்டத்தில் உதித்தெழுந்து வளர்ந்து வலிமை பெற்ற நிறுவனம்), முன்னணிப்படையும் ஒழுங்கமைப்பாளனும் ஒடுக்கப்பட்டோரின் தலைவனுமான பாட்டாளி வர்க்கத்தின் நிறுவனம் அரசு நிறுவனமாக மாற்றப்படக் கூடாது!

* * *

சோவியத்துகள் போராட்ட நிறுவனங்கள் என்ற முறையில் அவசியமானவை ஆனல் அவை அரசு நிறுவனங்களாக மாற்றப்படக் கூடாது என்ற கருத்து தத்துவத்தின் நோக்கு நிலையில் இருப்பதை விட நடைமுறை அரசியலின் நோக்கு நிலையில் இருந்து அதிக அபத்தமானது. புரட்சிகர நிலைமை

இல்லாத சமாதான காலத்திலும் கூட முதலாளிகளுக்கு எதி ரான தொழிலாளர்களின் வெகுஜனப் போராட்டம்—உதார ணமாக மாபெரும் வேலைநிறுத்தம்—இரு தரப்புகளின் இடை யிலும் மிகப்பெரிய கசப்புணர்வினை, மூர்க்கமான ஆவேச உணர்ச்சிகளை, முதலாளித்துவ வர்க்கத்தினர் ''தமது சொந்த வீட்டின் எஜமானர்களாக'' இருப்பதாகவும் இனிமேலும் இருக்கப் போவதாகவும் இடையறாது வற்புறுத்துவதை எல் லாம் எழுப்புகிறது. புரட்சிக் காலத்தில் அரசியல் வாழ்க் கை கொதிக்கும் நிலையை எட்டுகிற பொழுது, தொழில் துறையின் எல்லாப் பிரிவுகளிலுமான எல்லா தொழிலாளர்களை யும் மேலும் எல்லா படையாளிகளையும் கிராமப்புற மக்கள் தொகையின் உழைக்கும் மற்றும் ஆக ஏழ்மைப்பட்ட பகுதி கள் எல்லாவற்றையும் அரவணைத்திருக்கும் சோவியத்துகள் போன்றதான ஒரு அமைப்பு தாக்குதல் மற்றும் தற்காப்பு ஆகியவற்றின் ''நியாயம்'' மூலம் போராட்டம் வளர்ச்சியுறு வதுடன் தானகவே பிரச்சினையை வெளிப்படையாக தவிர்க்க முடியாதபடி முன்வைக்க முன்வருகிறது. நடுநிலை மேற் கொள்ளவும், பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவ வர்க்கத்துடன் ''இணக்கப்படுத்தவும்'' செய்யும் முயற்சி படு மோசமான அசட்டுத்தனமாகும், இது அவலமான தோல்வி யில் போய்முடியும். மார்த்தவ் மற்றும் இதர மென்ஷிவிக்கு களின் பிரசார உரைகளுக்கு ருஷ்யாவில் இதுவே நேர்ந்தது. சோவியத்துகள் விரிவான அளவில் வளர்ச்சியுறுவதில் வெற்றி கண்டு, ஒன்றிணையவும் வலுப்படவும் முடியுமானல் ஜெர்மனியிலும் இதர நாடுகளிலும் தவிர்க்க முடியாதபடி இதுவே நேரும். போராடுங்கள், ஆனல் எல்லா அரசு அதி காரத்தையும் உங்கள் கரங்களில் எடுத்துக் கொண்டுவிடாதீர் கள், அரசு நிறுவனங்கள் ஆகிவிடாதீர்கள் என்று சோவி யத்துகளிடம் சொல்வது, பாட்டாளி வர்க்கத்துக்கும் முத லாளித்துவ வர்க்கத்துக்கும் இடையே வர்க்க ஒத்துழைப்பை, ''சமுதாய அமைதி''யினைப் பிரசாரம் செய்வதற்குச் சமமாகும். மூர்க்கமான போராட்டத்தின் மத்தியில் இத்த கைய நிலை எடுப்பது கேவலமான தோல்வியைத் தவிர வேறு எதற்கேனும் இட்டுச்செல்லும் என்று நினைத்துப் பார்ப்பது

கூட கேலிக்கிடமானது. ஆனுல் ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்று இருப்பது காவுத்ஸ்கியின் நிரந்தரமான கதி யாகும். சந்தர்ப்பவாதிகளுடன் தத்துவம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும் வேறுபடுவதாக அவர் வேஷம் போடு கிருர், ஆனுல் நடைமுறையில் முக்கியமான எல்லாவற்றிலும் (அதாவது புரட்சி சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும்) உடன் படுகிருர்.

அரசியல் நிர்ணய சபையும் சோவியத் குடியரசும்

அரசியல் நிர்ணய சபை மற்றும் போல்ஷிவிக்குகளால் அது கலேக்கப்பட்டதும் குறித்த பிரச்சினேயே காவுத்ஸ்கியின் பிரசுரம் முழுவதன் அறுதிக்கூறு. அவர் நிரந்தரமாக இதற்குத் திரும்பிச் செல்கிருர். இரண்டாம் அகிலத்தின் சித்தாந்தத் தலேவரின் இந்த இலக்கியப் படையல் முழுவதும் போல்ஷி விக்குகள் ''ஜனநாயகத்தை அழித்துவிட்டார்கள்'' (காவுத்ஸ்கி நூலில் இருந்து மேற்கோள் காண்க) என்ற வகை யிலான குத்தல்பாணங்கள் நிறைந்ததாகவே உள்ளது. இந்த விஷயம் மிகவும் சுவையானதும் முக்கியமானதும் ஆகும் என்பது உண்மை. காரணம் முதலாளித்துவ ஜனநாயகத் துக்கும் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்கும் இடையிலான உறவு இங்கு நடைமுறை வடிவில் புரட்சியை எதிர்கொள் கிறது. இந்த விஷயத்தை நமது ''மார்க்சிய தத்துவாளர்'' எப்படி எடுத்துக் கவனித்துள்ளார் என்பதைப் பார்ப்போம்.

அவர் என்னுல் எழுதப்பட்டு 1917 டிசம்பர் 26ந் தேதிய பிராவ்தாவில்[30] வெளியிடப்பட்ட ''அரசியல் நிர்ணய சபை பற்றிய ஆய்வுரைகள்''* என்பதை மேற்கோள் காட்டு கிருர். அவர் தஸ்தவேஜுகளே மேற்கோள் காட்டுவதால் இந்த விஷயம் சம்பந்தமான காவுத்ஸ்கியின் காரியநோக் குடைய அணுகு முறைக்கு இதைவிட நல்ல சான்று இருக்க முடியாது என்று ஒருவர் நினேக்கலாம். ஆனுல் அவர் எவ்

* இதே பதிப்பு, தொகுதி 7, பக்கங்கள் 81-88 பார்க்க.—ப-ர்.

வாறு மேற்கோள் தருகிறார் பாருங்கள். இந்த ஆய்வுரைகள் பத்தொன்பது உள்ளன என்பதை அவர் சொல்லவில்லை, அவை அரசியல் நிர்ணய சபையுடனான சாமானிய முதலாளித்துவக் குடியரசு மற்றும் சோவியத் குடியரசு இவற்றின் இடையிலான உறவையும், அரசியல் நிர்ணய சபை மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இவற்றிடையே நமது புரட்சியின் வேறுபாடு குறித்த வரலாறு பற்றியும் எடுத்துக் கவனிக்கின்றன என்பதையும் அவர் சொல்லவில்லை. காவுத்ஸ்கி அவை எல்லாவற்றையும் புறக்கணிக்கிறார் ''அவற்றில் (இந்த ஆய்வுரைகளில்) இரண்டு குறிப்பாயும் முக்கியமானவை'' என்று மட்டுமே வாசகரிடம் கூறுகிறார்: ஒன்று அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலுக்குப் பிறகு ஆனால் அது கூட்டப்படுவதற்கு முன்பு சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டது பற்றிக் கூறுவது (இது ஐந்தாவது ஆய்வுரை என்று காவுத்ஸ்கி கூறவில்லை), மற்றது சோவியத் குடியரசு பொதுவாயும் அரசியல் நிர்ணய சபையைக் காட்டிலும் உயர் ஜனநாயக வடிவம் என்கிறது (இது மூன்றாவது ஆய்வுரை என்று காவுத்ஸ்கி கூறவில்லை).

இந்த மூன்றாவது ஆய்வுரையில் இருந்து மட்டுந்தான் காவுத்ஸ்கி ஒரு பகுதியை முழுமையாக மேற்கோள் காட்டுகிறார், அதாவது பின்வரும் வாசகம்:

''சோவியத்துகளின் குடியரசு ஒரு உயர் மாதிரியான ஜனநாயக அமைப்புகளின் வடிவம் மட்டுமல்ல (அரசியல் நிர்ணய சபையினை மகுடமாகக் கொண்ட வழக்கமான முதலாளித்துவ குடியரசுடன் ஒப்பிடும் போது) ஆனால் சோஷலிசத்துக்கான மாற்றத்தை ஆக வேதனை இன்றிப்* பெறக்

---

* இதற்கிடையில், காவுத்ஸ்கி வெளிப்படையாகவே வஞ்சகப் புகழ்ச்சி முறையில் ''ஆக வேதனை இன்றி'' என்ற தொடரை திரும்பத் திரும்ப மேற்கோள் காட்டுகிறார். ஆனால் அம்பு குறிதப்பி விட்டதால் சில பக்கங்களுக்கு அப்பால் அவர் சிறு கள்ளத்தனம் செய்து அதை ''வேதனை இல்லாத'' மாற்றம்! என்று பொய்யாக மேற்கோள் தருகிறார். இத்தகைய வழிகளில் எதிராளியின் பேச்சில் எந்த அபத்தத்தையும் எளிதில் போட்டுவிடலாம் என்பது திண்ணம். இந்தக் கள்ளச் சேர்ப்பு வாதத்தின் சாரத்தை, அதாவது சோஷ

கூடியதான ஆற்றலுடைய ஒரே வடிவமாகும்'' (காவுத்ஸ்கி ''வழக்கமான'' என்ற சொல்லையும் இந்த ஆய்வுரையின் முகவுரைச் சொற்களான ''முதலாளித்துவ அமைப்பு முறையில் இருந்து சோஷலிஸ்டு அமைப்பு முறைக்கான மாற்றத்திற்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு'' என்பவற்றையும் தவிர்த்து விடுகிறுர்).

இந்தச் சொற்களை மேற்கோள் காட்டி விட்டு, காவுத்ஸ்கி சிறப்பான வஞ்சகப் புகழ்ச்சியுடன் ஆர்த்துரைக்கிருர்:

''அரசியல் நிர்ணய சபையில் போல்ஷிவிக்குகள் ஒரு சிறுபான்மையாக இருப்பதைத் தாமே அறிந்த பிறகு மட்டுமே இந்த முடிவு வந்தது என்பது வருந்தத் தக்கது. இதற்கு முன்பு லெனினைப் போல வேறு எவரும் இதனைப் பெரும் கூக்குரலிட்டுக் கோரவில்லை.''

இதைத் தான் தமது புத்தகத்தின் 31ஆம் பக்கத்தில் காவுத்ஸ்கி உள்ளபடியே கூறுகிருர்!

இது நிச்சயமாயும் ஒரு முத்துத்தான்! முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு முகஸ்துதியாளர் தான், இந்த விஷயத்தை இவ்வளவு பொய்மையான முறையில் முன்வைத்து, உயர் மாதிரியான அரசு குறித்து போல்ஷிவிக்குகள் பேசுவது எல்லாம் ஒரு புனைவே எனவும் இது போல்ஷிவிக்குகள் அரசியல் நிர்ணய சபையில் சிறுபான்மையாக ஆனதற்குப் பிறகே வெளிவந்தது எனவும் வாசகருக்கு ஒரு மனப்பதிவைத் தர முடியும்!! இத்தகைய இகழார்ந்த பொய்யை முதலாளித்துவ வர்க்கத்திடம் தன்னை விற்பனை செய்துகொண்ட கயவனுல் தான் சொல்ல முடியும் அல்லது, முற்றிலும் இதே தன்மையில், பி.அக்செல்ரோதிடம் நம்பிக்கை வைத்து தனது தகவல் ஆதாரத்தை மூடிமறைக்கும் நபரால்தான் சொல்ல முடியும்.

ஏனெனில் நான் ருஷ்யாவுக்கு வந்து சேர்ந்த அதே நாளில்

லிசத்துக்கு ஆக வேதனை இல்லாத முறையில் மாறிச் செல்வது என்பது ஏழை மக்கள் அனைவரும் முழுமையாக (சோவியத்களில்) ஒழுங்கு திரட்டப்பட்டால் மட்டுமே, அரசு அதிகாரத்தின் மையக்கூறு (பாட்டாளி வர்க்கம்) அவர்கள் ஒழுங்கு திரள உதவும் போது மட்டுமே சாத்தியம் என்பதைத் தட்டிக் கழிப்பதற்கு அவருக்கு உதவுகிறது.

1917 ஏப்ரல் 4ந் தேதி எனது ஆய்வுரைகளைப் பகிரங்கமாகப் படித்து முதலாளித்துவ நாடாளுமன்றக் குடியரசை விட பாரிஸ் கம்யூன் மாதிரி அரசு மேலானது என்று சாற்றியிருந் தேன். இதற்குப் பின் நான் மீண்டும் மீண்டும் அச்சடித்த பிர சுரங்களில், உதாரணமாக அரசியல் கட்சிகள் பற்றிய வெளி யீட்டில் (இது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 1918 ஜனவரியில் *Evening Post* எனும் நியூயார்க் பத்திரிகையில் வெளியிடப்பட்டது[31]) இதையே கூறியிருந்தேன். அதற்கும் மேல், 1917 ஏப்ரல் இறுதியில் நடைபெற்ற போல்ஷிவிக் கட்சி மாநாட்டில் ஒரு தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது ஒரு பாட்டாளி வர்க்க மற்றும் விவசாயிகளின் குடியரசு முதலாளித்துவ நாடாளுமன்றக் குடியரசைவிட மேலானது எனவும், நமது கட்சி பின்னதை வைத்துத் திருப்தியுறாது என் றும், எனவே இதற்கு ஏற்ப கட்சியின் வேலைத்திட்டம் திருத் தியமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியது.[32]

இந்த மெய்விவரங்களின் முன்னே, நான் அரசியல் நிர் ணய சபையைக் கூட்டும்படி மும்முரமாகக் கோரி வந்ததா யும் அதில் போல்ஷிவிக்குகள் சிறுபான்மை ஆகிய பிறகு மட் டுமே அரசியல் நிர்ணய சபையின் பெருமையையும் மதிப்பை யும் ''சிறுமைப்படுத்த'' தொடங்கியதாகவும் தமது ஜெர் மன் வாசகர்களிடம் உறுதியாகக் கூறும் காவுத்ஸ்கியின் வஞ் சனைக்கு என்ன பெயர் கொடுப்பது? இத்தகைய வஞ்சனையை எப்படி மன்னிக்க முடியும்?* காவுத்ஸ்கிக்கு மெய்விவரங்கள் தெரியாது என்று சொல்லி வாதித்தா? அது உண்மையானல் அவற்றைப் பற்றி அவர் ஏன் எழுத முனைந்தார்? மென்ஷிவிக்கு களான ஷ்டைன் மற்றும் பி. அக்செல்ரோத் வகையறுக்கள் கொடுத்த தகவலை அடிப்படையாக்கியே தாம் எழுதியதாக அவர் ஏன் நேர்மையாக எடுத்துச் சொல்லவில்லை? தாம் பாரபட்சமற்றவர் என வேடமிட்டு, தோல்வியடைந்த கார ணத்தால் அதிருப்தியுற்றிருக்கும் மென்ஷிவிக்குகளின் சேவ

---

* காவுத்ஸ்கியின் பிரசுரத்தில் இந்த வகையான பல மென்ஷிவிக் பொய்மைகள் உள்ளன! இது பகைமைபூண்ட ஒரு மென்ஷிவிக்கால் எழுதப்பட்ட வசைபுராணமேயாகும்.

கராகத் தாம் வகிக்கும் பாத்திரத்தை காவுத்ஸ்கி மூடி மறைக்க விரும்புகிறுர்.

இன்னும் வரவிருப்பதைப் பார்க்கும் போது இது கேவலம் அற்பமானதே.

போல்ஷிவிக்குகள் ஒரு முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகக் குடியரசைக் கொண்டு திருப்தியடைவார்களா மாட்டார்களா என்ற கேள்வி குறித்த போல்ஷிவிக் தீர்மானங்கள் மற்றும் அறிவிப்புகளின் மொழிபெயர்ப்பைத் தமக்குத் தகவல் தந்தவர்களிடமிருந்து காவுத்ஸ்கி பெற மாட்டார் அல்லது பெற முடியவில்லே (??) என்று வைத்துக் கொள்வோம். இது நம்ப முடியாதது எனினும் நாம் இவ்வாறு உத்தேசித்துக்கொள்வோம். ஆனுல் காவுத்ஸ்கி தமது புத்தகத்தின் 30ஆம் பக்கத்தில் எனது 1917 டிசம்பர் 26ந் தேதிய ஆய்வுரைகளே நேரடியாகக் குறிப்பிடுகிறுர்.

இந்த ஆய்வுரைகளே அவர் முழுமையாக அறியவில்லேயா, அல்லது ஷ்டைன், அக்செல்ரோத் வகையரு அவருக்கு மொழிபெயர்த்துத் தந்ததை மட்டுமே அறிவாரா? அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களுக்கு முன்பு போல்ஷிவிக்குகள் ஒரு சோவியத் குடியரசு ஒரு முதலாளித்துவ குடியரசை விட மேலானது என்பதை உணர்ந்திருந்தார்களா, அதை மக்களிடம் கூறினுர்களா என்பது பற்றியதான அடிப்படையான விஷயம் பற்றி காவுத்ஸ்கி மூன்றுவது ஆய்வுரையினே மேற்கோள் காட்டுகிறுர். ஆனுல் இரண்டாவது ஆய்வுரை பற்றி அவர் மௌனம் சாதிக்கிறுர்.

இரண்டாவது ஆய்வுரை பின்வருமாறு:

''அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட வேண்டும் என்று கோரும் அதேபோதில், புரட்சிகர சமூக-ஜனநாயகமானது 1917 புரட்சியின் துவக்கம் முதலே சோவியத் குடியரசு ஒரு **அரசியல் நிர்ணய சபையுடனுன வழக்கமான முதலாளித்துவக் குடியரசை விடவும் உயர் வடிவிலான ஜனநாயகமாகும் என்பதைத் திரும்பத் திரும்ப வற்புறுத்தியுள்ளது**'' (அழுத்தம் என்னுடையது.)

போல்ஷிவிக்குகளே கோட்பாடற்ற பேர்வழிகள், ''புரட்சி

கர சந்தர்ப்பவாதிகள்'' (இந்தத் தொடரை காவுத்ஸ்கி தமது புத்தகத்தில் எங்கோ பயன்படுத்துகிறார், எதன் தொடர்பாக என்பது எனக்கு நினைவு இல்லை) என்று சுட்டிக் காட்டும் பொருட்டு காவுத்ஸ்கி இந்த ஆய்வுரைகளில் ''திரும்பத் திரும்ப'' கூறப்பட்ட அறிவிப்புகள் பற்றிய நேரிடையான குறிப்பு இருக்கிறது என்ற மெய் விவரத்தை தமது ஜெர்மன் வாசகர்களிடமிருந்து மறைத்து விட்டார்!

இத்தகைய சின்னத்தனமான, அவலமான, வெறுக்கத் தகுந்த முறைகளைத் திரு. காவுத்ஸ்கி கையாளுகிறார். இந்த வழியில் தான் அவர் தத்துவார்த்தக் கேள்வியைத் தட்டிக் கழித்திருக்கிறார்.

முதலாளித்துவ ஜனநாயக நாடாளுமன்றக் குடியரசு பாரிஸ் கம்யூன் அல்லது சோவியத் மாதிரிக் குடியரசைவிடவும் மட்டமானது என்பது மெய்யா இல்லையா? இதுவே முழுமையான விஷயம், இதைக் காவுத்ஸ்கி தட்டிக் கழித்துவிட்டார். பாரிஸ் கம்யூன் பற்றிய தனது ஆய்வில் மார்க்ஸ் கூறியுள்ள எல்லாவற்றையும் காவுத்ஸ்கி ''மறந்து விட்டார்''. மார்க்சின் அதே கருத்தை குறிப்பாயும் துலக்கமாயும் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலும் முறைப்படுத்தி முன்வைத்து ''கம்யூன் அரசு எனும் சொல்லின் சரியான பொருளில் இனி மேலால் ஒரு அரசாக இல்லை.'' எங்கெல்ஸ் 1875 மார்ச் 28ல் பெபெலுக்கு எழுதிய கடிதத்தையும் அவர் ''மறந்து விட்டார்''.

இரண்டாம் அகிலத்தின் ஆகப் பிரபலமான தத்துவாளர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனும் விசேஷப் பிரசுரத்தில், ஒரு ஜனநாயக முதலாளித்துவக் குடியரசை விடவும் உயர்ந்ததான ஒரு அரசு வடிவம் குறித்த பிரச்சினையை நேரிடையாகவும் திரும்பத் திரும்பவும் முன்வைக்கும் ருஷ்யாவைப் பற்றி விசேஷமாயும் எடுத்து கவனிக்கும் போது இந்தப் பிரச்சினையையே புறக்கணிக்கிறார். இது உண்மையில் முதலாளித்துவ முகாமுக்குத் துறந்தோடுவது தவிர வேறு என்ன?

(இந்த விஷயத்திலும் கூட காவுத்ஸ்கி ருஷ்ய மென்ஷி

விக்குகளை அப்படியே பின்பற்றுகிறார் என்று இடைக் குறிப்பாகச் சொல்கிறோம். மென்ஷிவிக்குகள் மத்தியில் மார்க்ஸ், எங்கெல்சின் ''மேற்கோள்கள் அனைத்தையும்'' அறிந்தவர்களான பலர் இருக்கிறார்கள். ஆனால் 1917 ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலும், 1917 அக்டோபர் முதல் 1918 அக்டோபர் வரையிலும் பாரிஸ் கம்யூன் மாதிரி அரசு பற்றிய விஷயத்தைப் பரிசீலிக்க தனி ஒரு மென்ஷிவிக் கூட தனி ஒரு முயற்சியைக் கூட என்றுமே செய்யவில்லை. பிளெஹானவும் கூட இப்பிரச்சினையைத் தட்டிக் கழித்துவிட்டார். அவர் அப்படிச் செய்ய வேண்டியிருந்தது என்பது தெளிவாகிறது.)

சோஷலிஸ்டுகள், மார்க்சியவாதிகள் என்று தம்மை அழைத்துக்கொண்டு உண்மையில் பிரதானப் பிரச்சினைமீது, பாரிஸ் கம்யூன் மாதிரி அரசு குறித்த பிரச்சினை மீது முதலாளிகள் பக்கம் துறந்தோடிவிட்ட பேர்வழிகளுடன் அரசியல் நிர்ணய சபையின் கலைப்பு குறித்து விவாதிப்பது என்பது பன்றிக்கு முன் முத்துக்களை வைப்பது போலாகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்தப் பிரசுரத்துக்குப் பின்சேர்ப்பாக அரசியல் நிர்ணய சபை குறித்த எனது ஆய்வுரைகளின் முழுவாசகத்தைக் கொடுத்தாலே போதும். இப்பிரச்சினை தத்துவம், வரலாறு மற்றும் நடைமுறை அரசியலின் அடிப்படையில் 1917 டிசம்பர் 26ல் முன்வைக்கப்பட்டது என்பதை வாசகர் காண்பார்.

ஒரு தத்துவாளர் என்ற முறையில் காவுத்ஸ்கி மார்க்சியத்தை முழுமையாகக் கைவிட்டிருப்பாரானால், அவர் குறைந்த பட்சம் ஒரு வரலாற்றாசிரியர் என்ற முறையில் அரசியல் நிர்ணய சபையுடனான சோவியத்துகளின் போராட்டம் குறித்த பிரச்சினையைப் பரிசீலித்திருப்பார். ஒரு மார்க்சிய வரலாற்றாசிரியனாக எப்படி இருப்பது என்பதை காவுத்ஸ்கி அறிந்திருந்தார் என்று அவரது பல நூல்களில் இருந்து நாம் அறிகிறோம். அவரது அத்தகைய நூல்கள் அவர் பின்னால் துரோகம் செய்து விட்டபோதிலும் பாட்டாளி வர்க்கத்தின் நிரந்தர உடைமைகளாக நீடித்து நிலவும். ஆனால் இந்த விஷயத்தின் மீது காவுத்ஸ்கி ஒரு வரலாற்றாசிரியர் என்ற முறையிலும் கூட மெய்மையில் இருந்து ஓடிவிடுகிறார், நன்கு அறிந்த

மெய்விவரங்களைப் புறக்கணிக்கிறார், ஒரு முகஸ்துதியாளர் போன்று நடந்து கொள்கிறார். போல்ஷிவிக்குகள் கோட்பாடற்றவர்களாக இருப்பதாகச் சுட்டிக் காட்ட விரும்பு கிறார், அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பதற்கு முன்னால் அவர்கள் அதனுடனான மோதலை மட்டுப்படுத்த முயன்றார் கள் என்பதாகத் தமது வாசகர்களிடம் சொல்கிறார். அதில் அறவே எவ்விதப் பிழையும் கிடையாது, நாம் தவறு என்று ஏற்பதற்கு எதுவும் இல்லை. நான் ஆய்வுரைகளை முழுமை யாகத் தருகிறேன், அவற்றில் இது அப்பட்டமாயும் தெட்டத் தெளிவான முறையில் விளக்கப்பட்டிருக்கிறது: அரசியல் நிர்ணய சபையில் அரண்செய்து கொண்டு ஊசலாடும் குட்டி முதலாளித்துவ கனவான்களே, பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்துடன் இணங்கிப் போங்கள், இல்லாவிட்டால் நாங்கள் உங்களை ''புரட்சிகர முறையில்'' முறியடிப்போம் (ஆய்வு ரைகள் 18, 19).

ஊசலாடும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பால் மெய்யாகவே புரட்சிகரமான பாட்டாளி வர்க்கம் இவ்வாறு தான் எப்போதும் நடந்து வந்துள்ளது, இனிமேலும் எப்போ தும் நடந்து வரும்.

அரசியல் நிர்ணய சபை பற்றிய விஷயத்தின் மீது காவுத்ஸ்கி ஒரு சம்பிரதாயமான நோக்குநிலையை அனுசரிக் கிறார். புரட்சியின் நலன்கள் அரசியல் நிர்ணய சபையின் சம் பிரதாயமான உரிமைகளை விடவும் உயர்வானவை என்பதை எனது ஆய்வுரைகள் தெளிவாகவும் திரும்பத் திரும்பவும் கூறுகின்றன(ஆய்வுரைகள் 16, 17 பார்க்க). சம்பிரதாயமான ஜனநாயகக் கருத்துக் கோணம், துல்லியமாயும் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களும் பாட்டாளிகளின் வர்க்கப் போராட் டத்தின் நலன்களும் மேலுயர்ந்தவை என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கும் முதலாளித்துவ ஜனநாயகவாதியின் கருத்துக் கோணமாகும். முதலாளித்துவ நாடாளுமன்றங் கள் இந்த அல்லது அந்த வர்க்கத்தின் உறுப்பமைப்புகளே என்பதை ஒரு வரலாற்றாசிரியர் என்ற முறையில் காவுத்ஸ்கி யால் மறுக்க இயலாது. ஆனால் இப்போது (புரட்சியைக் கைவிடும் தமது இழிந்த நோக்கத்துக்காக) காவுத்ஸ்கி தமது

மார்க்சியத்தை மறக்க வேண்டியது அவசியம் என்று காண்கிறார் மற்றும் பின்வரும் கேள்வியைப் போடாது தவிர்த்து விடுகிறார்: ருஷ்யாவின் அரசியல் நிர்ணய சபை எந்த வர்க்கத்தின் உறுப்பமைப்பு? ஸ்தூலமான நிலைமைகளை காவுத்ஸ்கி பரிசீலனை செய்வதில்லை; அவர் மெய்விவரங்களை எதிர்கொள்ள விரும்பவில்லை. இந்த ஆய்வுரைகளில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் வரம்புக்குட்பட்ட தன்மை பற்றிய தான தத்துவார்த்தத் தெளிவாக்கம் மட்டுமன்றி (ஆய்வுரைகள் 1-3), 1917 அக்டோபர் நடுப்பகுதியில் கட்சியின் வேட்பாளர் பட்டியலுக்கும் 1917 டிசம்பரில் இருந்த உண்மை நிலைமைகளுக்கும் இடையிலான இசைவின்மையை நிர்ணயித்த ஸ்தூலமான நிலைமைகளின் விவரவர்ணனை மட்டுமன்றி (ஆய்வுரைகள் 4-6), ஆனல் 1917 அக்டோபர்-டிசம்பரிலான வர்க்கப் போராட்டம் மற்றும் உள்நாட்டுப் போரின் வரலாறும் (ஆய்வுரைகள் 7-15) இடம் பெற்றிருந்தன என்ற மெய்விவரம் குறித்து ஒரு வார்த்தை கூட அவர் தமது ஜெர்மன் வாசகர்களிடம் சொல்லவில்லை. இந்த ஸ்தூலமான வரலாற்றில் இருந்து நாம் பெறும் முடிவாவது (ஆய்வுரை 14) ''எல்லா ஆட்சி அதிகாரமும் அரசியல் நிர்ணய சபைக்கே'' என்ற கோஷம் உண்மையில் காடேட்டுகளின்,[33] கலேதின் ஆட்களின், அவர்களது உடந்தையாளர்களின் கோஷம் ஆகிவிட்டது என்பதே.

வரலாற்றுசிரியர் காவுத்ஸ்கி இதைப் பார்க்கத் தவறுகிறார். சர்வப் பொதுவான வாக்குரிமை சில சமயம் குட்டி முதலாளித்துவ வகைப்பட்ட, சில சமயம் பிற்போக்கான எதிர்ப்புரட்சித் தன்மை வாய்ந்த நாடாளுமன்றங்களை உருவாக்குகிறது என்பதை வரலாற்றுசிரியர் காவுத்ஸ்கி என்றுமே கேள்விப்பட்டது கிடையாது. தேர்தல்களின் வடிவம், ஜனநாயகத்தின் வடிவும் என்பது ஒரு விஷயம், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் வர்க்க உள்ளடக்கம் என்பது வேறு விஷயம் என்பதையும் மார்க்சியவாதி வரலாற்றுசிரியர் காவுத்ஸ்கி என்றுமே கேள்விப்பட்டது இல்லை. அரசியல் நிர்ணய சபையின் வர்க்க உள்ளடக்கம் பற்றிய கேள்வி எனது ஆய்வுரைகளில் நேரிடையாக முன்வைக்கப்பட்டு

விடையளிக்கப்பட்டுள்ளது. ஒரு வேளை எனது விடை தவருக இருக்கலாம். நமது ஆய்வினை வெளியில் இருந்து ஒருவர் மார்க்சிய முறையில் விமர்சனம் செய்வதை நாம் மிகவும் வரவேற்போம். போல்ஷிவிசத்தை விமர்சனம் செய்வதை யாரோ தடுக்கிருர்கள் என்று படுமோசமான மடத்தனமான சொற்தொடர்களைத் தீட்டுவதற்குப் பதில் (காவுத்ஸ்கியின் புத்தகத்தில் இவை ஏராளமாக உள்ளன) அவர் இத்தகைய விமர்சனத்தைச் செய்யத் தொடங்கி இருக்க வேண்டும். ஆனல் அவர் எந்த விமர்சனத்தையும் வழங்கவில்லை என்பதே முடிவு. ஒரு புறத்தில் சோவியத்துகள், மறுபுறத்தில் அரசியல் நிர்ணய சபை இவற்றின் ஒரு வர்க்க ஆய்வு பற்றிய பிரச்சினையைக் கூட அவர் எழுப்பவில்லை. எனவே காவுத்ஸ்கியுடன் வாதமிடுவதோ தர்க்கம் செய்வதோ சாத்தியமல்ல. காவுத்ஸ்கியை ஒரு ஓடுகாலி என்பதல்லாது வேறு எந்தப் பெயராலும் அழைக்க முடியாது என்பதை வாசகருக்கு நிதர்சனப்படுத்திக் காட்டுவதே நாம் செய்யக் கூடிய அனைத்தும் ஆகும்.

சோவியத்துகளுக்கும் அரசியல் நிர்ணய சபைக்கும் இடையிலான வேறுபாட்டுக்கு உரிய வரலாறு உள்ளது, இதை வர்க்கப் போராட்டம் சம்பந்தமான கருத்து நிலையை ஆதரிக்காத ஒரு வரலாற்ருசிரியன் கூடப் புறக்கணித்திருக்க முடியாது. இந்த உண்மையான வரலாற்றையும் காவுத்ஸ்கி தொடவே மாட்டார். சோவியத்துகளுக்கும் ''பொதுவான அரசு'' (அதாவது முதலாளித்து) நிறுவனங்களுக்கும் இடையிலான வேறுபாடு மென்ஷிவிக்குகளின் ஆட்சியின் கீழும் கூட, அதாவது 1917 பிப்ரவரி முதல் அக்டோபர் வரை நிலவியது என்னும் எல்லோரும் அறிந்த மெய்விவரத்தை (இதை இப்போது கடும்பகைமை கொண்ட மென்ஷிவிக்குகள் மட்டுமே மூடிமறைக்கின்றனர்) காவுத்ஸ்கி ஜெர்மன் வாசகரிடமிருந்து மூடிமறைக்கிருர். உள்ளபடியே காவுத்ஸ்கி பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையே சமரசம், இணக்கம், ஒத்துழைப்புக்கான கருத்து நிலையைக்,கைக்கொள்கிருர். இதை காவுத்ஸ்கி எவ்வளவுதான் மறுத்துரைத்தாலும் இது அவரது பிரசுரம் முழுவதாலும்

எண்பித்துக் காட்டப்படுகிறது. அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டிருக்கக் கூடாது என்று சொல்வது முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டம் இறுதிவரை நடத்தப்பட்டிருக்கக் கூடாது எனவும், முதலாளித்துவ வர்க்கம் வீழ்த்தப்பட்டிருக்கக் கூடாது எனவும், பாட்டாளி வர்க்கம் அதனுடன் சமாதானம் செய்து கொண்டிருக்க வேண்டும் எனவும் சொல்வதற்குச் சமானமானதாகும்.

1917 பிப்ரவரிக்கும் அக்டோபருக்கும் இடையில் மென்ஷிவிக்குகள் இந்த இழிவான வேலையில் ஈடுபட்டிருந்தார்கள் மற்றும் எதையும் சாதிக்கவில்லை எனும் மெய்விவரம் குறித்து காவுத்ஸ்கி ஏன் பேசாது மௌனம் சாதித்தார்? முதலாளித்துவ வர்க்கத்தை தொழிலாளி வர்க்கத்துடன் இணக்கப்படுத்துவது சாத்தியம் என்றால் அவ்வாறு செய்வதில் மென்ஷிவிக்குகள் ஏன் வெற்றியடையவில்லை? முதலாளிகள் சோவியத்துகளில் இருந்து விலகி நிற்பது ஏன்? மென்ஷிவிக்குகள் சோவியத்துகளை ''புரட்சிகர ஜனநாயகம்'' எனவும் முதலாளிகளை ''சொத்துடைத்த நபர்கள்'' எனவும் ஏன் அழைத்தார்கள்?

மென்ஷிவிக்குகள் தான் தமது ஆட்சியின் ''சகாப்தத்தில்'' (*1917* பிப்ரவரி முதல் அக்டோபர் வரை) சோவியத்துகளை புரட்சிகர ஜனநாயகம் என்று அழைத்தார்கள் என்பதையும், அதன் மூலம் அவை இதர நிறுவனங்கள் எல்லாவற்றையும் விட மேம்பட்டவை என ஒப்புக்கொண்டார்கள் என்பதையும் காவுத்ஸ்கி தமது ஜெர்மன் வாசகர்களிடமிருந்து மூடிமறைத்திருக்கிறார். இந்த மெய்விவரத்தை மூடிமறைப்பது மூலம் மட்டுமே வரலாற்றாசிரியர் காவுத்ஸ்கி, சோவியத்துகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான வேறுபாட்டுக்கு வரலாறு எதுவும் இல்லை எனவும், அது முகாந்திரம் இன்றி கணத்தில், திடுமென, போல்ஷிவிக்குகளின் கெட்ட நடத்தையின் காரணமாக உதித்தெழுந்தது எனவும் தோன்றும்படி செய்தார். இருப்பினும் உண்மையில், மென்ஷிவிக்குகளின் சமரசம், முதலாளிகளுடன் பாட்டாளி வர்க்கத்தை இணக்கப்படுத்துவதற்கான அவர்களது முயற்சிகள் ஆகியவற்றின் ஆறு மாதங்களுக்கும் அதிகமான (புரட்சிக் கட்டத்தில் பேரளவான காலம்) அனுபவமே மக்களுக்கு இந்த

முயற்சிகளின் பயனற்ற தன்மையை மெய்ப்பித்துக் காட்டியது, பாட்டாளி வர்க்கத்தை மென்ஷிவிக்குகளிடமிருந்து விரட்டி ஓட்டியது.

சோவியத்துகள் பாட்டாளி வர்க்கத்தின் அருமையான போராட்ட நிறுவனங்கள் என்பதையும் அவற்றுக்கு மகத்தான எதிர்காலம் இருக்கிறது என்பதையும் காவுத்ஸ்கி ஒத்துக்கொள்கிறுர். ஆனுல் அவ்வாறு இருப்பதனுல், காவுத்ஸ்கியின் நிலைபாடு சீட்டினுல் கட்டிய வீட்டைப் போல, அல்லது பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான கடுமையான போராட்டத்தைத் தவிர்க்க முடியும் என்று குட்டி முதலாளித்துவ வகைப்பட்டவர் காணும் கனவுகளைப் போலச் சரிந்து விழுந்து விடுகிறது. ஏனெனில் புரட்சி என்பது ஒரு தொடர்ச்சியானதும் மேலதிக மூர்க்கமானதுமான போராட்டம் என்பதோடு பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்பட்ட அனைவரின் முன்னணிப்படை வர்க்கம் ஆகவும், தமது விமோசனத்தினை நாடும் ஒடுக்கப்பட்ட அனைவரின் எல்லா அபிலாஷைகளினதும் குவிமையமும் கேந்திரமும் ஆகவும் விளங்கும். எனவே, இயல்பாகவே, ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட உறுப்பமைப்பு என்ற முறையில் சோவியத்துகள் இந்த மக்களின் மனப்பாங்குகளையும் கருத்து மாற்றங்களையும் வேறு எந்த நிறுவனத்தை விடவும் மிகவும் அதிக வேகமாகவும் முழுமையாகவும் மெய்ப்பற்றுேடும் பிரதிபலித்தன, வெளிப்படுத்தின (இதற்கிடையில் சோவியத் ஜனநாயகம் ஆக உயர் மாதிரியான ஜனநாயகமாக எப்படி விளங்குகிறது என்பதற்கு இது ஒரு காரணமாகும்).

1917 பிப்ரவரி 28 (பழைய பாணி மற்றும் அக்டோபர் 25க்கு இடையிலான காலப்பகுதியில் சோவியத்துகள், மிகப் பெரும் எண்ணிக்கையிலான வட்டார, உயெஸ்து, நகர, குபெர்னிய மற்றும் பிராந்தியக் காங்கிரசுகளைத் தவிர, ருஷ்யாவின் மக்கள் தொகையின் மிகப்பெரிய பெரும்பான்மையினரின், எல்லாத் தொழிலாளரின், படையாளிகளின், 70 முதல் 80 சதவிகிதம் விவசாயிகளின் பிரதிநிதிகளது இரண்டு அகில ருஷ்யக் காங்கிரசுகளையும் கூட்ட முடிந்தது. முதலாளி வர்க்கமோ பெரும்பான்மையைப் பிரதிநிதித்துவப்படுத்தும்

தனி ஒரு நிறுவனத்தைக் கூட (பாட்டாளிகளிடம் சீற்றம் ஏற்படுத்திய ''ஜனநாயக மாநாடு''[34] எனும் அப்பட்டமாயும் போலித்தனமான கேலிக்கூத்தைத் தவிர) கூட்டுவதில் வெற்றி பெறவில்லை. அரசியல் நிர்ணய சபை சோவியத்துகளின் முதலாவது (ஜுன்) அகில ருஷ்ய காங்கிரசில் நிலவிய அதே பொதுஜன மனப்பாங்கினை, அதே அரசியல் சேர்க்கையை பிரதிபலித்தது. அரசியல் நிர்ணய சபை கூட்டப் படுவதற்கு இடையில் (1918 ஜனவரி) சோவியத்துகளின் இரண்டாவது (அக்டோபர் 1917) மற்றும் மூன்றாவது (ஜனவரி 1918) காங்கிரசுகள் நடைபெற்று முடிந்து விட்டன. இவை இரண்டும், மக்கள் இடதுசாரிப் பக்கம் ஈர்க்கப்பட்டு புரட்சித் தன்மை பெற்று விட்டார்கள், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை விட்டுவிலகி விட்டார்கள், போல்ஷிவிக்குகளின் பக்கத்துக்குப் போய்விட்டார்கள் என்பதையும், அதாவது அவர்கள் குட்டி முதலாளித்துவத் தலைமையிடம் இருந்து விலகி, முதலாளிகளுடன் சமரசத்தை எட்டுவது சாத்தியம் என்ற பிரமையில் இருந்து விலகி, முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்காகப் பாட்டாளிகளின் புரட்சிகரப் போராட்டத்தில் சேர்ந்து விட்டார்கள் என்பதையும் அப்பட்டமாயும் தெட்டத்தெளிவாகவும் நிதர்சனப்படுத்திக் காட்டிவிட்டன.

எனவே, சோவியத்துகளின் புறவயமான வரலாறும் கூட அரசியல் நிர்ணய சபை ஒரு பிற்போக்கான அமைப்பு என்பதையும் அது கலைப்புறுவது தவிர்க்க முடியாதது என்பதையும் காட்டுகிறது. ஆனால் புரட்சி அழிந்து முதலாளித்துவ வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை எதிர்த்து வெற்றி சூடினாலும் சரி, ''தூய ஜனநாயகம்'' நீடித்து நிலவட்டும் என்ற கோஷத்தினை காவுத்ஸ்கி உறுதியாகப் பற்றி நிற்கிறார்! Fiat justitia, pereat mundus!*

ருஷ்யப் புரட்சியின் வரலாற்றுப் போக்கில் நடைபெற்ற சோவியத்துகளின் அகில ருஷ்யக் காங்கிரசுகள் சம்பந்தமான புள்ளி விபரங்கள் சுருக்கம்:

---

* உலகமே அழிந்தாலும் சரி நீதி வழங்கப்படட்டும்.

சோவியத்துகளின் அகில ருஷ்யக் காங்கிரசுகள்	பிரதிநிதிகள் எண்ணிக்கை	போல்ஷிவிக்குகள் தொகை	போல்ஷிவிக்குகள் சதவிகிதம்
முதலாவது (1917 ஜூன் 3)	790	103	13
இரண்டாவது (1917 அக்டோபர் 25) . . .	675	343	51
மூன்றுவது (1918 ஜனவரி 10)	710	434	61
நாலாவது (1918 மார்ச் 14)	1,232	795	64
ஐந்தாவது (1918 ஜூலை 4)	1,164	773	66

இந்தப் புள்ளி விவரங்களை ஒரு தரம் கண்ணேடிப் பார்த்தாலே போதும், அரசியல் நிர்ணய சபையைத் தாங்கி ஆதரிப்பதும், போல்ஷிவிக்குகளுக்கு மக்கள் மத்தியில் பெரும்பான்மை ஆதரவு இல்லை என்று (காவுத்ஸ்கியைப் போல) பேசுவதும் ஏன் ருஷ்யாவில் கேலிக்கூத்தாக்கப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

சோவியத் அரசியல் சட்டம்

நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டி இருப்பது போன்று, முதலாளிகளின் வாக்குரிமையை ரத்துச் செய்வது என்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஓர் அவசியமான இன்றியமையாத அம்சம் அன்று. ருஷ்யாவிலும் அக்டோபருக்கு நெடுங்கால முன்பே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனும் கோஷத்தை முன்வைத்த போல்ஷிவிக்குகள் சுரண்டலாளர்கள் வாக்குரிமையை ரத்துச் செய்வது குறித்து முன் கூட்டியே எதுவும் கூறவில்லை. சர்வாதிகாரத்தின் இந்த அம்சம் ஒரு

குறிப்பிட்ட கட்சியின் ''திட்டத்திற்கு ஏற்ற முறையில்'' தோற்றம் அளிக்கவில்லை, இது போராட்டத்தின் போக்கில் தானகவே **உதித்தெழுந்தது.** வரலாற்றுசிரியர் காவுத்ஸ்கி இதைக் காணத் தவறிவிட்டார் என்பது வாஸ்தவம். மென் ஷிவிக்குகள் (முதலாளிகளுடன் சமரசம் செய்து கொண்ட வர்கள்) சோவியத்துகளில் இன்னும் ஆட்சி நடத்தி வந்த போது கூட, முதலாளித்துவ வர்க்கத்தினர் தமது சொந்த இசைவுடன் சோவியத்துகளிடமிருந்து விலகி இருந்தார்கள், அவற்றைப் பகிஷ்காரம் செய்தார்கள், அவற்றுக்கு எதிராக இருந்தார்கள், அவற்றை எதிர்த்துச் சூழ்ச்சிகளில் ஈடுபட் டார்கள் என்பதையும் அவர் புரிந்து கொள்ளத் தவறிவிட் டார். எந்தவொரு அரசியல் சட்டமும் இல்லாமலே சோவி யத்துகள் உதித்தெழுந்தன, அது இல்லாமலே ஓர் ஆண்டுக் கும் அதிகமாக (1917 வசந்தம் முதல் 1918 கோடை வரை) நிலவின. ஒடுக்கப்பட்டவர்களின் இந்த சுயேச்சையும் சர்வ சக்தியும் (காரணம் இது எல்லாம் தழுவியதாக இருந்தது) வாய்ந்த நிறுவனத்தை எதிர்த்த முதலாளித்துவ வர்க்கத் தினரின் கொடும் சீற்றம், சோவியத்துகளுக்கு எதிராக அவர் கள் தொடுத்த போராட்டம், அதோடு கயமையான, தன் னல நாட்டமுள்ள, படுகேடான போராட்டம், இறுதியாக முதலாளிகள் (காடேட்டுகள் தொட்டு வலதுசாரி சோஷ லிஸ்டு-புரட்சியாளர் வரை, மில்யுக்கோவ் முதல் கேரென்ஸ்கி வரை) கர்னீலவ் கலகத்தில்[35] வெளிப்படையாகப் பங்கேற் றது—இவை யாவும் முதலாளிகள் சோவியத்துகளில் இருந்து சகஜமாக விலக்கி வைக்கப்படுவதற்கான பாதை சமைத்தன.

காவுத்ஸ்கி கர்னீலவ் கலகம் பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறர், ஆனல் அவர் வரலாற்று மெய்விவரங்களையும், சர் வாதிகாரத்தின் வடிவங்களை நிர்ணயம் செய்யும் போராட் டத்தின் செல்வழி மற்றும் வடிவங்களையும் கம்பீரமாக வெறுத்தொதுக்குகிறர். ''தூய'' ஜனநாயகம் தொடர்புடைய தான இடத்தில் திண்ணமாயும் மெய்விவரங்கள் பற்றிக் கவலைப்படுவோர் யார்? இதனல் தான் முதலாளிகளின் வாக்குரிமை ரத்து குறித்த காவுத்ஸ்கியின் ''விமர்சனம்'' இத்தகைய... இனிய பேதமையால் சிறப்பிக்கப்பட்டு இருக்

கிறது, இது ஒரு குழந்தை விஷயத்தில் உருக்கமானதே, ஆனால் அதிகார பூர்வமாக தீனமனத்தவர் என்று சான்றளிக்கப்படாத ஒரு நபர் விஷயத்தில் வெறுப்பூட்டுவதாகும்.

''சர்வப்பொதுவான வாக்குரிமையின் கீழ் முதலாளிகள் தாம் ஒரு முக்கியத்துவமில்லாத சிறுபான்மையில் இருக்கக் காண்பார்களாயின் அவர்கள் அதிவிரைவில் தமது விதியுடன் இணக்கமாகி விடுவார்கள்'' (பக்கம் 33)... கவர்ச்சியாக இருக்கிறது, அல்லவா? சாமர்த்தியசாலி காவுத்ஸ்கி வரலாற்றில் பல நிகழ்ச்சிகளைக் கண்டிருக்கிறார், வாழ்க்கை குறித்த தனது சொந்த நுண்ணறிவில் இருந்து ஒடுக்கப்பட்டவர்களின் பெரும்பான்மையின் சித்தத்தைக் கணிப்புச் செய்யும் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளை முற்றும் நன்றாக அறிவார். சாமர்த்தியசாலி காவுத்ஸ்கி ஒரு ''எதிர்த்தரப்பை'', அதாவது நாடாளுமன்ற முறையிலான போராட்டத்தை உறுதியாக ஆதரிக்கிறார். அவர் நேர் பொருளில் கூறுவது இதேதான்: ''எதிர்த்தரப்பு'' (பக்கம் 34லும் பிற இடங்களிலும்).

எனது அருமை வரலாற்றாசிரியரே, அரசியல்வாதியே! ''எதிர்த்தரப்பு'' என்பது அமைதிபூர்வமான, நாடாளுமன்ற முறையிலான போராட்டத்துக்கு மட்டுமே உரியதான ஒரு கருத்துருவாகும், அதாவது ஒரு புரட்சிகரமல்லாத நிலைமைக்குப் பொருந்திய கருத்துரு, ஒரு புரட்சி இல்லாத நிலைக்குப் பொருந்திய கருத்துரு என்பதைத் தெரிந்து கொள்வதால் உமக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது. புரட்சியின் போது, உள்நாட்டுப் போரில் நாம் தாட்சண்யமற்ற விரோதியுடன் போராட வேண்டி இருந்தது, காவுத்ஸ்கி செய்வது போல அத்தகைய ஒரு போரை அஞ்சும் குட்டி முதலாளிகளினது எந்த ஒரு பிற்போக்கு ஒப்பாரியாலும் இந்த மெய்நடப்பை மாற்றிவிட முடியாது. முதலாளிகள் எந்தக் குற்றச் செயலையும் புரியத் தயாராக இருக்கும் ஒரு நேரத்தில்—வெர்சேய் பேர்வழிகளின் உதாரணமும் பிஸ்மார்க்குடனான அவர்களது பேரங்களும் வரலாற்றை கோகலின் பெத்ருஷ்காவைப்[36] போன்று கருதிப்பார்க்காத ஒவ்வொரு நபருக்கும் எதேனும் சில பொருள் தருவதாக இருக்கும்—முதலாளிகள் தமக்குத்

துணையாக அன்னிய அரசுகளை அழைத்தும் புரட்சிக்கு எதிராக அவற்றுடன் சேர்ந்து சதிபுரிந்தும் வரும் போது தாட்சண்யமற்ற உள்நாட்டுப் போர் குறித்த பிரச்சினைகளை ''எதிர்த்தரப்பு'' கருத்துக் கோணத்தில் இருந்து பரிசீலிப்பது அறவே கோமாளித்தனமானது. புரட்சிகர பாட்டாளி வர்க்கம் ''குழம்பிய மூளைபடைத்த ஆலோசகர்'' காவுத்ஸ்கி போன்று இரவுக் குல்லாய் அணிந்து தூத்தவ், கிரஸ்னேவ் மற்றும் செக் எதிர்ப்புரட்சி கலக எழுச்சிகளை[37] ஏற்பாடு செய்தும், சதிவேலைக்காரர்களுக்கு கோடிக் கணக்கில் பணம் அளித்தும் வரும் முதலாளிகளை சட்டபூர்வ ''எதிர்த்தரப்பு'' எனக் கருத வேண்டுமாம். ஆஹா, என்ன அறிவாழம்!

காவுத்ஸ்கி இந்தப் பிரச்சினையின் சம்பிரதாய சட்ட அம்சத்தில் மாத்திரமே அக்கறை கொண்டிருக்கிறார். சோவியத் அரசியல் சட்டம் பற்றிய அவரது வாத எதிர்வாதங்களைப் படிக்கும் எவரும் ''வழக்கறிஞர்கள் ஆர்வ வெறி கொண்ட பிற்போக்காளர்கள்'' எனும் பெபெலின் சொற்களைத் தம்மை அறியாமலே நினைவு கூருவர். காவுத்ஸ்கி எழுதுகிறார்: ''உண்மையில் வாக்களிக்கும் உரிமையை முதலாளிகளுக்கு மட்டும் மறுக்கக் கூடாது. இந்தத் தொடரின் சட்டப் பொருளில் ஒரு முதலாளி என்பவர் எவர்? ஒரு சொத்து உடைமையாளரா? பாட்டாளிகள் மிகவும் பேரளவில் இருக்கும், இது வரை பொருளாதார முன்னேற்றப் பாதையில் முன்னேறியுள்ள ஜெர்மனி போன்ற நாட்டிலும் கூட சோவியத் குடியரசு நிறுவப்படுவதால் பெரும் திரளான பேருக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படும். 1907ல் ஜெர்மன் சாம்ராஜ்யத்தில் மூன்று பெரிய பிரிவுகளான விவசாயம், தொழிற்துறை மற்றும் வாணிகம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அவர்களது குடும்பங்களுடன் 35 மில்லியன் பேர் கூலி பெறுவோர் மற்றும் சம்பளம் வாங்கும் ஊழியர்கள் பிரிவில் இருந்தார்கள் மற்றும் 17 மில்லியன் பேர் சுயேச்சையினர் பிரிவில் இருந்தார்கள். எனவே கூலித் தொழிலாளர் மத்தியில் கட்சி பெரும்பான்மையாக இருக்க முடியும் ஆனால் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் சிறுபான்மையாகவே இருக்கும்'' (பக்கம் 33).

காவுத்ஸ்கியின் வாத முறைமைக்கு இது ஒரு உதாரணம். இது ஒரு முதலாளித்துவ வர்க்கத்தினரின் எதிர்ப்புரட்சி ஓலம் அல்லவா? மிகப்பெரும் பெரும்பான்மையான ருஷ்ய விவசாயிகள் கூலித் தொழிலாளர்களை அமர்த்துவதில்லை எனவே தமது வாக்களிக்கும் உரிமையை இழந்து விடவில்லை என்பதை நன்ருக அறிந்திருந்த போதும் திரு. காவுத்ஸ்கி அவர்களே நீங்கள் ஏன் ''சுயேச்சையினர்'' அனைவரையும் வாக்குரிமை மறுக்கப்பட்டோர் வகை இனத்துக்கு ஒதுக்கித் தள்ளுகிறீர்? இது புரட்டுவேலை அல்லவா?

பொருளியல் அறிஞரே, உங்களுக்கு செம்மையாகப் பரிச்சயமானதும், பண்ணைகளின் அளவுக்கு ஏற்ப விவசாயத்தில் கூலி உழைப்பாளர் அமர்த்தப்படுவது சம்பந்தமான 1907க்குரிய ஜெர்மன் புள்ளிவிவரப் பட்டியல்களில் காணப்படுவதுமான மெய்விவரங்களை நீங்கள் ஏன் மேற்கோள் காட்டவில்லை? அங்கே எத்தனை சுரண்டலாளர்கள் இருக்கிருர்கள், ஜெர்மன் புள்ளிவிவரங்களில் காணப்படும் ''சாகுபடியாளரின்'' மொத்தத் தொகையுடன் ஒப்பிடும்போது அவர்கள் எவ்வளவு குறைவானவர்கள் என்பதை ஜெர்மன் தொழிலாளர்களும் உமது பிரசுரத்தின் வாசகர்களும் கண்டு கொள்ள இயலும்படி இந்த மெய்விவரங்களை நீங்கள் ஏன் மேற்கோள் காட்டவில்லை?

உங்களது துரோகம் உங்களை முதலாளித்துவ வர்க்கத்தின் முகஸ்துதியாளராக ஆக்கிவிட்டதால்தான்.

முதலாளி எனும் கருத்துரு சட்டப்படி ஒரு தெளிவற்ற கருத்துருவாகும் என்று காவுத்ஸ்கி வாதிடுகிருர். பல பக்கங்களில் சோவியத் அரசியல் சட்டத்தின் ''தன்னிச்சைத் தன்மை''க்கு எதிராக இடி முழக்கம் செய்கிருர். பிரிட்டிஷ் முதலாளித்துவ வர்க்கம் ஒரு புதிய (மத்திய காலத்துக்குப் புதியது) முதலாளித்துவ அரசியல் சட்டத்தை உருவாக்கி வளர்க்க பல நூற்ருண்டுகள் எடுத்துக் கொண்டது பற்றி இந்தக் ''காரியவாதி அறிஞருக்கு'' ஆட்சேபம் எதுவும் கிடையாது. ஆனல் அடிவருடிகளின் அறிவியலின் பிரதிநிதியாக இருக்கும் அவர் ருஷ்யாவின் தொழிலாளர், விவசாயிகளான நமக்கு காலாவகாசத்தை அனுமதிக்க மாட்டார். நாம் ஒரு

சில மாதங்களில் கடைசி எழுத்து ஈருக வகுத்து முடிக்கப்பட்ட அரசியல் சட்டத்தை வைத்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கிருர்...

...''தன்னிச்சைத் தன்மையாம்''! இத்தகைய ஒரு ஏச்சில், முதலாளிகளிடம் எவ்வளவு ஆழமாகவும் இழிந்த முறையிலும் ஆன அடிவருடித்தனமும், மிகவும் மடத்தனமான பண்டிதப் பகட்டும் அடங்கியுள்ளன என்பதைக் கற்பனே செய்யுங்கள். முற்றமுழு முதலாளித்துவத் தன்மை வாய்ந்த, மிகப் பெரும்பாலும் பிற்போக்காளர்களான வழக்கறிஞர்கள் முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்களே ஒடுக்கவும், ஏழை மனிதனேக் கையும் காலும் கட்டிப் போடவும், சாமானிய உழைக்கும் மக்களேச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் ஆயிரக்கணக்கான தடங்கல்களேயும் முட்டுக்கட்டைகளேயும் போடவும் வேண்டியே நூற்ருண்டுகள் அல்லது பத்தாண்டுகள் பலவாக மிகவும் விரிவான விதிகளேயும் விதிமுறைகளேயும் எழுதி வந்திருக்கிருர்களே, சட்டங்கள் மற்றும் சட்டங்களின் வியாக்கியானம் பற்றி பல நாற்றுக் கணக்கான தொகுதிகள் எழுதி வந்திருக்கிருர்களே. அங்கே இந்த முதலாளித்துவ மிதவாதிகளும் திரு. காவுத்ஸ்கியும் ''தன்னிச்சை தன்மை'' எதையும் காணவில்லே! அது ''சட்டம்'' மற்றும் ''ஒழுங்கு'' ஆகும்! ஏழை மக்களே ''அடக்கிவைப்பதற்கு'' வேண்டிய வழிவகைகள் யாவும் ஆய்ந்து திட்டமிடப்பட்டு எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரக் கணக்கான முதலாளித்துவ வழக்கறிஞர்களும் அதிகார வர்க்கத்தினரும் உள்ளனர் (இவர்களேப் பற்றி காவுத்ஸ்கி ஒன்றுமே சொல்லவில்லே, இதற்குக் காரணம் அதிகார வர்க்க இயந்திரத்தைத் தகர்ப்பது பற்றி மார்க்ஸ் பேரளவான முக்கியத்துவம் கொடுத்திருந்ததே போலும்...)—இந்த வழக்கறிஞர்களும் அதிகார வர்க்கத்தினரும் இந்தச் சட்டங்களின் வரிமுட்கம்பி சிக்கல்களுக்கு ஊடே தொழிலாளியோ ஒரு சராசரி விவசாயியோ உடைத்துக் கொண்டு உள்ளே பிரவேசிக்க முடியாத அத்தகைய வழியில் சட்டங்களே வியாக்கியானம் செய்யத் தெரிந்தவர்கள். இது முதலாளித்துவ வர்க்கத்தினர் பக்கம் இருந்து வரும் ''தன்னிச்சைத் தன்மை'' அல்ல போலும்,

மக்களின் இரத்தத்தை உறிஞ்சிவரும் கேடுகெட்ட தன்னல வேட்டையர்களான சுரண்டலாளரின் சர்வாதிகாரம் அல்ல போலும். அவ்வகையான எதுவும் அல்ல! இது ''தூய ஜன நாயகம்'', இது நாளுக்கு நாள் மேலும் அதிகத் தூய்மை பெற்று வருகிறது.

இப்போது, பாடுபடும் சுரண்டப்படும் வர்க்கங்கள், எல்லேக்கு அப்பால் இருக்கும் தமது சகோதரர்களிடம் இருந்து ஏகாதிபத்தியப் போரால் பிரிக்கப்பட்டு இருந்த போதிலும் வரலாற்றிலேயே முதல் தடவையாக தமது சொந்த சோவியத்துகளை நிறுவிக் கொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவ வர்க்கம் வழக்கமாக ஒடுக்கியும், கொடுமை செய்து நொறுக்கியும் உணர்வை முழுங்கடித்தும் வந்துள்ள அந்த மக்களை அரசியல் நிர்மாணப் பணிக்கு அறைகூலி அழைத்துள்ளனர். தாமே ஒரு புதிய பாட்டாளி அரசைக் கட்டத் தொடங்கிவிட்டனர், சீற்றம் மிகுந்த போராட்ட வெம்மையில், உள்நாட்டுப் போர் நெருப்பில் சுரண்டலாளர் இல்லாத ஒரு அரசுக்கான அடிப்படைக் கோட்பாடுகளை வரைவு செய்யத் தொடங்கிவிட்டார்கள்—இந்த சமயம்தான் எல்லா முதலாளித்துவக் கயவர்களும், இரத்தம் குடிக்கும் முழுக் கும்பும்—காவுத்ஸ்கி அவர்களை எதிரொலிக்க—''தன்னிச்சைத் தன்மை'' குறித்து ஊளையிடத் தொடங்கினார்கள்! ஆம், இந்த அறியாத மக்கள், இந்தத் தொழிலாளரும் விவசாயிகளும், இந்த ''கூட்டம்'' அவர்களது சட்டங்களை எப்படி வியாக்கியானம் செய்ய முடியும்? படித்த வழக்கறிஞர்கள், முதலாளித்துவ எழுத்தாளர்கள், காவுத்ஸ்கிகள், விவேகமுள்ள பழைய அதிகார வர்க்கத்தினரின் ஆலோசனை இன்றி இந்தச் சாமானிய உழைப்பாளருக்கு நீதி உணர்வு எப்படி வரும்?

1918 ஏப்ரல் 28ந் தேதி நான் நிகழ்த்திய உரையில்[38] இருந்து பின்வரும் தொடர்களை திரு. காவுத்ஸ்கி மேற்கோள் காட்டுகிறார்: ''மக்கள் தாங்களாகவே தேர்தல்களின் நடத்து முறையையும் காலத்தையும் நிர்ணயிக்கிறார்கள்.'' இதிலிருந்து ''தூய ஜனநாயகவாதி'' காவுத்ஸ்கி அனுமானிப்பதாவது:

''...இதனால், இதன் அர்த்தம் வாக்காளர்களின் ஒவ்

வொரு கூட்டமும் தமது சொந்த உசிதப்படி தேர்தல்களின் நடத்துமுறையை நிர்ணயிக்கலாம் போலும் எனவாகும். தன்னிச்சைத் தன்மையும் பாட்டாளி வர்க்கத்தின் அணி களில் இருந்தே விரும்பத்தகாத எதிர்த்தரப்பை ஒழிப்பதற் கான வாய்ப்பும் கடைக் கோடிவரை எடுத்துச் செல்லப் படும்'' (பக்கம் 37).

நன்று, வேலை நிறுத்தத்தின்போது ''வேலை செய்ய விரும் பும்'' சுருசுருப்பான தொழிலாளர்களை மக்கள் திரளினர் ஒடுக்குவது பற்றி ஊளையிடும், முதலாளிகளின் கூலிக்குப் பிடித்த பேர்வழியின் பேச்சில் இருந்து இது எந்த வகையில் வித்தியாசப்படுகிறது? ''தூய'' முதலாளித்துவ ஜனநாயகத் தின் கீழ் தேர்தல் நடத்துமுறையை நிர்ணயிக்கும் முத லாளித்துவ அதிகார வர்க்க முறை ஏன் தன்னிச்சைத் தன்மைய தாக இல்லை? கால காலமாக இருக்கும் சுரண்டலாளர்களை எதிர்த்துப் போராட எழுச்சியுற்றுள்ளவர்களும், இந்த மூர்க்க மான போராட்டத்தில் போதனை பெற்று உருக்குரம் பெற்று வருபவர்களுமான மக்கள் திரள் மத்தியில் நீதி உணர்வு, முதலாளித்துவ தப்பெண்ணங்களில் வளர்க்கப்பட்டு வந் துள்ள விரல்விட்டெண்ணத் தக்க அதிகார வர்க்கத்தினர், அறிவு ஜீவிகள், வழக்கறிஞர்களினதை விடவும் ஏன் குறை வாக இருக்க வேண்டும்?

காவுத்ஸ்கி ஒரு உண்மையான சோஷலிஸ்டு. ஒரு குடும் பத்தின் மிகவும் மதிப்புக்குரிய தந்தையின் இந்த மிகவும் நேர்மையான குடிமகனின் கண்ணியத்தைச் சந்தேகிக்கத் துணியாதீர்கள். அவர் தொழிலாளர் வெற்றியின், பாட் டாளி வர்க்கப் புரட்சியின் ஆர்வம் மிக்க உறுதியான ஆதர வாளர் ஆவார். அவர் விரும்புவது எல்லாம் தேனுகப் பேசும் குட்டி முதலாளித்துவ அறிவுஜீவிகள் மற்றும் இரவுக் குல்லாய் போட்ட அற்பவாதிகள் முதலில்—மக்கள் திரள் இயங்கத் தொடங்குவதற்கு முன்னுல், சுரண்டலாளர்களுடன் அவர்கள் மூர்க்கமான போராட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பு, நிச்சயமாயும் ஒரு உள்நாட்டுப் போர் இல்லாத முறை யில்—புரட்சியின் வளர்ச்சிக்கான நிதானமும் துல்லியமு மான விதிகளின் தொகுப்பை உருவரை செய்ய வேண்டும் என்பதே...

வீருர்ந்த தார்மிகக் கோபாவேசத்தால் வெதும்பி நிற்கும் நமது மெத்தப் படித்த ஜூடாஸ் கொலவ்லியோவ்,[39] 1918 ஜூன் 14ந் தேதி சோவியத்துகளின் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி மற்றும் மென்ஷிவிக்குகளின் பிரதிநிதிகளை சோவியத்துகளில் இருந்து விலக்கிவிட முடிவு செய்தது என்று ஜெர்மன் தொழிலாளர்களிடம் சொல்கிருர். உன்னதக் கோபாவேசம் அனலாய் எரிய ஜூடாஸ் காவுத்ஸ்கி எழுதுகிருர்: ''இந்த நடவடிக்கை திட்டவட்டமாயும் தண்டனைக்குரிய குற்றங்கள் புரிந்த திட்டவட்டமான நபர்களுக்கு எதிராக நெறியாண்மை புரியப்படவில்லை... சோவியத் குடியரசின் அரசியல் சட்டத்தில் சோவியத் பிரதிநிதிகளின் காப்புரிமை குறித்த ஒரு வார்த்தைகூட இல்லை. திட்டமிட்ட நபர்கள் அல்ல, மாருக திட்டமிட்ட கட்சிகள் தான் சோவியத்துகளில் இருந்து விலக்கப்படுகின்றன'' (பக்கம் 37).

ஆம், அது உண்மையிலேயே மிகவும் மோசமானது, எதன் விதிகளுக்கு ஏற்ப நமது புரட்சிகர ஜூடாஸ் காவுத்ஸ்கி புரட்சியை நடத்துவாரோ, அந்தத் தூய ஜனநாயகத்தில் இருந்து ஒரு சகிக்க வியலாத திசைதிருப்பமாகும். ருஷ்ய போல்ஷிவிக்குகளான நாம் முதலில் சாவின்கவ் வகையருக்களுக்கும், லிபெர்டான்கள்,[40] பத்ரேசவ்கள் (''தீவிர ஊழியர்'')[41] வகையருக்களுக்கும் காப்புரிமையை உத்தரவாதம் செய்ய வேண்டும். பிறகு செக் எதிர்ப்புரட்சிப் போரில் பங்கு ஏற்பது அல்லது உக்ரேனியாவில் அல்லது ஜார்ஜியாவில் சொந்த நாட்டுத் தொழிலாளருக்கு எதிராக ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டணி சேர்வது ஆகியவற்றை ''தண்டனைக்குரிய குற்றங்கள்'' என்று பிரகடனம் செய்யும் குற்றவியல் சட்டத் தொகுப்பேட்டை வரைய வேண்டும். அப்போது மட்டுமே இந்தக் குற்றவியல் சட்டத் தொகுப்பேட்டின் அடிப்படையில் ''தூய ஜனநாயகத்தின்'' கோட்பாடுகளுக்கு ஏற்ப சோவியத்துகளில் இருந்து ''திட்டவட்டமான நபர்களை'' விலக்க உரிமையுள்ளவர்களாவோம். சவின்கோவ்கள், பத்ரேசவ்கள், லிபெர்டான்கள் மூலமாக (அல்லது அவர்களது கிளர்ச்சியின் உதவியால்) பிரிட்டிஷ்

மற்றும் பிரெஞ்சு முதலாளிகளின் உதவி பெறும் செக்குகள், அதே போல உக்ரேனிய மற்றும் திஃப்லீஸ் மென்ஷிவிக்குகள் மூலமாக ஜெர்மானியரிடமிருந்து போர்த் தளவாடங்களைப் பெறுகிற கிரஸ்னேவ்கள், நாம் நமது சரியான குற்றவியல் சட்டத் தொகுப்பேட்டைத் தயார் செய்யும் வரையில் அமைதியாக உட்கார்ந்து காத்திருப்பார்கள், தூயதிலும் தூய ஜனநாயகவாதிகள் போன்று ஒரு ''எதிர்த்தரப்பு'' பாத்திரத்தோடு அமைந்திருப்பார்கள் என்பதைச் சொல்லத் தேவை இல்லை...

''லாப நோக்கத்துடன் கூலிக்குத் தொழிலாளர்களை அமர்த்திக் கொள்ளும்'' எல்லோரின் வாக்களிக்கும் உரிமையை சோவியத் அரசியல் சட்டம் மறுக்கிறது எனும் மெய் நடப்பால் காவுத்ஸ்கியின் நெஞ்சில் சற்றும் குறையாத வீறுர்ந்த தார்மிகக் கோபாவேசம் பொங்கி எழுகிறது. ''ஒரு வீட்டுத் தொழிலாளி அல்லது ஒரு உதவியாளர் உடைய சிறு சொந்தக்காரன் முற்றும் ஒரு பாட்டாளி போலவே வாழலாம், உணரலாம், ஆனுல் அவனுக்கு வோட்டு இல்லை'' என்று காவுத்ஸ்கி எழுதுகிருர் (பக்கம் 36).

''தூய ஜனநாயகத்தில்'' இருந்து எத்தகைய திசைத் திருப்பம்! எத்தகைய அநீதி! சிறிய சொந்தக்காரர்கள் கூலித் தொழிலாளர்களை மிகவும் கயமைத்தனமாகவும் பேராசையுடனும் சுரண்டுவோர் என்பதாகவே இதுவரை எல்லா மார்க்சியவாதிகளும் கருதி வந்தனர், ஆயிரக் கணக்கான மெய்விவரங்கள் இதை நிரூபித்துள்ளன என்பது உண்மை. ஆனுல், நமது ஜூடாஸ் காவுத்ஸ்கி இந்த சிறிய சொந்தக்காரர்களை ஒரு வர்க்கம் என்று (இந்த வர்க்கப் போராட்டம் எனும் பொல்லாத தத்துவத்தினைப் புனைந்தவர் யாரோ) கருதவில்லை, மாருக தனிப்பட்ட நபர்களாக, ''முற்றும் பாட்டாளிகள் போல வாழ்ந்தும் உணர்ந்தும்'' வரும் சுரண்டலாளர்களாகவே கருதுகிருர். நீண்ட காலமுன்பே செத்தும் புதைக்கப்பட்டும் போனதாகக் கருதப்பட்டு வந்த இந்தப் புகழார்ந்த ''சிக்கன அக்னிஸ்'' காவுத்ஸ்கியின் பேனுவால் மீண்டும் உயிர் பெற்றுள்ளாள். இந்த ''சிக்கன அக்னிஸ்'' சில பத்தாண்டுகளுக்கு முன்பாக அந்த ''தூய'' ஜனநாயக

வாதி, முதலாளித்துவ வர்க்கத்தினரான ஒய்கென் ரிஹ்டரால் புனைவு செய்யப்பட்டு ஜெர்மன் இலக்கியத்தில் புகுத்தப்பட்டாள். அவர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் சுரண்டலாளர் மூலதனம் பறிக்கப்படுதலையும் தொடர்ந்து வரவிருக்கும் சொல்லற்கரிய பேராபத்துக்களை முன் அறிந்து சொன்னார். இச்சொல்லின் சட்டப் பொருளில் முதலாளி என்பவர் எவர்? என்று அப்பாவித்தனமான பாவனையில் கேட்டார். கொடுமைக்கார ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரிகள்'' கடைசிக் காசுவரைக் கொள்ளையடிக்கும் ஏழையான சிக்கனம் கொண்ட ஒரு தையல் மடந்தையின் (''சிக்கன அக்னிஸ்'') உதாரணத்தை எடுத்துக் கொண்டார். இந்த தூய ஜனநாயகவாதி ஒய்கென் ரிஹ்டரின் இந்த ''சிக்கன அக்னிசி''யை சுட்டி ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் வழக்கமாகக் கேலி செய்த காலம் இருந்தது. ஆனால் அது நிகழ்ந்து நீண்ட நெடுங் காலமாகி விட்டது. அப்போது, தமது கட்சியில் பல தேசிய-மிதவாதிகள்[42] இருப்பதாக முற்றிலும் மனம் விட்டுப் பகிரங்கமாகக் கூறும் பெபெல் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தார், அப்போது காவுஸ்கி இன்னும் ஓடுகாலி ஆகவில்லை.

இப்போது ''சிக்கன அக்னிஸ்'' ''ஒரு உதவியாளர் உடைய, முற்றிலும் ஒரு பாட்டாளி போன்று வாழ்ந்தும் உணர்ந்தும் வரும் சிறிய சொந்தக்காரன்'' உருவில் மீண்டும் உயிர்பெற்றிருக்கிறாள். இந்தக் கொடுமைக்கார போல்ஷிவிக்குள் அவனுக்கு அநீதி இழைத்து அவனது வோட்டுரிமையைப் பறிக்கிறார்கள். எனினும், காவுத்ஸ்கி நம்மிடம் சொல்வது போல சோவியத் குடியரசினுள் இருக்கும் ''வாக்காளர் கூட்டம் ஒவ்வொன்றும்'' குறிப்பிட்ட ஆலையுடன் சம்பந்தப்பட்ட ஒரு அற்பமான சிறு ஆண்டானை, விதிவிலக்கு என்ற முறையில் அவர் ஒரு சுரண்டலாளராக இருக்கா விட்டால், அவர் உண்மையாகவே ''முற்றிலும் ஒரு பாட்டாளி போன்று வாழ்ந்தும் உணர்ந்தும்'' வருகிறார் என்றால் அவரைத் தனது மத்தியில் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் எழுத்தாலான சட்டத் தொகுப்பேடு இல்லாமல் செயல்படும் (எத்தனை மோசமானது!) சாமானியத் தொழிலாளரின் ஒரு முறைமை

இல்லாத ஆலேக் கூட்டத்தின் வாழ்க்கை பற்றிய அறிவையும் நீதி உணர்வையும் ஒருவர் நம்பலாமா? எல்லா சுரண்டலாளர்களுக்கும், கூலித் தொழிலாளர்களே அமர்த்துவோர் எல்லாருக்கும் வாக்குரிமை வழங்குவது, ''சிக்கன அக்னிஸ்'' மற்றும் ''முற்றும் பாட்டாளி போல வாழ்ந்தும் உணர்ந்தும் வரும் சிறு ஆண்டானுக்கும்'' தொழிலாளர் அநீதி செய்யும் சாத்தியப்பாட்டை துணிந்தேற்பதைக் காட்டிலும் தெளிவாயும் சிறப்பானதாக இருக்குமல்லவா?

* * *

நமது சோவியத் அரசியல் சட்டம் சுரண்டலாளர்களுக்கு வாக்குரிமையினே மறுத்திருப்பது பற்றி வெறுக்கத் தகுந்த ஓடுகாலிக் கயவர்கள், முதலாளித்துவ வர்க்கத்தினர்கள் மற்றும் சமூக-தேசியவெறியர்* கரவொலிகளுக்கு மத்தியில் சோவியத் அரசியல் சட்டத்தைத் தூற்றட்டும்! அது மிகவும் நல்லது. காரணம் இது ஐரோப்பாவில் இருக்கும் புரட்சிகரத் தொழிலாளர்களுக்கும் ஷெய்டெமன்கள், காவுத்ஸ்கிகள், ரெனெடேல்கள், லொங்கேகள், ஹெண்டர்சன்கள் மற்றும் ராம்சே மாக்டொனுல்டுகள் அடங்கிய சோஷலிசத்தின் பழைய தலைவர்கள் மற்றும் பழைய துரோகிகளுக்கும் இடையிலான பிளவை இன்னும் விரைவாக்கும், விரிவுபடுத்தும்.

ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் திரள், வர்க்க உணர்வுடைய நேர்மையான புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தலைவர்கள் நமது பக்கம் இருப்பார்கள். அத்தகைய பாட்டாளிகளுக்கு,

---

* *Frankfurter Zeitung*[43] இல் (இதழ் 293, 1918, அக்டோபர் 22ந் தேதி) வந்த தலைப்புக் கட்டுரையை இப்போதுதான் படித்தேன். அதில் காவுத்ஸ்கியின் பிரசுரத்தின் மிகவும் உற்சாக பூர்வமான பொழிப்புத் தரப்பட்டிருந்தது. பங்கு மார்க்கெட்டின் ஏடான இதற்கு யாவும் திருப்திகரம். இதில் அதிசயம் என்ன! ஷெய்டெமன்களின் ஏடான *Vorwärts*[44] காவுத்ஸ்கி எழுதியுள்ள கிட்டத்தட்ட ஒவ்வொரு வரியையும் ஆதரிப்பதாக ஒரு விசேஷக் கட்டுரையில்[45] சாற்றியுள்ளது என்று பெர்லினில் இருந்து ஒரு தோழர் எனக்கு எழுதி அறிவித்துள்ளார். மனமார்ந்த வாழ்த்துக்கள்!

அத்தகைய மக்களுக்கு நமது சோவியத் அரசியல் சட்டத்தைப் பரிச்சயப்படுத்திஞல் போதுமானது, அவர்கள் உடனே சொல்வார்கள்: இவர்கள் மெய்யாகவே நமது மக்களாவர், இது உண்மையான தொழிலாளர் கட்சி, இது உண்மையான தொழிலாளர் அரசாங்கம். ஏனெனில் மேலே குறிப்பிடப்பட்ட தலைவர்கள் அனைவரும் செய்திருப்பது போன்று இது சீர்திருத்தம் பற்றிப் பேசித் தொழிலாளர்களை ஏமாற்றவில்லை, ஆனல் சுரண்டலாளர்களை உண்மையிலேயே முனைப்பார்வத்துடன் எதிர்த்துப் போராடுகிறது, முனைப்பார்வத்துடன் புரட்சியை நடத்தி வருகிறது, உள்ளபடியே தொழிலாளர்களின் பூரண விமோசனத்துக்காகப் போராடி வருகிறது.

ஒரு ஆண்டுகால ''அனுபவம்'' பெற்ற பிறகு சோவியத்துகள் சுரண்டலாளர்களின் வாக்குரிமையைப் பறித்திருக்கும் மெய்நடப்பானது இந்தச் சோவியத்துகள் உண்மையிலேயே ஒடுக்கப்பட்ட மக்களின் நிறுவனங்கள் என்பதையும், முதலாளித்துவ வர்க்கத்திடம் தம்மைத்தாமே விற்பனை செய்து கொண்டுவிட்ட சமூக-ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் சமூக-அமைதிவாதிகளின் நிறுவனங்கள் அல்ல என்பதையும் புலப்படுத்துகிறது. இந்தச் சோவியத்துகள் சுரண்டலாளர்களின் வாக்குரிமையினைப் பறித்திருக்கும் மெய்நடப்பானது அவை முதலாளிகளுடன் குட்டி முதலாளித்துவ பாணியில் சமரசம் செய்து கொள்ளும் உறுப்பமைப்புகள் அல்ல, நாடாளுமன்ற வெட்டிப் பேச்சின் (காவுத்ஸ்கிகள், லொங்கேகள் மற்றும் மாக்டொனல்டுகளின் கருத்துப்படியான) உறுப்பமைப்புகள் அல்ல என்பதையும், மாருக சுரண்டலாளர்களை எதிர்த்து ஜீவ-மரணப் போராட்டம் நடத்தி வரும் உண்மையான புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் உறுப்பமைப்புகள் என்பதையும் புலப்படுத்துகிறது.

காவுத்ஸ்கியின் புத்தகம் பற்றி இங்கு கிட்டத்தட்ட தெரியவே தெரியாது என்று விவரமறிந்த ஒரு தோழர் சில நாட்களுக்கு முன் (இன்று அக்டோபர் 30ஆம் நாள்) பெர்லினில் இருந்து எனக்கு எழுதியிருந்தார். ஜெர்மனியிலும் ஸ்விட்சர்லாந்திலும் இருக்கும் நமது தூதர்கள் இந்தப் புத்

தகத்தை சில ஆயிரம் பிரதிகள் செலவைப் பார்க்காமல் வாங்கி வர்க்க உணர்வுடைய தொழிலாளர்களுக்கு இலவசமாக வினியோகிக்கும்படி ஆலோசனை கூறுகிறேன். அவ்வாறு செய்வது மூலம் நீண்ட காலமாக ''நாறும் பிணமாக''க் கிடக்கும், இந்த ''ஐரோப்பிய''—படிக்கவும்: ஏகாதிபத்திய மற்றும் சீர்திருத்தவாத—சமூக-ஜனநாயகம் மண்ணில் மிதித்துத் துவைக்கப்படட்டும்.

* * *

இந்தப் ''புதிய தத்துவம்'' (பாரிஸ் கம்யூன் பற்றிய மார்க்ஸ், எங்கெல்சின் ஆய்வினைத் தீண்டவே அஞ்சும் அவர் போல்ஷிவிசத்தினை இவ்வாறுதான் அழைக்கிறார்) ''உதாரணமாக ஸ்விட்சர்லாந்து போன்ற பழைய ஜனநாயகங்களில்கூட ஆதரவாளர்களைப் பெற்றுள்ளது'' எனும் மெய்நடப்பைக் கண்டு திரு. காவுத்ஸ்கி தனது புத்தகத்தின் இறுதியில் பக்கங்கள் 61 மற்றும் 63ல் கடுமையாக ஓலமிடுகிறார். ''ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளால் இந்தத் தத்துவத்தை எப்படி ஏற்க முடிந்தது என்பதை'' காவுத்ஸ்கி ''புரிந்து கொள்ள முடியாது''.

இல்லை, இதனை முற்றிலும் புரிந்து கொள்ள முடியும், போரில் கிட்டிய முக்கிய படிப்பினைகளுக்குப் பிறகு புரட்சிகர மக்கள் திரள் ஷெய்டெமன்கள் மற்றும் காவுத்ஸ்கிகள் குறித்து வெறுப்பும் உளச்சோர்வும் அடைந்து வருகிறார்கள். ''நாம்'' எப்போதுமே ஜனநாயகத்துக்கு ஆதரவாக இருந்து வந்திருக்கிறோம் எனக் காவுத்ஸ்கி எழுதுகிறார், எனினும் நாம் அதை திடுமெனக் கைவிட வேண்டும் என்று உத்தேசிக்கப்படுகிறது!

''நாம்'', சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதிகள், எப்போதுமே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்து வந்திருக்கிறோம், கோல்ப் வகையறுக்கள் இதை நீண்ட கால முன்பே பிரகடனம் செய்து விட்டனர். காவுத்ஸ்கிக்கு இது தெரியும். அவர் பெர்ன்ஷ்டைன்கள் மற்றும் கோல்ப்

களின் ''கூட்டுக்குத் திரும்பிவிட்டார்'' என்ற கண்கூடான உண்மையைத் தமது வாசகர்களிடம் இருந்து மூடி மறைத்து விட முடியும் என்று அவர் விருதாவாக எதிர்பார்க்கிறார்.

''நாம்'', புரட்சிகர மார்க்சியவாதிகள், ''தூய'' (முதலாளித்துவ) ஜனநாயகம் பற்றி என்றுமே குருட்டு வழிபாடு செய்தது கிடையாது. 1903ல் பிளெஹானவ் ஒரு புரட்சிகர மார்க்சியவாதியாக இருந்தார் என்பது தெரிந்ததே (பின்னால் துரதிருஷ்டமான அவரது திருப்பம் அவரை ஒரு ருஷ்ய ஷெய்டெமனின் நிலைக்குக் கொண்டு வந்தது). அந்த ஆண்டில் தனது வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொண்டதான நமது கட்சிக் காங்கிரசில் பிளெஹானவ், புரட்சியில் பாட்டாளி வர்க்கம் அவசியமானால் முதலாளிகளின் வாக்களிக்கும் உரிமையை மறுக்கும், எதிர்ப்புரட்சித் தன்மையது என்று காணப் பெறும் எந்த நாடாளுமன்றத்தையும் கலைக்கும் என்று சாற்றினார்.[46] மார்க்சியத்துக்குப் பொருந்தியதான ஒரே கருத்து இது தான் என்பது நான் மேலே மேற்கோள் காட்டியுள்ள மார்க்ஸ், எங்கெல்சின் அறிவிப்புகளில் இருந்தும் கூட எவருக்கும் தெளிவாகத் தெரியவரும்; இது மார்க்சியத்தின் எல்லா அடிப்படைக் கோட்பாடுகளில் இருந்தும் வெளிப்படையாகவே தொடர்கிறது.

''நாம்'', புரட்சிகர மார்க்சியவாதிகள், எல்லா நாடுகளிலும் உள்ள காவுத்ஸ்கிவாதிகள் முதலாளித்துவ வர்க்கம் முன்னால் கெஞ்சிப் பணிந்து, முதலாளித்துவ நாடாளுமன்ற முறைக்குத் தம்மைத் தகவமைத்துக் கொண்டு, நவீன ஜனநாயகத்தின் முதலாளித்துவத் தன்மை குறித்து வாய் மூடி மௌனம் சாதித்து, அதன் விரிவாக்கத்தை மட்டுமே, அது தனது தர்க்கரீதியான முடிவுக்கு நிறைவேற்றப்படுவதை மட்டுமே கோரி உரைகள் ஆற்ற விரும்பியது போன்று என்றுமே உரைகள் ஆற்றவில்லை.

''நாம்'' முதலாளித்துவ வர்க்கத்தினரிடம் கூறினோம்: சுரண்டலாளர்களும் கபட வேடதாரிகளுமான நீங்கள் ஜனநாயகம் பற்றிப் பேசுகிறீர்கள், அதே பொழுதில் ஒவ்வொரு அடியிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் அரசியலில் பங்கேற்பதைத் தடுப்பதற்கு ஆயிரக்கணக்கான தடை மதில்களை எழுப்பு

கிறீர்கள். நாங்கள் உங்கள் பேச்சை நம்பி, இந்த மக்களின் நலன்களுக்காக, சுரண்டலாளர்களான உங்களை வீழ்த்தும் குறிக்கோளுக்கான புரட்சிக்கு மக்களைத் தயார் செய்யும் பொருட்டு உங்களது முதலாளித்துவ ஜனநாயகத்தை விரிவுபடுத்தும்படி கோருகிறோம். எங்களது பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு சுரண்டலாளர்களான நீங்கள் எதிர்ப்புக் காட்ட முயல்வீர்களானால் நாங்கள் உங்களைத் தாட்சண்யம் இன்றி அடக்குவோம், உங்கள் உரிமைகள் அனைத்தையும் பறித்திடுவோம், அதற்கும் மேலாக உங்களுக்கு ரொட்டி எதுவும் தர மாட்டோம், ஏனெனில் எமது பாட்டாளி வர்க்கக் குடியரசில் சுரண்டலாளர்களுக்கு உரிமைகள் எதுவும் கிடையாது, அவர்களுக்கு நீரோ நெருப்போ இல்லாது போகும், ஏனெனில் நாம் மெய்யாகவே முனைப்பார்வமுள்ள சோஷலிஸ்டுகள், ஷெய்டெமன் மற்றும் காவுத்ஸ்கி பாணியில் ஆனவர்கள் அல்ல.

இதைத்தான் ''நாம்'', புரட்சிகர மார்க்சியவாதிகள் கூறினோம், இனிமேலும் கூறுவோம். இதனால் தான் ஒடுக்கப்பட்ட மக்கள் நம்மை ஆதரிப்பார்கள், நம்முடன் இருப்பார்கள், அதே போதில் ஷெய்டெமன்கள் மற்றும் காவுத்ஸ்கிகள் ஓடுகாலிகளின் குட்டைக்குள் அடித்துச் செல்லப்படுவார்கள்.

சர்வதேசியவாதம் என்றால் என்ன?

தாம் ஒரு சர்வதேசியவாதி என்பதில் காவுத்ஸ்கி முற்ற முழு திட நம்பிக்கை கொண்டிருக்கிறார், அத்தகைய ஒருவராகத் தம்மைத் தாமே அழைத்துக் கொள்கிறார். ஷெய்டெமன்களை அவர் ''அரசாங்க சோஷலிஸ்டுகள்'' என்று அழைக்கிறார். மென்ஷிவிக்குகளைத் தாங்கி ஆதரிப்பதில் (அவர்களுடனான தமது ஒருமைப்பாட்டை அவர் பகிரங்கமாக வெளிப்படுத்தவில்லை, ஆனால் அவர்களது கருத்துக்களை பற்றுறுதியுடன் வெளிப்படுத்துகிறார்) காவுத்ஸ்கி தாம் எந்த வகையான ''சர்வதேசியவாதத்தை'' ஆதரிக்கிறார் என்பதை முழுநிறைவான தெளிவுடன் புலப்படுத்தியுள்ளார். காவுத்ஸ்கி

இதில் தனியராக இல்லை, ஆனால் ஒரு போக்கின் பிரதிநிதியாக இருந்ததால் (இந்தப் போக்கு இரண்டாம் அகிலத்தின் சூழலில் தவிர்க்க முடியாத வகையில் வளர்ந்ததாகும்—பிரான்சில் லொங்கே, இத்தாலியில் டுராட்டி, ஸ்விட்சர்லாந்தில் நோப்ஸ், கிரிம், கிராபர் மற்றும் நேன், பிரிட்டனில் ராம்சே மாக்டொனால்டு இத்தியாதி) காவுத்ஸ்கியின் ''சர்வதேசியவாதம்'' குறித்து விரித்துரைப்பது அறிவூட்டுவதாக இருக்கும்.

மென்ஷிவிக்குகளும் கூட ஸிம்மர்வால்டு மாநாட்டில்[47] கலந்து கொண்டார்கள் (இது நிச்சயமாயும் ஒரு சான்றிதழ் தான், ஆனால் கறைப்பட்ட ஒன்று) என்று வற்பறுத்திய பிறகு காவுத்ஸ்கி அவர் உடன்பட்டு நிற்கும் மென்ஷிவிக்குகளின் கருத்துக்களைப் பின்வருமாறு வகுத்து முன்வைக்கிறார்:

''... மென்ஷிவிக்குகள் ஒரு சர்வப் பொதுவான சமாதானத்தை விரும்பினார்கள். பிரதேசக் கைப்பற்றல்களோ இழப்பீட்டுத் தண்டத் தொகைகளோ எதுவும் கூடாது எனும் சூத்திரத்தை போரிடும் அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். இந்தக் கருத்துப் படி, இதனை அடையும் வரை ருஷ்ய சைனியம் போருக்குத் தயாராக நிற்க வேண்டும். மறு புறத்தில் போல்ஷிவிக்குகள் என்ன விலை கொடுத்தேனும் சரி ஓர் உடனடியான சமாதானத்தைக் கோரினர், அவசியமானால் ஒரு தனித்த சமாதானத்தைச் செய்து கொள்ளத் தயாராக இருந்தார்கள். சேனையில் ஏற்கெனவே மோசமாக இருந்த ஒழுங்கு குலைந்த நிலையை அதிகரிப்பது மூலம் இதை வலுவந்தமாகக் கொண்டு வர முயன்றார்கள்'' (பக்கம் 27). காவுத்ஸ்கியின் கருத்துப் படி போல்ஷிவிக்குகள் ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்டிருக்கக் கூடாது, ஓர் அரசியல் நிர்ணய சபையோடு திருப்தி அடைந்திருக்க வேண்டும்.

எனவே, காவுத்ஸ்கி மற்றும் மென்ஷிவிக்குகளின் சர்வதேசியவாதம் சரி மொத்தத்தில் இதுவே: ஏகாதிபத்திய முதலாளித்துவ அரசாங்கத்திடம் சீர்திருத்தங்களைக் கோருவது ஆனால் அதைத் தொடர்ந்து ஆதரிப்பது, இந்தப் போரில் இறங்கியுள்ள எல்லோரும் பிரதேசக் கைப்பற்றல்களோ

இழப்பீட்டுத் தண்டத் தொகைகளோ எதுவும் கூடாது எனும் சூத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் வரை இந்த அரசாங்கம் நடத்திவரும் போரைத் தொடர்ந்து ஆதரிப்பது. இந்தக் கருத்தை டுராட்டியும், காவுத்ஸ்கியின் ஆதரவாளர்கள் (ஹாஸேயும் இதரர்களும்) லொங்கே வகையறுவும் திரும்பத் திரும்ப வெளியிட்டனர். ''தாய்நாட்டின் தற்காப்பை'' வேண்டி ஆதரிப்பதாக அவர்கள் சாற்றினர்கள்.

தத்துவார்த்த ரீதியில், இது சமூக-தேசியவெறியர்களிடம் இருந்து தம்மைத்தாமே தொடர்பறுத்துக் கொள்ள முற்றும் இயலாது இருப்பதையும், தாய்நாட்டின் தற்காப்பு விஷயத்தில் முழுமையான குழப்பம் நிலவுவதையும் காட்டுகிறது. அரசியல் ரீதியில் இதன் பொருள் சர்வதேசியவாதத்துக்குப் பதிலீடாக குட்டி முதலாளித்துவ தேசியவாதத்தைப் புகுத்துவதும், சீர்திருத்தவாதிகள் முகாமுக்குத் துறந்தோடி புரட்சியைக் கைவிடுவதுமாகும்.

பாட்டாளி வர்க்கத்தின் கருத்து நோக்கில் இருந்து ''தாய் நாட்டின் தற்காப்பை'' அங்கீகரிப்பது என்பது இன்றைய போரை நியாயப்படுத்துவது, இது சட்டப்படியானது என்று ஒத்துக் கொள்வது என்றே பொருள்படும். இந்தப் போர் (முடியரசின் கீழும் குடியரசின் கீழும் ஒருங்கே) ஒரு ஏகாதிபத்தியப் போராகவே இருக்கும் காரணத்தால், நாடு எதுவாக இருந்த போதிலும்—எனது நாட்டில் அல்லது வேறு ஒரு நாட்டில்—குறிப்பிட்ட தருணத்தில் எதிரிப் படைகள் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், தாய்நாட்டின் தற்காப்பை அங்கீகரிப்பது என்பது உண்மையில் ஏகாதிபத்தியக் கொள்ளைக்கார முதலாளித்துவ வர்க்கத்தை ஆதரிப்பதாகும், சோஷலிசத்துக்கு முற்றுகத் துரோகம் செய்வதாகும். ருஷ்யாவில் கேரென்ஸ்கியின் கீழிலும் கூட முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசின் கீழ் இந்தப் போர் ஏகாதிபத்தியப் போராகவே நீடித்தது, ஏனெனில் அது ஆளும் வர்க்கம் என்ற முறையில் முதலாளித்துவ வர்க்கத்தால் நடத்தப்படுகிறது (போர் என்பது ''அரசியலின் தொடர்ச்சியே''); பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாட்டு முதலாளிகளுடன் உலகைப் பங்கு போட்டுக் கொள்ளவும் இதர நாடுகளைச் சூறையாட

வும் வேண்டி முந்திய ஜாரால் செய்து கொள்ளப்பட்ட இரகசிய உடன்படிக்கைகள் போரின் ஏகாதிபத்தியத் தன்மையினை குறிப்பாயும் எடுப்பாயும் வெளிப்படுத்தின.

இத்தகைய போரை ஒரு தற்காப்பு அல்லது புரட்சிகரப் போர் என்று அழைத்ததன் மூலம் மிகவும் வெறுக்கத்தக்க முறையில் மென்ஷிவிக்குகள் மக்களை ஏமாற்றினார்கள். மென்ஷிவிக்குகளின் கொள்கையை ஒப்புக் கொண்டது மூலம் காவுத்ஸ்கி மக்கள் ஏமாற்றப்படுவதை ஒப்புக்கொள்கிறார், தொழிலாளர்களை ஏமாற்றி அவர்களை ஏகாதிபத்தியவாதிகளின் போர்ச்சகடத்தில் பூட்டுவதற்கு மூலதனத்துக்கு உதவி செய்யும் முறையில் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் வகிக்கும் பங்கை ஒப்புக் கொள்கிறார். ஒரு கோஷத்தை முன்வைப்பது நிலைமையை மாற்றிவிடும் என்று பாவனை செய்வது மூலம் (இந்த அபத்தமான கருத்தை மக்கள் நம்பும்படி செய்ய முயன்றும்) காவுத்ஸ்கி தன்மைக் குறிப்பான குட்டி முதலாளித்துவ, அற்பவாதக் கொள்கையைப் பின்பற்றுகிறார். முதலாளித்துவ ஜனநாயகத்தின் வரலாறு முழுதுமே இந்த பிரமையை மறுத்து நிரூபிக்கிறது; முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் மக்களை ஏமாற்றுவதற்காக எல்லா வகையான ''கோஷங்களையும்'' எப்போதும் முன்வைத்திருந்தார்கள், முன்வைத்திருக்கிறார்கள். அவர்களது நேர்மையைச் சோதிப்பது, அவர்களது சொற்களை செயல்களுடன் ஒப்புநோக்குவது, கருத்தியலான அல்லது போலிப்பகட்டான தொடர்களுடன் திருப்திப்பட்டு விடாமல் வர்க்க எதார்த்தத்துக்கு இறங்குதல் இவையே இங்கு முக்கியமானவை. போலி அறிஞர்கள் அல்லது சொற்ஜாலம் செய்வோர் அல்லது குட்டி முதலாளித்துவ அற்பவாதிகள் உணர்ச்சிப்பகட்டான ''கோஷத்தை'' முன்வைக்கும் போது ஏகாதிபத்தியப் போர் ஏகாதிபத்தியப் போராக இல்லாத நிலை ஏற்பட்டுவிடாது, மாறாக ஏகாதிபத்தியப் போரை நடத்திவரும், ஏகாதிபத்தியத்துடன் லட்சக் கணக்கான பொருளாதார இழைகளால் (கயிறுகளால் கூட) கட்டுண்டு கிடக்கும் அந்த வர்க்கம் மெய்யாகவே வீழ்த்தப்பட்டு, உண்மையிலேயே புரட்சிகர வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தால் அரசுத் தலைமையில்

மாற்றீடு செய்யப்பட்டால் மட்டுமே அந்த நிலை ஏற்படும். ஒரு ஏகாதிபத்தியப் போரில் இருந்தும், அதே போல ஒரு ஏகாதிபத்திய கொள்ளைக்காரத்தனமான சமாதானத்தில் இருந்தும் விடுவித்துக் கொண்டு வெளியேற வேறு வழி எதுவும் கிடையாது.

மென்ஷிவிக்குகளின் அயல்துறைக் கொள்கையை ஒப்புக் கொள்வது மூலமும், அது சர்வதேசியத் தன்மையது, ஸிம்மர்வால்டு தன்மையது என்று சாற்றுவது மூலமும் காவுத்ஸ்கி முதலாவதாக, சந்தர்ப்பவாத ஸிம்மர்வால்டு பெரும்பான்மையின் படுமோசமான அழிகேட்டை வெளிப்படுத்துகிறார் (இத்தகைய பெரும்பான்மையிடமிருந்து இடதுசாரி ஸிம்மர்வால்டிஸ்டுகளான[48] நாம் உடனே தொடர்பறுத்துக் கொண்டதில் வியப்பில்லை!), இரண்டாவதாக,—இதுவே முக்கியமான விஷயம்—பாட்டாளி வர்க்க நிலையில் இருந்து குட்டி முதலாளித்துவ நிலைக்கும், புரட்சியாளர் நிலையில் இருந்து சீர்திருத்தவாதியின் நிலைக்கும் மாறிச் செல்கிறார்.

பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தினைப் புரட்சிகரமாக வீழ்த்துவதற்காகப் போராடுகிறது, குட்டி முதலாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்தியத்தைச் சீர்திருத்த பாணியில் ''மேம்படுத்தவும்'' அதற்குத் தகவமைத்துக் கொள்ளவும் அதே போதில் அதற்குக் கீழடங்குவதற்கும் வேண்டிப் போராடுகிறது. காவுத்ஸ்கி இன்னும் மார்க்சியவாதியாக இருந்த போது, உதாரணமாக 1909ல் ஆட்சி அதிகாரத்துக்குப் பாதை எனும் நூலை எழுதிய போது அவர் போர் தவிர்க்க முடியாதபடி புரட்சிக்கு இட்டுச் செல்லும் எனும் கருத்தை ஆதரித்தார், புரட்சிகளின் ஒரு சகாப்தம் நெருங்கி வருவது பற்றிக் குறிப்பிட்டார். 1912ஆம் ஆண்டின் பாசெல் அறிக்கை, உள்ளபடியே 1914ல் வெடித்த ஜெர்மன் மற்றும் பிரிட்டிஷ் பிரிவுகளுக்கு இடையிலான அதே ஏகாதிபத்தியப் போர் தொடர்பாக ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சி குறித்து நேரடியாகவும் திட்டவட்டமாயும் கூறுகிறது. ஆனால் 1918ல் போரின் தொடர்பாகப் புரட்சிகள் முடிவாகத் தொடங்கிய போதில் காவுத்ஸ்கி, அவை தவிர்க்க முடியாதவை என்று விளக்கம் தருவதற்குப்

பதில், தீர எண்ணிப்பார்த்து புரட்சிகரப் போர்த்தந்திரங்கள், புரட்சிக்குத் தயார் செய்வதற்கான வழி முறைகளைப் பற்றிச் சிந்தித்து முடிவு செய்வதற்குப் பதில், மென்ஷிவிக்குகளின் சீர்திருத்தவாதப் போர்த்தந்திரங்களை சர்வதேசியவாதமாக வருணிக்கத் தொடங்கினர். இது துரோகச் செயல் அல்லவா?

சைனியத்தின் போராட்ட வலிமையைப் பேணிக்காக்க வேண்டும் என வற்புறுத்தியதற்காக காவுத்ஸ்கி மென்ஷிவிக்குகளைப் பாராட்டுகிருர். அப்போது ஏற்கெனவே போதியளவு ஒழுங்கு குலைக்கப்பட்டிருந்த ''சைனியத்தின் ஒழுங்கு குலைவை'' அதிகரித்ததற்காக போல்ஷிவிக்குகள் மீது பழி சாற்றுகிருர். இதன் பொருள், சீர்திருத்தவாதத்துக்குப் பாராட்டும், ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்துக்குக் கீழடங்கலும், புரட்சி மீது பழிதூற்றி அதைக் கைவிடுவதுமாகும். ஏனெனில் சைனியத்தின் போராட்ட வலிமையைப் பேணிக்காப்பது என்பது, அதை முதலாளித்துவ (இருப்பினும் குடியரசுவாத) தலைமையின் கீழ் வைத்திருப்பது என்றே பொருள்படும், இந்த நிலைமைதான் கேரென்ஸ்கியின் கீழ் இருந்தது. இதன் படை அதிகாரிகள் கர்னீலவின் ஆட்களாக இருந்ததால் இந்தக் குடியரசு சைனியம் கர்னீலவ் உணர்வினை வைத்துப் பேணி வந்தது என்பதை எல்லோரும் அறிவார்கள், இதை நிகழ்ச்சிகளின் போக்கு எடுப்பான முறையில் உறுதிப்படுத்தி விட்டது. முதலாளித்துவ படை அதிகாரிகள் கர்னீலவ் ஆட்களாக இருந்தே தீர வேண்டும், ஏகாதிபத்தியத்தை நோக்கியும் பாட்டாளி வர்க்கத்தை வலுவந்தமாக அடக்குவதை நோக்கியும் ஈர்க்கப்படாமல் இருக்க முடியாது. மென்ஷிவிக் போர்த்தந்திரங்கள் நடைமுறையில் புரிந்ததெல்லாம், ஏகாதிபத்தியப் போரின் எல்லா அடித்தளங்களையும், முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் எல்லா அடித்தளங்களையும் அலுங்காமல் விட்டு வைத்துவிட்டு, விவரங்களை ஒட்டுப் போட்டதும் ஒரு சில சில்லரை (''சீர்திருத்தங்கள்'') விஷயங்கள் மீது பூச்சுவேலை செய்ததுமே ஆகும்.

மறுபுறம், சைனியத்தை ''ஒழுங்கு குலைவு'' செய்யாமல்

எந்தத் தனி ஒரு மாபெரும் புரட்சியும் என்றுமே நிகழ்ந்தது இல்லை, என்றுமே நிகழவும் முடியாது. ஏனெனில் சைனியம் தான் பழைய ஆட்சியை ஆதரிப்பதற்கான ஆக கல்லாய் இறுகிப்போன கருவியாகும், மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு முட்டுக் கொடுக்கும் முதலாளித்துவக் கட்டுப்பாட்டின் கடின மாக்கப்பட்ட கொத்தளமாகும், உழைக்கும் மக்கள் மத்தி யில் மூலதனத்துக்கு அடங்கி ஆட்படுத்தப்படும் அடிமை உணர்வினைப் பேணியும் வளர்த்தும் வரும் கருவியாகும். சைனியத்துடன் அக்கம் பக்கமாக இருக்க ஆயுதமேந்திய தொழிலாளர்களை எதிர்ப்புரட்சி என்றுமே அனுமதித்தது இல்லை, என்றும் அனுமதிக்கவும் முடியாது. பிரான்சில் தொழி லாளர்கள் ஒவ்வொரு புரட்சியில் இருந்தும் ஆயுதமேந்தி வெளிப்பட்டார்கள், ''எனவே ஆட்சித் தலைமையில் இருந்த முதலாளித்துவ வர்க்கத்துக்கு தொழிலாளர்களை நிராயு தராக்குவதே முதல் கட்டளையாக இருந்தது''[49] என்று எங்கெல்ஸ் எழுதினர். ஆயுதமேந்திய தொழிலாளர்கள் ஒரு புதிய சைனியத்தின் கருமுளையாகவும், ஒரு புதிய சமுதாய அமைப்பின் நிறுவனத் திரட்சியுடைய ஒரு உட்கருவாகவும் விளங்கினர். இந்த உட்கருவை நசுக்கி அது வளர்ச்சி யுருதபடி தடைப்படுத்துவதே முதலாளித்துவ வர்க்கத்தின் முதல் கட்டளையாக இருந்தது. பழைய சைனியத்தைத் தகர்த்து அதைக் கலைத்தெறிந்து ஒரு புதிய சைனியம் மூலம் மாற்றீடு செய்வதுதான் வெற்றிவாகை சூடிய ஒவ் வொரு புரட்சியின் முதல் கட்டளையுமாகும் என்று மார்க் சும் எங்கெல்சும் திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளனர்.[50] ஒரு புதிய சமுதாய வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைப் பெற எழுச்சியுற்று இருக்கும் போது, பழைய சைனியத்தை முழு மையாகச் சீரழிக்காமல் (''ஒழுங்கு குலைவு!'' என்று இதன் பேரில் பிற்போக்கு அல்லது வெறும் கோழை அற்பவாதி ஊளையிடுகிருன்), சைனியம் ஏதும் இல்லாத ஒரு மிகவும் இடர்ப்பாடான வேதனை மிக்க கட்டத்தின் ஊடே கடந்து செல்லாமல் (மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியும் கூட இத் தகைய வேதனை மிகுந்த கட்டத்தின் ஊடே கடந்து சென் றது), கடுமையான உள்நாட்டுப் போரின் மத்தியில் ஒரு

புதிய சைனியத்தை, ஒரு புதிய கட்டுப்பாட்டை, ஒரு புதிய வர்க்கத்தின் ஒரு புதிய இராணுவ நிறுவனத்தைப் படிப் படியாகக் கட்டுவது மூலமும் மட்டுமன்றி ஆட்சி அதி காரத்தைப் பெறுவதோ அதைக் கெட்டிப்படுத்திக் கொள் வதோ என்றுமே முடிந்திராது, இப்போதும் முடியாது. முன்னுல் வரலாற்ருசிரியரான காவுத்ஸ்கி இதைப் புரிந்து கொண்டிருந்தார். இப்போது ஓடுகாலியான காவுத்ஸ்கி இதை மறந்து விட்டார்.

ருஷ்யாவின் புரட்சியில் மென்ஷிவிக்குகளின் போர்த்தந் திரங்களை அவர் ஒப்புக் கொள்ளும் பட்சத்தில், காவுத்ஸ்கி ஷெய்டெமன்களை ''அரசாங்க சோஷலிஸ்டுகள்'' என்று அழைக்க என்ன உரிமை இருக்கிறது? அதே போல கேரென்ஸ் கியை ஆதரித்து அவரது அமைச்சரவையில் சேர்ந்தது மூலம் மென்ஷிவிக்குகளும் ''அரசாங்க சோஷலிஸ்டுகள்'' தான். ஏகாதிபத்தியப் போரை நடத்தும் ஆளும் வர்க்கம் எது எனும் கேள்வியை காவுத்ஸ்கி கேட்பாராளுல் அவர் இந்த முடிவில் இருந்து தப்ப முடியாது. ஆனுல் ஆளும் வர்க்கம் பற்றிய கேள்வியை காவுத்ஸ்கி எழுப்பாமல் தவிர்க்கிருர். இந்தக் கேள்வி மார்க்சியவாதிக்குத் தவிர்க்க முடியாதது, ஏனெனில் இதை வெறுமனே எழுப்பினுலே போதும் ஓடு காலி அம்பலப்படுத்தப்படுவார்.

ஜெர்மனியில் காவுத்ஸ்கி ஆதரவாளர்களும், பிரான்சில் லொங்கே ஆதரவாளர்களும் இத்தாலியில் டுராட்டி வகை யருக்களும் இந்த வழியில் வாதம் புரிகிருர்கள்: சோஷலிசம் தேசங்களின் சமத்துவம், சுதந்திரம், அவற்றின் சுயநிர்ணயம் ஆகியவற்றை முன்னனுமானிக்கிறது, இதனுல் நமது நாடு தாக்கப்படும் போது, அல்லது விரோதிப் படைகள் நமது பிரதேசம் மீது படையெடுக்கும் போது தமது நாட்டைத் தற்காப்பது என்பது சோஷலிஸ்டுகளின் உரிமையும் கடமை யும் ஆகும். ஆனுல் தத்துவார்த்த முறையில் இத் தகைய வாதம் ஒன்று சோஷலிசம் பற்றியதான படுமோச மான கேலிக்கூத்து அல்லது மோசடியான திருக்கு மறுக்கு வாதம் ஆகும். அதே போதில் நடைமுறை அரசியலின் கருத்து நிலையில் இருந்து இது, போரின் சமுதாய மற்றும்

வர்க்கத் தன்மை பற்றியோ, ஒரு பிற்போக்குப் போர் தருணத்திலான புரட்சிகரக் கட்சியின் கடமைகள் பற்றியோ எவ்விதக் கருத்தோட்டமும் இல்லாத முற்றும் அறியாத நாட்டுப்புறத்தானின் வாதத்துடன் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

தேசங்களுக்கு எதிரான வன்முறையை சோஷலிசம் எதிர்க்கிறது. இது மறுக்கவொண்ணுதது. ஆனல் சோஷலிசம் மனிதர்களுக்கு எதிரான வன்முறையைப் பொதுவாக எதிர்க்கிறது. எனினும் இதில் இருந்து சோஷலிசம் புரட்சிகர வன்முறையினை எதிர்க்கிறது என்ற முடிவுக்கு கிறித்தவ அராஜகவாதிகள் மற்றும் தல்ஸ்த்தோய்வாதிகள்[51] நீங்கலாக வேறு எவருமே இதுவரையில் வந்ததில்லை. எனவே பிற்போக்கு வன்முறையை புரட்சிகர வன்முறையில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் நிலைமைகளைப் பரிசீலனை செய்யாமல் பொதுவாக ''வன்முறை'' குறித்துப் பேசுவது, புரட்சியைக் கைவிட்டு விட்ட அற்பவாதியாக இருப்பதாகவே பொருள்படும், அல்லது குதர்க்கவாதம் மூலம் ஒருவர் தன்னையும் பிறரையும் அப்படியே ஏமாற்றிவருவதாகப் பொருள்படும்.

தேசங்களுக்கு எதிரான வன்முறை விஷயத்திலும் இது பொருந்தும். ஒவ்வொரு போரும் தேசங்களுக்கு எதிரான வன்முறை தான், ஆனல் இது புரட்சிகரப் போருக்கு ஆதரவாக இருப்பதில் இருந்து சோஷலிஸ்டுகளைத் தடுத்துவிடுவதில்லை. போரின் வர்க்கத் தன்மை—இதுவே ஒரு சோஷலிஸ்டை (அவன் ஓடுகாலியாக இல்லாத பட்சம்) எதிரிடும் அடிப்படையான விஷயமாக உள்ளது. 1914-18 ஏகாதிபத்தியப் போர், ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தின் இரண்டு பிரிவுகள் இடையே நடந்த ஒரு போராகும். இது உலகைப் பங்கு போட்டுக் கொள்வதற்காக, கொள்ளையை பங்கு போட்டுக் கொள்வதற்காக, சிறியதும் பலவீனமானதுமான தேசங்களைச் சூறையாடி நெரித்தழிப்பதற்காக நடந்த போராகும். வரவிருக்கும் போர் குறித்து 1912ல் பாசெல் அறிக்கையில் தரப்பட்டதான மதிப்பீடு இதுவாகும், இது மெய்நடப்புக்களால் உறுதி செய்யப்பட்டது.

போர் குறித்த இந்தக் கருத்து நிலையில் இருந்து பிறழ்ந்து செல்லும் எவரும் ஒரு சோஷலிஸ்டு அல்ல.

வில்ஹெல்மின் கீழிலான ஒரு ஜெர்மானியனே, கிளெமன்சோவின் கீழிலான ஒரு பிரெஞ்சுக்காரனே ''எனது நாடு ஒரு விரோதியின் படையெடுப்புக்கு உள்ளாகுமானால் ஒரு சோஷலிஸ்டு என்ற முறையில் எனது நாட்டைத் தற்காக்க வேண்டுவது எனது உரிமையும் கடமையும் ஆகும்'' என்று கூறினால் அவன் ஒரு சோஷலிஸ்டு போலவோ, ஒரு சர்வதேசியவாதி போலவோ, ஒரு புரட்சிகரப் பாட்டாளியைப் போலவோ வாதம் புரியவில்லை, மாறாக ஒரு குட்டி முதலாளித்துவ தேசியவாதி போலவே வாதம் புரிபவராகிறார். காரணம் இந்த வாதம் மூலதனத்தை எதிர்த்த தொழிலாளர்களின் புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்தைப் புறக்கணிக்கிறது, உலக முதலாளித்துவ வர்க்கம் மற்றும் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் கருத்து நிலையில் இருந்து இந்தப் போர் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்படுவதைப் புறக்கணிக்கிறது, அதாவது இது சர்வதேசியவாதத்தைப் புறக்கணிக்கிறது, மீதமாக இருப்பதெல்லாம் அவலமானதும் குறுகிய நோக்கமுடையதுமான தேசியவாதம் மட்டுமே. எனது நாட்டுக்குப் பொல்லாங்கு இழைக்கப்பட்டு வருகிறது, இதைப் பற்றி மட்டுமே நான் அக்கறைப்படுகிறேன்—இதுவே இந்த வாதத்தின் முழுமதிப்பு, இங்குதான் இதன் அற்பவாத தேசியவாத குறுகிய நோக்கம் காணக்கிடக்கிறது. தனிப்பட்டவர் வன்முறை சம்பந்தமாக, தனிநபருக்கு எதிராக வன்முறை எழும் போது, சோஷலிசம் வன்முறையை எதிர்க்கிறது எனவே நான் சிறைக்குச் செல்வதை விட சற்றே துரோகியாக இருந்து விட்டுப் போகிறேன் என்று வாதம் புரிவது போலவே இது உள்ளது.

சோஷலிசம் தேசங்களுக்கு எதிரான வன்முறையை எதிர்க்கிறது, எனவே எனது நாடு படையெடுப்புக்கு ஆளாகும் போது நான் என்னையே தற்காத்துக் கொள்கிறேன் என்று கூறும் ஒரு பிரெஞ்சுக்காரன், ஜெர்மானியன் அல்லது இத்தாலியன் சோஷலிசம் மற்றும் சர்வதேசியவாதம் இரண்டுக்கும் துரோகம் செய்தவனாகிறான். காரணம் அத்தகைய

மனிதன் தனது சொந்த ''நாட்டை'' மட்டுமே காண் கிறுன், ''தனது சொந்த''... முதலாளித்துவ வர்க்கத்தை எல்லாவற்றுக்கும் மேலாக வைத்துப் பார்க்கிறுன். இந்தப் போரை ஒரு ஏகாதிபத்தியப் போராகவும், தனது முத லாளித்துவ வர்க்கத்தை ஏகாதிபத்தியச் சூறையாடல் எனும் சங்கிலியில் உள்ள ஒரு வளையமாகவும் செய்யும் சர்வதேச தொடர்புகள் பற்றி அவன் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

''எதிரி எனது நாட்டின் மீது படையெடுத்து விட்டான், வேறு எதைப் பற்றியும் எனக்கு அக்கறை இல்லை'' என்று ஓடுகாலி காவுத்ஸ்கி ஆதரவாளர்கள், லொங்கே ஆதர வாளர்கள், டுராட்டி வகையருக்கள் வாதம் புரியும் அதே வழியில் எல்லா அற்பவாதிகளும் எல்லா அசட்டு அறிவிலி நாட்டுப் புறத்தான்களும் வாதம் புரிகிருர்கள்.*

சோஷலிஸ்டு, புரட்சிகரப் பாட்டாளி, சர்வதேசியவாதி வேறுவிதமாக வாதம் புரிகிருன். அவன் கூறுகிருன்: ''போரின் தன்மை (அது பிற்போக்கானதோ அல்லது புரட்சிகர மானதோ எதுவாயினும்) தாக்கியவர் எவர் என்பதையோ அல்லது யாருடைய நாட்டில் 'விரோதி' தங்கி இருக்கிருன்

---

* சமூக-தேசியவெறியர்கள் (ஷெய்டெமன்கள், ரெனெ டேல்கள், ஹெண்டர்சன்கள், கோம்பர்சுகள் வகையரு) போரின் போது ''அகிலம்'' பற்றிப் பேச அறவே மறுத்து விட்டார்கள். ''தமது'' தனித்தனி முதலாளித்துவ வர்க்கத் தின் எதிரிகளை... சோஷலிசத்தின் ''துரோகிகள்'' என்று அவர்கள் கருதுகிருர்கள். தமது தனித்தனி முதலாளித்துவ வர்க்கத்தால் பின்பற்றப்படும் நாடுபிடிக் கொள்கையினை அவர்கள் ஆதரிக்கிருர்கள். சமூக-அமைதிவாதிகள் (அதா வது சொல்லில் சோஷலிஸ்டுகளாயும் செயலில் குட்டி முத லாளித்துவ அமைதிவாதிகளாயும் இருப்போர்)எல்லா வகைப் பட்ட ''சர்வதேசியவாத'' உணர்ச்சிப் பகட்டுகளையும், பிர தேசக் கைப்பற்றல்களை எதிர்த்த ஆட்சேபணைகளையும் வெளிப் படுத்துகிருர்கள், ஆனுல் நடைமுறையில் அவர்கள் முறையே தமது ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தைத் தொடர்ந்து ஆதரிக்கிருர்கள். இந்த இரண்டு இனமாதிரிகளுக் கும் இடையிலான வேறுபாடு முக்கியமல்ல—இது கசப் பாகப் பேசும் ஒருவர், இனிப்பாகப் பேசும் ஒருவர் எனும் இரு முதலாளிகள் இடையில் உள்ள வேறுபாடு போன்ற தேயாகும்.

என்பதையோ சார்ந்தது அல்ல. எந்த வர்க்கம் போரை நடத்துகிறது என்பதை, எந்த அரசியலின் தொடர்ச்சியாக இந்தப் போர் நிகழ்ந்துள்ளது என்பதையுமே சார்ந்தது ஆகும். இந்தப் போர் ஒரு பிற்போக்கான ஏகாதிபத்தியப் போராக இருக்குமேயானல், அதாவது இது ஏகாதிபத்திய, பேராசை கொண்ட, கொள்ளைக்கார பிற்போக்கு முதலாளித் துவ வர்க்கத்தின் இரண்டு உலக கோஷ்டிகளால் நடத்தப் படுமானல், (ஆகச் சிறிய நாட்டில் இருப்போர் கூட) எல்லா முதலாளித்துவ வர்க்கத்தினரும் இந்தச் சூறையில் பங்காளிகள் ஆகின்றனர், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தின் பிரதிநிதி என்ற முறையில் எனது கடமை ஓர் உலகக் கொலைக் காண்டத்தின் பயங்கரத்தில் இருந்து மீள்வதற் குரிய ஒரே வழியான உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குத் தயார் செய்வதேயாகும். நான் 'எனது' நாட்டின் கருத்து நிலையில் இருந்து வாதம் புரியக் கூடாது (ஏனெனில் அது ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தின் கரங்களில் தான் ஒரு விளையாட்டுப் பொம்மை மட்டுமே என்பதை உணராத ஒரு கடைகெட்ட அசட்டு, குட்டி முதலாளித்துவ தேசியவாதியின் வாதமாகும்), மாருக உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குரிய தயாரிப்பு, பிரசாரம் மற்றும் அதை வேகப்படுத்தல் ஆகியவற்றிலான எனது பங்கின் கருத்து நிலையில் இருந்தே நான் வாதம் புரிய வேண்டும்.''

சர்வதேசியவாதம் என்பதன் பொருள் இதுவே, இதுவே சர்வதேசியவாதியின், புரட்சிகரத் தொழிலாளியின், உண்மையான சோஷலிஸ்டின் கடமையாகும். இந்த அரிச்சுவடியைத் தான் ஓடுகாலி காவுத்ஸ்கி ''மறந்து விட்டார்''. குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளின் (ருஷ்யாவில் மென் ஷிவிக்குகள், பிரான்சில் லொங்கே ஆதரவாளர்கள்,[52] இத்தாலியில் டுராட்டி, ஜெர்மனியில் ஹாஸே வகையருக் கள்) போர்த்தந்திரங்களை ஒப்புக்கொள்வதில் இருந்து தாண்டி, போல்ஷிவிக் போர்த்தந்திரங்களைக் கண்டன விமரி சனம் செய்ய முன்வரும் போது அவரது துரோகம் மேலும் அதிகமாகக் கண்கூடாகிறது. இதோ அவரது விமர்சனம்:

''போல்ஷிவிக் புரட்சியானது, அது ஒரு பொதுவான

ஐரோப்பியப் புரட்சிக்குத் துவக்க நிலையாகும் எனவும், ருஷ்யாவின் துணிவான முன்முயற்சி அகில ஐரோப்பாவிலும் உள்ள பாட்டாளிகளை எழுச்சியுறுமாறு ஊக்குவிக்கும் எனவும் கருதும் ஊகத்தை அடிப்படையாக்கியதாகும்.

''இந்த ஊகத்தின் மீது, ருஷ்யாவின் தனிப்பட்ட சமாதானம் என்ன வடிவங்களை எடுக்கும், ருஷ்ய மக்களுக்கு அது எத்தகைய துன்பதுயரங்களை, பிரதேச இழப்புக்களை (நேர் பொருளில்: அங்கவீனம், முடமாக்கல்—Verstümmelungen) உண்டாக்கும், தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய என்ன வியாக்கியானத்தை அது தரும் என்பதெல்லாம் பயனற்றவை என்பது திண்ணம். ருஷ்யா தன்னைத்தான் தற்காத்துக் கொள்ள முடியுமா முடியாதா என்பதும் கூட அந்த சமயத்தில் ஒரு பொருட்டல்ல. இந்தக் கருத்துப்படி ஐரோப்பியப் புரட்சியே ருஷ்யப் புரட்சிக்குச் சிறந்த பாதுகாப்பாக இருக்கும், முன்னாள் ருஷ்யப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் எல்லா மக்களினங்களுக்கும் முழுமையான, மெய்யான சுயநிர்ணயத்தைக் கொண்டு வருவதாக இருக்கும்.

''ஐரோப்பாவில் நிகழும் புரட்சி, அங்கு சோஷலிசத்தை நிலை நாட்டிக் கெட்டிப்படுத்துவதோடு கூடவே, நாட்டின் பொருளாதாரப் பின்தங்கிய நிலை காரணமாக சோஷலிஸ்டு உற்பத்தி முறைகளை ருஷ்யாவில் கொண்டுவருவதற்கு குறுக்கே எழும் முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்குரிய ஒரு சாதனமாகவும் இருக்கும்.

''ருஷ்யப் புரட்சி பிழையற்ற முறையில் ஒரு ஐரோப்பியப் புரட்சியைக் கட்டவிழ்த்து விடும் என்ற பிரதான அனுமானம் செயலாகி இருக்கும் பட்சத்தில் மட்டுமே இவை யாவும் மிகவும் தர்க்க ரீதியாகவும் நேர்த்தியாகவும் இருந்திருக்கும். ஆனால் அது நிகழாமல் போய்விட்டாலோ?

''இது வரை இந்த அனுமானம் சரி என மெய்ப்பிக்கப் படவில்லை. இப்போது ருஷ்யப் புரட்சியைக் கைவிட்டு அதற்குத் துரோகம் செய்து விட்டதாக ஐரோப்பியப் பாட்டாளிகள் மீது குற்றம் சாட்டப்படுகிறது. இது பெயர் தெரியா நபர்கள் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டாகும், ஏனெனில் ஐரோப்பியப் பாட்டாளிகளின் நடத்தைக்கு யாரைப் பொறுப்பாக்குவது?'' (பக்கம் 28).

தாம் எதிர்நோக்கிய புரட்சியின் வருகை சம்பந்தமாக மார்க்ஸ், எங்கெல்ஸ், பெபெல் ஒரு தடவைக்கும் அதிகமாகப் பிழையான மதிப்பீடு செய்து விட்டார்கள் எனவும்,

''ஒரு திட்டவட்டமான தேதியில்'' புரட்சியை எதிர்பார்ப்பது மீதான போர்த்தந்திரத்தை அவர்கள் என்றுமே அடிப்படையாக்கி இருக்கவில்லை எனவும் (பக்கம் 29) காவுத்ஸ்கி பின்னல் மிகவும் நீண்ட விளக்கம் தருகிருர். அதே போதில் போல்ஷிவிக்குகள் ''எல்லாவற்றையும் ஒரு சீட்டின் மீது, ஒரு பொதுவான ஐரோப்பியப் புரட்சி மீது துணிந்து பிணைத்திருந்தார்கள்'' என்று அவர் கூறுகிருர்.

மார்க்சியத்தின் இடத்தில் தமது சின்னத்தனமான பிற்போக்கு அற்பவாதக் கருத்தை ஏய்த்துப் புகுத்தி மார்க்சியத்தை கள்ளத்தனமாகப் புரட்டும் காவுத்ஸ்கியின் ''திறனை'' நமது வாசகர்களுக்கு நிதர்சனப்படுத்திக் காட்டவே நாம் திட்டமிட்டு இந்த நீண்ட வாசகத்தை மேற்கோள் காட்டினேம்.

முதலாவதாக, எதிராளியிடம் அப்பட்டமாயும் அசட்டுத்தனமான ஒரு கருத்தை இருப்பதாகச் சாட்டி பிறகு அதை மறுப்பது என்பது அதிக சாமர்த்தியசாலிகளான எவரும் புரியும் ஒரு வித்தையல்ல. ஒரு திட்டவட்டமான தேதிக்குள் இதர நாடுகளில் புரட்சி வரும் என்ற எதிர்பார்ப்பின் மீது போல்ஷிவிக்குகள் தமது போர்த்தந்திரங்களை அடிப்படையாக்கி இருந்திருப்பார்களானல் அது மறுக்க முடியாத அசட்டுத்தனமே ஆகும். ஆனல் போல்ஷிவிக் கட்சி இத்தகைய அசட்டுத்தனத்தை என்றுமே செய்ததில்லை. அமெரிக்கத் தொழிலாளருக்கு எழுதிய எனது கடிதத்தில் (1918 ஆகஸ்டு 20) நாம் ஒரு அமெரிக்கப் புரட்சியை எதிர்பார்க்கிருேம் ஆனல் எந்த ஒரு திட்டவட்டமான தேதிக்குள்ளும் அல்ல என்று குறிப்பிட்டு இந்த முட்டாள் கருத்தை நான் வெளிப்படையாக மறுதலித்திருக்கிறேன்.* இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடனும்[53] ''இடதுசாரி கம்யூனிஸ்டுகளுடனும்''[54] (1918 ஜனவரி-மார்ச்சில்) நடத்திய எனது சர்ச்சையில் இதே கருத்தை ஒரு தடவைக்கும் அதிகமாக விவரித்துள்ளேன். காவுத்ஸ்கி ஒரு சிறிய,... மிகவும் சிறிய போலி ஆவணம் தயார் செய்து, அதன் அடிப்படை

---

* இதே பதிப்பு, தொகுதி 8, பக்கங்கள் 302-303 பார்க்க.—ப-ர்.

யில் போல்ஷிவிக்குகளை விமர்சனம் செய்திருக்கிறூர். திட்ட வட்டமான தேதியில் அன்றி ஏறத்தாழ அண்மை எதிர் காலத்திலான ஐரோப்பியப் புரட்சியின் எதிர்பார்ப்பை அடிப் படையாக்கிய போர்த்தந்திரங்களுடன், ஒரு திட்டவட்ட மான தேதியிலான ஐரோப்பியப் புரட்சியின் எதிர் பார்ப்பை அடிப்படையாக்கிய போர்த்தந்திரங்களுடன் போட்டுக் குழப்புகிறூர் காவுத்ஸ்கி. ஒரு சிறிய, மிகச் சிறிய போலி ஆவணம்!

கடைசியாகக் குறிப்பிடப்பட்ட போர்த்தந்திரங்கள் முட் டாள்தனமானவை. முதலில் குறிப்பிட்டவை ஒரு மார்க் சியவாதிக்கு, ஒவ்வொரு புரட்சிகரப் பாட்டாளிக்கும் மற் றும் சர்வதேசியவாதிக்கும் கடப்பாடானவை, இவை கடப் பாடானவை என்பதற்குக் காரணம் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் போரினுல் ஏற்படுத்தப்பட்ட புறவய நிலைமை களை ஒரு சரியான மார்க்சிய வழியில் இவை மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்கின்றன, இவை மட்டுமே பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியக் கடமைகளுக்குப் பொருத்தமானவை.

பொதுவான புரட்சிகரப் போர்த்தந்திரங்கள் பற்றிய அடிப்படைகள் சம்பந்தமான முக்கியமான விஷயத்தில் போல்ஷிவிக் புரட்சியாளர்கள் செய்திருக்கலாம்—ஆனுல் செய்யவில்லை—எனக் கருதப்படும் ஒரு தவறு பற்றிய ஒரு சில்லரைச் செயலைப் பதிலீடு செய்வது மூலம், காவுத்ஸ்கி சாதுர்யமாக எல்லா புரட்சிகரப் போர்த்தந்திரங்களையும் விட்டொழிக்கிறூர்!

அரசியலில் ஓடுகாலியான அவரால் புரட்சிகரப் போர்த் தந்திரங்களின் புறநிலை முன்தேவைகள் குறித்த விஷயத்தைத் தத்துவார்த்த முறையில் முன்வைக்கவும் கூட இயலவில்லை.

இது நம்மை இரண்டாவது அம்சத்திற்குக் கொண்டு வருகிறது.

இரண்டாவதாக, ஒரு புரட்சிகர நிலைமை இருக்கும் பட்சத் தில் மட்டுமே ஒரு ஐரோப்பியப் புரட்சியை எதிர்பார்ப் பது ஒரு மார்க்சியவாதிக்கு கடப்பாடானது. புரட்சிகர நிலைமை இருக்கும் போதும் புரட்சிகர நிலைமை இல்லாத

போதும் இரண்டிலும், சோஷலிஸ்டு பாட்டாளி வர்க்கப் போர்த்தந்திரம் ஒன்ருகவே இருக்க முடியாது என்பது மார்க்சியத்தின் அரிச்சுவடியாகும்.

மார்க்சியவாதிக்குக் கடப்பாடான இந்தக் கேள்வியை காவுத்ஸ்கி முன்வைத்திருப்பின், இதன் விடை முற்ற முழுதாயும் தனக்கு எதிரானது என்பதை அவர் கண்டிருப்பார். போருக்கு நெடுங்கால முன்பே, ஐரோப்பியப் போரானது ஒரு புரட்சிகர நிலைமையை சிருஷ்டிக்கும் என்பதை எல்லா மார்க்சியவாதிகளும் எல்லா சோஷலிஸ்டுகளும் ஒத்துக் கொண்டிருந்தனர். காவுத்ஸ்கி தானும் ஓடுகாலி ஆவதற்கு முன்பாக—*1902*ல் (அவரது சமுதாயப் புரட்சி) மற்றும் *1909*ல் (ஆட்சி அதிகாரத்திற்குப் பாதை) ஆகிய நூல்களில் இதைத் தெளிவாயும் திட்டமாயும் ஒத்துக் கொண்டிருந்தார். பாசெல் அறிக்கையில் இரண்டாம் அகிலம் முழுவதன் பேராலும் இது ஒத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இந்தப் பிரச்சினை மீதான பாசெல் அறிக்கையின் பிரகடனங்களை எல்லா நாடுகளையும் சார்ந்த சமூக-தேசியவெறியர்களும், காவுத்ஸ்கியின் ஆதரவாளர்களும் (''மையவாதிகள்'' அதாவது புரட்சியாளர்களுக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கும் இடையே ஊசலாடுவோர்) கொள்ளை நோய் போல வெறுத்து ஒதுக்குகின்றனர் என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

எனவே ஐரோப்பாவில் ஒரு புரட்சிகர நிலைமை ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு போல்ஷிவிக்குகளின் மோகம் அன்று, மாருக அனைத்து மார்க்சியவாதிகளின் பொதுக் கருத்து ஆகும். காவுத்ஸ்கி, போல்ஷிவிக்குகள் ''எப்போதும் வன்முறை மற்றும் சித்தத்தின் சர்வவல்லமையில் நம்பிக்கை வைத்திருந்தார்கள்'' எனும் தொடர்களைப் பயன்படுத்தி மறுக்க முடியாத இந்த மெய்நடப்பில் இருந்து தப்ப முயலும் போது அவர் புரட்சிகர நிலைமை பற்றிய விஷயத்தை முன்வைப்பதை தவிர்ப்பதற்கான தமது மழுப்பலை—மிகவும் வெட்கக்கேடான மழுப்பலை—மூடி மறைப்பதற்காக அவர் இந்த உரத்து ஒலிக்கும் வெற்றுத் தொடரை வெளியிடுகிருர்.

மேலே செல்வோம். உள்ளபடியே ஒரு புரட்சிகர நிலைமை

வந்திருக்கிறதா இல்லையா? காவுத்ஸ்கியாலும் இந்தக் கேள்வியை முன்வைக்க முடியவில்லை என்பது காணப்படுகிறது. பொருளாதார மெய்விவரங்கள் ஒரு விடையைத் தருகின்றன: போரால் எங்கும் உண்டாக்கப்பட்ட பஞ்சமும் நாசமும் ஒரு புரட்சிகர நிலைமையை உணர்த்துகின்றன. அரசியல் மெய்விவரங்களும் ஒரு விடையைத் தருகின்றன: 1915ஆம் ஆண்டு முதல் எல்லா நாடுகளிலும் பழைய சிதைவுற்ற சோஷலிஸ்டுக் கட்சிகளின் அகத்தே ஒரு பிளவுறும் நடைமுறை தெளிவாக நிலவி வந்தது, இது பாட்டாளிகள் பெருந்திரள் சமூக-தேசியவெறித் தலைவர்களிடமிருந்து விலகி இடதுசாரி நோக்கி, புரட்சிகரக் கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் புரட்சிகரத் தலைவர்களையும் நோக்கி திசை திரும்பிய நடைமுறையாகும்.

1918 ஆகஸ்டு 5ல், காவுத்ஸ்கி தனது பிரசுரத்தை எழுதிக் கொண்டிருந்த போது, புரட்சியைக் கண்டு அஞ்சும், அதைக் காட்டிக் கொடுக்கும் ஒரு நபர் மட்டுமே இந்த மெய்விவரங்களைக் காணத் தவறி இருக்க முடியும். இப்போது, 1918 அக்டோபர் இறுதியில் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் புரட்சி வளர்ந்து வருகிறது, எல்லோர் கண் முன்னும் மிகவும் வேகமாகவும் வளர்ந்து வருகிறது. இன்னும் கூட மார்க்சியவாதியாகக் கருதப்பட வேண்டும் என விரும்பும் "புரட்சியாளர்" காவுத்ஸ்கி தாம் ஒரு குறுநோக்குடைய அற்பவாதி என்பதைக் காட்டிக் கொண்டு விட்டார். மார்க்சால் கேலி செய்யப்பட்ட 1847ஆம் ஆண்டுக் கால அற்பவாதிகளைப் போல அவரும் நெருங்கி வரும் புரட்சியைக் காணத் தவறி விட்டார்!

இப்போது மூன்றுவது அம்சத்தைப் பார்ப்போம்.

மூன்றுவதாக, ஐரோப்பாவில் புரட்சிகர நிலைமை இருக்கும் பட்சத்தில் புரட்சிகரப் போர்த்தந்திரங்களின் விசேஷமான முனைப்புக் கூறுகளாக இருக்க வேண்டியவை எவை? ஓடுகாலியாகிவிட்ட காவுத்ஸ்கி ஒரு மார்க்சியவாதிக்குக் கடப்பாடாகிவிட்ட இந்தக் கேள்வியை முன்வைக்க அஞ்சினர். "பொதுவான ஐரோப்பியப் புரட்சி" தொடங்கி விட்டதா இல்லையா? என்று ஒரு மாதிரி குட்டி முதலாளித்

துவ அற்பவாதி அல்லது ஒரு அறியாத விவசாயி போன்று காவுத்ஸ்கி வாதம் புரிகிறுர். புரட்சி துவங்கி இருந்தால் பிறகு அவரும் கூட புரட்சியாளராகத் தயார்! ஆனுல் பிறகு—இதைக் குறித்துக் கொள்க—ஒவ்வொரு கயவனும் (வெற்றி பெற்ற போல்ஷிவிக்குகளுடன் இப்போது சில சமயம் சேர்ந்து கொள்ளும் கயவர்களைப் போல) தன்னைப் புரட்சியாளர் என்று சாற்றிக் கொள்வார்!

புரட்சி துவங்கவில்லையானுல், காவுத்ஸ்கி புரட்சியைக் கைவிட்டு விடுவார்! எழுத்தறிவில்லாத மக்கள் திரளுக்கு முதிர்ச்சியுறும் புரட்சி அவசியம் என்று பிரசாரம் செய்வதிலும், அது தவிர்க்க முடியாது என்பதை நிரூபித்துக் காட்டுவதிலும் அதன் சாதகங்களை மக்களிடை விளக்குவதிலும், அதற்காகப் பாட்டாளி வர்க்கத்தையும் எல்லா உழைக்கும், சுரண்டப்படும் மக்களையும் தயார் செய்வதிலும் தோற்றுவிக்கும் தனது திறமை மூலம் ஒரு புரட்சிகர மார்க்சியவாதி ஒரு அற்பவாதியிடம் இருந்தும் குட்டி முதலாளியிடம் இருந்தும் வேறுபடுகிறுர் எனும் உண்மையினை புரிந்து கொண்டதன் ஒரு சாயலைக்கூட காவுத்ஸ்கி வெளிப்படுத்தவில்லை.

ஐரோப்பியப் புரட்சியானது ஒரு திட்டவட்டமான தேதியில் வெடிக்கும் என்பதன் மீது, அந்த ஒரு சீட்டின் மீது போல்ஷிவிக்குகள் எல்லாவற்றையும் துணிந்து பிணைத்திருந்தார்கள் எனும் ஓர் அபத்தத்தை காவுத்ஸ்கி போல்ஷிவிக்குகள் மீது சாட்டி உரைக்கிறுர். இந்த அபத்தம் காவுத்ஸ்கிக்கு எதிராகவே திரும்பிவிட்டது, காரணம் அவரது வாதத்தின் தர்க்க ரீதியான முடிவு, 1918 ஆகஸ்டு 5க்குள் ஐரோப்பியப் புரட்சி வெடித்திருக்குமானுல் போல்ஷிவிக்குகளின் போர்த்தந்திரங்கள் பிழையற்றனவாக இருந்திருக்கும் என்பதாகும்! அந்தத் தேதியைத்தான் காவுத்ஸ்கி தனது பிரசுரத்தை எழுதும் நேரமாகக் குறிப்பிட்டார். இந்த ஆகஸ்டு 5க்குச் சில நாட்கள் பின்னுல், சில ஐரோப்பிய நாடுகளில் புரட்சி வந்து கொண்டிருப்பது தெளிவாயிற்று என்றபோது, காவுத்ஸ்கியின் துரோகம் முழுவதும், மார்க்சியத்தை அவர் புரட்டியது முழுவதும், பிரச்சினைகளை ஒரு புரட்சி

கரமான முறையில் விவாதிக்கவும் முன்வைப்பதற்கும் கூட அவருக்கு அறவே இயலாதபடி இருந்ததும் அவற்றின் சகல லட்சணங்களிலும் வெளிப்பட்டன!

ஐரோப்பியப் பாட்டாளிகள் துரோகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்படும் போது அது பெயர் தெரியாத நபர்கள் மீது சாட்டப்படும் குற்றச் சாட்டாகும் என்று காவுத்ஸ்கி எழுதுகிருர்.

திரு. காவுத்ஸ்கியே, நீங்கள் தவருகக் கருதுகிறீர்கள்! நிலைக்கண்ணுடியில் பாருங்கள், இந்தக் குற்றச்சாட்டு யாருக்கு எதிராகச் சாட்டப்பட்டுள்ளதோ அந்த ''பெயர் தெரியாத நபர்களைக்'' காண்பீர்கள். காவுத்ஸ்கி ஒரு வெகுளியின் பாவனையை மேற்கொண்டு யார் இந்தக் குற்றச்சாட்டை சாட்டியவர்கள் என்பதையும் அதன் அர்த்தத்தையும் புரிந்து கொள்ளாதவர் போல வேடம் போடுகிருர். இந்தக் குற்றச் சாட்டு ஜெர்மன் ''இடதுசாரிகளால்'', ஸ்பார்ட்டகிஸ்டுகளால்,[55] லீப்க்னெஹ்ட் மற்றும் அவரது நண்பர்களால் சட்டப்பட்டது, சாட்டப்பட்டு வருகிறது என்பதை உண்மையில் காவுத்ஸ்கி முற்றும் நன்ருக அறிவார். பின்லாந்து, உக்ரேனியா, லத்வியா, எஸ்த்லாந்தை நெரித்து நசுக்கிய போது ஜெர்மன் பாட்டாளிகள் ருஷ்ய (மற்றும் உலக) புரட்சியைக் காட்டிக் கொடுத்தார்கள் என்ற உண்மை குறித்து இந்தக் குற்றச்சாட்டு ஒரு தெளிவான மதிப்பீட்டினை வெளிப்படுத்துகிறது. இந்தக் குற்றச்சாட்டு முதலாவதாயும் எல்லாவற்றுக்கும் மேலாகவும் எப்போதும் மிதித்துத் துவைக்கப்பட்டுக் கிடக்கும் மக்கள் திரளுக்கு எதிராக அல்ல, மாருக அந்தத் தலைவர்களுக்கு எதிரானதாகும். அவர்கள் ஷெய்டெமன்கள் மற்றும் காவுத்ஸ்கிகளைப் போல மக்கள் திரள் மத்தியில் அவர்களது மந்தநிலையை வென்று சமாளிக்கும் வகையில் புரட்சிகர கிளர்ச்சியை, புரட்சிகரப் பிரசாரத்தை, புரட்சிகர வேலைகளைச் செய்து முடிப்பது எனும் தமது கடமையைப் புரியத் தவறிவிட்டார்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் திரளின் மத்தியில் மிகவும் ஆழமாக எப்போதும் கனன்று கொண்டிருக்கும் புரட்சிகர இயல்பூக்கத்தையும் அபிலாஷைகளையும் எதிர்த்து இந்தத் தலைவர்கள்

உண்மையில் வேலே செய்தார்கள். ஷெய்டெமன்கள் மொட்டையாகவும், முரடாகவும், நெஞ்சீரம் இன்றியும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தன்னல நோக்கங்களுக்காகவும் பாட்டாளிகளைக் காட்டிக் கொடுத்து முதலாளித்துவ வர்க்கத்தினரின் பக்கம் துறந்தோடினூர்கள். இதையேதான் காவுத்ஸ்கி மற்றும் லொங்கேயின் ஆதரவாளர்களும் செய்தார்கள், தயக்கத்துடனும், உறுதி இன்றியும், அந்தத் தருணத்தில் அதிக பலத்துடன் இருந்தவர்களை நோக்கிக் கோழைத்தனமாகப் பக்கக் கண்ணேட்டமிட்டும் இதையே செய்தார்கள். போரின் போது எழுதிய கட்டுரைகள் அனைத்திலும் காவுத்ஸ்கி புரட்சிகர உணர்வை வளர்த்து அனல் எழும்படி செய்வதற்குப் பதில் அதனை அணைத்துவிடவே முயன்ருர்.

ஐரோப்பியப் பாட்டாளிகள் ருஷ்யப் புரட்சியைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள் என்ற ''குற்றச்சாட்டு'' பேரளவான தத்துவார்த்த முக்கியத்துவம் உடையது, மேலும் அதிகமான கிளர்ச்சித்துறை மற்றும் பிரசார முக்கியத்துவம் உடையது என்பதை காவுத்ஸ்கி புரிந்து கொள்ளக் கூட இல்லை எனும் உண்மை ஜெர்மானிய அதிகாரபூர்வ சமூக-ஜனநாயகத்தின் ''சராசரித்'' தலைவனின் அற்பவாத வியப்பதிர்ச்சிக்கு ஒரு அசல் வரலாற்று நினைவுச்சின்னமாக அமையும்! சோஷலிசத்தைக் காட்டிக் கொடுக்காத ஜெர்மன் சோஷலிஸ்டுகளுக்கு—லீப்க்னெஹ்ட் மற்றும் அவரது நண்பர்களுக்கு—ஷெய்டெமன்களையும் காவுத்ஸ்கிகளையும் தூக்கி எறியும்படியும், இத்தகைய ''தலைவர்களை'' ஒதுக்கித்தள்ளி அவர்களது மயக்குமவதும் மானங்கெட்டதுமான பிரசாரத்தில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு, அவர்களை பொருட்படுத்தாமலும் அவர்கள் இல்லாமலும் அவர்களைத் தாண்டிக் கடந்து புரட்சியில் எழுச்சியுற்று, புரட்சியை நோக்கி முன்னேற வேண்டும் என்று ஜெர்மன் தொழிலாளரிடம் தமது வேண்டுகோளை வெளியிட, ஜெர்மன் ''பேரரசில்'' நிலவிவரும் தணிக்கை காரணமாக, இந்தக் ''குற்றச்சாட்டு'' ஒரே வடிவமாகும் என்பதைக் காவுத்ஸ்கி புரிந்து கொள்ளவில்லை!

காவுத்ஸ்கிக்கு இது புரியவில்லை. போல்ஷிவிக்குகளின் போர்த்தந்திரங்களை அவர் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்? பொதுவாகவே புரட்சியைக் கைவிடும் ஒரு மனிதர், மிகவும் ''இடர்ப்பாடான'' ஒரு விஷயத்தில் புரட்சியின் வளர்ச்சி நிலைமைகளை சீர்தூக்கிப் பார்த்து மதிப்பீடு செய்வார் என எதிர்பார்க்க முடியுமா?

போல்ஷிவிக் போர்த்தந்திரங்கள் சரியானவை; அவை மட்டுமே சர்வதேசியப் போர்த்தந்திரங்களாக விளங்கின. காரணம் அவை, உலகப் புரட்சி குறித்த கோழைத்தனமான அச்சம், அற்பவாதிப் போக்கிலான அதன் மீதான ''நம்பிக்கை இன்மை'', தமது ''சொந்தத்'' தாயகத்தை (தமது சொந்த முதலாளித்துவ வர்க்கத்தின் தாயகத்தை) பாதுகாப்பதற்கான குறுகிய தேசியவாத விழைவு மற்ற எல்லாவற்றைப் பற்றிச் ''சிறிதும் கவலைப்படாத'' தன்மை ஆகியவை எதையும் அடித்தளமாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக ஐரோப்பாவின் புரட்சிகர நிலைமை குறித்த சரியான (போருக்கு முன்பும், சமூக-தேசியவெறியர் மற்றும் சமூக-அமைதிவாதிகள் துரோகம் செய்வதற்கு முன்பும் சர்வப் பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டதுமான) மதிப்பீடை அடிப்படையாகக் கொண்டவை. இந்தப் போர்த்தந்திரங்கள் மட்டுமே சர்வதேசியப் போர்த்தந்திரங்களாக இருந்தன, காரணம் அவை எல்லா நாடுகளிலும் புரட்சியை வளப்படுத்தவும், ஆதரிக்கவும், எழுச்சியூட்டவும் வேண்டி ஒரு நாட்டில் உச்ச பட்சம் சாத்தியமான அனைத்தையும் செய்தன. இந்தப் போர்த்தந்திரங்கள் அவை பெற்ற பேரளவான வெற்றிகளால் சரியானவை என நிறுவப்பட்டுள்ளன, ஏனெனில் போல்ஷிவிசம் (எவ்விதத்திலும் ருஷ்ய போல்ஷிவிக்குகளின் தனித் தகுதி காரணமாக அன்றி, மாறாக நடைமுறையில் புரட்சிகரமான போர்த்தந்திரங்களுக்கு எல்லா இடங்களிலும் உள்ள மக்களின் மிகவும் ஆழமான அனுதாபம் இருந்த காரணத்தால்) உலக போல்ஷிவிசம் ஆகிவிட்டது, சமூக-தேசியவெறி மற்றும் சமூக-அமைதிவாதத்திடம்இருந்து ஸ்தூலமாயும் நடைமுறையிலும் வேறுபட்டதான ஒரு கருத்தை, ஒரு தத்துவத்தை, ஒரு வேலைத்திட்டத்தை மற்றும்

போர்த்தந்திரங்களை உருவாக்கியுள்ளது. பழைய, சீரழிந்த, ஷெய்டெமன்கள், காவுத்ஸ்கிகள், ரெனெடேல்கள் மற்றும் லொங்கேகள், ஹெண்டர்சன்கள் மற்றும் மாக்டொனல்டு களின் அகிலத்துக்கு போல்ஷிவிசம் ஒரு முடிவான அடியைக் கொடுத்து விட்டது. இப்போது முதல் இவர்கள் ஒருவருக் கொருவர் பகைமைபூண்டு, ''ஒற்றுமை'' குறித்துக் கனவு கண்டும் செத்த பிணத்தை உயிர்ப்பிக்க முயன்றும் வருவார் கள். போல்ஷிவிசம் மூன்றும் அகிலத்தின், உண்மையிலேயே பாட்டாளி வர்க்க மற்றும் கம்யூனிஸ்டு அகிலத்தின் சித் தாந்த மற்றும் போர்த்தந்திர அடித்தளங்களைப் படைத்துரு வாக்கிவிட்டது. இது சாந்தி சகாப்தத்தின் சாதனைகள் மற்றும் துவங்கிவிட்டதான புரட்சிகளின் சகாப்தத்தின் அனுபவம் ஆகிய இரண்டினையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

போல்ஷிவிசம் ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' எனும் கருத்தை உலகம் முழுதிலும் பரப்பியுள்ளது. அது இந்தத் தொடர்களை லத்தீன் மொழியில் இருந்து முதலில் ருஷ்ய மொழியிலும் பிறகு உலகின் எல்லா மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளது, சோவியத் ஆட்சி அதிகாரத்தின் உதாரணம் மூலம் ஒரு பின்தங்கிய நாட்டிலும் கூட ஆகக் குறைந்த அனுபவம், கல்வி மற்றும் நிறுவன ஒழுங்கமைப்புப் பழக்கங்கள் கொண்டிருந்தும் கூட தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும், ஒரு முழு ஆண்டுக் காலம் பிரம் மாண்டமான இடர்ப்பாடுகளுக்கு மத்தியில், சுரண்டலாளர் களுக்கு (இவர்கள் உலகம் முழுதிலுமுள்ள முதலாளித் துவ வர்க்கத்தினரால் ஆதரிக்கப்பட்டார்கள்) எதிரான போராட்டத்தின் மத்தியில், உழைக்கும் மக்களின் ஆட்சி அதிகாரத்தைக் கட்டிக் காக்கவும், உலகில் முன்பு நிலவிய எல்லா ஜனநாயகங்களையும் விடவும் அளவிடற்கரிய வகை யில் உயர்தரமானதும் விரிவானதுமான ஒரு ஜனநாயகத் தைப் படைத்துருவாக்கவும், சோஷலிசத்தின் நடைமுறை நிர்மாணத்திற்கு வேண்டி லட்சோபலட்சம் தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் படைப்புப் பணியினைத் தொடங்க வும் முடிந்தது.

போல்ஷவிசமானது, எந்தக் கட்சியும் எந்த நாட்டிலும்

இதுவரையில் சாதிக்க முடிந்ததை விடவும் அதிக வலிமையுடன் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சி வளர்ச்சியுற உண்மையிலேயே உதவியுள்ளது. உலகம் முழுதிலும் உள்ள தொழிலாளர்கள், ஷெய்டெமன்கள் மற்றும் காவுத்ஸ்கிகளின் போர்த்தந்திரங்கள் தம்மை ஏகாதிபத்தியப் போரில் இருந்தோ ஏகாதிபத்திய முதலாளிகளின் கூலி அடிமைத்தனத்தில் இருந்தோ விடுவிக்கவில்லை என்பதையும், இந்தப் போர்த்தந்திரங்கள் எல்லா நாடுகளுக்கும் முன்மாதிரியாக விளங்க முடியாது என்பதையும் ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் தெளிவாக உணர்ந்து வரும் அதே போதில், எல்லா நாடுகளிலும் இருக்கும் பெருந்திரளான தொழிலாளர் போர் மற்றும் ஏகாதிபத்தியத்தின் பயங்கரங்களில் இருந்து தப்பிவெளியேறுவதற்கான சரியான பாதையை போல்ஷிவிசம் சுட்டிக்காட்டியுள்ளது என்பதையும், போல்ஷிவிசம் எல்லோருக்கும் உரிய போர்த்தந்திர மாதிரியாக விளங்க முடியும் என்பதையும் ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் தெளிவாக உணர்ந்து வருகிறுர்கள்.

பொதுவான ஐரோப்பியப் புரட்சி மட்டுமன்றி உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியும் எல்லோர் கண் முன்பும் முதிர்ச்சியடைந்து வருகிறது, ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கம் பெற்ற வெற்றியால் இது துணை செய்யப்பட்டு, வேகப்படுத்தப்பட்டு, ஆதரிக்கப்பட்டு வருகிறது. சோஷலிசத்தின் பூரண வெற்றிக்கு இவையெல்லாம் போதாது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள் அல்லவா? நிச்சயமாயும் அது போதாதுதான். ஒரு நாடு தனியாக இதற்கு மேல் அதிகமாகச் செய்ய முடியாது. ஆனுல் இந்த ஒரு நாடு சோவியத் ஆட்சி அதிகாரத்தின் உதவி காரணமாக மிகப் பெருமளவு சாதித்துள்ளது. எனவே, ஜெர்மன் மற்றும் ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களிடையான ஓர் உடன்பாட்டின் விளைவாக— என்று வைத்துக் கொள்வோம்—நாளையே ருஷ்யாவில் இருக்கும் சோவியத் ஆட்சி அதிகாரம் நசுக்கப்பட்டாலும் கூட— ஆக மோசமான நிகழ்வு சாத்தியம் என்று கொண்டாலும் கூட—இன்னமும் போல்ஷிவிக் போர்த்தந்திரங்கள் சோஷலிசத்துக்கு பேரளவிலான அனுகூலங்களைக் கொண்டுவந்தி

ருப்பதையும், வெல்லற்கரிய உலகப் புரட்சியின் வளர்ச்சிக்கு உதவி புரிந்திருப்பதையும் காணலாம்.

''பொருளாதாரப் பகுத்தாய்வு'' எனும் வேடத்தில் முதலாளித்துவ வர்க்கத்துக்கு அடிமைப்படல்

ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது போல, காவுத்ஸ்கியின் புத்தகத்தின் தலைப்பு அதன் உள்ளுறையைச் சரியாகப் பிரதி பலிக்க வேண்டுமாயின், அது **பாட்டாளி வர்க்க சர்வாதி** காரம் என்ற பெயரில் அன்றி **போல்ஷிவிக்குகள் மீதான முதலாளித்துவத் தாக்குதல்களின் புதுவடிவம்** எனும் பெயரைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

ருஷ்யப் புரட்சியின் முதலாளித்துவத் தன்மை பற்றிய பழைய மென்ஷிவிக் ''தத்துவங்கள்'', அதாவது மார்க்சியம் பற்றிய மென்ஷிவிக்குகளின் பழைய புரட்டுகள் (1905ல் காவுத்ஸ்கியால் **நிராகரிக்கப்பட்டவை**) இப்போது மீண்டும் ஒருமுறை நமது தத்துவாளர்களால் புதுவடிவம் தரப்படுகின்றன. ருஷ்ய மார்க்சியவாதிகளுக்கு இது எவ்வளவு சலிப்பு தருவதாக இருந்த போதிலும் இந்த விஷயத்தை நாம் கட்டாயம் எடுத்துக் கவனிக்க வேண்டும்.

ருஷ்யாவின் புரட்சி ஒரு முதலாளித்துவப் புரட்சி என்று 1905க்கு முன்னல் ருஷ்ய மார்க்சியவாதிகள் எல்லோரும் கூறினர்கள். மார்க்சியத்துக்குப் பதிலாக மிதவாதத்தை முன்வைத்த மென்ஷிவிக்குகள் இதிலிருந்து பின்வரும் முடிவுக்கு வந்தார்கள்: எனவே பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தார் ஏற்றுக்கொள்ளத் தக்கது எதுவோ அதற்கு அப்பால் போகக் கூடாது, அவர்களுடன் சமரசக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். இது ஒரு மிதவாத முதலாளித்துவ தத்துவம் என்று போல்ஷிவிக்குகள் கூறினர்கள். முதலாளித்துவ வர்க்கத்தினர் முடியாட்சி, நிலப்பிரபுத்துவ நிலச் சொத்து முதலியவற்றை சாத்தியமான வரையில் பேணிவைத்திருக்கும் அதேபோதில், அரசு பற்றிய சீர்திருத்தத்தை புரட்சிகரமான வழிகளில் அன்றி, மாருக முதலாளித்துவ சீர்திருத்தவாத வழிகளில் கொண்டு

வரவே முயன்றூர்கள். முதலாளித்துவ வர்க்கத்தினரின் சீர்திருத்தவாதத்துக்குள் ''கட்டுண்டு'' போய்விடாதபடி பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை அதன் இறுதி வரை நடத்தி முடிக்க வேண்டும். முதலாளித் துவப் புரட்சியிலான சக்திகளின் வர்க்க அணிசேர்க்கையை போல்ஷிவிக்குகள் பின்வருமாறு முறைப்படுத்தி முன்வைத் தார்கள்: விவசாயிகளைத் தன் பக்கம் சேர்த்துக் கொள் ளும் பாட்டாளி வர்க்கம் மிதவாத முதலாளிகளை நடுநிலைப் படுத்தி முடியாட்சியை, மத்திய கால முறையை, நிலப் பிரபுத்துவ நிலச் சொத்தை அறவே அழித்து விடும்.

பாட்டாளிகள் மற்றும் விவசாயிகள் இடையிலான நேச அணியே பொதுவாக புரட்சியின் முதலாளித்துவத் தன் மையை வெளிக் காட்டுகிறது, ஏனெனில் விவசாயிகள் பொதுவாயும் பண்ட உற்பத்தி அடிப்படையில் வாழும் சிறு உற்பத்தியாளர்கள் ஆவர். மேலும், பாட்டாளி வர்க்கம் அரைப் பாட்டாளிகள் முழுவதையும் (எல்லா உழைக்கும் சுரண்டப்படும் மக்களையும்) தன் பக்கம் சேர்த்துக் கொண்டு நடுத்தர விவசாயிகளை நடுநிலைப்படுத்தி முதலாளித்துவ வர்க் கத்தை வீழ்த்தும்; இது ஒரு முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியில் இருந்து தனி வேறுபட்டதான ஒரு சோஷ லிஸ்டுப் புரட்சியாகும் எனவும் அப்போதுதான் போல்ஷி விக்குகள் சேர்த்துக்குறிப்பிட்டார்கள். (1905ல் வெளியிடப் பட்டு 1907ல் பீடர்ஸ்பர்க்கில் பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் எனும் தலைப்புடைய தொகுதியில் மறுபதிப்புச் செய்யப் பட்டதுமான இரண்டு போர்த்தந்திரங்கள்* எனும் எனது பிரசுரம் பார்க்க.)

இந்தச் சர்ச்சையில் காவுத்ஸ்கி 1905ல் மறைமுகமாகப் பங்கு கொண்டார்.[56] அப்போது மென்ஷிவிக்காக இருந்த பிளெஹானவ் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது அவர் முக்கியமாயும் பிளெஹானவுக்கு எதிரான ஒரு கருத் தை வெளியிட்டார். இது அந்த சமயத்தில் போல்ஷிவிக்

---

* இதே பதிப்பு, தொகுதி 3, பக்கங்கள் 15-214.— ப-ர்.

பத்திரிகைகளில் பிரத்தியேகமாயும் நகைப்புக்கிடமாயிற்று. ஆனால் இப்போது அந்தக் காலத்திய சர்ச்சைகள் பற்றி காவுத்ஸ்கி ஒரு வார்த்தை கூட சொல்வது இல்லை (தமது சொந்த அறிவிப்புகளாலேயே அவரை அம்பலப்படுத்துவோம் என்ற அச்சத்தால்!). இதன் வழி, இந்த விஷயத்தின் சாரத்தை ஜெர்மன் வாசகர் புரிந்து கொள்வதை அறவே சாத்தியமற்றதாகச் செய்கிறார். 1905ல் தாம் தொழிலாளர்கள் மிதவாத முதலாளிகளுடன் அன்றி, விவசாயிகளுடன் நேச அணி அமைப்பதை ஆதரித்ததையும், இந்த நேச அணியை எந்த நிபந்தனைகளின் பேரில் ஆதரித்தார் எனவும், இதற்காக அவர் என்ன வேலைத்திட்டத்தை வகுத்து முன்வைத்தார் என்றும் திரு. காவுத்ஸ்கி 1918ல் ஜெர்மன் தொழிலாளர்களிடம் சொல்ல முடியாது.

தமது பழைய நிலையில் இருந்து பின் மாறி நிற்கும் காவுத்ஸ்கி ஒரு ''பொருளாதார பகுத்தாய்வு'' எனும் வேடத்தில் ''வரலாற்று பொருள்முதல்வாதம்'' குறித்துப் பெருமையுடன் பேசிக் கொண்டே இப்போது முதலாளித்துவ வர்க்கத்திடம் தொழிலாளர்கள் கீழடங்குவதை ஆதரிக்கிறார், மென்ஷிவிக் மாஸ்லவினது மேற்கோள்களின் உதவியுடன் மென்ஷிவிக்குகளின் பழைய மிதவாதக் கருத்துக்களை அசை போடுகிறார். அதோடு ருஷ்யாவின் பின்தங்கிய நிலை பற்றிய புதிய கருத்தை நிரூபிப்பதற்கே மேற்கோள்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இந்த புதிய கருத்தில் இருந்து பெறப்படும் முடிவு, ஒரு முதலாளித்துவப் புரட்சியில் எவரும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு அப்பால் சென்றுவிடக் கூடாது எனும் பழைய முடிவேயாகும்! பிரான்சில் 1789-93ல் நடந்த முதலாளித்துவப் புரட்சியினை 1848ல் ஜெர்மனியில் நடைபெற்ற முதலாளித்துவப் புரட்சியுடன் ஒப்பிடும் போது மார்க்சும் எங்கெல்சும் கூறியவை[57] எல்லாம் இருந்தும் இந்த முடிவு!

காவுத்ஸ்கியின் பிரதான ''வாதத்துக்கும்'' ''பொருளாதார பகுத்தாய்வின்'' முக்கியமான உள்ளடக்கத்துக்கும் கடந்து செல்வதற்கு முன்னால், காவுத்ஸ்கியின் முதல் வாக்கியங்களே சிந்தனையின் ஒரு விசித்திரமான குழப்பத்தை

அல்லது ஒரு ஆழமற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன என்பதை நாம் குறித்துக் கொள்ள வேண்டும்:

''விவசாயம், குறிப்பாகச் சிறு விவசாய சாகுபடி முறையே இன்று வரை ருஷ்யாவின் பொருளாதார அடித்தளத்தை உருவகப்படுத்தி உள்ளது. மக்கள் தொகையில் சுமார் ஐந்தில் நான்கு பங்கு, ஒரு வேளை ஆறில் ஐந்து பங்கும் கூட அதன் மூலமே வாழ்கிறது'' (பக்கம் 45) என்று நமது ''தத்துவாளர்'' சாற்றுகிருர். என் அருமைத் தத்துவாளரே, எல்லாவற்றுக்கும் முதலாக இந்தத் திரளான சிறு உற்பத்தியாளர்கள் மத்தியில் எத்தனை சுரண்டலாளர்கள் இருக்கிருர்கள் என்பதைக் கவனித்தீர்களா? நிச்சயமாயும் மொத்தத்தில் பத்தில் ஒரு பங்குக்கு அதிகமாக இல்லை, நகரங்களில் இன்னும் குறைவே, ஏனெனில் அங்கு பெருவீத உற்பத்தி அதிக உயர் வளர்ச்சி அடைந்துள்ளது. நம்பற்கரியதான மிகவும் உயர்வான எண்ணிக்கையை கூட எடுத்துக் கொள்ளுங்கள். ஐந்தில் ஒரு பங்கு சிறு உற்பத்தியாளர்கள் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்ட சுரண்டலாளர் என்று அனுமானித்துக் கொள்ளுங்கள். அப்போதும் கூட சோவியத்துகளின் ஐந்தாவது காங்கிரசில் போல்ஷிவிக்குகள் கொண்டிருந்த 66 சதவிகித வாக்குகள் மக்கள் தொகையின் பெரும்பான்மையைப் பிரதிநிதித்துவப்படுத்தின. சோவியத் ஆட்சி அதிகாரத்திற்கு ஆதரவாக இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் கணிசமான பகுதி எப்போதும் இருந்து வந்தது என்பதை இதோடு சேர்த்துக் கொள்ள வேண்டும், அதாவது கோட்பாட்டு அளவில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் எல்லோரும் சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு ஆதரவாக இருந்தார்கள். 1918 ஜூலையில் அவர்களில் ஒரு பிரிவினர் மூடத் துணிச்சல் கலகத்தைத் தொடங்கிய போது பழைய கட்சியில் இருந்து ''நரோத்னிக் கம்யூனிஸ்டுகள்'' மற்றும் ''புரட்சிகரக் கம்யூனிஸ்டுகள்''[58] எனும் இரண்டு புதிய கட்சிகள் பிரிந்து சென்றன (பழைய கட்சியால் அரசாங்கத்தில் முக்கியமான பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட தலைமையான இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளரிடை முதலில் குறிப்பிட்ட

பிரிவில் ஸாக்சும், இரண்டாவதில் கொலிகாயெவும் உதாரண மாகக் குறிப்பிடப்படலாம்). எனவே போல்ஷிவிக்குகளுக்கு மக்கள் தொகையின் சிறுபான்மையின் ஆதரவு மட்டுமே இருந்தது என்ற கேலிக்குரிய கட்டுக்கதையினை காவுத்ஸ்கி தாமே—தம்மை அறியாமலே!—மறுதலித்தார்.

இரண்டாவதாக, எனது அருமைத் தத்துவாளரே, சிறு விவசாயி உற்பத்தியாளர் பாட்டாளி வர்க்கத்துக்கும் முத லாளித்துவ வர்க்கத்துக்கும் இடையே தவிர்க்கவொண் ணுதபடி ஊசலாடுகிறுர் எனும் மெய்நடப்பை கவனித்தீர் களா? ஐரோப்பாவின் நவீன கால வரலாறு முழுவதாலும் உறுதிப்படுத்தப்பட்டதான இந்த மார்க்சிய மெய்மையை காவுத்ஸ்கி மிகவும் வசதியாக ''மறந்து விட்டார்'', ஏனெ னில் அவர் திரும்பத்திரும்ப விடாது கூறிவரும் மென்ஷிவிக் ''தத்துவத்தை'' இது அறவே இடித்துத் தகர்த்துவிடுகிறது! காவுத்ஸ்கி இதனை ''மறந்துவிடாது'' இருப்பாராஞல் சிறு விவசாயி உற்பத்தியாளர் மேம்பட்டு இருக்கிற ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அவசியத்தை அவர் மறுத்திருக்க முடியாது. — — —

நமது தத்துவாளரின் ''பொருளாதார பகுத்தாய்வின்'' பிரதான உள்ளடக்கத்தைப் பரிசீலிப்போமாக.

சோவியத் ஆட்சி அதிகாரம் ஒரு சர்வாதிகாரம் என் பதை மறுக்க முடியாது என்கிறுர் காவுத்ஸ்கி. ''ஆனல் அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமா?'' (பக்கம் 34).

''சோவியத் அரசியல் சட்டப்படி சட்டமியற்றல் மற்றும் நிர்வாகத்தில் பங்கேற்கும் உரிமை உடைய மக்கள் தொகை யில் பெரும்பான்மையாக இருப்பவர்கள் விவசாயிகள். நம்முன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்று வைக்கப் பட்டுள்ளது, நிலையுறுதியுடன் நடத்தி முடிக்கப்படுமாஞல், பொதுவாக ஒரு வர்க்கம் நேரடியாக சர்வாதிகாரத்தை செயல்படுத்தக் கூடுமாஞல்—இதை உண்மையில் ஒரு கட்சி மட்டுமே செயல்படுத்தக் கூடும்—இது ஒரு விவசாயிகளின் சர்வாதிகாரம்தான் என்பது நிரூபணமாகிறது'' (பக்கம் 35).

இத்துணை அறிவாழமும் சாமர்த்தியமுமான வாதம் குறித்து மிகவும் தற்பெருமை கொண்ட நமது நல்லவர்

காவுத்ஸ்கி நகைத்திறமுடன் சொல்ல முயல்கிறார்: ''சோஷலிசத்தின் ஆக வேதனையற்ற நிறைவேற்றம், அது விவசாயிகளின் கரங்களில் வழங்கப்படும் போது சிறந்த முறையில் உத்தரவாதம், செய்யப்படும் என்று தோன்றுகிறது'' (பக்கம் 35).

மிகமிக விவரித்தும் அரைமிதவாதி மாஸ்லவ் இடமிருந்து மிகவும் அறிவார்ந்த பல மேற்கோள்களைக் காட்டியும் நமது தத்துவாளர், விவசாயிகள் உயர்ந்த தானிய விலைகள், நகரத் தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலி ஆகியவற்றில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் எனும் புதிய கருத்தை நிரூபிக்கச் சிரமப்படுகிறார். இதற்கிடையே இந்தப் புதிய கருத்துக்களை விளங்க வைப்பது அதிகச் சலிப்பூட்டும் அளவுக்கு நமது ஆசிரியர் போருக்குப் பிந்திய கட்டத்தின் உண்மையிலேயே புதியதான அம்சங்கள் விஷயத்தில், உதாரணமாக விவசாயிகள் தமது தானியங்களுக்கு பணத்திற்குப் பதில் பண்டங்களைக் கோருவது, அவர்களிடம் போதிய அளவு விவசாயக் கருவிகள் இல்லாமை, எவ்வளவு பணம் கொடுத்தாலும் இவற்றைப் போதுமான அளவுக்குப் பெற முடியாத நிலை போன்றவை பற்றி மேலும் குறைவான கவனம் செலுத்துகிறார். இது குறித்துப் பின்னால் அதிகமாக விவரிப்போம்.

இவ்வாறு காவுத்ஸ்கியானவர், சர்வாதிகாரத்தை, சோஷலிசத்தை சாதனையாக்கும் பணியினை குட்டி முதலாளித்துவ விவசாயிகளிடம் சரணடைத்து விட்டதாக, பாட்டாளி வர்க்கக் கட்சியினரான போல்ஷிவிக்குகள் மீது பழிசாட்டுகிறார். மிகச் சிறந்தது, திரு. காவுத்ஸ்கி அவர்களே! உங்களது அறிவொளி சார்ந்த கருத்துப்படி, குட்டி முதலாளித்துவ விவசாயிகள் பால் பாட்டாளி வர்க்கக் கட்சியின் தோரணை எதுவாக இருக்க வேண்டும்?

இது குறித்து நமது தத்துவாளர் எதுவும் கூறுதிருப்பதே நல்லது என்று இருந்து விட்டார்: ''பேச்சு வெள்ளி, மவுனம் பொன்னாகும்'' எனும் பழமொழியை மனதிற் கொண்டு இருந்தார் போலும். ஆனால் பின்வரும் வாதம் மூலம் அவர் தம்மைத் தாமே காட்டிக்கொடுத்து விடுகிறார்:

''சோவியத் குடியரசின் துவக்கத்தில் விவசாயிகளின் சோவியத்துகள் பொதுவாயும் **விவசாயிகளின்** நிறுவனங்களாக இருந்தன. இப்போது இந்தக் குடியரசு, சோவியத்துகள் பாட்டாளிகள் மற்றும் ஏழை விவசாயிகளின் நிறுவனங்கள் என்று சாற்றுகிறது. வசதிபடைத்த விவசாயிகளுக்கு சோவியத்துகளுக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது. இங்கு ஏழை விவசாயி ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்'' கீழில் ஆன சோஷலிஸ்டு நிலச் சீர்திருத்தங்களின் நிரந்தரமான பெருந்திரளான விளைவு என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறுன்'' (பக்கம் 48).

எத்தகை கொடிய வஞ்சப் புகழ்ச்சி! ருஷ்யாவில் இருக்கும் எந்த முதலாளித்துவ வர்க்கத்தினரிடம் இருந்தும் இதைக் கேட்கலாம்: ஏழை விவசாயிகள் இருப்பதை சோவியத் குடியரசு பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறது என்ற மெய்மையை அவர்கள் ஏளனம் செய்து அவல மகிழ்வு கொள்கிறுர்கள். அவர்கள் சோஷலிசத்தைக் கேலி செய்கிறுர்கள். அது அவர்களின் உரிமை. ஆனுல், நான்கு ஆண்டுகள் நடந்த மிகவும் நாசகரமான போருக்குப் பிறகு ருஷ்யாவில் ஏழை விவசாயிகள் இருப்பதை (நீண்ட காலம் இன்னும் இருப்பார்கள்) ஏளனம் செய்யும் ஒரு ''சோஷலிஸ்டு''—அத்தகைய ஒரு ''சோஷலிஸ்டு'' முற்ற முழு துரோகம் நிகழ்ந்த ஒரு காலத்தில் மட்டுமே பிறக்க முடியும்.

மேலே செல்வோம்:

''சோவியத் குடியரசு செல்வந்த மற்றும் ஏழை விவசாயிகள் இடையேயான உறவுகளில் தலையிடுகிறது, ஆனுல் நிலத்தை மறுபங்கீடு செய்யாமலே தலையிடுகிறது. நகரங்களில் இருக்கும் ரொட்டி முட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு வேண்டி, செல்வந்த விவசாயிகளின் உபரியான தானிய ஸ்டாக்குகளை எடுத்துக் கொள்வதற்காக நாட்டுப்புறப் பகுதிகளுக்கு ஆயுதமேந்திய தொழிலாளர் படைப்பிரிவுகள் அனுப்பப்படுகின்றன. இந்த ஸ்டாக்குகளில் ஒரு பகுதி நகரப்புற மக்களுக்கும் மற்ற பகுதி ஏழை விவசாயிகளுக்கும் தரப்படுகிறது'' (பக்கம் 48).

சோஷலிஸ்டும் மார்க்சியவாதியுமான காவுத்ஸ்கி இத்தகைய நடவடிக்கை பெரிய நகரங்களின் சுற்றுப்புறங்களுக்கும் அப்பால் விஸ்தரிக்கப்படுகிறது (இதை நாம் நாடு

முழுவதற்கும் விஸ்தரித்திருக்கிறோம்) எனும் கருத்தைக் கண்டு ஆழ்ந்த ஆத்திரம் அடைகிறார். ஓர் அற்பவாதியின் இணையற்ற, ஒப்புமையற்ற, மெச்சத்தகுந்த அமைதியுடன் (அல்லது மூடத்தனத்துடன்) சோஷலிஸ்டும் மார்க்சிய வாதியுமான காவுத்ஸ்கி உபதேசிக்கிறார்: ''...இது (வசதி படைத்த விவசாயிகளின் உடைமை நீக்கம்) உற்பத்தி நடைமுறைப் போக்கில் அமைதிக் குலைவுக்கும் உள்நாட்டுப் போருக்குமான ஒரு புதிய கூறினைப் புகுத்துகிறது...'' (உற்பத்தி நடைமுறைப் போக்கில் உள்நாட்டுப் போராம்—இது இயற்கைக்கு அதீதமானது!) ''...உற்பத்தி முறைக்கு அதன் மீட்சிக்கு அமைதியும் பாதுகாப்பும் அவசரமாகத் தேவைப் படுகின்றன'' (பக்கம் 49).

ஓ, ஆமாம், நிச்சயமாயும் மார்க்சியவாதியும் சோஷலிஸ்டுமான காவுத்ஸ்கி சுரண்டலாளர்களுக்கும் தமது உபரிஸ்டாக்குகளைப் பதுக்கிவைத்து, தானிய ஏகபோகச் சட்டத்தினை நாசம் செய்து, நகரப்புற மக்களைப் பஞ்சத்தில் ஆழ்த்தும் தானியக் கொள்ளை லாபக்காரர்களுக்கும் அமைதியும் பாதுகாப்பும் வேண்டும் என்று தேம்பிக் கண்ணீர் விட வேண்டுந்தான். ''நாங்கள் எல்லோரும் சோஷலிஸ்டுகள், மார்க்சியவாதிகள் மற்றும் சர்வதேசியவாதிகள்'' என்று காவுத்ஸ்கிகள், ஹென்ரிஹ் வெபர்கள் (வியன்னா), லொங்கேகள் (பாரிஸ்), மாக்டொனால்டுகள் (லண்டன்) ஆகியோர் கூட்டிசை பாடுகிறார்கள். ''நாங்கள் எல்லோரும் ஒரு தொழிலாளி வர்க்கப் புரட்சியை ஆதரிக்கிறோம், ஆனால்.... தானிய லாபக் கொள்ளையடிப்போர் அமைதியிலும் பாதுகாப்பிலும் தலையிடாத ஒரு புரட்சியை மட்டுமே விரும்புகிறோம்! ''உற்பத்தி நடைமுறைப் போக்கு'' எனும் ஒரு ''மார்க்சியக்'' குறிப்பு மூலம் முதலாளிகளிடம் இந்த மோசமான அடிமைப்படுதலை மூடிமறைக்கிறோம்...'' இது மார்க்சியமானால் முதலாளிகளிடம் அடிமைப்படுதல் என்பது என்னவோ?

நமது தத்துவாளர் என்ன முடிவுக்கு வருகிறார் என்பதைப் பாருங்கள். விவசாயிகளின் சர்வாதிகாரத்தைப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக முன்வைப்பதாக போல்ஷி

விக்குகள் மீது பழி சாட்டுகிறார். ஆனால் அதே சமயம், கிராமப்புற மாவட்டங்களில் நாம் உள்நாட்டுப் போரைப் புகுத்துவதாயும் (இது நமக்குப் பெருமை தருவது என்று கருதுகிறோம்) ஆயுதமேந்திய தொழிலாளர் படைப் பிரிவுகளை நாட்டுப்புறங்களுக்கு அனுப்பி வைப்பதாயும் குற்றம் சாட்டுகிறார். இத்தொழிலாளர்கள் ''பாட்டாளி வர்க்கம் மற்றும் ஏழை விவசாயிகளின் சர்வாதிகாரத்தை'' செயல்படுத்துவதாகப் பகிரங்கமாகப் பறை சாற்றுகின்றனர், ஏழை விவசாயிகளுக்கு உதவுகின்றனர், கொள்ளை லாபக்காரர்களிடம் இருந்தும் செல்வந்த விவசாயிகளிடம் இருந்தும் அவர்கள் தானிய ஏகபோகச் சட்டத்தை மீறிப் பதுக்கி வைத்திருக்கும் உபரி தானிய ஸ்டாக்குகளை பறிமுதல் செய்கின்றனர்.

ஒரு புறத்தில் நமது மார்க்சிய தத்துவாளர் தூய ஜனநாயகத்தையும் உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் தலைவனான புரட்சிகர வர்க்கத்தை மக்கள் தொகையின் பெரும்பான்மைக்கு (விளைவாக இதில் சுரண்டலாளர்களும் அடக்கம்) கீழடக்குவதையும் ஆதரித்து நிற்கிறார். மறு பக்கத்தில், நமக்கு எதிரான ஒரு வாதம் என்ற முறையில் புரட்சி தவிர்க்க முடியாத வகையில் முதலாளித்துவத் தன்மை பெற்றிருக்க வேண்டும்—முதலாளித்துவ தன்மை ஏனென்றால் விவசாயிகளின் வாழ்க்கை ஒட்டு மொத்தத்தில் முதலாளித்துவ சமூக உறவுகளையே அடிப்படையாக்கியதாம்—என்று விளக்குகிறார். அதே சமயம் பாட்டாளிகளின், வர்க்கத் தன்மை வாய்ந்த, மார்க்சிய கருத்து நிலையை ஆதரிப்பதாக வேடம் போடுகிறார்!

''பொருளாதாரப் பகுத்தாய்வு''க்குப் பதில் நமக்கு ஒரு முதல்தரமான கலவைக் கூளம் கிடைக்கிறது. மார்க்சியத்துக்குப் பதில் துண்டுதுக்காணியான மிதவாத போதனைகளும் முதலாளித்துவ வர்க்கம் மற்றும் குலாக்குகளிடம் அடிப்படுவது குறித்த உபதேசங்களும் கிடைக்கின்றன.

காவுத்ஸ்கியால் இவ்வாறு சிக்கலாக்கப்பட்டுள்ள விஷயம் 1905லேயே போல்ஷிவிக்குகளால் முழுமையாகவும் விளக்கப்பட்டதாகும். ஆம், நாம் ஒட்டு மொத்தமாக விவ

சாயிகளுடன் சேர்ந்து முன்செல்லும் வரையில் நமது புரட்சியானது முதலாளித்துவப் புரட்சியே. இது நமக்கு அப்பட்டமாயும் தெட்டத் தெளிவாகத் தெரியும், 1905க்குப் பிறகு இதை நாம் நூறு, ஆயிரம் தடவைகள் கூறியிருக்கிறோம். வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் இந்த அவசியமான கட்டத்தைத் தாண்டிச் செல்லவோ அல்லது அரசாணைகள் போட்டு ஒழித்திடவோ நாம் என்றுமே முயன்றது கிடையாது. இந்த அம்சத்தில் நம்மை ''அம்பலப்படுத்த'' காவுத்ஸ்கி நடத்தும் முயற்சிகள் அவரது சொந்த மனக் குழப்பத்தையும் 1905ல், இன்னும் அவர் ஓடுகாலியாகாத போது, அவர் எழுதியதை இப்போது நினைவு கூர அவர் அஞ்சுவதையுமே அம்பலப்படுத்துகின்றன.

இருப்பினும் அக்டோபர் புரட்சிக்கு நீண்ட கால முன்பே நாம் ஆட்சி அதிகாரம் மேற்கொள்வதற்கு நெடுங்கால முன்பே 1917 ஏப்ரல் உடன் தொடங்கி நாம் பகிரங்கமாகப் பறை சாற்றி மக்களிடம் விளக்கியதாவது: புரட்சி இந்த கட்டத்தில் நின்று விட முடியாது, ஏனெனில் நாடு முன்னேக்கி முன்னேறியுள்ளது, முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்துள்ளது, நாசம் கற்பனை செய்ய முடியாத அளவுகளை எட்டிவிட்டது, இது (ஒருவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்) சோஷலிசத்தை நோக்கி முன்னேறும் நடவடிக்கைகளை நிச்சயமாகக் கோரும். ஏனெனில் முன்னேறுவதற்கும், போரால் சோர்வுற்ற நாட்டைக் காக்கவும், உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் துன்பங்களைத் தணிக்கவும் வேறு வழி எதுவும் இல்லை.

காரியங்கள் எவ்வாறு மாறும் என்று நாம் சொன்னேமோ அதே போன்று மாற்றம் அடைந்துள்ளன. புரட்சி மேற்கொண்ட செல்வழி நமது அறிவாய்வின் பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்தி உள்ளது. முதலில் ''ஒட்டு மொத்தமான'' விவசாயிகள் உடன் முடியரசுக்கு எதிராக, நிலப்பிரபுக்களுக்கு எதிராக, மத்திய கால நிலைமைகளுக்கு எதிராக (அந்த அளவுக்கு புரட்சி முதலாளித்துவத் தன்மையது, முதலாளித்துவ-ஜனநாயகத் தன்மையுடையது). பிறகு, ஏழை விவசாயிகளுடன், அரைப் பாட்டாளிகளுடன்,

சுரண்டப்படும் அனைவருடன் முதலாளித்துவத்துக்கு எதிராக, கிராமப்புறச் செல்வந்தர், குலாக்குகள், கொள்ளை லாபக் காரர்கள் அடங்கலாக, இந்த அளவுக்கு புரட்சி ஒரு சோஷலிஸ்டு புரட்சியாகிறது. முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையே ஒரு செயற்கையான சீனச் சுவரை எழுப்ப முயல்வதோ, பாட்டாளி வர்க்கத்தின் தயார் நிலையின் அளவு மற்றும் ஏழை விவசாயிகளுடனான அதன் ஒற்றுமையின் அளவு என்பதைத் தவிர்த்து வேறு எதனைக் கொண்டாவது இவற்றைப் பிரிப்பதோ மார்க்சியத்தை பயங்கரமாகப் புரட்டுவதாகும், அதைக் கொச்சைப்படுத்துவதாகும், அதன் இடத்தில் மிதவாதத்தை பதிலீடு செய்வதாகும். இதன் பொருள், மத்திய கால நிலைமைகளுடன் ஒப்பு நோக்கில் முதலாளித்துவம் முற்போக்குத் தன்மை கொண்டிருப்பதாகப் போலித்தனமான விஞ்ஞானக் குறிப்புகளைத் தருவது மூலம், சோஷலிஸ்டு பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக முதலாளித்துவ வர்க்கத்துக்குச் சாதகமான பிற்போக்கான ஆதரிப்புவாதங்களைக் கள்ளத்தனமாகப் புகுத்துவதாகும்.

தொழிலாளர் மற்றும் விவசாயிகள் திரளை ஒற்றுமைப்படுத்தி அரசியல் வாழ்க்கைக்குள் ஈர்ப்பது மூலம் சோவியத்துகள் அளவு கடந்த உயர் வடிவமும் மாதிரியும் படைத்த ஜனநாயகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ''மக்களுடன்'' மிகவும் நெருங்கியதான (1871ல் மெய்யான மக்கள் புரட்சி[59] குறித்து மார்க்ஸ் பேசியதன் அர்த்தத்தில்), மக்களின் அரசியல் மற்றும் வர்க்க முதிர்ச்சியின் பெருக்கத்தையும் வளர்ச்சியையும் குறித்த மிகவும் நுட்பப்பாடுள்ள அளவுமானியாகச் செயல்படுகின்றன. ஏதோ ஒரு ''திட்டப்படி'' சோவியத் அரசியல் சட்டம் வகுக்கப்படவில்லை, அது ஒரு படிப்பறைக்குள் வகுக்கப்பட்டு முதலாளித்துவ வழக்கறிஞர்களால் மக்கள் மீது திணிக்கப்படவில்லை. இல்லை, வர்க்கப் பகைமைகள் முதிர்ச்சி அடைந்ததன் சமவீதத்தில் வளர்ச்சியுற்ற வர்க்கப் போராட்டத்தின் செல்வழியில் இந்த அரசியல் சட்டம் முளைத்து எழுந்தது. காவுத்ஸ்கி தாமே ஒப்புக்கொள்ள வேண்டியுள்ள அதே மெய்விவரங்கள் இதை நிரூபிக்கின்றன.

ஆரம்பத்தில் சோவியத்துகள் விவசாயிகளை ஒட்டுமொத்தமாக அரவணைத்தன. ஏழை விவசாயிகளின் முதிர்ச்சி இன்மை, பின்தங்கிய நிலை, அறியாமை காரணமாகவே தலைமையானது குலாக்குகள், செல்வந்தர், முதலாளிகள், குட்டி முதலாளித்துவ அறிவுஜீவிகள் கரங்களுக்குப் போய்விட்டது. அது குட்டி முதலாளித்துவ வர்க்கம், மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் ஆதிக்கம் வகித்த காலகட்டம் (இவர்களை சோஷலிஸ்டுகள் என்று முட்டாள்கள் அல்லது காவுத்ஸ்கி போன்ற ஓடுகாலிகள் மட்டுமே கருதலாம்). குட்டி முதலாளித்துவ வர்க்கம், முதலாளித்துவ சர்வாதிகாரம் (கேரென்ஸ்கி, கர்னீலவ், சாவின்கவ்) மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இவற்றுக்கு இடையே வேறு வழி இன்றியும் தவிர்க்க முடியாத வகையிலும்ஊசலாடியது. ஏனெனில், அதன் பொருளாதார நிலைமையின் அடிப்படை இயல்புகள் காரணமாக குட்டி முதலாளித்துவ வர்க்கம் சுயேச்சையாக எதையும் செய்யும் ஆற்றல் இல்லாதது. இதற்கிடையில், முதலாளித்துவ வர்க்கத்துக்குத் தமது ஆதிக்கத்தை மூடிமறைப்பதற்கான ஒரு திரையாகவும், மக்களை ஏமாற்றும் ஒரு சாதனமாகவும் பயன்படுகிற ''ஜனநாயகம்'' குறித்த ஒரு சட்ட மற்றும் சம்பிரதாயமான கருத்துரு அளவுக்கு ருஷ்யப் புரட்சி பற்றிய தமது பகுத்தாய்வை கட்டுப்படுத்திக் கொள்வது மூலமும், நடைமுறையில் ''ஜனநாயகம்'' சில சமயம் முதலாளித்துவ சர்வாதிகாரம், சில சமயம் அந்த சர்வாதிகாரத்துக்கு கீழடங்கும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் ஆண்மையற்ற சீர்திருத்தவாதம் ஆகியவற்றைக் குறிக்கிறது என்பதை மறந்து போயும் காவுத்ஸ்கி மார்க்சியத்தை முழுமையாகக் கைவிட்டுவிடுகிறார். காவுத்ஸ்கியின் கருத்துப்படி, ஒரு முதலாளித்துவ நாட்டில் முதலாளித்துவக் கட்சிகள் இருந்தன, பாட்டாளிகள் திரளின் பெரும்பான்மைக்கு தலைமை தாங்கிய ஒரு பாட்டாளி வர்க்க கட்சி (போல்ஷிவிக்குகள்) இருந்தது, ஆனால் குட்டி முதலாளித்துவ கட்சிகள் அங்கே இருக்கவில்லை! மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கு வர்க்க வேர்கள் இருக்கவில்லை, குட்டி முதலாளித்துவ வேர்கள் இல்லை!

குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின், மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் ஊசலாட்டங்கள் மக்களுக்கு அறிவொளியூட்ட உதவின, அவர்களில் மிகப் பெரிய பெரும்பான்மையை, எல்லா ''கீழ்மட்டப் பகுதிகளை'', எல்லாப் பாட்டாளிகளை, அரைப் பாட்டாளிகளை இத்தகைய ''தலைவர்களிடம்'' இருந்து விலக்கி நிறுத்த உதவின. போல்ஷிவிக்குகள் சோவியத்துகளில் பேராதிக்கம் பெற்றார்கள் (1917 அக்டோபருக்குள் பெத்ரோகிராதிலும் மாஸ்கோவிலும்); சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகள் மத்தியில் பிளவு மேலும் முனைப்புடையதாயிற்று.

வெற்றிவாகை சூடிய போல்ஷிவிக் புரட்சி ஊசலாட்டத்துக்கு முடிவு கட்டியது, முடியரசு மற்றும் நிலப்பிரபுத்துவ நிலச் சொத்து முறையை முழுமையாக அழித்தொழித்தது (பின்னது அக்டோபர் புரட்சிக்கு முன்னால் அழிக்கப்பட்டிருக்கவில்லை). நாம் முதலாளித்துவப் புரட்சியை அதன் கடை முடிவு வரை நடத்தி முடித்தோம். விவசாயிகள் ஒட்டுமொத்தமாக நம்மை ஆதரித்தார்கள். சோஷலிஸ்டு பாட்டாளி வர்க்கத்தின் பாலான அவர்களது பகைமை ஒரே அடியில் தன்னை வெளிக் காட்டிக் கொள்ள இயலவில்லை. சோவியத்துகள் விவசாயிகளைப் பொதுவாக ஒற்றுமைப்படுத்தின. விவசாயிகள் மத்தியிலான வர்க்கப் பிரிவுகள் இன்னும் பக்குவம் பெறவில்லை, இன்னும் வெளியரங்கத்துக்கு வரவில்லை.

அந்த நிகழ்ச்சிப் போக்கு 1918 கோடை மற்றும் முன் பனிக் காலத்தில் நடந்தது. செக் எதிர்ப்புரட்சிக் கலகம் குலாக்குகளை எழுச்சியுற வைத்தது. ருஷ்யா முழுதும் குலாக்குகளின் கலகங்கள் அலைமோதின. ஏழை விவசாயிகள், தமது நலன்கள் குலாக்குகள், செல்வந்தர்கள், கிராமப்புற முதலாளிகளின் நலன்களுடன் இணைக்கப்படுத்த முடியாதபடி பகைமையானவை என்பதை புத்தகங்கள், செய்திப் பத்திரிகைகளில் இருந்து படித்தறியவில்லை, மாறாக வாழ்க்கையில் இருந்தே படித்தறிந்து கொண்டார்கள். இதர குட்டி முதலாளித்துவ கட்சி எதையும் போலவே இடது

சாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மக்களின் ஊசலாட்டங்களைப் பிரதிபலித்தார்கள், 1918 கோடையில்தான் அவர்களிடையே பிளவு ஏற்பட்டது. ஒரு பிரிவு செக்குகளுடன் அணி சேர்ந்தது (மாஸ்கோவில் கலகம், புரோஷ்யான் அஞ்சல் அகத்தை—ஒரு மணி நேரமாக!—கைப்பற்றி போல்ஷிவிக்குகள் வீழ்த்தப்பட்டதாக ருஷ்யாவுக்கே அறிவித்தார்; பிறகு செக்குகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த சைனியத்தின் தலைமைத் தளபதி முரவியோவ் துரோகச் செயல் இத்தியாதி), அதே போதில் மேலே குறிப்பிடப்பட்டதான மறு பிரிவு போல்ஷிவிக்குகளுடன் இருந்தது.

நகரங்களில் அதிகரித்து வந்த உணவுத் தட்டுப்பாடு தானிய ஏகபோகம் சம்பந்தமான பிரச்சினைக்கு அதிக அவசர முக்கியத்துவம் அளித்தது (இதைத் தமது பொருளாதாரப் பகுத்தாய்வில் தத்துவாளர் காவுத்ஸ்கி முற்றாக ''மறந்துவிட்டார்'', அது மாஸ்லவின் கட்டுரைகளில் இருந்து பத்து வருடங்களுக்கு முன்னால் பொறுக்கிச் சேர்க்கப்பட்ட வெற்றுரைகளின் வெறும் மறுபகர்ப்பே!).

பழைய நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ அரசு, ஜனநாயகக் குடியரசுவாத அரசு கூட கிராமப்புற மாவட்டங்களுக்கு ஆயுதப் படைப் பிரிவுகளை அனுப்பியிருந்தது, அவை உண்மையில் முதலாளித்துவ வர்க்கம் இட்ட பணியைச் செய்யக் காத்திருந்தன. திரு. காவுத்ஸ்கிக்கு இது தெரியாது! அதை ''முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரம்'' என்று அவர் கருதவில்லை—ஆண்டவன் தவிர்ப்பாராக! ஒரு முதலாளித்துவ நாடாளுமன்றத்தால் விசேஷமாயும் உறுதி செய்யப்படுமானால் அது ஒரு ''தூய ஜனநாயகம்''! 1917 கோடை மற்றும் முன்பனிக் காலத்தில் அவ்க்சேன்தியெவ் மற்றும் எஸ். மாஸ்லவ் கேரென்ஸ்கிகள், தெஸெரெத்தேலிகளுடன் இதர சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து நிலக் கமிட்டிகளின் உறுப்பினர்களைக் கைது செய்தார்கள் என்பதையும் காவுத்ஸ்கி ''கேள்விப்படவில்லை'', அதைப் பற்றி அவர் ஒரு வார்த்தைகூடச் சொல்வது இல்லை!

ஒரு ஜனநாயகக் குடியரசு மூலமாக முதலாளித்துவ

வர்க்க சர்வாதிகாரத்தை செயல்படுத்திவரும் ஒரு முதலாளித்துவ அரசு, அது முதலாளிகளுக்கு சேவை செய்து வருகிறது என்பதை மக்களிடம் ஒப்புக் கொள்ள முடியாது, அது உண்மையைச் சொல்ல முடியாது, அது போலிவேடம் போட்டே தீர வேண்டும் என்பதே இங்குள்ள முழு விவகாரமும் ஆகும்.

ஆனால் பாரிஸ் கம்யூன் மாதிரியான அரசு, சோவியத் அரசு மக்களிடம் உண்மையைப் பகிரங்கமாயும் நேரிடையாக மனம் விட்டும் கூறுகிறது, அது பாட்டாளி வர்க்கம் மற்றும் ஏழை விவசாயிகளின் சர்வாதிகாரம் என்று சாற்றுகிறது, இந்த மெய்மையின் மூலம் எந்த ஒரு ஜனநாயகக் குடியரசிலும் கீழடக்கி வைக்கப்பட்டிருக்கும் கோடிக் கணக்கான புதிய குடிமக்களின் ஆதரவைப் பெறுகிறது. இந்தக் குடிமக்கள் அரசியல் வாழ்வுக்குள், ஜனநாயகத்திற்குள், அரசின், சோவியத்துகளின் ஆட்சி நிர்வாகத்திற்குள் ஈர்க்கப்படுகின்றனர். சோவியத் குடியரசு தலைநகர்களில் இருந்து ஆயுதமேந்திய தொழிலாளர், பிரதானமாயும் மிகவும் முன்னேறிய தொழிலாளர்களின் படைப் பிரிவுகளை கிராமப்புற மாவட்டங்களுக்கு அனுப்புகிறது. இந்தத் தொழிலாளர்கள் நாட்டுப்புறப் பகுதிகளுக்கு சோஷலிசத்தைக் கொண்டு செல்கிறார்கள், ஏழை மக்கள் ஆதரவைப் பெற்று அவர்களை ஒழுங்கமைத்தும் அவர்களுக்கு அறிவொளி புகட்டியும் முதலாளித்துவ வர்க்கத்தினரின் எதிர்ப்பை அடக்குவதற்கு அவர்களுக்கு உதவுகிறார்கள்.

நிலைமையைப் பற்றித் தெரிந்த அனைவரும் நாட்டுப்புற மாவட்டங்களில் வாழ்ந்து இருந்தவர்களான அனைவரும், 1918 கோடை மற்றும் முன்பனிக் காலத்தில் மட்டுமே நாட்டுப்புற மாவட்டங்கள் ''அக்டோபர்'' (அதாவது பாட்டாளி வர்க்க) புரட்சியைத் தம்மளவில் கடந்து சென்று கொண்டிருக்கின்றன என்று சாற்றுகிறார்கள். காரியங்கள் மாற்றமடையத் தொடங்கியுள்ளன. குலாக்குகள் கலகங்களின் அலைவீச்சு ஏழை மக்களின் எழுச்சிக்கு, ''ஏழை விவசாயிகள் கமிட்டி''களின்[60] வளர்ச்சிக்கு இடம் கொடுத்தது. சைனியத்தில் கமிசார்கள், அதிகாரிகள், சேனைப் பிரிவு

களின் தலைவர்கள் ஆகிய பதவிகளுக்குத் தொழிலாளர்கள் நியமிக்கப்படுவது அதிகரித்து வருகிறது. 1918 ஜூலை நெருக்கடியாலும்[61] முதலாளித்துவ வர்க்கதிதின் ஓலத்தாலும் அரண்டு போன எளிய மனத்தவரான காவுத்ஸ்கி அவர்கள் பின்னே "விடைச்சேவல்" போன்று ஓடிக்கொண்டிருந்த அதே நேரத்தில், போல்ஷிவிக்குகள் விவசாயிகளால் வீழ்த்தப்படும் தருணம் குறித்துத் திட நம்பிக்கையை வெளியிடும் ஒரு முழுப் பிரசுரத்தை எழுதி முடித்த சமயத்தில், இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் பிரிந்து சென்றதால் போல்ஷிவிக்குகளை ஆதரித்து வந்தவர்கள் வட்டம் "குறுகிவிட்டதாக" (பக்கம் 37) இந்த எளிய பேர்வழி கருதிய சமயத்தில்—அதே நேரத்தில் தான் போல்ஷிவிசத்தின் ஆதரவாளர்களின் மெய்யான வட்டம் மிக பேரளவாக விரிவடைந்து வருகிறது. ஏனெனில் பல லட்சக் கணக்கான கிராமத்து ஏழை மக்கள் குலாக்குகளின், கிராமப்புற முதலாளிகளின் கட்டுப்பாடு மற்றும் செல்வாக்கில் இருந்து தம்மைத்தாமே விடுவித்துக் கொண்டு சுயேச்சையான அரசியல் வாழ்வு நோக்கி எழுச்சியுற்று வருகிறார்கள்.

நூற்றுக் கணக்கான இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை, முதுகெலும்பற்ற அறிவுஜீவிகளை மற்றும் விவசாயிகள் மத்தியில் இருந்த குலாக்குகளை நாம் இழந்தோம், ஆனால் லட்சக் கணக்கான ஏழை மக்களின் ஆதரவைப் பெற்றோம்.*

தலைநகர்களில் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடைபெற்று ஓர் ஆண்டுக்குப் பிறகு, அதன் செல்வாக்கின் கீழும் அதன் உதவியுடனும் தொலைவில் இருந்த நாட்டுப்புற மாவட்டங்களிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சி தொடங்கியது, அது

---

* சோவியத்துகளின் ஆறாவது காங்கிரசில் (1918 நவம்பர் 6-9) வாக்குரிமையுள்ள 967 பிரதிநிதிகள் இருந்தார்கள். அவர்களில் 950 பேர் போல்ஷிவிக்குகள். அதற்கு மேல் 351 பேர் பேசும் உரிமையுடன் வாக்குரிமை இன்றி இருந்தனர். அவர்களில் 335 பேர் போல்ஷிவிக்குகள். அதாவது மொத்தப் பிரதிநிதிகளில் 97 சதவிகிதம் பேர் போல்ஷிவிக்குகள்.

சோவியத் ஆட்சி அதிகாரத்தையும் போல்ஷிவிசத்தையும் இறுதியாகக் கெட்டிப்படுத்தியது, இதை எதிர்க்கும் வலிமையுள்ள சக்தி நாட்டில் இல்லை என்பதும் இறுதியாக நிரூபணமாகியது.

ஒட்டு மொத்தமான விவசாயிகளுடன் சேர்ந்து முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைப் பூர்த்தி செய்து விட்ட ருஷ்யாவின் பாட்டாளிகள், நாட்டுப்புற மக்கள் தொகையைப் பிரிவினை செய்வதில் வெற்றி பெற்று, நாட்டுப்புறப் பாட்டாளிகள் மற்றும் அரைப் பாட்டாளிகளின் ஆதரவை வென்று பெற்று, அவர்களை குலாக்குகள் மற்றும் கிராமப்புற முதலாளிகள் உட்பட்ட முதலாளிகளுக்கு எதிராக ஒற்றுமைப்படுத்துவதில் வெற்றியடைந்து, இறுதியாக சோஷலிஸ்டுப் புரட்சியை நிறைவேற்றத் தொடங்கினார்கள்.

இப்போது, செல்வந்த விவசாயிகளுக்கு எதிராக கிராமப்புறத்து ஏழை மக்களைத் தம்மைச் சுற்றி அணி திரட்டுவது தலைநகர்களிலும் பெரிய தொழிற்துறை கேந்திரங்களிலும் இருந்த போல்ஷிவிக் பாட்டாளிகளால் இயலாது போயிருக்குமானல், இது ருஷ்யா சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் ''பக்குவமடையவில்லை'' என்பதை மெய்யாகவே நிரூபணம் செய்திருக்கும். அப்போது விவசாயிகள் ''முற்றிணைந்த முழுமையாக'' தொடர்ந்து இருந்திருப்பார்கள், அதாவது குலாக்குகள், செல்வந்தர் மற்றும் முதலாளிகளின் பொருளாதார, அரசியல் மற்றும் தார்மிகத் தலைமையின் கீழ் தொடர்ந்து இருந்திருப்பார்கள், அப்போது புரட்சி ஒரு முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் வரம்புகளைத் தாண்டியிராது. (ஆனல் இடைக் குறிப்பாக இதைச் சொல்லுவோம்: அவ்வாறே நிகழ்ந்த போதிலும், பாட்டாளிகள் ஆட்சி அதிகாரம் மேற்கொண்டிருக்கக் கூடாது என்று இது நிரூபித்திருக்காது, ஏனெனில் பாட்டாளி வர்க்கம் மட்டுமே முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை அதன் இறுதிவரை உண்மையில் நடத்தி முடித்திருக்கிறது, உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியை மேலும் நெருக்கமாகக் கொண்டுவருவதற்கு மெய்யாகவே முக்கியமான சிலவற்றை பாட்டாளி வர்க்கம் மட்டுமே செய்திருக்கிறது, பாட்டாளி வர்க்கம்

மட்டுமே சோவியத் அரசைப் படைத்து உருவாக்கியுள்ளது—இது பாரிஸ் கம்யூனுக்கு அடுத்தபடி சோஷலிஸ்டு அரசுக்கான இரண்டாவது படியாகும்.)

மறுபுறத்தில், போல்ஷிவிக் பாட்டாளிகள் நாட்டுப்புற மாவட்டங்களில் வர்க்கப் பாகுபாடுகள் ஏற்படுவதற்காகக் காத்திராமல், அதற்கான தயாரிப்புகள் செய்து அதைக் கொண்டுவர இயலாமல், ஓர் உள்நாட்டுப் போரை ''அரசாணை'' மூலம் உத்தரவிடவோ அல்லது நாட்டுப்புற மாவட்டங்களில் ''சோஷலிசத்தைப் புகுத்தவோ'' 1917 அக்டோபர்—நவம்பரிலேயே உடனடி முயற்சி செய்திருப்பார்களானல், பொதுவாக விவசாயிகளுடன் ஒரு தற்காலிக கூட்டணி இன்றியும், நடுத்தர விவசாயிகளுக்குச் சில சலுகைகளை வழங்காமலும் இவ்வாறு செய்ய முயற்சி செய்திருப்பார்களானல் அது மார்க்சியத்தை பிளாங்கிவாத முறையில்[62] புரட்டுவதாகும், சிறுபான்மை பெரும்பான்மையின் மீது தன் சித்தத்தை திணிக்கச் செய்யும் முயற்சியாகும். மேலும், பொதுவான விவசாயப் புரட்சி என்பது இன்னும் ஒரு முதலாளித்துவப் புரட்சியே என்பதையும், தொடர்ச்சியான சில இடைமாற்றங்கள், இடைமாற்ற கட்டங்கள் இல்லாமல் ஒரு பின்தங்கிய நாட்டில் அதை ஒரு சோஷலிஸ்டுப் புரட்சியாக மாற்றிட முடியாது என்பதையும் புரிந்து கொள்ளத் தவறிவிட்டதை வெளிக்காட்டும் ஒரு தத்துவார்த்த அபத்தமாகிவிடும்.

இந்த மிக முக்கியமான தத்துவார்த்த, அரசியல் பிரச்சினையில் காவுத்ஸ்கி எல்லாவற்றையும் போட்டுக் குழப்பியுள்ளார். நடைமுறையில் அவர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்து ஊளையிடும் முதலாளித்துவ வர்க்கத்தினரின் சேவகர் தவிர வேறு எதுவும் அல்ல என்பதை நிருபித்துவிட்டார்.

* * *

இன்னொரு மிகவும் அக்கறைகுரியதும் முக்கியமானதுமான பிரச்சினைக்குள்ளும் காவுத்ஸ்கி இதே போன்ற அல்லது

இதைவிட அதிகமான குழப்பத்தைப் புகுத்தியிருக்கிறார், அதாவது: சோஷலிஸ்டு சீர்திருத்தங்களில் வைத்து மிகவும் கடினமானதும் எனினும் மிகவும் முக்கியமானதுமான நிலச் சீர்திருத்தத் துறையில் சோவியத் குடியரசின் சட்டமியற்றும் நடவடிக்கைகள் சரியான கோட்பாடுகளை அடிப்படையாக்கியதா மற்றும் சரிவரச் செய்து முடிக்கப்பட்டதா? எந்த ஒரு மேற்கு ஐரோப்பிய மார்க்சியவாதியாவது மிகவும் முக்கியமான ஆவணங்களையாவது படித்தாராய்ந்த பிறகு நமது கொள்கை பற்றிய ஒரு விமர்சனம் வழங்கும் பட்சத்தில் நாம் அவருக்கு எல்லையற்ற கடப்பாடுடையவர்களாவோம். காரணம் அவர் அதன் மூலம் நமக்கு அளப்பரிய உதவி செய்தவராவார், உலகம் முழுதிலும் முதிர்ச்சியுற்று வரும் புரட்சிக்கும் உதவி செய்தவராவார். ஆனால் ஒரு விமர்சனத்திற்குப் பதில் காவுத்ஸ்கி நம்பற்கரிய தத்துவார்த்தக் குளறுபடியை உருவாக்கியுள்ளார். இது மார்க்சியத்தை மிதவாதமாக மாற்றுகிறது. நடைமுறையில் இவை போல்ஷிவிக்குகளை எதிர்த்த விஷமத்தனமான, கொச்சையான, அற்பவாத சாட்டுரைகளேயாகும். வாசகர் தானே தீர்ப்புக் கூறுவாராக:

''பெரிய நில எஸ்டேட்டுகளைப் பேணிக்காக்க முடியவில்லை. இது புரட்சியின் விளைவாகும். இது உடனே தெளிவாகத் தெரிந்தது. பெரிய எஸ்டேட்டுகளை விவசாயி மக்களுக்கு மாற்றி வழங்குவது தவிர்க்க முடியாததாகியது...'' (இது உண்மையல்ல திரு. காவுத்ஸ்கி அவர்களே. உங்களுக்குத் ''தெளிவாக'' இருப்பதை இப்பிரச்சினை மீதான பல்வேறு வர்க்கங்களின் தோரணைக்குப் பதிலீடு செய்கிறீர்கள். முதலாளிகள் மற்றும் குட்டி முதலாளிகள், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் கூட்டு அரசாங்கம் பெரிய நிலவுடைமைகளை பேணிக் காக்கும் ஒரு கொள்கையைப் பின்பற்றியது என்பதை புரட்சியின் வரலாறு புலப்படுத்தியுள்ளது. எஸ். மாஸ்லவின் மசோதாவாலும் நிலக் கமிட்டிகளின்[63] உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதாலும் இது குறிப்பாயும் நிரூபணமாயிற்று. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாமல் ''விவசாயி மக்கள்'' முதலாளி

களுடன் சேர்ந்து நின்ற நிலப்பிரபுக்களைத் தோற்கடித் திருக்க முடியாது.)

''...ஆனல் இது நடைபெற வேண்டிய வடிவங்கள் குறித்து ஒருமைப்பாடு இருக்கவில்லை. பல்வேறு தீர்வுகளைக் கருதிப் பார்க்க இயலும்...'' (அந்தப் பெயரால் யார் தம்மை அழைத்துக் கொண்ட போதிலும் அதனுல் பரவா யில்லை, ''சோஷலிஸ்டுகள்'' ''ஒருமைப்பாடு'' வேண்டும் என் பதில் காவுத்ஸ்கி அக்கறை கொண்டு இருக்கிருர். முதலாளித் துவ சமுதாயத்தில் இருக்கும் பிரதான வர்க்கங்கள் வெவ் வேறு தீர்வுகளை வந்தடைவது நிச்சயம் என்பதை அவர் மறக்கிருர்.) ''...சோஷலிஸ்டு கருத்து நிலையில் இருந்து மிகவும் பகுத்தறிவான தீர்வு பெரிய எஸ்டேட்டுகளை அரசுச் சொத்தாக மாற்றி அவற்றில் இதுகாறும் கூலித் தொழி லாளர்களாக வேலை செய்து வந்த விவசாயிகளைக் கூட்டுறவு சங்க வடிவில் அவற்றில் சாகுபடி செய்யுமாறு அனுமதிப் பதேயாகும். ஆனல் அத்தகைய தீர்வு ருஷ்யாவில் இருந் திராத ஒரு மாதிரியான பண்ணைத் தொழிலாளியின் இருத் தலை முன்னனுமானிக்கிறது. இன்னொரு தீர்வு, பெரிய எஸ் டேட்டுகளை அரசுச் சொத்தாக மாற்றி சிறு துண்டு நிலங் களாகப் பிரித்து சொற்ப நிலமே வைத்திருந்த விவசாயி களுக்கு குத்தகைக்கு விடுவது என்பதாகும். அது செய்யப்பட் டிருக்குமானுல், சோஷலிசத் தன்மை வாய்ந்த ஏதேனும் சில சாதனையாகி இருக்கும்...''

வழக்கம் போல காவுத்ஸ்கி பெயர் பெற்ற சொற் களோடு நிறுத்திக் கொள்கிருர்: ஒரு புறம் இதை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது, மறுபக்கம் இதை தவறு என ஏற்றுக் கொள்ளவே வேண்டும். இன்னின்ன குறிப் பிட்ட நிலைமைகளில் முதலாளித்துவத்தில் இருந்து கம்யூ னிசத்துக்கான மாறுதல் கட்டங்கள் எவையாக இருக்க வேண் டும் என்பது குறித்த சிந்தனை இன்றி—ஒரே மெய்ப்பாடான மார்க்சிய சிந்தனை இன்றி—பல்வேறு தீர்வுகளை அவர் அக்கம் பக்கமாக வைக்கிருர். ருஷ்யாவில் பண்ணைத் தொழி லாளர்கள் இருக்கிருர்கள், ஆனல் அதிகப் பேர் இல்லை. சோவியத் அரசாங்கம் உண்மையிலேயே எழுப்பியதான,

நிலச் சாகுபடியில் சமூக மற்றும் கூட்டுறவு வடிவத்துக்கு மாறிச் செல்லும் முறை பற்றிய பிரச்சினையை காவுத்ஸ்கி தொடவே இல்லை. ஆயினும் சிறு துண்டு நிலங்களைக் குத்தகைக்கு விடுவதில் ''சோஷலிஸ்டுத் தன்மையுள்ள ஏதோ சிலதை'' பார்ப்பதாக காவுத்ஸ்கி உரிமை பாராட்டுவது தான் மிகவும் விசித்திரமாக இருக்கிறது. உண்மையில் இது குட்டி முதலாளித்துவ கோஷமாகும், இதில் ''சோஷலிஸ்டுத் தன்மையுள்ளது'' எதுவும் கிடையாது. நிலத்தைக் குத்தகைக்கு விடும் ''அரசு'' பாரிஸ் கம்யூன் மாதிரியான அரசு அல்லாமல் நாடாளுமன்ற முதலாளித்துவக் குடியரசாக இருக்குமானல் (இதுவே காவுத்ஸ்கியின் இடையருத அனுமானம்) நிலத்தைச் சிறு துண்டுகளாகக் குத்தகைக்கு விடுவது ஒரு மாதிரியான மிதவாத சீர்திருத்தம் ஆகும்.

நிலத்தின் மீதான தனியார் உடைமை அனைத்தையும் சோவியத் அரசாங்கம் ஒழித்து விட்டது குறித்து காவுத்ஸ்கி எதுவும் கூறவில்லை. இதைவிட மோசமான விஷயம் என்னவெனில்: அவர் நம்பற்கரிய கள்ள ஆவணத் தயாரிப்பில் ஈடுபட்டு, மிகவும் இன்றியமையாத அம்சங்களை ஒதுக்கி வைக்கும் முறையில் சோவியத் அரசாங்கத்தின் அரசாணைகளை மேற்கோள் காட்டுகிருர்.

''சிறு உற்பத்தி முறை உற்பத்தி சாதனங்களை முழுமையாயும் தனியார் உடைமையில் வைத்திருக்க முயல்கிறது'' எனவும், நிலத்தைப் பங்கீடு செய்வதைத் தடுக்கும் ஆற்றலுடைய ''ஒரே அதிகார அமைப்பாக'' அரசியல் நிர்ணய சபை இருந்திருக்கும் எனவும் (இந்தத் துணிபுரை ருஷ்யாவில் சிரிப்பை எழுப்பும், ஏனெனில் அங்கு சோவியத்துகள் மட்டுமே தொழிலாளர் மற்றும் விவசாயிகளால் அதிகாரமுள்ளனவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன, அரசியல் நிர்ணய சபை செக்குகள் மற்றும் நிலப்பிரபுக்களின் கோஷமாக ஆகிவிட்டது) சாற்றிய பிறகு காவுத்ஸ்கி தொடர்ந்து கூறுவதாவது:

''சோவியத் அரசாங்கத்தின் முதல் அரசாணைகளில் ஒன்று சாற்றியதாவது: 1. நிலப்பிரபுக்களின் நிலச் சொத்துரிமை உடனடியாக எவ்வித இழப்பீடும் இன்றி ஒழிக்கப்படுகிறது.

2. நிலப் பிரச்சினை குறித்து அரசியல் நிர்ணய சபை முடிவு செய்வது வரை நிலப்பிரபுக்களின் எஸ்டேட் நிலங்கள், அதே போல முடிக்குரிய நிலம்,[64] மடங்கள் மற்றும் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் அவற்றிலுள்ள எல்லா கால்நடைகள், விவசாயக் கருவிகள், கட்டடங்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட அனைத்தும் விவசாயிப் பிரதிநிதிகளின் உயெஸ்து சோவியத்துகளின் வோலஸ்து நிலக் கமிட்டிகளிடம் ஒப்படைக்கப்படும்.''

இந்த இரண்டு ஷரத்துகளை மட்டும் மேற்கோள் காட்டும் காவுத்ஸ்கி முடிவாகக் கூறுவதாவது:

''அரசியல் நிர்ணய சபை பற்றிய குறிப்பு நடைமுறைப் படுத்தப்படவில்லை. உள்ளபடியே தனிப்பட்ட வோலஸ்துகளின் விவசாயிகள் தமது நிலத்தை விரும்பியபடி எதுவும் செய்யலாம்'' (பக்கம் 47).

இங்கு காவுத்ஸ்கியின் ''விமர்சனத்திற்கு ஓர் உதாரணம் தரப்பட்டது! இங்கு பெரிதும் ஒரு மோசடி போல இருக்கும் ஒரு ''விஞ்ஞான'' நூல் தரப்படுகிறது. நிலத்தில் தனியார் உடைமை சம்பந்தமாக போல்ஷிவிக்குகள் விவசாயிகளிடம் சரணடைந்ததாகவும், விவசாயிகள் ஸ்தல அளவில் (''தனிப்பட்ட வோலஸ்துகளில்'') அவர்கள் விரும்பியபடி செயல்பட போல்ஷிவிக்குகள் அவர்களை அனுமதித்ததாயும் நம்பும்படி ஜெர்மன் வாசகர் தூண்டப்பட்டார்!

ஆனால் உண்மையில் காவுத்ஸ்கி மேற்கோள் காட்டும் அரசாணை 1917 அக்டோபர் 26ல் (பழைய பாணி) பிரகடனம் செய்யப்பட்டது.* இதில் இரண்டு ஷரத்துகள் அல்ல, ஐந்து ஷரத்துகளும் ''தீர்ப்புக் கட்டளையின்''[65] எட்டு ஷரத்துகளும் கூட்டப்பட்டு இருந்தன. பின்னது ''ஒரு வழி காட்டியாக உதவ வேண்டும்'' என்று தெளிவுபடக் கூறப்பட்டிருந்தது.

அரசாணையின் மூன்றுவது ஷரத்து, எஸ்டேட்டுகள் மக்களுக்கு மாற்றி வழங்கப்படும் என்றும் ''பறிமுதல் செய்யப்பட்ட எல்லாச் சொத்துக்களின் சரியான விளக்க

---

* இதே பதிப்பு, தொகுதி 7, பக்கங்கள் 27-34 பார்க்க.—ப-ர்.

விவரப் பட்டியல்'' நிச்சயமாகத் தயார் செய்யப்பட்டு இச் சொத்து மிகவும் ''கருரான புரட்சிகரச் சட்டத்தால் பாது காக்கப்படும்'' என்றும் சாற்றுகிறது. ''நிலத்தில் தனியார் சொத்துடைமை என்றென்றைக்குமாக ஒழிக்கப்படும்'' என்று தீர்ப்புக் கட்டளை சாற்றுகிறது, ''வளர்ச்சி மிக்க முறையில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் பங்கிடப்பட மாட்டா'' எனவும், ''பறிமுதல் செய்யப்பட்ட எஸ்டேட்டுகளின் எல்லா கால்நடைகளும் விவசாயிக் கருவிகளும் இழப்பீடு எதுவு மின்றி அரசு அல்லது சமுதாயத்தின் தனிப் பயன்பாட்டுக்கு அவற்றின் அளவு மற்றும் முக்கியத்துவத்தைப் பொருத்து ஒதுக்கப்படும்'' எனவும் ''எல்லா நிலமும் தேசிய நிலச் சேமத்தின் பகுதியாகும்'' எனவும் சாற்றுகிறது.

மேலும், அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டவுடனே (1918 ஜனவரி 5) சோவியத்துகளின் மூன்றுவது காங்கிரஸ் உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்கள் உரிமைகள் பிரகடனத்தை* ஏற்றது. இது இப்போது சோவியத் குடியரசின் அடிப்படைச் சட்டத்தின் ஒரு பகுதியாக உள் ளது. இந்தப் பிரகடனத்தின் விதி 2, பாரா 1, ''நிலத்தில் தனியார் உடைமை ஒழிக்கப்படுகிறது'' எனவும், ''மாடல் எஸ்டேட்டுகளும் விவசாய நிறுவனங்களும் தேசியச் சொத்து கள் எனப் பிரகடனம் செய்யப்படுகின்றன'' எனவும் கூறு கிறது.

எனவே, அரசியல் நிர்ணய சபை பற்றிய குறிப்பு நடை முறைப்படுத்தப்படாது விடப்பட இல்லை, காரணம் விவ சாயிகள் பார்வையில் மிகவும் அளப்பரிய அதிகார பலம் உடையதாகக் காட்சிதரும் இன்னொரு தேசிய பிரதி நிதித்துவ அமைப்பு நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பைத் தானே மேற்கொண்டுவிட்டது.

மேலும், 1918 பிப்ரவரி 6(19) நிலத்தை சமூகவுடைமை யாக்கும் சட்டம்[66] பிறப்பிக்கப்பட்டது. இது மீண்டும் ஒரு முறை நிலத்தில் எல்லாத் தனியார் உடைமையும் ஒழிக்கப் பட்டதை உறுதிப்படுத்தியது, நிலம் மற்றும் எல்லாத்

* இதே பதிப்பு, தொகுதி 7, பக்கங்கள் 117-121 பார்க்க.— பு-ர்.

தனியார் கருவிகளையும் சோவியத் கூட்டாட்சி அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் சோவியத் அதிகாரிகளின் செயலாட்சிக்கு ஒப்படைத்தது. நிலப் பயன்பாடு சம்பந்தமாக உள்ள கடமைகளில் இச்சட்டம் விதி முறை செய்ததாவது:

''உழைப்பு மற்றும் பொருட்களின் கருத்து நிலையில் இருந்து மேலும் சாதகமானது என்ற முறையில் கூட்டு முறை விவசாயத்தை அபிவிருத்தி செய்தல், இது தனிப்பட்டோர் சாகுபடிக்குப் பிரதிகூலமாக சோஷலிஸ்டு சாகுபடி முறைக்கு மாறிச் செல்லும் நோக்குடன் செய்யப்பட வேண்டும்'' (விதி 11, பாரா 5).

இதே சட்டம் சமமான நிலச் சாகுபடி உரிமைக் கோட்பாட்டை நிலைநாட்டி அடிப்படைக் கேள்வியான ''நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை யாருக்கு?'' என்பதற்குப் பின்வருமாறு பதிலளித்தது:

(ஷரத்து 20). ''ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சிக் குடியரசின் எல்லைகளுக்கு உட்பட்ட பரப்பில் உள்ள துண்டு நிலங்கள் பொது மற்றும் தனியார் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படலாம்: அ. கலாசார மற்றும் கல்வி நோக்கங்களுக்காக: 1) சோவியத் ஆட்சி அதிகாரத்தின் (கூட்டாட்சி, பிராந்திய, குபெர்னிய, உயெஸ்து, வோலஸ்து மற்றும் கிராமிய) உறுப்பமைப்புகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசு. 2) பொது அமைப்புகள் (சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஸ்தல அமைப்புகளின் கண்காணிப்பின் கீழும் அவற்றின் அனுமதியுடனும்). ஆ. விவசாய வேலைகளுக்காக: 3) விவசாயக் கம்யூன்கள். 4) விவசாயக் கூட்டுறவு சங்கங்கள். 5) கிராமியக் குடிவாழ் கூட்டுக்கள். 6) தனிப்பட்ட குடும்பங்கள் மற்றும் நபர்கள்...''

இந்த மெய்விவரங்களை காவுத்ஸ்கி முற்றுகப் புரட்டி இருப்பதையும் ருஷ்யாவின் பாட்டாளி அரசுடைய நிலக் கொள்கை மற்றும் நிலச் சட்டங்கள் குறித்து அறவே பொய்யான கருத்தை ஜெர்மன் வாசகருக்கு அளித்திருப்பதையும் வாசகர் காண்பார்.

தத்துவார்த்த முறையில் முக்கியமான அடிப்படையான விஷயங்களைக் கூட காவுத்ஸ்கியால் முறைப்படுத்தி முன் வைக்க இயலவில்லை!

இந்த விஷயங்களாவன:

(1) சமமான நிலச் சாகுபடி உரிமை மற்றும்

(2) நிலத்தின் தேசவுடைமையாக்கம்—இந்த இரு நடவடிக்கைகளுக்கும் சோஷலிசத்துக்கும் இடையிலான பொதுவான உறவு, குறிப்பாக முதலாளித்துவத்தில் இருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதுடனான உறவு.

(3) சிதறலான சிறு சாகுபடி முறையில் இருந்து பெருவீத கூட்டுப் பண்ணை சாகுபடி முறைக்கு மாறிச்செல்வது என்ற வகையில் பொதுச் சாகுபடி முறை. சோவியத் சட்டங்களில் இப்பிரச்சினை எடுத்துக் கவனிக்கப்பட்டிருக்கும் அளவில் இது சோஷலிசத்தின் தேவைகளை நிறைவேற்றுமா?

முதலாவது விஷயத்தில் பின்வரும் இரண்டு அடிப்படையான உண்மைகளை முதன் முதலில் நிலைநாட்ட வேண்டும்: (அ) 1905ஆம் ஆண்டு அனுபவத்தை மதிப்பாய்வு செய்வதில் (முதல் ருஷ்யப் புரட்சியில் நிலப் பிரச்சினை குறித்த எனது நூலை[67] உதாரணமாகக் குறிப்பிடலாம்) சமமான சாகுபடி உரிமை எனும் கோஷத்தின் ஜனநாயக முற்போக்குடைய, ஜனநாயக புரட்சிகரமான பொருளைச் சுட்டிக் காட்டினார்கள் போல்ஷிவிக்குகள், மற்றும் 1917ல், அக்டோபர் புரட்சிக்கு முன்னால் இதைக் குறித்துத் திட்டவட்டமாகக் கூறினார்கள். (ஆ) நிலத்தைச் சமூகவுடைமையாக்கம் செய்யும் சட்டத்தை—இதன் ''சாரம்'' சமமான சாகுபடி உரிமையாகும்—அமுல்படுத்தும் போது போல்ஷிவிக்குகள் மிகவும் வெளிப்படையாகவும் திட்டவட்டமாயும் சாற்றியதாவது: இது எங்கள் கருத்து அல்ல, இந்த கோஷத்தை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை, ஆனால் இதை அமுல் செய்வது எங்கள் கடமை என்று கருதுகிறோம், காரணம் இது மிகப்பெரிய பெரும்பான்மை விவசாயிகளின் கோரிக்கையாக இருக்கிறது. உழைக்கும் மக்களின் பெரும்பான்மையினரின் கருத்துக்களும் கோரிக்கைகளும் தம் சொந்த இயல்பாகவே தள்ளிவிட வேண்டிய விஷயங்கள்: இத்தகைய கோரிக்கைகளை ''ஒழித்திடுவதோ'' அல்லது ''மழுப்பிவிடுவதோ'' முடியாது. குட்டி முதலாளித்துவ கோஷங்களை தள்ளிவிடுவதற்கும், அவற்றில் இருந்து எவ்வளவு வேக

மாயும் எவ்வளவு எளிதாயும் சாத்தியமோ அவ்வளவுக்கு சோஷலிஸ்டு கோஷங்களுக்குக் கடந்து செல்லவும் போல் ஷிவிக்குகளான நாம் விவசாயிகளுக்கு உதவுவோம்.

தனது விஞ்ஞானப் பகுத்தாய்வு மூலம் தொழிலாளி வர்க்கப் புரட்சிக்கு உதவ விரும்பும் ஒரு மார்க்சிய தத்து வாளர் பின்வரும் கேள்விகளுக்குப் பதில் அளித்திருக்க வேண் டும். முதலாவதாக, சமமான சாகுபடி உரிமை எனும் கருத்துக்கு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை அதன் முடிவு வரை நிறைவேற்றி முடிப்பது எனும் ஜனநாயக புரட்சிகரமான அர்த்தம் இருக்கிறது என்பது உண்மையா? இரண்டவதாக, போல்ஷிவிக்குகள் தாம் வாக்களித்தது மூலம் (மிகவும் விசுவாசமுடன் கவனம் செலுத்தியும்) குட்டி முதலாளித்துவ நிலச் சாகுபடி உரிமைச் சட்டம் நிறை வேற்றப்பட உதவியதில் அவர்கள் செயல்பட்டது சரியா?

இந்தப் பிரச்சினையின் தத்துவார்த்த முறையிலான அறுதிக்கூறு என்ன என்பதை காவுத்ஸ்கி காண்பதற்கே கூடத்தவறிவிட்டார்.

முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியில் சமமான சாகு படி உரிமை எனும் கருத்துக்கு ஒரு முற்போக்கான புரட்சி கரமான மதிப்பு இருக்கிறது எனும் நோக்கை காவுத்ஸ்கி யால் என்றுமே மறுத்துரைக்க முடியாது. இத்தகைய புரட்சி இதற்கு அப்பால் செல்ல முடியாது. அதன் வரம்பை போய் எட்டுவதன் மூலம் இது முதலாளித்துவ ஜனநாயகத் தீர்வுகளின் போதாமையினையும் அவற்றின் வரம்பு களுக்கு அப்பால் முன்னேறி சோஷலிசத்துக்குக் கடந்து செல்வதன் அவசியத்தையும் மிகவும் அதிகத் தெளிவாகவும் துரிதமாகவும் எளிதாகவும் மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது.

ஜாராட்சியையும் நிலப்பிரபுக்களையும் வீழ்த்திய விவ சாயிகள் சமமான சாகுபடி உரிமை பற்றிக் கனவு காண் கின்றனர். நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளித்துவ நாடா ளுமன்றக் குடியரசு ஆகிய இரண்டிடமிருந்தும் விடுவிக்கப் பட்டுவிடும் பட்சத்தில் விவசாயிகளை உலகின் வேறு எந்த சக்தியாலும் தடுத்துவிட முடியாது. தொழிலாளர்கள் விவ

சாயிகளிடம் கூறுகிறார்கள்: ''இலட்சிய'' முதலாளித்துவத்தை நீங்கள் சென்று அடைவதற்கு நாங்கள் உங்களுக்கு உதவுகிறோம், ஏனெனில் சமமான சாகுபடி உரிமை என்பது சிறு உற்பத்தியாளர் மூலம் முதலாளித்துவம் இலட்சியமயமாக்கப்படுவதாகும். அதே சமயம் அதன் போதாமையையும், பொதுவான சாகுபடியை நோக்கிக் கடந்து செல்வதன் அவசியத்தையும் உங்களுக்கு நிரூபித்துக் காட்டுவோம்.

பாட்டாளிகள் விவசாயிகளின் போராட்டத்துக்கு இந்த வகையான தலைமை வழங்கியது சரி அல்ல என்று எடுத்துக் காட்ட காவுத்ஸ்கி புரியும் முயற்சிகளைப் பார்ப்பது சுவையாக இருக்கும்!

எனினும், இந்த விஷயத்தை முழுமையாகவும் தட்டிக் கழிக்கவே காவுத்ஸ்கி விரும்பினார்....

அடுத்தபடி, நிலச் சட்டத்தில் சோவியத் அரசாங்கம் கம்யூன்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு நேரடி முன்னுரிமை அளித்தது என்ற உண்மையை அவர்களிடமிருந்து மறைத்து வைத்தது மூலம் தமது ஜெர்மன் வாசகர்களை காவுத்ஸ்கி வேண்டுமென்றே ஏமாற்றினார்.

விவசாயிகள் அனைவருடனும் சேர்ந்து முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் முடிவுவரை நெடுகிலும் நிற்போம்; ஏழை மக்கள், விவசாயிகளிடையிலான பாட்டாளி மற்றும் அரைப்பாட்டாளிப் பகுதிகளுடன் சோஷலிஸ்டு புரட்சிக்கு முன்னேறுவோம்! இதுவே போல்ஷிவிக்குகளின் கொள்கையாக இருந்தது, இது மட்டுமே மார்க்சியக் கொள்கையாகும்.

ஆனால் காவுத்ஸ்கி எல்லாம் குளறுபடியாகி, ஒரு விஷயத்தைக் கூட முறைப்படுத்தி முன்வைக்கத் திராணி அற்றவராக இருக்கிறார்! ஒரு புறம் சமமான சாகுபடி உரிமை என்ற பிரச்சினை மீது தொழிலாளிகள் விவசாயிகளிடம் இருந்து பிரிந்து சென்றிருக்க வேண்டும் என்று சொல்ல அவருக்குத் துணிவு இல்லை, ஏனெனில் அவ்வாறு செய்வது அபத்தம் என்பதை அவர் உணர்கிறார் (மற்றும், 1905ல் அவர் இன்னும் ஓடுகாலியாகாத போது புரட்சியின் வெற்றிக்

குரிய ஒரு நிபந்தனை என்ற முறையில் தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான ஒரு நேச அணியினை அவர் தாமே தெளிவாயும் வெளிப்படையாயும் ஆதரித்து முன்வந்தார்). மறுபுறம், அவர் சோஷலிசத்தின் கருத் தோட்டத்தில் இருந்து குட்டி முதலாளித்துவ சமத்துவம் என்பது கற்பனுவாதம் மற்றும் பிற்போக்கானது என்று ''நிரூபித் தும்'' ஆனுல், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் கருத் தோட்டத்தில் இருந்து சமத்துவம் மற்றும் சமமான சாகு படி உரிமைக்கான குட்டி முதலாளித்துவப் போராட்டம் முற்போக்கானது மற்றும் புரட்சிகரத் தன்மை கொண்டது என்பதை ஒளித்து வைத்தும் பேசும் மென்ஷிவிக் மாஸ்ல வின் மிதவாத வெற்றுரைகளை அனுதாபத்துடன் மேற் கோள் காட்டுகிருர்.

காவுத்ஸ்கி படுமோசமான குளறுபடியில் இருக்கிருர்: அவர் (1918ல்) ருஷ்யப் புரட்சியின் முதலாளித்துவத் தன்மை மீது அழுத்தம் தருகிருர் என்பதைக் குறித்துக் கொள்க. அவர் (1918ல்) பிடிவாதமான முறையில் கூறுகிருர்: இந்த வரம்புகளுக்கு அப்பால் போக வேண்டாம்! ஆனுல் இதே காவுத்ஸ்கி ஏழை விவசாயிகளுக்கு சிறு துண்டு நிலங்களைக் குத்தகைக்கு விடும் குட்டி முதலாளித்துவ சீர்திருத்தத்தில் (இது சமமான சாகுபடியுரிமைக்குத் தோராயமானது) ''சோஷலிஸ்டுத் தன்மையதான சிலவற்றை'' (ஒரு முதலாளித் துவப் புரட்சிக்காக) காண்கிருர்!

முடிந்தால் இதைப் புரிந்து கொள்க!

இவை அனைத்துக்கும் கூடுதலாக, ஒரு திட்டவட்டமான கட்சியின் மெய்யான கொள்கையைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதில் ஓர் அற்பவாத ஏலாமையை வெளிக் காட்டு கிருர் காவுத்ஸ்கி. மென்ஷிவிக் மாஸ்லவின் வெற்றுத் தொடர்களை மேற்கோள் காட்டுகிருர் அவர், ஆனுல் 1917ல் மென்ஷிவிக் கட்சி பின்பற்றிய மெய்யான கொள்கை யைக் காண மறுக்கிருர். அப்போது அக்கட்சியினர் நிலப் பிரபுக்கள் மற்றும் காடேட்டுகளுடன் ''கூட்டணி'' நிறுவி, உள்ளபடியே ஒரு மிதவாத நிலச் சீர்திருத்தமும் நிலப் பிரபுக்களுடன் சமரசமுமான ஒரு செயலை ஆதரித்தார்கள்

(நிருபணம்: நிலக் கமிட்டிகளின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டது, மற்றும் எஸ். மாஸ்லவின் நில மசோதா).

குட்டி முதலாளித்துவ சமத்துவம் என்பதன் பிற்போக்கான கற்பனுவாதத் தன்மை பற்றிய மாஸ்லவின் தொடர்கள், உண்மையில் விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்தும் மென்ஷிவிக் கொள்கையினை மூடிமறைப்பதற்கான திரையே (அதாவது விவசாயிகளை ஏமாற்ற நிலப்பிரபுக்களுக்கு ஆதரவு தருவதே), விவசாயிகள் நிலப்பிரபுக்களைப் புரட்சிகரமான முறையில் வீழ்த்துவதற்கு மாறுன நடவடிக்கையே என்பதை காவுத்ஸ்கி காணத் தவறி விட்டார்.

காவுத்ஸ்கி எத்தகைய ''மார்க்சியவாதி'' பாருங்கள்!

முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கும் சோஷலிஸ்டுப் புரட்சிக்கும் இடையே கறாராக பாகுபாடு செய்தவர்கள் போல்ஷிவிக்குகளே: முந்தியதைச் செய்து முடித்தது மூலம் அவர்கள் பிந்தியதற்கு மாறிச்செல்வதற்கான கதவைத் திறந்து வைத்தார்கள். இந்தக் கொள்கை மட்டுமே புரட்சிகரமான மார்க்சிய கொள்கையாகும்.

பின்வரும் தீனமான மிதவாத சாதுரியத் தொடரை காவுத்ஸ்கி மீண்டும் உரைக்காமல் இருப்பது அவருக்கே விவேகமானதாக இருக்கும்: ''தத்துவார்த்த திடநம்பிக்கையின் செல்வாக்கின் கீழ் சிறு விவசாயிகள் கூட்டு முறை உற்பத்தியை இதுவரை எங்குமே, என்றுமே ஏற்றுக்கொண்டது இல்லை'' (பக்கம் 50).

எத்தகைய படு சுட்டித்தனம்!

ஆனுல் இது வரையில் என்றுமே, எங்குமே எந்த ஒரு பெரிய நாட்டின் சிறு விவசாயிகளும் ஒரு பாட்டாளி அரசின் செல்வாக்கின் கீழ் இருந்ததில்லையே.

இது வரையில் என்றுமே, எங்குமே—ஏழை மக்களுக்கு ஒரு பாட்டாளி அரசு வழங்கும் பிரசார, அரசியல், பொருளாதார, இராணுவ ஆதரவு கிடைக்கும் பட்சத்தில்—ஏழை விவசாயிகளுக்கும் செல்வந்த விவசாயிகளுக்கும் இடையிலான ஓர் உள்நாட்டுப் போர் எனும் அளவை எட்டுகிற

ஒரு பகிரங்கமான வர்க்கப் போராட்டத்தில் சிறு விவசாயிகள் ஈடுபட்டது கிடையாது.

இது வரையில் என்றுமே, எங்குமே கொள்ளை லாபக்காரரும் செல்வந்தரும், விவசாயிகள் பெருந்திரள் படுமோசமாக அழிவுற்று இருக்கும் போதில், போர் மூலமாக இத்தகைய செல்வத்தைத் திரட்டிக் குவித்தது கிடையாது.

காவுத்ஸ்கி பழைய சரக்கை அப்படியே திரும்பக் கூறுகிறார், பழையதை அப்படியே அசைபோடுகிறார், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் புதிய பணிகள் குறித்துச் சிந்திக்கவும் கூட அஞ்சுகிறார்.

ஆனால் அருமை காவுத்ஸ்கி அவர்களே, சிறுவீத உற்பத்திக்கு விவசாயிகளிடம் கருவிகள் இல்லாதிருந்து, கூட்டுமுறை விவசாயத்துக்கு இயந்திரங்கள் பெற அவர்களுக்குப் பாட்டாளி அரசு உதவுமானால் அது ''தத்துவார்த்த முறையிலான திட நம்பிக்கை'' ஆகுமா?— — —

இப்போது நாம் நிலங்களை தேசவுடைமையாக்கும் பிரச்சினைக்குச் செல்வோம். எல்லா இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் உட்பட நமது நரோத்னிக்குகள்[68] நாம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை நிலங்களின் தேசவுடைமையாக்கம் அல்ல என்று மறுக்கிறார்கள். தத்துவார்த்த முறையில் அவர்கள் சொல்வது தவறு. நாம் பண்ட உற்பத்தி மற்றும் முதலாளித்துவக் கட்டுக்கோப்புக்குள் இருந்து வரும் வரையில் நிலத்தில்'' தனியார் சொத்துடமை ஒழிப்பு என்பது நிலத்தை தேசவுடைமையாக்குவதே ஆகும். ''சமூகமயமாதல்'' எனும் தொடர் ஒரு போக்கை, ஒரு விருப்பத்தை, சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்கான தயாரிப்பை மட்டுமே வெளிப்படுத்துகிறது.

நிலம் தேசவுடைமையாக்கப்படுவதன் பால் மார்க்சியவாதிகளின் தோரணை என்னவாக இருத்தல் வேண்டும்?

இங்கும் காவுத்ஸ்கி தத்துவார்த்த பிரச்சினையை முறைப்படுத்தி முன்வைக்கத் தவறி விடுகிறார், அல்லது இதைவிட மோசம் என்னவென்றால் இதை வேண்டுமென்றே தட்டிக் கழித்து விடுகிறார். தேசவுடைமையாக்கம், நகர சபை உடைமையாக்கம்(அதாவது பெரிய எஸ்டேட்டுகளை ஸ்தல சுயாட்சி

நிர்வாக உறுப்புகளின் வசம் மாற்றித் தருவது), நிலப் பங்கீடு பற்றிய பிரச்சினையில் ருஷ்யாவின் மார்க்சியவாதிகள் மத்தியில் நிலவிய பழைய சர்ச்சைகளைப் பற்றி காவுத்ஸ்கி நன்ருக அறிவார் என்பதை ருஷ்ய இலக்கியத்தில் இருந்து எவரும் தெரிந்து கொள்ளலாம் என்ற போதிலும் அவர் இவ்வாறு நடந்து கொள்கிருர்.

பெரிய எஸ்டேட்டுகளை அரசுக்கு மாற்றி வழங்கி, அவற்றை சிறு துண்டு நிலங்களாக சொற்ப நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்குக் குத்தகைக்குக் கொடுப்பது ''சோஷலிஸ்டுத் தன்மையதான ஏதோ சிலவற்றை'' சாதிப்பது எனும் காவுத்ஸ்கியின் துணிபுரை மார்க்சியத்தை பகிரங்கமாகக் கேலிக்கு இடமாக்குவதாகும். இதில் சோஷலிஸ்டுத் தன்மையானது எதுவும் இல்லை என்பதை நாம் ஏற்கெனவே எடுத்துக் காட்டியுள்ளோம். இதோடு எல்லாம் ஆகி விடவில்லை. இதில் இறுதி வரையில் நடத்தி முடித்த முதலாளித்து ஜனநாயகப் புரட்சியுமில்லை. மென்ஷிவிக்குகளிடம் நம்பிக்கை வைத்தது தான் காவுத்ஸ்கியின் பெரிய துரதிருஷ்டம். இதன் விளைவாக, நமது புரட்சிக்கு ஒரு முதலாளித்துவத் தன்மை இருக்கும் என்று பிடிவாதம் செய்தும், போல்ஷிவிக்குகள் சோஷலிசத்துக்கு முன்னேறிச் செல்ல எண்ணியிருப்பதைக் குறை கூறியும் வரும் அதே போதில் அவர் சோஷலிசம் என்னும் வேடத்தின் கீழ் மிதவாத சீர்திருத்தத்தை அவர்தாமே முன்மொழிவதும், நில உறவுகள் விஷயத்தில் மத்திய கால மீதமிச்சங்கள் அனைத்தையும் முழுமையாகக் களைந்தெறியும் கட்டத்திற்கு இந்தச் சீர்திருத்தத்தை நிறைவேற்ருமல் இருப்பதும் ஆன ஒரு விசித்திரமான நிலைமை ஏற்படுகிறது! காவுத்ஸ்கியின் வாதங்கள் அவரது மென்ஷிவிக் ஆலோசகர்களின் வாதங்களைப் போலவே, நிலையுறுதியான முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியைத் தாங்கி ஆதரிப்பதற்குப் பதில் புரட்சியை அஞ்சும் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தைத் தாங்கி ஆதரிப்பதில் கொண்டு போய்விடுகின்றன.

உண்மையில் எல்லா நிலங்களும் அன்றி, பெரிய எஸ்டேட்டுகள் மட்டுமே அரசு உடைமையாக ஏன் மாற்றப்பட வேண்டும்? இதன் மூலம் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்

தினர் பழைய நிலைமைகளை (அதாவது புரட்சியில் ஆகக் குறைந்த நிலையுறுதியை). அதிகப்பட்சமாகப் பேணிக்காத்துக் கொள்வதை சாதித்துக் கொள்கிறார்கள் மற்றும் பழைய நிலைமைகளைத் திருத்துவதற்கு அதிகப் பட்ச வசதிகளையும் பெறுகிறார்கள். தீவிரவாத முதலாளித்துவ வர்க்கம், அதாவது முதலாளித்துவ புரட்சியை இறுதி வரை நிறைவேற்றி முடிக்க விரும்பும் முதலாளித்துவ வர்க்கம் நிலங்களை தேசவுடைமையாக்குவது எனும் கோஷத்தை முன்வைக்கிறது.

சுமார் இருபதாண்டுகளுக்கு முந்தி மங்கிய தொலைப் பழங்காலத்தில் நிலப்பிரச்சினை மீது ஓர் அருமையான மார்க்சிய நூலை எழுதிய காவுத்ஸ்கி, நிலத்தை தேசவுடைமையாக்கம் செய்வது என்பது உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்தின் நிலையுறுதியான கோஷம்[69] என்று மார்க்ஸ் சாற்றியுள்ளதை நிச்சயம் அறிந்திருக்க வேண்டும், ரோட்பெர்டஸ் உடன் மார்க்ஸ் நடத்திய சர்ச்சை பற்றியும் அவரது உபரி மதிப்பு தத்துவங்கள் எனும் நூலில் இடம் பெற்றுள்ள தனிச் சிறப்பான வாசகங்களையும் காவுத்ஸ்கி நிச்சயம் அறிந்திருக்க வேண்டும். அதில் நிலத்தைத் தேசவுடைமையாக்குவதன் புரட்சிகரமான உட்பொருள்—முதலாளித்துவ ஜனநாயக அர்த்தத்தில்—தனிப்பட்ட தெளிவுடன் விளக்கப்பட்டிருக்கிறது.

காவுத்ஸ்கி துரதிருஷ்டவசமாகத் தனது ஆலோசகராகத் தேர்ந்து கொண்ட மென்ஷிவிக் ப. மாஸ்லவ், எல்லா நிலங்களையும் (விவசாயிகளின் நிலங்கள் உட்பட) தேசவுடைமையாக்குவதற்கு ருஷ்ய விவசாயிகள் உடன்படுவார்கள் என்பதை மறுத்துரைத்தார். மாஸ்லவின் இந்தக் கருத்தை அவரது ''தற்படைப்புத்'' தத்துவத்துடன் ஓரளவுக்கு தொடர்புபடுத்தலாம் (இது மார்க்சைப் பற்றிய முதலாளித்துவ விமர்சகர்களின் கருத்தையே கிளிப்பிள்ளை போலச் சொல்கிறது), அதாவது தனிமநிலை வாடகையை அவர் மறுத்துத் தள்ளுபடி செய்வதையும், ''குறைந்து செல்லும் விளைபயன்'' ''விதி'' (அல்லது மாஸ்லவ் கூறுவது போன்று ''உண்மை'') அவரால் அங்கீகரிக்கப்படுவதையும் குறிப்பிடலாம்.

எனினும், ருஷ்யாவில் இருந்த மிகப் பெரும்பாலான விவசாயிகள், கிராமச் சமுதாயத்தினர்கள் மற்றும் குடும்பப் பண்ணை விவசாயிகள்[70] உண்மையில் எல்லா நிலங்களேயும் தேசவுடைமையாக்குவதற்கு ஆதரவாக இருந்தார்கள் என்பதை ஏற்கெனவே 1905ஆம் ஆண்டுப் புரட்சி வெளிப்படுத்தி விட்டது. 1917ஆம் ஆண்டுப் புரட்சி இதை உறுதிப்படுத்தியது, பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரம் மேற்கொண்ட பின் இது செயலாக்கப்பட்டது. போல்ஷிவிக்குகள் மார்க்சியத்தில் விசுவாசத்துடன் இருந்தார்கள், (எள்ளத்தனே ஆதாரம் கூட இன்றி காவுத்ஸ்கி நம்மீது இவ்வாறு செய்ததாகப் பழி சுமத்திய போதிலும்) முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியைத் ''தள்ளி விட்டுத்தாவ'' என்றுமே முயலவில்லே. போல்ஷிவிக்குகள் முதன் முதலாக, விவசாயிகளின் மத்தியிலான மிகவும் தீவிரமான, மிகவும் புரட்சிகரமான, பாட்டாளி வர்க்கத்துக்கு மிகவும் நெருக்கமாக நின்றவர்களான முதலாளித்துவ ஜனநாயக சித்தாந்தவாதிகள், அதாவது இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மெய்விளேவில் நிலத்தை தேசவுடைமையாக்கும் காரியத்தைச் செய்து முடிக்க உதவி புரிந்தார்கள். 1917 அக்டோபர் 26ந் தேதி, அதாவது பாட்டாளி வர்க்க, சோஷலிஸ்டுப் புரட்சியின் அதே முதல் நாளே ருஷ்யாவில் நிலத்திலான தனியார் உடைமை ஒழிக்கப்பட்டது.

இது முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் கருத்து நிலேயில் இருந்து மிகவும் செம்மையான அடித்தளத்தை நிறுவியது (மார்க்சிடமிருந்து முறித்துக் கொள்ளாமல் காவுத்ஸ்கியால் இதை மறுக்க முடியாது). அதே சமயம், சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதன் கருத்து நிலேயில் இருந்து மிகவும் நெகிழ் திறமுடைய ஒரு நில அமைப்பினே உருவாக்கியது. முதலாளித்துவ ஜனநாயகக் கருத்து நிலேயில் இருந்து ருஷ்யாவின் புரட்சிகர விவசாயிகள் இதற்கு அப்பால் இனிப் போக முடியாது: இந்தக் கருத்து நிலேயில் இருந்து நிலத்தின் தேசவுடைமையாக்கம் மற்றும் சமமான சாகுபடி உரிமையை விட ''அதிக லட்சியமானதோ'' ''அதிகத் தீவிரமானதோ'' (இதே கருத்து நிலேயில் இருந்து) எதுவும் இருக்க முடியாது.

போல்ஷிவிக்குகள் தான், போல்ஷிவிக்குகள் மட்டுமே, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றி தந்த உதவியின் மூலம், மட்டுமே, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை மெய்யாகவே அதன் இறுதி வரை நடத்தி முடிக்க விவசாயிகளுக்கு உதவினார்கள். இந்த வழியில் மட்டுமே அவர்கள், சோஷலிஸ்டுப் புரட்சிக்கு மாறிச்செல்வதை எளிதாக்கவும் விரைவாக்கவும் உச்சபட்சம் செயல்பட முடிந்தது.

புரட்சியின் முதலாளித்துவத் தன்மையினை போல்ஷிவிக்குகள் புரிந்துகொள்ளத் தவறி விட்டார்கள் என்று அவர் பழிசாட்டும் போது, எனினும் தாமே மார்க்சியத்தில் இருந்து அத்தகைய திசைதிருப்பத்தில் வீழ்ந்ததன் விளைவாக நிலத்தை தேசவுடைமையாக்கம் செய்வது பற்றி எதுவுமே சொல்லாமல் (முதலாளித்துவக் கருத்து நிலையில் இருந்து) ஆகக் குறைந்தளவு புரட்சிகரமான மிதவாத நிலச் சீர்திருத்தத்தை ''சோஷலிஸ்டுத் தன்மையதான சிலவாக'' முன்வைக்கும்போது, காவுத்ஸ்கி தமது வாசகர்களுக்கு எத்தகைய நம்பற்கரிய குளறுபடியை வழங்குகிறார் என்பதை எவரும் இதில் இருந்து நிர்ணயம் செய்து கொள்ளலாம்!

மேலே முறைப்படுத்தி முன்வைக்கப்பட்ட மூன்றாவது கேள்விக்கு இப்போது வந்திருக்கிறோம். அதாவது, சமூக சாகுபடி முறைக்குக் கடந்து செல்லும் அவசியத்தை ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எந்த அளவுக்கு கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளது என்பதே இக்கேள்வி. இங்கு மீண்டும் காவுத்ஸ்கி கள்ள ஆவணம் தயாரிக்கும் தன்மையில் சிலவற்றைப் புரிகிறார்: சமூக சாகுபடிக்கு கடந்து செல்லும் கடமை பற்றிக் குறிப்பிடும் ஒரு போல்ஷிவிக்கின் ''ஆய்வுரை''களை மட்டுமே மேற்கோள் காட்டுகிறார்! இந்த ஆய்வுரைகளில் ஒன்றை மேற்கோள் காட்டிவிட்டு நமது ''தத்துவாளர்'' வெற்றிக் களிப்புடன் ஆர்த்துரைப்பதாவது:

''துரதிருஷ்டவசமாக, ஒரு பொருள் அது ஒரு கடமை என்று அழைக்கப்படுவது காரணமாக மட்டும் நிறைவேற்றம் பெறுவதில்லை. இப்போதைக்கு, ருஷ்யாவில் கூட்டுப் பண்ணை விவசாயம் காகிதத்தில் மட்டுமே இருக்கும் என்பது தீர்ப்பு. தத்துவார்த்த திடநம்பிக்கைகளின் செல்வாக்கின் கீழ் இது

வரை என்றுமே, எங்குமே சிறு விவசாயிகள் கூட்டுப் பண்ணை விவசாயத்தை மேற்கொண்டது இல்லை'' (பக்கம் 50).

இது வரையில் என்றுமே, எங்குமே காவுத்ஸ்கி கையாண்டுள்ளதற்குச் சமமான ஒரு இலக்கிய மோசடி செய்யப்பட்டது கிடையாது. அவர் ''ஆய்வுரைகளை'' மேற்கோள் காட்டுகிறார், ஆனால் சோவியத் அரசாங்கச் சட்டம் பற்றி எதுவும் கூறவில்லை. ''தத்துவார்த்த திடநம்பிக்கைகள்'' குறித்து அவர் பேசுகிறார், ஆனால் ஆலைகளையும் பொருட்களையும் தன் கரங்களில் வைத்திருக்கும் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரம் பற்றி எதுவும் கூறவில்லை! 1899ல் மார்க்சியவாதியான காவுத்ஸ்கி தனது நிலப் பிரச்சினை எனும் நூலில் சிறு விவசாயிகளை சோஷலிசத்தை நோக்கிப் படிப்படியாக மாறி வரும்படி செய்வதற்குப் பயன்படுத்துவதற்குப் பாட்டாளி வர்க்க அரசிடம் இருந்த சாதனங்கள் சம்பந்தமாக எழுதியவை அனைத்தையும் 1918ல் ஓடுகாலி காவுத்ஸ்கி மறந்துவிடுகிறார்.

ஒரு சில நூறு அரசு ஆதரவு பெற்ற விவசாயக் கம்யூன்களும் அரசுப் பண்ணைகளும் (அதாவது அரசின் செலவில் தொழிலாளர் இணைப்புகளால் பயிர்செய்யப்படும் பெரிய பண்ணைகள்) மிகக் குறைவானவையே, ஆனால் இந்த மெய்மையை காவுத்ஸ்கி புறக்கணிப்பதை ''விமர்சனம்'' என்று கூற முடியுமா?

ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் செயலாக்கப்பட்டுள்ள நில தேசவுடைமையாக்கம் முதலாளித்துவ ஜனநாயக புரட்சியை அதன் இறுதிவரை நிறைவேற்றி முடிப்பதைச் சிறப்பாக உறுதிப்படுத்தியுள்ளது. நில தேசவுடைமையாக்கத்தில் இருந்து நிலப் பிரிவினைக்குப் பின்மாறிச் செல்வதை உண்டாக்கும் ஒரு எதிர்ப்புரட்சி வெற்றியடைவது நிகழுமானாலும் கூட இது சாதனையாகும் (1905ஆம் ஆண்டுப் புரட்சியில் மார்க்சியவாதிகளின் நிலச் செயல்திட்டம் பற்றிய எனது பிரசுரத்தில் இந்த சாத்தியக்கூறு குறித்து விசேஷமாகப் பரிசீலனை செய்தேன்). இதற்கும் மேல் நில தேசவுடைமையாக்கம் விவசாயத்தில் சோஷலிசத்துக்கு

கடந்து செல்வதற்கான அதிகபட்சமான வாய்ப்பினைப் பாட்டாளி வர்க்க அரசுக்குத் தந்திருக்கிறது.

தொகுத்துக் கூறிடில், தத்துவம் சம்பந்தப்பட்ட வரை காவுத்ஸ்கி நம்மிடம் ஒரு நம்பற்கரிய கலவைக் கூளத்தை அளித்துள்ளார். இது மார்க்சியத்தை முற்றிலும் கைவிட்டு விடும் செயலாகும். நடைமுறை சம்பந்தப்பட்ட வரை முதலாளித்துவ வர்க்கத்துக்கும் தனது சீர்திருத்தவாதத்திற்கும் அடிமைப்பட்டதான ஒரு கொள்கையை அளித்துள்ளார். அருமையான விமரிசனம்தான் போங்கள்!

* * *

காவுத்ஸ்கி தொழிற்துறை பற்றிய தமது ''பொருளாதாரப் பகுத்தாய்வை'' பின்வரும் அற்புதமான வாதத்தோடு தொடங்குகிறார்:

ருஷ்யாவில் பெருவீத முதலாளித்துவ தொழிற்துறை இருக்கிறது. இந்த அடித்தளத்தின் மீது ஒரு சோஷலிஸ்டு உற்பத்தி அமைப்பினைக் கட்ட முடியாதா? ''சோஷலிசம் என்றால் தனிப்பட்ட ஆலைகள் மற்றும் சுரங்கங்களின் தொழிலாளர்கள் இவற்றைத் தமது உடைமையாக்கி'' (உண்மையில் தமக்கே என இவற்றைப் பறித்துக் கொண்டு) ''ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தனியாக உற்பத்தியை நடத்த முற்படின் இவ்வாறு ஒருவர் சிந்திக்க முடியும்'' (பக்கம் 52). அவர் மேலும் கூறினார்: ''இந்த வார்த்தைகளை நான் எழுதிக் கொண்டிருக்கும் ஆகஸ்டு 5ஆம் நாளில், ஆகஸ்டு 2ந் தேதி லெனின் ஆற்றிய ஒரு உரையின் செய்தி விவரம் மாஸ்கோவில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவர் கூறியிருப்பதாவது: 'தொழிலாளர்கள் ஆலைகளை உறுதியாகத் தமது கரங்களில் அடக்கி வைத்திருக்கிறார்கள், விவசாயிகள் நிலங்களை நிலப்பிரபுக்களுக்குத் திருப்பித் தரமாட்டார்கள்'. இதுவரையில் ஆலைகள் தொழிலாளர்களுக்கே, நிலம் விவசாயிகளுக்கே எனும் கோஷம் ஒரு அராஜக சிண்டிகல்வாதியின் கோஷமே தவிர ஒரு சமூக-ஜனநாயகவாதியின் கோஷமல்ல'' (பக்கம் 52, 53).

நான் இந்த வாசகத்தை முழுமையாக மேற்கோள் காட்டி யிருப்பதற்குக் காரணம், ருஷ்யத் தொழிலாளர்கள் முன்பு முற்றும் சரியாகவே மரியாதை கொடுத்துவந்த காவுத்ஸ்கி இப்போது முதலாளித்துவ முகாமுக்குத் துறந்தோடியபின் கையாளும் முறைகளை அவர்கள் தாமே பார்க்கட்டும் என் பதேயாகும்.

சற்றே எண்ணிப்பாருங்கள்: ஆகஸ்டு 5ந் தேதி ருஷ்யா வில் ஆலைகள் தேசவுடைமையாக்கம் பற்றிய அரசாணைகள் பல பிறப்பிக்கப்பட்ட போது, அதோடு தனி ஒரு ஆலை கூடத் தொழிலாளர்களால் பறித்துக்கொள்ளப்படவில்லை மாறாக யாவும் குடியரசின் உடைமையாக மாற்றப்பட்டன—அந்த ஆகஸ்டு 5ந் தேதி எனது உரையின் ஒரு வாக்கியத்தை அப்பட்டமாயும் கபடத்தனமாக அர்த்தப்படுத்துவது மூலம் காவுத்ஸ்கி, ருஷ்யாவில் ஆலைகள் தனிப்பட்ட தொழிலாளர் களிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஜெர்மன் வாசகர்கள் நம்பும்படி செய்ய முயல்கிறார்! அதற்குப் பிறகு காவுத்ஸ்கி, ஆலைகளைத் தனிப்பட்ட தொழிலாளர் களிடம் ஒப்படைப்பது தவறு என்று நீண்டநேரம் சொன்ன தையே சொல்லி அசைபோடுகிறார்!

இது விமர்சனம் அல்ல, இது முதலாளித்துவ அடிவருடி யின், தொழிலாளர் புரட்சியை அவதூறு செய்வதற் காக முதலாளிகள் கூலிக்கு அமர்த்தியுள்ள பேர்வழியின் குறும்புச் சேட்டையே ஆகும்.

ஆலைகள் அரசுக்கோ அல்லது சமுதாயத்துக்கோ அல்லது நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கோ மாற்றி வழங்கப் பட வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கூறும் காவுத்ஸ்கி இறுதியாகச் சொல்வதாவது:

''இதைத்தான் இப்போது அவர்கள் ருஷ்யாவில் செய்ய முயல்கிறார்கள்...'' இப்போது! இதன் அர்த்தம் என்ன? ஆகஸ் டிலா? ஆலைகள் குறித்த அரசாணைகளில் குறைந்தபட்சம் ஒன்றையாவது காவுத்ஸ்கி தமது நண்பர்கள் ஷ்டைன், அக் செல்ரோத் அல்லது ருஷ்ய முதலாளித்துவ வர்க்கத்தின் இதர நண்பர்களில் எவரையாவது பொறுப்பாக அமர்த்தி மொழி பெயர்த்துக் கொண்டிருக்கக் கூடாதா?

''இந்தத் திசையில் அவர்கள் எவ்வளவு தூரம் போயிருக்கிருர்கள் என்பதை நம்மால் இன்னும் சொல்ல முடியாது. எப்படியும், சோவியத் குடியரசின் செயல்பாட்டின் இந்த அம்சம் நமக்கு ஆகப்பெரிய முக்கியத்துவம் உள்ளது ஆனுல் இன்னும் முற்ருக இருளில் மூழ்கிக் கிடக்கிறது. அரசாணைகளுக்குக் குறைவே இல்லை....'' (இதனுல் தான் காவுத்ஸ்கி அவற்றின் **உள்ளடக்கத்தைப்** புறக்கணிக்கிருர், அல்லது அதை வாசகர்களிடமிருந்து மறைக்கிருர்!) ''ஆனுல் இந்த அரசாணைகளின் விளைபயன் குறித்து நம்பகமான தகவல் போதாது. சர்வாம்சமான, விரிவான, நம்பகமான மற்றும் துரிதமான தகவல்தரும் புள்ளி விவரங்கள் இன்றி சோஷலிஸ்டு உற்பத்தி சாத்தியமல்ல. சோவியத் குடியரசு இதற்குள் இத்தகைய புள்ளி விவரங்களை உருவாக்குவது சாத்தியமல்ல. அதன் பொருளாதாரச் செயல்பாடுகள் பற்றி நாம் தெரிந்துகொண்டிருப்பதெல்லாம் மிகவும் முரண்பாடானது, எவ்வழியிலும் சரிபார்க்கப்பட்டதல்ல. இதுவும் சர்வாதிகாரத்தின் மற்றும் ஜனநாயகத்தை அடக்குவதன் விளைவே ஆகும். பத்திரிகை சுதந்திரமோ பேச்சுச் சுதந்திரமோ அங்கு இல்லை...'' (பக்கம் 53).

இப்படித்தான் வரலாறு எழுதப்படுகிறது! ஆலைகள் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படுவது பற்றிய தகவலைக் காவுத்ஸ்கி முதலாளிகளின், தூதவ் ஆட்களின் ''சுதந்திர'' பத்திரிகைகளில் இருந்து பெற்றிருப்பார்.... வர்க்கங்களுக்கு அப்பால் நிற்கும் இந்த ''காரியக்கார அறிஞர்'' அற்புதமான பேர்வழிதான் உண்மை! ஆலைகள் குடியரசிடம் மட்டுமே ஒப்படைக்கப்படுகின்றன எனவும் அவை சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஒரு உறுப்பமைப்பான தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலால் நிர்வகிக்கப்படுகிறது எனவும் இது தொழிற்சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையே பிரதானமாகக் கொண்டு அமைந்தது எனவும் சுட்டும் எண்ணற்ற மெய்விவரங்கள் குறித்து காவுத்ஸ்கி ஒரு வார்த்தை கூடச் சொல்ல மறுக்கிருர். ''கூட்டில் அடைந்த மனிதரின்''[71] பிடிவாதத்துடன் அவர் ஒரு விஷயத்தையே விடாப்பிடியாகத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருக்கிருர்: உள்நாட்டுப் போர் இல்லாத, சர்வாதிகாரம் இல்லாத, நல்லபுள்ளி விவரங்களுடனுன அமைதியான ஜனநாயகத்தை எனக்குத்

தருவீர் (சோவியத் குடியரசு ஒரு புள்ளிவிவர சேவையை நிறுவியுள்ளது, இதில் ருஷ்யாவில் இருக்கும் சிறந்த புள்ளிவிவர நிபுணர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர், ஆனல் இலட்சியப் புள்ளிவிவரங்களை விரைவில் பெறுவது இயலாது). ஒரே சொல்லில் கூறினல் காவுத்ஸ்கி கோருவது புரட்சி இல்லாத, மூர்க்கமான போராட்டம் இல்லாத, வன்முறை இல்லாத ஒரு புரட்சி ஆகும். இது தொழிலாளர்களும் முதலாளிகளும் பதட்டமடையாத வேலைநிறுத்தங்களைக் கோருவதற்குச் சமமாகும். இந்த வகையான ''சோஷலிஸ்டு''க்கும் சாமானிய மிதவாத அதிகாரவர்க்கப் பேர்வழிக்கும் இடையிலான வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முயலுங்கள், பார்ப்போம்!

இத்தகைய ''மெய் விவரங்களை'' நம்பி, அதாவது எண்ணற்ற மெய்விவரங்களை வேண்டுமென்றே ஆணவத்துடன் புறக்கணித்து காவுத்ஸ்கி ''முடிவாகக் கூறுவதாவது'':

''சோவியத்துகளில் போலவே, வேறுவகைப்பட்டவர்களாக இருந்த போதிலும் சோஷலிஸ்டுகளே மேலாதிக்கம் வகித்திருந்த அரசியல் நிர்ணய சபையில் இருந்து பெற்றதை விடவும் அதிகமாக, வெறும் அரசாணைகள் மட்டுமன்றி மெய்யான நடைமுறை ஆதாயம் என்ற பொருளில் சோவியத் குடியரசின் கீழ் ருஷ்யப் பாட்டாளிகளால் பெற முடிந்ததா என்பது ஐயத்துக் குரியதாகும்'' (பக்கம் 58).

இது ஒரு முத்தான கருத்து இல்லையா? இந்தக் கடைமுடிவை சாத்தியமான அளவு மிகவும் பரவலாக ருஷ்யத் தொழிலாளிகள் மத்தியில் பரப்பும்படி காவுத்ஸ்கியின் ஆர்வலர்களுக்கு ஆலோசனை கூறுகிறோம். ஏனெனில் தமது அரசியல் சீர்கேட்டின் ஆழத்தினை அளவிடுவதற்கு இதைவிடச் சிறந்த விவரப்பொருட்களை வழங்கியிருக்க முடியாது. தொழிலாளத் தோழர்களே, காவுத்ஸ்கியும் ஒரு ''சோஷலிஸ்டாகவே'' இருந்தார், ''வகை'' மட்டும் ''வேறு!'' வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷிவிக்குகள் தமக்குத் தாமே ''சுவீகரித்துக் கொண்ட'' பெயர், தலைப்பு வரலாற்றாசிரியர் காவுத்ஸ்கிக்குத் திருப்திதருவதாக இருக்கிறது. கேரென்ஸ்கியின் கீழ் மென்ஷிவிக்குகளும் வலதுசாரி சோஷ

லிஸ்டு-புரட்சியாளர்களும் ஏகாதிபத்தியக் கொள்கையை யும், முதலாளித்துவ வர்க்கத்தின் சூறையாடும் செயல்களை யும் ஆதரித்தார்கள் என்பதைக் காட்டும் மெய்விவரங்களைப் பற்றி அவர் கேட்கவே மறுக்கிருர், அரசியல் நிர்ணய சபை யில் இருந்த பெரும்பான்மை ஏகாதிபத்தியப் போரின் மற் றும் முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் இதே வீரர்களைக் கொண்டதாக இருந்தது என்ற மெய்விவரம் குறித்து அவர் காலமறிந்து மௌனம் சாதிக்கிருர். இதற்குப் பெயர் ''பொருளாதாரப் பகுத்தாய்வு''!..

முடிவாக இந்தப் ''பொருளாதாரப் பகுத்தாய்வின்'' இன்னெரு மாதிரியை மேற்கோள் காட்டுகிறேன்:

''...ஒன்பது மாதகாலம் நிலவிய பிறகு, சோவியத் குடி யரசு பொதுவான நலவாழ்வைப் பரவலாக்குவதற்குப் பதில் பொதுவான இல்லாமை ஏன் இருக்கிறது என்பதை விளக்க வேண்டிய கட்டாயத்தை உணர்ந்தது'' (பக்கம் 41).

இத்தகைய வாதங்களை நாம் வழக்கமாக காடேட்டுகளின் வாய் முகமாகக் கேட்டு வருகிறோம். ருஷ்யாவில் இருக்கும் முதலாளித்துவ சேவகர்கள் அனைவரும் இந்த வழியில் தான் வாதம் புரிகிருர்கள்: ஒன்பது மாதங்களுக்குப் பிறகான உங் கள் பொதுவான நலவாழ்வை எங்களுக்குக் காட்டுங்கள்— இது, நாலாண்டுகால நாசகரப் போருக்குப் பிறகு, ருஷ்யா வில் முதலாளித்துவ நாச வேலைக்கும் கலவரங்களுக்கும் விதேசி மூலதனம் சர்வாம்ச ஆதரவு அளித்துள்ள நிலையில் கேட்கப்படுகிறது. உள்ளபடியே காவுத்ஸ்கிக்கும் ஒரு எதிர்ப் புரட்சி முதலாளிக்கும் இடையே அறவே எந்த ஒரு வித்தி யாசமும், வித்தியாசத்தின் ஒரு சாயல் கூட இருக்கவில்லை என்பது திண்ணம். அவரது ''சோஷலிச வேடம்'' போர்த்த கவர்ச்சியான பேச்சு, கர்னீலவின் ஆட்கள், தூத்தவின் ஆட் கள் மற்றும் கிரஸ்னேவின் ஆட்கள் ருஷ்யாவில் துலக்கமா யும் அலங்காரம் இன்றியும் சொல்வதையே திருப்பிக் கூறு கிறது.

* * *

மேலே குறிப்பிடப்பட்ட வரிகள் 1918 நவம்பர் 9ந் தேதி எழுதப்பட்டவை. அதே நாள் இரவில் வெற்றிகரமான புரட்சி

யின் துவக்கத்தினை அறிவிக்கும் செய்தி ஜெர்மனியிலிருந்து கிடைத்தது. முதலில் ஆட்சி அதிகாரம் தொழிலாளர், படையாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் கரங்களுக்கு வந்து சேர்ந்து கீல் மற்றும் இதர வடதிசை நகர்கள், துறைமுகங்களிலும், பிறகு சோவியத்தின் கரங்களுக்கு ஆட்சி அதிகாரம் வந்து சேர்ந்த பெர்லினிலும் வெற்றிகரமான புரட்சி துவங்கியது.[72]

காவுத்ஸ்கி பற்றியும் பாட்டாளி வர்க்கப் புரட்சி குறித்தும் பிரசுரத்துக்கு இன்னும் என்னல் எழுதப்படவிருந்த முடிவுரை இப்போது தேவைப்படாதது ஆகிவிட்டது.

1918 நவம்பர் 10

ந். லெனின்

பிற்சேர்க்கை 1

அரசியல் நிர்ணய சபை மீதான ஆய்வுரைகள்

பிற்சேர்க்கை 2

அரசு பற்றிய வண்டர்வேல்டின் புதிய புத்தகம்

காவுத்ஸ்கியின் புத்தகத்தை நான் படித்த பிறகு மட்டுமே வண்டர்வேல்டு எழுதிய அரசுக்கு எதிராக சோஷலிசம் (பாரிஸ், 1918) எனும் புத்தகம் பற்றிய பரிச்சயம் பெறுவதற்குரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இந்த இரண்டு புத்தகங்களேயும் குறித்த ஒப்புநோக்கு யோசனை தானுகவே முன் வருகிறது. காவுத்ஸ்கி இரண்டாம் அகிலத்தின் (1889-1914) சித்தாந்தத் தலைவர் ஆவார், அதே போதில் சர்வதேச சோஷலிஸ்டு குழுமத்தின்[73] தலைவர் என்ற முறையில் வண்டர்வேல்டு அதன் அதிகாரபூர்வமான பிரதிநிதி ஆவார். இருவரும் இரண்டாம் அகிலத்தின் முழுமையான திவால் நிலையினை உருவகப்படுத்துகிறுர்கள், இருவரும் அனுபவம் மிக்க பத்திரிகையாளரின் தனி சாமர்த்தியத்துடன் மார்க்சிய சுலோகங்களால் இந்த திவால் நிலையையும், தமது சொந்த திவால் நிலையையும், முதலாளித்துவத்தின் பக்கம் தாம் துறந்தோடி விட்டதையும் ''சூழ்ச்சித்திறமுடன்'' மூடி மறைக்கிறுர்கள். ஒருவர் நமக்கு ஜெர்மன் சந்தர்ப்பவாதத்துக்குத் தனிமாதிரி எதுவோ அதன் முனைப்பான உதாரணத்தை வழங்குகிறுர். முதலாளித்துவ வர்க்கத்தால் ஏற்க முடியாத எல்லாவற்றையும் மார்க்சியத்திலிருந்து வெட்டி எறிவது மூலம் அதைப் படுமோசமாகப் புரட்டி கவர்ச்சியற்ற முறையில் கற்பனுவாதம் செய்து விடுகிறது இது. மற்றவருடையது ஆதிக்கம் செலுத்தும் சந்தர்ப்பவாதத்தின் லத்தீன் வகை—ஓரளவுக்கு மேற்கு ஐரோப்பிய (அதாவது ஜெர்மனிக்கு மேற்கத்திய) வகைக்கு மாதிரியாகும், இது அதிக நெளிவு சுளிவானது, கவர்ச்சியின்மை குறைந்தது, அதே

பிரதான முறையில் ஆனால் மேலும் அதிகச் சூழ்ச்சித் திறத்துடன் மார்க்சியத்தைப் புரட்டுகிறது.

இரண்டு பேரும் அரசு பற்றிய மார்க்சின் போதனையையும், அதே போல பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய அவரது போதனையையும் அடிப்படையாகவே புரட்டுகின்றனர். வண்டர்வேல்டு முந்திய விஷயத்தை அதிகமாக எடுத்துக் கவனிக்கிறார், காவுத்ஸ்கி பிந்தியதை எடுத்துக் கவனிக்கிறார். இந்த இரண்டு விஷயங்களுக்கும் இடையிலான மிகவும் நெருக்கமான பிரிக்க முடியாத தொடர்பை இருவரும் மழுக்கடிக்கிறார்கள். இருவரும் சொல்லளவில் புரட்சியாளர்கள், மார்க்சியவாதிகள், செயலில் ஓடுகாலிகள். இருவரும் புரட்சியைச் சொற்றொடர்கள் மூலம் தள்ளிவிடுவதற்காக சகல முயற்சிகளையும் மும்முரமாகச் செய்பவர்கள். மார்க்ஸ், எங்கெல்சின் நூல்களில் எங்கும் பரவிநிற்கும் எதுவும், சோஷலிசத்தை அதன் முதலாளித்துவ கேலிச்சித்திரத்தில் இருந்து இனம் பிரித்துக் காட்டுவதான, அதாவது புரட்சிப் பணிகளைச் சீர்திருத்தப் பணிகளில் இருந்து தனிப்படுத்தி தெளிவாக்கம் செய்யும், புரட்சிகரப் போர்த்தந்திரங்களை சீர்திருத்தவாதப் போர்த்தந்திரங்களில் இருந்து தனிப்படுத்தித் தெளிவாக்கம் செய்யும், கூலி உழைப்பு முறை அல்லது ஆட்சியை ஒழிக்கும் பாட்டாளியின் பாத்திரத்தை, ஏகாதிபத்திய மிகைலாபம் மற்றும் மிகைக்கொள்ளையில் ஒரு துளியை முதலாளித்துவ வர்க்கத்துடன் பங்கு வைத்துக் கொள்ளும் ''வல்லரசுகளின்'' பாட்டாளியின் பாத்திரத்தில் இருந்து தனிப்படுத்தித் தெளிவாக்கம் செய்யும் எதுவுமே அவர்கள் இருவரிடமும் கிடையாது.

இந்த மதிப்பீட்டுக்கு ஆதரவாக வண்டர்வேல்டின் மிக முக்கியமான சில வாதங்களை நாம் மேற்கோள் காட்டுவோம்.

காவுத்ஸ்கியைப் போலவே வண்டர்வேல்டும் மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துக்களை மிகவும் ஆர்வத்துடன் மேற்கோள் காட்டுகிறார். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எது முற்ற முழுமையாக ஏற்கவியலாததோ, எது சீர்திருத்தவாதியிடம் இருந்து ஒரு புரட்சியாளனை வேறுபடுத்திக் காட்டுமோ அதைத் தவிர்த்து நீங்கள் விரும்பும் வேறு எதையும்

மார்க்ஸ், எங்கெல்சின் நூல்களில் இருந்து காவுத்ஸ்கியைப் போலவே மேற்கோள் காட்டுகிறுர். பாட்டாளிகள் அரசியல் ஆட்சி அதிகாரத்தை வென்று பெற்றது குறித்து அவர் சரள மாகப் பேசுகிறுர், ஏனெனில் நடைமுறை இதைக் கருராயும் நாடாளுமன்ற வரம்புகளுக்குள் ஏற்கெனவே கட்டுப்படுத்தி விட்டது. ஆனுல், பாரிஸ் கம்யூனின் அனுபவத்துக்குப் பிறகு மார்க்சும் எங்கெல்சும், தொழிலாளி வர்க்கம் தயார் நிலை யில் இருக்கும் அரசு இயந்திரத்தை அப்படியே கைப்பற்றி நிற்பது போதாது அதை தகர்த்தெறிய வேண்டும் எனும் உண்மையைத் தெளிவாக்கம் செய்வது மூலம் ஓரளவுக்குப் பழசாகிப்போன கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் குறையை நிரப்ப வேண்டுவது அவசியம் எனக் கண்ட மெய்நடப்பு சம் பந்தமாக—அவருக்கு தனி ஒரு வார்த்தை கூடச் சொல் வதற்கு இல்லை! பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனுபவத் தில் எது மிகவும் அத்தியாவசியமானதோ, எது பாட்டாளி வர்க்கப் புரட்சியை முதலாளித்துவ சீர்திருத்தத்தில் இருந்து துல்லியமாயும் வேறுபடுத்திக் காட்டுகிறதோ அதைப் பற்றி ஏதோ உடன்பாட்டில் போல வண்டர்வேல்டும் காவுத்ஸ்கி யைப் போலவே பூரண மவுனம் சாதிக்கிறுர்.

காவுத்ஸ்கியைப் போலவே வண்டர்வேல்டும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் சொற்ருெடர் மூலம் தள்ளிவிடு வதற்காக மட்டுமே அதைப் பற்றி பேசுகிறுர். காவுத்ஸ்கி இதைப் படுமோசமாகப் புரட்டுவது மூலம் செய்தார். வண் டர்வேல்டு இதை மேலும் சூழ்ச்சித்திறமான வழியில் புரி கிறுர். அவரது புத்தகத்தின் ஒரு பாகமான 4ஆம் பிரிவில் ‘‘பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சி அதிகாரம் வென்று பெறுவது’’ பற்றிய குறிபொருள் மீது எழுதும் போது உப பிரிவு ஆவை ‘‘பாட்டாளி வர்க்கத்தின் கூட்டு சர்வாதி காரம்’’ எனும் விஷயத்துக்கு ஒதுக்கி மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துக்களை ‘‘மேற்கோள் காட்டி’’ (நான் மீண்டும் கூறு கிறேன்: துல்லியமாயும் பிரதான அம்சம் சம்பந்தமாக, அதா வது பழைய முதலாளித்துவ ஜனநாயக அரசு இயந்திரத் தைத் தகர்ப்பது பற்றியவற்றை ஒதுக்கி விட்டு) பின்வரு மாறு முடிக்கிறுர்:

''...சோஷலிஸ்டு வட்டாரங்களில் சமுதாயப் புரட்சி பின்வரும் தன்மையில் பொதுவாகக் கருதிப்பார்க்கப்படுகிறது: ஒரு புதிய கம்யூன், இந்தத் தடவை ஒரு இடத்தில் அல்ல ஆனல் முதலாளித்துவ உலகின் பிரதானக் கேந்திரங்களில் வெற்றி வாகை சூடும்.

''இது ஒரு கருதுகோள் தான், ஆனல் இப்போது நடக்க முடியாதது என எதுவும் இல்லாத கருதுகோள். போருக்குப் பிற்பட்ட காலத்தில் பல நாடுகளில் முன்பின் கண்டிராத வர்க்கப் பகைமைகளும் சமுதாய அமளிகளும் காணப்படும் என்பது மேலும் தெளிவாகி வரும் சமயம் இது.

ருஷ்யப் புரட்சியின் இடர்ப்பாடுகள் குறித்துப் பேசாமல் பாரிஸ் கம்யூனின் தோல்வி எதையாவது நிரூபித்துக் காட்டுகின்றது என்றல், சந்தர்ப்ப சூழல்களின் வலிமை காரணமாகத் தன் கரங்களில் வரும் ஆட்சி அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்துவதற்குப் பாட்டாளி வர்க்கம் தன்னைப் போதியளவுக்குத் தயார் செய்து கொள்ளும் வரையில் முதலாளித்துவ அமைப்புக்கு முடிவு கட்டுவது என்பது சாத்தியமல்ல என்பதையே இது நிரூபிக்கிறது'' (பக்கம் 73).

விவாதத்திற்குரிய இப்பிரச்சினை மீது இனி மேல் அறவே எதுவும் கிடையாது!

இரண்டாம் அகிலத்தின் தலைவர்களும் பிரதிநிதிகளும் இங்கே தான்! 1912ல் அவர்கள் பாசெல் அறிக்கையில் கையொப்பமிட்டார்கள். அது 1914ல் வெடித்தெழுந்த அதே போருக்கும் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் இடையிலான தொடர்பு குறித்து வெளிப்படையாகப் பேசுகிறது, அதை ஒரு அச்சுறுத்தலாகக் காட்டுகிறது. ஆனல் போர் வெடித்து ஒரு புரட்சிகர நிலைமை எழுந்தபோது காவுத்ஸ்கிகளும் வண்டர்வேல்டுகளும் புரட்சியிடமிருந்து தாமே விலகிவிடத் தொடங்கினர். பாரிஸ் கம்யூன் மாதிரியான ஒரு புரட்சி மட்டுமே இயல்பாக நிகழ்க்கூடாத ஒரு கருதுகோள் அல்ல! இது ஐரோப்பாவில் சோவியத்துகளின் சாத்தியமான பாத்திரம் பற்றிய காவுத்ஸ்கியின் வாதங்களுக்கு முற்றும் இசைவானதாகும்.

ஆனல் இந்த வழியில் தான் ஒவ்வொரு படித்த மிதவாதியும் வாதம் புரிகிருன்: ஒரு புதிய கம்யூன் ''இயல்பாக நிகழக் கூடாதது'' அல்ல எனவும் சோவியத்துகள் மாபெரும் பாத்

திரம் வகிக்கவிருக்கும் எனவும் இத்தியாதி இப்போது அவன் ஒத்துக் கொள்வான் என்பதில் சந்தேகமில்லை. ஒரு தத்துவாளர் என்ற முறையில் ஓர் அரசு என்ற முறையிலான கம்யூனின், சோவியத்துகளின் புதிய முக்கியத்துவத்தைப் பகுத்தாய்வதால் ஒரு மிதவாதியிடமிருந்து பாட்டாளிப் புரட்சியாளர் துல்லியமாயும் வேறுபடுகிறார். பாரிஸ் கம்யூனின் அனுபவத்தைப் பகுத்தாய்ந்த போது இந்தப் பொருள் சம்பந்தமாக மார்க்சும் எங்கெல்சும் இவ்வளவு நீளமாக எடுத்துச் சொன்ன எல்லாவற்றையும் வண்டர்வேல்டு மவுனமாக காணாது கடந்து செல்கிறார்.

ஒரு செயல்துறையில் உண்மையான ஊழியர், ஒரு அரசியல்வாதி என்ற முறையில் ஒரு மார்க்சியவாதி, ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தேவையைத் தெளிவாக்கம் செய்யும் (கம்யூன் மாதிரி, சோவியத் மாதிரி அல்லது உதாரணமாக ஏதாவதொரு மூன்றும் மாதிரி) இதற்காகத் தயாரிப்பின் அவசியத்தை விளக்கம் செய்யும், மக்கள் மத்தியில் புரட்சிக்கான பிரசாரம் நடத்தும், புரட்சிக்கு எதிரான குட்டி முதலாளித்துவத் தப்பெண்ணங்களை மறுத்து நிரூபிக்கும் கடமையினை சோஷலிசத்திற்குத் துரோகம் செய்பவர்கள் மட்டுமே இப்போது தட்டிக் கழிக்க முடியும் என்பதை தெளிவுபடுத்தி இருக்க வேண்டும்.

ஆனால் காவுத்ஸ்கியோ வண்டர்வேல்டோ இந்த வகைப் பட்ட எதையும் செய்வதில்லை. இதற்குக் குறிப்பான காரணம், தொழிலாளர் மத்தியில் சோஷலிஸ்டுகள் மற்றும் மார்க்சியவாதிகள் என்ற தமது பொது மதிப்பைக் காத்துக் கொள்ள விரும்பும் அவர்கள் தாமே சோஷலிசத்தின் துரோகிகள் ஆவர்.

இந்த விஷயத்தின் தத்துவார்த்த வரையறுப்பை எடுத்துக் கொள்வோம்.

ஒரு ஜனநாயகக் குடியரசிலும் கூட அரசு என்பது ஒரு வர்க்கத்தை இன்னொரு வர்க்கம் அடக்குமுறை செய்யும் ஒரு இயந்திரமே தவிர வேறு எதுவும் அல்ல. காவுத்ஸ்கிக்கு இந்த உண்மை தெரியவரும், இதை அவர் ஒப்புக் கொள்கிறார், இதனுடன் உடன்படுகிறார். ஆனால்... ஆனால் பாட்டாளி

வர்க்க அரசினை நிறுவும் போது, என்ன காரணங்களுக்காக எந்த வழிகளில் எந்தக் குறிப்பிட்ட வர்க்கத்தினை பாட்டாளி வர்க்கம் ஒடுக்க வேண்டும் என்ற அடிப்படைக் கேள்வியை அவர் தட்டிக் கழிக்கிறார்.

வண்டர்வேல்டும் மார்க்சியத்தின் இந்த அடிப்படைக்கூற்றுடன் பரிச்சயம் கொண்டிருக்கிறார், ஒப்புக் கொள்கிறார், அதனுடன் உடன்படுகிறார், இதை மேற்கோள் காட்டுகிறார் (அவரது நூலில் பக்கம் 72), ஆனால்... அவர் (முதலாளித்துவ கனவான்களுக்கு) ''விரசமான'' சுரண்டலாளர்களின் எதிர்ப்பை ஒடுக்குவது எனும் விஷயம் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்வது இல்லை!!

வண்டர்வேல்டு மற்றும் காவுத்ஸ்கி இருவரும் இந்த ''விரசமான'' விஷயத்தை முழுமையாகத் தட்டிக் கழித்து விட்டார்கள். இங்கு தான் இவர்களது துரோகம் காணக் கிடக்கிறது.

காவுத்ஸ்கியைப் போலவே இயக்கவியலுக்குப் பதில் கதம்பவாதத்தைப் புகுத்துவதில் வண்டர்வேல்டும் துறை போகிய பேர்வழிதான். ஒரு புறத்தில் இதை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது, மறு பக்கம் தவறை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு புறம் அரசு எனும் சொல் ''தேசம் முழுமையும்'' என்று அர்த்தத்தைத் தரலாம் (லிட்ரே அகராதி காண்க—உண்மையில் அறிவு வளம் நிரம்பிய நூல், அல்லவா—மற்றும் வண்டர்வேல்டின் நூல் பக்கம் 87), மறு புறம் அரசு எனும் சொல் ''அரசாங்கம்'' என்ற பொருள் தரலாம் (அதே நூல்). வண்டர்வேல்டு இந்த நன்குணர்ந்த தான வெற்றுரையை ஒப்புறுதியுடன் மார்க்ஸ் நூல்களில் இருந்து தரும் மேற்கோள்களுடன் அக்கம் பக்கமாக மேற்கோள் காட்டுகிறார்.

''அரசு'' எனும் சொல்லின் மார்க்சிய அர்த்தம் அதன் சாமானிய அர்த்தத்திடமிருந்து வேறுபடுகிறது என்று எழுதுகிறார் வண்டர்வேல்டு: இதனால் ''தவறாகப் பொருள் கொள்ளும்'' நிலை எழலாம். ''மார்க்சும் எங்கெல்சும் அரசை விரிவான பொருளிலான அரசு என்பதாகவோ, ஒரு வழி காட்டும் உறுப்பமைப்பு என்பதாகவோ, சமுதாயத்தின் பொது

நலன்களின் (intérets généraux de la société) பிரதிநிதி அமைப்பு என்பதாகவோ கருதவில்லை. ஆட்சி அதிகாரம் என்ற முறையில் அரசாக, அதிகார பலத்தின் உறுப்பமைப்பு என்ற முறையில் அரசாக, ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் கருவி என்ற முறையில் அரசாகவே கருதினர்'' (பக்கங்கள் 75-76, வண்டர்வேல்டின் புத்தகம்).

அரசு ஒழிக்கப்படுதல் குறித்து அதன் இரண்டாவது அர்த்தத்தில் மட்டுமே மார்க்சும் எங்கெல்சும் கூறுகிறார்கள். ''...மிகவும் பரமமான வலியுறுத்தல்கள் சரிநுட்பமில்லாது போய்விடும் அபாயம் உள்ளது. ஒரு வர்க்கத்தின் தனி முழுமையான ஆதிக்கத்தை அடிப்படையாக்கிய ஒரு முதலாளித்துவ அரசுக்கும், வர்க்கங்கள் அனைத்தையும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட பாட்டாளி அரசுக்கும் இடையே பல இடைமாற்றக் கட்டங்கள் உள்ளன'' (பக்கம் 156).

அங்கே வண்டர்வேல்டின் ''தன்மைக்கு'' ஒரு உதாரணம் உங்களுக்குக் கிட்டுகிறது. இது காவுத்ஸ்கியின் தனமையில் இருந்து சொற்பம் மட்டுமே வேறுபட்டது, சாரத்தில் அதனுடன் முற்றொருமையானது. இயக்கவியல் பரம உண்மைகளை மறுத்து ஒதுக்கி, எதிர்மறைகளின் தொடர்ச்சியான மாற்றங்களையும் வரலாற்றின் நெருக்கடியின் உட்பொருளையும் விளக்குகிறது. மிகவும் பரமமான கூற்றுக்களை கதம்பவாதி விரும்புவதில்லை, காரணம் அவர் புரட்சிக்குப் பதிலாக ''இடைமாற்ற கட்டங்களை'' புகுத்தி தனது குட்டி முதலாளித்துவ, அற்பவாத விருப்பங்களை முன்தள்ள விரும்புகிறார்.

முதலாளிகளின் வர்க்க ஆதிக்கத்தின் உறுப்பமைப்பு என்ற முறையிலான அரசுக்கும் பாட்டாளி வர்க்க ஆதிக்கத்தின் உறுப்பமைப்பு என்ற முறையிலான அரசுக்கும் இடையிலான மாறுதல் கட்டம் புரட்சியே, அதன் பொருள் முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி அதன் அரசு இயந்திரத்தை உடைத்து எறிந்து தகர்ப்பதே என்பதைப் பற்றி காவுத்ஸ்கிகளோ வண்டர்வேல்டுகளோ எதுவுமே கூறுவதில்லை.

முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்தை ஒரு வர்க்கத்தின், பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தால் மாற்றீடு செய்ய வேண்டும் எனும், புரட்சியின் ''இடைமாற்ற கட்டங்

களை'' த் தொடர்ந்து பாட்டாளி அரசு படிப்படியாக உலர்ந்து உதிரும் ''இடை மாற்ற கட்டங்கள்'' வரும் எனும் உண்மையை காவுத்ஸ்கிகளும் வண்டர்வேல்டுகளும் மழுக்கடிக்கிறார்கள்.

இங்குதான் அவர்களது அரசியல் துரோகம் காணக்கிடக்கிறது.

இங்குதான் அவர்கள் இயக்கவியலுக்குப் பதில் கதம்பவாதத்தையும் குதர்க்கவாதத்தையும் திணிக்கும் அவர்களது தத்துவார்த்த, தத்துவஞானப் போக்கு காணக்கிடக்கிறது. இயக்கவியல் ஸ்தூலமானது, புரட்சிகரமானது, ஒரு வர்க்கத்தின் சர்வாதிகாரத்தில் இருந்து இன்னொரு வர்க்கத்தின் சர்வாதிகாரத்துக்கு ''மாறிச் செல்வதற்கும்'' ஒரு ஜனநாயகப் பாட்டாளி அரசில் இருந்து அரசே இல்லாத (''அரசு உலர்ந்து உதிர்ந்து போகும்'') நிலைக்கு ''மாறிச் செல்வதற்கும்'' இடையிலான வேறுபாட்டைக் கண்டறிகிறது. முதலாளித்துவ வர்க்கத்தினரை மகிழ்விக்க வேண்டி காவுத்ஸ்கிகள் மற்றும் வண்டர்வேல்டுகளின் கதம்பவாதமும் குதர்க்கவாதமும் வர்க்கப் போராட்டத்தில் ஸ்தூலமாகவும் துல்லியமாகவும் இருக்கும் எல்லாவற்றையும் மங்கலாக்கி மறைத்து அதற்குப் பதில் ''மாறிச் செல்வது'' எனும் பொதுவான கருத்துருவை முன்வைக்கின்றன. இதன் கீழ் அவர்கள் (நமது காலத்திய அதிகார பூர்வமான சமூக-ஜனநாயகவாதிகளில் 10ல் 9 பேர் மறைத்துக் கொள்வது போல) புரட்சியைக் கைவிட்டுவிட்ட தமது செயலை மறைத்துக் கொள்ளலாம்!

ஒரு கதம்பவாதி மற்றும் குதர்க்கவாதி என்ற முறையில் வண்டர்வேல்டு காவுத்ஸ்கியை விடவும் அதிகத் தேர்ச்சிமிக்கவர், நுண்ணயம் கொண்டவர். ஏனெனில் ''குறுகிய அர்த்தத்திலான அரசில் இருந்து விரிந்த அர்த்தத்திலான அரசுக்கு மாறிச் செல்வது'' எனும் தொடர், புரட்சியின் எல்லா வகைப்பட்ட பிரச்சினைகளையும், புரட்சிக்கும் சீர்திருத்தத்திற்கும் இடையிலான எல்லா வேறுபாடுகளையும், மார்க்சியவாதிக்கும் மிதவாதிக்கும் இடையிலான வேறுபாட்டைக் கூடத் தட்டிக் கழிப்பதற்கான சாதனமாக உதவ முடியும். ஏனெனில் இந்த ''பொது'' அர்த்தத்திலான ''மாறுதல் கட்

டங்களை'' ஐரோப்பியக் கல்வி பயின்ற எந்த முதலாளியாவது ''பொதுவாக'' மறுதலிக்க நினைப்பாரா?

வண்டர்வேல்டு எழுதுகிறார்:

''பின்வரும் இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாமல் உற்பத்தி மற்றும் பரிவர்த்தனை சாதனங்களை சமூகமயமாக்குவது சாத்தியமல்ல என்பதில் நான் கெட்டுவுடன் உடன்படுகிறேன்:

1. ஒரு வர்க்கத்தின் மீது இன்னொரு வர்க்கம் ஆதிக்கம் புரியும் வகையில் உள்ள இன்றைய அரசை மக்களின் தொழில் அரசு என்று மேங்கர் குறிப்பிடும், பாட்டாளி வர்க்கத்தால் அரசியல் ஆட்சி அதிகாரம் வென்று பெறப்பட்ட ஒன்றாக மாற்றுவது.

2. அதிகார பலத்தின் உறுப்பமைப்பு எனும் அரசை வழிகாட்டும் உறுப்பமைப்பு எனும் அரசிடம் இருந்து பிரிப்பது அல்லது சான்-சிமோன் விளக்கப்படி நபர்களின் அரசாங்கத்தைப் பொருட்களின் நிர்வாகத்தில் இருந்து பிரிப்பது'' (பக்கம் 89).

இதை வண்டர்வேல்டு கொட்டை எழுத்தில் போட்டு இந்தக் கூற்றுகளின் முக்கியத்துவம் மீது விசேஷ அழுத்தம் தருகிறார். ஆனால் இது ஒரு கதம்பவாத கலவைக் கூளத்துறையாகும், மார்க்சியத்துடன் முற்றாக முறித்துக் கொள்வதாகும்! ''மக்களின் தொழில் அரசு'' என்பது பழைய ''சுதந்திர மக்கள் அரசு'' என்பதன் வெறும் பொழிப்புரையேயாகும். இதை எழுபதாம் ஆண்டுகளில் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் பகட்டாக விளம்பரப்படுத்தினார்கள், இதை ஒரு அபத்தம் என்று எங்கெல்ஸ் தரப்படுத்திச் சுட்டினார்.[74] ''மக்கள் தொழில் அரசு'' என்பது குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளுக்கு (நமது இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் போன்றோருக்கு) தக்கதான தொடர், இத்தொடர் வர்க்க கருத்துருக்களின் இடத்தில் வர்க்கம் அற்ற கருத்துருக்களைப் புகுத்துகிறது. வண்டர்வேல்டு பாட்டாளி வர்க்கம் (ஒரு வர்க்கம்) அரசு ஆட்சி அதிகாரத்தை வென்று பெறுவதை ''மக்கள் அரசுடன்'' பக்கத்துக்குப் பக்கமாக வைக்கிறார், அதோடு இதன் விளைவு ஒரு கலவைக் கூளமே என்பதைக் காணவும் தவறுகிறார். காவுத்ஸ்கியின்

''தூய ஜனநாயகம்'' விஷயத்திலும் கிடைக்கும் விளைவு இதே போன்ற கலவைக் கூளமே, இதேபோன்று வர்க்கப் புரட்சியின், வர்க்கத்தின், பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தின், வர்க்க (பாட்டாளி வர்க்க) அரசின் பணிகளை புரட்சி எதிர்ப்பு அற்பவாத முறையில் புறக்கணிப்பதேயாகும்.

மேலும், அரசு எல்லா வடிவங்களிலும் உலர்ந்து உதிர்ந்து போகும் போது மட்டுமே ஆட்சிகளின் அரசாங்கம் மறையும், பொருட்களின் நிர்வாகத்துக்கு இடம் கொடுக்கும். இந்த ஒப்பளவில் தொலை எதிர் காலம் குறித்துப் பேசும் போது, வண்டர்வேல்டு நாளைய கடமையினை, அதாவது முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவது எனும் கடமையை மூடி மறைத்து மழுக்கடிக்கிறார்.

இந்த வித்தையும் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்துக்கு கீழடங்கி இருப்பதற்குச் சமமானதே. மனிதர்களை ஆளுமை செய்யும் அவசியம் இல்லாத போது என்ன நிகழும் என்பது குறித்து மிதவாதி பேச விருப்பமாக இருக்கிறார். இத்தகைய கேடற்ற கனவுகளில் இறங்கினால் என்ன? ஆனால் தாம் உடைமை நீக்கம் செய்யப்படுவதை எதிர்த்து முதலாளித்துவ வர்க்கம் தோற்றுவிக்கும் எதிர்ப்பை பாட்டாளி வர்க்கம் நசுக்க வேண்டும் என்பது குறித்து—ஒரு வார்த்தை கூட இல்லை. முதலாளித்துவ வர்க்க நலன்கள் இதைக் கோருகின்றன போலும்.

அரசுக்கு எதிராக சோஷலிசம். இதுவே பாட்டாளிகளுக்கு வண்டர்வேல்டு புரியும் தலைவணக்கம். தலைவணங்குவது என்பது கடினமல்ல, தனது வாக்காளருக்கு எப்படித் தலைவணக்கம் செய்வது என்பதை ஒவ்வொரு ''ஜனநாயகவாதி'' அரசியலாளரும் அறிவார். ''தலைவணக்கத்தின்'' மறைவில் புரட்சி எதிர்ப்பு, பாட்டாளி எதிர்ப்பு அர்த்தம் மெல்ல நுழைக்கப்படுகிறது.

நவீன முதலாளித்துவ ஜனநாயகத்தின் நாகரிகமான, செவ்வியான, வாசனையூட்டிய புறத்தோற்றத்தின் கீழே எந்த அளவுக்கான மோசடி, வன்முறை, ஊழல், பாரபட்சம், போலித்தனம், ஏழை மக்களை ஒடுக்குதல் மறைந்திருக்கிறது என்பதைக் காட்ட வண்டர்வேல்டு ஒஸ்த்ரகோர்ஸ்கி

யின்[75] நூல்களுக்கு விரிவான பொழிப்புரை தருகிறார். ஆனால் இதிலிருந்து அவர் எந்த முடிவையும் மேற்கொள்வதில்லை. முதலாளித்துவ ஜனநாயகம் உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களை ஒடுக்குகிறது என்பதையும், பாட்டாளி வர்க்க ஜனநாயகம் நிச்சயமாயும் முதலாளித்துவ வர்க்கத்தை ஒடுக்கியே தீர வேண்டும் என்பதையும் அவர் காணத் தவறுகிறார். காவுத்ஸ்கியும் வண்டர்வேல்டும் இந்த விஷயத்தில் கண் மூடிகளாக இருக்கிறார்கள். மார்க்சியத்தின் இந்தக் குட்டி முதலாளித்துவ துரோகிகள் தடுமாறி பின்பற்றும் முதலாளித்துவ வர்க்க நலன்கள் இந்த விஷயத்தைத் தட்டிக் கழிக்கலாம், இதைச் சந்தடி இன்றி அடக்கிவிட வேண்டும் அல்லது அத்தகைய அடக்கு முறையின் தேவையை நேரடியாக மறுத்துவிட வேண்டும் என்று கோருகின்றன.

மார்க்சியத்துக்கு எதிராக குட்டி முதலாளித்துவ கதம்ப வாதம், இயக்கவியலுக்கு எதிராக குதர்க்கவாதம், பாட்டாளிப் புரட்சிக்கு எதிராக அற்பவாத சீர்திருத்தவாதம்—இதுவே வண்டர்வேல்டின் புத்தகத்துக்குத் தலைப்பாக இருக்க வேண்டும்.

1918 அக்டோபரில்—நவம்பர் 10க்கு முன்பாக எழுதப்பட்டது
பிற்சேர்க்கை II 1918 நவம்பர் 10க்கு பிறகு எழுதப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 37, பக்கங்கள் 235-338

கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது காங்கிரஸ்[76]

1919, மார்ச் 2-6

முதலாளித்துவ ஜனநாயகம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய ஆய்வுரைகளும் அறிக்கையும்

மார்ச் 4

1. ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கம் வளர்ச்சியடைந்து வருவதைக் கண்டு, முதலாளித்துவ வர்க்கத்தினரும் தொழிலாளர் அமைப்புகளில் இருக்கும் அவர்களது கையாட்களும் சுரண்டலாளரின் ஆதிக்கத்தைத் தாங்கி ஆதரிப்பதற்கான சித்தாந்த மற்றும் அரசியல் வாதங்களைத் தேடிப்பெற மூர்க்கமான முயற்சிகள் செய்து வருகிறார்கள். சர்வாதிகாரத்தைக் கண்டனம் செய்வதும், ஜனநாயகத்தைத் தாங்கி ஆதரிப்பதும் குறிப்பாக இந்த வாதங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன. முதலாளித்துவப் பத்திரிகைகளிலும் 1919 பிப்ரவரியில் நடந்த பேர்ன் மஞ்சள் அகிலத்தின் மாநாட்டிலும்[77] ஆயிரம் வகைகளில் திரும்பத் திரும்பக் கூறப்பட்ட இந்த வாதத்தின் பொய்மையும் போலித்தனமும் சோஷலிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைக் காட்டிக் கொடுக்க மறுக்கும் அனைவருக்கும் தெளிவாகத் தெரியும்.

2. முதலாவதாக, இந்த வாதம் சம்பந்தப்பட்ட வர்க்கத்தின் பிரச்சினையினை முன்வைக்காமலே ''பொதுவான ஜனநாயகத்தையும்'' ''பொதுவான சர்வாதிகாரத்தையும்'' குறித்த கருத்துருக்களைக் கையாளுகிறது. ஜனரஞ்சகம் என்பதாகக் கருதப்படும், இந்த வர்க்க சார்பில்லாத, வர்க்கத்துக்கு மேலானதான விளக்கம் சோஷலிசத்தின் ஆதாரத் தத்துவக் கூறை, அதாவது வர்க்கப் போராட்டம் பற்றிய தத்துவத்தை நேரடியாயும் கேலிவர்ணனை செய்வதாகும். வர்க்கப் போராட்டம் பற்றிய இந்தத் தத்துவத்தை முத

லாளித்துவ வர்க்கத்ினருடன் சேர்ந்து நிற்கும் சோஷலிஸ்டுகள் சொல்லளவில் ஏற்கின்றனர் ஆனுல் செயலில் புறக்கணிக்கின்றனர். ஏனெனில் நாகரிகம் பெற்ற எந்த முதலாளித்துவ நாட்டிலும் ''பொதுவான ஜனநாயகம்'' நிலவவில்லே. அங்கே நிலவுவது முதலாளித்துவ ஜனநாயகம் மட்டுமே. இங்குள்ள பிரச்சினே ''பொதுவான சர்வாதிகாரம்'' பற்றியதல்ல, மாருக தமது ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான போராட்டத்தில் சுரண்டலாளர்கள் தொடுக்கும் எதிர்ப்பை வென்று அகற்றும் பொருட்டு மேற்கொள்ளப்படும், ஒடுக்கிவருவோரும் சுரண்டிவருவோருமான முதலாளித்துவ வர்க்கத்தின் மீதான, ஒடுக்கப்பட்ட வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினேயாகும்.

3. சர்வாதிகாரக் காலப்பகுதியினூடே கடந்து செல்லாமல், அதாவது அரசியல் ஆட்சி அதிகாரத்தை வென்று அடைந்து, மிகவும் ஆவேசமானதும் மிகவும் மூர்க்கமானதும் எந்தக் குற்றத்தையும் புரியத் துணிந்ததுமான சுரண்டலாளரின் எதிர்ப்பை, எப்போதும் தொடுக்கப்படும் இந்த எதிர்ப்பை, பலாத்காரமாக ஒடுக்காமல் ஒடுக்கப்பட்ட வர்க்கம் எதுவும் ஆதிக்கத்தை அடைந்தது இல்லே, அடையவும் முடியாது என்பதை வரலாறு நமக்குப் போதிக்கிறது. ''பொதுவான சர்வாதிகாரத்தை''இடித்துரைத்தும் ''பொதுவான ஜனநாயகத்தைப்'' புகழ்ந்துரைத்தும் வரும் சோஷலிஸ்டுகள் இப்போது முதலாளித்துவ வர்க்க ஆதிக்கத்தைத் தாங்கி ஆதரிக்கிருர்கள். இந்த முதலாளித்துவ வர்க்கத்தினர் முன்னேறிய நாடுகளில் தொடர்ச்சியாகப் பல புரட்சி எழுச்சிகள், உள்நாட்டுப் போர்கள் மூலமும் மன்னர்கள், நிலப்பிரபுக்கள், அடிமையுடைமையாளர்களேயும் அவர்களின் ஆட்சியை மீட்டமைக்கும் முயற்சிகளேயும் பலாத்காரமாக ஒடுக்கியதன் மூலமுமே ஆட்சி அதிகாரத்தை வென்று அடைந்தார்கள். தமது புத்தகங்கள், சிறு வெளியீடுகள், காங்கிரசுகளின் தீர்மானங்கள் மற்றும் பிரச்சாரச் சொற்பொழிவுகளில் எல்லா நாடுகளிலும் உள்ள சோஷலிஸ்டுகள் ஆயிரம் கோடி முறை இந்த முதலாளித்துவ வர்க்கப் புரட்சிகளின், இந்த முதலாளித்துவ வர்க்கச் சர்வாதிகாரத்தின்

வர்க்கத் தன்மையை மக்களுக்கு எடுத்து விளக்கியிருக்கிறூர்கள். இதனுல்தான் ''பொதுவான ஜனநாயகம்'' பற்றிய பேச்சின் திரைமறைவில் முதலாளித்துவ ஜனநாயகத்தை இப்போது தாங்கி ஆதரிப்பதும், ''பொதுவான சர்வாதிகாரம்'' பற்றிய கூக்குரலின் திரைமறைவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்த இன்றைய அலறலும் கூக்குரலும் சோஷலிசத்திற்கு நேரடியாகத் துரோகம் புரிவதாகும். அவை உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்தை நோக்கித் துறந்தோடுவதும், பாட்டாளி வர்க்கத்துக்கு அதன் சொந்த பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான உரிமையினை மறுப்பதுமாகும், மேலும் உலகம் முழுவதிலுமுள்ள முதலாளித்துவ சீர்திருத்தவாதம் வீழ்ச்சியடைந்து போர் ஒரு புரட்சிகர நிலைமையை உருவாக்கியிருக்கும் மெய்யான ஒரு வரலாற்றுச் சந்தியில் முதலாளித்துவ சீர்திருத்தவாதத்தைத் தாங்கி ஆதரிப்பதாகும்.

4. முதலாளித்துவ நாகரிகம், முதலாளித்துவ ஜனநாயகம், முதலாளித்துவ நாடாளுமன்ற அமைப்பு முறை ஆகியவற்றின் வர்க்கத் தன்மை பற்றி விளக்கும் போது எல்லா சோஷலிஸ்டுகளும் மார்க்சும் எங்கெல்சும் மாபெரும் விஞ்ஞான வழிப்பட்ட துல்லியத்துடன் முறைப்படுத்தி முன்வைத்துள்ள கருத்தையே வெளியிட்டுள்ளனர். அதாவது ஆக ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசு என்பது முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தை ஒடுக்கப் பயன்படுத்தும், விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில முதலாளிகள் உழைக்கும் மக்கள் திரளை ஒடுக்கப் பயன்படுத்தும் ஒரு இயந்திரமே தவிர வேறு எதுவுமன்று.[78] இப்போது சர்வாதிகாரத்தை எதிர்த்தும் ஜனநாயகத்திற்கு ஆதரவாயும் கூக்குரலிடுவோர் மத்தியில், சோஷலிசத்தின் இந்த ஆதார உண்மையினை ஏற்றுக்கொள்வதாக தொழிலாளர்களிடம் பிரமாணம் செய்து பிரதிக்ஞை ஏற்காத தனி ஒரு புரட்சியாளர் கூட, தனி ஒரு மார்க்சியவாதி கூட இல்லை. ஆனுல் இப்போது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் போராடும் மனப்பாங்குடன் இருந்து, இந்த ஒடுக்குமுறை இயந்திரத்தை அழிப்பதற்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை

நிலைநாட்டுவதற்கும் செயல் புரிந்து வரும் போது சோஷலிசத்துக்குத் துரோகம் புரிந்துவிட்ட இவர்கள் முதலாளித்துவ வர்க்கம் உழைக்கும் மக்களுக்கு ''தூய ஜனநாயகத்தை'' வழங்கி விட்டதென்றும், எதிர்ப்பைக் கைவிட்டு விட்டது என்றும், உழைக்கும் மக்களின் பெரும்பான்மைக்குக் கீழ்ப் படியத் தயாராக இருப்பதாயும் வாதிடுகின்றனர். ஒரு ஜனநாயகக் குடியரசில் மூலதனத்தால் உழைப்பு ஒடுக்கப்படுவதற்கான ஓர் அரசு இயந்திரம் என்ற எந்த ஒரு சாதனமும் இல்லை, என்றுமே இருந்ததில்லை என்று அவர்கள் அடித்துக் கூறுகிறார்கள்.

5. பாரிஸ் கம்யூன்—இதைச் சோஷலிஸ்டுகள் என்று பகட்டாரவாரம் செய்யும் எல்லோரும் சொல்லளவில் பாராட்டுகின்றனர், ஏனெனில் தொழிலாளர்கள் கம்யூனிடம் ஆர்வத்தோடும் நேர்மையாகவும் அனுதாபம் கொண்டிருந்தனர் என்பதை அவர்கள் அறிவார்கள்—முதலாளித்துவ நாடாளுமன்ற அமைப்பு முறை மற்றும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் வரலாற்று வழியிலான மரபு வயப்பட்ட தன்மையையும், வரம்புக்குட்பட்டதான மதிப்பையும் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியது. இந்த அமைப்புகள் மத்திய காலங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் முன்னேற்றமானவையாக இருப்பினும், பாட்டாளி வர்க்கப் புரட்சி சகாப்தத்தில் இவற்றை அடிப்படையாக மாற்றுவதென்பது தவிர்க்க முடியாத தேவை. மார்க்ஸ்தான் கம்யூனின் வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தைச் சிறந்த முறையில் மதிப்பீடு செய்தார். தமது பகுப்பாய்வில் அவர் முதலாளித்துவ ஜனநாயகம் மற்றும் முதலாளித்துவ நாடாளுமன்ற அமைப்பு முறையின் சுரண்டும் தன்மையினை வெளிப்படுத்தினார். இவற்றின் கீழ் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை சொத்துடைமை வர்க்கங்களின் எந்தப் பிரதிநிதி நாடாளுமன்றத்தில் மக்களைப் ''பிரதிநிதிப்படுத்துவார் மற்றும் அடக்குவார்'' (ver- und zertreten) என்பதை முடிவு செய்யும் உரிமையினை அனுபவிக்கின்றன.[79] இப்போது, சோவியத் இயக்கம் உலகம் முழுவதையும் தழுவியதாகத் திகழ்ந்து எல்லோரும் காணும் வகையில் கம்யூ

னின் பணியினைத் தொடர்ந்து நடத்தி வரும் நேரத்தில், சோஷலிசத்துக்குத் துரோகம் புரிந்தவர்கள் பாரிஸ் கம்யூனின் ஸ்தூலமான அனுபவத்தையும் ஸ்தூலமான படிப்பினைகளையும் மறந்து வருகிறார்கள்,, ''பொதுவான ஜனநாயகம்'' பற்றிய பழைய முதலாளித்துவக் கூளத்தையே திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்கள். கம்யூன் ஒரு நாடாளுமன்ற நிறுவனம் அல்ல.

6. மேலும், கம்யூனானது முதலாளித்துவ அரசாங்கப் பொறியமைவையும் அதிகார வர்க்க, நீதித்துறை, ராணுவ மற்றும் போலீஸ் இயந்திரத்தையும் அவற்றின் அடித்தளங்கள் வரைச் சென்று நசுக்கவும் தகர்க்கவும் முயன்றது என்பதிலும், சட்டமியற்றல் மற்றும் நிர்வாக அதிகாரத்துக்கு இடையே பிரிவினை இல்லாத ஒரு சுய ஆட்சிநிர்வாக தொழிலாளர் திரளின் நிறுவனம் மூலம் மாற்றீடு செய்ய முயன்றது என்பதிலும்தான் உண்மையிலேயே கம்யூனின் முக்கியத்துவம் காணக் கிடக்கிறது.சோஷலிசத்துக்குத் துரோகம் புரிந்தோர் மெய்மையைக் கேலி செய்து, பாட்டாளி வர்க்கக் குடியரசு என்று வர்ணிக்கும் ஜெர்மன் குடியரசு உள்ளிட்ட தற்கால முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசுகள் அனைத்தும் இந்த அரசாங்கப் பொறியமைவை நீடித்து வைத்திருக்கின்றன. எனவே ''பொதுவான ஜனநாயகத்தை'' தாங்கி ஆதரித்துக் கூக்குரலிடுவது உள்ளபடியே முதலாளித்துவ வர்க்கத்தினரையும், சுரண்டலாளர்கள் என்ற முறையில் அவர்களது தனியுரிமைகளையும் தாங்கி ஆதரிப்பதாகும் என்ற கூற்று மீண்டும் முற்றும் தெளிவாக ஊர்ஜிதம் செய்யப்படும்.

7. ''கூட்டம் கூடும் சுதந்திரத்தை'' ''தூய ஜனநாயகத்தின்'' அவசியக்கூறுகளின் ஒரு மாதிரியாக எடுத்துக்கொள்ளலாம். சுரண்டலாளர்கள் தமது ஆட்சி வீழ்த்தப்படுவதை எதிர்த்தும், தமது தனியுரிமைகளை வைத்திருக்கப் போராடியும் வரும் நேரத்தில், அத்தகைய நிலையில் சுரண்டலாளருக்குக் கூட்டம் கூடும் சுதந்திரத்தை வாக்களிப்பது என்பது அபத்தமானது என்பதைத் தனது வர்க்கத்துடன் முறித்துக் கொண்டுவிடாத, வர்க்க உணர்வுடைய ஒவ்வொரு தொழி

லாளியும் மனமாரக் கணித்து உணர்வார். முதலாளித்துவ வர்க்கத்தினர் புரட்சிகர தன்மை வாய்ந்திருந்த போது—1649ல் இங்கிலாந்திலும், 1793ல் பிரான்சிலும்—அன்னியத் துருப்புக்களை அழைத்து கொண்டு தமது ஆட்சியை மீட்டமைப்பதற்கான முயற்சிகளை ஒழுங்கமைக்க வேண்டி ''கூடிய'' முடியாட்சிவாதிகளுக்கும் பிரபுக்களுக்கும் ''கூட்டம் கூடும் சுதந்திரத்தை'' அளிக்கவில்லை. நீண்ட காலமுன்பே பிற்போக்காளர்களாகிவிட்ட இன்றைய முதலாளித்துவ வர்க்கத்தினர், தாம் உடைமை நீக்கம் செய்யப்படுவதற்கு முதலாளிகள் தரும் எதிர்ப்பு எதுவாக இருந்தபோதிலும் அவர்கள் பாட்டாளி வர்க்கத்திடம் இருந்து ''கூட்டம் கூடும் சுதந்திரத்திற்கு'' முன்கூட்டியே உத்தரவாதம் கோருவார்களானல் அவர்களது கபட நாடகம் கண்டு தொழிலாளர்கள் எள்ளி நகையாடுவர்.

மறு புறத்தில், மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசிலும் கூட ''கூட்டம் கூடும் சுதந்திரம்'' சொல்லடுக்கே என்பதைத் தொழிலாளர்கள் முற்றும் நன்ருக அறிவார்கள். காரணம் செல்வந்தர்களுக்குச் சிறந்த பொதுக் கட்டிடங்களும் தனியார் கட்டிடங்களும் இஷ்டம் போல் கிடைக்கும்; கூட்டங்களில் கலந்து கொள்ளப் போதிய ஓய்வுநேரம் உண்டு; இக்கூட்டங்கள் முதலாளித்துவ ஆட்சி அதிகார இயந்திரத்தால் பாதுகாக்கப்படும். ஆனல் நாட்டுப்புற, நகரப்புறத் தொழிலாளர்களுக்கும் சிறு விவசாயிகளுக்கும்—அதாவது மக்கள் தொகையின் மிகப்பெரும் பெரும்பான்மையினருக்கு — இவையாவும் மறுக்கப்படுகின்றன. அந்த நிலைமை நீடிக்கும் காலம் வரை ''சமத்துவம்'' அதாவது ''தூய ஜனநாயகம்'' என்பது ஒரு மோசடியே. உண்மையான சமத்துவத்தைப் பெறவும் உழைக்கும் மக்கள் நடைமுறையில் ஜனநாயகத்தை அனுபவிக்க இயலுமாறு செய்யவும் முதலில் செய்ய வேண்டுவது என்னவென்ருல், சுரண்டலாளர்களிடம் இருந்து எல்லாப் பொதுக் கட்டடங்களையும் வளம் நிறைந்த தனியார் கட்டடங்களையும் பறித்துக் கொள்ள வேண்டும், உழைப்பாளிகளுக்கு ஓய்வுநேரம் வழங்க வேண்டும், அவர்களது கூட்டம் கூடும் சுதந்திரத்தை அடக்கி

வைக்கப்பட்ட படையாளிகளுக்குத் தலைமை தாங்கும் பிரபுக் குலவழித்தோன்றல்கள் அல்லது முதலாளித்துவ அதிகாரிகளைக் கொண்டு பாதுகாக்காமல் ஆயுதமேந்திய தொழிலாளர்களைக் கொண்டு பாதுகாக்க வேண்டும்.

அந்த மாறுதல் செயல்படுத்தப்பட்டால் மட்டுமே தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் ஏழை மக்களையும் நோக்கிக் கேலி செய்யாமல் கூட்டம் கூடும் சுதந்திரம் பற்றியும் சமத்துவம் பற்றியும் பேச முடியும். இந்த மாறுதலை சுரண்டலாளர்கள், முதலாளித்துவ வர்க்கத்தினரை வீழ்த்தும் உழைக்கும் மக்களின் முன்னணிப்படையான பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே செயல்படுத்த முடியும்.

8. ''பத்திரிகை சுதந்திரம்'' என்பது ''தூய ஜனநாயகத்தின்'' இன்னொரு முக்கியமான கோஷமாகும். இங்கும் கூட மிகச் சிறந்த அச்சகங்களையும் ஆகப் பெரிய காகித ஸ்டாக்குகளையும் முதலாளிகள் அபகரித்துக் கொள்ளும் வரையில், பத்திரிகைகள் மீதான மூலதனத்தின் ஆட்சி நீடிக்கும் வரையில் இந்த சுதந்திரமும் ஓர் ஏமாற்று ஆகிறது என்பதைத் தொழிலாளர்கள் அறிந்திருக்கிறார்கள், அனைத்து நாடுகளின் சோஷலிஸ்டுகளும் கோடிக்கணக்கான தடவைகள் ஒப்புகொண்டுள்ளனர். இந்த மூலதனத்தின் ஆட்சி உலக முழுவதிலும் உதாரணமாக அமெரிக்கா போன்ற நாடுகளில் எங்கு ஜனநாயகவாதமும் குடியரசு அமைப்பு முறையும் அதிகமாக அபிவிருத்தி அடைந்துள்ளதோ அங்கு மேலும் எடுப்பாகவும், கடுமையாகவும் பண்பை மறுக்கும் பாணியில் வெளிப்பாடாகி உள்ளது. உழைக்கும் மக்களுக்கும் தொழிலாளர், விவசாயிகளுக்கும் மெய்யான சமத்துவத்தையும் உண்மையான ஜனநாயகத்தையும் பெற்றுத்தர வேண்டுமானால் முதலில் மூலதனம் எழுத்தாளர்களைக் கூலிக்குப் பிடிப்பதை, வெளியீட்டகங்களை விலைக்கு வாங்குவதை, செய்திப் பத்திரிகைகளுக்கு லஞ்சம் தருவதை இயலாதபடிச் செய்ய வேண்டும். இதைச் செய்ய வேண்டுமானால் மூலதனத்தின் ஆதிக்கம் வீழ்த்தப்பட வேண்டும், சுரண்டலாளர்களும் வீழ்த்தப்பட வேண்டும், அவர்களது எதிர்ப்பு ஒடுக்கப்பட வேண்டும். ''சுதந்திரம்'' என்ற சொல்லை செல்வந்தர் மேலும் செல்

வந்தராவதற்கும் தொழிலாளர் பட்டினி கிடந்து சாவதற்கும் உள்ள சுதந்திரமாகவே முதலாளிகள் எப்போதும் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். முதலாளிகளின் வழக்காறில் பத்திரிகை சுதந்திரம் என்பதன் அர்த்தம் பத்திரிகைகளுக்கு லஞ்சம் கொடுப்பதற்குச் செல்வந்தருக்குச் சுதந்திரம், பொதுஜனக் கருத்து எனப்படுவதை உருவாக்கவும் உருட்டிப் புரட்டவும் தம் செல்வத்தைப் பயன்படுத்தும் சுதந்திரம் என்பதாகும். இந்த விஷயத்திலும் கூட ''தூய ஜனநாயகத்தின்'' ஆதரவாளர்கள் செல்வந்தருக்கு வெகுஜன பிரச்சார சாதனங்கள் மீது ஆதிக்கம் வழங்கும் அளவே நீசத்தனமான கைக்கூலி முறையினைத் தாங்கி ஆதரிக்கிறார்கள். அவர்கள் மக்களை ஏமாற்றுகிறவர்கள் என்று நிரூபிக்கப்படுகிறார்கள். யுக்திப் பொருத்தமாய்த் தோன்றுகிற, பகட்டான ஆனால் முற்றிலும் பொய்மையான சொல்லடுக்குகள் மூலம் பத்திரிகைகளை மூலதன அடிமைத்தனத்தில் இருந்து விடுவிப்பது என்ற ஸ்தூலமான வரலாற்றுக் கடமையினை நிறைவேற்ற விடாமல் மக்களைத் திசை திருப்புகிறார்கள். மெய்யான சுதந்திரமும் சமத்துவமும் கம்யூனிஸ்டுகள் கட்டிவரும் அமைப்பு முறையில் உருக்கொள்ளும். அதில் மற்றவருக்குப் பிரதிகூலமான முறையில் செல்வம் குவிக்க வாய்ப்பு இருக்காது; பத்திரிகைகளைப் பண ஆதிக்கத்தின் கீழ் நேரடியாக அல்லது மறைமுகமாக வைப்பதற்கான எதார்த்த வாய்ப்புகள் இருக்காது; எந்தத் தொழிலாளியும் (அல்லது தொழிலாளர் குழுவும் எத்தனை பேராயினும்) பொதுவான அச்சகங்கள், பொதுவான காகித ஸ்டாக்குகளைப் பயன்படுத்துவதில் சம உரிமைகளை அனுபவிக்கவும், செயல்படுத்தவும் எவ்விதமான தடைகளும் இருக்காது.

9. இந்தப் பேர் பெற்ற ''தூய ஜனநாயகம்'' முதலாளித்துவத்தின் கீழ் உண்மையில் எவ்வாறு உள்ளது என்பதை போருக்கு முன்பாகவே பத்தொன்பதாவது, இருபதாவது நூற்றாண்டுகளின் வரலாறு நிதர்சனப்படுத்திக் காட்டி விட்டது. இந்த ''அதிசுத்த'' ஜனநாயகம் அதிக வளர்ச்சியடையும் தோறும் வர்க்கப் போராட்டம் மேலும் அதிக மறைவற்றதாக, கடுமையானதாக, இரக்கமற்றதாகக் காட்சி தரும்,

மூலதன ஒடுக்குமுறையும் முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரமும் ''அதிசுத்தமாக'' இருக்கும் என்று மார்க்சியவாதிகள் எப்போதும் தொடர்ந்து சாற்றி வந்திருக்கிறார்கள். குடியரசு அமைப்பைக் கொண்ட பிரான்சில் நடைபெற்ற டிரைஃபஸ் வழக்கும், சுதந்திர ஜனநாயக அமெரிக்கக் குடியரசில் முதலாளிகளால் ஆயுதபாணிகளாக்கப்பட்ட கூலிக் கும்பல் வேலைநிறுத்தம் செய்தோரைப் படுகொலை செய்வதும்—இவையும் இவை போன்ற பல ஆயிரம் மெய்நடப்புக்களும், ஆக ஜனநாயகக் குடியரசுகளில் உள்ளபடியே பயங்கர ஆட்சியும் முதலாளித்துவ சர்வாதிகாரமும் நிலவுகின்றன என்பதையும் மூலதனத்தின் ஆதிக்கம் உலைவுறுகிறது என்று சுரண்டலாளர்கள் கருதும் ஒவ்வொரு தருணத்திலும் இவை பகிரங்கமாக வெளிக்காட்டப்படும் என்பதையும்—இந்த உண்மையை முதலாளித்துவ வர்க்கம் மூடிமறைக்க வீண்முயற்சி செய்கிறது—சித்திரித்துக் காட்டுகின்றன.

10. 1914-18 ஏகாதிபத்தியப் போர், ஆகச் சுதந்திரமான குடியரசுகளிலும் கூட முதலாளித்துவ ஜனநாயகம் முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரமாகவே நிலவுகிறது என்னும் அதன் மெய்யான இயல்பை மிகவும் பின்தங்கி நிற்கும் தொழிலாளருக்குக் கூட நம்பவைக்கும் வகையில் வெளிப்படுத்திக் காட்டியது. ஜெர்மன் அல்லது பிரிட்டிஷ் லட்சாதிபதிகள் மற்றும் கோடீச்வரர்கள் கூட்டத்தைச் செல்வந்தர்களாக்குவதற்காக கோடிக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள், ஆகச் சுதந்திரமான குடியரசுகளில் முதலாளித்துவ வர்க்க ராணுவ வகைப்பட்ட சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. ஜெர்மனியின் தோல்விக்குப் பிறகும் கூட ஆன்டான்ட் நாடுகளில்[80] இந்த ராணுவ சர்வாதிகாரம் தொடர்ந்து நிலவுகிறது. பெரும்பாலாயும் போர்தான் உழைக்கும் மக்களின் கண்களைத் திறந்து விட்டது, முதலாளித்துவ ஜனநாயகத்தின் உருமாறுட்டத்தை உரித்துக் காட்டியது, போரின் போதும் போரின் காரணமாயும் நிலவிய வர்த்தகச் சூதாட்டம் மற்றும் கொள்ளை லாபமடிப்பின் அகாதமான பள்ளத்தை மக்களுக்குக் காட்டியது. ''சுதந்திரம் மற்றும் சமத்துவம்'' என்ற பேரில்தான் முதலாளித்துவ

வர்க்கம் இப்போரைத் தொடுத்தது. ''சுதந்திரம் மற்றும் சமத்துவம்'' என்ற பெயரில்தான் ஆயுததளவாட உற்பத்தியாளர்கள் நம்பற்கரிய பணம் குவித்தனர். பேர்ன் மஞ்சள் அகிலம் கஜகர்ணம் போட்டாலும் சரி, இப்போது முழு நிறைவாக அம்பலமாக்கப்பட்டுவிட்ட முதலாளித்துவ சுதந்திரம், முதலாளித்துவ சமத்துவம், முதலாளித்துவ ஜனநாயகம் ஆகியவற்றின் சுரண்டும் தன்மையை மக்களிடமிருந்து மூடிமறைக்க முடியாது.

11. ஐரோப்பா மாகண்டத்தில் ஆக வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடான ஜெர்மனியில், ஏகாதிபத்திய ஜெர்மனி தோல்வியுற்றதன் விளைவாக நிறுவப்பட்ட முழுமையான குடியரசு வகைப்பட்ட சுதந்திரத்தின் துவக்க மாதங்களே, முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசின் மெய்யான வர்க்க சாரத்தை ஜெர்மன் தொழிலாளர்களுக்கும் உலகம் முழுவதற்கும் எடுத்துக் காட்டி விட்டன. கார்ல் லீப்க்னெஹ்டும் ரோசா லுக்சம்பர்கும் கொலை செய்யப்பட்டது சகாப்தகரமான முக்கியத்துவமுடைய நிகழ்ச்சியாகும். இதற்குக் காரணம் இந்த அரும் பெரும் மக்கள், உண்மையான பாட்டாளி வர்க்க கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைவர்கள் துன்பகரமான மரணம் எய்தியது மட்டுமல்ல, ஒரு முன்னேறிய ஐரோப்பிய நாட்டுக்கு—உலகளாவிய ரீதியில் ஒரு முன்னேறிய நாட்டுக்கு என்று சொன்னால் மிகையாகாது—இதன் வர்க்க இயல்பு நம்பவைக்கும் வகையில் அம்பலப்படுத்தப்பட்டு விட்டது என்பதும் இதற்குக் காரணமாகும். கைது செய்யப்பட்டவர்கள், அதாவது அரசின் கீழ் காவலில் வைக்கப்பட்டவர்கள் அதிகாரிகளாலும் முதலாளிகளாலும் தண்டனைக்கு அஞ்சாமல் கொலை செய்யப்படக் கூடுமானால், இது சமூக-தேசபக்தர்கள் தலைமை தாங்கும் ஓர் அரசாங்கத்தின் கீழ் நிகழுமானால், இத்தகைய சம்பவத்தை சாத்தியமாக்கும் ஒரு ஜனநாயகக் குடியரசு ஒரு முதலாளித்துவ சர்வாதிகாரமேயாகும். கார்ல் லீப்க்னெஹ்ட் மற்றும் ரோசா லுக்சம்பர்கின் படுகொலை குறித்துத் தமது கோபாவேசத்தைக் காட்டி ஆனால் இந்த மெய்விவரத்தைப் புரிந்துகொள்ளத் தவறுகிறவர்கள் தமது முட்டாள்தனத்தை அல்லது போலித்தனத்

தையே நிதர்சனப்படுத்திக் கொள்பவராவர். உலகின் ஆகச் சுதந்திரமானதும் முன்னேறியதுமான குடியரசுகளில் ஒன்ருன ஜெர்மன் குடியரசில் ''சுதந்திரம்'' என்பது, கைது செய்யப்பட்ட பாட்டாளி வர்க்கத் தலைவர்களைத் தண்டனை அச்சம் எதுவும் இன்றிக் கொலைப்படுத்துவதற்கான சுதந்திரமேயாகும். முதலாளித்துவம் நீடிக்கும் காலம் வரையில் இது வேறு விதமாக இருக்க முடியாது. காரணம் ஜனநாயக வாதத்தின் வளர்ச்சி வர்க்கப் போராட்டத்தை மட்டுப்படுத்தாது, மாருக கூர்மைப்படுத்தும். இந்த வர்க்கப் போராட்டமானது போர், அதன் பின்நிகழ்வுகளின் விளைவுகள், செல்வாக்குகள் எல்லாம் காரணமாக கொதித்தெழும் கட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

நாகரிக உலகம் பூராவிலும் போல்ஷிவிக்குகள் நாடு கடத்தப்படுவதை, அடக்கிவாட்டப்படுவதை, சிறைக்குள் தள்ளப்படுவதை நாம் காண்கிருேம். உதாரணமாக ஆகச் சுதந்திரமான முதலாளித்துவ குடியரசுகளில் ஒன்ருன ஸ்விட்சர்லாந்தில் காணப்படும் நிலைமை இதுவே, அமெரிக்காவிலும் போல்ஷிவிக் எதிர்ப்புக் கூட்டுக் கொலைகள் நடைபெறுகின்றன இத்தியாதி. ''பொதுவான ஜனநாயகம்'' அல்லது ''தூய ஜனநாயகம்'' ஆகியவற்றின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் சர்வாயுத பாணிகளாக இருக்கும் முன்னேறிய, நாகரிகமுள்ள, ஜனநாயக நாடுகள் பின்தங்கியதும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டதும் அழிவுற்றதுமான ருஷ்யாவில் இருந்து—இதை முதலாளித்துவப் பத்திரிகைகள் தமது லட்சக் கணக்கான பிரதிகளில் மிருகத்தனமான, குற்றகரமான நாடு என்று வருணித்துள்ளன—ஒரு சில மனிதர்கள் வந்திருப்பதைக் கண்டு அஞ்சுவது என்பது உள்ளபடியே கேலிக்கிடமானது. இத்தகைய படுமோசமான முரண்பாட்டை உண்டாக்கக் கூடியதான சமூக நிலைமை உண்மையில் ஒரு முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரமே என்பது தெட்டத்தெளிவு.

12. இந்தப் புறச் சூழல்களில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது சுரண்டலாளர்களை வீழ்த்திடவும் அவர்களது எதிர்ப்பை அடக்கிடவுமான அறவே நியாயமான சாதனம்

என்பது மட்டுமல்ல, அதோடு கூட போருக்கு இட்டுச் சென்றதும் புதிய போர்களுக்கு ஆயத்தமாகி வருவதுமான முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்த தமது ஒரே தற்காப்பு என்ற முறையில் உழைக்கும் மக்கள் திரள் முழுமைக்கும் பரம அவசியமானதும் ஆகும்.

சோஷலிஸ்டுகள் புரிந்து கொள்ளத் தவறும் பிரதான விஷயம் என்னவென்றால், சோஷலிஸ்டுகளின் தத்துவ விவகாரங்களில் பார்வைக் கோளாறு, முதலாளித்துவத் தப்பெண்ணங்களுக்கு அடிமைப்படல், பாட்டாளி வர்க்கத்துக்கு அரசியல் துரோகம் புரிதல் ஆகியவற்றுக்குக் காரணம் என்னவென்றால், முதலாளித்துவ சமுதாயத்தில் அந்த சமுதாயத்திற்கு உள்மெய்க்கூறாக இருக்கும் வர்க்கப் போராட்டம் எந்த அளவிலும் கடுமையாக உக்ரமடையும் போது முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரம் அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது தவிர வேறு மாற்றுப்பாதை இருக்க முடியாது என்பதாகும். மூன்றாவது பாதைகுறித்த கனவுகள் பிற்போக்குத்தனமான குட்டி முதலாளித்துவ வகைப்பட்ட ஒப்பாரிகளே. இது, முன்னேறிய நாடுகள் அனைத்திலும் ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் அதிகமான முதலாளித்துவ ஜனநாயகத்தின், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியாலும், குறிப்பாக கடந்த ஐந்தாண்டு கால அனுபவத்தாலும் எண்பித்துக் காட்டப்படுகிறது. மேலும் இது அரசியல் பொருளாதார விஞ்ஞானம் முழுமையாலும், மார்க்சியத்தின் உள்ளடக்கம் பூராவாலும் எண்பித்துக் காட்டப்படுகிறது. மார்க்சியமானது எங்கெல்லாம் பரிவர்த்தனைப் பண்ட பொருளாதாரம் நிலவுகிறதோ அங்கு முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரம் ஏற்படுவது பொருளாதார வழியில் தவிர்க்க முடியாதது என்பதையும், இதனை முதலாளித்துவத்தின் வளர்ச்சி வளர்த்து, பன்மடங்காய்ப் பெருக்கி சேர்த்து ஒன்றிணைத்து வலுப்படுத்திய ஒரு வர்க்கத்தால், அதாவது பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே மாற்றீடு செய்யப்படும் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

13. சோஷலிஸ்டுகளின் இன்னொரு தத்துவார்த்த அரசியல் தவறு என்னவென்றால், தொல்பழமைக் காலத்தில்

ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறு முதலில் தோன்றிய காலம் முதலே, ஓர் ஆளும் வர்க்கம் இன்னொன்றால் மாற்றீடு செய்யப்பட்ட முறையில், இந்தப் பல நூற்றாண்டுகளில் அதன் வடிவங்கள் தவிர்க்க முடியாத வகையில் மாற்றமடைந்தன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறியதேயாகும். பழங்கால கிரேக்கக் குடியரசுகளிலும், மத்திய காலத்திய நகரங்களிலும், முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் ஜனநாயகம் பல்வேறு வடிவங்களை மேற்கொண்டது, பல்வேறு அளவுகளில் பிரயோகிக்கப்பட்டது. மனித வரலாற்றிலேயே மிகவும் வீறுர்ந்ததான புரட்சி, சுரண்டும் சிறுபான்மையிடமிருந்து சுரண்டப்படும் பெரும்பான்மைக்கு ஆட்சி அதிகாரம் மாற்றப்பட்டதான உலகிலேயே முதல் சம்பவம் தீவிரமான மாறுதல்கள் இன்றி, ஜனநாயகத்தைப் பிரயோகிப்பதற்குரிய புதிய நிலைமைகளை அகத்தே கொண்டதான புதிய ஜனநாயக வடிவங்களும் புதிய அமைப்புகளும் இன்றி, பழைய முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தின் காலத்தால் தேய்வுற்ற கட்டுக்கோப்புக்குள் நடைபெறும் என்று கருதுவது படுமோசமான முட்டாள்தனமாகும்.

14. இதர சர்வாதிகாரங்கள் அனைத்தையும் போலவே, தனது அரசியல் ஆதிக்கத்தை இழந்து வரும் ஒரு வர்க்கத்தின் எதிர்ப்பைப் பலப்பிரயோகம் மூலம் ஒடுக்குவதற்கான தேவையில் இருந்து எழும் தன்மையில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் இதர வர்க்கங்களின் சர்வாதிகாரம் போன்றதே ஆகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் இதர வர்க்கங்களின் சர்வாதிகாரத்துக்கும்—மத்திய காலத்தில் நிலப்பிரபுக்கள் சர்வாதிகாரம், எல்லா நாகரிகமடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் இருக்கும் முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரம்—இடையிலான அடிப்படை வேறுபாடு என்னவென்றால் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தினரின் சர்வாதிகாரம் என்பது மக்கள் தொகையில் மிகப் பரவலான பெரும்பான்மையினர், அதாவது உழைக்கும் மக்கள் தரும் எதிர்ப்பைப் பலாத்காரமாக அடக்குவதாகும். இதற்கு நேர் மாறாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது சுரண்டலாளர்களின், அதாவது மக்கள் தொகையில்

மிகவும் அற்பமான சிறுபான்மையான நிலப்பிரபுக்களின், முதலாளிகளின் எதிர்ப்பை பலாத்காரமாக அடக்குவதாகும்.

இதன் தொடர்பாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது பொதுவாக ஜனநாயகத்தின் வடிவங்கள், அமைப்புகளில் தவிர்க்க முடியாதபடி ஏற்படும் மாறுதல்களை மட்டும் அன்றி, முதலாளித்துவத்தால் ஒடுக்கப்பட்டோர், உழைப்பாளி வர்க்கங்கள் ஜனநாயகத்தை உண்மையில் அனுபவிப்பது முன் என்றும் இல்லாத அளவுக்கு விரிவாக்கம் செய்யப்படுவதை வகை செய்யும் துல்லியமான அத்தகைய ஒரு மாற்றத்தையும் இன்றியமையாததாக்குகிறது.

ஏற்கெனவே உருப்பெற்றுவிட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வடிவம்—அதாவது ருஷ்யாவில் சோவியத் ஆட்சி, ஜெர்மனியில் Räte-System,* பிரிட்டனில் Shop Stewards Committees[81] இதேபோன்று இதர நாடுகளில் இருக்கும் சோவியத் அமைப்புகள்—உழைப்பாளி வர்க்கங்களுக்கு அதாவது மக்கள் தொகையில் மிகப்பரவலான பெரும்பான்மைக்கு ஆகச் சிறந்த, மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளில் முன் என்றும் தோராயமாகக் கூட இருக்காத அளவில் ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிப்பதற்கு இன்னும் மேலான நடைமுறை வாய்ப்புக்களை வழங்கியுள்ளதை உணர்த்துகிறது.

சோவியத் ஆட்சியதிகாரத்தின் சாரம் என்னவென்றால், அரசாட்சி, அரசாங்கப் பொறியமைவு அனைத்தின் நிரந்தரமான ஒரே அடித்தளம் முதலாளித்துவத்தால் ஒடுக்கப்பட்டு வரும் வர்க்கங்களின், அதாவது தொழிலாளர்கள் அரைப் பாட்டாளிகளின் (மற்றையோர் உழைப்பைச் சுரண்டாமல் தமது சொந்த உழைப்புச் சக்தியில் ஒரு பகுதியையாவது விற்பனை செய்வதில் நிரந்தரமாக ஈடுபட்ட விவசாயிகளின்) வெகுஜன அளவிலான ஒழுங்கமைப்பேயாகும். ஆக ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளில் கூட சட்டப்படி சம உரிமைகளைக் கொண்டிருந்த போதிலும் ஆயிரக்கணக்கான தந்திரங்கள், சூழ்ச்சிவாதங்கள் மூலம் உண்மையில்

* சோவியத்துகளின் அமைப்புமுறை.—ப-ர்.

அரசியல் வாழ்வில் பங்கேற்பதில் இருந்தும், ஜனநாயக உரிமைகள், சுதந்திரங்களை அனுபவிப்பதில் இருந்தும் தடை செய்யப்பட்டிருக்கும் அந்த மக்கள் திரள்தான் இப்போது அரசின் ஜனநாயக நிர்வாகத்தில் பங்கேற்பதற்காக இடைவிடாமல் தவருமல், அதோடு நிர்ணயமான முறையில் ஈர்க்கப்பட்டு வருகிருர்கள்.

15. ஆடவர் மகளிர் என்ரே, சமயம், வருண இனம், தேசிய இனம் என்ரே எவ்வித வேறுபாடும் இல்லாத குடிமக்கள் சமவுரிமையை முதலாளித்துவ ஜனநாயகம் எங்கும் எப்போதும் வாக்களித்திருந்த போதிலும் என்றுமே செயல்படுத்தவில்லை, மூலதனத்தின் மேலாதிக்கம் காரணமாக செயல்படுத்த முடியவில்லை. சோவியத் ஆட்சியதிகாரம் அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இந்தச் சமவுரிமையை உடனடியாகவும் முழுமையாகவும் செயல்படுத்தியுள்ளது. ஏனெனில் உண்மையில் உற்பத்தி சாதனங்கள் தனியாருக்குச் சொந்தமாக இருப்பதிலோ அவற்றின் பிரிவினை, மறுபிரிவினை குறித்த சண்டையிலோ எவ்வித அக்கறையும் இல்லாத தொழிலாளர் ஆட்சியதிகாரம்தான் இதைச் செய்ய முடியும்.

16. பழைய, அதாவது முதலாளித்துவ ஜனநாயக மற்றும் நாடாளுமன்ற அமைப்புமுறை எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது என்ருல், அதன் கீழ் அரசாங்கப் பொறியமைவில் இருந்து பெருந்திரளான உழைக்கும் மக்கள் மிகவும் எட்டாத் தொலைவில் வைக்கப்பட்டிருந்தார்கள். ஆனல் மறுபுறத்தில் சோவியத் ஆட்சியதிகாரம், அதாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் விதம் பெருந்திரளான உழைக்கும் மக்களை அரசாங்கப் பொறியமைவுக்கு மிகவும் நெருக்கமாகக் கொண்டு வருவதாக இருக்கிறது. சோவியத் அரசாங்க நிறுவனத்திப் கீழ் சட்டமியற்றும் மற்றும் நிர்வாகம் நடத்தும் அதிகார உரிமையை இணைத்ததன் நோக்கமும், பிரதேசவாரி தேர்தல் தொகுதிகளை உற்பத்தித் தொகுதிகளால்—ஆலை, தொழிற்சாலைத் தொகுதிகளால்—மாற்றீடு செய்ததும் இதற்காகவேயாகும்.

17. படைத்துறை ஒடுக்குமுறை இயந்திரமாக இருந்தது

முடியாட்சியின் கீழ் மட்டுமல்ல. எல்லா முதலாளித்துவக் குடியரசுகளிலும் ஆக ஜனநாயகமானவற்றிலும் கூட படைத் துறை அவ்வாறே நீடித்திருக்கிறது. முதலாளித்துவத்தால் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் நிரந்தர அரசாங்கப் பொறிய மைவான சோவியத் ஆட்சியதிகாரம் மட்டுமே, முதலாளித் துவ தளபதிகளுக்குப் படைத்துறை கீழடங்கி நடப்பதை அழித்தொழித்து பாட்டாளி வர்க்கத்தைச் சைனியத்துடன் மெய்யாகவே இணைக்கும் பணியைச் சாத்தியமாக்க முடியும். சோவியத் ஆட்சியதிகாரம் மட்டுமே பாட்டாளிகளை ஆயுத பாணிகளாக்கி முதலாளித்துவ வர்க்கத்தினர் ஆயுதங்களை நீக்கித் திறம்படச் செயலாற்ற முடியும். இதைச் செய்யாத வரை சோஷலிசத்தின் வெற்றி சாத்தியமல்ல.

18. சோவியத் அரசுப் பொறியமைவு, முதலாளித்து வத்தால் மிகவும் ஒருமுனைப்படுத்தப்பட்ட, அறிவொளி வழங்கப்பட்ட வர்க்கம் என்ற முறையில் பாட்டாளி வர்க் கத்தின் தலைமைப் பாத்திரத்துக்குப் பொருத்தமானதாக விளங்குகிறது. உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்கள் தொகையின் சிதறிக்கிடக்கும் பின்தங்கிய பகுதிகளை ஒன்றி ணைத்துத் தலைமை தாங்கும் நிலையில் இருப்பது பாட்டாளி வர்க்கம் மட்டுமே என்பதை எல்லாப் புரட்சிகளின், ஒடுக்கப் பட்ட வர்க்கங்களின் எல்லா இயக்கங்களின் அனுபவமும், உலக சோஷலிஸ்டு இயக்கத்தின் அனுபவமும் நமக்குப் போதிக்கின்றன.

19. சோவியத் அரசு பொறியமைவு மட்டுமே பழைய, அதாவது முதலாளித்துவ, அதிகார வர்க்க மற்றும் நீதித் துறைப் பொறியமைவையும் உடனடியாக தகர்த்து முற்றுக அழிக்க வல்லது. பிந்தியது முதலாளித்துவத்தின் கீழ் ஆக ஜனநாயகமான குடியரசுகளிலும் கூட நீடித்து வைக்கப்பட் டிருந்தது, தவிர்க்க முடியாத வகையில் நீடித்து வைக்கப்பட வேண்டியும் இருந்தது. உண்மையில் இதுவே தொழிலாள ருக்குரிய, பொதுவாக உழைக்கும் மக்களுக்குரிய ஜனநாய கத்தை நடைமுறையில் அமுல்படுத்துவதற்கு மிகப் பெரிய முட்டுக்கட்டையாகும். பாரிஸ் கம்யூன் இந்தப் பாதையில் சகாப்தகரமான முதல் படியை மேற்கொண்டது. சோவியத்

ஆட்சியதிகாரம் இரண்டாவது படியை மேற்கொண்டிருக்கிறது.

20. அரசு அதிகாரத்தை அழிப்பது என்பதை மார்க்ஸ் உள்ளிட்ட எல்லா சோஷலிஸ்டுகளும் குறிக்கோளாக வைத்திருக்கிறார்கள். இந்தக் குறிக்கோளை அடையாவிட்டால் மெய்யான ஜனநாயகம், அதாவது சுதந்திரமும் சமத்துவமும் கைவரப் பெறாது. சோவியத் அல்லது பாட்டாளி வர்க்க ஜனநாயகம் மூலம் மட்டுமே இதன் நடைமுறை சாதனை சாத்தியமாகும். ஏனெனில் அது உழைக்கும் மக்களின் வெகுஜன அமைப்புக்களை அரசு நிர்வாகத்தில் இடைவிடாமலும் தவறாமலும் பங்கேற்கச் செய்வது மூலம் எந்த ஒரு அரசும் பூரணமாக உலர்ந்து உதிர்ந்து போவதற்குரிய தயாரிப்பை உடனடியாகத் துவங்குகிறது.

21. பேர்னில் கூடிய சோஷலிஸ்டுகளின் முழுமையான வக்கின்மையும் புதிய, அதாவது பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தைப் புரிந்து கொள்ள அவர்கள் முற்றாகத் தவறி விட்டதும் பின்வரும் காரணங்களால் குறிப்பாயும் வெளிப்படையாகிறது. 1919 பிப்ரவரி 10ந் தேதி பேர்னில் நடைபெற்ற மஞ்சள் அகிலத்தின் சர்வதேச மாநாட்டில் பிரான்டிங் முடிவுரை ஆற்றினார். 1919 பிப்ரவரி 11ந் தேதி அகிலத்துடன் இணைந்தவர்களின் ஏடான *Die Freiheit*[82] ''சுயேச்சையாளர்'' கட்சி[83] பாட்டாளி வர்க்கத்திற்கு விடுத்த ஒரு வேண்டுகோளைப் பிரசுரித்தது. இந்த வேண்டுகோள் ஷெய்டெமன் அரசாங்கத்தின் முதலாளித்துவ வர்க்கத் தன்மையை ஒப்புக்கொண்டது, Träger und Schützer der Revolution— புரட்சியின் வாகினிகளும் காவலர்களும்—என்று வருணிக்கும் சோவியத்துகளை ஒழிக்க அவ்வரசாங்கம் விரும்பியதைக் கடிந்துரைத்தது. சோவியத்துகள் சட்டபூர்வமாக்கப்பட வேண்டும், அவற்றுக்கு அரசு அதிகார உரிமை வழங்கப்பட வேண்டும், பொதுஜன கருத்துவாக்கெடுப்பு நடைபெறும் வரை தேசிய சட்டமன்ற முடிவுகள் செயல்படுத்தப்படுதலை நிறுத்தி வைப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் எனவும் யோசனை முன்வைத்தது.

ஜனநாயகத்தைத் தாங்கி ஆதரித்து அதன் முதலாளித்

துவ வர்க்கத் தன்மையைக் காணத் தவறிய தத்துவாளர்களின் முழுமையான சித்தாந்த வக்கின்மையை அந்த யோசனை சுட்டிக் காட்டுகிறது. சோவியத் அமைப்புமுறையை, அதாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, தேசிய சட்டமன்றத்துடன், அதாவது முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்துடன் இணைக்கும் இந்த நகைப்புக்கிடமான முயற்சி, மஞ்சள் சோஷலிஸ்டுகள் மற்றும் சமூக-ஜனநாயகவாதிகளின் சிந்தனைச் சின்மையையும், அவர்களது பிற்போக்கான குட்டிமுதலாளித்துவ அரசியல் கண்ணோட்டத்தையும், புதிய பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் தடுக்கவியலாவகையில் பெருகி வரும் வலிமைக்கு அவர்கள் பேடித்தனமாகச் சலுகைகளை விட்டுக்கொடுப்பதையும் முற்றிலும் அம்பலப்படுத்துகிறது.

22. வர்க்க நோக்குநிலையில் இருந்து பார்த்தால், தொழிலாளர் திரளிடமுள்ள அச்சம் காரணமாக ஒரு சம்பிரதாயத் தீர்மானத்துக்கு வாக்களிக்கத் துணியாத பேர்ன் மஞ்சள் அகிலத்தின் பெரும்பான்மை போல்ஷிவிசத்தைக் கண்டனம் செய்தது பொருத்தமே. இந்தப் பெரும்பான்மைதான் ருஷ்ய மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடனும் ஜெர்மனியில் ஷெய்டெமன்களுடனும் முழுமையான கருத்தொற்றுமை கொண்டுள்ளது. போல்ஷிவிக்குகளால் அடக்கி வாட்டப்படுவதாகப் புகார் செய்யும் ருஷ்ய மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளரும், அவர்கள் உள்நாட்டுப் போரில் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் சேர்ந்து பங்கேற்பதால்தான் அவ்வாறு அடக்கி வாட்டப்படுகின்றனர் என்ற மெய் விவரத்தை மூடிமறைக்க முயல்கிறார்கள். இதே போன்று ஜெர்மனியில் ஷெய்டெமன்களும் அவர்களது கட்சியும் உள்நாட்டுப் போரில் தாமும் தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கமாகப் பங்கேற்பதை ஏற்கெனவே நிதர்சனப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள்.

எனவே, பேர்ன் மஞ்சள் அகிலத்தின் பெரும்பான்மை போல்ஷிவிக்குகளைக் கண்டனம் செய்வதற்கு ஆதரவாக இருப்பதென்பது முற்றிலும் இயல்பே. இது ''தூய ஜன

நாயகத்தை'' தாங்கி ஆதரிக்கும் ஒரு வெளிப்பாடல்ல, உள் நாட்டுப் போரில் தாம் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக முதலாளித்துவ வர்க்கத்தோடு நிற்பதை அறிந்தும் உணர்ந்துமுள்ள பேர்வழிகளின் தற்காப்பின் வெளிப்பாடாகும்.

இதனுல்தான் வர்க்க நோக்குநிலையில் இருந்து மஞ்சள் அகிலத்தின் பெரும்பான்மையின் முடிவு பொருத்தமானது என்று கருத வேண்டும். பாட்டாளி வர்க்கம் மெய்மை கண்டு அஞ்சக் கூடாது, அதை நேர்மையாக எதிரிட்டு அவசியமான சகல அரசியல் முடிவுகளையும் எடுக்க வேண்டும்.

தோழர்களே! கடைசியாக கூறிய இரண்டு விஷயங்களுக்கு மேலும் ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சேர்க்க விரும்புகிறேன். பேர்ன் மாநாடு குறித்து நமக்கு அறிக்கை தரவிருக்கும் தோழர்கள் இதை இன்னும் அதிக விவரமாக விளக்குவார்கள் என்று நான் கருதுகிறேன்.

சோவியத் ஆட்சியதிகாரத்தின் முக்கியத்துவம் குறித்து பேர்ன் மாநாட்டில் ஒரு வார்த்தைகூடச் சொல்லப்படவில்லை. ருஷ்யாவில் இருக்கும் நாம் இந்தப் பிரச்சினையை இரண்டு ஆண்டுகளாக விவாதித்து வந்துள்ளோம். 1917 ஏப்ரலில் நமது கட்சி மாநாட்டில் பின்வரும் பிரச்சினையைத் தத்துவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் எழுப்பினேம்: ''சோவியத் ஆட்சியதிகாரம் என்றால் என்ன? அதன் சாரம் என்ன? அதன் வரலாற்று முக்கியத்துவம் என்ன?'' இப்பிரச்சினையை நாம் ஏறத்தாழ இரண்டாண்டுகளாக விவாதித்து வந்திருக்கிறோம். நமது கட்சிக் காங்கிரசில் அதன் மீது ஒரு தீர்மானத்தை அங்கீகரித்தோம்.[84]

பிப்ரவரி 11ம் நாள் பெர்லின் நகரத்து *Freiheit* ஜெர்மன் பாட்டாளிகளுக்கென ஒரு வேண்டுகோளை வெளியிட்டது. அவ்வேண்டுகோளில் ஜெர்மனியின் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் மட்டுமன்றி, கட்சியின் ரைஹ்ஸ்டாக் பிரிவின் எல்லா உறுப்பினர்களும் கையொப்பம் இட்டிருந்தார்கள். 1918 ஆகஸ்டில் இந்த சுயேச்சையாளர்களின் தலைமைத் தத்துவாளரில் ஒருவரான காவுத்ஸ்கி **பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்** என்ற சிறு பிரசுரத்தை எழுதினார். அதில் அவர் தாம் ஜனநாயகத்தின் மற்றும் சோவியத்

உறுப்புக்களின் ஆதரவாளர் எனவும், ஆனல் சோவியத்து கள் பொருளாதாரத் தன்மை வாய்ந்த உறுப்புகளாக மட்டுமே இருக்க வேண்டும் எனவும், அவற்றை எக்காரணம் பற்றியும் அரசு நிறுவனங்களாக அங்கீகரிக்கக் கூடாது எனவும் சாற்றினர். *Freiheit* நவம்பர் 11 மற்றும் ஜனவரி 12 இதழ்களில் காவுத்ஸ்கி இதையே கூறுகிருர். பிப்ரவரி 9ல் ருடோல்ஃப் ஹில்ஃபர்டிங் எழுதிய ஒரு கட்டுரை வெளிவந்தது. அவரும் இரண்டாம் அகிலத்தின் பிரதானமான அதிகாரப் பொறுப்புள்ள தத்துவாளர் என்று கருதப்படுகிருர். அக்கட்டுரையில் அவர் சோவியத் அமைப்புமுறை அரசு சட்டமியற்றல் மூலம் சட்ட ரீதியாக தேசிய சட்டமன்றத்தோடு இணைக்கப்படலாம் என்று யோசனை முன்வைத்தார். இது நடந்தது பிப்ரவரி 9ம் நாள். பிப்ரவரி 11ல் இந்த யோசனை சுயேச்சையாளர் கட்சி முழுமையாலும் ஏற்கப்பட்டு ஒரு வேண்டுகோள் வடிவில் வெளியிடப்பட்டது.

தேசிய சட்டமன்றம் ஏற்கெனவே நிலவுகிறது என்ற போதிலும், ''தூய ஜனநாயகம்'' மெய்யாக உருவகம் பெற்றதற்குப் பிற்பாடும், சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் பிரதானத் தத்துவாளர்கள் சோவியத் நிறுவனங்கள் அரசு நிறுவனங்களாக இருத்தல் கூடாது என்று சாற்றிய பிறகும் இதை அனைத்தும் புறக்கணித்து விட்டு மீண்டும் ஊசலாட்டம் இருக்கிறது! புதிய இயக்கம் பற்றியும் அதன் போராட்ட நிபந்தனைகள் பற்றியும் இந்தக் கனவான்கள் உண்மையில் எதையுமே புரிந்து கொள்ளவில்லை என்பதை இது நிரூபிக்கிறது. ஆனல் இது வேறு எதையோ, அதாவது இந்த ஊசலாட்டத்துக்கான நிலைமைகள், காரணங்கள் இருக்க வேண்டும் என்று நிரூபிக்கிறது! இந்த நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் பிறகு, ருஷ்யாவில் புரட்சி வெற்றிவாகை சூடி கிட்டத்தட்ட இரண்டாண்டுகளுக்குப் பிறகு, பேர்ன் மாநாடு அங்கீகரித்தது போன்ற தீர்மானங்கள் நமக்கு வழங்கப்படுகின்றன. அவை சோவியத்துகளைப் பற்றியோ அவற்றின் முக்கியத்துவம் பற்றியோ எதுவும் கூறவில்லை. இந்த மாநாட்டில் இவை குறித்து எந்த ஒரு பிரதிநிதியும் எந்த ஒரு சொற்பொழிவிலும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இந்த நிலையில் இந்தக்

கனவான்கள் அனைவரும் சோஷலிஸ்டுகள், தத்துவாளர் என்ற முறையில் நம்மைப் பொருத்தவரை செத்து விட்டார்கள் என்று சொல்ல நமக்கு முற்றிலும் உரிமை உண்டு.

எனினும், தோழர்களே, இந்த அரசு நிறுவனங்களைத் தத்துவ ரீதியாகவும் கோட்பாடு ரீதியாகவும் எதிர்த்து வந்துள்ள இந்த சுயேச்சையாளர்கள், தேசிய சட்டமன்றத்தை சோவியத் அமைப்புமுறையுடன் ''சமாதான முறையில்'' இணைப்பது என்னும், அதாவது முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்தைப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துடன் இணைப்பது என்னும் மடத்தனமான யோசனையைத் திடீர் என்று முன்வைக்கிறார்கள் என்ற உண்மை, நடைமுறையின் பக்கத்தில் இருந்தும் அரசியல் நோக்குநிலையில் இருந்தும் மக்கள் திரள் மத்தியில் ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டு வருவதை நிரூபிக்கிறது. சோஷலிஸ்டு மற்றும் தத்துவார்த்தப் பொருளில் சுயேச்சையாளர்கள் அனைவரும் வக்கற்றுக் கிடப்பதையும் மக்கள் திரளின் மத்தியில் பேரளவான மாற்றம் ஏற்பட்டு வருவதையும் நாம் காண்கிறோம். ஜெர்மன் தொழிலாளர்கள் மத்தியில் இருந்த பின்தங்கிய மக்கள் திரள் நம்மிடம் வந்து கொண்டிருக்கிறது, நம்மிடம் வந்து விட்டது! எனவே தத்துவார்த்த மற்றும் சோஷலிஸ்டு நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் பேர்ன் மாநாட்டின் ஆகச் சிறந்த பகுதியான ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் சுயேச்சை கட்சியின் முக்கியத்துவம் பூஜ்ஜியமே. இருப்பினும் இக்கட்சிக்கு ஒரு சிறிது முக்கியத்துவம் இருக்கிறது. இந்த ஊசலாட்டக்காரர்கள் பாட்டாளி வர்க்கத்தின் பின்தங்கிய பகுதிகளின் மனப்போக்கு பற்றிய ஒரு குறிப்பை நமக்கு வழங்குகிறார்கள். இதுவே இந்த மாநாட்டின் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் என்று நான் கருதுகிறேன். இந்த வகைப்பட்ட ஏதோ சிலவற்றை நாம் நமது சொந்த புரட்சியிலும் அனுபவப்பட்டோம். நமது மென்ஷிவிக்குகளும் ஜெர்மன் சுயேச்சையாளர் தத்துவாளர்கள் கடந்து சென்ற அதே வளர்ச்சி பாதையை ஏறத்தாழ அவ்வாறே கடந்து வந்துள்ளனர். முதலில் சோவியத்துகளில் அவர்களுக்குப் பெரும்பான்மை இருந்த போது அவர்கள் சோவியத்துகளுக்கு ஆதர

வாக இருந்தார்கள். நாம் அப்போது கேட்டது: ''சோவியத்துகள் நீடூழி வாழ்க!'', ''சோவியத்துகளை ஆதரிப்போம்!'', ''சோவியத்துகள் புரட்சிகர ஜனநாயகமாகும்!'' ஆனல் சோவியத்துகளில் போல்ஷிவிக்குகளான நாம் பெரும்பான்மையைப் பெற்ற போது மென்ஷிவிக்குகள் தமது சுதியை மாற்றிக் கொண்டு விட்டார்கள். அவர்கள் சொன்னர்கள்: சோவியத்துகள் அரசியல் நிர்ணய சபையுடன் அக்கம் பக்கமாக இருக்கக் கூடாது. பல்வேறு மென்ஷிவிக் தத்துவாளர்களும் சோவியத் அமைப்புமுறையை அரசியல் நிர்ணய சபையுடன் இணைப்பது, சோவியத்துகளை அரசுக் கட்டமைப்புடன் சேர்த்து இணைப்பது போன்ற கிட்டத்தட்ட அதே யோசனைகளை முன்வைத்தார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பொதுவான செல்வழி உலகம் முழுதிலும் ஒன்றே என்பது இங்கு மீண்டும் ஒருமுறை துலாம்பரமாகிறது. முதலில் சோவியத்துகளின் தன்னியல்பான உருவாக்கம், பின்னர் அவை பரவி வளர்ச்சியடைதல், பிறகு நடைமுறைப் பிரச்சினையின் தோற்றம்: சோவியத்துகளா அல்லது தேசிய சட்டமன்றம் அல்லது அரசியல் நிர்ணய சபை அல்லது முதலாளித்துவ நாடாளுமன்ற அமைப்புமுறையா; தலைவர்கள் மத்தியில் படுமோசமான குழப்பம், இறுதியாக—பாட்டாளி வர்க்கப் புரட்சி. ஆனல் கிட்டத்தட்ட இரண்டாண்டு காலப் புரட்சிக்குப் பிறகு இந்தப் பிரச்சினையை இந்த வழியில் முன்வைத்தல் கூடாது என்று நான் கருதுகிறேன். நாம் ஸ்தூலமான முடிவுகளை எடுக்க வேண்டும். காரணம் நமக்கும் சரி, குறிப்பாக பெரும்பான்மையான மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சரி, சோவியத் அமைப்புமுறையினைப் பரப்புவது ஆக முக்கியமான பணியாகும்.

இங்கு ஒரே ஒரு மென்ஷிவிக் தீர்மானத்தை நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அதை ஜெர்மனில் மொழிபெயர்க்குமாறு தோழர் ஒபலேன்ஸ்கியைக் கேட்டுக்கொண்டேன். அவர் அவ்வாறு செய்வதாக வாக்களித்தார். ஆனல் துரதிருஷ்டவசமாக அவர் இங்கே இல்லை. என்னிடம் முழுவாசகமும் இல்லாததால் நான் ஞாபகத்தில் இருந்து எடுத்துக் கூற முயல்கிறேன்,

போல்ஷிவிசம் குறித்து எதுவுமே கேள்விப்பட்டிராத ஒரு வெளிநாட்டவருக்கு நமது வாதத்திற்கிடமான பிரச்சினை கள் பற்றி ஒரு சொந்த அபிப்பிராயத்தை வந்தடைவது என் பது மிகவும் கடினம். போல்ஷிவிக்குகள் அடித்துக் கூறும் சகலமும் மென்ஷிவிக்குகளால் எதிர்த்து மறுதலிக்கப்படு கிறது. மென்ஷிவிக்குகள் அடித்துக் கூறும் சகலமும் போல்ஷி விக்குகளால் எதிர்த்து மறுதலிக்கப்படுகிறது. ஒரு போராட் டத்தின் மத்தியில் இது வேறுவிதமாக இருக்க முடியாது என் பது திண்ணம். இதனுல்தான், 1918 டிசம்பரில் நடந்த மென் ஷிவிக் கடைசி மாநாட்டில் நீண்ட, விவரமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு **கஸேத்தா பெச்சாத்னிக்கவ்**[85] என்ற மென்ஷிவிக்குகளின் பத்திரிகையில் முழுமையாக வெளியிடப் பட்டது மிகவும் முக்கியமானது. இந்தத் தீர்மானத்தில் மென்ஷிவிக்குகள் தாமே வர்க்கப் போராட்டம் மற்றும் உள் நாட்டுப் போரின் வரலாற்றைச் சுருக்கமாக உருவரை செய் துள்ளனர். யூரல், தென்பகுதி, கிரீமியா மற்றும் ஜார்ஜியா வில்—இந்தப் பிராந்தியங்கள் யாவும் வரிசைப்படுத்தப்பட் டுள்ளன—சொத்துடைமை வர்க்கங்களுடன் சேர்ந்து நிற்கும் தமது கட்சியின் கோஷ்டிகளை அவர்கள் கண்டனம் செய்வ தாக இந்தத் தீர்மானம் கூறுகிறது. சொத்துடைமை வர்க் கங்களுடன் சேர்ந்து நின்று சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துப் போராடிய மென்ஷிவிக் கட்சியின் இந்தக் கோஷ்டி கள் இந்தத் தீர்மானத்தில் கண்டிக்கப்பட்டுள்ளன; ஆனல் தீர்மானத்தின் கடைசிப்பாரா கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து கொண்டவர்களையும் கண்டனம் செய்கிறது. தமது கட்சியில் ஒற்றுமை இல்லை என்பதையும் அக்கட்சியின் உறுப்பினர்கள் ஒன்று முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் அல்லது பாட் டாளி வர்க்கத்தின் பக்கம் இருந்தார்கள் என்பதையும் மென் ஷிவிக்குகள் ஒப்புக் கொள்ள வேண்டிய கட்டாயம் எற்பட் டது என்பது இதிலிருந்து தெரிகிறது. பெரும்பான்மையான மென்ஷிவிக்குகள் முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் மாறிச் சென்று உள்நாட்டுப் போரின் போது நம்மை எதிர்த்துப் போராடினர்கள். நாம் நிச்சயமாக மென்ஷிவிக்குகளை அடக்கி வாட்டுகிறோம், அவர்கள் நமக்கு எதிராகப் போர் தொடுக்

கும் போது, நமது செஞ்சேனையை எதிர்த்துச் சண்டையிட்டு நமது செஞ்சேனை தளபதிகளைச் சுடும் போது அவர்களைச் சுடவும் செய்கிறோம். முதலாளித்துவப் போரை பாட்டாளி வர்க்கப் போர் கொண்டு எதிர்த்தோம்—வேறு வழி எதுவும் இருக்க முடியாது. எனவே அரசியல் கருத்துநிலையில் இருந்து காணில் இவை யாவும் படுமோசமான மென்ஷிவிக்குகளின் பாசாங்கே. பைத்தியம் என்று அதிகார பூர்வமாக சான்றளிக்கப்படாத நபர்கள் பேர்ன் மாநாட்டில் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் நெறிமுறைகளின் மீது அவர்களை எதிர்த்து போல்ஷிவிக்குகள் போராடியதைப் பற்றி எப்படிப் பேச முடிந்தது, இருப்பினும் முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டணி சேர்ந்து பாட்டாளிகளை எதிர்த்துத் தாம் நடத்திய போராட்டம் பற்றி எப்படி மௌனம் சாதிக்க முடிந்தது என்பதை வரலாற்று வழியில் புரிந்து கொள்ள முடியாது.

அவர்களை அடக்கி வாட்டுவதற்காக நம்மை அவர்கள் அனைவரும் மூர்க்கமாகத் தாக்குகிறார்கள். இது உண்மையே. ஆனால் உள்நாட்டுப் போரில் அவர்கள் வகித்த நிலை குறித்து ஒரு வார்த்தை கூடச் சொல்வதில்லை! குறிப்பேடுகளில் பதிவு செய்யப்படுவதற்காக இத்தீர்மானத்தின் முழுவாசகத்தையும் நான் வழங்க வேண்டி வரும் என்று கருதுகிறேன். இத்தீர்மானம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் உடைய தஸ்தவேஜு, இதில் பிரச்சினை சரியான முறையில் எழுப்பப்பட்டிருக்கிறது, ருஷ்யாவில் இருக்கும் ''சோஷலிஸ்டு'' போக்குகளுக்கு இடையேயான வாதப் பிரதிவாதத்தை மதிப்பீடு செய்வதற்குரிய அருமையான விஷயாதாரங்களை வழங்குகிறது என்ற காரணத்தால் நான் இதைக் கவனமாகப் படிக்குமாறு வெளிநாட்டுத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையே இன்னொரு பிரிவைச் சேர்ந்த மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் முதலில் இந்தப் பக்கமும் பின்னர் அந்தப் பக்கமும் சாய்வார்கள். எப்போதும் எல்லாப் புரட்சிகளிலும் நிலைமை இதுவே. பாட்டாளி வர்க்கமும் முதலாளித்துவ வர்க்கமும் இரு பகை முகாம்களாக இருக்கும் முதலாளித்

துவ சமுதாயத்தில் அவற்றுக்கிடையே இடைத்தட்டுப் பகுதி கள் இருக்கக் கூடாது என்பது அறவே சாத்தியமல்ல. இந்த ஊசலாட்டக்காரர்கள் நிலவுவது வரலாற்று வழியில் தவிர்க்க முடியாதது. துரதிருஷ்டவசமாக நாளை யார் பக்கம் நின்று போராடப் போகிறோம் என்பதைத் தாமே அறியாத இந்த நபர்கள் ஓரளவு நீண்ட காலத்துக்கு இருக்கத்தான் செய் வார்கள்.

ஒரு தீர்மானம் ஏற்கப்பட வேண்டும் எனவும் அதில் மூன்று அம்சங்கள் பிரத்தியேகமாயும் குறிப்பிடப்பட வேண் டும் என்றும் நான் ஒரு நடைமுறை யோசனையை முன்வைக்க விரும்புகிறேன்.

முதலாவது: மேற்கு ஐரோப்பியத் தோழர்களின் முன்னே உள்ள ஆக முக்கியமான பணிகளில் ஒன்று சோவியத் அமைப்புமுறையின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் மக்கள் திரளுக்கு விளக்கிக் கூறுவதாகும். இந்த விஷயம் மீது ஒருவகையான தப்பெண்ணம் இருக்கிறது. காவுத்ஸ்கியும் ஷில்ஃபர்டிங்கும் தத்து வாளர்கள் என்ற முறையில் வக்கற்று இருந்தபோதிலும் *Freiheit*ல் அண்மையில் வெளியிடப்பட்ட கட்டுரைகள் அவர்கள் ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் பின் தங்கிய பகுதிகளின் மனப்போக்கைச் சரியாகவே பிரதிபலிக் கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. இதே காரியம் நமது நாட்டிலும் நடந்தது: ருஷ்யப் புரட்சியின் முதல் எட்டு மாதங்களில் சோவியத் அமைப்புமுறை பற்றிய விஷயம் மிக அதிகமாக விவாதிக்கப்பட்டது; இந்தப் புதிய அமைப்பு முறை என்ன என்பதையோ, இந்த சோவியத்துகள் ஓர் அரசுப் பொறியமைவாக மாற்றப்பட முடியுமா என்பதையோ தொழிலாளர் புரிந்து கொள்ளவில்லை. நமது புரட்சியில் நாம் நடைமுறைப் பாதையில் முன்னேறினோம், தத்துவார்த்தப் பாதையில் அல்ல. உதாரணமாக, முன்னாளில் நாம் தத்து வார்த்த முனையில் இருந்து அரசியல் நிர்ணய சபை விஷ யத்தை எழுப்பவில்லை, அரசியல் நிர்ணய சபையை அங்கீ கரிக்கவில்லை என்றும் நாம் கூறவில்லை. பின்னால் மட்டுமே, சோவியத் நிறுவனங்கள் நாடு முழுவதும் பரவி அரசியல் அதி

காரத்தைக் கைப்பற்றிவிட்ட போது மட்டுமே நாம் அரசியல் நிர்ணய சபையினைக் கலைத்துவிட முடிவு செய்தோம். ஹங்கேரியிலும் ஸ்விட்சர்லாந்திலும் இந்த விஷயம் மேலும் அதிக முனைப்பாக இருப்பதை இப்போது காண்கிறோம்.[86] ஒரு புறத்தில் இது மிகவும் நல்லதே: மேற்கு ஐரோப்பிய அரசுகளில் புரட்சி மேலும் வேகமாக முன்னேறி வருகிறது எனவும், மாபெரும் வெற்றிகளை விளைக்கும் எனவும் இது நமக்கு உறுதியான நம்பிக்கையைத் தருகிறது. மறு புறம் ஏதோ ஓர் அபாயம் இதில் மறைந்திருக்கிறது. அதாவது இந்தப் போராட்டம் மிகவும் கடுவேகமானதாக இருப்பதால் பெருந்திரளான தொழிலாளர் உணர்வுநிலை இந்த வளர்ச்சிக்கு ஈடான வேகத்தில் முன்னேற முடியாது. இப்போதும் கூட சோவியத் அமைப்புமுறையின் முக்கியத்துவம் அரசியல் ரீதியில் போதனை பெற்ற பெருந்திரளான ஜெர்மன் தொழிலாளர்களுக்குத் தெளிவாகவில்லை. காரணம் அவர்கள் நாடாளுமன்ற அமைப்புமுறையின் உணர்வில், முதலாளித்துவ வகைப்பட்ட தப்பெண்ணங்களுக்கு மத்தியில் பயிற்றுவிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இரண்டாவது: சோவியத் அமைப்புமுறையின் விரிவு குறித்து. சோவியத்துகள் பற்றிய கருத்து ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் கூட எவ்வளவு வேகமாகப் பரவி வருகிறது என்பதை அறியும் போது, பாட்டாளி வர்க்கப் புரட்சி நிச்சயம் வெற்றிவாகை சூடும் என்பதற்கு இது மிகவும் முக்கியமான சான்றாகிறது. இதன் முன்னேற்றத்தை மிகக் குறுகிய காலத்துக்கு மட்டுமே தடைப்படுத்த முடியும். ஆயினும் தோழர்கள் ஆல்பர்ட் மற்றும் பிளாட்டன் தமது நாடுகளின் நாட்டுப்புற வட்டாரங்களில் பண்ணைத் தொழிலாளர் மற்றும் சிறிய விவசாயிகள் மத்தியில் சோவியத்துகள் மிகவும் அரிதாகவே உள்ளன என்று நம்மிடம் கூறுவது முற்றிலும் வேறு விஷயம். *Rote Fahne*ல் விவசாயி சோவியத்துகளை எதிர்க்கும் ஒரு கட்டுரையைப் படித்தேன், ஆனால் அது பண்ணைத் தொழிலாளர் மற்றும் ஏழை விவசாயிகளின் சோவியத்துகளை முற்றிலும் சரியாகவே ஆதரித்திருந்தது.[87] முதலாளித்துவ வர்க்கத்தினரும் ஷெய்டெமன் வகையறு

போன்ற அவர்களது கையாட்களும் விவசாயிகள் சோவியத்து கள் பற்றிய கோஷத்தை ஏற்கெனவே வெளியிட்டு விட்டனர். ஆயினும் நமக்குத் தேவையாக இருப்பதெல்லாம் பண்ணைத் தொழிலாளர்கள் மற்றும் ஏழை விவசாயிகளின் சோவியத்து களே. துரதிருஷ்டவசமாக தோழர்கள் ஆல்பர்ட், பிளாட்டன் மற்றும் இதரர்களின் தகவல்களின்படி ஹங்கேரி நீங்கலாக நாட்டுப்புறப் பகுதிகளில் சோவியத் அமைப்புமுறையைப் பரப்புவதற்கு மிகச் சிறு முயற்சியே செய்யப்பட்டுள்ளது. இதில்தான் ஒருவேளை ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் நிச்சயமான வெற்றியை அச்சுறுத்தும் மெய்யான முற்றும் கடினமான அபாயம் காணக் கிடக்கிறது. நகரப்புறத் தொழிலாளர்கள் மட்டுமன்றி, நாட்டுப்புறப் பாட்டாளி களும்—முன்போல தொழிற்சங்கங்கள், கூட்டுறவு சங்கங் களில் அன்றி—சோவியத்துகளில் ஒழுங்கமைக்கப்பட்டால் மட்டுமே வெற்றி உறுதி செய்யப்பட்டு விட்டதாகக் கருத முடியும். 1917 அக்டோபரில் நாம் விவசாயிகளுடன், அனைத்து விவசாயிகளுடன் அணி சேர்ந்து முன்சென்றோம், இந்த மெய்நடப்பு மூலமே நமது வெற்றி எளிதாக்கப்பட் டது. இந்தப் பொருளில் அந்த நேரத்தில் நமது புரட்சி முத லாளித்துவப் புரட்சியாக இருந்தது. நமது பாட்டாளி வர்க்க அரசாங்கம் எடுத்த முதல் நடவடிக்கையானது, கேரென்ஸ்கியின் கீழ் விவசாயி சோவியத்துகளும் கிராமச் சபைகளும் முன்வைத்திருந்த அனைத்து விவசாயிகளின் பழைய கோரிக்கைகளைப் புரட்சி நடந்த மறு நாளே 1917 அக்டோபர் 26 (பழைய பாணி) நமது அரசாங்கம் பிரகட னம் செய்த சட்டத்தில் செயலுருக்கொடுத்ததேயாகும்.[88] இங்குதான் நமது வலிமை காணக்கிடந்தது; இதனால்தான் நாம் அவ்வளவு எளிதாக மிகப்பெரிய பெரும்பான்மையை வென்று பெற முடிந்தது. நாட்டுப்புறத்தைப் பொருத்தவரை நமது புரட்சி முதலாளித்துவப் புரட்சியாகத் தொடர்ந்து நீடித்தது; பின்னால் மட்டுமே ஆறு மாதங்கள் கடந்த பிறகு அரசாங்க பொறியமைவின் கட்டுக்கோப்புக்குள் நாட்டுப் புறத்தில் வர்க்கப் போராட்டத்தைத் துவங்குவதற்கும், ஒவ்வொரு கிராமத்திலும் ஏழை விவசாயிகள், அரைப்பாட்

டாளிகளின் கமிட்டிகளை நிறுவவும், நாட்டுப்புற முதலாளித்துவ வர்க்கத்தினரை எதிர்த்து முறையான போராட்டத்தை நடத்தவும் நாம் கட்டாயப்படுத்தப்பட்டோம். நாட்டின் பின்தங்கிய தன்மை காரணமாக இது ருஷ்யாவில் தவிர்க்க முடியாததாக இருந்தது. மேற்கு ஐரோப்பாவில் காரியங்கள் வேறுவிதமாக நடக்கும், இதனால்தான் நாம் நாட்டுப்புற மக்கள் மத்தியிலும் சரியான, ஒருவேளை புதிய வடிவங்களில் சோவியத் அமைப்புமுறையைப் பரப்ப வேண்டுவதன் பரம அவசியத்தை வலியுறுத்த வேண்டி இருக்கிறது.

மூன்றாவது: சோவியத்துகளில் கம்யூனிஸ்டுப் பெரும்பான்மையை வென்று பெறுவது என்பதே சோவியத் ஆட்சியதிகாரம் இன்னும் வெற்றியடையாத எல்லா நாடுகளிலும் உள்ள முதன்மையான பணி என்று நாம் கூற வேண்டும். நமது தீர்மானங்கள் கமிஷன் இந்த விஷயத்தை நேற்று விவாதித்தது. இதன் மீது இதர தோழர்கள் தமது கருத்தை வெளியிடலாம். ஆனால் இந்த மூன்று அம்சங்களும் ஒரு விசேஷத் தீர்மானமாக ஏற்கப்பட வேண்டும் என்று நான் பிரேரேபிக்கிறேன். நாம் வளர்ச்சிப் பாதையை விதிமுறை செய்யும் நிலையில் இல்லை என்பது நிச்சயம். பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் புரட்சி மிகவும் விரைவில் வருவது முற்றும் சாத்தியமே, ஆனால் ஒன்றுதிரட்டப்பட்ட தொழிலாளி வர்க்கத்தின் பகுதி என்ற முறையில், ஒரு கட்சி என்ற முறையில் நாங்கள் சோவியத்துகளில் பெரும்பான்மை பெற முயல வேண்டும், கட்டாயம் முயல வேண்டும். பின்னர் நமது வெற்றி உறுதிப்படுத்தப்படும், கம்யூனிஸ்டுப் புரட்சியை எதிர்த்து எந்த சக்தியாலும் எதுவும் செய்ய முடியாது. நாம் பெரும்பான்மை பெறு விட்டால் அவ்வளவு எளிதில் வெற்றியைப் பெற முடியாது, மேலும் அது நீடித்து நிலவுவதாக இருக்காது. எனவே இந்த மூன்று அம்சங்களும் ஒரு விசேஷத் தீர்மானமாக ஏற்கப்பட வேண்டும் என்று நான் பிரேரேபிக்கிறேன்.

பிராவ்தா, இதழ் *51*, *1919*, மார்ச் *6*	நூல் திரட்டு, தொகுதி *37*, பக்கங்கள் *491-509*

ரு.க.க.(போ.)யின் எட்டாவது காங்கிரஸ்[89]

1919, மார்ச் 18—23

1

கட்சியின் வேலைத்திட்டம் பற்றிய அறிக்கை
மார்ச் 19

(கரவொலி.) தோழர்களே! தோழர் புஹாரினும் நானும் நமக்கிடையே ஒப்புக்கொண்டுள்ள விஷயங்கள் பற்றிய பிரிவினையின் பிரகாரம், பல ஸ்தூலமான மிகவும் விவாதிக்கப்பட்ட அம்சங்கள் மீது, அல்லது இன்றைய வேளையில் கட்சி மிகவும் அக்கறை கொண்டு இருக்கும் அம்சங்கள் மீது கமிஷனின் கருத்துநிலையை விளக்க வேண்டுவது எனது பணியாகும்.

தோழர் புஹாரின் கமிஷனில் நம் மத்தியில் இருந்த சர்ச்சைக்குரிய அம்சங்கள் என்று தமது அறிக்கையின் இறுதியில் குறிப்பிட்டுள்ள அம்சங்களைச் சுருக்கமாக எடுத்துக் கவனிப்பது மூலம் நான் துவங்குகிறேன். முதலாவது வேலைத்திட்டத்திற்கான பீடிகையின் கட்டமைப்பு சம்பந்தமானதாகும். பழைய முதலாளித்துவத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாம் நீக்கம் செய்யப்படும் அத்தகைய வழியில் வேலைத்திட்டத்தை வரைவதற்கான எல்லா முயற்சிகளையும் கமிஷனில் இருந்த பெரும்பான்மை நிராகரித்ததன் காரணத்தைத் தோழர் புஹாரின் குறைவறச் சரியாக விளக்கிக் கூறவில்லை என்பதே எனது கருத்து. தோழர் புஹாரின் பேசிய விதம், இதைப் பற்றி என்ன சொல்லப்படும் என்று கமிஷனின் பெரும்பான்மையினர் ஐயுற்று அஞ்சுகிறார்கள் எனவும், பழமைக்குப் போதியளவு மதிப்பளிக்கவில்லை என்று அவர்கள் மீது குற்றம் சாட்டப்படலாம் என்று ஐயுற்று அஞ்சுகிறார்கள் எனவும் உணர்த்துவது போலத் தோன்றும் வகையில் இருந்தது. பெரும்பான்மையினர் நிலை இந்த வழியில் முன்வைக்கப்படும்

போது இது பெருமளவு கேலிக்கிடமானதாகத் தோன்றும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இது உண்மைக்கு மிகவும் மாறுபட்டது. அவை தவறாக இருக்கும் என்பதால் பெரும் பான்மையினர் இந்த முயற்சிகளை நிராகரித்தனர். இவை உண்மை நிலைவரங்களுக்குப் பொருந்தா. முதலாளித்துவத் தின் ஆதார அடித்தளம் இல்லாது சுத்த ஏகாதிபத்தியம் என்றுமே இருந்தது கிடையாது, எங்கும் இருக்கவில்லை, இனி இருக்கவும் முடியாது. நிதி முதலாளித்துவம் அதன் கீழ் பழைய முதலாளித்துவத்தின் அடித்தளங்கள் எதையுமே கொண்டிராது என்பதாகத் தீட்டிக் காட்டப்பட்ட போது, சிண்டிகேட்டுகள், கார்ட்டல்கள், டிரஸ்டுகள், நிதி முத லாளித்துவம் சம்பந்தமாகச் சொல்வதைக் குறித்து செய்யப் பட்ட தவறான பொதுமைப்பாடாகும்

அது தவறு. ஏகாதிபத்தியப் போர்ச் சகாப்தத்திற்கும், ஏகாதிபத்தியப் போரை ஒட்டிய சகாப்தத்திற்கும் இது குறிப் பாயும் தவறானது. எங்கெல்ஸ் தம் காலத்தில், எதிர்காலப் போர் பற்றிய தமது சிந்தனை உரை ஒன்றில் அது முப்ப தாண்டுப் போர்[90] விளைத்ததைக் காட்டிலும் மிகவும் அதிக மான கடுமையான நாசத்தைக் கொண்டுவரும் எனவும், மனிதகுலம் பெருமளவுக்கு மிருகத்தனத்துக்கு இழிந்துவிடும் எனவும், வாணிகம் மற்றும் தொழில்துறை பற்றிய நமது செயற்கையான உறுப்பமைவு தகர்ந்து போகும் எனவும் எழுதினர்.[91] போரின் துவக்கத்தில் சமூக-துரோகிகளும், சந்தர்ப்பவாதிகளும் முதலாளித்துவத்தின் விடா உறுதி குறித்து தற்பெருமை பேசினர்; நம்மை ''உணர்ச்சி வெறி யர்கள் அல்லது அரை அராஜகவாதிகள்'' என்று அழைத்து ஏளனம் செய்தார்கள். ''பாருங்கள், இந்த முன்னறி கூற்றுக் கள் மெய்யாகவில்லை. மிகச்சில நாடுகளில் மட்டுமே, அதுவும் மிகச்சிறு காலப்பகுதியில் மட்டுமே இவை மெய்யாகி உள் ளன என்பதை நிகழ்ச்சிகள் காட்டியுள்ளன!'' என்று அவர் கள் சொன்னார்கள். இப்போது ருஷ்யாவில் மட்டுமன்றி, ஜெர் மனியில் மட்டுமன்றி, வெற்றி பெற்ற நாடுகளிலும் கூட நவீன முதலாளித்துவத்தின் பிரம்மாண்டமான தகர்வு துவங்கி வருகிறது, இது இந்தச் செயற்கையான உறுப்பமைவை

எங்கும் அகற்றி பழைய முதலாளித்துவத்தை மீட்டமைக்கிறது.

முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் தகர்வு குறித்து முற்றிணக்கமான ஒரு சித்திரத்தை முன்வைக்க ஒரு முயற்சி செய்யப்படலாம் என்று தோழர் புஹாரின் கூறிய போது, கமிஷனில் அதற்கு நாங்கள் ஆட்சேபம் தெரிவித்தோம். இங்கு அதற்கு நான் ஆட்சேபம் தெரிவிக்க வேண்டும்: முயன்று பாருங்கள் நீங்கள் வெற்றி பெற முடியாது என்பதைக் காண்பீர்கள். தோழர் புஹாரின் அங்கு—கமிஷனில்—இத்தகைய முயற்சி ஒன்றைச் செய்து தானே அதைக் கைவிட்டார். இதை எவராவது செய்ய முடியுமானால் அது தோழர் புஹாரினுகத்தான் இருக்க வேண்டும் என்பதை நான் முழுமையாக நம்புகிறேன். அவர் இந்த விஷயத்தை மிகவும் விரிவாயும் முழுநிறைவாயும் ஆராய்ந்திருக்கிறுர். அத்தகைய முயற்சி வெற்றியடைய முடியாது என்று நான் அடித்துக் கூறுகிறேன். காரணம் இது தவருன ஒரு பணியாகும். ருஷ்யாவில் இருக்கும் நாம் இப்போது ஏகாதிபத்தியப் போரின் பின்விளைவுகளையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் துவக்கத்தையும் அனுபவப்பட்டு வருகிறேம். அதே சமயம் முன்னை விட அதிகமான அளவில் ஒன்றிடமிருந்து ஒன்று துண்டுபட்டுப் பிரிந்து கிடக்கும் ருஷ்யாவின் பல பிராந்தியங்களில் முதலாளித்துவத்தின் மறுபிறப்பையும் அதன் ஆரம்பக் கட்டத்தின் வளர்ச்சியையும் அடிக்கடி காண்கிறேம். இது நம்மால் தவிர்க்க முடியாத ஒன்று. தோழர் புஹாரின் விரும்பிய விதத்தில் வேலைத்திட்டம் வரையப்படுமானுல் அது தவருன வேலைத்திட்டமாகவே இருக்கும். அதிகப்பட்சம் அது நிதி முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியம் பற்றிச் சொல்லப்பட்ட சிறப்புக்களின் மறு உருவாக்கமாகவே இருக்கும், ஆனுல் அது எதார்த்தத்தை மறு உருவாக்கம் செய்யாது, எதார்த்தம் முற்றிணக்கமானதல்ல என்பதே சரிநுட்பமாயும் இதற்குரிய காரணமாகும். முரண் கூறுடைய பகுதிகளால் உருவாக்கப்பட்ட ஒரு வேலைத்திட்டம் நடைப்பண்பற்றது (ஆனுல் அது நிச்சயமாயும் முக்கியமல்ல), ஆனுல் வேறு எந்த ஒரு வேலைத்திட்டமும் முற்றிலும் தவருகவே

இருக்கும். இது எவ்வளவுதான் பொல்லாங்குடையதாக இருந்தாலும் சரி, தகவுப் பொருத்தத்தில் என்னதான் குறைபாடுள்ளதாக இருந்தாலும் சரி, முரண் கூறுன இந்தப் பண்பை, பல்வேறு விஷயாதாரங்களை இணைத்து உருவாக்கவேண்டிய அவசியத்தை மிக நீண்ட காலத்துக்குத் தவிர்க்க முடியாது. இதைத் தவிர்க்க முடியும் போது நாம் இன்னொரு வேலைத்திட்டத்தை உருவாக்குவோம். ஆனால் அப்போது நாம் ஏற்கெனவே சோஷலிஸ்டு சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருப்போம். அப்போது காரியங்கள் இப்போது இருப்பது போலவே இருக்கும் என்று பாவனை செய்வது கேலிக்கிடமானது.

முதலாளித்துவத்தின் மிக ஆரம்பமும் அடித்தளமுமான பல வெளிப்பாடுகள் புத்தெழுச்சி பெற்றுவிட்ட காலத்தில் நாம் வாழ்கிறோம். உதாரணமாகப் போக்குவரத்தின் தகர்வை எடுத்துக் கொள்வோம். இதை நாம் மிகவும் நன்றாக—அல்லது மேலும் சரியாக சொன்னால் நமது சொந்த விஷயத்தில் மிகமோசமாகவே—அனுபவப்பட்டு வருகிறோம். இதுவே மற்ற நாடுகளிலும் வெற்றி பெற்ற நாடுகளிலும் கூட நடந்து வருகிறது. போக்குவரத்தில் தகர்வு என்றால் ஏகாதிபத்திய அமைப்புமுறையின் கீழ் என்ன பொருள்? பண்ட உற்பத்தியில் மிகவும் புராதன வடிவங்களுக்குத் திரும்பிச் செல்லல் என்பதே. நமது கொள்ளை லாபக்காரர்கள் அல்லது அடித்துப் பறிப்போர் யார் என்பதை நாம் நன்றாக அறிவோம். பிந்திய சொல் இது வரையில் வெளிநாட்டினருக்குத் தெரியாமல் இருந்தது. இப்போதோ? மூன்றும் அகிலத்தின் காங்கிரசுக்கு வந்து சேர்ந்துள்ள தோழர்களிடம் பேசிப் பாருங்கள். இதே போன்ற சொற்கள் ஜெர்மனியிலும் ஸ்விட்சர்லாந்திலும் தோன்றத் தொடங்கியிருப்பது தெரியவரும். இந்த இனவகையினை எந்த ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்குள்ளும் பொருத்தி வைக்க முடியாது, முதலாளித்துவ சமுதாயத்தின் மற்றும் பண்ட உற்பத்தியின் மிகத் தொடக்கக் காலத்துக்குத் திரும்ப நேரும்.

ஒரு சுமுகமான முற்றிணக்கமான வேலைத்திட்டத்தை உருவாக்குவது மூலம் இந்த வருந்தத்தக்க எதார்த்தத்தில்

இருந்து தப்புவது என்பது இந்த உலகுடன் சம்பந்தமில்லாத ஏதோ ஒரு வானுலகத்துக்குத் தப்பிச் செல்வதாகும், ஒரு தவருன வேலைத்திட்டத்தை வரைவதாகும். தோழர் புஹாரின் பண்பான முறையில் ஜாடைமாடையாகக் கூறியது போன்று இங்கு பழைய வேலைத்திட்டத்தில் இருந்து வாசகங்களைப் புகுத்துமாறு நம்மைத் தூண்டியது எவ்வகையிலும் பழமைக்குப் பயபக்தி காட்டுவதாகாது. இங்கு உணர்த்தப் படுவதாகத் தோற்றமளிப்பது இதுவே: லெனினது பங்கேற்புடன் இந்த வேலைத்திட்டம் 1903ல் வரையப்பட்டது; இந்த வேலைத்திட்டம் மோசமானது என்பதில் சந்தேகமில்லை; ஆனல் முதிய பேர்கள் பழைய காலத்தை நினைவு கூரவே மிகவும் விரும்புவர் என்ற காரணத்தால், புதிய சகாப்தத்தில் வரையப்பட்ட புதிய வேலைத்திட்டம் பழைய காலத்திடமுள்ள பயபக்தியால் பழைய வேலைத்திட்டத்தைத் திருப்பிக் கூறுகிறது. இது அப்படியானல் இத்தகைய பித்துக்கொள்ளிகள் எள்ளி நகையாடப்பட வேண்டும். இது அப்படி அல்ல என்று நான் அடித்துக் கூறுகிறேன். 1903ல் வருணிக்கப்பட்ட முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்தின் சிதைவு காரணமாகவும் அதன் தகர்வு காரணமாகவும் மட்டுமே 1919ல் சோவியத் பாட்டாளி வர்க்கக் குடியரசில் நிலவுகிறது. உதாரணமாக, இந்த மாதிரியான முதலாளித்துவத்தை மாஸ்கோவில் இருந்து மிகத் தொலைவில் இல்லாத சமார்ஸ்கயா குபேர்னியாவிலும் வியாத்ஸ்கயா குபேர்னியாவிலும் காணலாம். உள்நாட்டுப் போர் நாட்டைப் பிளவுறுத்தி வரும் காலகட்டத்தில் நாம் இந்த நிலைமையில் இருந்து, இந்த லாபக் கொள்ளையில் இருந்து விரைவில் வெளிப்பட முடியாது. இதனல்தான் வேலைத்திட்டத்தின் வேறு எந்தக் கட்டமைப்பும் சரியல்ல. உண்மையில் இருப்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டும்: வேலைத்திட்டம் எது அறவே மறுக்கப்பட முடியாததோ உண்மையில் நிலைநிறுத்தியதோ அதைக் கொண்டதாக இருக்க வேண்டும். அப்போது மட்டுமே அது மார்க்சிய வேலைத்திட்டமாக இருக்கும்.

தத்துவார்த்த ரீதியில் தோழர் புஹாரின் இதை முழுமையாகப் புரிந்து கொள்கிருர், வேலைத்திட்டம் ஸ்தூலமான

தாக இருக்க வேண்டும் என்று சாற்றுகிருர். ஆனல் புரிந்து கொள்வது என்பது ஒன்று, இந்தப் புரிவின் மீது செயல்படு வது என்பது இன்னென்று. தோழர் புஹாரினின் ஸ்தூலத் தன்மை நிதி முதலாளித்துவத்தின் ஏட்டுச் சுரைக்காய் பாணி வர்ணனையாகும். எதார்த்தத்தில் நாம் முரண் கூருன புலப் பாடுகளை எடுத்துக் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு விவசாய குபேர்னியாவிலும் ஏகபோகத் தொழில்துறையுடன் அக்கம் பக்கமாக தடையில்லாத போட்டியும் இருக்கிறது. பல கிளை களில் தடையில்லாத போட்டி இல்லாமல், ஏகபோக முதலாளித்துவம் இந்த உலகில் எங்குமே இருந்ததில்லை, இருக்கப் போவதும் இல்லை. அத்தகைய அமைப்புமுறை பற்றி எழுதுவது பொய்யான, எதார்த்தத்திடமிருந்து வேறு பட்ட ஓர் அமைப்புமுறை பற்றி எழுதுவதாகும். பட்டறைத் தொழிலைப் பற்றிக் குறிப்பிடும் போது அது திரளான சிற்ற ளவான உற்பத்தியின் மீது எழுந்த மேற்கட்டுமானம் என்று மார்க்ஸ் கூறினர் என்ருல்[92], ஏகாதிபத்தியமும் நிதி முத லாளித்துவமும் பழைய முதலாளித்துவம் மீதான மேற்கட்டு மானமாகும். ஏகாதிபத்தியத்தின் உச்சி அழிக்கப்படுமானல் பழைய முதலாளித்துவம் அம்பலப்படுத்தப்படும். பழைய முதலாளித்துவம் இல்லாமலே முற்றிணக்கமான ஏகாதிபத் தியம் என்ற ஒரு விஷயம் இருப்பதாகச் சாதிப்பது சிந்த னைக்கு முன் விருப்பத்தை வைப்பதாகும்.

இது ஓர் இயல்பான தவறு, மிக எளிதில் புரியக் கூடிய தவறு. முதலாளித்துவத்தை முற்ருக மாற்றிவிட்டதான ஒரு முற்றிணக்கமான ஏகாதிபத்தியம் நம் முன் இருக்குமானல் நமது வேலை நூருயிரம் மடங்கு எளிதாகி விடும். சகலமும் நிதி மூலதனத்துக்கு மட்டுமே கீழடக்கப்பட்டதான ஓர் அமைப்புமுறையில் வந்து முடிந்திருக்கும். அந்த நிலையில் உச்சியை அகற்றி விட்டு மீதமுள்ளதைப் பாட்டாளி வர்க் கத்துக்கு மாற்றி வழங்குவது மட்டுமே மீதமாக இருக்கும். அது மிகமிக விரும்பத்தக்கதே, ஆனல் எதார்த்தத்தில் இந்த நிலை இல்லை. எதார்த்தத்தில் வளர்ச்சிப்பணி இருக்கும் நிலை யில் நாம் முற்றும் வேருன வழியில் செயல்பட வேண்டி இருக் கிறது. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் மீதான ஒரு

மேற்கட்டுமானம். அது தகர்ந்து விழும் போது நாம் உச்சியை அழிப்பதிலும் அடித்தளத்தை அம்பலப்படுத்துவதிலும் ஈடுபடுவதைக் காண்கிறோம். இதனால்தான் நமது வேலைத்திட்டம் அது பிழையற்றதாக இருக்குமானால் உள்ளபடியே என்ன நிலவுகிறது என்பதைச் சாற்ற வேண்டும். பழைய முதலாளித்துவம் இருக்கிறது, அது பல கிளைகளில் ஏகாதிபத்தியமாக வளர்ந்திருக்கிறது. அதன் போக்கியல்புகள் தனி முழுமையாயும் ஏகாதிபத்தியத் தன்மையுடையவை. ஏகாதிபத்தியத்தின் கருத்துநிலையில் இருந்து மட்டுமே அடிப்படையான விஷயங்களைப் பரிசீலிக்க முடியும். இந்தப் போக்கியல்பின் கருத்துநிலையில் இருந்தல்லாமல் வேறு எந்த வழியிலும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தப்பட்ட எந்தத் தனி ஒரு பெரிய பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. வேலைத்திட்டம் இப்போது விளக்குவது இதைப் பற்றி அல்ல. எதார்த்தத்தில் பழைய முதலாளித்துவத்தின் மிக பரவலான அடித்தளம் இருக்கிறது. போருக்கு இட்டுச் சென்ற ஏகாதிபத்தியத்தின் மேற்கட்டுமானம் இருக்கிறது. இந்தப் போரில் இருந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தொடக்கம் பின்நிகழ்ந்தது. இந்த கட்டத்தை நீங்கள் தவிர்க்க முடியாது. இந்த மெய்நடப்பு உலகம் முழுதுமான பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மெய் வீதத்தின் சிறப்பம்சமாகும், வரப்போகும் பல ஆண்டுகளுக்கு மெய்யாகவே நீடிக்கும்.

மேற்கு ஐரோப்பியப் புரட்சிகள் ஒருவேளை அதிக உலைவற்று நடக்கலாம். இருந்தபோதிலும் உலகம் முழுவதையும் மறுசீரமைப்பதற்கு, பெரும்பான்மை நாடுகளை மறுசீரமைப்பதற்கு மிகப்பல ஆண்டுகள் பிடிக்கும். இதன் பொருள் இன்றைய மாறுதல் காலகட்டத்தில் நாம் இந்த பல்வேறு அம்சங்கள் இணைந்த எதார்த்தத்தைத் தவிர்க்க முடியாது. இந்த ஒட்டுப்பிளாஸ்திரி எதார்த்தம் எவ்வளவுதான் நடைப்பண்பற்றதாக இருந்தபோதிலும் அதனை வெளியே தள்ளிவிட முடியாது, அதன் ஒரு துண்டைக் கூட வெளியே தள்ளிவிட முடியாது. அது வரையப்பட்ட விதத்தில் அல்லாமல் வேறு விதத்தில் வேலைத்திட்டம் வரையப்பட்டிருக்குமானால், அது தவறான வேலைத்திட்டமாகவே இருக்கும்.

நாம் சர்வாதிகாரத்தை வந்து அடைந்து விட்டதாக கூறு கிறோம். ஆனால் அதை எப்படி வந்து அடைந்தோம். என்பதை நாம் அறிதல் வேண்டும். பழமை நம்மைப் பலமாகப் பற்றிக்கொண்டு இருக்கிறது, ஆயிரம் கொடுக்குகளால் நம்மைப் பற்றிப் பிடித்துள்ளது, தனி ஒரு முன்னேற்றப் படி கூட எடுத்து வைக்க இடம் தருவதில்லை, அல்லது நாம் இப்போது எடுப்பது போன்று மோசமான வழியில் இந்தப் படிகளை எடுத்து வைக்குமாறு கட்டாயப்படுத்துகிறது. நாம் வந்து அடைந்துள்ள நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் நாம் எவ்வாறு இயங்கினோம், எது நம்மை சோஷலிஸ்டுப் புரட்சிக்கே இட்டுச் சென்றது என்பன குறித்துக் குறிப்பிட வேண்டும் என்று நாம் கூறுகிறோம். ஏகாதிபத்தியத்தால், ஆரம்ப பண்ட உற்பத்தி வடிவங்களில் இருக்கும் முதலாளித்துவத்தால் அதற்கு இட்டுச் செல்லப்பட்டோம். இவை யாவும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். காரணம் நாம் எதார்த்தத்தைக் கணித்திடுவதன் மூலம் மட்டுமே நடுத்தர விவசாயிகள் பாலான நமது உறவுநிலை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். பாருங்கள் முற்றிலுமான ஏகாதிபத்திய முதலாளித்துவ சகாப்தத்தில் நடுத்தர விவசாயிகள் என்ற இவ்வகை இருப்பது எப்படி? முதலாளித்துவ நாடாக மட்டுமே இருந்தவற்றில்கூட அவ்வினம் இருக்கவில்லை. இந்தக் கிட்டத்தட்ட மத்திய கால புலப்பாட்டின் (நடுத்தர விவசாயிகள்) பாலான நமது உறவுநிலை குறித்த பிரச்சினைக்கு முற்றிலும் ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கருத்து நிலையில் இருந்து தீர்வு காண வேண்டுமானால் நம்மால் இரு கோடிகளைச் சந்திக்க வைக்க முடியாது, நாம் பல இடர்ப்பாடுகளில் சிக்குற நேரும். ஆனால் நடுத்தர விவசாயிகள் பாலான நமது உறவு நிலையை மாற்ற வேண்டுமானால், அப்போது தத்துவார்த்தப் பகுதியிலும் அவன் எங்கிருந்து வந்தான், அவன் யார் என்பதை எடுத்துக் கூறும் நற்பண்பு நமக்கு வேண்டும். அவன் ஒரு சிறு உற்பத்தியாளன். இதுவே முதலாளித்துவத்தின் அரிச்சுவடி, இதை விஞ்சி இன்னும் நாம் வளர்ந்து விடவில்லை, எனவே இதைப் பற்றி நாம் பேச வேண்டும். ''நாம் நிதி

முதலாளித்துவம் பற்றிப் படித்திருக்கும் போது இந்த அரிச்சுவடி ஏன் படிக்க வேண்டும்?'' என்று இதை உதறித்தள்ளிக் கூறுவது மிகவும் விளையாட்டுத் தனமானது.

தேசியப் பிரச்சினை பற்றியும் நான் இதையேதான் கூற வேண்டும். இங்கும் தோழர் புஹாரினுக்கு எதார்த்தத்தை விட விருப்பமே மேலோங்கி இருக்கிறது. தேசங்களின் சுய நிர்ணய உரிமையை ஒப்புக்கொள்ளக் கூடாது என்று அவர் கூறுகிறுர். தேசம் என்பது பாட்டாளிகளுடன் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கமாகும். பாட்டாளிகளான நாம் இகழ்ச்சிக்குரிய முதலாளித்துவ வர்க்கத்தின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொள்வதா? இது அறவே பொருத்தமற்றது! மன்னிக்கவும், இது எது உண்மையில் நிலவுகிறதோ அதற்குப் பொருத்தமானது. இதை நீங்கள் நீக்கிவிட்டால் விளைவு படுமோசமான கற்பனையேதான். தேசத்துக்குள்ளே நிகழ்ந்து வரும் பாகுபாட்டு நடைமுறையை, முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து பாட்டாளி வர்க்கம் தனிப்பிரியும் நடைமுறையை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். ஆனுல் இந்தப் பாகுபாடு எப்படி நடக்கும் என்பதைப் பார்ப்போம்.

உதாரணமாக ஜெர்மனியை எடுத்துக் கொள்வோம். இது முன்னேறிய முதலாளித்துவ நாட்டுக்கு ஒரு மாதிரி. இதன் முதலாளித்துவ—நிதி முதலாளித்துவ—நிறுவனம் அமெரிக்காவினுடைய நிறுவனத்தை விடவும் மேலானது. அது வேறுபல அம்சங்களில்—தொழில் நுட்ப வளர்ச்சி, பண்ட உற்பத்தி மற்றும் அரசியல் துறையில்—கீழ் நிலையில் இருந்தது. ஆனுல் நிதி முதலாளித்துவத்தின் நிறுவனம் பொருத்தவரை, ஏகபோக முதலாளித்துவத்தை அரசு ஏகபோக முதலாளித்துவமாக மாற்றுவதைப் பொருத்தவரை ஜெர்மனி அமெரிக்காவை விடவும் மேலானதாகும். அது ஒரு மாதிரி எனத் தோன்றும். அனுல் அங்கே என்ன நடக்கிறது? ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து பாகுபடுத்திக் கொண்டு விட்டதா? இல்லை! ஒரு சில பெரிய நகரங்களில் மட்டுமே பெரும்பான்மையான தொழிலாளர் ஷெய்டெமனுக்கு எதிர்ப்பாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனுல் இது எப்படி நேர்ந்

தது? ஸ்பார்ட்டகிஸ்டுளுககக்கும்[93] எல்லாவற்றையும் போட்டுக் குட்டை குழப்பி சோவியத்துகளின் அமைப்பை ஓர் அரசியல் நிர்ணய சபையுடன் இணைக்க விரும்பும் முக்காலும் சபிக்கப்பட்ட ஜெர்மன் மென்ஷிவிக்குகளான சுயேச்சையாளர்களுக்கும் இடையிலான கூட்டணியே இதற்குக் காரணம்! அதே ஜெர்மனியில் நடைபெறுவது இதுவே! அது ஒரு முன்னேறிய நாடு என்பதை மறந்து விடாதீர்கள்!

''தேசங்களின் சுயநிர்ணய உரிமை நமக்கு எதற்கு?'' என்கிறார் தோழர் புஹாரின். 1917 கோடையில் அவர் குறைந்தபட்ச வேலைத்திட்டத்தை நீக்கி விட்டு அதிகபட்ச வேலைத்திட்டத்தை மட்டும் விட்டுவைக்கலாம் என்று பிரேரேபித்த போது அதை எதிர்த்து நான் சொன்னவற்றை நான் மீண்டும் கூற வேண்டும். அப்போது நான் எதிர்த்துக் கூறினேன்: ''இடர் தீரும் வரை மகிழாதே''. நாம் ஆட்சி அதிகாரத்தை வென்றடைந்து விட்ட போதும் கூட சிறிது காத்திருந்த பிறகு மட்டுமே இதைச் செய்வோம். நாம் ஆட்சி அதிகாரத்தை வென்று பெற்று விட்டோம், சிறிது காத்திருந்தும் விட்டோம். இப்போது அதைச் செய்ய முனைவேன். நாம் சோஷலிஸ்டு நிர்மாணத்தில் நேரடியாக இறங்கி விட்டோம், நம்மை அச்சுறுத்திய முதல் தாக்குதலை முறியடித்து விட்டோம், இப்போது அது ஒழுங்காக நடக்கும். இதுவே தேசங்களில் சுயநிர்ணய உரிமைக்கும் பொருந்தும். ''உழைக்கும் வர்க்கங்களின் சுயநிர்ணய உரிமையை மட்டுமே ஒப்புக்கொள்ள நான் விரும்புகிறேன்'' என்கிறார் தோழர் புஹாரின் அதாவது ருஷ்யாவைத் தவிர வேறு எந்த ஒரு நாடும் சாதித்திராத ஏதோ ஒன்றை ஒப்புக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள். இது கேலிக்கிடமானது.

பின்லாந்தைப் பாருங்கள். அது ஒரு ஜனநாயக நாடு, நம்மை விட அதிக வளர்ச்சியும் கலாசாரமும் கொண்ட நாடு. பின்லாந்தில் பாட்டாளி வர்க்க பாகுபாட்டின் ஒரு தனிப்பிரியும் போக்கு ஒரு பிரத்தியேகமான பாதையை மேற்கொண்டிருக்கிறது. இது நம் விஷயத்தில் ஏற்பட்டதை விடவும் அதிக வேதனையானது. பின் மக்கள் ஜெர்மனியின் சர்வாதிகாரத்தை முன்பு அனுபவப்பட்டுள்ளனர், இப்போது நேச

வல்லரசுகளின் சர்வாதிகாரத்தை அனுபவப்பட்டு வருகிறுர்கள். ஆனுல் தேசங்களின் சுயநிர்ணய உரிமையை நாம் ஒப்புக்கொண்டிருப்பதன் பலனுக அங்கு பாகுபாட்டு நடைமுறை எளிதாக்கப்பட்டது. ஸ்மோல்னி மாளிகையில்[94] நான், கொலைபாதகன் பாத்திரத்தை வகித்து வந்த பின்னிஷ் முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதியான ஸ்வின்ஹுவுட்—ருஷ்யனில் இப்பெயருக்கு ''பன்றித் தலை'' என்று பொருள்—இடம் இந்த சட்டப்பிரதியை ஒப்படைத்த காட்சியை[95] நான் மிகவும் நன்ருக நினைவு கூருகிறேன். அவர் அன்பு கெழும் என் கைகளைக் குலுக்கினுர், நாங்கள் பாராட்டுக்களைப் பரிமாறிக் கொண்டோம். அது எவ்வளவு விரசமாக இருந்தது! ஆனுல் இதைச் செய்தே தீர வேண்டும் என்ற நிலை. காரணம் அப்போது இந்த முதலாளித்துவ வர்க்கத்தினர், மாஸ்கோவாசிகள், தேசியவெறியர், மஹா-ருஷ்யர்கள் பின் மக்களை நசுக்க விரும்புகிறுர்கள் என்று குற்றம் சாட்டி மக்களை ஏமாற்றி வந்தார்கள், உழைக்கும் மக்களை ஏமாற்றி வந்தார்கள். இதைச் செய்தே தீர வேண்டும் என்ற நிலை.

நேற்று பஷ்கீரிய குடியரசு சம்பந்தமாக இதே காரியத்தைச் செய்ய வேண்டியது அவசியமல்லவா?[96] இந்த உரிமையைச் சில இடங்களில் ஒப்புக்கொள்ளலாம்'' என்று தோழர் புஹாரின் சொன்ன போது அவர் தமது பெயர்ப்பட்டியலில் நாடோடிகள், வேட்டுவ இனத்தவர் மற்றும் இந்தியர்களைச் சேர்த்துக் கொண்டிருப்பதாக நான் குறித்துக் கொண்டேன். இந்தப் பெயர்பட்டியல் பற்றிக் கேள்விப்பட்டு தோழர் புஹாரின் எப்படி அற்ப சொற்பமான பஷ்கீர்களை மறந்துவிட்டார் என்று நினைத்தேன். ருஷ்யாவில் வேட்டுவ இனத்தவர் இல்லை, நாடோடிகள் எவரும் சுயாட்சிக் குடியரசு கோரும்படி நான் கேள்விப்படவில்லை. ஆனுல் நம்மிடையே பஷ்கீர்கள், கிர்கீஸ்கள், இதர பல மக்கள் இனங்கள் உள்ளன. இவர்களுக்கு நாம் அங்கீகாரம் மறுக்க முடியாது. முன்னுல் ருஷ்ய சாம்ராஜ்யத்தின் எல்லைகளுக்குள் வாழ்ந்து வரும் மக்கள் இனங்களில் ஒன்றுக்குக் கூட அங்கீகாரம் மறுக்க முடியாது. பஷ்கீர்கள் சுரண்டலாளர்களை வீழ்த்தி விட்டார்கள் என்றும், இதைப் புரிய நாம் அவர்களுக்கு உதவி செய்தோம்

என்றும் வைத்துக்கொள்வோம். ஒரு புரட்சி பூரணமாக முதிர்ச்சி அடைந்திருந்தால் மட்டுமே இது சாத்தியம். ஒருவர் தமது தலையீடு மூலம் நாம் எதைத் துரிதப்படுத்த வேண்டும் என்கிறோமோ அந்த பாட்டாளி வர்க்கத்தின் பாகுபாட்டு நடைமுறையைத் தடைப்படுத்தாத வகையில் இது கவனத்துடன் செய்யப்பட வேண்டும். இன்று வரை தமது முல்லாக்களின் செல்வாக்கின் கீழ் இருக்கும் கிர்கீஸ்கள், உஸ்பெக்குகள், தஜிக்குகள் மற்றும் துருக்மெனியர்கள் போன்ற மக்கள் இனங்கள் விஷயத்தில் நாம் என்ன செய்ய முடியும்? இங்கு ருஷ்யாவில் புரோகிதர்களுடன் நீண்ட காலம் அனுபவப்பட்டுள்ள மக்கள் அவர்களை வீழ்த்துவதில் நமக்கு உதவி செய்தார்கள். ஆனால் இன்னும் கூட சிவில் முறைத் திருமணம் பற்றிய அரசாணை எவ்வளவு மோசமாக அமுல்படுத்தப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த மக்களை அணுகி, ''உங்களது சுரண்டலாளர்களை வீழ்த்துவோம்'' என்று நாம் கூற முடியுமா? இதை நம்மால் செய்ய முடியாது. காரணம் அவர்கள் அவர்களது முல்லாக்களிடம் முற்றிலும் கீழடக்கப் பட்டுக் கிடக்கிறார்கள். இத்தகைய இடங்களில் சம்பந்தப் பட்ட தேசம் வளர்ச்சியடையும் வரை, தவிர்க்க முடியாத தான பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ நபர்களிடமிருந்து பாகுபடுவது நடைபெறுவது வரை நாம் காத்திருக்க வேண்டும்.

தோழர் புஹாரின் காத்திருக்க விரும்பவில்லை. அவர் பொறுமையின்மையால் பீடிக்கப்பட்டிருக்கிறார்: ''நாம் ஏன் காத்திருக்க வேண்டும்? நாமே முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி சோவியத் ஆட்சி அதிகாரத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பிரகடனம் செய்த பிறகு நாம் ஏன் அவ்வாறு நடக்க வேண்டும்?'' இதற்கு ஓர் எழுச்சியூட்டும் வேண்டுகோளின் திறம் இருக்கிறது. இதில் நமது பாதைக்கான ஓர் அடையாளம் காணப்படுகிறது. ஆனால் நமது வேலைத் திட்டத்தில் இதை மட்டுமே பிரகடனம் செய்வோமானால் அது ஒரு வேலைத்திட்டமாக இருக்காது, ஆனால் ஒரு பிரகடனமாகவே இருக்கும். நாம் சோவியத் ஆட்சி அதிகாரத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பிரகடனம் செய்ய

லாம், முதலாளித்துவ வர்க்கத்தின் மீதான நமது வெறுப்பை வெளிப்படுத்தலாம்—அவர்கள் ஆயிரம் தடவை இத்தகைய வெறுப்புக்குத் தகுதியுடையவர்கள். ஆனால் வேலைத்திட்டத்தில் உள்ளபடியே என்ன இருக்கிறது என்பதை மிகமிகத் துல்லியத்துடன் எழுத வேண்டும். பின்னர் நமது வேலைத்திட்டம் மறுக்க முடியாததாக விளங்கும்.

நாம் கறாராயும் ஒரு வர்க்க நோக்குநிலையை உறுதியாக வைத்திருக்கிறோம். நாம் வேலைத்திட்டத்தில் வரைவது என்னவென்றால், பொதுவாக தேசங்களின் சுயநிர்ணய உரிமை குறித்து நாம் எழுதிய காலத்திற்குப் பின்னால் உண்மையில் என்ன நடைபெற்றுள்ளதோ அதைக் குறித்த ஒப்புதலேயாகும். அந்த நேரத்தில் பாட்டாளி வர்க்கக் குடியரசுகள் இருக்கவில்லை. அவை தோன்றிய பொழுதே அவை தோன்றிக் கொண்டிருந்த அளவில் மட்டுமே இங்கு எழுதப்பட்டுள்ளதை நம்மால் எழுத முடிந்தது: ''சோவியத் மாதிரியைப் பின்பற்றி அமைக்கப்படும் அரசுகளின் ஒரு கூட்டாட்சி''. சோவியத் மாதிரி என்பது ருஷ்யாவில் நிலவும் சோவியத்துகள் என்பதாக இன்னும் ஆகவில்லை, ஆனால் சோவியத் மாதிரி சர்வதேச முறை ஆகி வருகிறது. நாம் சொல்லக் கூடியதெல்லாம் இவ்வளவே. இன்னும் முன்னே செல்வது, ஒரு படி முன்னே செல்வது, ஒரு மயிரிழை முன்னே செல்வது தவறானது, எனவே ஒரு வேலைத்திட்டத்திற்குப் பொருந்தாது.

மத்திய கால அமைப்பில் இருந்து முதலாளித்துவ ஜனநாயகத்துக்கும் முதலாளித்துவ ஜனநாயகத்தில் இருந்து பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்கும் ஆன பாதையில் சம்பந்தப்பட்ட ஒரு தேசம் எய்தியுள்ள கட்டத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் கூறுகிறோம். இது முற்றிலும் சரியானது. எல்லா தேசங்களுக்கும் சுயநிர்ணய உரிமை இருக்க வேண்டும்—நாடோடிகளையும் வேட்டுவ இனங்களையும் பற்றி விசேஷமாகப் பேச வேண்டுவது இல்லை. மிகப் பெரிய பெரும்பான்மை, உலகின் மக்கள் தொகையில் 100க்கு சுமார் 90, ஒரு வேளை 95 பேர் இந்த வர்ணனைக்குள் அடங்குவர். காரணம் எல்லா நாடுகளும்

மத்திய கால அமைப்பில் இருந்து முதலாளித்துவ ஜனநாயகத்தையும் முதலாளித்துவ ஜனநாயகத்தில் இருந்து பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தையும் நாடிச் செல்கின்றன. இது அறவே தவிர்க்க முடியாத செல்வழியாகும். இதைப் பற்றி இதற்கு மேல் அதிகமாகச் சொல்ல முடியாது. அப்படிச் சொல்வது தவருகும், காரணம் அது உண்மையில் என்ன இருக்கிறதோ அதுவாக இருக்காது. தேசங்களின் சுயநிர்ணயத்தினை நிராகரித்து உழைக்கும் மக்களின் சுயநிர்ணயத்தைப் புகுத்துவது என்பதும் அறவே தவருனது. காரணம் இந்த முறையில் இந்த விஷயத்தை முடிப்பது தேசங்களின் அகத்தேயான பாகுபாடு மேற்கொள்ளும் இடர்ப்பாடுகள் வாய்ந்த கோணல் வழியினை கவனத்திற்கொள்வதாக இருக்காது. இது ஜெர்மனியில் நமது நாட்டில் போன்று அதே வழியில் நடைபெறுகிறதில்லை. சில அம்சங்களில் துரிதமாயும் இதர அம்சங்களில் மெதுவாயும் இரத்தம் சிந்தும் வழியிலும் நடைபெறுகிறது. சோவியத்துகளையும் அரசியல் நிர்ணய சபையையும் இணைப்பது என்ற அவ்வளவு கோரமான கருத்தை நமது நாட்டில் இருக்கும் எந்த ஒரு கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் நாம் இந்தத் தேசங்களுடன் அக்கம் பக்கமாக வாழ்ந்தாக வேண்டும். நாம் ஜெர்மனியைப் படையெடுத்து வெல்ல விரும்புகிருேம் என்று ஷெய்டெமன் ஆதரவாளர்கள் ஏற்கெனவே நம்மைப் பற்றி கூறுகிருர்கள். இது நிச்சயமாயும் கேலிக்கிடமானது, முட்டாள்தனமானது. ஆனல் முதலாளித்துவ வர்க்கத்தினருக்கு அவர்களது சொந்த நலன்களும் சொந்தப் பத்திரிகைகளும் உள்ளன. கோடிக்கணக்கான பிரதிகள் மூலம் இப்பத்திரிகைகள் இதை உலக முழுதிற்கும் ஓங்கிப் பறைசாற்றுகின்றன. வில்சனும் தனது சொந்த நலன்களுக்காக இதை ஆதரிக்கிருர். போல்ஷிவிக்குகளிடம் பெரிய சேனை இருக்கிறது, அவர்கள் படையெடுத்து வெல்வது மூலம் ஜெர்மனியில் தமது போல்ஷிவிசத்தை நடவு செய்ய விரும்புகிருர்கள் என்று அவர்கள் சொல்கிருர்கள். ஜெர்மனியில் இருக்கும் சிறந்த மக்களான ஸ்பார்ட்டகிஸ்டுகள், ஜெர்மன் தொழிலாளர்கள் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகத் தூண்டிவிடப்படுகிருர்கள் என்று நம்மிடம் கூறி

ணர்கள். போல்ஷிவிக்குகளின் காரியங்கள் எவ்வளவு மோசமாக இருக்கின்றன பாருங்கள் என்று அவர்களிடம் சொல்லப்பட்டதாம்! நமது காரியங்கள் எல்லாம் மிகவும் நன்ருக இருப்பதாக நம்மால் கூற முடியாது. எனவே ஜெர்மனியில் இருக்கும் நமது விரோதிகள் ஜெர்மனியில் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்பட்டால் ருஷ்யாவில் ஏற்பட்ட அதே குழப்பங்களை விளைவிக்கும் என்ற வாதத்தைக் கொண்டு மக்களை வளைக்கப் பார்க்கிருர்கள். நமது குழப்பங்கள் நீடித்த நோய்களாகும். நமது நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உருவாக்கும் பணியில் நாம் மிக மோசமான இடர்ப்பாடுகளுடன் மல்லாடி வருகிருேம். ''போல்ஷிவிக்குகள் தமது அமைப்புமுறையினை பலப்பிரயோகம் மூலம் நிலைநாட்ட விரும்புகிருர்கள்'' என்ற பூச்சாண்டி முதலாளித்துவ வர்க்கத்தினர்கள் அல்லது குட்டிமுதலாளிகள் அல்லது ஜெர்மன் தொழிலாளர்களில் ஒரு பகுதி மீது எத்தனை காலம் வரை செல்வாக்குச் செலுத்துகிறதோ அத்தனை காலம் வரை ''உழைக்கும் மக்களின் சுயநிர்ணயம்'' என்ற சூத்திரம் உதவிகரமாக இருக்காது. அதை பெர்லினுக்குள் செஞ்சேனை துப்பாக்கிகளின் மீதேற்றிக் கொண்டு வர முடியும் என்ற விதத்தில் போல்ஷிவிக்குகள் தமது சர்வப்பொது அமைப்பு முறையினைத் திணிக்க முயல்கிருர்கள் என்று ஜெர்மன் சமூக-துரோகிகள் சொல்ல இயலாத வகையில் நாம் காரியங்களை ஏற்பாடு செய்ய வேண்டும். தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய கோட்பாடு மறுக்கப்படுமாளுல் இதுவே நிகழலாம்.

நமது வேலைத்திட்டம் உழைக்கும் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிக் குறிப்பிடக் கூடாது, ஏனெனில் அது தவருகும். அது உண்மையில் என்ன நிலவுகிறதோ அதைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். மத்திய கால நிலையில் இருந்து முதலாளித்துவ ஜனநாயகத்துக்கும் முதலாளித்துவ ஜனநாயகத்தில் இருந்து பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்கும் ஆன பாதையில் பல்வேறு கட்டங்களில் தேசங்கள் இருப்பதால் நமது வேலைத்திட்டத்தின் இந்த ஆய்வுரை முற்றிலும் சரியானது. நம்மைப் பொருத்தவரை இந்தப் பாதையில் மிகப்பல வளைவு நெளிவுகள் இருந்து வந்துள்ளன. ஒவ்வொரு தேச

மும் சுயநிர்ணய உரிமையை அடைந்தே தீர வேண்டும். அது உழைக்கும் மக்களின் சுயநிர்ணயத்தை எளிதாக்கும். பின்லாந்தில் முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து பாட்டாளி வர்க்கம் தனிப்பிரியும் நடைமுறை குறிப்பிடத்தக்க வகையில் தெளிவாகவும் வன்மையாகவும் ஆழமாகவும் இருக்கிறது. எப்படியும், அங்கே நமது நாட்டில் போன்று காரியங்கள் நடைபெற மாட்டா. நாம் பின்னிஷ் தேசம் எதையும் ஒப்புக்கொள்ளவில்லை, உழைக்கும் மக்களை மட்டுமே ஒப்புக்கொள்கிறோம் என்று சாற்றுவோமானால் அது படுமோசமான முட்டாள்தனமாகும். உண்மையிலேயே நிலவும் ஒன்றை நாம் ஒப்புக்கொள்ள மறுக்க முடியாது, அதுதானே தன்னை ஒப்புக்கொள்ளும்படி நம்மைக் கட்டாயப்படுத்தும். பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான தெளிவான வேறுபாடு பல்வேறு நாடுகளில் அவற்றின் பிரத்தியேக வழிகளில் நடைபெற்று வருகிறது. இங்கு நாம் உயர்ந்த அளவிலான கவனத்துடன் செயல்பட வேண்டும். பல்வேறு தேசங்கள் விஷயத்தில் நாம் குறிப்பாயும் கவனத்துடன் இருக்க வேண்டும். காரணம் ஒரு தேசத்தின் விஷயத்தில் நம்பிக்கை இன்மை என்பதை விட மோசமானது வேறு எதுவும் இல்லை. பாட்டாளி வர்க்கத்தின் சுயநிர்ணயம் போலிஷ் மக்கள் மத்தியில் தொடர்ந்து செயல்படுகிறது. தொழிலாளர் பிரதிநிதிகளின் வார்சா சோவியத்தின்[97] இயைபு பற்றிய மிக அணித்தான புள்ளிவிவரங்கள் இதோ: போலிஷ் சமூக-துரோகிகள் 333, கம்யூனிஸ்டுகள் 297. நமது புரட்சிகர நாள்காட்டியின் படி அந்த நாட்டில் அக்டோபர் நிகழ்வது நெடுந் தொலைவில் இல்லை என்பதை இது காட்டுகிறது. அது 1917 ஆகஸ்டுக்கும் செப்டம்பருக்கும் இடையில் எங்கோ இருக்கிறது. ஆனால் முதலில் எல்லா நாடுகளும் போல்ஷிவிக் நாள்காட்டியின் படியே வாழ வேண்டும் என்று சாற்றும் அரசாணை எதுவும் இது வரை பிறப்பிக்கப்படவில்லை. அது அப்படியே பிறப்பிக்கப்பட்டிருந்தால் கூட அது அனுசரிக்கப்பட மாட்டாது. இரண்டாவதாக, இப்போது உள்ள நிலைமையில் நமது தொழிலாளர்களை விட அதிகமாக முன்னேறியுள்ள, அதிக கலாசார வளர்ச்சியுடைய

பெரும்பான்மையான போலிஷ் தொழிலாளர்கள் சமூக-தற் காப்புவாதம், சமூக-தேசபக்தியின் நோக்குநிலையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது காத்திருக்க வேண்டும். இங்கு நாம் உழைக்கும் மக்களின் சுயநிர்ணயம் குறித்துப் பேச முடியாது. இந்தப் பாகுபாட்டுக்கு வேண்டி நாம் தொடர்ந்து பிரசாரம் நடத்த வேண்டும். இதைத்தான் நாம் செய்து வருகிறோம். ஆனால் இப்போது நாம் போலிஷ் தேசத் தின் சுயநிர்ணயத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அது தெளிவானது. போலிஷ் பாட்டாளி இயக்கம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நோக்கி நமது பாதையையே மேற்கொண்டிருக்கிறது. ஆனால் ருஷ்யாவில் இருக்கும் அதே விதத்தில் அல்ல. அங்கே, போலிஷ் மக்களை எப்போதும் ஒடுக்கி வந்திருக்கிற மாஸ் கோவாசிகள், மஹா-ருஷ்யர்கள் தமது மஹா-ருஷ்ய தேசிய வெறியை கம்யூனிசத்தின் வேடத்தில் போலந்துக்குள் கொண்டு செல்ல விரும்புகிறார்கள் என்ற பொருளிலான அறிக்கைகள் மூலம் தொழிலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு வருகிறார்கள். கம்யூனிசத்தை பலப்பிரயோகத்தால் திணிக்க முடியாது. ''நீங்கள் அதை வேறு வழியில் செய்வீர்கள்'' என்று போலிஷ் கம்யூனிஸ்டுகள் மத்தியில் இருந்த ஒரு சிறந்த தோழரிடம் நான் கூறிய போது, அவர் பதிலளித்தார்: ''இல்லை, நாங்களும் அதையேதான் செய்வோம், ஆனால் உங் களை விட நன்றாகச் செய்வோம்''. இத்தகைய வாதத்திற்கு என்னிடம் அறவே எவ்வித ஆட்சேபங்களும் கிடையாது. நம் முடையதை விடவும் சிறந்த சோவியத் ஆட்சி அதிகாரத்தை உருவாக்குவது என்ற ஓர் அடக்கமான விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அங்கே காரியங்கள் சற்றே தனியியல்பான வழி யில் தொடர்ந்து நடக்கின்றன என்பதைக் கருத்தில் கொள் ளாமல் இருக்க முடியாது. மற்றும் ''தேசங்களின் சுயநிர்ணய உரிமை ஒழிக! சுயநிர்ணய உரிமையை உழைக்கும் மக்களுக்கு மட்டுமே வழங்குவோம்'' என்று நாம் சொல்ல முடியாது. இந்த சுயநிர்ணயம் மிகவும் சிக்கலான மற்றும் இடர்ப்பா டான வழியில் தொடர்ந்து செல்கிறது. அது ருஷ்யாவில்

தவிர வேறு எங்கும் நிலவவில்லை. எனவே இதர நாடுகளில் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்தையும் முன்கூட்டிப் பார்க்கும் அதே பொழுதில் மாஸ்கோவில் இருந்து நாம் எதையும் ஆணையிடக் கூடாது. இதனுல்தான் இந்த யோசனை கோட்பாடு அளவில் ஏற்கப்பட முடியாதது.

நாம் வரைந்துள்ள திட்டத்திற்குப் பொருந்துமாறு நான் எடுத்துக் கவனிக்க வேண்டிய இதர விஷயங்களுக்கு இப்போது நான் கடந்து செல்கிறேன். **சிறு உரிமையாளர் மற்றும் நடுத்தர விவசாயிகளின்** விஷயத்திற்கு நான் முதலிடம் கொடுத்திருக்கிறேன். இது சம்பந்தமாக 47ஆவது பாரா கூறுவதாவது:

''நடுத்தர விவசாயிகளைப் பொருத்தவரை, அவர்களைப் படிப்படியாகவும் முறையாகவும் சோஷலிஸ்டு நிர்மாணப் பணியில் ஈர்க்க வேண்டும் என்பதே ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையாகும். அவர்களை குலாக்குகளிடமிருந்து தனியே பிரித்தல், அவர்களது தேவைகளை அக்கறையுடன் கவனித்து அவர்களைத் தொழிலாளி வர்க்கத்தின் பக்கத்துக்கு வென்று சேர்த்தல், அவர்களது பின்தங்கிய நிலைமையைப் போக்க சித்தாந்த ஆயுதங்கள் கொண்டு அல்லாமல் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் மூலம் போராடாது இருத்தல், அவர்களது ஜீவாதாரமான நலன்கள் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் அவர்களுடன் நடைமுறை ஒப்புமைக்கு வருதல், சோஷலிஸ்டு சீர்திருத்தங்களைச் செய்து முடிப்பது பற்றிய முறைகளை நிர்ணயிப்பதில் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கல் என்ற பணியினை கட்சி தனக்குத் தானே வகுத்துக் கொள்கிறது.''

சோஷலிசத்தின் மூலவர்கள் நடுத்தர விவசாயிகளைப் பற்றி அடிக்கடி என்ன சொன்னுர்களோ அதை இங்கு நாம் முறைப்படுத்தி முன்வைத்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. இந்த விதியின் ஒரே குறைபாடு என்னவென்ருல் இது போதுமான அளவுக்கு ஸ்தூலமாக இல்லை என்பதே. ஒரு வேலைத்திட்டத்தில் இதை விட அதிகமாகத் தருவது அரிதே. ஆனுல் காங்கிரசில் வேலைத்திட்டம் பற்றிய விஷயங்களை மட்டும் விவாதித்தால் போதாது. நடுத்தர விவசாயியின்

விஷயத்திற்கு மிகவும் தீர்க்கமான, மும்மடங்கு தீர்க்கமான கவனம் செலுத்தப்பட வேண்டும். சில இடங்களில் நிகழ்ந்த எதிர்ப்புக் கலகங்களில் ஒரு பொதுத் திட்டம் தெளிவாயும் பகுத்தறியக் கூடியதாக இருக்கிறது, இந்தத் திட்டம் வெண் காவலர்களின் ராணுவத் திட்டத்துடன் தொடர்புடையது என்பது கண்கூடு, அவர்கள் மார்ச் மாதத்தில் ஒரு பொது வான எதிர்த்தாக்குதல் நடத்தவும் பல எதிர்ப்புக் கலகங்களை ஏற்பாடு செய்யவும் முடிவு செய்திருக்கிறார்கள் என்பது சம் பந்தமாக நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. காங்கிரஸ் தலைமைக் குழுவிடம் காங்கிரசின் பேரில் விடப்படும் வேண்டு கோளின் நகல் இருக்கிறது. அது உங்களுக்கு அறிவிக்கப்படும். இந்த எதிர்ப்புக் கலகங்கள் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சி யாளர்களும் மென்ஷிவிக்குகளில் ஒரு பகுதியினரும்—பிரி யான்ஸ்கில் எதிர்க் கலகத்தைத் தூண்ட செயல்பட்டவர்கள் மென்ஷிவிக்குகளே — வெண்காவலர்களின் மெய்யான கையாட்களாகச் செயல்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெட் டத்தெளிவாகக் காட்டுகின்றன. வெண்காவலர்களின் ஒரு பொதுவான எதிர்த்தாக்குதல், கிராமங்களில் எதிர்ப்புக் கல கங்கள், ரயில்வே போக்குவரத்தில் குறுக்கீடு—இந்த வழி யில் போல்ஷிவிக்குகளை வீழ்த்துவது ஒருவேளை சாத்தியமோ? இங்கு நடுத்தர விவசாயிகளின் பாத்திரம் விசேஷமாயும் தெளிவாகவும், வன்மையாகவும், அழுத்தமாகவும் முனைப் பாக இருக்கிறது. காங்கிரசில் நாம் நடுத்தர விவசாயிகள் பாலான நமது இணக்கமான தோரணையைக் குறிப்பாக வலி யுறுத்துவது மட்டுமன்றி சாத்தியமான அளவுக்கு ஸ்தூலமான பல நடவடிக்கைகள் பற்றியும் எண்ணிப்பார்க்க வேண்டும். இவை நடுத்தர விவசாயிகளுக்கு நேரடியாக குறைந்த பட்சம் எதையாவது தரக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த நட வடிக்கைகள் சுயகாப்புக்கும் நமது எதிரிகள் எல்லோரையும் எதிர்த்துப் போராடவும் அறவே இன்றியமையாதவை. நடுத்தர விவசாயி நமக்கும் அவர்களுக்கும் இடையே ஊசலாடு கிறான் என்பது நமது எதிரிகளுக்குத் தெரியும். அவனை நம் மிடமிருந்து பிரித்துத் தம் பக்கம் சேர்த்துக் கொள்ள அவர் கள் முயல்கிறார்கள். இப்போதுள்ள நமது நிலைமையில் நம்

மிடம் ஏராளமான சேமாதாரங்கள் உள்ளன. போலிஷ் மற்றும் ஹங்கேரிய, புரட்சிகள் முன்னேறி வருகின்றன, மிகவும் வேகமாக முன்னேறி வருகின்றன என்று நமக்குத் தெரியும். இந்தப் புரட்சிகள் நமக்குப் பாட்டாளிகளின் சேமப் படையினை வழங்கும், நமது நிலையைச் சற்றே எளிதாக்கும், பலவீனமாக இருக்கும் நமது பாட்டாளி வர்க்க அடித்தளத்தை மிகப்பெருமளவுக்கு வலுப்படுத்தும். இது அடுத்த சில மாதங்களில் நிகழலாம், ஆனால் எப்போது என்பதை நாம் அறியோம். இப்போது ஒரு கடுமையான தருணம் வாய்த்திருக்கிறது, எனவே நடுத்தர விவசாயிகள் பற்றிய விஷயம் இப்போது மிகப்பெரிய நடைமுறை முக்கியத்துவம் பெறுகிறது என்பதை நீங்கள் அறிகிறீர்கள்.

மேலும், **கூட்டுறவு** விஷயம் குறித்து, அதாவது நமது வேலைத்திட்டத்தின் 48ஆவது பாரா பற்றி நான் விரிவாகப் பேச விரும்புகிறேன். ஓர் அளவுக்கு இந்தப் பாரா காலாவதியாகி விட்டது. கமிஷனில் இதை வரைந்து கொண்டிருந்த போது நமது நாட்டில் கூட்டுறவுகள் இருந்தன, ஆனால் நுகர்வாளர் கம்யூன்கள் இருக்கவில்லை. எனினும் சில நாட்களுக்குப் பிறகு எல்லா வடிவங்களிலுமான கூட்டுறவுகளையும் தனி ஒரு நுகர்வாளர் கம்யூனாக இணைப்பது குறித்த அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசாணை வெளியிடப்பட்டதா இல்லையா என்பதும், இங்கிருக்கும் பெரும்பான்மையினருக்கு இதைப் பற்றிய பரிசயம் உண்டா இல்லையா என்பதும் எனக்குத் தெரியாது. அப்படி வெளியிடப்படவில்லையானால் நாளையோ அல்லது அதற்கு மறுநாளோ அது வெளியிடப்படும்.[98] இந்த வகையில் இந்தப் பாரா ஏற்கெனவே காலாவதியானது இருந்தபோதிலும் இது அவசியமானது என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் அரசாணைகளில் இருந்து அவற்றின் நிறைவேற்றத்திற்கு நெடுங்காலம் எடுக்கும் என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். 1918 ஏப்ரல் முதலே கூட்டுறவுகள் சம்பந்தமாக ஓயாது கடுமையாக உழைத்து வந்திருக்கிறோம். நாம் பெருமளவில் வெற்றி அடைந்திருந்த போதிலும் அது இன்னும் நிர்ணயமான வெற்றியல்ல. நாம் மக்களை **கூட்டுறவு**

களில் ஒன்றுதிரட்டுவதில் எந்த அளவுக்கு வெற்றியடைந் திருக்கிறோம் என்றால், பல உயெஸ்துகளில் 98 சதவிகிதம் வரும் நாட்டுப்புற மக்கள் ஏற்கெனவே அவ்வாறு ஒன்று திரட்டப்பட்டுள்ளனர். ஆனால் முதலாளித்துவ சமுதாயத் தில் நிலவிய இந்த கூட்டுறவுகள் முதலாளித்துவ சமுதாய உணர்வில் தோய்ந்து போய், மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், முதலாளித்துவ வகைப்பட்ட நிபுணர்களால் தலைமை தாங்கப்படுகின்றன. அவற்றின் மீது நாம் இன்னும் நமது அதிகார உரிமையை நிலைநாட்ட முடிய வில்லை. இங்கு நமது பணி நிறைவேற்றப்படாமல் கிடக் கிறது. நுகர்வாளர் கம்யூன்களை உருவாக்குகிறது என்பதால் நமது அரசாணை ஒரு முன்னேற்ற படியே. ருஷ்யா முழுதிலு முள்ள எல்லா வடிவங்களிலுமான கூட்டுறவுகளும் கலந் திணைய வேண்டும் என்று உத்தரவிடுகிறது. ஆனால் இந்த அரசாணையும், இதை நாம் முழுமையாகச் செயல்படுத்தி யும் கூட, தொழிலாளர் கூட்டுறவுகளின் சுயநிர்வாகப் பகுதியை எதிர்கால நுகர்வாளர் கம்யூன்களுக்குள் விட்டு விடுகிறது. காரணம் இந்த அலுவல்களில் நடைமுறை ஞானம் உடைய தொழிலாளர் கூட்டுறவுகளின் பிரதிநிதி கள், மேலும் உயர் வளர்ச்சி பெற்ற அமைப்பு என்ற முறை யில் தொழிலாளர் கூட்டுறவுகள் பேணிக்காக்கப்பட வேண்டும் எனவும் அவற்றின் செயல்பாடுகள் இன்றியமையாதவை எனவும் நம்மிடம கூறினார்கள், நிரூபித்தும் காட்டினார்கள். கூட்டுறவு விஷயம் சம்பந்தமாக நமது கட்சிக்குள் நேரடி யாகப் பல வேறுபாடுகளும் சர்ச்சைகளும் இருந்தன. கூட்டுறவுகளில் இருந்த போல்ஷிவிக்குகளுக்கும் சோவியத்து களில் இருந்த போல்ஷிவிக்குகளுக்கும் இடையே உரசல் ஏற் பட்டது. இந்த உறுப்பமைவு எப்பாடுபட்டும் பாதுகாக்கப்பட வேண்டும், வளர்க்கப்பட வேண்டும், எந்த ஒரு சந்தர்ப்ப சூழலிலும் புறக்கணிக்கப்படலாகாது. இது ஒன்றுக்காக மட் டுமே முதலாளித்துவம் மக்களிடையே வழிகோலியுள்ளது, இது ஒன்று மட்டுமே தொடக்க முதலாளித்துவத்தில் இருக் கும் நாட்டுப்புற மக்கள் மத்தியில் இயங்கி வருகிறது. இந்தப் பொருளில்தான் இந்த விஷயத்துக்கு சந்தேகமின்றி தீர்வு

காணப்பட வேண்டும் என்று கோட்பாட்டளவில் எனக்குத் தோன்றுகிறது. இங்குள்ள பணி இடர்ப்பாடான ஒன்று. காரணம் பெரும்பான்மையான இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் முதலாளித்துவ வகைப்பட்ட நிபுணர்கள் ஆவர், பெரும்பாலும் மெய்யான வெண்காவலர்களாவர். எனவே அவர்கள் மீது பகைமை எழுகிறது, நியாயமான பகைமை. எனவே அவர்களை எதிர்த்த போராட்டம் எழுகிறது. ஆனால் இது மிகவும் தேர்ச்சித் திறமையுடன் நடத்தப்பட வேண்டும்: கூட்டுறவாளர்களின் எதிர்ப்புரட்சி முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், ஆனால் இது கூட்டுறவுகளின் உறுப்பமைவுக்கு எதிரான போராட்டமாக இருத்தல் கூடாது. இந்த எதிர்ப்புரட்சித் தலைவர்களை ஒழித்துக் கட்டும் அதே நேரத்தில் நாம் உறுப்பமைவின் மீது நமது அதிகார உரிமையை நிலைநாட்ட வேண்டும். முதலாளித்துவ வகைப்பட்ட நிபுணர்கள் விஷயத்தில் நமது நோக்கம் எதுவோ இங்கு நமது நோக்கம் துல்லியமாயும் அதுவே தான். அது நான் குறிப்பிட விரும்பும் இன்னொரு விஷயம் ஆகும்.

முதலாளித்துவ வகைப்பட்ட நிபுணர்கள் விஷயம் பெருமளவு உரசலையும் கருத்து வித்தியாசங்களையும் எழுப்பியுள்ளது. அண்மையில் பெத்ரோகிராத் சோவியத்தில் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது என்னிடம் எழுத்துருவில் அளிக்கப்பட்ட கேள்விகளில் பல சம்பள விகிதம் பற்றியதாகும். ஒரு சோஷலிஸ்டுக் குடியரசில் 3000 ரூபிள் அளவுக்கு அதிகமான சம்பளம் அனுமதிக்கப்படலாமா என்று என்னிடம் கேட்கப்பட்டது. உண்மையில் இந்த விஷயத்தை வேலைத்திட்டத்தில் சேர்த்திருக்கிறோம். காரணம் இந்த அடிப்படையில் அதிருப்தி வெகு தூரம் பரவி விட்டது. முதலாளித்துவ வகைப்பட்ட நிபுணர்கள் விஷயம் சேனையில், தொழில் துறையில், கூட்டுறவுச் சங்கங்களில் எங்கும் எழுப்பப்பட்டுள்ளது. முதலாளித்துவத்தில் இருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்லும் காலகட்டத்தின் மிக முக்கியமான விஷயம் இது. முதலாளித்துவ விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வழங்கியுள்ள சாதனங்களைக் கொண்டு அதை

மக்கள் திரள் எளிதில் அணுகத் தக்கவாறு செய்தால் மட்டுமே நாம் கம்யூனிசத்தைக் கட்ட முடியும். கம்யூனிஸ்டு சமூக அமைப்பைக் கட்டுவதற்கு வேறுவழி எதுவும் கிடையாது. ஆனல் இந்த வழியில் அதைக் கட்டுவதற்கு உறுப்பமைவை முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த வேலையில் இந்த நிபுணர்கள் எல்லோரையும் ஈடுபடுத்த வேண்டும். இதற்கு அடிப்படையான ஒரு தீர்வு காண வேண்டும் என்ற உத்தேசத்துடன் தான் இந்த விஷயத்தை வேலைத்திட்டத்தில் விவரமாக விளக்கியுள்ளோம். ருஷ்யாவின் கலாசார வளர்ச்சிக் குறைவின் விளைவு பற்றியும் அது சோவியத் ஆட்சி அதிகாரத்திற்கு என்ன புரிந்து வருகிறது என்பது குறித்தும் நன்ருக அறிவோம். சோவியத் ஆட்சி அதிகாரம்தான் கோட்பாடு ரீதியில் பெருமளவு உயர்நிலையிலான பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தை வழங்கியுள்ளது, இது உலகம் முழுவதற்கும் இத்தகைய ஜனநாயகத்தின் மாதிரியைச் சிருஷ்டித்துள்ளது. இந்தக் கலாசாரக் குறைபாடு எவ்வாறு சோவியத் ஆட்சி அதிகாரத்தின் முக்கியத்துவத்தைக் குன்றச் செய்து அதிகார வர்க்கத்தைப் புதுப்பிக்கிறது என்பதையும் நாம் நன்ருக அறிவோம். சோவியத் உறுப்பமைவு உழைக்கும் மக்கள் அனைவருக்கும் சொல்லளவில் அணுகத்தக்கது, ஆனல் உண்மையில் அவர்கள் அனைவருக்கும் அணுகவியலாதபடி வெகுதொலைவில் இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். முதலாளித்துவத்தின் கீழ் இருந்தது போன்று சட்டம் தடை செய்தது காரணமாக அது அணுகவியலாதபடி ஆகவில்லை; நேர்மாருக நமது சட்டங்கள் இந்த வகையில் உதவிகரமாக இருக்கின்றன. ஆனல் இந்தக் காரியத்தில் சட்டங்கள் மாத்திரம் போதுமானதல்ல. மிகப்பெரிய அளவு கல்வித்துறை, ஸ்தாபன மற்றும் கலாசாரப் பணி தேவை. இதைச் சட்டமியற்றல் மூலம் விரைவாகச் செய்து விட முடியாது. நீண்ட காலத்துக்குப் பெருமளவிலான பணி தேவைப்படும். முதலாளித்துவ வகைப்பட்ட நிபுணர்கள் விஷயம் இந்தக் காங்கிரசில் முற்றிலும் திட்டவட்டமாகத் தீர்க்கப்பட வேண்டும். இந்த விஷயம் குறித்த தீர்வு இந்தக்

காங்கிரசை ஐயத்திற்கிடமின்றி கவனத்துடன் பின்பற்றி வரும் தோழர்கள் அதன் அதிகார உரிமையைச் சார்ந்து நிற்கவும், நம் எதிரே உள்ள இடர்ப்பாடுகள் என்ன என் பதை உணர்ந்து கொள்ளவும் வகை செய்யும். ஒவ்வொரு படியிலும் இந்த விஷயத்தை எதிரிடும் இந்தத் தோழர் களுக்குக் குறைந்த பட்சம் பிரசார வேலைகளில் பங்குபற்று வதற்காவது இது துணை செய்யும்.

ஜெர்மனியின் மேற்குப் பகுதியில் எங்கு தொழில்துறை ஆக அதிக வளர்ச்சி அடைந்திருக்கிறதோ, எங்கு தொழி லாளர்கள் மத்தியில் ஸ்பார்ட்டகிஸ்டுகளின் செல்வாக்கு மிகப் பெரிதாக இருக்கிறதோ அங்கு ஸ்பார்ட்டகிஸ்டுகள் இன் னும் வெற்றியடையாவிடினும் கூட மிகப்பல பெரிய தொழில் நிறுவனங்களில் இருக்கும் பொறியாளர்களும் நிர்வாகி களும் ஸ்பார்ட்டகிஸ்டுகளிடம் வருவார்கள் எனவும், ''உங் களுடன் வருவோம்'' என்று அவர்கள் கூறுவார்கள் எனவும் காங்கிரசில் ஸ்பார்ட்டகிஸ்டுகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய தோழர்கள் இங்கு மாஸ்கோவில் எங்களிடம் கூறினார்கள். நமது நாட்டில் நிலைமை இத்தகையதல்ல. அங்கே தொழி லாளரின் உயர் கலாசாரத் தரமும், பொறியியல் ஊழி யர் மேலதிகமாகப் பாட்டாளி வர்க்கமயமாக்கப்பட்டிருப் பதும், நமக்குத் தெரியாத வேறு சில காரணங்களாலும் நம் நாட்டிலிருந்து ஓரளவுக்கு வித்தியாசப்படும் உறவுகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பது தெளிவு.

எப்படியும், இனிமேலான முன்னேற்றத்திற்குப் பிரதான முட்டுக்கட்டைகளில் ஒன்று இங்கு காணப்படுகிறது. நாம் உடனடியாக, இதர நாடுகளின் ஆதரவுக்காகக் காத்துக் கொண்டிராமல் உடனடியாக இந்தக் கணமே நமது உற் பத்தி சக்திகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். முதலாளித் துவ வகைப்பட்ட நிபுணர்கள் இல்லாமல் இதை செய்ய முடியாது. இதை முடிவாகக் கூறிவிட வேண்டும். இந்த நிபுணர்களில் பெரும்பாலோர் முற்றும் முதலாளித்துவக் கண்ணோட்டம் கொண்டவர்கள் என்பது நிச்சயம். அவர் கள் தோழமை பூர்வமான ஒத்துழைப்பு, தொழிலாளர் கமிசார்கள் மற்றும் கம்யூனிஸ்டு மையக்கூறுகளின் சுற்றுச்

சூழலில் வைக்கப்பட வேண்டும். அவர்கள் வெளியேறிவிட முடியாத வகையில் வைக்கப்பட வேண்டும். ஆனால் அவர்கள் முதலாளித்துவத்தின் கீழ் வேலை செய்த போது இருந்ததை விடவும் மேலான நிலைமைகளில் வேலை செய்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். காரணம், அப்படி இல்லாவிட்டால் முதலாளித்துவ வர்க்கத்தால் பயிற்றுவிக்கப்பட்ட இந்த நபர்கள் வேலைசெய்ய மாட்டார்கள். மக்கள் மத்தியில் உள்ள ஒரு முழுப் பிரிவையும் பல வந்தத்தின் கீழ் வேலை செய்யும்படிக் கட்டாயப்படுத்துவது சாத்தியமல்ல—இதை நாம் அனுபவத்தில் இருந்து நன்ருக அறிவோம். எதிர்ப்புரட்சியில் தீவிரப் பங்கு ஏற்காதபடி அவர்களைக் கட்டாயப்படுத்தலாம். வெண்காவலர்களின் வேண்டுகோள்களுக்கு அசைந்து விடாது அஞ்சும்படிச் செய்ய அவர்களை மிரட்டலாம். இந்த வகையில் போல்ஷிவிக்குகள் ஊக்கத்துடன் செயல்படுகிருர்கள். இதைச் செய்ய முடியும், இதைப் போதுமான அளவுக்கு நாம் செய்து வருகிறோம். இதைச் செய்வதற்கு நாம் எல்லோரும் கற்றுக் கொண்டு விட்டோம். ஆனால் இந்த வழியில் ஒரு முழுப் பிரிவையும் வேலை செய்யும்படிக் கட்டாயப்படுத்துவது சாத்தியமல்ல. இந்த நபர்கள் கலாசார வேலை வழக்கமாகச் செய்து வருபவர்கள். அதை அவர்கள் முதலாளித்துவ அமைப்புமுறையின் கட்டுக்கோப்புக்கு அகத்தே வளர்த்தார்கள். அதாவது அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தை மாபெரும் பொருளாயதச் செல்வங்கள் மூலம் செழுமைப்படுத்தினர்கள். ஆனல் அவற்றைப் பாட்டாளி மக்களுக்கு மிக நுண்ணிய துளிகளாக அளித்தார்கள். இருந்தபோதிலும் அவர்கள் கலாசாரத்தை வளர்த்தார்கள், அது அவர்களது வேலையாக இருந்தது. கலாசாரத்தை மதிப்பதோடு மட்டும் அன்றி, அதை மக்களுக்கு எடுத்துச் செல்லவும் உதவுகிற அமைப்புத் திரட்சியுள்ள முன்னேறிய பகுதிகளைத் தொழிலாளி வர்க்கம் ஆதரித்து ஊக்குவிப்பதை அவர்கள் பார்க்கும் போது நம் பாலான அவர்களது தோரணையை மாற்றி வருகின்றனர். தொத்து நோய்களை எதிர்த்துப் போராடுவதில் உழைக்கும் மக்களின் சுயேச்சையான நடவடிக்கைகளைப்

பாட்டாளி வர்க்கம் எழுச்சியுறச் செய்து வருவதை ஒரு டாக்டர் பார்க்கும் போது நம் பாலான அவரது தோரணை முழுமையாக மாற்றமடைகிறது. இத்தகைய முதலாளித் துவ வகைப்பட்ட டாக்டர்கள், பொறியாளர்கள், விவசாய நிபுணர்கள் மற்றும் கூட்டுறவாளர்களின் பெரியதொரு பகுதி நம்மிடையே இருக்கிறது. இந்த நோக்கத்திற்காகப் பாட் டாளி வர்க்கம் செயலில் மேலும் மேலும் அதிகமான மக்களை ஆதரவாகத் திரட்டி வருவதை அவர்கள் பார்க்கும் போது அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து அரசியல் ரீதி யாக மட்டும் துண்டித்துக் கொள்வதோடு அமையாமல் தார் மிகமாகவும் வென்று ஆட்கொள்ளப்படுவார். பிறகு நமது பணி எளிதாகிவிடும். பின்னர் அவர்கள் தாமே நமது உறுப்பமைவுக் குள் ஈர்க்கப்பட்டு அதன் பகுதியாகி விடுவார்கள். இதைச் சாதனையாக்குவதற்குத் தியாகங்கள் அவசியம். இதற்கு இரு நூறு கோடி செலுத்துவது என்பது கூடத் துச்சமே. இந்தத் தியாகம் செய்ய அஞ்சுவது குழந்தைத் தனமாகும். அதன் பொருள் நாம் நம்முன் உள்ள பணிகளைப் புரிந்து கொள்ளவில்லை என்பதே ஆகும்.

போக்குவரத்துத் துறையில் உள்ள குழப்பமும், தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் உள்ள குழப்பமும் சோவியத் குடியரசின் வாழ்வையே அரித்தழித்து வருகின் றன. இங்கு நாம் நாட்டின் சகல ஆற்றல்களையும் உச்சபட்ச மாக ஈடுபடுத்தி மிகவும் ஊக்கமான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். நிபுணர்கள் சம்பந்தப்பட்ட வரை நாம் சின்னத் தனமான நச்சரிப்புக் கொள்கையை அனுசரிக் கலாகாது. இந்த நிபுணர்கள் சுரண்டலாளர்களின் கையாட் களல்ல. அவர்கள் செயலூக்கமுள்ள கலாசார ஊழியர்கள். அவர்கள் முதலாளித்துவ சமுதாய அமைப்பில் முதலாளித் துவ வர்க்கத்துக்குச் சேவை செய்தார்கள். பாட்டாளி வர்க்க சமூக அமைப்பில் அவர்கள் நமக்குச் சேவை புரிவார் கள் என்று உலக முழுதிலுமுள்ள எல்லா சோஷலிஸ்டுகளும் கூறினார்கள். இந்த மாறுதல் காலகட்டத்தில் நாம் அவர் களுக்கு சாத்தியமான அளவு சிறந்த வாழ்க்கை நிலைமைகளை வழங்க வேண்டும். அதுவே ஆக சிறந்த கொள்கையாகும்.

அதுவே ஆகச் சிக்கனமான நிர்வாகமாகும். இல்லாவிடில் ஒரு சில கோடிகளை மீதப்படுத்தும் அதே பொழுதில் எந்தத் தொகையும் நாம் இழந்ததை மீட்டுப் பெறுவதற்குப் போதாது என்று கூறுமளவுக்கு நமக்கு இழப்பு ஏற்படும்.

சம்பள விகிதங்கள் பற்றிய விஷயத்தை தொழில் கமிசார் ஷ்மித் இடம் விவாதித்த போது அவர் பின்வரும் தகவல்களைக் குறிப்பிட்டார். சம்பளங்களைச் சமப்படுத்தும் காரியத்தில் எந்த ஒரு முதலாளித்துவ அரசும் எங்குமே செய்திராத அளவுக்கும், இன்னும் பல ஆண்டுகளில் செய் திருக்கக் கூடிய அளவுக்கு அதிகமாகவும் நாம் செய்துள் ளோம். போருக்கு முந்தியதான சம்பள விகிதங்களை எடுத்துக் கொள்வோம்: உடலுழைப்பைத் தரும் ஒரு தொழிலாளி வழக்கமாக தினத்துக்கு ஒரு ரூபிள், மாதத்துக்கு 25 ரூபிள் பெற்று வந்தான். ஒரு நிபுணன் மாதம் 500 ரூபிள் பெற் ருன். இதில் நூருயிரக்கணக்கில் சம்பளம் பெற்றுவந்தவர் கள் உட்படுத்தப்படவில்லை. நிபுணர்கள் தொழிலாளர்களைப் போல 20 மடங்குக்கும் அதிகமான ஊதியம் பெற்று வந் தார்கள். நமது இப்போதைய சம்பள விகிதங்கள் 600 ரூபிள் முதல் 3000 ரூபிள் வரையில் தான் அளவில் மாறு படுகின்றன. அதாவது ஒன்றை விட ஒன்று ஐந்து மடங்கு மட்டும் அதிகம். விகிதங்களைச் சமப்படுத்துவதற்காகப் பெரும் பணி ஆற்றியுள்ளோம். நிபுணர்களுக்குச் சற்று அதிகமாகவே தருகிருேம் என்பது உண்மையே. ஆனல் அவர்களது ஞானத்தை நமக்கு வழங்குவதற்காக அவர் களுக்குச் சிறிது கூடக் கொடுப்பது தகுதியானது என்பது மட்டுமல்ல அவசியமானது, தத்துவார்த்த ரீதியில் இன்றி யமையாததுமாகும். இந்த விஷயம் வேலைத்திட்டத்தில் விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருது கிறேன். இது குறிப்பாக வலியுறுத்தப்பட வேண்டும். கோட் பாடளவில் இது இங்கு தீர்வு காணப்பட வேண்டும் என் பது மட்டுமல்ல, காங்கிரசுக்கு வந்த ஒவ்வொரு பிரதிநிதி யும் தனது வட்டாரத்துக்குத் திரும்பியவுடன் தனது அமைப் புக்குத் தரும் அறிக்கைகளிலும் தனது எல்லாச் செயல்பாடு

களிலும் அதன் நிறைவேற்றத்தை உறுதிப்படுத்துமாறு வகை செய்ய வேண்டும்.

ஊசலாடும் அறிவுஜீவிகள் மத்தியில் முழுமையான ஒரு தோரணை மாற்றத்தைக் கொண்டுவருவதில் நாம் ஏற்கெனவே வெற்றி பெற்று விட்டோம். குட்டி முதலாளித்துவக் கட்சிகளைச் சட்ட பூர்வமாக்குவது சம்பந்தமாக நேற்று நாம் பேசிக்கொண்டு இருந்தோம். ஆனால் இன்று நாம் மென்ஷிவிக்குகளையும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களையும் கைது செய்கிறோம். இவ்வாறு முன்னும் பின்னுமாக மாறி மாறிச் செயல்படுவது மூலம் நாம் ஒரு திட்டவட்டமான அமைப்பு முறையைப் பிரயோகிக்கிறோம். இந்தக் கொள்கை மாற்றங்களின் ஊடே முரணற்றதும் மிகவும் உறுதியானதுமான கட்சித் திட்டம் இழையோடுகிறது. எதிர்ப்புரட்சியை வெட்டித் தறித்து முதலாளித்துவ கலாசார உறுப்பமைவைப் பயன்படுத்துவது என்பதே அது. மென்ஷிவிக்குகள் சோஷலிசத்தின் ஆக மோசமான எதிரிகளாவர், காரணம் அவர்கள் பாட்டாளிகள் என்று வேடம் போடுகின்றனர். ஆனால் மென்ஷிவிக்குகள் பாட்டாளிகள் அல்லாத பிரிவினர் ஆவர். இந்தப் பிரிவில் மிகவும் அற்பமான ஒரு பாட்டாளி வர்க்க மேல் அடுக்கு மட்டுமே உள்ளது. இப்பிரிவு முற்றும் குட்டி அறிவுஜீவிகளைக் கொண்டதாகும். இந்தப் பிரிவு நமது பக்கமாக வருகிறது. அதை ஒரு பிரிவு என்ற முறையில் முழுமையாகச் சேர்த்துக் கொள்வோம். அவர்கள் நம்மிடம் வரும் ஒவ்வொரு தடவையும் "நல்வரவு" கூறுவோம். இந்த ஊசலாட்டங்கள் அனைத்துடனும் அவர்களில் ஒரு பகுதி நமது பக்கம் வருகிறது. மென்ஷிவிக்குகள் மற்றும் நோவயா ஷிஸின்[99] பேர்வழிகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் விஷயத்திலும் இதுவே நடைபெற்றது, நமது பாதையில் தொடர்ந்து இடையூறாக இருப்பவர்களும் ஒரு முகாமில் இருந்து இன்னொரு முகாமுக்கு ஓலமிட்டுத் துறந்தோடுபவர்களுமான இந்த ஊசலாட்டக்காரர்கள் அனைவரின் விஷயத்திலும் நடைபெறப் போவது இதுவே. அவர்களுடன் வேறு எதுவும் செய்து கொள்ள முடியாது. ஆனால் இந்த எல்லா ஊசலாட்டங்களின் ஊடேயும் நாம் பண்பாடுள்ள அறிவு

ஜீவிகளின் பிரிவுகளை சோவியத் உழைப்பாளர் அணி களில் சேர்த்துக் கொண்டிருப்போம், வெண்காவலர்களைத் தொடர்ந்து ஆதரித்து வரும் நபர்களை ஒறுத்து விடுவோம்.

உரை பொருள்கள் பிரிவினைக்கு ஏற்ப எனது பங்கிற்கு வரும் அடுத்த விஷயம் அதிகார வர்க்கம் பற்றிய பிரச்சினையும் சோவியத் வேலையில் பரவலான மக்கள் திரளைச் சேர்த்து கொள்ளும் விஷயமுமாகும். நீண்ட காலமாக அதி கார வர்க்கம் பற்றிய புகார்களைக் கேட்டுவருகிறோம். இந்தப் புகார்களுக்குச் சரியான ஆதாரம் உண்டு என்பதில் ஐயமில்லை. அதிகார வர்க்கத்தை எதிர்த்த போராட்டத் தில் நாம் இந்த உலகில் வேறு எந்த அரசும் செய்திராத அளவுக்குப் பல காரியங்கள் செய்திருக்கிறோம். முற்றிலும் அதிகார வர்க்கத் தன்மை கொண்டதும், முதலாளித்துவ ஒடுக்குமுறை வகைப்பட்டதுமான உறுப்பமைவை, ஆகச் சுதந்திரமான முதலாளித்துவ வகைக் குடியரசுகளில் கூட இன்னும் அதே போன்று நீடித்து நிலவுவதான அந்த உறுப் பமைவை நாம் அதன் அடித்தளத்தோடு தகர்த்தழித்து விட்டோம். உதாரணமாக நீதித் துறையை எடுத்துக் கொள் ளுங்கள். இங்கு இந்தப் பணி எளிதாக இருந்தது என்பது மெய்யே. ஒரு புதிய உறுப்பமைவை உருவாக்க வேண்டி இருக்கவில்லை. ஏனெனில் உழைக்கும் வர்க்கங்களின் புரட்சி கர நீதி அர்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு எவ ரும் நீதிபதியாகச் செயல்பட முடியும். இந்தத் துறையில் வேலைகள் முற்ற முடிந்துவிட்டதாக இன்னும் கருத முடி யாது. ஆனால் பல இடங்களில் நீதிமன்றங்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படிச் செய்திருக்கிறோம். நாம் உருவாக்கி யிருக்கும் இந்த அமைப்புக்களில் ஆடவர்களை மட்டுமன்றி, மக்கள் தொகையில் மிகவும் பிற்பட்ட பழமைப் போக் குடைய பகுதியான மகளிரையும் கூட விதிவிலக்கு இன்றிப் பணியாற்றும்படிச் செய்ய முடியும்.

நிர்வாகத்தின் இதர துறைகளில் இருக்கும் பணியாளர் கள் மேலும் கடுமையான அதிகார வர்க்கப் பேர்வழிகளாவர். இங்கு இந்தப் பணி அதிக இடர்ப்பாடானது. இந்த உறுப் பமைவு இல்லாமல் நாம் வாழ முடியாது. நிர்வாகத்தின் ஒவ்

வொரு கிளையும் இத்தகைய உறுப்பமைவுக்கான தேவையை உருவாக்குகிறது. இங்கு நாம் ருஷ்யா ஒரு முதலாளித்துவ நாடாகப் போதுமான அளவுக்கு வளர்ச்சியடையவில்லை என்ற உண்மை காரணம் பாதிக்கப்பட்டு வருகிறோம். ஜெர்மனி அந்தளவுக்குப் பாதிக்கப் பெருமல் போகலாம். காரணம் அதன் அதிகார வர்க்க உறுப்பமைவு, மக்களை சக்கையாக உறிஞ்சுகிற ஆனுல் நமது அலுவலகங்களில் போல நாற்காலிகளைத் தேய்த்துக் கொண்டிராமல் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துகிற ஒரு விரிவான தனிமுறைப் பாணிக்குள் கடந்து சென்றது. இந்தப் பழைய அதிகார வர்க்கப் பேர்வழிகளைக் கலைத்தோம், இடம் மாற்றினேம், புதிய பதவிகளில் வைக்கத் தொடங்கினேம். ஜாராட்சி அதிகார வர்க்கப் பேர்வழிகள் சோவியத் நிறுவனங்களில் சேரத் துவங்கி தமது அதிகார வர்க்க முறைகளைச் செயல் படுத்தலாயினர். கம்யூனிஸ்டுகள் என்ற தோற்றம் பூண்டு, தமது சொந்த நல வாழ்வில் மேலும் வெற்றி காணவும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் கார்டு பெறவும் துவங்கி விட்டனர். எனவே வாசல் வழி வெளியே தள்ளப்பட்ட அவர்கள் ஜன்னல் வழியாகத் திரும்ப நுழைகிருர்கள். இங்கு முனைப்பாக உணரப்படுவது என்னவென்ருல் பண்பாடுள்ள சக்திகளின் இல்லாக்குறையே. இந்த அதிகார வர்க்கப் பேர்வழிகளை வேலையை விட்டு நீக்கி விடலாம். ஆனுல் அவர்களுக்குத் திடுமென மறுபோதனை அளிக்க முடியாது. இங்கு நம்முன் இருப்பது பிரதானமாயும் ஸ்தாபன, கலாசார மற்றும் கல்விப் பிரச்சினைகளே.

நிர்வாக வேலையில் மக்கள் முழுமையும் பங்கேற்கும் போது மட்டுமே அதிகார வர்க்கத்தை எதிர்த்து இறுதி வரை முழு வெற்றி பெறும் வரை கடுமையாகப் போராடலாம். முதலாளித்துவக் குடியரசுகளில் இது சாத்தியமல்ல என்பது மட்டுமல்ல சட்டம் தானே இதைத் தடை செய்திருந்தது. அவை எவ்வளவு ஜனநாயகத்தன்மையுடையதாக இருப்பினும் சரி, ஆகச் சிறந்த முதலாளித்துவக் குடியரசுகளிலும் கூட உழைக்கும் மக்கள் நிர்வாக வேலைகளில் பங்கேற்பதைத் தடை செய்யும் ஆயிரக்கணக்கான தடங்கல்கள்

இருக்கின்றன. இந்தத் தடங்கல்களை அகற்றுவதையே நாங்கள் செய்திருக்கிறோம். ஆனால் உழைக்கும் மக்கள் நிர்வாகத்தில் பங்கேற்கக் கூடிய அந்தக் கட்டத்தை இது வரை நாம் எட்டிவிடவில்லை. சட்டம் நீங்கலாக, கலாசாரத் தரம் என்பது இன்னும் இருக்கிறது. இதை எந்த ஒரு சட்டத்திற்கும் அடிப்படுத்த முடியாது. இந்தத் தாழ்ந்த கலாசாரத் தரத்தின் விளைவாக, தமது வேலைத்திட்டத்தின் தன்மை காரணமாக உழைக்கும் மக்களால் நடத்தப்படும் நிர்வாகத்தின் உறுப்புகளாக இருக்க வேண்டிய சோவியத்துகள், உழைக்கும் மக்களுக்காக, பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதியால்—ஆனால் உழைக்கும் மக்கள் முழுமையாலும் அல்ல—நடத்தப்படும் நிர்வாக உறுப்புகளாக உண்மையில் விளங்குகின்றன.

நீடித்த கல்வி போதனை மூலம் அன்றி வேறு வழிகளில் தீர்வு காண முடியாத ஒரு பிரச்சினையை இங்கு எதிரிடுகிறோம். இப்போதைக்கு இந்தப் பணி நமக்கு மிகவும் அசாதாரணமான வகையில் கடினமான ஒன்றாகும். இதற்குக் காரணம் நான் பல சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லி இருப்பது போல ஆட்சி புரிந்துவரும் தொழிலாளர் பகுதி அசாதாரணமான வகையில் நம்பவியலாத அளவுக்குச் சிறியது. நாம் உதவி பெறுதல் வேண்டும். எல்லா அறிகுறிகளையும் வைத்துப் பார்த்தால் அத்தகைய சேமப்படை நாட்டுக்குள்ளேயே பெருகி வருகிறது. பிரம்மாண்டமான அறிவுத்தாகமும் கல்வியில் பிரம்மாண்டமான முன்னேற்றமும்—இது பெரும்பாலும் பள்ளிகளுக்கு வெளியில் பெறப்பட்டது—உழைக்கும் மக்களுக்குக் கல்வி போதிப்பதிலான பிரம்மாண்டமான முன்னேற்றமும் நிலவுகின்றன என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இந்த முன்னேற்றத்தினை பள்ளிக்கூடத்தின் கட்டுக்கோப்புக்குள் அடைத்து வைக்க முடியாது, ஆனால் இது பிரம்மாண்டமானது. வெகு அண்மை எதிர்காலத்தில் நாம் மிகப்பெரிய சேமப்படையினைப் பெறலாம் என்பதை எல்லா அறிகுறிகளும் காட்டுகின்றன. இந்தப் பணியில் தம்மைத்தாமே கடுமையான உழைப்பில் ஈடுபடுத்திக் கொண்டுள்ள பாட்டாளிகளின் சிறு பகுதியின்

பிரதிநிதிகளை இது மாற்றீடு செய்யும். எப்படியும் இந்த விஷயத்தில் நமது இன்றைய நிலைமை மிகவும் இடர்ப்பாடானதே. அதிகார வர்க்கம் முறியடிக்கப்பட்டது. சுரண்டலாளர்கள் ஒழிக்கப்பட்டார்கள். ஆனால் கலாசாரத் தரம் உயர்த்தப்படவில்லை. எனவே அதிகார வர்க்கப் பேர்வழிகள் தமது பழைய பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள். இது வரையில் இருந்ததை விடவும் மிகவும் விரிவான அளவில் பாட்டாளிகளும் விவசாயி மக்களும் ஒன்றுதிரட்டப் பட்டால் மட்டுமே, தொழிலாளர்களை நிர்வாகத்தில் சேர்ப்பதற்கு மெய்யான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் தான், அதிகார வர்க்கப் பேர்வழிகளைப் பின்வாங்கி ஓடும்படி கட்டாயப்படுத்த முடியும். எல்லா மக்கள் கமிசாரகங்களும் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அவற்றைப் பற்றி நான் எடுத்து விளக்கப் போவதில்லை.

நான் எடுத்து விளக்க வேண்டிய கடைசி அம்சம் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் மற்றும் வாக்காள உரிமை பறிப்பு பற்றிய விஷயமாகும். நமது அரசியல் சட்டம் விவசாயிகள் குறித்த வரை பாட்டாளி வர்க்கத்தின் தலைமையினை ஒப்புக்கொள்கிறது, சுரண்டலாளர் வாக்காள உரிமையைப் பறிக்கிறது.[100] இதைத்தான் மேற்கு ஐரோப்பிய தூய ஜனநாயகவாதிகள் ஆகப் பெருமளவு தாக்கினார்கள். அவர்கள் மார்க்சியத்தின் மிகவும் அடிப்படையான கருத்துரைகளை மறந்து விட்டார்கள் எனவும், அவர்களைப் பொருத்தவரை அது முதலாளித்துவ ஜனநாயகம் பற்றிய விஷயமே என்பதையும், அப்படியிருக்க, நாம் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்கு முன்னேறியுள்ளோம் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள் எனவும் அவர்களுக்குப் பதில் அளித்தோம், பதில் அளித்து வருகிறோம். அரசை நிர்வாகம் செய்யும் வேலையில் அவர்களைச் சேர்த்து ஈடுபடுத்துவதில் தொழிலாளர்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் கடந்த சில மாதங்களில் சோவியத் குடியரசு செய்துள்ளதில் பத்தில் ஒரு பங்கைக்கூட உலகிலுள்ள வேறு எந்த ஒரு நாடும் செய்ததில்லை. இது முற்ற முழு உண்மை. வெறும் ஏட்டு

ஜனநாயகமல்ல, மாருக உண்மை ஜனநாயகம் வகையில், தொழிலாளர் மற்றும் விவசாயிகளைச் சேர்த்து ஈடுபடுத்து வதில் நாம் ஆகச் சிறந்த ஜனநாயகக் குடியரசுகள் நூற்றுக் கணக்கான ஆண்டுகளில் செய்திருப்பதை விட, செய்யக் கூடியதை விட அதிகமாகச் செய்திருக்கிருேம் என் பதை யாரும் மறுக்க முடியாது. இதுவே சோவியத்துகளின் முக்கியத்துவத்தை நிர்ணயித்தது, இதன் விளைவாகத்தான் சோவியத்துகள் என்பது எல்லா நாடுகளிலுமுள்ள பாட் டாளிகளின் கோஷமாயிற்று.

ஆனல் இது, மக்களின் போதாக்குறையாக இருக்கும் கலாசாரம் மீது நாம் தடுக்கி விழுவதிலிருந்து நம்மை எவ் வழியிலும் காப்பாற்றவில்லை. முதலாளித்துவ வர்க்கத்தின் வாக்காள உரிமை பறிப்பை ஒரு முற்ற முழுக் கருத்து நிலையில் இருந்து நாம் கருதிப் பார்க்கவே இல்லை, காரணம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முதலாளித்துவ வர்க்கத் தினரை வாக்காள உரிமை பறிப்பு செய்யாமலே ஒவ்வொரு படியிலும் அடக்கலாம் என்பது தத்துவார்த்த வழியில் முற்றும் கருதிப் பார்க்கக் கூடியதே ஆகும். இது தத்துவார்த்த வழியில் முற்றும் கருதிப் பார்க்கக் கூடியதே. எமது அர சியல் சட்டத்தை இதர நாடுகளுக்கு ஒரு மாதிரி எனறு நாம் முன்வைக்கவும் போவதில்லை. நாம் கூறுவதெல்லாம், முத லாளித்துவ வர்க்கத்தை அடக்காமல் சோஷலிசத்துக்கு மாறிச் செல்வது பற்றி யாரேனும் கருதுவாரானல் அவர் ஒரு சோஷலிஸ்டு அல்ல என்பதே. ஆனல் முதலாளித்துவ வர்க்கத்தை ஒரு வர்க்கம் என்ற முறையில் அடக்குவது அவசியம் என்ற போதிலும், அவர்களது வாக்குரிமையை யும் சமவுரிமையையும் பறிக்க வேண்டுவது அவசியமல்ல. முதலாளித்துவ வர்க்கத்துக்கு சுதந்திரம் அளிக்க நாம் விரும்ப வில்லை, சுரண்டலாளரும் சுரண்டப்படுவோரும் சமம் என் பதை நாம் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனல் இந்த விஷயம் வேலைத்திட்டத்தில் கையாளப்பட்டிருக்கும் விதத்தில் அரசி யல் சட்டம் தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் சம மற்ற நிலை போன்ற அத்தகைய நடவடிக்கைகளை விதிமுறை செய்யவில்லை. அவை மெய்யான நடைமுறைக்கு ஏற்கெனவே

வந்த பிறகே அவை அரசியல் சட்டத்தில் உருப்பெற்றன. சோவியத்துகளின் அரசியல் சட்டத்தை வரைந்தவர்கள் போல்ஷிவிக்குகள் கூட அல்ல; தங்களுக்குத் தீங்கு தரத் தக்க முறையில் அது மென்ஷிவிக்குகளாலும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களாலும் போல்ஷிவிக்குப் புரட்சிக்கு முன்னரே வரையப்பட்டது. உள்ளபடியே நடைமுறையில் இருந்த நிலைமைகளுக்கு ஏற்றபடி அவர்கள் அதை வரைந்தார்கள். பாட்டாளிகளின் ஸ்தாபனம் விவசாயிகளின் ஸ்தாபனத்தை விடவும் மிக அதிக வேகமாக இயங்கி முன்சென்றது. இந்த மெய்நிகழ்வு தொழிலாளர்களைப் புரட்சியின் கொத்தளமாக்கி அவர்களுக்கு ஒரு நடைமுறை சாதக நிலையை வழங்கியது. இந்த சாதக நிலைகளை படிப்படியாகக் கடந்து சென்று அவர்களின் சமநிலையாக்கத்தை எய்த வேண்டுவதே அடுத்த பணி. அக்டோபர் புரட்சிக்கு முன்னும் சரி பின்னும் சரி யாரும் முதலாளித்துவ வர்க்கத்தினரை சோவியத்துகளில் இருந்து விரட்டவில்லை. முதலாளித்துவ வர்க்கத்தினர் தாமாகவே சோவியத்துகளை விட்டு விலகினர்.

முதலாளித்துவ வர்க்கத்தினரின் வாக்குரிமை விஷயத்தில் விவகாரம் இவ்வாறுதான் இருக்கிறது. அந்த விஷயத்தினை முற்றும் தெட்டத் தெளிவாக முன்வைக்க வேண்டுவது நமது பணி. எமது நடத்தைக்காக நாம் கிஞ்சிற்றும் வருத்தம் தெரிவிக்கவில்லை, ஆனால் மெய்விவரங்களை உள்ளது உள்ளபடி அறவே துல்லியமாக விவரிக்கிறோம். நாம் சுட்டிக் காட்டுகிறபடி, கலாசாரத் தரம் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்ததாலும் நம் விஷயத்தில் ஸ்தாபனம் பலவீனமாக இருந்ததாலும் நமது அரசியல் சட்டம் இந்த அசமத்துவத்தினைப் புகுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் இதை நாம் ஒரு லட்சியமாக்கவில்லை. இதற்கு மாறாக கட்சியானது தனது வேலைத்திட்டத்தில் சிறந்த அமைப்புத் திரட்சியுள்ள தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான இந்த அசமத்துவத்தை அகற்றுவதற்காக முறையாகப் பாடுபடுவதற்கு ஒப்புக்கொள்கிறது. கலாசாரத் தரத்தை உயர்த்துவதில் நாம் வெற்றி பெற்ற உடனே இந்த அசமத்துவத்தை அகற்றுவோம். அப்போது இத்

தகைய கட்டுப்பாடுகள் இல்லாமல் நாம் செயல்படலாம். இப்போதும் கூட பதினேழு மாத காலப் புரட்சிக்குப் பிறகு இந்தக் கட்டுப்பாடுகளுக்குள்ள நடைமுறை முக்கியத்துவம் மிகச் சிறிதே.

தோழர்களே, வேலைத்திட்டம் பற்றிய பொது விவாதத்தில் கருத்தூன்றி விளக்க வேண்டுவது அவசியம் என்று நான் கருதிய பிரதான அம்சங்கள் இவையே. விவாதத்தில் இது மேலும் ஆராயப்படும். (கரவொலி.)

2

கட்சி வேலைத்திட்டம் மீதான விவாதத்தை முடித்து வைத்து ஆற்றிய உரை மார்ச் 19

(கரவொலி.) தோழர்களே, அறிக்கை சம்பந்தமாக இருந்ததைப் போன்று அத்தகைய விவரமான பூர்வாங்கக் கலந்தாலோசனைக்குப் பிறகு தோழர் புஹாரினுடன் விஷயத்தின் இந்தப் பகுதியை என்னுல் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. ஒருவேளை இது அவசியமற்றது என்று தெரிய வரலாம். இங்கு பகிரங்கமான விவாதம் முதன்மையாயும் ஒரு விஷயத்தினை வெளிப்படுத்தி விட்டது, அதாவது திட்டமிட்ட முறைப்படுத்தி முன்வைக்கப்பட்ட எதிர்யோசனை எதுவும் இல்லை என்பதை வெளிப்படுத்தி விட்டது என்று எனக்குத் தோன்றுகிறது. பல பேச்சாளர்கள் ஒரு தொடர்பற்ற வழியில் தனித்தனி அம்சங்களை எடுத்து விளக்கிஞர்கள் ஆனுல் எதிர்யோசனை எதையும் கொண்டுவரவில்லை. பீடிகைக்கு எதிராகப் பிரதானமாயும் திசைதிருப்பப்பட்டதான முக்கியமான ஆட்சேபணைகளை நான் எடுத்துக் கொள்கிறேன். பீடிகையில் முதலாளித்துவம் பற்றிய ஒரு வர்ணனையை ஏகாதிபத்தியம் பற்றிய ஒரு வர்ணனையுடன் இணைத்து அவை ஒரு இணைப்பாக்கம் உள்ள முழுமையாக

வடிவம் பெறும் அத்தகைய வழியில் அதனை உருவாக்கு வது சாத்தியம் என்று கருதுபவர்களில் அவரும் ஒருவர் என்று தோழர் புஹாரின் என்னிடம் கூறினர். ஆனல் இது செய்யப்படாத நிலையில் நாம் இருக்கும் நகலைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உங்கள் முன்வைக்கப்பட்ட நகல் தவருனது என்று பேச் சாளர்களில் பலர் வாதித்தார்கள். தோழர் பத்பேல்ஸ்கி இதைக் குறிப்பாக வலியுறுத்தினர். தோழர் பத்பேல்ஸ்கி சமர்ப்பித்த நிரூபணங்கள் மிகவும் அதிசயமானவை. உதார ணமாக பாரா 1ல் புரட்சியானது இந்த இந்தத் தேதியிலான புரட்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், ஏதோ சில காரணத்தால் இந்தப் புரட்சி கூட நம்பர் இடப்பட்டுள்ளது என்பதான கருத்தை தோழர் பொத்பெல்ஸ்கிக்கு இது குறிப்பாக உணர்த்தியிருப்பதாயும் அவர் சொன்னர். மக் கள் கமிசாரவையில் நாம் எண்ணற்ற பல தஸ்தவேஜுக ளுடன் காரியம் செய்ய வேண்டியிருக்கிறது, அவற்றுக்குப் பட்டியல் நம்பர்கள் உள்ளன, அடிக்கடி அவற்ருல் நாம் சிறிது அயர்ச்சி அடைவதுமுண்டு. ஆனல் இங்கு இந்த எண்ணத்தை வெளியிடுவது எதற்கு? பட்டியல் நம்பருக்கும் இந்த விஷயத்துக்கும் என்ன சம்பந்தம்? நாம் விழாத் தேதியை நிர்ணயித்து அதைக் கொண்டாடுகிருேம். துல்லியமாயும் அக்டோபர் 25ந் தேதி தான் நாம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினேம் என்பதை மறுக்க முடியுமா? இதை ஏதேனும் வழியில் நீங்கள் மாற்ற முயல்வீர்களானல் அது செயற்கையானதாகவே இருக்கும். இந்தப் புரட்சியை அக் டோபர்-நவம்பர் புரட்சி என்று அழைத்தீர்களானல் இது ஒரு நாளில் நடத்தி முடிக்கப்பட்டதல்ல என்று சொல் வதற்கு ஒரு சாக்குப் போக்கை வழங்கியவர்களாவீர்கள். ஆனல் இது நடத்தி முடிக்கப்பட நிச்சயமாக நீண்ட காலம் எடுத்தது —அக்டோபரில் அல்ல, நவம்பரில் அல்ல, ஒராண்டில் கூட அல்ல. பாராக்களில் ஒன்று வரவிருக்கும் சமூகப் புரட்சி குறித்துப் பேசுகிறது என்ற மெய்விவரத்தின் மீது தோழர் பத்பேல்ஸ்கி ஆட்சேபம் எழுப்புகிருர். இந்த அடிப்படை யில் அவர் ''மேன்மை தங்கிய சமுதாயப் புரட்சியைக்

கடுப்புறச் செய்யும்'' குற்றத்தை வேலைத்திட்டம் இழைத்து விட்டதாகத் தோன்றும்படி செய்தார். இங்கு நாம் சமுதாயப் புரட்சியின் நடுவில் இருக்கிறோம் அப்படி இருக்க வேலைத்திட்டம் அது வரவிருக்கிறது என்று கூறுகிறது! இந்த வாதத்திற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்பது கண்கூடு. காரணம் நமது வேலைத்திட்டத்தில் குறிப்பிட்ட புரட்சி உலகளாவிய சமுதாயப் புரட்சியாகும்.

நாம் புரட்சியைப் பொருளாதாரக் கருத்து நிலையில் இருந்து அணுகுகிறோம் என்று நம்மிடம் சொல்லப்படுகிறது. நாம் அவ்வாறு செய்ய வேண்டுமா வேண்டாமா? அதீதமான உற்சாகம் கொண்டு பல தோழர்கள் இங்கே, ஒரு உலகப் பொருளாதாரக் கவுன்சில் பற்றியும் எல்லாத் தேசியக் கட்சிகளையும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டிக்குக் கீழ்ப்படுத்துவது பற்றியும் பேசத் தொடங்கி விட்டார்கள். தோழர் பியாத்தக்கோவ் கிட்டத்தட்ட இதையே சொல்ல முனைந்தார். (பியாத்தக்கோவ் தமது இடத்தில் இருந்து ''அது மோசமான காரியம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?'') அது மோசமான காரியமல்ல என்று அவர் இப்போது சொல்வதால், வேலைத்திட்டத்தில் இதைப் போன்று ஏதேனும் இருக்குமானால் அதைக் கண்டன விமர்சனம் செய்யத் தேவையில்லை என்று நான் பதில் அளிக்க வேண்டும்: இத்தகைய யோசனையைக் கொண்டுவந்தவர்கள் தமது சொந்தப் புதைக் குழியைத்தாமே தோண்டியவர்களாவர். இந்த அதீத உற்சாகம் கொண்ட தோழர்கள், வேலைத்திட்டத்தில் நாம் உள்ளபடியே என்ன நிலவுகிறதோ அவற்றின் மீது நமது முடிவான நிலையை எடுக்க வேண்டும் என்ற உண்மையைக் காணத் தவறிவிட்டார்கள். இந்தத் தோழர்களில் ஒருவர்—சுனீத்ஸா என்பவர் என்று நினைக்கிறேன்—வேலைத்திட்டத்தை மிகவும் உரமாகக் கண்டன விமர்சனம் செய்து அது உபயோகமற்றது என்றெல்லாம் கூறினர்—இந்த அதீத உற்சாகம் கொண்ட தோழர்களில் ஒருவர் அதில் உள்ளபடியே என்ன நிலவுகிறதோ அது அடங்கியிருக்க வேண்டும் என்பதைத் தாம் ஒப்புக்கொள்ளவில்லை என்று சொல்லி, எது

நிலவவில்லேயோ அது அதில் அடங்கியிருக்க வேண்டும் என்று பிரேரேபித்தார். (சிரிப்பு.) இந்த வாதம் மிகவும் வெளிப் படையாக பொய்யாக இருப்பதால் இது சிரிக்கத் தூண்டுகிறது என்பது முற்றிலும் இயல்பே என்று நான் கருதுகிறேன். உள்ளபடியே எது நிலவுகிறதோ அதை மட்டுமே கொண்ட தாக அது இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லே. எது திட்டவட்டமாக நிலேநாட்டப்பட்டுவிட்டதோ அதிலிருந்து நாம் முன்செல்ல வேண்டும் என்றுதான் நான் கூறினேன். கம்யூனிஸ்டுப் புரட்சி தவிர்க்க முடியாதது என்பதை பாட் டாளிகளுக்கும் உழைக்கும் விவசாயிகளுக்கும் நாம் கூற வேண்டும், நிரூபிக்கவும் வேண்டும். இதைச் சொல்ல வேண்டு வது அவசியம் இல்லே என்று இங்கு எவராவது யோசனே கூறுகிருரா? அப்படி எவராவது யோசனே கூறியிருந்தால் அவர் புரிந்தது தவறு என்று அவருக்கே நிரூபித்துக் காட்டப் பட்டிருக்கும். யாரும் அத்தகைய யோசனே கூறவில்லே, யாரும் அவ்வாறு செய்ய மாட்டார்கள். காரணம் நமது கட்சி ஆட்சி அதிகாரத்துக்கு வந்தது கம்யூனிஸ்டு பாட்டாளி களின் உதவியுடன் மட்டுமல்ல, எல்லா விவசாயிகளின் உதவியுடனுமாகும் என்பது ஐயத்திற்கிடமற்ற மெய்நடப் பாகும். ‘‘கட்சியின் ஒரே வேலே சோஷலிஸ்டு நிர்மாணத்தை நடத்திச் செல்வதே. கம்யூனிஸ்டுப் புரட்சி நடந்து முடிந்து விட்டது, கம்யூனிசத்தைச் செயல்படுத்துவீர்’’ என்று இப்போது நம்முடன் அணிவகுத்து வருவோரிடம் சொல்வ தோடு நாம் அமைந்து விடலாமா? அத்தகைய கருத்துக்கு அறவே ஆதாரம் இல்லே, அது தத்துவார்த்தக் கருத்து நிலேயில் இருந்தும் தவருனதாகும். வர்க்கப் போராட்டம் பற்றியும் முதலாளித்துவத்தில் இருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதைப் பற்றியும் இப்போது புரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கிற லட்சக் கணக்கான மக்களே நமது கட்சி நேரடியாகவும் அதை விட அதிகமாக மறைமுகமாகவும் ஈர்த்துச் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

முதலாளித்துவத்தை சோஷலிசமாக மாற்றும் விஷயத் தில் இன்று நமது நாட்டில் இருக்கும் உழைக்கும் மக்கள் தோற்றுவித்துள்ள அத்தகைய அளவு ஆர்வமுள்ள அக்

கறையை வேறெங்கும் வேறெந்த நாட்டிலும் உழைக்கும் மக்கள் காட்டியதில்லை என இப்போது கூறலாம், அவ்வாறு சொல்வது எவ்வகையிலும் மிகையாகாது என்பது திண்ணம். எமது மக்கள் இதர நாடுகளில் இருக்கும் மக்களை விட இதில் அதிக சிந்தனை செலுத்தி வருகிறார்கள். இந்தக் கேள்விக்கு கட்சி பதில் அளிக்காமல் இருக்கலாமா? இந்தக் கம்யூனிஸ்டுப் புரட்சி எவ்வாறு முன்னேறும் என்பதை நாம் விஞ்ஞான வழியில் நிதர்சனப்படுத்திக் காட்ட வேண்டும். இதர யோசனைகள் யாவும் இந்த விஷயத்தில் போதுமானதல்ல. இதை முழுமையாக நீக்கிவிட யாரும் விரும்பவில்லை. இதைச் சுருக்குவது சாத்தியம் என்பது பற்றியும், பழைய வேலைத்திட்டம் தவறானதாக இருப்பதால் அதிலிருந்து மேற்கோள் காட்ட வேண்டாம் என்பது பற்றியும் ஏதோதெளிவற்ற பேச்சு இருந்தது. ஆனால் பழைய வேலைத்திட்டம் தவறானதாக இருந்திருக்குமானால் இத்தனை பல ஆண்டுகள் அது எப்படி நமது செயல்பாடுகளுக்கு அடித்தளமாகப் பயன்பட முடிந்தது? உலக சோவியத் குடியரசு நிறுவப்படும் போது ஒரு வேளை நாம் ஒரு பொதுவேலைத்திட்டத்தைப் பெறலாம்; அதற்குள் நாம் மேலும் பல வேலைத்திட்டங்களை உருவரை செய்திருப்போம். முன்னாள் ருஷ்ய சாம்ராஜ்யம் இருந்த இடத்தில் ஒரே சோவியத் குடியரசு நிலவும் போது, இப்போது அதை உருவரை செய்வது உரிய காலத்துகு முற்பட்ட செயலாகும். ஒரு சோவியத் குடியரசை நோக்கிச் சந்தேகமற முன்னேறி வரும் பின்லாந்தும் கூட அதை இன்னும் எட்டவில்லை. எனினும், முன்னாள் ருஷ்ய சாம்ராஜ்யத்தில் மிகவும் கலாசாரச் சிறப்புடன் வாழும் மக்கள் பின்னிஷ் மக்களே. இதன் பின் விளைவாக வேலைத்திட்டம் இப்போது முழுமையடைந்த ஒரு நடைமுறையினைப் பிரதிபலிக்க வேண்டும் என்று கோருவது அறவே தவறாகும். இது உலகப் பொருளாதாரக் கவுன்சில் வேண்டும் என்ற கோரிக்கையை வேலைத்திட்டத்தில் புகுத்துவதற்குச் சமமானதாகும். இதற்கிடையில் நாமே இன்னும் Sovnarkhos (பொருளாதாரக் கவுன்சில்) என்னும் அவலட்சணச் சொல்லுக்கு நம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டாகவில்லை. வெளிநாட்டவரைப்

பொருத்த வரை அந்தப் பெயரில் ஒரு ரயில்வே நிலையம் இருப்பதாகக் கருதி அவர்கள் ரயில்வே அட்டவணையில் தேடினார்கள் என்று சொல்லப்படுகிறது. (சிரிப்பு.) அரசாணைகள் மூலம் அத்தகைய சொற்களை நாம் உலக முழுதிற்கும் நாட்டாண்மை செய்ய முடியாது.

சர்வதேசியத் தன்மை பெற்றிருக்க வேண்டுமானால் நமது வேலைத்திட்டம் எல்லா நாடுகளின் பொருளாதாரத் திற்கும் தன்மைக் குறிப்பாக இருக்கும் வர்க்கக் காரணி களை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். முதலாளித் துவம் இன்னும் மிகப்பல இடங்களில் வளர்ச்சியடைந்து வருகிறது என்பதே எல்லா நாடுகளின் தன்மைக் குறிப்பு மாகும். இது ஆசியா முழுவதற்கும், முதலாளித்துவ ஜன நாயகத்தை நோக்கி முன்னேறிவரும் எல்லா நாடுகளின் விஷயத்திலும் மெய்ப்பாடாகும், ருஷ்யாவின் பல பகுதி களுக்கும் இது மெய்ப்பாடாகும். உதாரணமாக பொருளா தாரத் துறையில் மெய்விவரங்கள் குறித்து நெருக்கமான பரிசயம் உடைய தோழர் ரீக்கவ் நமது நாட்டில் எழுந்து வந்துள்ள புதிய முதலாளித்துவ வர்க்கத்தைப் பற்றி நம் மிடம் சொன்னார். இது உண்மை. இந்த முதலாளித்துவ வர்க்கத்தினர் நமது சோவியத் அரசாங்க அலுவலர்கள் மத்தியில் இருந்து மட்டும் அன்றி—அவர்களது அணிகளில் இருந்து மிகச் சிலரே தோன்றலாம்—முதலாளித்துவ வங்கி களின் ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டோரும், இப் போது ரயில்வே போக்குவரத்து வசதியிடமிருந்து துண்டிக்கப் பட்டிருப்போருமான விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் அணிகளில் இருந்தும் தோன்றிவருகிறார்கள். இது உண்மை. இந்த உண்மையைச் சொல்லாது மறைப்பது எப்படி? நீங்கள் உங்களது சொந்த பிரமைகளை வளர்த்துக் கொள்ள வும், அல்லது மிகப் பெருமளவு சிக்கலாக இருக்கும் எதார்த்தத்துக்குள் அரைவேக்காட்டு ஏட்டுப் படிப்பைப் புகுத்தவும் மட்டுமே செய்கிறீர்கள். ருஷ்யாவிலும் கூட முதலாளித்துவ பண்ட உற்பத்தி முறை வாழ்கிறது, இயங்கு கிறது, வளர்ந்து வருகிறது, ஒவ்வொரு முதலாளித்துவ சமுதாயத்திலும் செய்யும் அதே வழியில் ஒரு முதலாளித்துவ

வர்க்கத்தைத் தோற்றுவிக்கிறது என்பதை இது காட்டு கிறது.

தோழர் ரீக்கவ் கூறியதாவது: ''முதலாளித்துவ வர்க் கத்தினரை எதிர்த்து நாம் போராடி வருகிறோம், நமது நாட்டில் இது முளைத்தெழுந்துள்ள காரணம் விவசாயிப் பொருளாதாரம் இன்னும் மறைந்தாகவில்லை; இந்தப் பொரு ளாதாரம் ஒரு முதலாளித்துவ வர்க்கமும் முதலாளித்துவ மும் தோன்றுவதற்கு இடமளிக்கிறது''. இது குறித்துத் துல்லியமான புள்ளிவிவரங்கள் நம் வசம் இல்லை ஆனால் இது தான் நிகழ்ந்து வருகிறது என்பதில் ஐயத்திற்கே இடமில்லை. இது வரையில் உலகிலேயே முன்னுளில் ருஷ்ய சாம்ராஜ் யமாக இருந்த பரப்பின் எல்லைகளுக்குள் மட்டுமே ஒரு சோவியத் குடியரசு நிலவுகிறது. இது பல நாடுகளில் முதிர்ச்சி பெற்று வளர்ச்சியடைந்து வருகிறது ஆனல் வேறு எந்த நாட்டிலும் இது இன்னும் நிலவவில்லை. எனவே, இன்னும் நம்மால் அடையப்பெருத ஏதோ ஒன்றை நமது வேலைத்திட் டத்தில் வைத்து உரிமை கொண்டாடுவது என்பது விசித் திரமானது. சோஷலிஸ்டுக் குடியரசுகளைப் பிறப்பித்து வரும் இதர நாடுகளின் பேறுவேதனை நாம் அனுபவப்பட்டதை விடவும் சந்தேகத்திற்கிடமின்றி அதிகக் கடுமையாக இருக் கும் என்னும் பொல்லாங்கான எதார்த்தத்தில் இருந்து தப்புவதற்கான விருப்பத்தை மட்டுமே இது வெளிப்படுத் தும். நமக்கு அது எளிதாய் இருக்கக் கண்டோம். காரணம் 1917 அக்டோபர் 26ல் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி யின் தீர்மானங்களில்[101] விவசாயிகள் எதைக் கோரினுர்களோ அதற்குச் சட்ட அமுல் அளித்தோம். இது வேறு எந்த ஒரு நாட்டிலும் நிகழவில்லை. ஸ்விட்சர்லாந்தில் முன் என் றுமே இருந்திராத வகையில் விவசாயிகள் வேலைநிறுத்தக் காரர்களை எதிர்த்துப் போருக்கு எழுந்தார்கள் எனவும், ஜெர்மனியில் விவசாயத் தொழிலாளர் மற்றும் சிறு விவ சாயிகளின் சோவியத்துகள் தோன்றுவதற்கான சாத்தியக் கூளின் லவலேசமான அறிகுறிகள் கூட இல்லை எனவும் முறையே ஒரு ஸ்விஸ் தோழரும் ஒரு ஜெர்மன் தோழரும் நம்மிடம் சொன்னுர்கள். ஆயினும், நமது நாட்டில் புரட்சி வெடித்த

முதல் சில மாதங்களிலேயே கிட்டத்தட்ட நாடு முழுவதிலும் விவசாயிப் பிரதிநிதிகளின் சோவியத்துகள் அமைக்கப் பட்டன. ஒரு பின்தங்கிய நாட்டவரான நாம் அவற்றை உரு வாக்கினேம். இங்கு ஒரு பிரம்மாண்டமான பிரச்சினை எழு கிறது, இதற்கு முதலாளித்துவ நாடுகளில் இருக்கும் மக்கள் இன்னும் தீர்வு காணவில்லை. நாம் ஒரு மாதிரி முதலாளித்துவ நாடாக இருந்தோமா? 1917 வரையிலும் கூட இந்த நாட்டில் நிலப்பிரபுத்துவ அடிமை முறையின் எச்சமிச்சங் கள் காணப்பட்டன. ஆனல் இந்தப் பிரச்சினையை நடைமுறை யில் எவ்வாறு தீர்ப்பது என்பதை முதலாளித்துவ வழியில் ஒழுங்கமைக்கப்பட்ட தேசம் எதுவும் இதுவரையில் காட்ட வில்லை. தீவிரமும் துரிதமுமான ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்குரிய மாபெரும் கொந்தளிப்பான ஒரு முயற்சியை ஜாரின் கொடுங்கோலாட்சி தூண்டி எழுப்பிய போது, தனிச்சிறப்பான நிலைமைகளின் கீழ் நாம் ஆட்சி அதிகாரத் தைப் பெற்றோம். இந்த தனிச்சிறப்பான நிலைமைகளின் கீழ் சில மாதங்கள் எல்லா விவசாயிகளின் ஆதரவையும் சார்ந்து நிற்க நம்மால் முடிந்தது. இது ஒரு வரலாற்று உண்மைதான். 1918 கோடைக் காலம் வரையிலும் கூட, ஏழை விவசாயி கள் கமிட்டிகள் அமைக்கப்பட்ட காலம் வரை, நாம் எல்லா விவசாயிகளின் ஆதரவையும் பெற்றிருந்ததால் ஓர் அரசாங்க மாகத் தொடர்ந்து இயங்கினேம். இது எந்த ஒரு முதலா ளித்துவ நாட்டிலும் சாத்தியமல்ல. வேலைத்திட்டம் முழு வதையும் அடிப்படையில் மறு உருவரை செய்ய வேண்டும் என்று பேசும் போது இந்த மூலாதாரமான பொருளாதார உண்மையை மறந்து விடுகிறீர்கள். இது இல்லாமல் உங்கள் வேலைத்திட்டத்துக்கு விஞ்ஞான வழியிலான அடித் தளம் இருக்க முடியாது.

ஒரு வேலைத்திட்டம் விஞ்ஞான வழியிலான அடித்தளத் தின் மீது கட்டப்பட வேண்டும் என்ற சர்வப்பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டதான மார்க்சிய ஆய்வுரையின் அடிப் படையில் நாம் செயல்பட வேண்டும். கம்யூனிஸ்டுப் புரட்சி எவ்வாறு எழுந்தது, அது ஏன் தவிர்க்க முடியாதது, அதன் முக்கியத்துவம், தன்மை மற்றும் ஆற்றல் ஆகியவை எவை,

எத்தகைய பிரச்சினைகளுக்கு அது தீர்வு காண வேண்டும் என்பதை மக்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். நமது வேலைத்திட்டம் கிளர்ச்சிப் பிரசார வேலைகளுக்கான ஒரு பொழிப்பாக,எல்லா வேலைத்திட்டங்களும் இருந்தது போன்று, உதாரணமாக எர்ஃபுர்ட் வேலைத்திட்டம்[102] இருந்தது போன்று ஒரு பொழிப்பாக இருக்க வேண்டும். அந்த வேலைத் திட்டத்தின் ஒவ்வொரு ஷரத்திலும் கிளர்ச்சிப் பிரசாரம் செய்வோர் ஆயிரக் கணக்கிலான தமது உரைகளிலும் கட்டுரைகளிலும் பயன்படுத்துவதற்குரிய விஷயாதாரம் அடங்கியிருந்தது. நமது வேலைத்திட்டத்தின் ஒவ்வொரு ஷரத்தும், உழைக்கும் ஆடவர் மகளிர் அனைவரும் கட்டாயம் அறிந்து தன் வயப்படுத்திப் புரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். முதலாளித்துவம் என்றால் என்ன என்பதை அவர்கள் அறியாவிட்டால், சிறு விவசாயி மற்றும் கைவினையாளர் பொருளாதாரம் இந்த முதலாளித்துவத்தை இடையறாதும், தவிர்க்க வொண்ணாமலும், அவசியமாயும் தோற்றுவிக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளாவிட்டால்— இதை அவர்கள் புரிந்து கொள்ளாவிட்டால் பின்னர் அவர்கள் தம்மைத்தாமே கம்யூனிஸ்டுகள் என்று நூறு தடவை பிரகடனம் செய்து கொண்டாலும் சரி, ஆகத் தீவிரமான கம்யூனிசத்தைப் பற்றி வீம்படித்தாலும் சரி இந்தக் கம்யூனிசம் செப்புக்காசுகூடப் பெறாது, காரணம் அது பொருளாதார மெய்விவரங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் போது மட்டுமே நாம் கம்யூனிசத்தை மதிக்கிறோம்.

சோஷலிஸ்டுப் புரட்சி முன்னேறிய நாடுகளிலும் கூடப் பல மாற்றங்களை உண்டாக்கும். முதலாளித்துவ உற்பத்தி முறை இன்னும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் நிலவுகிறது. ஏகாதிபத்தியம் நிதி மூலதனத்தை ஒன்றுதிரட்டி ஒருமுனைப்படுத்தி விட்டது மெய்யாக இருந்த போதிலும், பல இடங்களில் முதலாளித்துவ உற்பத்தி முறை அதன் குறைந்த வளர்ச்சியின் வடிவங்களை தாங்கி நிற்கிறது. முதலாளித்துவம் தனி முழுமையாயும் அதன் ஆகச் செம்மையான வடிவில் உலகில் எந்த ஒரு நாட்டிலும், ஆக வளர்ச்சியடைந்த நாட்டிலும் கூடக் காணப்படவில்லை. ஜெர்மனியிலும் கூட

அதைப் போன்ற ஒன்று கிடையாது. குறிப்பாக எங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளுக்காக விஷயாதாரங்களைத் திரட்டிக் கொண்டிருந்த போது மத்தியப் புள்ளிவிவர வாரியத்துக்குப் பொறுப்பாக இருக்கும் தோழர், ஜெர்மனியில் தமது உபரி உருளைக்கிழங்கு உற்பத்தியில் 40 சதவிகிதத்தை விவசாயி கள் உணவு வழங்கு துறையிடமிருந்து ஒளித்து வைத்திருந் தனர் என்ற தகவலை நமக்குத் தந்தார். முதலாளித்துவம் அதன் முழு வளர்ச்சியையும் எட்டிவிட்ட ஒரு முதலாளித்துவ நாட்டில் கட்டற்ற சிறு வர்த்தகம், சிறு லாபக் கொள்ளை ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் சிறிய விவசாயப் பண்ணை கள் இன்னும் காணப்படுகின்றன. இத்தகைய மெய் விவரங்களை மறந்து விடக் கூடாது. இங்கு பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டிருக்கும் 300 000 கட்சி உறுப்பினர்களில் இந்த விஷயத்தை முழுமையாகப் புரிந்து கொள்கிற பலர் இருக் கிறார்களா? நல்வாய்ப்பு காரணமாக இந்த வேலைத்திட்டத்தை உருவரை செய்த நாம் இதைப் புரிந்து கொள்கிறோம் என்பதால் கம்யூனிஸ்டு கட்சியில் இருக்கும் மக்கள்திரள் முழுதும் இதைப் புரிந்து கொள்கிறது என்று கற்பனை செய் வது கேலிக்கிடமான போலித் தற்பெருமையாகும். அவர் கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்களுக்கு இந்த அரிச்சு வடி தேவை. நம்மை விட அவர்களுக்கு இது நூறு மடங்கு தேவைப்படும். காரணம் கம்யூனிசம் என்றால் என்ன என் பதையும், பண்ட உற்பத்தி என்றால் என்ன என்பதையும் மனத்தில் வாங்காதவர்கள், அவற்றைப் புரிந்து கொள்ளாத வர்கள் கம்யூனிசத்திடமிருந்து வெகு தொலைவில் இருப் பார்கள். இந்தச் சிறு பண்டப் பொருளாதார விவகாரம் ஒவ்வொரு நாளும், நடைமுறைப் பொருளாதாரக் கொள் கை, உணவுக் கொள்கை, விவசாயக் கொள்கை சம்பந்த மான விஷயங்களிலும், தலைமைப் பொருளாதாரக் கவுன் சில் பற்றிய காரியங்களிலும் வந்து கொண்டே இருக்கிறது. இருந்தும் அதைப் பற்றி வேலைத்திட்டத்தில் கூறக்கூடாது என்று நம்மிடம் சொல்லப்படுகிறது! இந்த அறிவுரைக்கு நாம் செவிசாய்ப்போமானால் நாம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆற்றலற்றவர்கள் என்பதையும், நமது நாட்டில்

புரட்சி விதிவிலக்கான சந்தர்ப்பசூழல்கள் காரணமாகவே வெற்றி பெற்றது என்பதையுமே நாம் சுட்டிக் காட்டியவர்களாவோம்.

சோஷலிஸ்டு அமைப்பு முறை வடிவங்கள் பற்றி ஆய்வு நடத்துவதற்காக ஜெர்மனியில் இருந்து தோழர்கள் நம்மிடம் வருகிருர்கள். நாம் வலுவுடன் இருக்கிரேம் என்பதை வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள தோழர்களுக்கு நிருபித்துக் காட்டும் வகையில் நாம் செயல்பட வேண்டும். நமது புரட்சியில் நாம் எதார்த்தத்தின் எல்லைகளைச் சற்றும் மீறவில்லை என்பதை அவர்கள் காண இயலுமாறு செய்தல் வேண்டும், அறவே மறுக்க முடியாததான விஷயாதாரங்களை அவர்களுக்கு வழங்க வேண்டும். நமது புரட்சியை எல்லா நாடுகளுக்கும் லட்சிய வழிகாட்டி என்று நிறுவுவதும், அது பல அற்புதமான கண்டுபிடிப்புக்களைச் செய்து விட்டதாகவும், ஒரு கூடை சோஷலிஸ்டு புதுப்புனைவுகளைப் புகுத்தி விட்டதாகவும் கற்பனை செய்து கொள்வதும் அபத்தமாகும். இவ்வாறு எவரும் உரிமை கொண்டாடுவதைப் பற்றி நான் கேள்விப்படவில்லை, அவ்வாறு எவரும் செய்ததாகக் கேள்விப்பட மாட்டோம் என்றும் நான் அடித்துக் கூறுகிறேன். பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே தனிப்பட்ட உறவுகள் நிலவும் ஒரு நாட்டில் முதலாளித்துவத்தை அழித்தொழிக்கும் முதல் நடவடிக்கைகளை எடுப்பதில் நாம் நடைமுறை அனுபவத்தை அடைந்துள்ளோம். வேறு எதுவும் இல்லை. பாட்டி கதையில் வரும் தவளையைப் போல நடந்து தற்பெருமையால் வீங்கிப் போவோமேயானுல் நாம் உலகத்தின் கேலிப்பொருளாவோம், நாம் வெறும் வீண்பெருமையாளர்களாவோம்.

மார்க்சிய வேலைத்திட்டத்தின் உதவியுடன் நாம் பாட்டாளி வர்க்கத்தின் கட்சிக்குப் போதனை அளித்தோம். அதே வழியில் நமது நாட்டில் இருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்குப் போதனை அளிக்கப்பட வேண்டும். இங்கு நாம் சித்தாந்தத் தலைவர்கள் என்ற முறையில் கூடியிருக்கிரேம், நாம் மக்களுக்குக் கூற வேண்டும்: ''நாம் பாட்டாளி வர்க்கத்திற்குப் போதனை தந்தோம், அவ்வாறு செயல்படும்

போது நாம் முதலாவதாயும் முக்கியமானதாயும் துல்லிய மான பொருளாதாரப் பகுப்பாய்வின் மீதே நமது கொள்கை நிலையை மேற்கொண்டோம்.'' இதை ஒரு அறிக்கை மூலம் செய்ய முடியாது. மூன்ருவது அகிலத்தின் அறிக்கை ஒரு வேண்டுகோள், ஒரு பிரகடனம், அது நம்முன் இருக் கும் பணிகள் சம்பந்தமாக நமது கவனத்தை ஈர்க்கிறது, மக்களின் உணர்வுகளுக்கு வேண்டுகோள் விடுகிறது. உங் களுக்கு ஒரு பொருளாதார அடித்தளம் இருக்கிறது, நீங் கள் மணலில் வீடு கட்டவில்லை என்பதை விஞ்ஞான வழியில் நிரூபிக்கச் சிரமம் எடுத்துக் கொள்ளுங்கள். அதை உங்க ளால் செய்ய முடியாத பட்சம் ஒரு வேலைத்திட்டத்தை வரை யும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டாம். இதைச் செய் வதற்கு இந்தப் பதினைந்து ஆண்டுகளாக எதனூடெல்லாம் வாழ்ந்து வந்தோம் என்பதை மதிப்பாய்வு செய்வது அவ சியம். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நாம் சமுதாயப் புரட்சியை நோக்கி முன்னேறி வருகிறோம் என்று சொன் னோம், இப்போது அதை வந்தடைந்து விட்டோம், இந்த மெய்நடப்பு நமது நிலைமையைப் பலவீனப்படுத்துகிறதா? இல்லை, மாருக அதனைக் கூடுதல் உரப்படுத்துகிறது, வலுப் படுத்துகிறது. முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சி அடைந்து வருகிறது, ஏகாதிபத்தியம் சோஷலிஸ்டுப் புரட்சி யின் துவக்கத்துக்கு இட்டுச் செல்கிறது என்பதே இவை அனைத்தின் விளைவுமாகும். இந்த நடைமுறை தொந்தர வானது, மிகவும் நீடித்த ஒன்று. தனி ஒரு முதலாளித்துவ நாடு கூட இந்த நடைமுறையை இன்னும் செயல்படுத்த வில்லை. ஆனால் இதை வேலைத்திட்டத்தில் எடுத்துக் கவனிப் பது அவசியம்.

இதனால்தான் இதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட தத்து வார்த்த வாதங்கள் ஊற்றுக்கு நில்லா. தமது கருத்துக் களைத் திறம்பட விளக்கக் கூடிய பத்து அல்லது இருபது எழுத்தாளர்களை ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு மணி நேரம் வேலைசெய்யும்படி நம்மால் ஏற்பாடு செய்ய முடியுமானால், அவர்கள் ஒரு மாதத்திற்குள்ளேயே மேலும் சிறந்த, மேலும் முற்றிணக்கமான வேலைத்திட்டத்தைத்

தயாரிப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால் தோழர் பத்பேல்ஸ்கி செய்வது போன்று இதை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள் செய்ய வேண்டும் என்று கோருவது கேலிக் கூத்தாகும். நாம் ஒன்றிரு நாட்களுக்கும் அதிகமாக, இரு வாரங்களுக்கும் கூட அதிகமாக வேலைசெய்தோம். முப்பது பேர்கள் கொண்ட ஒரு கமிஷனைத் தேர்வு செய்து ஒரு மாதத்திற்கு அவர்கள் சில மணி நேரம் தினம் வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்ய முடியுமானால், மேலும் அவர்கள் தொலைபேசி அழைப்புகளால் தொந்தரவுபடுத்தப் படாமல் இருந்தால், அவர்கள் இதை விடவும் ஐந்து மடங்கு சிறந்த ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்குவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை என்று இன்னும் ஒரு முறை சொல்கிறேன். ஆனால் இங்குள்ள யாரும் சாராம்சங்கள் குறித்து மறுத்துரைக்கவில்லை. பண்டப் பொருளாதாரம் மற்றும் முதலாளித்துவத்தின் அடிப்படைக் கூறுகள் குறித்து எதையும் சொல்லாத ஒரு வேலைத்திட்டம் ஒரு மார்க்சிய சர்வதேசிய வேலைத்திட்டமாக இருக்க முடியாது. சர்வதேசியத் தன்மை பெற்றிருக்க வேண்டுமானால் அது ஓர் உலக சோவியத் குடியரசைப் பிரகடனம் செய்வதோ, அல்லது தோழர் பியாத்தக்கோவ் ''நமக்கு தேசங்கள் எதுவும் வேண்டாம், நமக்கு வேண்டுவதெல்லாம் பாட்டாளிகள் அனைவரின் ஒன்றியமே'' என்று சொன்னது போல, தேசங்களை ஒழித்து விடுவதைப் பிரகடனம் செய்வதோ போதுமானதாகாது. இந்தக் கருத்து அற்புதமானதே, இறுதியில் இது நிச்சயம் ஏற்படும் ஆனால் கம்யூனிஸ்டு வளர்ச்சியின் முற்றிலும் வேறான ஒரு கட்டத்தில் இது ஏற்படும். ''1917ல் நீங்கள் பின்தங்கிய நிலையில் இருந்தீர்கள் ஆனால் முன்னேறி வந்திருக்கிறீர்கள்'' என்று ஆதரவுப் பசப்புடனான தொனியில் தோழர் பியாத்தக்கோவ் கூறினார். வேலைத்திட்டத்திற்குள் எதார்த்தத்துடன் முற்றும் பொருந்தியதான சில அம்சங்களைப் புகுத்திய போது நாம் முன்னேறி வந்தோம். தேசங்கள் முதலாளித்துவ வகைப்பட்ட ஜனநாயகத்தில் இருந்து பாட்டாளி வர்க்க அரசாங்கத்துக்கு முன்னேறும் என்று நாம் கூறிய போது மெய்நடப்பான ஒன்றையே

நாம் கூறினேம். 1917ல் நீங்கள் எதை விரும்பினீர்களோ அதன் வெளிப்பாடாக மட்டுமே இது இருந்தது.

நாளுக்கு நாள் முதிர்ச்சி அடைந்து வருவதும், இன்னும் சில மாத காலத்தில் ஒரு வேளை வாழ்வில் நிலவப்போவது மான தோழமை பூர்வமான நம்பிக்கையை, ஒன்றிணைந்த கம்யூனிசத்துக்குத் தேவைப்படுகிற முழுமையான தோழமை பூர்வமான நம்பிக்கையை ஸ்பார்ட்டகிஸ்டுகளிடம் நாம் நிலைநாட்டும் போது அதை வேலைத்திட்டத்தில் பதிவு செய்வோம். ஆனால் அது இன்னும் நிலவாத நிலையில் அதைப் பறை சாற்றுவது என்பது, அவர்களது சொந்த அனுபவமே இன்னும் அவர்களை ஆயத்தம் செய்திராத ஏதோ ஒன்றில் அவர்களை இழுத்துச் செல்வதாகவே இருக்கும். சோவியத் மாதிரி சர்வதேச முக்கியத்துவம் பெற்றுவிட்டது என்று நாம் கூறுகிறோம். தோழர் புஹாரின் பிரிட்டனில் இருக்கும் தொழிலாளர் பிரதிநிதிகள் கமிட்டிகளைக்[103] குறிப்பிட்டார். இவை சரியான சோவியத்துகள் அல்ல. இவை வளர்ந்து வருகின்றன ஆயினும் இவை இன்னும் முதிரா நிலையிலேயே உள்ளன. இவை முழுமையாக மலர்ச்சியுறும் போது ''என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கலாம்.'' ஆனால் ருஷ்யாவின் சோவியத்துகளைப் பிரிட்டிஷ் தொழிலாளர்களுக்கு வழங்கு கிறோம் என்ற வாதம் எல்லா விமரிசனத்துக்கும் அப்பாற் பட்டது.

இப்போது நான் தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய விஷயத்தை எடுத்துக் கவனிக்க வேண்டும். நமது விமர் சனம் இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த உதவியுள்ளது. நமது விமரிசனத்தில் இருந்த குறைபாடு யாதெனில், அது இந்த விஷயத்துக்கு விசேஷமான முக்கியத் துவம் கொடுத்ததேயாகும். இந்த விஷயம் சாரத்தில் வேலைத் திட்டத்தின் பொதுவான கட்டமைப்பில், வேலைத்திட்டத் தின் ஒட்டுமொத்தமான கோரிக்கைகளில் இரண்டாந்தர முக்கியத்துவத்துக்கும் குறைந்த ஒன்றாகும்.

தோழர் பியாத்தக்கோவ் பேசும் போது நான் திகைப் புற்று என்னை நானே கேட்டுக் கொண்டேன்: இது என்ன, வேலைத்திட்டம் மீதான விவாதமா அல்லது இரண்டு நிறுவன

ஒழுங்கமைப்புக் குழுமங்களுக்கு இடையிலான தகராறு? உக்ரேனியக் கம்யூனிஸ்டுகள் ரு.க.க.(போ)இன் மத்தியக் கமிட்டியின் நெறி முறைகளுக்கு இணங்கச் செயல்படுகிறுர் கள் என்று தோழர் பியாத்தக்கோவ் கூறிய போது அவர் அதைச் சொன்ன தொனி குறித்து எனக்கு உறுதிப்பாடு ஏற்படவில்லே. அது என்ன, வருத்தம் தெரிவிப்பா? அப்படி என்று நான் தோழர் பியாத்தக்கோவை சந்தேகிக்கவில்லே. ஆனுல் அவர் கூறியது, நமக்கு மாஸ்கோவில் மிகச் சிறந்த தான மத்தியக் கமிட்டி இருக்கும் போது இந்த சுயநிர்ணய உரிமை ஆகியவற்ருல் எல்லாம் என்ன நன்மை கிடைக்கப் போகிறது என்று கேட்பதற்குச் சரி ஒப்பானதாக இருந்தது. இது குழந்தைத்தனமான கருத்து நிலே. உக்ரேனியா ருஷ்யா விடமிருந்து விதிவிலக்கான புறச் சூழல்கள் காரணமாகப் பிரிக்கப்பட்டது, அங்கு தேசிய இயக்கம் ஆழமாக வேரூன்ற வில்லே. அத்தகைய இயக்கம் ஏதாவது அங்கு இருந்திருப் பின் அதை ஜெர்மானியர்கள் அழித்துவிட்டார்கள். இது உண்மை, விதிவிலக்கான உண்மை. மொழியைப் பொருத்த வரையிலும் கூட இன்றைய உக்ரேனிய மொழி சாமான்ய மக்களின் மொழியா அல்லவா என்பது தெளி வாகத் தெரியவில்லே. இதர தேசங்களின் பெருந்திரளான உழைக்கும் மக்கள் மஹாருஷ்யர்கள் மீது மிகவும் அவ நம்பிக்கை கொண்டிருந்தார்கள், அவர்களே ஒரு குலாக்கு, ஒடுக்குமுறையாளர் தேசிய இனம் என்று கருதினுர்கள். இது உண்மை. மஹா-ருஷ்யர்கள் மீது பகைமை காட்டிய பின்னிஷ் முதலாளித்துவ வர்க்கத்தினர் மத்தியில் ''ஜெர் மானியர் மிகக் கொடூரமான காட்டுமிராண்டிகளாக காணப் பட்டனர், ஆன்டான்டு மேலும் கொடூரமாகக் காணப்பட் டது, நாம் போல்ஷிவிக்குகளே ஏற்றுக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது'' என்ற குரல்கள் அங்கே எழுந்ததாக ஒரு பின்னிஷ் பிரதிநிதி என்னிடம் கூறினுர். தேசியப் பிரச் சினையில் நாம் பின்னிஷ் முதலாளித்துவ வர்க்கத்தின் மீது அடைந்த மாபெரும் வெற்றியாகும் இது. நமது வர்க்க விரோதிகள் என்ற முறையில் அவர்களே எதிர்த்துப் போராடு வதையோ அதற்காகச் சரியான முறைகளேத் தேர்ந்து

கொள்வதையோ இது சிறிதும் தடைப்படுத்தவில்லை. பின்லாந்தை முன் நாளில் ஒடுக்கிவந்த ஜாராட்சி நிலவிய நாட்டில் நிலைநாட்டப் பெற்றுள்ள சோவியத் குடியரசு, தேசங்களின் சுதந்திர உரிமையினைத் தான் மதிப்பதாக உறுதியாகச் சாற்ற வேண்டும். குறுகிய காலமே நிலவிய சிவப்பு பின்னிஷ் அரசாங்கத்துடன் நாம் ஓர் உடன்படிக்கை[104] செய்து கொண்டோம், ஒரு சில பிரதேசச் சலுகைகளை வழங்க ஒத்துக் கொண்டோம். இது குறித்துப் பல படுமோசமான தேசிய வெறித் தன்மை கொண்ட ஆட்சேபங்களையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ''அங்கே அருமையான மீன் வளத்தலங்கள் இருக்கின்றன, அவற்றை நீங்கள் முழுமையாக விட்டுக் கொடுத்து விட்டீர்கள்'' என்ற விதத்தில் இந்த ஆட்சேபங்கள் இருந்தன. இந்த விதமான ஆட்சேபணைகள், ''சில கம்யூனிஸ்டுகளை உள்ளே கீறிப் பாருங்கள் மஹா-ருஷ்ய தேசிய வெறியரைக் காண்பீர்கள்'' என்று சொல்லும்படி என்னைத் தூண்டுகின்றன.

பின்லாந்தின் விஷயமும், பஷ்கீர்களின் விவகாரமும் தேசியப் பிரச்சினையை எடுத்துக் கவனிக்கும் போது எல்லாபுறச் சூழல்களின் கீழும் பொருளாதார ஒற்றுமையை நிறுவ வேண்டும் என்று வாதிக்க முடியாது என்பதைக் காட்டுகின்றன என்று நான் கருதுகிறேன். அது அவசியம் என்பது நிச்சயம்! ஆனால் அதை பிரசாரம் மூலம், கிளர்ச்சி மூலம், சுயவிருப்பமான நேசக் கூட்டணி மூலம் அடைவதற்கு முயலல் வேண்டும். பஷ்கீர்கள் மஹா-ருஷ்யர்கள் மீது அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள், காரணம், மஹா-ருஷ்யர்கள் அதிக கலாசார வளர்ச்சியடைந்தவர்கள், தமது கலாசாரத்தைப் பயன்படுத்தி பஷ்கீர்களைக் கொள்ளையடிக்கிறார்கள் என்பதே. இதனால் தான் அந்தத் தொலைவான இடங்களில் வாழும் பஷ்கீர்களுக்கு ''மஹா-ருஷ்யர்'' என்ற சொல் ''ஒடுக்கு முறையாளர்'', ''மோசக்காரன்'' என்ற சொற்களுடன் ஒரே பொருள் உடையதாக இருக்கிறது. இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும், இதை எதிர்த்துப் போராட வேண்டும். ஆனால் இது ஒரு நீடித்த நடைமுறையாக இருக்கும். ஏனெனில் இதை ஓர் அரசாணையால்

அகற்றிவிட முடியாது. இந்த விஷயத்தில் நாம் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். இதர தேசங்களின் கடுமையான பகைமையைச் சம்பாதித்துக் கொண்டிருக்கும் மஹா-ருஷ்யர்கள் போன்ற தேசிய இனத்தவர் மிகவும் விசேஷமான எச்சரிக்கையைத் தோற்றுவிக்க வேண்டும். இந்த நிலைமைக்குப் பரிகாரம் காண்பது எப்படி என்பதை இப்போதுதான் அறிந்து கொண்டிருக்கிறோம், அதுவும் முழுமையாக அல்ல. உதாரணமாக கல்வித் துறை கமிசாரகத்திலும் அல்லது அதனுடன் தொடர்பு உள்ள அமைப்புகளிலும் கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள். நமது பள்ளிக்கூடங்கள் ஒரே மாதிரியான பள்ளிக்கூடங்கள் என்றும் எனவே ருஷ்ய மொழி தவிர வேறு எந்த மொழியையும் பயிற்றுவிக்கத் துணிய மாட்டா எனவும் அவர்கள் கூறுகிறார்கள்! எனது கருத்துப்படி அத்தகைய ஒரு கம்யூனிஸ்டு மஹா-ருஷ்ய தேசிய வெறியராவர். நம்மில் பலர் இத்தகைய உணர்வுகளுக்கு இடமளித்திருக்கிறோம், இவற்றை எதிர்த்துப் போராட வேண்டும்.

இதனால்தான் நாம் முற்றார்வமுடைய சர்வதேசியவாதிகள் எனவும் எல்லா தேசங்களின் தொழிலாளர், விவசாயிகளின் சுயவிருப்பமான நேச அணிக்காகப் பாடுபட்டு வருவதாயும் இதர தேசங்களிடம் நாம் கூற வேண்டும். இது போர்களைச் சிறிதளவும் தவிர்த்து விடாது. போர் என்பது இன்னொரு விஷயம், அது ஏகாதிபத்தியத்தின் சாரத்தில் இருந்தே தோன்றுகிறது. நாம் வில்சனை எதிர்த்துப் போராடுகிறோம் என்றால், வில்சன் சிறிய தேசத்தைத் தனது கருவியாகப் பயன்படுத்துகிறார் என்றால் நாம் அந்தக் கருவியை எதிர்ப்போம் என்று கூறுகிறோம். இதிலிருந்து வித்தியாசப்பட்ட எதையும் நாம் என்றுமே சொன்னதில்லை. ராணுவப் பலம் இல்லாமல் ஒரு சோஷலிஸ்டு குடியரசு நிலவ முடியும் என்று நாம் என்றுமே சொன்னது கிடையாது. குறிப்பிட்ட சில புறச் சூழல்களின் கீழ் போர் அவசியமாக இருக்கலாம். ஆனால் இப்போது தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்ற பிரச்சினையின் சாரம், பல்வேறு தேசங்கள் ஒரே வரலாற்றுத் திசைவழியில் முன்னேறி வருகின்றன ஆனால் மிகவும் வேறு

பட்ட வளைவு நெளிவான கிளைவழிகளில் முன்னேறி வருகின்றன என்பதும், அதிகக் கலாசார வளர்ச்சியுள்ள தேசங்கள் குறைவான கலாசார வளர்ச்சியுள்ள தேசங்களில் இருந்து வேறுபட்ட பாதைகளில் இயங்கி வருவது கண்கூடு என்பதும் ஆகும். பின்லாந்து வேறு ஒரு வழியில் முன்னேறியது. ஜெர்மனி பிறிதொரு வழியில் முன்னேறி வருகிறது. நமக்கு ஒற்றுமை தேவை என்று கூறும் போது தோழர் பியாத்தக்கோவ் ஆயிரம் தடவை சரியானதையே சாற்றுகிறார். ஆனால் இதற்கு நாம் பிரசாரத்தின் வழியே, கட்சியின் செல்வாக்கு மூலம், ஐக்கியத் தொழிற்சங்கங்களை நிறுவுவதன் மூலம் பாடுபட வேண்டும். இங்கும் கூட நாம் ஒரு மாறாநிலை மாதிரியில் செயல்படக் கூடாது. இந்த ஷரத்தை அகற்றிவிடவோ அல்லது இதை வேறுவிதமாக முறைப்படுத்தி முன்வைக்கவோ செய்வோமானால் நாம் வேலைத்திட்டத்தில் இருந்து தேசியப் பிரச்சினையை நீக்கிவிட்டவர்களாவோம். பிரத்தியேக தேசியத் தனி இயல்புகள் இல்லாத மக்களே இருப்பார்களாயின் அங்கு இவ்வாறு செய்யலாம். ஆனால் அப்படிப்பட்ட மக்கள் இல்லை, சோஷலிஸ்டு சமூக அமைப்பை நாம் வேறு எந்த வழியிலும் கட்ட முடியாது.

தோழர்களே, இங்கு முன்மொழியப்பட்ட இந்த வேலைத் திட்டம் ஓர் அடிப்படை என்ற முறையில் ஒப்புக்கொள்ளப்பட்டு ஒரு கமிஷனிடம் ஆய்வுக்காக ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கருதுகிறேன். இந்தக் கமிஷன் எதிர்த்தரப்பு பிரதிநிதிகளை, அல்லது மேலும் சரியாகச் சொன்னால் நடைமுறை யோசனைகள் முன்வைத்த தோழர்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் விரிவுபடுத்தப்பட வேண்டும். இந்தக் கமிஷன் 1) வரிசைப்படுத்தப்பட்ட நகல் திட்டத்திற்கான திருத்தங்கள், 2) உடன்பாடு ஏற்பட இயலாமற் போன தத்துவார்த்த ஆட்சேபங்கள் ஆகியவற்றை முன்வைக்க வேண்டும். இந்த விஷயத்தைப் பரிசீலிப்பதற்கான மிகவும் நடைமுறை சார்ந்த வழியும், சரியான முடிவுக்கு மிகவும் துரிதமாக இட்டுச் செல்லும் வழியும் இதுவே என்று நான் கருதுகிறேன். (கரவொலி.)

3

நாட்டுப்புறப் பகுதிகளில் நடந்த வேலை பற்றிய அறிக்கை மார்ச் 23

(நீடித்த கரவொலி.) தோழர்களே, நாட்டுப்புறப் பகுதிகளில் வேலை செய்யும் விஷயத்தைக் கவனிப்பதற்கென்று காங்கிரசால் தேர்வு செய்யப்பட்ட கமிட்டியின் எல்லாக் கூட்டங்களிலும் என்னுல் கலந்து கொள்ள இயலாது போனது குறித்து நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். எனவே எனது அறிக்கை, துவக்க முதலே இக்கமிட்டியின் பணிகளில் பங்கு பற்றி வந்துள்ள தோழர்களின் உரைகளால் நிறைவு செய்யப்படும். இக்கமிட்டி இறுதியாக ஆய்வுரைகளைத் தயாரித்தது, இவை கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டன, இவை பற்றி உங்களுக்கு அறிக்கை செய்யப்படும். கமிட்டியின் வேலையைத் தொடர்ந்து நம்முன் எதிர்ப்பட்டதும், எனது கருத்துப்படி இப்போது கட்சி முழுவதையும் எதிர்ப்பட்டிருப்பதுமான இந்த விஷயத்தின் பொதுவான உட்பொருளை நான் விரித்துரைக்க விரும்புகிறேன்.

தோழர்களே, பாட்டாளி வர்க்கப் புரட்சி வளர்ச்சியடைவதோடு, ஒன்றுக்கு பின் இன்னென்ருக சமுதாய வாழ்க்கையின் மிகவும் சிக்கலான முக்கியமான பிரச்சினைகளை முன்னணியில் வைக்க வேண்டி இருப்பது முற்றிலும் இயல்பானதே. வாழ்க்கையின் ஆக ஆழமான அடித்தளங்களையும் மக்கள் தொகையின் மிகவும் பரவலான திரளையும் பாதிப்பதும், நிச்சயமாயும் பாதிக்கப் போவதுமான ஒரு புரட்சியில், தனி ஒரு கட்சியோ, தனி ஒரு அரசாங்கமோ அது மக்களுக்கு எவ்வளவுதான் நெருங்கியதாக இருந்த போதிலும் சரி, வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் தழுவியதாக ஒருமிக்க விளங்குவது சாத்தியமல்ல என்பது முழுமையாயும் இயல்பானதே. இப்போது நாம் நாட்டுப்புறப் பகுதிகளிலான வேலை விஷயமாக எடுத்துக் கவனிக்க வேண்டி

இருக்குமானால், இந்த விஷயம் தொடர்பாக நடுத்தர விவசாயிகளின் நிலைமைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டி இருக்குமானால், பொதுவாக பாட்டாளி வர்க்கப் புரட்சி வளர்ச்சியின் பார்வை நிலையில் இருந்து இதில் விசித்திரமானதோ அசாதாரணமானதோ எதுவும் கிடையாது. பாட்டாளி வர்க்கப் புரட்சி இரு பகைமை வர்க்கங்களுக்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான அடிப்படை உறவில் இருந்து துவங்கியே தீர வேண்டி இருப்பது இயல்பே. இதன் முதன்மையான பணி ஆட்சி அதிகாரத்தைத் தொழிலாளி வர்க்கத்துக்கு மாற்றி வழங்குவதும், அதன் சர்வாதிகாரத்தை உறுதியாக நிலைநாட்டுவதும், முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி அதன் ஆட்சி அதிகாரத்தின் பொருளாதார ஆதாரங்களை இழக்கும்படி செய்வதுமாகும். இந்த ஆதாரங்கள் பொதுவாயும் எல்லா விதமான சோஷலிஸ்டு நிர்மாணத்துக்கும் இடையூறாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நாம் மார்க்சியத்தோடு அறிமுகப்பட்டிருப்பதன் காரணமாக பின்வரும் ஆய்வுரையின் மெய்மையை ஒரு கணங்கூடச் சந்தேகித்தது இல்லை: முதலாளித்துவ சமுதாயத்தின் மெய்யான பொருளாதாரக் கட்டமைப்பின் விளைவாக அந்தச் சமுதாயத்தில் ஒன்று பாட்டாளி வர்க்கம் அல்லது முதலாளித்துவ வர்க்கமே நிச்சயமாயும் தீர்மானகரமான அம்சமாக இருக்கலாம். முன்னாள் மார்க்சியவாதிகள் பலர்—உதாரணமாக மென்ஷிவிக் முகாமில் இருப்பவர்கள்—பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான தீர்மானகரமான போராட்டம் நடக்கும் காலப்பகுதியில் பொதுவான ஜனநாயகம் நிலவ முடியும் என்று அடித்துக் கூறுவதை இப்போது நாம் பார்க்கிறோம். சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடன் பூரண உடன்பாட்டுக்கு வந்திருக்கும் மென்ஷிவிக்குகள் கூறியது இதுவே. தமக்கு மிகவும் வசதிப்பட்ட போது முதலாளித்துவ வர்க்கம் தானே ஜனநாயகத்தை உருவாக்குவதும் அல்லது ஒழித்தகற்றுவதும் நடக்கவில்லை போலும்! இது இவ்வாறு இருப்பதால், முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே கடுமை

யான போராட்டம் நடைபெறும் காலத்தில் பொதுவான ஜனநாயகம் என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை. இந்த மார்க்சியவாதிகள் அல்லது போலி மார்க்சியவாதிகள்—உதாரணமாக நமது மென்ஷிவிக்குகள்—எவ்வளவு வேகமாகத் தம்மைத் தாமே அம்பலப்படுத்திக் கொள்கின்றனர் என்பதும், அவர்களது மெய்யான இயல்பு, குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் இயல்பு எவ்வளவு வேகமாக வெளிப்பட்டு மேலே வந்துவிடுகிறது என்பதும் மலைப்பூட்டுவதாக உள்ளன.

மார்க்ஸ் தமது வாழ்நாள் பூராவும் எல்லாவற்றுக்கும் முக்கியமாக இந்தக் குட்டி முதலாளித்துவ ஜனநாயகம் மற்றும் முதலாளித்துவ ஜனநாயகவாதத்தின் பிரமைகளை எதிர்த்தே போராடினர். தொழிலாளர்களுக்குப் பட்டினி கிடந்து சாகும் சுதந்திரம் அல்லது தனது உழைப்பு சக்தியை விற்பனை செய்பவருக்கும் பகிரங்க மார்க்கெட்டில் அந்த உழைப்பை இஷ்டப்படி சமத்துவ அடிப்படையில் வாங்குவது போல தோற்றமளிக்கும் முதலாளிக்கும் இடையிலான சமத்துவத்தைத் திரையிட்டு மறைக்கும் இந்த சுதந்திரம் மற்றும் சமத்துவம் பற்றிய வெற்றுப் பேச்சை எல்லாவற்றையும் விட முக்கியமாக மார்க்ஸ் இழித்துரைத்தார். தனது பொருளாதார நூல்கள் எல்லாவற்றிலும் மார்க்ஸ் இதை விளக்கினர். முதலாளித்துவ சமூக அமைப்பின் அடிப்படை சக்திகள் முதலாளித்துவ வர்க்கமும் தொழிலாளி வர்க்கமும் ஆக இருக்கின்றன, கட்டாயமாக இருக்க வேண்டும். இந்த முதலாளித்துவ சமூக அமைப்பின் நிர்மாணி என்ற முறையில், அதன் தலைவன் என்ற முறையில், அதன் உந்து சக்தியாக முதலாளித்துவ வர்க்கமும், அதன் புதைக்குழியைத் தோண்டும் சக்தியாக, அதை அகற்றி மாற்றீடு செய்யும் ஆற்றல் கொண்ட ஒரே சக்தி என்ற முறையில் பாட்டாளி வர்க்கமும் விளங்குகின்றன. இந்த உண்மையை விளக்குவதற்காகவே மார்க்சின் மூலதனம் நூல் முழுதும் ஈடுபடுத்தப் பட்டுள்ளது என்று சொல்லலாம். இதற்காக ஈடுபடுத்தப் படாத தனி ஒரு அத்தியாயத்தைக் கூட மார்க்சின் நூல்கள் எதிலும் காண முடியாது. இரண்டாம் அகிலத்

திலுள்ள அனைத்து சோஷலிஸ்டுகள், இந்த உண்மையைத் தாம் புரிந்து கொண்டிருப்பதாக தொழிலாளர்களிடம் எண்ணற்ற முறை சபதம் எடுத்தும் ஆணையிட்டு உறுதி கூறியும் வந்துள்ளனர் என்று கூறலாம். ஆனால், காரியங்கள் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையே ஆட்சி அதிகாரத்துக்கான போராட்டத்தின் மெய்யான தீர்மானகரமான கட்டத்தை எட்டியபோது, நமது மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் உலகம் முழுதுமான பழைய சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர்களும் இந்த உண்மையை மறந்து பொதுவான ஜனநாயகவாதம் பற்றிய அற்பவாதத் தொடர்களை அறவே கிளிப்பிள்ளை பாணியில் உருவிடத் தொடங்கினர்கள் என்பதைக் காண்கிறோம்.

''ஜனநாயகத்தின் சர்வாதிகாரம்'' பற்றிப் பேசுவது மூலம் இந்தச் சொற்களுக்கு மேலும் ''அதிக சக்தி'' வழங்குவதாகக் கருதி சில சமயம் முயற்சிகள் செய்யப்படுகின்றன. இது படுமோசமான முட்டாள்தனம். ஜனநாயக முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரம், எதிர்த்து எழுந்த தொழிலாளர்களை ஒடுக்கும் கருவியே தவிர வேறு எதுவும் அல்ல என்பதை வரலாற்றில் இருந்து மிகவும் நன்ருக அறிவோம். 1848 முதல் இது இவ்வாறே இருந்து வந்துள்ளது. எப்படியும் அவ்வாண்டுக்குப் பின்பு அல்ல, ஆனல் இதற்கும் முன்பும் கூட தனிப்பட்ட உதாரணங்கள் காண முடியும். துல்லியமாயும் ஒரு முதலாளித்துவ ஜனநாயகத்தில் தான் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான மிகவும் கடுமையான போராட்டம் விரிவாகவும் சுதந்திரமாகவும் வளர்கிறது என்பதை வரலாறு காட்டுகிறது. இந்த உண்மையை நடைமுறையில் கண்டு நமக்கு நாமே உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இருந்தது. 1917 அக்டோபருக்குப் பிறகு சோவியத் அரசாங்கம் மேற்கொண்டதான நடவடிக்கைகள் எல்லா அடிப்படையான பிரச்சினைகளிலும் அவற்றின் உறுதித்தன்மையினைச் சிறப்பியல்பாகக் கொண்டிருந்தன. இதற்குத் துல்லியமான காரணம் நாம் இந்த உண்மையில் இருந்து

என்றுமே திசைதிரும்பவில்லை என்பதும் இதனை என்றுமே மறக்கவில்லை என்பதும் ஆகும். முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து மேலதிகாரத்துக்காக நடத்தப்பட்ட போராட்டத்தின் பிரச்சினையை ஒரு வர்க்கத்தின்—பாட்டாளி வர்க்கத்தின்—சர்வாதிகாரம் மூலம் மட்டுமே தீர்க்கப்பட முடியும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் மட்டுமே முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடிக்க முடியும். பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்த முடியும். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் மக்களின் ஆதரவைப் பெறுவது என்பதும் பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே முடியும்.

முதலாளித்துவ வர்க்கம் வீழ்த்தப்பட்டு அரசியல் ஆட்சி அதிகாரம் பாட்டாளிகளின் கரங்களில் ஏற்கெனவே இருக்கும் போது, கம்யூனிசத்தை இனிமேற்பட கட்டிவளர்ப்பதில் நாம் நடுத்தர இடைத்தட்டு நபர்களின் பங்கேற்பு இல்லாமல் தொடர்ந்து செயல்படலாம் என்பது இதிலிருந்து அடுத்து நிகழும் என்பது எவ்வகையிலும் சாத்தியமல்ல, அவ்வாறு நிகழும் என்று கருதுவது அளவிடற்கரிய தவறாகும்.

இந்தப் புரட்சியின்—பாட்டாளி வர்க்கப் புரட்சியின்—துவக்கத்தில் இதில் செயலூக்கமுடன் பங்குபற்றுவோர் அனைவரின் கவனமும் பிரதானமான அடிப்படையான பிரச்சினைகள் மீது ஒருமுகப்படுத்தப்பட்டிருப்பது இயல்பே. பாட்டாளி வர்க்கத்தின் மேலாதிக்கம், முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து வெற்றிபெற்று அந்த மேலாதிக்கத்தை உறுதியாக நிலைநாட்டுவது, அதாவது முதலாளித்துவ வர்க்கம் நிச்சயமாயும் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைப் பெற முடியாதபடி செய்தல் ஆகியவையே இந்தப் பிரச்சினைகள். இதர நாடுகளில் அவர்கள் வைத்திருக்கும் செல்வம் அல்லது அவர்களிடம் இருக்கும் பண உருவிலான—சில சமயங்களில் நமது நாட்டிலேயே கூட—செல்வம் மூலம் கிடைக்கும் சாதகங்களை முதலாளித்துவ வர்க்கத்தினர் இன்னும் அனுபவித்து வருகிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். பாட்டாளிகளை விடவும் அதிக அனுபவப்பட்ட சமுதாய

சக்திகள் இருக்கின்றன என்பதையும் அவை முதலாளித்துவ வர்க்கத்துக்கு உதவி புரிகின்றன என்பதையும் நாம் நன்ருக அறிவோம். மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்குத் திரும்பி வருவது என்ற எண்ணத்தை முதலாளித்துவ வர்க்கத்தினர் இன்னும் கைவிட்டு விடவில்லை என்பதையும், தமது மேலாதிக்கத்தை மீட்டு நிலைநாட்டுவதற்கான தமது முயற்சிகளை நிறுத்திவிடவில்லை என்பதையும் நாம் நன்ருக அறிவோம்.

ஆனல் எல்லாம் இதோடு முடிந்துவிடவில்லை. ''எங்காயினும் சரி எனக்கு நன்மை என்ருல் அது எனது நாடு'' என்ற கோட்பாட்டை முதலாளித்துவ வர்க்கத்தினர் மிகவும் விடாப்பிடியாக முன்வைக்கின்றனர். பணம் சம்பந்தப்பட்ட வரை அவர்கள் எப்போதும் சர்வதேசத்தன்மை வாய்ந்தவர்கள். சர்வதேசிய ரீதியில் முதலாளித்துவ வர்க்கத்தினர் இன்னும் நம்மைவிட அதிக பலமுடையவர்களாகவே இருக்கின்றனர். அவர்களது மேலாதிக்கம் வேகமாக அரித்தழிக்கப்படுகிறது. ஹங்கேரிய புரட்சி போன்ற மெய் நடப்புக்களை அவர்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. இந்தப் புரட்சியைப் பற்றி நேற்று மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறிவித்தோம், இன்றும் அதைப் பற்றி ஊர்ஜிதம் செய்யும் தகவல்கள் நமக்கு வந்துள்ளன. முதலாளி வர்க்கத்தினர் தமது மேலாதிக்கத்துக்கு ஆட்டம் கண்டுவிட்டது என்பதைப் புரிந்துகொள்ளத் தொடங்கியிருக்கிருர்கள். அவர்கள் செயல்படும் சுதந்திரத்தை அனுபவிக்கிறதில்லை. உலக அளவிலான பொருள்வகை சாதனங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்வோமானல், பொருள்வகை சம்பந்தப்பட்ட வரை முதலாளித்துவ வர்க்கத்தினர் நம்மைக் காட்டிலும் இன்னும் அதிக வலிவுடன் இருக்கிருர்கள் என்பதை ஒப்புக்கொள்ளாது இருக்க முடியாது.

இதனல் தான் இந்த அடிப்படை விஷயத்தில், முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவது, பாட்டாளிகள் ஆட்சி அதிகாரத்தினை நிறுவுவது, முதலாளித்துவ வர்க்கத்தினர் மீண்டும் ஆட்சியதிகாரம் பெறுவதற்கான எல்லா சாத்தியக்கூறுகளையும் ஒழிப்பது என்ற காரியத்தில் நமது கவனத்தின், நமது நடைமுறைச் செயல்பாட்டின் பத்தில் ஒன்பது

பாகம் ஈடுபட்டிருந்தது, ஈடுபட வேண்டியிருந்தது. இது முற்றிலும் இயல்பானது, சட்டப் பூர்வமானது, தவிர்க்க முடியாதது, இத்துறையில் பல வெற்றிகள் ஏற்பட்டன.

எனினும் இப்போது மக்கள் தொகையின் இதர பிரிவுகள் குறித்த விஷயத்திற்கு வருவோம். இப்போது நாம் நடுத்தர விவசாயிகள் பற்றிய பிரச்சினையை முழுமையாயும் கவனிக்க வேண்டும். இது விவசாயிக் கமிட்டியில் ஒருமுகமான தீர்ப்பாக இருந்தது, அவர்களது கருத்துக்களை அப்படியே நாம் தொகுத்தளித்திருப்பதால் கட்சி ஊழியர்கள் அனைவரும் இதை ஒத்துக் கொள்வார்கள் என்பதில் நமக்கு நம்பிக்கை உண்டு.

நமது புரட்சி மேற்கொண்டுள்ள பாதையினை ஆராய்ந்து பார்க்காமல், நம்முன் எதிரிடும் பணிகள் குறித்துச் சிந்தித்துப் பார்க்காமல், இவை அனைத்தையும் செய்யாமல் சோவியத் அரசாங்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கையையும் மென்ஷிவிக்குகள் மற்றும் வலதுசாரி சோஷலிஸ்டுபுரட்சியாளர்களைப் போன்ற கனவான்களின் மாதிரியில் ஏளனத்துக்கும் விமர்சனத்துக்கும் இலக்காக்கும் பேர்வழிகள் இருக்கிறார்கள். இவர்கள் நமக்கும் முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்துக்கும் இடையே ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டும் என்பதை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. இந்த நபர்கள் விஷயத்தில் நாம் மாபெரும் பொறுமையை, சலுகையைக் கூட வெளிப்படுத்தியிருக்கிறோம். நமது சலுகையை அனுபவிப்பதற்கு மீண்டும் ஒரு முறை அவர்களை அனுமதிப்போம். ஆனால் மிகவும் அண்மை எதிர்காலத்தில் நமது பொறுமைக்கும் சலுகைக்கும் ஒரு வரம்பு விதிப்போம். அவர்கள் எதையும் தேர்ந்து கொள்ளாத பட்சம் கல்ச்சாக்கிடம் போய்விடும்படி காரியமாகவே அவர்களிடம் சொல்லி விடுவோம். (கரவொலி.) இத்தகைய பேர்வழிகளிடமிருந்து விசேஷமாயும் மிடுக்கான அறிவுத்திற ஆற்றல்களை நாம் எதிர்பார்க்கவில்லை. (சிரிப்பு.) கல்ச்சாக்கின் மிருகத்தனமான செயல்களை அனுபவப்பட்ட பிறகு, அவர்கள் நமக்கும் கல்ச்சாக்குக்கும் இடையே ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டும் என்று கோர நமக்கு உரிமை உண்டு என்

பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கலாம் அல்லவா. அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்த முதல் சில மாதங்களின் போது, பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் என்பது உறுதியற்றது, தற்காலிகமானது என்று நம்பும் அளவுக்கு மதிகெட்ட வெகுளித்தனமான பேர்வழிகள் பலர் இருந்தார்கள் என்ருல், சர்வதேசிய முதலாளித்துவ வர்க் கம் அனைத்தின் தாக்குதல் காரணமாக இப்போது நடத்தப் பட்டுவரும் போராட்டத்தில் தர்க்க ரீதியாக அவசியம் என்று கருதப்படும் சில அம்சங்கள் இருப்பதை இன்று மென் ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் கூடக் கட் டாயம் புரிந்து கொள்ள வேண்டும்.

உள்ளபடியே இரண்டு சக்திகள் மட்டுமே உருவாக்கப் பட்டுள்ளன—முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம். மார்க்சிடம் இருந்து இதைப் படித்துத் தெரிந்து கொள்ளாதவர்கள் யாராயினும் சரி, மாபெரும் சோஷலிஸ்டுகள் அனைவரின் நூல்களில் இருந்து இதைப் படித்துத் தெரிந்து கொள்ளா தவர்கள் யாராயினும் சரி, அவர் என்றுமே சோஷலிஸ் டாக இருந்திருக்க முடியாது, அவர் சோஷலிசம் பற்றி எதை யுமே புரிந்து கொண்டிருக்க முடியாது, சோஷலிஸ்டு என்று பெயர் சொல்லிக் கொண்டு மட்டுமே இருக்க முடியும். இந்த நபர்களுக்குச் சிந்தித்துப் பார்ப்பதற்காக ஒரு குறுகிய காலாவகாசம் அனுமதிப்போம், தமது முடிவைச் செய்யும் படி கோருவோம். ‘‘போல்ஷிவிக்குகள் நடுத்தர விவசாயி கள் பற்றிய பிரச்சினையை எழுப்பியிருக்கிருர்கள், அவர் களிடம் நட்பை நாடி அணுக விரும்புகிருர்கள்’’ என்று அவர்கள் இப்போது சொல்கிருர்கள் அல்லது சொல்வார் கள் என்ற காரணத்தால்தான் அவர்களை நான் இங்கு குறிப் பிட்டேன். இந்த வகையானதும் இதைவிட மிக மோசமா னதுமான வாதங்களுக்கு மென்ஷிவிக் பத்திரிகைகளில் பெரு மளவு இடமளிக்கப்படுகிறது என்பதை நான் மிகவும் நன் ருக அறிவேன். இத்தகைய வாதங்களை நாம் புறக்கணிக் கிருேம், நமது விரோதிகளின் பிதற்றல்களுக்கு என்றுமே முக்கியத்துவம் தருவதில்லை. முதலாளித்துவ வர்க்கத்துக்

கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே போகவர ஓடிக் கொண்டிருப்பதற்கு இன்னமும் இயலுகிற பேர்கள் தாம் விரும்பியபடி எதையும் சொல்லலாம். நாம் நமது சொந் தப் பாதையையே பின்பற்றுகிறோம்.

நமது பாதை எல்லாவற்றுக்கும் மேலாக சக்திகளின் வர்க்க முக்கியத்துவத்தை வைத்தே நிர்ணயிக்கப்படுகிறது. முதலாளித்துவ சமூக அமைப்பில் முதலாளித்துவ வர்க்கத் துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே போராட் டம் வளர்ந்து வருகிறது. அந்தப் போராட்டம் முடிவுறாத காலம் வரை நாம் இறுதிவரையில் போராடி முடிப்பதில் நமது ஆர்வமிக்க கவனத்தைச் செலுத்துவோம். அந்தப் போராட்டத்தில் ஏற்கெனவே பெருமளவு நிறைவேற்றப் பட்டிருந்த போதிலும், அது இன்னும் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. சர்வதேச முதலாளித்துவத்தின் கரங்கள் விருப்பம் போலச் செயலாற்றும் நிலையில் இல்லை. இதற்கு ஆகச் சிறந்த சான்று ஹங்கேரியப் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடைபெற்று இருப்பதே. எனவே, ஆட்சி அதிகாரத் திற்கான போராட்டத்தின் அடிப்படையான கோரிக்கைக்கு பிற அனைத்தும் குறைந்த முக்கியத்துவம் உடையனவாகத் தாழ்த்தப்பட்ட போது நாட்டுப்புறத்தில் நிறுவன ஒழுங் கமைப்பு வேலை எந்த வரம்புகளுக்குள் கட்டுப்பட்டு இருந் ததோ அதை விஞ்சி வெகு தொலைவுக்கு ஏற்கெனவே முன் னேறிவிட்டது என்பது தெளிவு.

இந்த ஒழுங்கமைப்பு வேலை இரண்டு பிரதான கட்டங் களைக் கடந்து சென்றது. 1917 அக்டோபரில் நாம் முழு மையாயும் விவசாயிகளுடன் சேர்ந்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினோம். நாட்டுப்புற வட்டாரங்களில் வர்க்கப் போராட்டம் இன்னும் வளர்ச்சி அடையவில்லை என்ற அள வில் இது முதலாளித்துவ வகைப்பட்ட புரட்சியேயாகும். நான் கூறியிருப்பது போல நாட்டுப்புற வட்டாரங்களில் பாட்டாளி வர்க்கப் புரட்சி 1918 கோடையில் மட்டுமே ஆரம்பமாயிற்று. இந்தப் புரட்சியைக் கிளர்த்தி விடுவதில் நாம் வெற்றி பெறாமல் போயிருந்தோமானால், நமது பணி முழுமையடைந்திருக்காது. முதல் கட்டம் நகரங்களில் ஆட்சி

அதிகாரம் கைப்பற்றப்பட்டதும், சோவியத் வடிவிலான அரசாங்கம் நிலைநாட்டப்பட்டதுமாகும். இரண்டாவது கட்டம் எல்லா சோஷலிஸ்டுகளுக்கும் அடிப்படையானது, இது இல்லையேல் சோஷலிஸ்டுகள் சோஷலிஸ்டுகளாக இருக்க முடியாது, அதாவது நாட்டுப்புற வட்டாரங்களில் இருந்த பாட்டாளி வர்க்க, அரைப் பாட்டாளி நபர்களை திரட்டி எடுத்து, நாட்டுப்புறப் பகுதியில் இருக்கும் முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் போராட நகரப்புறப் பாட்டாளிகளுடன் ஒன்று சேர்ப்பதாகும். இந்த கட்டமும் பெருமளவுக்கு முழுமை பெற்றுவிட்டது. இந்த நோக்கத்துக்காக நாம் ஆரம்பத்தில் உருவாக்கிய ஏழை விவசாயிகள் கமிட்டிகள் கெட்டிப்பட்டு விட்ட நிலையில் அவற்றை சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சோவியத்துகளால் மாற்றீடு செய்வது சாத்தியம் என்று கண்டோம். அதாவது கிராமத்து சோவியத்துகளை மறு சீரமைத்து அவற்றை நாட்டுப்புற வட்டாரங்களிலான வர்க்க ஆதிக்கத்தின் உறுப்புக்களாக, பாட்டாளி வர்க்க ஆட்சி அதிகாரத்தின் உறுப்புக்களாகச் செய்வது சாத்தியம் என்று கண்டோம். சில காலம் முன்பு மத்திய நிர்வாகக் கமிட்டியால் நிறைவேற்றப்பட்டதும், எல்லோருக்கும் அறிமுகமானதுமான சோஷலிஸ்டு நிலவுரிமை மற்றும் சோஷலிஸ்டு பயிர்ச்சாகுபடி முறைக்கு மாறிச் செல்வதற்கான நடவடிக்கைகள் பற்றிய சட்டம்[105] போன்ற செயல்கள்தான் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கருத்துக் கோணத்தில் இருந்து நமது அனுபவத்தைத் தொகுத்தளிக்கின்றன.

பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பிரதான அம்சத்தை, முதன்மையானதும் அடிப்படையானதுமான கடமையை நாம் ஏற்கெனவே நிறைவேற்றி முடித்து விட்டோம். இதை நாம் நிறைவேற்றி முடித்திருப்பதன் காரணமாகவே நடுத்தர விவசாயிகள் பாலான நமது உறவுநிலை என்ற மேலும் சிக்கலான பிரச்சினை முன்னணிக்கு வந்துள்ளது. இந்தப் பிரச்சினைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் நமது அரசாங்கத்தின் நிலை பலவீனப்படுவதன் அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பலவீனப்படுவதன் அறிகுறியை எந்த வழி

யிலாவது சுட்டும், இது பகுதியளவில் இருப்பினும், மிகச் சிறிதாக இருப்பினும் நமது அடிப்படைக் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டதன் அறிகுறியைச் சுட்டும் என்று எவரே னும் கருதுவாரேயானுல், அவர் பாட்டாளி வர்க்கத்தின் நோக்கத்தையும், கம்யூனிஸ்டு புரட்சியின் நோக்கங்களையும் புரிந்து கொள்ள முற்றும் தவறியவராவார். அத்தகைய பேர்கள் எவரும் நமது கட்சியில் இல்லை என்று உறுதியாக நம்புகிறேன். இந்த விதமாகப் பேசும் தொழிலாளர் கட்சி யைச் சேராத நபர்களுக்கு எதிராக நமது தோழர்களை எச் சரிக்கை செய்யவே விரும்பினேன். அவர்கள் ஏதேனும் குறிப் பிட்ட கருத்துக்களை அனுசரித்து வருகிறுர்கள் என்ற கார ணத்தால் அல்ல, ஆனுல் அவர்கள் நமது காரியங்களைக் கெடுத்து வெண்காவலர்களுக்கு உதவி செய்யவே விரும்பு கிறுர்கள் என்ற காரணத்தால்தான், இதை மேலும் எளிது படச் சொன்னுல், அவர்கள் எப்போதும் ஊசலாடிவரும், ஊசலாடாமல் இருக்க இயலாத, இன்னும் ஓரளவு நீண்ட காலம் தொடர்ந்து ஊசலாடப்போகும் நடுத்தர விவசாயி களை நமக்கு எதிராகத் தூண்டிவிடும்படிதான் அப்படிப் பேச போகிறுர்கள். நடுத்தர விவசாயிகளை நமக்கு எதிராகத் தூண்டிவிடுவதற்காக அவர்கள் சொல்வார்கள்: ''பாருங் கள், அவர்கள் உங்களைத் தாஜா பண்ண வருகிறுர்கள்! இதன் பொருள் உங்களது கலகங்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு விட்டார்கள் என்பதாகும், அவர்கள் தடுமாற் றம் அடையத் தொடங்கி விட்டார்கள்'' இத்தியாதி. இந்த வகையான கிளர்ச்சிப் பிரசாரத்தை எதிர்த்து உரிய சாத னங்களை நமது தோழர்கள் எல்லோரும் வைத்திருக்க வேண் டும். அவர்கள் வைத்திருப்பார்கள் என்று நிச்சயமாயும் நம்புகிறேன். இந்த விஷயத்தை நாம் வர்க்கப் போராட் டத்தின் பார்வைநிலையில் இருந்து செயற்படுத்துவதில் வெற்றியடையும் பட்சத்தில் இது சாத்தியமாகும்.

நடுத்தர விவசாயிகளின் பாலான பாட்டாளி வர்க்கத்தின் உறவுநிலையை எவ்வாறு துல்லியமாக வரையறுப்பது எனும் இந்த அடிப்படையான பிரச்சினை மிகவும் சிக்கலானது மட்டுமல்ல அவசரமான பிரச்சினையும் கூட என்பது

தெளிவு. தோழர்களே, மிகப் பெரிய பெரும்பான்மையான தொழிலாளர்களால் முற்றும் தன்வயப்படுத்தப் பெற்றுள்ள தத்துவார்த்தக் கருத்து நிலையில் இருந்து இந்த விஷயம் மார்க்சியவாதிகளுக்கு எவ்விதச் சங்கடத்தையும் தரவில்லை. காவுத்ஸ்கி மார்க்சின் போதனைகளைப் பிழையின்றி விளக்கி வந்த சமயம், இந்தத் துறையில் மறுக்க முடியாத ஒரு நிபுணராகக் கருதப்பட்டு வந்த சமயம் விவசாயப் பிரச்சினை குறித்து அவர் எழுதிய நூலில் முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வது தொடர்பாக சோஷலிஸ்டுக் கட்சியின் கடமை விவசாயிகளை நடுநிலைப்படுத்தலே என்று கூறுகிறார். அதாவது, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையேயான போராட்டத்தில் விவசாயி நடுநிலைமையாக இருத்தல் வேண்டும், நமக்கு எதிராக முதலாளித்துவ வர்க்கத்துக்கு செயலூக்கமான உதவி வழங்க இயலாதபடி இருத்தல் வேண்டும்.

முதலாளித்துவ ஆட்சியின் மிகவும் நீண்டதான காலப் பகுதி பூராவும் விவசாயிகள் முதலாளித்துவ வர்க்கத்தினரைச் சார்ந்து நின்று அவர்களது ஆட்சி அதிகாரத்தை ஆதரித்தார்கள். முதலாளித்துவ வர்க்கத்தினரின் பொருளாதார வலிமையையும் அவர்களது ஆதிக்கத்தின் அரசியல் கருவிகளையும் பற்றி எண்ணிப் பார்த்தால் இதைப் புரிந்து கொள்ள முடியும். நடுத்தர விவசாயி நமது பக்கம் உடனே வந்து விடுவான் என்று கருத முடியாது. ஆனால் நாம் சரியான கொள்கையைப் பின்பற்றுவோமானால், சில காலத்துக்குப் பின் இந்த ஊசலாட்டங்கள் இல்லாதாகும் விவசாயி நமது பக்கம் வருவது சாத்தியமாகும்.

எங்கெல்ஸ் மார்க்சுடன் சேர்ந்து விஞ்ஞானமுறை மார்க்சியத்தின் அடித்தளங்களை நிறுவினர். அதாவது, நமது கட்சி எப்போதும், குறிப்பாகப் புரட்சிக் காலத்தில் வழிகாட்டியாகக் கொண்ட போதனைகளை வகுத்தளித்தார். எங்கெல்ஸ் தான் விவசாயிகளை சிறிய விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பிரித்தார். இந்தப் பிரிவினை இன்றும் கூட பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் விஷயத்தில் தொடர்ந்து நிலவுகிறது. ''பெரிய விவசாயிகளைக்

கூட பலப்பிரயோகமூலம் ஒடுக்க வேண்டுமென்பது ஒருவேளை எல்லா இடங்களிலும் அவசியமாயிராது போக லாம்'' என்று எங்கெல்ஸ் எழுதினர். மற்றும் நடுத்தர விவ சாயியைப் பொருத்தவரை நாம் எப்போதாவது பலப்பிர யோகத்தைப் பயன்படுத்துவோம் (சிறிய விவசாயி நம் நண் பர்) என்ற எண்ணமே விவேகமுள்ள எந்த சோஷலிஸ்டுக்கும் என்றுமே ஏற்படவில்லை. விவசாயப் பிரச்சினை முன்ன ணிக்கு வந்தபோது,[106] 1894ல், தாம் மரணமெய்துவதற்கு ஓராண்டு முன்பு, எங்கெல்ஸ் கூறியது இதுவே. இந்தக் கருத்து நிலை ஒரு மெய்ப்பாட்டை வெளிப்படுத்துகிறது, இது சில சமயம் மறக்கப்பட்டு விடுகிறது ஆனல் தத்துவ ரீதியில் நாம் எல்லோரும் இதை ஒப்புக் கொள்கிறோம். நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகள் சம்பந்தமான நமது நோக்கம் முழு உடைமை நீக்கமே. ஆனல் நடுத்தர விவசாயிகள் விஷயத்தில் பலப்பிரயோகம் எதுவும் பயன்படுத்தப் படுவதை நாம் அனுமதிக்க மாட்டோம். பணக்கார விவசாயி கள் விஷயத்தில் கூட முதலாளித்துவ வர்க்கத்தின் விஷயத்தில் போன்று அவ்வளவு உறுதியான முறையில்— பணக்கார விவசாயிகள் மற்றும் குலாக்குகள் முற்ற முழுமை யாக உடைமை நீக்கம் செய்யப்படுவது பற்றி—நாம் சொல் வதில்லை. இந்தத் தனிவேறுபாடு நமது வேலைத்திட்டத்தில் செய்யப்பட்டிருக்கிறது. பணக்கார விவசாயிகளின் எதிர்ப் புரட்சி முயற்சிகள் மூலமான எதிர்ப்பு அடக்கப்பட வேண் டும் என்று நாம் கூறுகிறோம். இது முழுமையான உடைமை நீக்கமல்ல.

முதலாளித்துவ வர்க்கத்தை முழுமையாக உடைமை நீக்கம் செய்தல், பிறரைச் சுரண்டாத நடுத்தர விவசாயி யுடன் நேசக் கூட்டணி சேரல் என்ற வகையில் முதலாளித் துவ வர்க்கம் மற்றும் நடுத்தர விவசாயிகளுடனன எமது உறவு நிலையிலான இந்த அடிப்படை வேறுபாடு, இந்த அடிப்படைக் கொள்கை தத்துவார்த்த முறையில் எல்லோ ராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனல் இந்தக் கொள்கை நடைமுறையில் முரண் இன்றிப் பின்பற்றப்படுவதில்லை. உள் நாட்டு வட்டாரங்களில் இருப்போர் இதைப் பின்பற்ற இன்

னும் அறிந்து கொள்ளவில்லை. முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி தனது சொந்த ஆட்சி அதிகாரத்தைக் கெட்டிப் படுத்திய பின்னர் ஒரு புதிய சமூக அமைப்பைப் படைத் துருவாக்க பல்வேறு கோணங்களில் இருந்து பாட்டாளி வர்க்கம் செயல்படத் தொடங்கிய போது நடுத்தர விவசாயிகள் விஷயம் முன்னணிக்கு வந்தது. பெரு வீதப் பயிர்ச்சாகுபடி முறை நிலவும் நாடுகளிலும், சிறு வீதப் பயிர்ச்சாகுபடி முறை நிலவும் நாடுகளிலும் கம்யூனிச நிர்மாணம் வெவ்வேறு பாதைகளை மேற்கொள் ளும் என்பதை உலகிலுள்ள எந்த ஒரு சோஷலிஸ்டும் மறுத்ததில்லை. அது ஓர் ஆதார மெய்ப்பாடு, ஓர் அரிச்சு வடி. நாம் கம்யூனிச நிர்மாணம் குறித்த பிரச்சினைகளை அணுகும் போது, நமது பிரதான கவனம் ஓரளவுக்கு குறிப் பாயும் நடுத்தர விவசாயிமீது ஒருமுகப்படுத்தப்பட வேண் டும் என்ற முடிவு இந்த மெய்ப்பாட்டில் இருந்து வருகிறது.

நடுத்தர விவசாயியின் பாலான நமது உறவுநிலையை நாம் எப்படி வரையறுக்கிறோம் என்பதைப் பல காரியங் கள் சார்ந்திருக்கும். தத்துவார்த்த ரீதியில் இந்தப் பிரச் சினை தீர்க்கப்பட்டுவிட்டது. ஆனால் தத்துவார்த்த ரீதியில் தீர்வு காண்பதற்கும் அந்தத் தீர்வைச் செயல்படுத்துவதற் கும் இடையே ஒரு வேறுபாடு இருக்கிறது என்பதை நமது சொந்த அனுபவத்தில் இருந்தே முற்றும் நன்றாக அறிவோம். இப்போது நாம் அந்த வேறுபாட்டை நேரடியாக எதிர்ப் பட்டிருக்கிறோம். பிரெஞ்சு ஆட்சிப் பேரவை[107] தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கி, அவற்றைச் செயல்படுத்து வதற்கு அவசியமான ஆதரவு இல்லாமலும், எந்த ஒரு நட வடிக்கையையும் அமுல்படுத்த எந்த வர்க்கத்தைச் சார்ந்து நிற்பது என்பதைக்கூட அறியாமல் இருந்த போது இந்த அம்சம் மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியின் தன்மைக் குறிப் பாக விளங்கியது.

நமது நிலைமை வரம்பு கடந்து அதிக அதிருஷ்டவசமா னது. ஒரு முழு நூற்றாண்டு கால வளர்ச்சியின் பலனாக நாம் எந்த வர்க்கத்தைச் சார்ந்து நிற்கிறோம் என்பதை அறி வோம். அந்த வர்க்கத்தின் நடைமுறை அனுபவம் மிக

மிகப் போதாதது என்பதையும் நாம் அறிவோம். முதலாளித்துவ வர்க்கத்தினரின் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்துவது, தொழிலாளரிடம் ஆட்சி அதிகாரத்தை மாற்றி வழங்குவது என்ற அடிப்படைக் குறிக்கோள் தொழிலாளி வர்க்கத்துக்கும் தொழிலாளர் கட்சிக்கும் தெளிவாகத் தெரிந்திருந்தது. ஆனால் இதை எப்படிச் செய்வது? எத்தகைய இடர்ப்பாடுகளுடன் எத்தனை தவறுகள் இழைத்து நாம் தொழில்துறையில் தொழிலாளர் கண்காணிப்பில் இருந்து தொழிலாளர் நிர்வாகத்துக்குக் கடந்து சென்றோம் என்பதை எல்லோரும் நினைவில் வைத்திருக்கிறார்கள். இருப்பினும் அது நமது சொந்த வர்க்கத்துக்குள் பாட்டாளிகளின் மத்தியில், நாம் எப்போதும் செயலாற்றி வந்தவர்கள் இடையில் நடத்தப்பட்ட பணியாகும். இப்போது நாம். ஒரு புதிய வர்க்கத்தின் பால், நகரப்புறத் தொழிலாளர் அறிந்திராத ஒரு வர்க்கத்தின் பால் நமது உறவு நிலையை நிர்ணயிக்குமாறு கோரப்படுகிறோம். ஒரு திட்டவட்டமான திடமான நிலைமை இல்லாத ஒரு வர்க்கத்தின் பால் நமது உறவு நிலையை நிர்ணயிக்க வேண்டும். பெருந்திரளான பாட்டாளி வர்க்கம் சோஷலிசத்துக்கு ஆதரவாக இருக்கிறது, பெருந்திரளான முதலாளித்துவ வர்க்கம் சோஷலிசத்தை எதிர்க்கிறது. இந்த இரண்டு வர்க்கங்களுக்கு இடையிலான உறவை நிர்ணயிப்பது எளிது. ஆனால் நடுத்தர விவசாயிகள் போன்ற நபர்களை எதிரிடும் போது **அவர்கள் ஊசலாடும் வர்க்கம்** என்பதைக் காண்கிறோம். நடுத்தர விவசாயி ஓரளவுக்கு சொத்துடைமையாளன் மற்றும் ஓரளவுக்கு தொழிலாளி. அவன் இதர உழைக்கும் மக்களைச் சுரண்டுவதில்லை. பல பத்தாண்டுகளாக நடுத்தர விவசாயி தனது நிலையை மாபெரும் இடர்ப்பாடுகளின் இடையே தற்காத்து வந்தான். நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் சுரண்டலால் அவதிப்பட்டான். எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டான். இருப்பினும் அவன் ஒரு சொத்துடைமையாளன். எனவே இந்த ஊசலாடும் வர்க்கத்தின் பாலான நமது உறவு நிலை பேரளவான இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்கிறது. ஓராண்டுக்கும் மேற்பட்டதான அனுபவத்தினை வைத்து நாட்டுப்புற

வட்டாரங்களில் ஆறு மாதங்களுக்கும் மேற்பட்ட பாட்டாளி வர்க்கப் பணி புரிந்ததனை வைத்து, ஏற்கெனவே நாட்டுப்புற வட்டங்களில் ஏற்பட்டுவிட்ட வர்க்கப் பாகுபாட்டை வைத்துப் பார்க்கும் போது நாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இல்லையேல் நாம் மிகவும் அவசரப்பட்டு விடலாம், தத்துவார்த்த முறையில் போதுமான தேர்ச்சி இல்லாது இருக்கலாம், இன்னும் கைவரப்பெருத நிறைவேறும் போக்கில் இருக்கிற ஒன்றை நிறைவேறி விட்டதாகக் கருதும்படி நேரலாம். கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட கமிஷன் முன்வைக்க விருக்கும் தீர்மானம்—இதைப் பின்னுல் பேசுபவர் படித்துக் காட்டுவார்—இதற்கு எதிராகப் போதிய அளவுக்கு எச்சரிக்கை செய்திருப்பதைக் காண்பீர்கள்.

பொருளாதாரக் கருத்து நிலையில் இருந்து நாம் நடுத்தர விவசாயிக்கு உதவி செய்ய வேண்டும் என்பது கண்கூடு. தத்துவார்த்த ரீதியில் இது பற்றி எவ்வித ஐயமும் கிடையாது. ஆனுல் நமது பழக்கங்கள், நமது கலாசாரத் தரம், நாட்டுப்புற வட்டங்களில் பயன்படுத்துவதற்கு என நம்மால் வழங்க முடிந்த கலாசார, தொழில் நுட்ப சக்திகளின் போதாக்குறை ஆகியவை காரணமாயும், நாட்டுப்புற வட்டங்களை அடிக்கடி அணுகுவதில் நாம் தோற்றுவிக்கும் தன் செயலற்ற தன்மை காரணமாயும் தோழர்கள் அடிக்கடி பலவந்த முறையைக் கையாள்கிருர்கள், அவ்வாறு எல்லாவற்றையும் கெடுத்து விடுகிருர்கள். ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யின் நீஷ்னி நொவ்கரோத் கமிட்டியால் வெளியிடப்பட்ட நீஷ்னி நொவ்கரோத் குபெர்னியாவில் கட்சி வேலை சம்பந்தமான நெறியாணைகளும் விதிமுறைகளும் என்னும் தலைப்புடைய ஒரு சிறு பிரசுரத்தை நேற்றுத்தான் ஒரு தோழர் என்னிடம் கொடுத்தார். இந்தச் சிறு பிரசுரத்தில் உதாரணமாயும் பக்கம் 41ல் நான் காண்பதாவது: ''அவசர கால வரி ஆணையின் பளு முழுவதும் கிராமத்து குலாக்குகள், கொள்ளை லாபக்காரர்கள் மற்றும் பொதுவாக விவசாயிகளிடையான நடுத்தர நபர்கள் மீதே சுமத்தப்பட வேண்டும்.'' நல்லது, நல்லது! இந்தப்

பேர்வழிகள் நிச்சயமாகவே ''புரிந்து கொண்டு விட்டார்கள்''! இது ஒன்று அச்சுப் பிழை—இத்தகைய அச்சுப் பிழை செய்யப்படுவது அனுமதிக்கப்பட முடியாது—அல்லது தலை தெறிக்கும் வேகத்து அவசர வேலை, இந்த விஷயத்தில் எல்லா வித அவசரமும் எவ்வளவு ஆபத்தானது என்பதை இது காட்டும். அல்லது அவர்கள் அறவே புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள் போலும்—இது எல்லாவற்றிலும் மோசமான ஊகமாகும், இதை நீஷ்னி நொவ்கரோத் தோழர்கள் விஷயத்தில் செய்ய நான் விரும்ப மாட்டேன். இது மெய்யாகவே கவனமின்மையாக இருக்கலாம்.[108]

நடைமுறையில் கமிஷனில் ஒரு தோழர் குறிப்பிட்டது போன்ற சம்பவங்கள் நம் முன் வருகின்றன. அவரை விவசாயிகள் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். ''என்னிடம் இரண்டு குதிரைகளும் ஒரு பசுவும் உள்ளன... என்னிடம் இரண்டு பசுக்களும் ஒரு குதிரையும் உள்ளன... நான் நடுத்தர விவசாயியா அல்லவா? சொல்லுங்கள்'' என்று ஒவ்வொருவரும் கேட்டனர். எல்லா உயெஸ்துகளிலும் சுற்றுப் பயணம் நடத்தும் இந்தக் கிளர்ச்சிப் பிரசாரகர் ஒவ்வொரு விவசாயியையும் அவர் நடுத்தர விவசாயியா அல்லவா என்பதை அளவிட்டுச் சொல்லும் தவறே இழைக்காத வெப்பமானி வைத்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப் பட்டது. இதைச் செய்ய வேண்டுமானால் குறிப்பிட்ட விவசாயிப் பண்ணையின் வரலாறு முழுவதையும், அவர் உயர் மட்ட மற்றும் தாழ்ந்த மட்ட விவசாயிகளுடன் கொண்டிருந்த உறவு பற்றியும் நீங்கள் தெரிந்திருக்க வேண்டும், அதை அவ்வளவு செம்மையாகத் தெரிந்திருக்க முடியாது.

பெருமளவிலான நடைமுறைத் திறமையும் உள்ளூர் நிலைமைகள் பற்றிய அறிவும் இங்கு தேவைப்படுகின்றன. நாம் அவற்றை இன்னும் பெற்றுவிடவில்லை. இதை ஒத்துக் கொள்ள நாம் வெட்கப்படத் தேவை இல்லை. இதை வெளிப் படையாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் என்றுமே கற்பனுவாதிகளாக இருந்தது கிடையாது. மாசற்ற கம்யூனிஸ்டு சமூக அமைப்பில் பிறந்து கல்விபயின்ற மாசற்ற கம்யூனிஸ்டுகளின் மாசற்ற கரங்களைக் கொண்டு ஒரு கம்யூனிஸ்டு

சமூக அமைப்பைக் கட்டுவோம் என்று நாம் என்றுமே கற்பனை செய்தது கிடையாது. அது ஒரு கற்பனைக் கதையே ஆகும். நாம் முதலாளித்துவத்தின் இடிபாடுகளில் இருந்து கம்யூனிசத்தை நிர்மாணிக்க வேண்டும், முதலாளித்துவத்தை எதிர்த்த போராட்டத்தில் உருக்கேறிய ஒரு வர்க்கத்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ சமூக அமைப்பின் குறைபாடுகள் மற்றும் பலவீனங்களில் இருந்து விடுபட்டு விடவில்லை என்பதை நீங்கள் நன்ருக அறிவீர்கள். அது சோஷலிசத்திற்காகப் போராடி வருகிறது அதே போதில் தனது குறைபாடுகளை எதிர்த்தும் போராடி வருகிறது. பத்தாண்டுகளாக நகரங்களில் ஆவேசமான போராட்டத்தை நடத்தி வந்த பாட்டாளி வர்க்கத்தின் சிறந்த முன்னணிப் பகுதி அந்தப் போராட்டத்தின் செல்வழியில் தலைநகரம் மற்றும் இதர நகரங்களில் இருந்த வாழ்க்கையின் கலாசாரம் அனைத்தையும் முயன்று பெறும் நிலையில் இருந்தது, ஓரளவுக்கு அதை அடையவும் செய்தது. முன்னேறிய நாடுகளிலும் கூட நாட்டுப்புற மாவட்டங்கள் அறியாமையில் தள்ளப்பட்டு இருப்பதை நீங்கள் அறிவீர்கள். நாட்டுப்புற மாவட்டங்களில் கலாசாரத் தரத்தை நாம் உயர்த்துவோம் என்பது திண்ணம் ஆனல் அது பலப்பல ஆண்டுகள் பிடிக்கும் வேலையாகும். இதைத்தான் எல்லா இடங்களிலுமுள்ள நமது தோழர்கள் மறந்துவிடுகிருர்கள், ஆனல் இதைத்தான் நாட்டுப்புற மாவட்டங்களில் இருந்து வரும் மக்கள் வெளியிடும் ஒவ்வொரு சொல்லும் மிகவும் எடுப்பான முறையில் நமது மனத்தில் பதியவைக்கிறது. இதனை இங்கு வேலை செய்யும் அறிவுஜீவிகள் சொல்லவில்லை அதிகாரிகள் சொல்லவில்லை—அவர்கள் ஏராளமாகப் பேசக் கேட்டிருக்கிறேம்—ஆனல் நாட்டுப்புற மாவட்டங்களில் செய்யப் பெறும் வேலையை நடைமுறையில் நுணுகிக் காணும் மக்களே இதைச் சொல்கிருர்கள். விவசாயக் கமிட்டியில் இந்தக் கருத்துக்கள் பிரத்தியேகமாயும் பயனுடையனவாக இருப்பதைக் கண்டோம். இந்தக் கருத்துக்கள் கட்சிக் காங்கிரஸ் முழுமைக்கும் இப்போது பிரத்தியேகமாயும் பயனுடையனவாக இருக்கும். இதை நான் உறுதியாக நம்புகிறேன்.

ஏனெனில் அவை புத்தகங்களில் இருந்தோ அரசாணைகளில் இருந்தோ வரவில்லை, ஆனால் அனுபவத்தில் இருந்து வந்தவை.

இவையாவும் நடுத்தர விவசாயியின் பாலான நமது உறவு நிலையில் ஆகச் சாத்தியமான அளவு துலக்கத்தைப் புகுத்தும் நோக்கத்திற்காகப் பாடுபடும்படி நம்மைக் கட்டாயப்படுத்துகின்றன. இது மிகவும் கடினமானது, காரணம் இத்தகைய துலக்கம் எதார்த்தத்தில் நிலவவில்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, இதை உடனடியாகவும் திடுமெனவும் நீங்கள் தீர்க்க விரும்புவீர்களானால் இது தீர்க்க முடியாததும் ஆகும். மிகப்பல அரசாணைகளை வரைய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறும் பேர்வழிகள் இருக்கிறார்கள். அவற்றை எப்படி அமுல் செய்வது என்பதை அறிந்து கொள்ளாமலே அரசாணைகளை வரையத் தொடங்கும் சோவியத் அரசாங்கத்தைக் குறை கூறுகிறார்கள். அவர்கள் வெண்காவலர்களின் நிலைக்குத் தாழ்வுற்று வருவதை உண்மையில் இந்தப் பேர்வழிகள் உணரவில்லை. நூறு அரசாணைகளை வரைவதன் மூலம் நாட்டுப்புற மாவட்டங்களின் வாழ்க்கையை முழுமையாக மாற்றிவிட முடியும் என்று எதிர்பார்த்து இருந்திருப்போமானால் நாம் பரம மடையர்களாக இருந்திருப்போம். ஆனால் பின்பற்ற வேண்டிய பாதையை அரசாணைகளில் சுட்டிக் காட்டத் தவறியிருந்தோமானால் நாம் சோஷலிசத்துக்குத் துரோகம் விளைத்தவர்களாக இருந்திருப்போம். இந்த அரசாணைகளை நடைமுறையில் முழுமையாயும் உடனடியாயும் அமுல்படுத்த முடியாத நிலை இருந்த அதே போதில், இவை பிரசாரம் என்ற முறையில் முக்கியமான பங்கு வகித்தன. முன்நாட்களில் நாம் நமது பிரசாரத்தை பொது மெய்மைகளின் வாயிலாக நடத்தி வந்தோம், இப்போது நமது பிரசாரத்தை நமது வேலை மூலம் நடத்தி வருகிறோம். அதுவும் பிரசாரம் செய்வதுதான் ஆனால் செயல் மூலம் பிரசாரம் செய்வதாகும். இது ஒரு சில திடீர்ப் பவிசாளர்களின் தனிப்பட்ட கேலிப் பாய்ச்சல் என்ற பொருளிலான செயல் அல்ல. இதை அராஜகவாதிகள் மற்றும் பழைய மாதிரி சோஷலிசத்தின் சகாப்

தத்தில் நாம் பெருமளவு இழித்துரைத்துள்ளோம். நமது அரசாணை ஓர் அறைகூவலே, ஆனால் ''தொழிலாளர்களே எழுவீர், முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவீர்!'' என்ற பழைய அறைகூவல் அல்ல. இது மக்களுக்கு விடும் ஓர் அறை கூவல், நடைமுறை வேலையில் இறங்கும் படி அவர்களைக் கோரும் அறைகூவல். அரசாணைகள் வெகுஜன அளவில் நடை முறை வேலைக்கு அறைகூவும் நெறிமுறைகளாகும். அதுவே முக்கியமானது. அரசாணைகளில் பயனற்றவை மிகுதியாக இருக்கலாம், நடைமுறையில் அமுல் செய்ய முடியாதன மிகு தியாக இருக்கலாம் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அவற்றில் நடைமுறைச் செயல்பாட்டுக்கான விவரப் பொருட் கள் இடம் பெற்றுள்ளன. அரசாணையின் நோக்கம் சோவியத் அரசாங்கத்தின் சொல்லை மதிக்கும் நூறு, ஆயிரம், லட்சக் கணக்கான மக்களுக்கு நடைமுறை நடவடிக்கைகளைப் பயிற்றுவிப்பதேயாகும். இது நாட்டுப்புற மாவட்டங்களில் சோஷலிஸ்டு நிர்மாணத் துறையிலான நடைமுறைச் செயல் பாட்டில் நடத்தும் சோதனையாகும். காரியங்களை இந்த வழி யில் நடத்துவோமானால் நமது சட்டங்கள், அரசாணைகள் மற்றும் தீர்மானங்களில் இருந்து மிகப் பெருமளவு முனைந்து பெற முடியும். இக்கணத்திலேயே எது எப்படியாயினும் அமுல்படுத்தியே தீர வேண்டிய பரம கட்டாய உத்தரவாக நாம் அவற்றைக் கருத மாட்டோம்.

தனிப்பட்டோர் துர் உபயோகப்படுத்துவதை நடைமுறை யில் ஊக்குவிக்கக் கூடியதான அனைத்தையும் நாம் தவிர்க்க வேண்டும். அட்டைகளைப் போல நம்மோடு ஒட்டிக் கொண்டு வரும் தன்னலம் நாடுவோரும் சாகசக்காரர்களும் சில இடங் களில் இருக்கிறார்கள், கம்யூனிஸ்டுகள் என்று தம்மைத்தாமே அழைத்துக் கொண்டு அவர்கள் நம்மை ஏமாற்றுகிறார்கள். கம்யூனிஸ்டுகள் இப்போது ஆட்சி அதிகாரத்தில் இருப்பதால் இந்தப் பேர்வழிகள் நமது அணிகளுக்குள் தந்திரமாகப் புகுந்து கொண்டு விட்டார்கள். தமது பிற்போக்கான கருத் துக்கள் காரணமாக மேலும் நேர்மையான அரசாங்க ஊழி யர்கள் நம்முடன் சேர்ந்து வேலை செய்ய மறுத்து விட்டதால் இது ஏற்பட்டது. தன்னலம் நாடுவோருக்கோ கருத்துக்களும்

இல்லை, நேர்மையும் இல்லை. தன்னல வாழ்க்கைக்கு வழி செய்து கொள்வது மட்டுமே தமது நோக்கமாகக் கொண்ட இந்தப் பேர்வழிகள் வட்டாரங்களில் பலவந்த முறைகளைக் கையாளுகின்றனர், தாம் நல்ல காரியம் செய்வதாக நினைத்துக் கொள்கின்றனர். ஆனால் உண்மையில் இதன் விளைவாக விவசாயிகள் சில சமயங்களில் ''சோவியத் ஆட்சி நீடுழி வாழ்க ஆனால் கம்யூனியா (அதாவது கம்யூனிசம்) வீழ்க!'' என்று கூறுகின்றனர். இது புனைந்துரை அல்ல, இந்த மெய் விவரங்கள் எதார்த்த வாழ்க்கையில் இருந்தும் வட்டாரங் களில் இருக்கும் தோழர்களின் அறிக்கைகளில் இருந்தும் எடுக்கப்பட்டவை. நிதானம் இல்லாததால், மடத்துணிச்சல் மற்றும் அவசரத்தின் காரணமாக எவ்வளவு பேரளவான சேதம் விளைக்கப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நாம் விரைந்து, ஆவேசமான பாய்ச்சலில் இறங்கி எப் பாடு பட்டும் ஏகாதிபத்தியப் போரில் இருந்து வெளியேற வேண்டியிருந்தது ஏனெனில் அது நம்மைப் படு வீழ்ச்சியின் விளிம்புக்குக் கொண்டு வந்து விட்டது. முதலாளித்துவ வர்க் கத்தையும் நம்மை நசுக்குவதற்கு அச்சுறுத்தி வந்த சக்தி களையும் நசுக்க மிகவும் துணிகரமான முயற்சிகள் செய்ய வேண்டியிருந்தது, இவையாவும் அவசியமாக இருந்தன. இவை இல்லாதிருக்குமானால் நாம் வெற்றியடைந்திருக்க முடியாது. ஆனால் இதே வழியில் நாம் நடுத்தர விவசாயி களிடம் நடந்து கொள்வோமானால் அது மோசமான மடமை யாக, மோசமான அசட்டுத்தனமாக இருக்கும், நமது குறிக் கோளை நாசப்படுத்தும் ஆத்திர மூட்டுவோர் மட்டுமே இத் தகைய வழியில் திட்டமிட்டுச் செயல்படுவார். இங்கு குறிக் கோள் முற்றிலும் வேறுபட்டதாக இருத்தல் வேண்டும். இங்கு நமது குறிக்கோள் கண்கூடான சுரண்டலாளர்களின் எதிர்ப்பைத் தகர்ப்பதோ, அவர்களைத் தோற்கடித்து வீழ்த்துவதோ அன்று, இது நாம் முன்பு நமக்கே முன்னி றுத்திய குறிக்கோளாகும். இல்லை, இப்போது இந்தப் பிரதான நோக்கம் நிறைவேறிவிட்டபடியால் மேலும் அதிகச் சிக்கலான பிரச்சினைகள் எழுகின்றன. இங்கு

பலவந்தம் மூலம் எதையும் உருவாக்க முடியாது. நடுத்தர விவசாயிகளிடம் பலவந்தத்தைப் பிரயோகிப்பது சொல்லற்கரிய தீமையை விளைக்கும். இந்தப் பகுதி பெருமளவானது, லட்சக் கணக்கான நபர்கள் அடங்கியது. இந்த அளவினை எங்குமே எட்டாததும், தொழில்நுட்பம், கலாசாரம், நகர வாழ்க்கை மற்றும் ரயில்வே வசதிகள் பிரம்மாண்டமாக வளர்ச்சி அடைந்துள்ளதும், இத்தகைய காரியத்தைப் பற்றி நினைப்பது மிகவும் எளிதாக இருப்பதுமான ஐரோப்பாவில் கூட எவரும், ஆகப் புரட்சிகரமான சோஷலிஸ்டுகளில் ஒருவர் கூட நடுத்தர விவசாயிகளின் மீது பலவந்த நடவடிக்கைகள் ஏற்கப்படுவதை என்றுமே முன்வைத்தது கிடையாது.

நாம் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொண்ட போது ஒட்டுமொத்தமாக விவசாயிகளின் ஆதரவைச் சார்ந்து நின்றோம். அந்த நேரத்தில் எல்லா விவசாயிகளின் நோக்கமும் ஒன்ருகவே இருந்தது—நிலப்பிரபுக்களை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதே அது. ஆனல் பெருவீத சாகுபடி முறைக்கு எதிரான அவர்களது தப்பெண்ணம் இன்றும் கூட நீடிக்கிறது. பெரிய பண்ணை இருக்குமானல் அவன் ஒரு பண்ணை ஆளாகவே மறுபடியும் ஆகிவிட நேரும் என்று கருதுகிருன். அது தவறு என்பது திண்ணம். ஆனல் பெருவீத சாகுபடி முறை பற்றிய விவசாயியின் கருத்து ஒருவிதப் பகைமை உணர்ச்சியுடனும், நிலப்பிரபுக்கள் எவ்வாறு மக்களை ஒடுக்கினர்கள் என்பதன் நினைவுகளோடும் பந்தமுடையது. அந்த உணர்வு இன்னும் நீடிக்கிறது, அது மறைந்துவிடவில்லை.

இங்கு நிலைமையின் மெய் இயல்பு காரணமாகவே பலவந்த முறைகளால் எதையும் சாதிக்க முடியாது என்ற உண்மையை நாம் குறிப்பாயும் அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும். இங்கு பொருளாதாரக் கடமை முற்றும் வேருனதாகும். அனைத்து அடித்தளத்தையும் முழு கட்டுமானத்தையும் அப்படியே இருக்கவிட்டு வெட்டி அகற்றக் கூடிய மேல் அடுக்கு என்பது இங்கு இல்லை. நகரங்களில் முதலாளிகளால் சுட்டப் பெறும் அந்த மேல் அடுக்கு கிராமங்களில் இல்லை. இங்கு பலவந்தம் முழு லட்சியத்துக்கும் நாசம் விளைக்கும். இங்கு நீடித்த கல்விப் பணி தேவை. நமது நாட்டில் மட்டு

மன்றி உலகம் முழுதுமே ஒரு செயல்புரி மனிதனுய், எதார்த்த வாதியாய் விளங்கும் விவசாயிக்கு ''கம்யூனியா'' (கம்யூனிசம்) ஆகச் சிறந்த விஷயம் என்பதை ஸ்தூலமான உதாரணங்களால் நிரூபித்துக் காட்ட வேண்டும். அவசரக்கார தனி நபர்கள் நகரில் இருந்து கிராமத்துக்குச் சென்று அரட்டை அடித்து அறிவுஜீவி போலவும் சில சமயம் அறிவுஜீவி அல்லாத தரத்திலும் சில பூசல்களைக் கிளர்த்தி விட்டு பிறகு எல்லோருடனும் சண்டை போட்டுத் தம் வழி செல்வதால் எதுவும் நடவாது என்பது நிச்சயம். இவ்வாறு சில சமயம் நிகழ்கிறது. இத்தகைய நபர்கள் மரியாதையை வரவழைப்பதற்கு மாருக ஏளனத்தை வரவழைக்கின்றனர், அவர்களின் தகுதிக்கு ஏற்றது இதுவே.

இந்த விஷயத்தில் நாம் கம்யூன்களை ஊக்குவிக்கிருேம் என்பதைக் கூறியே தீர வேண்டும். ஆனுல் அவை விவசாயிகளின் நம்பிக்கையைப் பெறும் வகையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். அது வரை நாம் விவசாயிகளின் மாணவர்களே தவிர அவர்களது ஆசிரியர்களல்ல. விவசாயம் பற்றியோ அதன் பிரத்தியேகக் கூறுகள் பற்றியோ எதுவுமே தெரியாத நபர்கள், சமூக விவசாயத்தின் சாதகங்கள் குறித்துக் கேள்விப்பட்டிருப்பதன் காரணமாயும், நகரப்புற வாழ்க்கையில் சலிப்படைந்து நாட்டுப்புற மாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவதால் மட்டுமே கிராமத்துக்கு விரைந்தோடிய நபர்கள் எல்லா வழிகளிலும் தம்மைத்தாமே விவசாயிகளின் ஆசிரியர்களாகக் கருதிக்கொள்வதைவிட அதிக மடத்தனமான செயல் வேறு எதுவும் இல்லை. நடுத்தர விவசாயிகளுடனுன பொருளாதார உறவுகளில் பலவந்தத்தைப் பிரயோகம் செய்வது குறித்து எண்ணம் கொள்வதைவிட அதிகமான மடத்தனம் வேறு எதுவும் இல்லை.

நோக்கமானது, நடுத்தர விவசாயியை உடைமை நீக்கம் செய்வதல்ல. மாருக, விவசாயி வாழ்ந்துவரும் பிரத்தியேக நிலைமைகளை மனதிற் கொள்வதும், மேலும் சிறப்பான அமைப்பு முறைக்கு மாறிச் செல்வதற்குரிய வழிமுறைகளை அவனிடமிருந்து கற்றுத் தெரிந்து கொள்வதும், உத்தரவுகள் போடத் துணியாது இருப்பதுமே ஆகும்! இதுவே நாம் நமக்காக

நிறுவிக்கொண்ட நியதியாகும். (பொதுவான கர வொலி.) இந்த நியதியையே நமது நகல் தீர்மானத்தில் தெளிவுறுத்தி அறிவிக்க முயன்றுள்ளோம், ஏனெனில் இந்த விஷயத்தில், தோழர்களே, நாம் உண்மையிலேயே பெருமளவு பொல்லாங்கு செய்துள்ளோம். இதை ஒப்புக் கொள்ள நாம் எந்த விதத்திலும் வெட்கப்படவில்லை. நாம் அனுபவமின்றி இருந்தோம். சுரண்டலாளர்களை எதிர்த்த நமது போராட்டமும் அனுபவத்தில் இருந்து மேற்கொள்ளப் பட்டதாகும். இதன் காரணமாக நாம் சில சமயம் கண்டனத்துக்கு இலக்காகி இருக்கும் பட்சத்தில் நாம் கூற முடியும்: ''முதலாளித்துவ கனவான்களே, இதற்கான பழி உங்களையே சாரும். நீங்கள் அத்தகைய முட்டாள்த்தனமான, அறிவற்ற, திமிரான, மூர்க்கத்தனமான எதிர்ப்பைக் காட்டாது இருந்திருந்தால், உலக முதலாளித்துவ வர்க்கத்தோடு கூட்டணியில் சேராமல் இருந்திருந்தால் புரட்சி மேலும் சமாதான வடிவங்களை மேற்கொண்டிருக்கும்.'' இப்போது நாம் காட்டாளத்தனமான தாக்குதலை எல்லாப் பக்கங்களிலும் முறியடித்துப் பின்னடையச் செய்து விட்டதால், நாம் வேறு வழிமுறைகளுக்கு மாறிச் செல்ல முடியும். காரணம் நாம் ஒரு குறுகிய வட்டமாகச் செயல்படவில்லை, மாறுகக் கோடிக் கணக்கான மக்கள் திரளைத் தலைமை தாங்கி நடத்தும் ஒரு கட்சியாகச் செயல்படுகிறோம். கோடிக்கணக்கான மக்கள் திரள் பாதை மாற்றத்தை உடனடியாகப் புரிந்து கொள்ள முடியாது எனவே குலாக்குகளைக் குறிவைத்து நடத்தும் தாக்குதல்கள் நடுத்தர விவசாயிகள் மீது விழுவது என்பது அடிக்கடி நேருகிறது. இதில் வியப்புக்கு இடமில்லை. இப்போது காலாவதியாகி விட்டதான வரலாற்று நிலைமைகளே இதற்குக் காரணம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். புதிய நிலைமைகளும் இந்த வர்க்கம் சம்பந்தப்பட்ட புதிய கடமைகளும் ஒரு புதிய மனோதத்துவத்தைக் கோருகின்றன.

விவசாயிப் பண்ணை பற்றிய நமது அரசாணைகள் அடிப்படையில் சரியானவை. அவற்றில் ஏதேனும் ஒன்றைக் கைவிடவோ, ஏதேனும் ஒன்றுக்காக வருத்தப்படவோ ஆதாரம் எதுவும் இல்லை. ஆனல் அரசாணைகள் சரியாக

இருக்கும் பட்சத்தில் விவசாயிகள் மீது அவற்றைப் பலப்பிரயோகம் மூலம் திணிப்பது தவறு. அவ்வாறு செய்வது என்பது எந்த ஓர் அரசாணையிலும் உட்படுத்தப்படவில்லை. பின்பற்றிச் செல்ல வேண்டிய பாதையை அவை சுட்டுகின்றன என்ற அளவுக்கு, செயல் நடவடிக்கைகளை எடுக்குமாறு கோருகின்றன என்ற அளவுக்கு அவை பிழையற்றவை. ''ஒன்றிணைப்புக்களை ஊக்குவிப்பீர்'' என்று நாம் சொல்லும் போது அவை அமுல்படுத்துவதற்கான இறுதி வடிவத்தைக் கண்டறிவதற்கு முன்னதாக பல தடவைகள் சோதிக்கப்பட வேண்டிய தான நெறிமுறைகளையே நாம் வழங்குகிறோம். விவசாயிகளின் சுயவிருப்பமான ஒப்புதலைப் பெற நாம் முயல வேண்டும் என்று அறிவிக்கப்படும் போது அதன் அர்த்தம் அவர்களை இணங்க வைக்க வேண்டும், நடைமுறைச் செயல்கள் மூலம் இணங்க வைக்க வேண்டும் என்பதாகும். வெறும் சொற்களால் மட்டும் நம்பிக்கையூட்டப் பெறுவதற்கு அவர்கள் தாமே அனுமதிக்க மாட்டார்கள், அவ்வாறு அவர்கள் செய்தால் அது முற்றிலும் சரியே. அரசாணைகளையும் கிளர்ச்சிப் பிரசார வெளியீடுகளையும் படிப்பது மூலம் மட்டுமே நம்பிக்கையூட்டப் பெறுவதற்கு அவர்கள் தம்மைத்தாமே அனுமதித்துக் கொண்டார்களானல் அது மோசமான காரியம். இந்த வழியில் பொருளாதார வாழ்க்கையை மறுவடிவு படுத்துவது சாத்தியமானல் அத்தகைய மறுவடிவாக்கம் செப்புக்காசுக்கும் லாயக்கில்லை. இத்தகைய ஒன்றிணைப்பு முன்னிலும் நல்லது என்பது முதலில் நிரூபணமாக வேண்டும், மக்கள் உள்ளபடியே ஒற்றுமையுறும் அத்தகைய வழியில் ஒற்றுமைப்படுத்தப்பட வேண்டும், ஒருவருக்கொருவர் சச்சரவு செய்து கொண்டிருக்கக் கூடாது, சங்கம் சேருவது சாதகமானது என்பது நிரூபிக்கப்பட வேண்டும். இந்த வழியில்தான் விவசாயி பிரச்சினையை முன்வைக்கிறான், இந்த வழியில் தான் நமது அரசாணைகள் இதை முன்வைக்கின்றன. இது வரை இதனை நம்மால் சாதிக்க முடியவில்லை என்றால் இதில் வெட்கப்படுவதற்கு எதுவும் இல்லை, இதை வெளிப்படையாக நாம் ஒத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு சோஷலிஸ்டுப் புரட்சியினதும் அடிப்படை

யான கடமையினை மட்டுமே, அதாவது முதலாளித்துவ வர்க்கத்தை முறியடிக்கும் கடமையினை மட்டுமே நாம் இது வரை நிறைவேற்றி முடித்திருக்கிறோம். உலக ஏகாதிபத்தியவாதிகள் நம்மை நசுக்குவதற்குரிய கடைசி முயற்சியைச் செய்து வரும் மிகவும் இடர்ப்பாடான அரையாண்டு துவங்குகிறது என்றபோதிலும் அக்கடமை பெரும்பாலும் நிறைவேற்றி முடிக்கப்பட்டு விட்டது. இந்த அரையாண்டுக்குப் பிறகு அவர்களது குறிக்கோள் அறவே கவைக்குதவாது போய்விடும் என்பதை அவர்கள் தாமே புரிந்து கொள்வர் என்பதை நாம் எவ்வித மிகைப்படுத்தலும் இன்றி இப்போது கூறலாம். ஒன்று அவர்கள் நமது வளமும் வலியும் இழந்த நிலையை இப்போது சாதகமாகக் கொண்டு தனிப்படுத்தப்பட்ட நாடான நம்மைத் தோற்கடிக்க வேண்டும், அல்லது நாம் நமது நாடு சம்பந்தப்பட்ட வரை மாத்திரமின்றி பொதுவில் வெற்றிவாகை சூடுவோம். சரக்குப் போக்குவரத்து நெருக்கடியால் உக்கிரமடைந்துள்ள உணவு நெருக்கடி நிலவும், ஏகாதிபத்திய வல்லரசுகள் நம்மைப் பல முனைகளில் தாக்க முயன்று வரும் இந்த அரையாண்டில் நமது நிலை மிகவும் சங்கடமானதாக இருக்கிறது. ஆனால் இதுவே இறுதியான சங்கடமிக்க அரையாண்டு. நம்மைத் தாக்கிக் கொண்டிருக்கும் வெளிநாட்டு விரோதிக்கு எதிரான போராட்டத்தில் நமது சக்திகள் அனைத்தையும் நாம் தொடர்ந்து ஒன்றுதிரட்ட வேண்டும்.

ஆனால் நாட்டுப்புற மாவட்டங்களிலான நமது வேலையின் நோக்கங்களைப் பற்றிப் பேசும் போது, இடர்ப்பாடுகள் யாவும் இருந்த போதிலும், நமது அனுபவம் அனைத்தும் சுரண்டலாளர்களை நசுக்கும் உடனடியான பணியுடன் முற்றிலும் சம்பந்தப்பட்டிருக்கும் என்பதாக இருந்த போதிலும், நடுத்தர விவசாயிகளைப் பொருத்தவரை நாட்டுப்புற மாவட்டங்களிலான நமது நோக்கங்கள் முற்றும் வேறானவை என்பதை நாம் நினைவில் இருத்த வேண்டும், என்றும் மறந்து விடக் கூடாது.

பெத்ரோகிராத், இவானவோ-வொஸ்னிஸேன்ஸ்க் அல்லது மாஸ்கோவில் இருந்து இந்த நாட்டுப்புற மாவட்டங்

களுக்குச் சென்று வந்த வர்க்க உணர்வுடைய தொழிலாளர்கள் எல்லோரும் பல உதாரணங்களை எடுத்துக் கூறினார்கள். அகற்றவே முடியாது என்று தோன்றிய பல தப்பெண்ணங்களும், மிகவும் கடுமையானதாகக் காணப்பட்ட பல மோதல்களும் அகற்றப்பட்டன அல்லது மட்டுப்படுத்தப்பட்டன என்று கூறினார்கள். விவேகமுள்ள தொழிலாளிகள் முன்வந்து புத்தக மொழியில் அன்றி விவசாயிகள் புரிந்து கொள்ளும் மொழியில் பேசிய போது, நாட்டுப்புற வாழ்க்கை பற்றி எதையும் தெரிந்து கொள்ளாமல் தளபதிகள் போல உரிமையுடன் உத்தரவுகள் போடும் பாணியில் பேசாமல், தோழர்களைப் போல நிலைமையை விளக்கி, சுரண்டலாளர்களை எதிர்த்து உழைக்கும் மக்கள் என்ற முறையில் அவர்களது உணர்ச்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்துப் பேசிய போது இது நடைபெற்றது. தளபதிகள் போலும் மேலதிகாரிகள் போலவும் நடந்த நூற்றுக் கணக்கான பிறர் எதை நிறைவேற்றி முடிக்க இயலவில்லையோ அதை இவர்கள் தோழமை பூர்வமான விளக்கம் மூலம் நிறைவேற்றி முடித்தார்கள்.

இந்த உணர்வு தான் இப்போது உங்களிடம் சமர்ப்பித்துள்ள தீர்மானத்தில் பரவிப்பதிந்து கிடக்கிறது.

எனது சுருக்கமான இந்த அறிக்கையில் இந்தத் தீர்மானத்தின் அடிநிலையான கோட்பாடுகள் பற்றியும், அதன் பொதுவான அரசியல் உட்பொருள் பற்றியும் விரித்துரைக்க முயன்றுள்ளேன். ஒட்டுமொத்தமாக புரட்சியின் நலன்களின் கருத்துக் கோணத்தில் இருந்து நாம் கொள்கையை மாற்றவில்லை, கொள்கை வழியை நாம் மாற்றவில்லை என்பதை எடுத்துக் காட்ட முயன்றுள்ளேன், இதில் வெற்றியடைந்திருப்பதாகவே நான் கருத விரும்புகிறேன். வெண்காவலர்களும் அவர்களது கையாட்களும் நாம் கொள்கையை மாற்றியிருப்பதாகக் கூக்குரலிடுகிறார்கள் அல்லது கூக்குரலிடுவார்கள். அவர்கள் கூக்குரலிடட்டும். நாம் கவலைப்படவில்லை. நாம் நமது நோக்கங்களை மிகவும் முரணற்ற பான்மையில் அனுசரித்து வருகிறோம். முதலாளித்துவ வர்க்கத்தை ஒடுக்குவது என்ற நோக்கத்தில் இருந்து நடுத்தர விவசாயியின் வாழ்க்கையைச் சீராக அமைக்கும் நோக்கத்துக்கு நமது

கவனத்தை மாற்ற வேண்டும். நாம் அவனுடன் சமாதான மாக வாழ வேண்டும். கம்யூனிஸ்டு சமூக அமைப்பில் நடுத்தர விவசாயிகளின் பொருளாதார நிலைமைகளை கடுமை தணித்து மேம்படுத்தினுல் மட்டுமே அவர்கள் நமது பக்கம் ஆதரவாக இருப்பார்கள். நாளையே நாம் அவர்களுக்கு ஒரு லட்சம் முதல் தரமான டிராக்டர்களை வழங்கி அவற்றுக்கு வேண்டிய எரிபொருளை கொடுத்து டிரைவர்களையும் தந்தோமானுல்—இன்று இது அறவே கற்பனைதான் என்பதை நீங்கள் நன்ருக அறிவீர்கள்—நடுத்தர விவசாயி சொல்வான் ''நான் கம்யூ னியாவை (அதாவது கம்யூனிசத்தை) ஆதரிக்கிறேன்'' என்று. ஆனுல் இதைச் செய்யும் பொருட்டு நாம் முதலில் சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தை முறியடிக்க வேண் டும், இந்த டிராக்டர்களை நமக்குத் தரும்படி அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும் அல்லது நமது உற்பத்தி சக்திகளை ஏற்ற முறையில் அபிவிருத்தி செய்து அவற்றை நாமே பெற இயல வேண்டும். இந்தப் பிரச்சினையை முன்னி றுத்துவதற்கான ஒரே சரியான வழி இதுவே.

விவசாயிக்கு நகரங்களில் உள்ள தொழில்துறை அவசியம், அது இல்லாமல் அவன் வாழ முடியாது, அது எம் கையில் இருக்கிறது. நாம் நமது பணியில் சரிவர முனைவோமானுல் நகரத்தில் இருந்து இந்தப் பொருட்களையும் இந்தக் கருவி களையும் இந்தக் கலாசாரத்தையும் அவனுக்குக் கொண்டு வந்து தந்ததிற்காக அவன் நமக்கு நன்றி செலுத்துவான். இவை அவனுக்கு சுரண்டலாளர்களாலோ நிலப்பிரபுக் களாலோ கொண்டுவந்து தரப்பட்டவை அல்ல, மாருக அவ னது சகத் தொழிலாளர்களால் கொண்டுவந்து தரப்படுவன. அவர்களை அவன் மிகவும் உயர்வாக மதிக்கிருன் ஆனுல் அவர் கள் தரும் மெய்யான உதவிக்காக நடைமுறைப் பான்மை யில் மதிக்கிருன். அதே சமயம் மேலிருந்து வரும் எல்லா ஆணவ அதிகார ''உத்தரவுகளையும்'' நிராகரிக்கிருன், முற்றி லும் சரியாகவே நிராகரிக்கிருன்.

முதலில் உதவி செய்ய வேண்டும், பிறகு நம்பிக்கையைப் பெற முயல வேண்டும். இந்தப் பணியில் சரிவர முனையும் பட்சத்தில், உயெஸ்துகள், வோலஸ்துகள் ஆகியவற்றில்

இருக்கும் நமது குழுக்கள் யாவும், உணவு கொள் முதல் குழுக்களும், இதர அமைப்புகளும் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் சரியானதாக இருக்கும் பட்சத்தில், நமது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் இந்தக் கருத்து நிலையில் இருந்து கவனமாகச் சரி பார்க்கப்படுமானல் நாம் விவசாயியின் நம்பிக்கையைப் பெறுவோம், அப்போது மட்டுமே நாம் முன்னேக்கிச் செல்ல முடியும். அவனுக்கு உதவி புரிவதையும் ஆலோசனை கூறுவதையுமே நாம் இப்போது செய்ய வேண்டும். இது ஒரு தளபதியின் உத்தரவாக இருக்காது, மாறாக ஒரு தோழனின் ஆலோசனையாக இருக்கும். அப்போது விவசாயி முற்றிலும் நமது பக்கமாக இருப்பான்.

தோழர்களே, இதுவே நமது தீர்மானத்தின் உள்ளடக்கம், இதுவே காங்கிரசின் முடிவாக ஆக வேண்டும் என்று நான் கருதுகிறேன். இதை நாம் ஏற்றுக் கொள்வோமானல், நமது கட்சி நிறுவனங்கள் அனைத்தின் வேலையையும் நிர்ணயம் செய்ய இது உதவுமானல், நம்முன் இருக்கும் இரண்டாவது மாபெரும் கடமையை நம்மால் தாக்குப்பிடிக்க முடியும்.

முதலாளித்துவ வர்க்கத்தை எப்படி வீழ்த்துவது, அவர்களை எப்படி அடக்குவது என்பதை நாம் பயின்று தெரிந்து கொண்டு விட்டோம், இது குறித்து நாம் பெருமைப்படுகிறோம். ஆனல் லட்சக் கணக்கான நடுத்தர விவசாயிகளுடன் நமது உறவுகளை எப்படி ஒழுங்குபடுத்துவது, அவர்களது நம்பிக்கையை எப்படிப் பெறுவது என்பதை நாம் இன்னும் பயின்று தெரிந்து கொள்ளவில்லை, இதை நாம் வெளிப்படையாக ஒத்துக்கொள்ளவே வேண்டும். ஆனல் இந்தக் கடமையை நாம் புரிந்து கொண்டு இருக்கிறோம், இதை வகுத்து விட்டோம், இந்தக் கடமையை நிச்சயமாயும் சமாளிப்போம்—பிறகு சோஷலிசம் அறவே வெல்லற் கரியதாகும் என்று பூரண நம்பிக்கையுடன், முழு அறிவுடனும் உறுதியுடனும் நாம் கூறுகிறோம். (நீடித்த கரவொலி.)

4

நடுத்தர விவசாயிகள் குறித்த உறவு நிலை பற்றிய தீர்மானம்

நாட்டுப்புறப் பகுதிகளிலான வேலைகளைப் பொருத்த வரை, **1919** மார்ச் **22**ந் தேதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சியின் வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டும், சோஷலிஸ்டு நிலவுரிமை மற்றும் சோஷலிஸ்டு பயிர்ச்சாகுபடி முறைக்கு மாறிச் செல்வதற்கான நடவடிக்கைகள் பற்றி சோவியத் அரசாங்கம் ஏற்கெனவே பிறப்பித்துள்ள சட்டத்துக்கு முழு ஆதரவு கொடுத்தும் உள்ள நிலையில் இன்றைய தருணத்தில் நடுத்தர விவசாயிகளைப் பற்றிய கட்சியின் கொள்கை வழியை மேலும் கறாராகப் பின்பற்றுவது குறிப்பாயும் முக்கியமானது என்பதையும், அவர்களது தேவைகளின் பால் மேலும் ஆதரவான தோரணையை வெளிப்படுத்த வேண்டும் என்பதையும், வட்டார அதிகாரிகளின் தன்னிச்சையான செயல்களுக்கு முடிவு கட்டி விவசாயிகளுடன் உடன்பாட்டுக்கு வர முயற்சி செய்ய வேண்டும் என்பதையும் எட்டாவது காங்கிரஸ் அங்கீகரிக்கிறது.

1) நடுத்தர விவசாயிகளைக் குலாக்குகளுடன் சேர்த்துக் குழப்புவதும், குலாக்குகளுக்கு எதிராக நெறியாண்மை செய்யப்பட்ட நடவடிக்கைகளை ஏதேனும் ஓர் அளவுக்கு அவர்கள் பக்கம் இயக்கிவிடுவதும், சோவியத் அரசாங்கத்தின் எல்லா அரசாணைகளையும் அதன் கொள்கை முழுவதையும் மட்டுமின்றி கம்யூனிசத்தின் எல்லா அடிப்படைக் கோட்பாடுகளையும் படுமோசமாக மீறிச் செயல்படுவதாகும். அக்கோட்பாடுகளின் படி பாட்டாளி வர்க்கத்துக்கும் நடுத்தர விவசாயிகளுக்கும் இடையிலான உடன்பாடானது, முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்காக பாட்டாளி வர்க்கம் தொடுத்துள்ள தீர்மானகரமான போராட்ட கட்டத்தில் சுரண்டல் அனைத்தையும் ஒழிப்பதற்குரிய வேதனையற்ற மாறுதல் கட்டத்திற்கான நிபந்தனைகளில் ஒன்றாகும்.

2) ருஷ்யாவில் மட்டுமன்றி தலையாய முதலாளித்துவ

நாடுகளிலும் கூட விவசாயத் தொழில் நுணுக்கம் தொழில் துறை தொழில் நுணுக்கத்திற்குப் பின்தங்கி நிற்பதன் காரணமாக ஒப்பளவில் வலுவான பொருளாதார ஆதாரமுடைய நடுத்தர விவசாயிகள் பாட்டாளி வர்க்கப் புரட்சி துவங்கிய பின்னரும் மிக நீண்ட காலம் தொடர்ந்து நிலவுவார்கள். எனவே, போர்த்தந்திரத் துறையில் கிராமங்களில் இருக்கும் சோவியத்துகளின் ஊழியர்களும் கட்சி ஊழியர்களைப் போலவே நடுத்தர விவசாயிகளுடன் நீண்ட கால ஒத்துழைப்பை எதிர் நோக்க வேண்டும்.

3) நடுத்தர விவசாயிகள் மற்றவர் உழைப்பில் லாபமடைபவர்கள் அல்ல என்பதால் அவர்கள் சுரண்டலாளர்கள் அல்ல எனும் விஞ்ஞான சோஷலிசத்தின் மூலவுண்மையை நாட்டுப்புறத்தில் உள்ள எல்லா சோவியத்துகளின் ஊழியர்களும் தெளிவாயும் தீர்க்கமாயும் புரிந்து கொள்வதைக் கட்சி எப்படியாவது உறுதிப்படுத்த வேண்டும். சிறு உற்பத்தியாளர்களின் இத்தகைய வர்க்கம் சோஷலிசத்தால் நஷ்டமடையப் போவதில்லை ஆனல் இதற்கு நேர்மாருக, ஆக ஜனநாயகமான குடியரசிலும் கூட ஆயிரம் பல்வேறு வழிகளில் அதைச் சுரண்டிவரும் மூலதனத்தின் ஆதிக்கத்தை அகற்றி எறிவது மூலம் பெருமளவில் நன்மை பெறும்.

இவ்வாறு, நாட்டுப்புறப் பகுதிகளில் பிழையின்றிப் பிரயோகிக்கப்படும் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் கொள்கை, வெற்றிவாகை சூடிய பாட்டாளிகளுக்கும் நடுத்தர விவசாயிகளுக்கும் இடையே நேச உறவையும் உடன்பாட்டையும் உறுதிப்படுத்துகிறது.

4) எல்லா வகையான கூட்டுறவுச் சங்கங்களையும் நடுத்தர விவசாயிகளின் விவசாயக் கம்யூன்களையும் ஊக்குவிக்கும் அதேபோதில், சோவியத் ஆட்சி அதிகாரத்தின் பிரதிநிதிகள் அவற்றை நிறுவும் வேலையில் சிறிதளவும் பலவந்தத்தைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது, விவசாயிகளின் சொந்த முன்முயற்சியால் அவர்களாலேயே நிறுவப்படும், அவற்றினல் விளையும் பயன்கள் நடைமுறையில் நிரூபணமாகிய சங்கங்கள் மட்டுமே தகுதியுடையவை. இந்தக் காரியத்தில் மட்டுமிஞ்சிய அவசரம் தீமை விளைக்கும். ஏனெனில் இது

நடுத்தர விவசாயிகள் மத்தியில் புது முறைகளுக்கு எதிரான தப்பெண்ணங்களை வலுப்படுத்த மட்டுமே உதவும்.

விவசாயிகளைக் கம்யூன்களுக்குள் கொண்டுவருவதற்காக நேரடியாக மட்டும் அல்ல மறைமுகமாகக் கூட நிர்ப்பந்தம் செலுத்த அனுமதிக்கும் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் பிரதிநிதிகள் கறாராயும் குற்றத்திற்குப் பொறுப்பாளிகளாக்கப்பட்டு, நாட்டுப் புறப் பகுதிகளில் வேலை செய்வதில் இருந்து நீக்கம் செய்யப்பட வேண்டும்.

5) பயனீட்டுக்கு உடைமைகளை மேற்கொள்ளும் தன்னிச்சையான எல்லா உத்தரவுகளும், அதாவது மத்திய அதிகார அமைப்புகள் பிறப்பித்த சட்டங்களின் சரியான ஷரத்துக்களுக்கு இசைவாக இல்லாத உத்தரவுகளும் இடுவோர் தாட்சண்யமின்றித் தண்டிக்கப்பட வேண்டும். இந்தத் துறையில் விவசாயத் துறை மக்கள் கமிசாரகம், உள்துறை மக்கள் கமிசாரகம் மற்றும் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி ஆகியவற்றின் கண்காணிப்பு வலுப்படுத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்துகிறது.

6) இப்போது, முதலாளிகளின் கொள்ளைக்கார நலன்களுக்காக நடைபெற்ற நாலாண்டு கால ஏகாதிபத்தியப் போர் உலகின் எல்லா நாடுகளிலும் விளைத்துள்ள கடுமையான குழப்பம் ருஷ்யாவில் குறிப்பாயும் கடுமையாகி விட்டதால் நடுத்தர விவசாயிகள் ஒரு சங்கடமான நிலையில் இருக்கிறார்கள்.

இதன் காரணமாக, அவசர வரி பற்றி சோவியத் அரசாங்கம் பிறப்பித்த சட்டம், உலகிலுள்ள எல்லா முதலாளித்துவ அரசாங்கங்களும் பிறப்பித்துள்ள எல்லாச் சட்டங்களில் இருந்தும் தனிவிலக்கான முறையில் வரிப் பளு முழுவதையும் போரின் போது குறிப்பாயும் செல்வம் திரட்டிய, சுரண்டலாளர் விவசாயிகளின் சிறிய அளவில் பிரதிநிதிகளான குலாக்குகள் மீது சுமத்தும்படி வற்புறுத்தியுள்ளது. நடுத்தர விவசாயிகளிடம் மிகவும் லேசான வரிகளே வசூலிக்கப்பட வேண்டும், இந்தத் தொகை அவர்களது சக்திக்கு முற்றிலும் உட்பட்டதாயும் அவர்களுக்கு பெரும் பாரமாக இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அவசர வரியை வசூலிப்பதில், இதனுல் மொத்த வரிவசூல் குறைந்து போக நேரிட்டாலும் சரி, நடுத்தர விவசாயிகள் பால் எப்படியும் சலுகைநயம் காட்டப்பட வேண்டும் என்று கட்சி கோருகிறது.

7) விவசாயத்தில் திறனை உயர்த்தும் பொருட்டும், விவசாயிகளின் வேலை நிலைமைகள் மற்றும் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்த உத்தரவாதம் செய்யவும், நடுத்தர விவசாயிகளுக்கு நகரப்புறத் தொழிற்துறைப் பண்டங்களை, விசேஷமாயும் விவசாயக் கருவிகள், விதைகள் மற்றும் பல்வேறு சாதனங்களை வழங்குவது மூலம் பிரதான முறையில் விவசாயிகளுக்கு சோஷலிஸ்டு அரசு சாத்தியமான அளவு விரிவான உதவி புரிதல் வேண்டும்.

இப்போதைய பொருளாதாரக் குழப்பம் இந்த நடவடிக்கைகள் உடனடியாயும் முழுமையாயும் அமுல் நடத்தப்படுவதை அனுமதிக்காத பட்சம், இன்றைய இடர்ப்பாடான தருணத்தில் ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு ஆதரவாக மெய்யான உதவி வழங்குவதற்குரிய சாத்தியமான எல்லா வழிவகைகளையும் நாடுவது வட்டார சோவியத் அதிகாரிகளின் கடமையாகும். இந்தச் செயல் நோக்கத்திற்காக ஒரு பெரிய அரசு நிதியை நிறுவுவது அவசியம் என்று கட்சி காண்கிறது.

8) குறிப்பாயும், சோவியத் அரசாங்கம் பிறப்பித்துள்ள சட்டத்தை மெய்யாகவும் முழுமையாகவும் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இச்சட்டம் சுற்றுப்புற நடுத்தர விவசாயிகளுக்கு உடனடியான சர்வாம்ச உதவியை வழங்கும்படி அரசுப் பண்ணைகளையும், விவசாயக் கம்யூன்களையும் இதே போன்ற இதர சங்கங்களையும் பணிக்கிறது. இத்தகைய மெய்யான உதவியின் அடிப்படையில் மட்டுமே நடுத்தர விவசாயிகளுடன் உடன்பாட்டை எட்டுவது சாத்தியமாகும். இந்த வழியில் மட்டுமே அவர்களது நம்பிக்கையைப் பெற முடியும், பெற வேண்டும்.

கட்சி வேலைத்திட்டத்தின் விவசாயத் துறை பகுதியில் வகுத்து முன்வைத்துள்ள எல்லா அம்சங்களையும் உடனடியாக, மெய்யாகச் செயல்படுத்த வேண்டுவதன் அவசியத்தை

இந்தக் காங்கிரஸ் எல்லாக் கட்சி ஊழியர்களின் கவனத்துக்கும் கொண்டுவருகிறது, அவையாவன:

அ) விவசாயிகள் நிலத்தைப் பயன்படுத்துவது பற்றி ஒழுங்கு செய்தல் (சிதறலான பங்கு நிலங்கள் மற்றும் திறந்த நில அமைப்பு முறை ஆகியவற்றை ஒழிப்பது இத்தியாதி), ஆ)விவசாயிகளுக்கு மேம்பட்ட விதைகள் மற்றும் செயற்கை உரங்களை வழங்குவது, இ) விவசாயிகள் கால்நடை இனங்களை மேம்படுத்துவது, ஈ) விவசாய விஞ்ஞான அறிவைப் பரப்புவது, உ) விவசாயிகளுக்கு விவசாய விஞ்ஞான உதவி, ஊ) சோவியத்துகளுக்குச் சொந்தமான ரிப்பேர் பட்டறைகளில் விவசாயிகளின் பண்ணைக் கருவிகளைப் பழுதுபார்த்தல், எ) கருவிகளை வாடகைக்கு விடும் மையங்கள், சோதனை நிலையங்கள், மாதிரி வயல்கள் ஆகியவற்றை நிறுவுவது இத்தியாதி, ஏ) விவசாயிகள் நிலங்களை மேம்படுத்தல்.

9) விவசாய உற்பத்தியை அதிகரிப்பது, விசேஷமாயும் விவசாயப் பண்டங்களைப் பதப்படுத்துவது, விவசாயிகள் நிலங்களை மேம்படுத்துவது, கைவினைஞர் தொழில்களுக்கு ஆதரவளிப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட விவசாயிகளின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு நிதி மற்றும் ஸ்தாபனத் துறையில் விரிவான உதவி வழங்க வேண்டும்.

10) கட்சியின் தீர்மானங்களோ சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அரசாணைகளோ நடுத்தர விவசாயிகளுடன் உடன்பாடு என்ற கொள்கையில் இருந்து என்றுமே வழுவியதில்லை என்பதை இந்தக் காங்கிரஸ் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் நினைவூட்டுகிறது. உதாரணமாக, நாட்டுப்புறப் பகுதிகளில் சோவியத் ஆட்சி அதிகாரத்தை நிறுவுவது குறித்த மூல முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தில் மக்கள் கமிசாரவையின் தலைவரும், உணவுத் துறை மக்கள் கமிசாரும் கையொப்பமிட்ட ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. ஏழை விவசாயிகள் கமிட்டிகள் அமைக்கப்படும்போது இந்தக் கமிட்டிகளில் நடுத்தர விவசாயிகளின் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுவதன் அவசியம் சுட்டிக் காட்டப்பட்டது.*

---

* 1918, ஆகஸ்ட் 18 அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ்தியா, இதழ் 177 பார்க்க.—ப-ர்.

ஏழை விவசாயிகள் கமிட்டிகள் ரத்துச் செய்யப்பட்டபோது, வோலஸ்து சோவியத்துகளில் நடுத்தர விவசாயிகளின் பிரதிநிதிகளை உட்படுத்த வேண்டுவதன் அவசியத்தை சோவியத்துகளின் அகில ருஷ்ய காங்கிரஸ் மீண்டும் சுட்டிக் காட்டியது. வருங்காலத்திலும்கூட தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கம் மற்றும் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையில் ஒரு புறம் பாட்டாளி வர்க்கம் மற்றும் ஏழை விவசாயிகளுக்கும் மறு புறம் நடுத்தர விவசாயிகளுக்கும் இடையிலான இந்த உடன்பாட்டு உணர்வு ஊடுபரவி நிலவ வேண்டும்.

பிராவ்தா, இதழ்கள் *62, 64, 70, 71ல் 1919 மார்ச் 22, 25 மற்றும் ஏப்ரல் 1, 2லும் வெளியிடப்பட்டது*	நூல் திரட்டு, *தொகுதி 38, பக்கங்கள் 151-173, 174-184, 187-205, 207-210*

கிழக்கு முனையில் காணும் நிலைமை பற்றி ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யின் மத்தியக் கமிட்டியின் ஆய்வுரைகள்

கிழக்கு முனையில் கல்ச்சாக் அடைந்துவரும் வெற்றிகள் சோவியத் குடியரசுக்கு மிகவும் இடரார்ந்த அபாயத்தை உருவாக்கியுள்ளன. கல்ச்சாக்கைத் தகர்ப்பதற்கு நமது முயற்சிகள் உச்சபட்சமான அளவுக்குச் செய்யப்பட வேண்டும்.

எனவே, எல்லாக் கட்சி நிறுவனங்களும் பின்வரும் நடவடிக்கைகளில் தமது முயற்சிகளை முதலாவதாயும் முக்கியமாயும் ஒருமுகப்படுத்த வேண்டும் என்றும், நாட்டின் தீவிரமான பாதுகாப்பில் தொழிலாளி வர்க்கத்தின் மேலும் விரிவான பகுதிகளை ஈடுபடுத்தும் பொருட்டு இவை கட்சி நிறுவனங்களால் மட்டுமின்றி குறிப்பாயும் தொழிற்சங்கங்களாலும் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் மத்தியக் கமிட்டி நெறிமுறை செய்கிறது.

1. 1919 ஏப்ரல் 11ந் தேதி வெளியிடப்பட்ட படைதிரட்டு உத்தரவை எல்லா வழிகளிலும் ஆதரிப்பது.

1919 ஏப்ரல் 10ந் தேதி மக்கள் கமிசாரவையால் அரசாணையிடப்பட்ட படைதிரட்டுக்கு சிறிதளவும் தவக்கம் செய்யாமல் அடுத்த சில நாட்களுக்குள்ளே மிகவும் வலுவான உதவிகளை வழங்குவதற்குக் கட்சி மற்றும் தொழிற்சங்கங்களின் சகல சக்திகளையும் உடனே ஒன்றுதிரட்ட வேண்டும்.

படைதிரட்டப்பட்ட நபர்கள் தொழிற்சங்கங்களின் செயலூக்கமுள்ள பங்கேற்பு இருப்பதை உடனே காணும்படி செய்ய வேண்டும், தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவு இருப்பதை உணரும்படி செய்ய வேண்டும்,

போர்முனைக்கு அவன் உடனே புறப்பட்டுச் செல்வது அவனது உணவு நிலைமையில் மேம்பாடு ஏற்படுத்த உதவும் என்பதை படைதிரட்டப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் குறிப்பாகத் தெளிவாக்க வேண்டும். காரணம் முதலாவதாயும் தானியமுடைய போர் முனை மண்டலத்தில் படையாளிகள் மேலும் சிறந்த உணவுப் பங்கீடைப் பெறுவார், இரண்டாவதாக பட்டினியால் வாடும் குபெர்னியாக்களுக்குள் கொண்டு வரப்படும் உணவு மேலும் குறைந்தளவான மக்களிடை வினியோகிக்கப்படும், மூன்றுவதாக போர் முனைப் பகுதிகளில் இருந்து செஞ்சேனை வீரர்களின் குடும்பங்களுக்கு உணவுப் பொட்டலங்களை அனுப்ப விரிவான ஏற்பாடு செய்யப்படும்.

படைதிரட்டலுக்கும், படைதிரட்டப்பட்டோருக்கும் உதவி புரிய என்ன செய்யப்பட்டுள்ளது என்பது பற்றிய வாரந்தர அறிக்கையை எவ்வளவு சுருக்கமாக இருப்பினும் சரி கட்சி மற்றும் தொழிற் சங்கங்களின் எல்லா நிறுவனங்களிடமிருந்தும் மத்தியக் கமிட்டி கோருகிறது.

2. போர் முனைக்கு அருகில் இருக்கும் பகுதிகளில், குறிப்பாயும் வோல்கா பக்கத்தில் இருக்கும் பிராந்தியங்களில் தொழிற்சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஆயுதபாணிகளாக்கப்பட வேண்டும். ஆயுதப் பற்றுக்குறை எற்படுமாளுல் செஞ்சேனைக்குச் சாத்தியமான சகல உதவிகளையும் வழங்கவும், ஏலாதோருக்கு மாற்றீடாகச் செயல்படவும் அனைவரும் அணிதிரட்டப்பட வேண்டும்.

தொழிற்சங்கங்கள் தாமே தமது உறுப்பினர்களில் 50 சதவிகிதத்தினரை உடனடியாகப் படையில் திரட்ட முடிவு செய்த பொக்ரோவ்ஸ்க் போன்ற நகரங்கள் நமக்கு உதாரணமாகத் திகழ வேண்டும். தலை நகரங்களும் பெரிய தொழில் துறை மையங்களும் பொக்ரோவ்ஸ் நகருக்குப் பின்தங்கி விடக் கூடாது.

சொந்த ஊரில் அறவே இன்றியமையாதவர்கள் அல்லாத எல்லோரையும் வோல்கா மற்றும் உரால் பிரதேசத்திற்குப் போரிடுவதற்காக அனுப்பிவைக்கும் பொருட்டு எல்லா இடங்களிலுமுள்ள தொழிற்சங்கங்கள் தமது சொந்த சக்திகளை

யும் சாதனங்களேயும் பயன்படுத்தித் தமது உறுப்பினர்களின் பெயர்ப்பதிவைச் சரிபார்க்க வேண்டும்.

3. படைக்காகத் திரட்டப்படுவோர், ஏற்கெனவே திரட்டப்பட்டோர் மற்றும் செஞ்சேனே வீரர்கள் மத்தியில் விசேஷமாக கிளர்ச்சிப் பிரசார வேலேயைத் தீவிரப்படுத்துவதற்கு மிகவும் முக்கியமான கவனம் அளிக்கப்பட வேண்டும். வழக்கமான கிளர்ச்சிப் பிரசார முறைகளான சொற்பொழிவுகள், கூட்டங்கள் ஆகியவை போதுமானவையல்ல. செஞ்சேனே வீரர்கள் மத்தியில் தொழிலாளர் தனியாகவோ ஒரு குழுவாகவோ கிளர்ச்சிப் பிரசாரம் நடத்த வேண்டும், சாதாரணத் தொழிலாளர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள் கொண்ட இத்தகைய குழுக்கள் படைவீடுகளில், செஞ்சேனே யூனிட்டுகளில் மற்றும் ஆலேகளில் பிரத்தியேகமாக நியமிக்கப்பட வேண்டும். தொழிற்சங்கங்கள் தமது உறுப்பினர்கள்அனேவரும் வீட்டுக்கு வீடு சென்று கிளர்ச்சிப் பிரசாரம் செய்தல், துண்டுப் பிரசுரங்களே வினியோகித்தல் மற்றும் நேரடியாக உரையாடுதல் ஆகியவற்றைச் செய்யும் வகையில் உரிய கவனம் மேற்கொள்ள வேண்டும்.

4. அலுவலக ஊழியர்களாக இருக்கும் ஆடவர் அனேவருக்கும் மாற்றுக மகளிர் நியமிக்கப்பட வேண்டும். இந்தப் பணிக்காக கட்சியிலும் தொழிற்சங்கங்களிலும் புதிய பெயர்ப்பதிவு நிறைவேற்றப்பட வேண்டும்.

செஞ்சேனேக்கு உதவிபுரியும் சொந்த முறையில் அவர்கள் வகிக்கும் பங்கினேச் சுட்டிக் காட்டும் வகையில் தொழிற்சங்க உறுப்பினர்கள், அலுவலக ஊழியர்கள் அனேவருக்கும் விசேஷக் கார்டுகள் வழங்கப்படும்.

5. வட்டாரங்களிலும் மையத்திலும் உதவிக் குழுமங்கள் அல்லது செயல் கமிட்டிகள் தொழிற்சங்கங்கள், ஆலேக் கமிட்டிகள், கட்சி நிறுவனங்கள் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் உடனடி நிறுவப்படும். அவற்றின் முகவரிகள் வெளியிடப்பட வேண்டும். மிகவும் விரிவான முறையில் பொதுமக்களுக்கு இவை குறித்து தகவல் தரப்படும். படையில் திரட்டப்படவிருக்கும் ஒவ்வொரு நபரும், ஒவ்வொரு செஞ்சேனே வீரனும், தென் பகுதிக்கு, தோன் அல்லது உக்

ரேனியாவுக்கு உணவு வழங்கு வேலைக்குச் செல்ல விரும்பும் ஒவ்வொரு நபரும் அண்டையில் உதவிக் குழுமம் அல்லது செயல் கமிட்டி இருக்கிறது என்பதை அறிந்திருக்க வேண்டும். இதை ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் எளிதில் அணுகலாம், அங்கு ஆலோசனையோ நெறிமுறையோ பெறலாம், அவனுக்கு ராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வது எளிதாக்கப்படும் இத்தியாதி என்பதை அறிந்திருக்க வேண்டும்.

செஞ்சேனைக்கு தளவாடங்கள் பெற உதவ வேண்டுவது இந்தக் குழுமங்களின் விசேஷக் கடமையாக இருக்க வேண்டும். ஆயுதங்கள், உடைகள் ஆகியவற்றின் தரவை நாம் மேம்படுத்த முடியுமானல் நமது சேனையின் வலிமையை மிகப் பெருமளவுக்கு அதிகரிக்க முடியும். மக்கள் மத்தியில் இன்னும் கணிசமான அளவில் ஆயுதங்கள் இருக்கின்றன. அவை ஒளித்துவைக்கப்பட்டு இருக்கின்றன அல்லது சேனைக்காகப் பயன்படுத்தப்படாது கிடக்கின்றன. சேனைக்குத் தேவைப்படும் பல்வேறு வகையான பொருட்களின் கணிசமான ஆலை இருப்புக்கள் இன்னும் உள்ளன. இவற்றை விரைவில் கண்டறிந்து சேனைக்கு அனுப்பி வைக்க வேண்டும். வழங்கு துறைக்குப் பொறுப்பாக இருக்கும் சேனை அமைப்புகளுக்கு பொது மக்களே உடனடியான விரிவான திறமான உதவி வழங்கிட வேண்டும். இந்த விஷயத்தில் சகல முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும்.

6. செஞ்சேனை அணிகளுக்கும், தோன், உக்ரேனிய பிரதேசங்களுக்கான உணவு படைப் பிரிவுகள் மற்றும் உணவுப் படைகள் அமைக்க தொழிற்சங்கங்கள் விவசாயிகளை, குறிப்பாயும் விவசாயி இளைஞர்களை பயிர்த் தொழில் இல்லாத குபெர்னியாக்களில் விரிவாகத் திரட்ட வேண்டும்.

இந்தச் செயல்பாட்டை இப்போது இருக்கும் அளவைப் போல பல மடங்கு விரிவாக்க முடியும், விரிவாக்க வேண்டும். இது தலைமை நகரங்கள் மற்றும் பயிர்த் தொழில் இல்லாத குபெர்னியாக்களில் பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவி செய்யவும் அதே சமயம் செஞ்சேனையை உறுதிப்படுத்தவும் துணைபுரியும்.

7. மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுபுரட்சியாளர் சம்பந்தமான இன்றைய நிலைமையிலான கட்சிக் கொள்கை கல்ச்சாக்குக்கு வேண்டுமென்றேயோ அல்லது அறியாமலோ உதவி செய்யும் பேர்களைச் சிறைப்படுத்துவது என்பதேயாகும். உழைக்கும் மக்களின் நமது குடியரசில் கல்ச்சாக்கை எதிர்த்துப் போராட செயல் மூலம் உதவாத எவரையும் நாம் அனுமதிக்க மாட்டோம். ஆனால் இத்தகைய உதவி வழங்க விரும்பும் பேர்வழிகள் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மத்தியில் இருக்கிறார்கள். இத்தகைய பேர்களை உற்சாகப்படுத்தி நடைமுறை வேலைப் பொறுப்புக்களை அளிக்க வேண்டும். பிரதானமாயும் பின்னணியில் செஞ்சேனைக்குத் தொழில் நுணுக்க உதவி அளிக்கும் வகையில் ஈடுபடுத்தப் பட வேண்டும், அவர்களது வேலை கறாராக கண்காணிக்கப் பட வேண்டும்.

புரட்சிகரமான வழியில் வேலை தொடங்கும் படியும், பழைய மாறாத மாதிரி முறைகளோடு நின்று விடாதிருக்கும் படியும் கட்சியின் எல்லா நிறுவனங்களையும் எல்லாத் தொழிற் சங்கங்களையும் மத்தியக் கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

கல்ச்சாக்கை நாம் முறியடிக்க முடியும். நாம் விரைவாகவும் இறுதியாகவும் வெற்றி பெற முடியும், காரணம் தென் பகுதியிலான நமது வெற்றிகளும் நாள்தோறும் மேம்பட்டு வருவதும், நமக்கு சாதகமாக மாறிவருவதுமான சர்வதேச நிலைமையும் நமது இறுதி வெற்றிக்கு உத்தரவாதம் செய்யும்.

நாம் சகல முயற்சிகளையும் ஈடுபடுத்த வேண்டும், புரட்சிகர ஊக்கத்தை வெளிப்படுத்த வேண்டும், கல்ச்சாக் துரிதமாக முறியடிக்கப்படுவார். வோல்கா, உரால் மற்றும் சைபீரியாவைப் பாதுகாக்கவும் மீட்டுப் பெறவும் முடியும், இதைச் செயல்படுத்த வேண்டும்.

மத்தியக் கமிட்டி,
ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக்
கட்சி (போல்ஷிவிக்)

1919 ஏப்ரல் 11ல் எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி *38*,
பக்கங்கள் *271-274*

ஹங்கேரிய தொழிலாளர்களுக்கு வாழ்த்து [109]

தோழர்களே, ஹங்கேரிய சோவியத் தலைவர்களிட மிருந்து நாம் பெற்றுள்ள செய்திகள் நமக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகின்றன. ஹங்கேரியில் சோவியத் அரசாங்கம் இரண்டு மாதங்களுக்கு சற்று அதிக காலம் மட்டுமே நிலவியிருந்தது, இருப்பினும் ஸ்தாபனத்தைப் பொருத்த வரை ஹங்கேரிய பாட்டாளிகள் நம்மை ஏற்கெனவே விஞ்சி விட்டார்கள் போலும். இது புரிந்து கொள்ளக் கூடியதே, ஏனெனில் ஹங்கேரியில் மக்களின் பொதுவான கலாசாரத் தரம் மேலும் உயர்வானது, அதோடுகூட மொத்த மக்கள் தொகையில் தொழிற்துறை தொழிலாளர்களின் விகிதம் அளவிடற்கரிய வகையில் மிகவும் அதிகம் (புடாபெஷ்டில் இன்றைய ஹங்கேரியின் மக்கள் தொகையான 80 லட்சம் பேரில் 30 லட்சம் பேர் உள்ளனர்), கடைசியாக ஹங்கேரியில் சோவியத் அமைப்பு முறைக்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு மாறிச் செல்வது இணையற்ற வகையில் மேலும் எளிதாயும் மேலும் சமாதான முறையிலும் நடைபெற்றுள்ளது.

இந்தக் கடைசி நிகழ்ச்சி குறிப்பாயும் முக்கியமானது. ஒப்பீட்டளவில் ''சமாதான பூர்வ'' முதலாளித்துவமும் முதலாளித்துவ நாடாளுமன்ற அமைப்பு முறையும் முற்றிலும் அற்பவாதத்தன்மை கொண்ட தப்பெண்ணங்களை பல ஆண்டுகளாக வளர்த்து விட்டுள்ளன. சமூக-தேசியவெறிப் போக்கு, காவுத்ஸ்கிவாதப் போக்கு இரண்டையும் சேர்ந்த ஐரோப்பிய சோஷலிஸ்டுத் தலைவர்களில் பெரும்பான்மை

யினர் அவற்றுக்குப் பெருமளவுக்கு இரையாகியுள்ளனர். எனவே சோவியத் ஆட்சி அதிகாரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ருல் என்ன என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தத் தலைவர்களைத் தனது பாதையில் இருந்து அகற்ருவிட்டால், அதன் செல் வழியில் குறுக்கிடாதபடி துடைத்தழிக்காவிட்டால் பாட்டாளி வர்க்கம் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடுதலை லட்சியப் பணியினை ஆற்ற முடியாது. இந்தப் பேர்வழிகள் ருஷ்யாவின் சோவியத் ஆட்சி அதிகாரம் பற்றிய முதலாளித்துவப் பொய்யுரைகளை முழுமையாக அல்லது அரைகுறையாக நம்பிஞர்கள், சோவியத் ஆட்சி அதிகாரத்தில் உருவகம் பெற்றுள்ள புதிய பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தை, உழைக்கும் மக்களுக்கான ஜனநாயகத்தை, சோஷலிஸ்டு ஜனநாயகத்தை, அவர்கள் அடிமைத்தனமாக வழிபாடு செய்யும், ''தூய ஜனநாயகம்'' அல்லது பொதுவான ''ஜனநாயகம்'' என்று அழைக்கும் முதலாளித்துவ ஜனநாயகத்திடமிருந்து இனம் பிரித்துக் காண இவர்களால் முடியவில்லை.

இந்தக் குருட்டுத்தனமான பேர்வழிகள் முதலாளித்துவத் தப்பெண்ணங்களில் கட்டுண்டு, முதலாளித்துவ ஜனநாயகத்தில் இருந்து பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்கும், முதலாளித்துவ சர்வாதிகாரத்தில் இருந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் இட்டுச் செல்லும் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். ருஷ்யாவின் சோவியத் ஆட்சி அதிகாரத்திலும் ருஷ்யாவில் அதன் வளர்ச்சியின் வரலாற்றிலுமான ஒரு சில பிரத்தியேக அம்சங்களை ஒரு சர்வதேசப் புலப்பாடு என்ற முறையிலான சோவியத் ஆட்சி அதிகாரம் என்ற கருத்துடன் போட்டுக் குழப்புகிருர்கள்.

ஹங்கேரிய பாட்டாளி வர்க்கப் புரட்சியானது குருடரும் விழிதிறந்து பார்க்க உதவுகிறது. ஹங்கேரியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு மாறிச் சென்றதன் வடிவம் ருஷ்யாவிலிருந்து முற்றிலும் வேருனது. அங்கு முதலாளித்துவ அரசாங்கம் சுயவிருப்பமாக ராஜீனுமாச் செய்தது, ஒரு கம்யூனிஸ்டு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளி வர்க்க

ஒற்றுமை, சோஷலிஸ்டு ஒற்றுமை உடனடியாக மீட்டமைக் கப்பட்டது. சோவியத் ஆட்சி அதிகாரத்தின் தன்மை இப்போது முற்றிலும் துலாம்பரமாகியுள்ளது. பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில், உழைக்கும் மக்களின் ஆதரவைப் பெற்ற ஆட்சியின், உலகில் எங்காவது இப்போது நிலவும் சாத்தியக்கூறுடைய ஆட்சியின் ஒரே வடிவம் சோவியத் ஆட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது துலாம் பரமாகிவிட்டது.

இந்த சர்வாதிகாரம், சுரண்டலாளர், முதலாளிகள், நிலப்பிரபுக்கள் மற்றும் அவர்களது அடியாட்களின் எதிர்ப்பை நசுக்கத் தாட்சண்யமற்ற கடுமையான விரைவான உறுதி யான பலப்பிரயோகம் பயன்படுத்தப்படுவதை முன்னனு மானிக்கிறது. இதைப் புரிந்து கொள்ளாதவர் எவராயினும் அவர் புரட்சியாளர் அல்லர், பாட்டாளி வர்க்கத்தின் தலை வர் அல்லது ஆலோசகர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட வேண்டும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சாரம் பலப்பிர யோகத்தில் மட்டுமோ அல்லது பிரதானமாயும் பலப்பிர யோகத்திலோ இல்லை. அதன் முக்கிய அம்சம் உழைக்கும் மக்களின் முன்னேறிய படைப்பிரிவின், அவர்களது முன் னணிப் படையின், அவர்களது ஏகத் தலைவனான பாட்டாளி வர்க்கத்தின் நிறுவன ஒழுங்கமைப்பும் கட்டுப்பாடும் ஆகும். பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோள் சோஷலிசத்தைக் கட்டு வது, சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபட்டிருப்பதை ஒழிப் பது, சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் உழைக் கும் மக்களாக்குவது, மனிதனை மனிதன் எவ்விதத்திலும் சுரண்டுவதற்கான அடிப்படையை அகற்றுவது என்பதாகும். இந்தக் குறிக்கோளை ஒரே அடியில் சாதிப்பது என்பது முடி யாது. இதற்கு முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத் துக்கு மாறிச் செல்லும் ஓரளவு நீடித்த காலப்பகுதி தேவை. காரணம், பொருள் உற்பத்தியை மறு சீரமைப்பது என்பது இடர்ப்பாடான காரியம், வாழ்க்கையின் எல்லாத் துறை களிலும் தீவிர மாற்றங்கள் ஏற்படக் காலாவகாசம் தேவை, காரியங்களை குட்டி முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவ

பாணியில் நடத்தி வரும் பழக்கத்தின் பேரளவான நிர்ப்பந்தத்தை நீண்டதும் பிடிவாதமானதுமான போராட்டம் மூலம் மட்டுமே வென்று சமாளிக்க முடியும். இதனால் தான் மார்க்ஸ், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரு முழுக் காலப் பகுதியை முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் காலப் பகுதி என்று குறிப்பிட்டார்.[110]

இந்த மாறிச் செல்லும் காலப் பகுதி முழுவதிலும் முதலாளிகளும் முதலாளித்துவ அறிவுஜீவிகள் மத்தியில் இருக்கும் அவர்களது கையாட்களும் புரட்சியை எதிர்ப்பார்கள். இவர்கள் உணர்வுபூர்வமாக எதிர்ப்பார்கள். குட்டி முதலாளித்துவப் பழக்கங்கள் மரபுகளால் மிகவும் தளையிடப்பட்டிருக்கும் விவசாயிகள் உள்ளிட்ட உழைக்கும் மக்களின் விரிவான பகுதியினர் பெரும்பாலும் அறியாமல் எதிர்ப்பார்கள். இந்தப் பிரிவினர் இடையே ஊசலாட்டங்கள் தவிர்க்கவொண்ணாதவை. ஓர் உழைக்கும் மனிதன் என்ற முறையில் விவசாயி சோஷலிசத்தை நோக்கி ஈர்க்கப்படுகிறான், முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை விட தொழிலாளர்களின் சர்வாதிகாரத்தை விரும்பித் தேர்கிறான். தானியம் விற்பவன் என்ற முறையில் விவசாயி முதலாளித்துவ வர்க்கத்தினை நோக்கி, சுதந்திர வாணிகத்தை நோக்கி ஈர்க்கப்படுகிறான், அதாவது ''பழக்கமான'' பழைய ''கால காலமான'' முதலாளித்துவத்திடம் திரும்பவும் ஈர்க்கப்படுகிறான்.

பாட்டாளி வர்க்கம் விவசாயிகளுக்கும், பொதுவாக குட்டி முதலாளித்துவப் பிரிவுகளுக்கும் தலைமை தாங்குவதற்கு இயல வேண்டுமானால் அதற்குத் தேவையாக இருப்பது பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம், ஒரு வர்க்கத்தின் ஆட்சி, அதன் ஸ்தாபனம் மற்றும் கட்டுப்பாட்டின் வலிமை, முதலாளித்துவத்தின் கலாசாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பத்தின் சகல சாதனைகளையும் அடிப்படையாக்கிய அதன் மையப்படுத்தப்பட்ட பலம், ஒவ்வொரு உழைக்கும் மனிதனின் மனப் போக்குடனுமான அதன் பாட்டாளி வர்க்கப் பண்பு ஒருமைப்பாடு, நாட்டுப்புறத்திலும் சிறு தொழில்களிலும் இருக்கும் அரசியலில் போதிய உறுதிப்பாடில்லாத, ஒற்றுமையில்லாத, போதிய வளர்ச்சியடையாத உழைக்கும்

மக்களிடையான அதன் தனிச் செல்வாக்கு ஆகியனவாகும். இங்கு பொதுவான ''ஜனநாயகம்'' பற்றியும் ''ஒற்றுமை'' அல்லது ''தொழிலாளர் ஜனநாயகத்தின் ஒற்றுமை'' பற்றியும், ''உழைக்கும் மனிதர்'' அனைவரின் ''சமத்துவம்'' பற்றியும் இத்தியாதிகள் குறித்த சொல்லடுக்கு ஜாலம்—இப்போதைய குட்டி முதலாளித்துவ சமூக-தேசியவெறியர் மற்றும் காவுத்ஸ்கிவாதிகள் இந்தளவுக்கு ஒரு தலையாக விருப்பம் காட்டும் இந்த சொல்லடுக்கு ஜாலம் அறவே பயனற்றது. சொல்லடுக்கு ஜாலம் கண்களில் புழுதியைத் தூவவும், மனதைக் குருடாக்கவும், பழைய மடமை, பழமைப் போக்கு மற்றும் முதலாளித்துவத்தின், நாடாளுமன்ற அமைப்பு முறையின், முதலாளித்துவ ஜனநாயகத்தின் பழகிப் படிந்து போன கூறுகளை வலுப்படுத்தவும் மட்டுமே செய்கிறது.

வர்க்கங்களை ஒழிப்பதற்கு நீண்ட கடினமான பிடிவாதமான வர்க்கப் போராட்டம் வேண்டும். இது முதலாளித்துவ ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகும், முதலாளித்துவ அரசு அழிக்கப்பட்ட பிறகும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்ட பிறகும் (பழைய சோஷலிசத்தின் மற்றும் பழைய சமூக-ஜனநாயகவாதத்தின் விஞ்ஞானக் கேடான பிரதிநிதிகள் கற்பனை செய்வது போல) **மறைந்து விடுவது இல்லை** ஆனால் அதன் வடிவங்களை மட்டுமே மாற்றிக் கொள்கிறது, பல வழிகளில் மேலும் மூர்க்கமடைகிறது.

முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்புக்கு எதிராகவும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பழமைவாதம், பழகிப் படிந்த மாமூல், உறுதியின்மை மற்றும் ஊசலாட்டத்தை எதிர்த்தும் வர்க்கப் போராட்டத்தின் வாயிலாகப் பாட்டாளி வர்க்கம் தனது ஆட்சி அதிகாரத்தை உறுதியாக வைத்திருக்க வேண்டும், தனது ஸ்தாபனச் செல்வாக்கை வலுப்படுத்த வேண்டும், முதலாளித்துவ வர்க்கத்தை விட்டு விலக அஞ்சியும், பாட்டாளி வர்க்கத்தைத் தயக்கத்துடன் பின்பற்றியும் வரும் அந்தப் பகுதிகளை ''நடுநிலைப்படுத்த'' வேண்டும். உழைக்கும் மக்களின் புதிய கட்டுப்பாட்டை, தோழமை பூர்வமான கட்டுப்பாட்டை, பாட்டாளிகளுடனான அவர்களது உறுதியான உறவை, பாட்டாளிகளுடனான அவர்களது

ஒற்றுமையை கெட்டிப்படுத்த வேண்டும். மத்திய காலங்களின் பண்ணை அடிமைக் கட்டுப்பாடு, பட்டினிக் கட்டுப்பாடு, முதலாளித்துவத்தின் கீழிலான 'சுதந்திரமான' கூலி அடிமைத்தனத்தின் கட்டுப்பாட்டுக்குப் பதிலாக அந்தப் புதிய கட்டுப்பாட்டை, சமுதாய உறவுகளின் புதிய அடித்தளத்தை வலுப்படுத்த வேண்டும்.

வர்க்கங்களை ஒழிப்பதற்கு ஒரு வர்க்கத்தின் சர்வாதிகாரம் நிலவும் கால கட்டம் அவசியம். அது குறிப்பாயும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களில் ஒன்றின் சர்வாதிகாரமாகவே இருக்க வேண்டும். அதனுல் சுரண்டலாளர்களை வீழ்த்த முடியும் என்பது மட்டுமல்ல, அவர்களது எதிர்ப்பைத் தாட்சண்யமின்றி நசுக்க முடியும் என்பது மட்டுமல்ல, அதோடு முதலாளித்துவ ஜனநாயகக் கண்ணோட்டம் முழுவதுடனும், பொதுவான சுதந்திரம் மற்றும் சமத்துவம் பற்றிய அற்ப வாதச் சொல்லடுக்கு ஜாலத்துடனும் சித்தாந்த ரீதியாக முறித்துக் கொள்ள முடியும் (உண்மையில் இந்த சொல்லடுக்கு ஜாலம் நீண்ட கால முன்பே மார்க்ஸ் நிதர்சனப்படுத்திக் காட்டியபடி பண்ட உடைமையாளர்களின் ''சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை'', முதலாளி மற்றும் தொழிலாளியின் ''சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை'' உணர்த்துகிறது).

இதற்கு மேலாக, மூலதனத்துக்கு எதிராகப் பல ஆண்டுகள் நடத்திய வேலைநிறுத்த மற்றும் அரசியல் போராட்டங்களின் மூலம் உருக்குப் போன்ற உறுதி பெற்றதும், போதனை பெற்று ஒன்று சேர்ந்து பயிற்சியடைந்ததுமான அந்த ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் சர்வாதிகாரம் மூலம் மட்டுமே வர்க்கங்களை ஒழிக்க முடியும்; அந்த வர்க்கம் மட்டுமே நகரப்புற, தொழிற்துறை, பெரு முதலாளித்துவக் கலாசாரத்தைத் தன்வயப்படுத்தி இருக்கிறது, அதைப் பாதுகாக்கவும், அதன் சாதனைகள் அனைத்தையும் பேணிக்காத்து மேலும் அபிவிருத்தி செய்யவும், எல்லா மக்களுக்கும் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்வதற்கான வைராக்கியமும் ஆற்றலும் கொண்டதாக விளங்குகிறது; அந்த வர்க்கம் மட்டுமே பழமையுடன் முறித்துக் கொண்டு ஒரு புதிய எதிர் காலத்துக்கான பாதையை துணிவுடன்

வெட்டி உருவாக்குவோர் மீது வரலாறு தவிர்க்க முடியாத வகையில் திணிக்கும் இன்னல்களை, சோதனைகளை, வறுமைத் துன்பத்தை, மாபெரும் தியாகங்களை சகிக்கும் ஆற்றலுடையதாக இருக்கிறது; அந்த வர்க்கம் மட்டுமே குட்டி முதலாளித்துவ, அற்பவாதத் தன்மை கொண்ட அனைத்தையும், குட்டி முதலாளித்துவ வர்க்கம், சிறிய சிப்பந்திகள், ''அறிவு ஜீவிகள்'' மத்தியில் அமோகமாகச் செழித்து வரும் இந்தப் பண்புகளையும் எதிர்த்துப் பகைமையும் வெறுப்பும் காட்டும் அருமையான உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கிறது. அந்த வர்க்கம் மட்டுமே ''உழைப்பு என்னும் கடுமையான பள்ளியில் பயின்று'' ஒவ்வொரு உழைக்கும் நபரும், நேர்மையான ஒவ்வொரு மனிதனும் அதன் உழைப்புத் திறமை கண்டு மதிக்கும் உத்வேகத்தைப் பெறும்படி செய்ய முடியும்.

ஹங்கேரியத் தொழிலாளர்களே! தோழர்களே! உண்மையான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கொள்கை மேடை மீது ஒரே அடியில் எல்லா சோஷலிஸ்டுகளையும் ஒற்றுமைப்படுத்தியுள்ள உங்களது திறமையின் மூலம் நீங்கள் சோவியத் ருஷ்யாவைக் காட்டிலும் சிறந்த உதாரணத்தினை உலகின் முன் வைத்திருக்கிறீர்கள். ஆன்டான்டுக்கு எதிரான ஒரு கடுமையான போரில் நீங்கள் உறுதியுடன் நிற்க வேண்டிய மிகவும் உகந்ததும் மிகவும் கடினமானதுமான பணியை எதிரிடவிருக்கிறீர்கள். உறுதியுடன் இருங்கள். நேற்று உங்களுக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் ஆதரவு தந்த சோஷலிஸ்டுகள் மத்தியிலோ, குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் மத்தியிலோ ஊசலாட்டம் வெளிப்படுமானால் அதை தாட்சண்யமின்றி ஒடுக்குங்குகள். போரில் பேடிக்கு நியாயமான கதி துப்பாக்கி வெடியே.

நீங்கள் ஒரே நியாயமான நீதியான உண்மையில் புரட்சிகரமான போரை நடத்தி வருகிறீர்கள், இது ஒடுக்குவோரை எதிர்த்து ஒடுக்கப்பட்டோர் நடத்தும் போர், சுரண்டலாளர்களை எதிர்த்து உழைக்கும் மக்கள் நடத்தும் போர், சோஷலிசத்தின் வெற்றிக்காக நடத்தப்படும் போர். உலகம் முழுதிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தின் நேர்மையான உறுப்பி

னர்கள் அனைவரும் உங்கள் பக்கம் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியை அண்மையில் கொண்டுவருகிறது.

உறுதியாக இருங்கள்! வெற்றி உங்களுக்கே!

1919, மே *27*. லெனின்

நூல் திரட்டு,
தொகுதி *38*,
பக்கங்கள் *384-388*

மாபெரும் தொடக்கம்

போர்முனையல்லாத உட்பகுதிகளில் தொழிலாளர்களின் தீரம். ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்''* குறித்து

செஞ்சேனை வீரர்களது தீரத்துக்குப் பல எடுத்துக்காட்டுகள் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. கல்ச்சாக்கையும் தெனீக்கினையும் மற்றும் நிலப்பிரபுக்கள், முதலாளிகளுடைய பிற படைகளையும் எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் தொழிலாளர்களும் விவசாயிகளும் அஞ்சாநெஞ்சமும் சகிப்புத்தன்மையும் அடிக்கடி வெளிக்காட்டி விந்தைகள் புரிந்து சோஷலிசப் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாக்கின்றனர். கொரில்லா மனப்பாங்கும் அயர்வும் கட்டுப்பாடின்மையும் சமாளிக்கப்பட்டு வருகின்றன. மெள்ள நடந்தேறும் கடினமான நிகழ்ச்சிப் போக்கே என்றாலும் இது யாவற்றையும் மீறிக் கொண்டு மேலோங்கி வருகிறது. சோஷலிசத்தின் வெற்றிக்காகத் தாமே உணர்வு பூர்வமாக முன்வந்து தியாகங்கள் புரியும் உழைப்பாளி மக்களின் தீரம்—இதுதான் செஞ்சேனையில் நிலவும் தோழமை மிக்கப் புதிய கட்டுப்பாட்டின் அடிப்படை. இந்த அடிப்படை மீது தான் இந்தச் சேனை புதுமலர்ச்சியுற்று வலிமையடைந்து வளர்ந்து வருகிறது.

போர்முனை அல்லாத உட்பகுதிகளில் தொழிலாளர்கள் வெளிக்காட்டும் தீரமும் இதே அளவுக்குக் கவனத்துக்கு உரிய ஒன்றாகும். தொழிலாளர்கள் தாமே சொந்தமாய் முன்முயற்சி எடுத்து ஏற்பாடு செய்திருக்கும் **கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்** இச்சந்தர்ப்பத்தில் மெய்யாகவே மகத்தான முக்கியத்துவம் வாய்ந்தவை. இது ஒரு தொடக்கமே என்பது

* ''கம்யூனிஸ்டு சனிக்கிழமைகள்''.—(மொ-ர்.)

வெளிப்படை. ஆயினும் தனிப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த தொடக்கம் இது. முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்திய புரட்சியைக் காட்டிலும் மிகவும் கடினமான, திட்டவட்டமான, தீவிரமான, தீர்மானகரமான ஒரு புரட்சி யின் தொடக்கம் இது. ஏனெனில் இது நம்மிடத்தே இருந்து வரும் பழமைவாத மனப்பாங்கு, கட்டுப்பாடின்மை, குட்டி முதலாளித்துவத் தன்னல நாட்டம் இவற்றின் மீதான வெற்றி யாகும்; கேடுகெட்ட முதலாளித்துவம் தொழிலாளர்களுக் கும் விவசாயிகளுக்கும் மரபுரிமைச் சொத்தாய் விட்டுச் சென் றிருக்கும் இந்தப் பழக்கவழக்கங்களின் மீதான வெற்றி யாகும். இந்த வெற்றி உறுதி செய்து கொள்ளப்படும்போது மட்டும்தான் புதிய சமுதாயக் கட்டுப்பாடு, சோஷலிசக் கட்டுப்பாடு தோற்றுவிக்கப்படும்; அப்பொழுது மட்டுமே முதலாளித்துவத்துக்குத் திரும்பிச் சரிதல் சாத்தியமற்றதாகி விடும், கம்யூனிசம் மெய்யாகவே வெல்ல முடியாததாகிவிடும்.

''புரட்சிகர வழியிலான வேலை (கம்யூனிஸ்டு சனிக் கிழமை)'' என்ற தலைப்பில் தோழர் அ.ழ. எழுதிய கட்டுரை ஒன்றை **பிராவ்தா** தனது மே 17ஆம் தேதி இதழில் வெளி யிட்டிருந்தது. இந்தக் கட்டுரை அவ்வளவு முக்கியமானதாய் இருப்பதால் இங்கு அதை அப்படியே முழுமையாய்த் தரு கின்றோம்.

புரட்சிகர வழியிலான வேலை

(கம்யூனிஸ்டு சனிக்கிழமை)

புரட்சிகர வழியில் வேலை செய்வது பற்றிய ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் கடிதம் கம்யூனிஸ்டு நிறுவனங்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் சக்தி வாய்ந்த முறையில் தூண்டுதல் அளித்தது. பொது ஆர்வ அலையானது கம்யூனிஸ்டு ரயில்வேத் தொழிலாளர்கள் பலரையும் போர் முனைக்கு இட்டுச் சென்றது. ஆனால் பெரும்பாலான தொழி லாளர்களால் பொறுப்பு மிக்க தமது வேலைகளை விட்டு அக லவோ, புரட்சிகர வழியில் வேலை செய்வதற்கான புதிய வழி முறைகளைக் காணவோ முடியவில்லை. படை திரட்டும் பணி மெதுவாக நடை பெறுவது குறித்தும் சிவப்பு நாடா பரவ

லாயிருப்பது குறித்தும் ஆங்காங்கிருந்து வந்த செய்திகள், மாஸ்கோ-கஸான் ரயில்வே வட்டாரத்தை இந்த ரயிலமைப்பு எப்படிச் செயல்பட்டு வந்தது என்பதில் கவனம் செலுத்தும் படிச் செய்தன. தொழிலாளர் பற்ருக்குறை காரணமாகவும் உழைப்பின் குறைவான உற்பத்தித் திறன் காரணமாகவும் அவசரமான ஆர்டர்களும் ரயில் இஞ்சின் ரிப்பேர் வேலை களும் நிறைவேருது தடைபட்டுக் கிடந்தன என்பது தெரிய வந்தது. மாஸ்கோ-கஸான் ரயில்வே வட்டாரக் கம்யூனிஸ்டு கள், அனுதாபிகள் ஆகியோரது பொதுக் கூட்டம் மே 7ல் நடைபெற்றபோது அதில் கல்ச்சாக்கின் மீது வெற்றி கிட்டச் செய்வதற்குத் துணை புரிவதில் சொற்களைச் செயலாக்கும் பிரச்சினை எழுப்பப்பட்டது. பின்வரும் தீர்மானம் முன் மொழியப்பட்டது:

"'உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழ்நிலை கடுமையாய் இருப் பதைக் கருத்தில் கொண்டு கம்யூனிஸ்டுகளும் அனுதாபி களும் வர்க்கப் பகைவனைவிட வலிமை பெறும் பொருட்டு திரும்பவும் தம்மைத் தட்டி எழுப்பிக் கொண்டு, தமது ஓய்வு நேரத்தை ஒரு மணி நேரம் குறைத்து, அதாவது தமது வேலை நேரத்தை ஒரு மணி நேரம் அதிகமாக்கி இந்தக் கூடுதல் நேரங்களை ஒன்று சேர்த்துச் சனிக்கிழமையன்று கூடுதலாய் ஆறு மணி நேரம் உடல் உழைப்பில் ஈடுபட்டு உடனடிப் பயன் தரும் உண்மை மதிப்புகளைப் படைக்க வேண்டும். புரட் சியின் ஆதாயத்துக்காகத் தமது உடல்நலத்தையும் உயிரை யும் அர்ப்பணித்துக் கொள்ளக் கம்யூனிஸ்டுகள் தயங்கக் கூடாதாகையால், இவ்வேலை சம்பளமின்றிச் செய்யப்படுதல் வேண்டும். **கம்யூனிஸ்டு சனிக்கிழமைகள்** வட்டாரமெங்கும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டு, கல்ச்சாக்கின் மீது முழு வெற்றி கிட்டும் வரை தொடர்ந்து அனுசரிக்கப்பட வேண் டும்.'

"சிறிதளவு தயங்கிய பிற்பாடு இந்தத் தீர்மானம் ஒரு மனதாய் ஏற்கப்பட்டது.

"மே 10ஆம் நாள் சனிக்கிழமையன்று பிற்பகல் 6 மணி அளவில் கம்யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் வேலை செய்ய ஆஜராகிப் படை வீரர்களென அணி வகுத்து நின்றனர். அமளி, கூச்சல் எதுவுமின்றி இவர்கள் போர்மன்களால் பல் வேறு வேலைகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

"**புரட்சிகர வழியில்** வேலை செய்ததன் பலன்கள் **கண் கூடு.** வேலை இடங்களையும் செய்யப்பட்ட வேலைகளின் தன்மை யையும் இங்குள்ள அட்டவணையில் காணலாம்.

"செய்யப்பட்ட வேலைகளின் மொத்த மதிப்பு சாதாரணச்

சம்பள விகிதங்களின்படி ஐம்பது லட்சம் ரூபிளாகும்; அதிக நேர விகிதங்களின்படி ஐம்பது சதவீதம் கூடுதலா யிருக்கும்.

''சரக்குப் பெட்டிகளில் சுமை ஏற்றுவதில் உழைப்பின் உற்பத்தித் திறன் வழக்கமான தொழிலாளர்களுடையதைக் கட்டிலும் 270 சதவீதம் கூடுதலாயிருந்தது. ஏனைய வேலை களிலும் உழைப்பின் உற்பத்தித் திறன் ஏறத்தாழ இதே போலத்தான் இருந்தது.

''ஆள் பற்றாக்குறை காரணமாகவும் சிவப்பு நாடா கார ணமாகவும் ஏழு நாட்களிலிருந்து மூன்று மாதங்கள் வரை முடங்கிக் கிடந்த வேலைகள் (அவசரமானவை) செய்யப் பட்டன.

''வேலைக் கருவிகள் பழுதாகிக் கிடந்ததையும் (எளிதில் சரிசெய்யக் கூடியதே) மீறி இவ்வேலைகள் செய்யப்பட்டன. கருவிகள் பழுதாயிருந்ததால் சில வேலைக் குழுக்கள் முப்பதி லிருந்து நாற்பது நிமிடங்கள் வரை தடைப்பட்டு நிற்க வேண்டியதாயிற்று.

''வேலைக்குப் பொறுப்பாய் விடப்பட்ட நிர்வாகம் வேலை யாட்களின் வேகத்துக்கு இசைவாய் அவர்களுக்குப் புதிய வேலைகளைத் தேடித்தர முடியாமல் திணறிற்று. வர்க்க உணர் வற்ற முனைப்பில்லாத் தொழிலாளர்கள் ஒரு வாரத்தில் செய் யும்படியான வேலை இந்தக் கம்யூனிஸ்டு சனிக்கிழமையன்று செய்யப்பட்டது என வயது முதிர்ந்த போர்மன் ஒருவர் கூறியது ஒருவேளை சிறிது மிகையானதாக இருக்கலாம்.

''கம்யூனிஸ்டுகளல்லாதோர், சோவியத் ஆட்சி அதி காரத்தை உளப்பூர்வமாய் ஆதரிப்போர் பலரும் இந்த வேலை யில் பங்கு கொண்டதாலும், மேலும் கூடுதலானோர் இனி வரும் சனிக்கிழமைகளில் பங்கு கொள்வாரென எதிர்பார்க் கப்படுவதாலும், மற்றும் மாஸ்கோ-கஸான் ரயில் பாதையின் கம்யூனிஸ்டு ரயில்வேத் தொழிலாளர்களது உதாரணத்தை ஏனைய பல வட்டாரங்களும் பின்பற்ற விரும்புவதாலும் இவ் வேலையின் ஒழுங்கமைப்பு குறித்து ஆங்காங்கிருந்து கிடைத் துள்ள தகவல்களிலிருந்து தெரிய வருவதை மேலும் விவர மாய் எடுத்துரைக்க வேண்டும்.

''வேலையில் பங்கு கொண்டோரில் சுமார் பத்து சதவீதத் தினர் அவ்விடங்களில் நிரந்தரமாய் வேலைக்கு அமர்த்தப் பட்ட கம்யூனிஸ்டுகள். ஏனையோர் பொறுப்பு வாய்ந்த அதி காரிகள் அல்லது தேர்தல் மூலம் நிரப்பப்படும் பதவிகள் வகிப் போர்: ரயில் பாதையின் கமிசார் முதல் தனிப்பட்ட தொழில் நிலையங்களின் கமிசார்கள் வரை, தொழிற்சங்கப்

ர ல்	ரயில் பாதைப் பொருள்களையும், இஞ்சின் ரிப்பேர் தளவாடங்களையும், ரயில் பெட்டிப்பகுதிகளையும்	48	5	240	7500 பூடு சுமை ஏ பட்டது 1800 பூடு சுமை இ பட்டது
	பெரோவோ — மூரம் — அலத்தீர் மற்றும் சீஸ்ரன் ஆகிய இடங்	21	3	63	
	களுக்கு அனுப்புவதற்காக வண்டிகளில் ஏற்றுதல்	5	4	20	
டி	ரயில் இஞ்சின்களுக்கான சிக்கல் வாய்ந்த ரிப்பேர்கள்	26	5	130	மொத்தத்தில் 1.5 ரயில் இஞ்சின்க பேர் செய்யப்பட்

ரயில் இஞ்சின்களுக்கு நடப்பு ரிப்பேர்கள்	24	6	144	2 ரயில் இஞ்சின்க பேர் செய்யப்பட் 4 இஞ்சின்களிலிருந் பேர் ஆக வேண்டிய கள் கழற்றப்பட்ட
பயணிப் பெட்டிகளுக்கு நடப்பு ரிப்பேர்கள்	12	6	72	2 மூன்றும் வகு பெட்டிகள்
பெட்டிகளுக்கு ரிப்பேர்கள், சனியன்றும்	46	5	230	12 கூண்டுப் பெ ளும்
ஞாயிறன்றும் சில்லறை ரிப்பேர்கள்	23	5	115	2 தட்டைப் பெட்டி

பிரதிநிதிகள், தலைமை அலுவலக மற்றும் ரயில்வே கமிசாரகச் சிப்பந்திகள்.

''வேலையின் போது வெளிப்படுத்தப்பட்ட ஆர்வமும் கூட்டு மனோபாவமும் அதியற்புதமானவை. தொழிலாளர்களும் குமாஸ்தாக்களும் தலைமை அலுவலகச் சிப்பந்திகளும் பயணி இஞ்சின் ஒன்றின் நாற்பது பூடு* எடையுள்ள சக்கரக் கட்டினை ஒரு முறைகூட சபிக்கவோ வாதாடவோ செய்யாமல் தாங்கிப் பிடித்து, பிரயாசை மிக்க எறும்புகளைப் போலப் பாடுபட்டு அதை உருட்டிச் சென்று உரிய இடத்தில் பொருத்திய போது இந்தக் கூட்டு முயற்சியைக் கண்டு உள்ளத்தில் இன்பக் களிப்பு ஊற்றெடுத்தது, தொழிலாளி வர்க்கம் வெற்றி பெறுவது திண்ணமென்ற திடநம்பிக்கை மேலும் உறுதியாகியது. வெற்றிகரத் தொழிலாளர்களை சர்வதேசக் கொள்ளைக்காரர்களால் நசுக்க முடியாது; உள்நாட்டுச் சீர்குலைவாளர்களால் ஒரு நாளும் கல்ச்சாக்கைப் பார்க்க முடியாது.

''வேலை முடிவடைந்ததும் அங்கு இருந்தோர் என்றும் காணாத அரியதொரு காட்சியைக் கண்ணுற்றனர்: சுமார் நூறு கம்யூனிஸ்டுகள், களைத்துப் போ.ய் ஓய்ந்தவர்களே ஆயினும், கண்களில் மகிழ்ச்சியின் ஒளி பளிச்சிட சர்வதேசியக் கீதம் பாடி, புனித இசை முழக்கத்தால் தமது வெற்றியை வாழ்த்தினர். இந்த வெற்றிக் கீதத்தின் வெற்றி முழக்கம் சுவர்களுக்கு மேலே உயர்ந்தெழுந்து தொழிலாளி வர்க்க மாஸ்கோ மாநகரெங்கும் வீசி, குளத்திலே விழுந்த கல்லால் தோன்றும் அலை போல தொழிலாளி வர்க்க ருஷ்யாவெங்கும் பரவி, களைப்புற்றோரையும் ஓய்ந்தோரையும் குலுக்கி எழுப்புமென நினைக்கத் தோன்றிற்று.

அ.ழ.

இந்த அரிய உதாரணத்தை, ''நேசப் போட்டிக்கான முன்மாதிரியாய்க் கொள்ளத்தக்க உதாரணம்'' என்று மதிப்பீடு செய்து தோழர் என். ஆர். மே 20ஆம் தேதி **பிராவ்தா**வில் இதே தலைப்பில் எழுதினர்:

''கம்யூனிஸ்டுகள் இது போல வேலை செய்வது அரிய நிகழ்ச்சியல்ல. மின்விசை நிலையம் ஒன்றிலும் பல ரயில்வேக்களிலும் இது போன்ற நிகழ்ச்சிகள் நடந்திருப்பது எனக்குத் தெரியும். நிகலாயெவ்ஸ்கயா ரயில்வேயில் திருப்புத் தளக்

* பூடு—ருஷ்ய நிறுத்தல் அளவை, 16.3 கிலோகிராமுக்குச் சமம்.—(மொ-ர்.)

குழியினுள் விழுந்துவிட்ட ரயில் இஞ்சினைத் தூக்குவதற்காகக் கம்யூனிஸ்டுகள் வேலை நேரத்துக்குப் பிற்பாடு தொடர்ந்து சில இரவுகள் வேலை செய்தனர். வடதிசை ரயில்வேயில் குளிர் காலத்தில் கம்யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் ரயில் பாதையிலிருந்து வெண்பனியை ஒதுக்குவதற்காக ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை செய்தனர். சரக்கு நிலையங்கள் பலவற்றில் கம்யூனிஸ்டுக் குழுக்கள் திருட்டைத் தடுப்பதற்காக இரவில் ரோந்து சென்று வருகின்றன. ஆனால் இவ்வேலைகள் எல்லாம் முறையாய் இல்லாமல் விட்டுவிட்டு எப்பொழுதாவதுதான் நடைபெற்று வந்தன. மாஸ்கோ-கஸான் ரயில் பாதையைச் சேர்ந்த தோழர்கள் இவற்றை முறையாகவும் நிரந்தரமாகவும் நடைபெறும் வேலைகளாக்குகின்றனர். இது புதுமையாகும். ''கல்ச்சாக்கின் மீது முழு வெற்றி கிட்டும் வரை'' என்பதாய் அவர்கள் தமது தீர்மானத்தில் கூறுகிறார்கள்; அவர்களுடைய வேலையின் முக்கியத்துவம் அனைத்தும் இதில்தான் அடங்கியிருக்கிறது. அவர்கள் போர்க் காலம் நீடிக்கும் வரையில் ஒவ்வொரு கம்யூனிஸ்டுக்கும் அனுதாபிக்கும் தினசரி வேலை நேரத்தை ஒரு மணி கூடுதலாக்குகின்றனர்; அதே போதில் அவர்களுடைய உழைப்பின் உற்பத்தித் திறனும் முன்மாதிரியாய் இருக்கிறது.

''இந்த உதாரணத்தைப் பலர் பின்பற்றியுள்ளனர், இனியும் பின்பற்ற **வேண்டும்.** அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேயில் கம்யூனிஸ்டுகள், அனுதாபிகளது பொதுக் கூட்டம் இராணுவ நிலைமையையும் மாஸ்கோ-கஸான் ரயில்வேயைச் சேர்ந்த தோழர்கள் ஏற்ற தீர்மானத்தையும் விவாதித்த பின், (1) அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேயில் கம்யூனிஸ்டுகளுக்கும் அனுதாபிகளுக்கும் 'சுபோத்னிக்குகளைத்' தொடங்குவதென்றும், மே 17ல் முதலாவது சுபோத்னிக்குக்கு ஏற்பாடு செய்வதென்றும், (2) எப்படி வேலை செய்ய வேண்டுமெனவும், தற்போது உள்ள சாமான்களையும் கருவிகளையும் உணவுப் பொருள்களையும் கொண்டு உண்மையில் என்னவெல்லாம் செய்ய முடியுமெனவும் தொழிலாளர்களுக்குக் காட்டும் படியான போற்றத்தக்க முன்மாதிரி வேலைக் குழுக்களில் கம்யூனிஸ்டுகளையும் அனுதாபிகளையும் ஒழுங்கமையச் செய்வதென்றும் முடிவு செய்தது.

''மாஸ்கோ-கஸான் தோழர்கள், தமது உதாரணம் மக்களை வெகுவாய்க் கவர்ந்துள்ளதாகவும், அடுத்த சனிக்கிழமையன்று **கட்சி உறுப்பினரல்லாத** தொழிலாளர்கள் பெரிய அளவில் வேலைக்கு வருவார்களெனத் தாம் எதிர் பார்ப்பதாகவும் கூறுகிறார்கள். இந்த வரிகள் எழுதப்படும் இந்நேரத்தில் அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேத் தொழிலகங்களில் கம்யூ

னிஸ்டுகள் வேலை நேரத்துக்குப் பிற்பாடு இன்னும் வேலை செய்யத் தொடங்கியாகவில்லை. ஆனால் அவர்கள் இவ்வாறு வேலை செய்யப் போவது பற்றிய வதந்தி பரவியதும் கட்சி உறுப்பினரல்லாத தொழிலாளர்களில் பெருந் திரளானோர் ஆர்த்தெழுந்து விட்டனர். 'நேற்று எங்களுக்குத் தெரியாமற் போய்விட்டது, இல்லையேல் நாங்களும் வேலை செய்திருப் போம்!', 'அடுத்த சனியன்று நிச்சயம் நான் வருவேன்' என் பது போன்ற பேச்சுக்களை நாற்புறமிருந்தும் கேட்க முடிந்தது. இத்தகைய வேலையால் விளைந்திருக்கும் மன எழுச்சி மகத்தானதாகும்.

''மாஸ்கோ-கஸான் தோழர்களது உதாரணத்தை உட் பகுதிகளைச் சேர்ந்த எல்லாக் கம்யூனிஸ்டுக் குழுக்களும், மாஸ்கோ சந்திப்பிலுள்ளவை மட்டுமின்றி ருஷ்யாவிலுள்ள கட்சி நிறுவனம் அனைத்தும் முன்னுதாரணமாய்க் கொண்டு செயல்பட வேண்டும். கிராமப் பகுதிகளிலுங்கூட கம்யூனிஸ் டுக் குழுக்கள் முதல் வேலையாய்ச் செஞ்சேனை வீரர்களுடைய நிலங்களைப் பயிரிட முற்பட வேண்டும், இவ்விதம் அவை இந்த வீரர்களுடைய குடும்பங்களுக்கு உதவ வேண்டும்.

''மாஸ்கோ-கஸான் ரயில் பாதையைச் சேர்ந்த தோழர் கள் சர்வதேசியக் கீதம் பாடித் தமது முதலாவது கம்யூ னிஸ்டு சுபோத்னிக்கை முடித்தனர். ருஷ்யா பூராவிலும் கம்யூ னிஸ்டு நிறுவனங்கள் யாவும் இந்த உதாரணத்தைப் பின் பற்றி முரணின்றி இதைச் செயல்படுத்துமாயின், ருஷ்ய சோவியத் குடியரசு வரப் போகும் கடினமான மாதங்களைக் குடியரசின் உழைப்பாளி மக்கள் அனைவரும் சர்வதேசியக் கீதம் பாடி எழுப்பும் சக்தி மிக்க இசை நாதத்துக்கிடையே வெற்றிகரமாய்ச் சமாளித்து விடும்....

''கம்யூனிஸ்டுத் தோழர்களே, வேலையில் இறங்குங்கள்!''

1919 மே 23ல் பிராவ்தா பின்வரும் செய்தியை அறிவித் தது:

''அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேயில் முதலாவது கம்யூனிஸ்டு 'சுபோத்னிக்' மே 17ல் நடைபெற்றது. அவர்களுடைய பொதுக் கூட்டத்தில் ஏற்கப்பட்ட தீர்மானத்துக்கு ஏற்ப தொண்ணூற்று எட்டுக் கம்யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் வேலை நேரத்துக்குப் பிற்பாடு சம்பளமின்றி ஐந்து மணி நேரம் வேலை செய்தனர். அவர் கள் இதற்குப் பிரதியாய்ப் பெற்றது தங்களது பணத்துக்காக இரண் டாவது தரம் சாப்பாடும், உடல் உழைப்பாளர்களானதால் தமது சாப்பாட்டுடன் கூட அரை ராத்தல் ரொட்டியும் விலைக்கே வாங்கிக் கொள்ளும் உரிமையும் தான்.''

இந்த வேலை சரியானபடி தயாரிப்பு செய்யப்படவில்லை, ஒழுங்கமைக்கப்படவில்லை என்றபோதிலும், உழைப்பின் உற்பத்தித் திறன் வழக்கமான அளவைக் காட்டிலும் இரண்டிலிருந்து மூன்று மடங்கு வரை கூடுதலாய் இருந்தது.

இதோ சில உதாரணங்கள்:

ஐந்து கடைசல் தொழிலாளர்கள் நான்கு மணி நேரத்தில் எண்பது அச்சு முனைகள் கடைந்தனர். உற்பத்தித் திறன் வழக்கமானதைப் போல் 213 சதவீதமாகும்.

தேர்ச்சி பெருத இருபது தொழிலாளர்கள் மொத்தம் 600 பூடு எடையுள்ள சேதாரப் பொருட்களும், ஒவ்வொன்றும் $3^1/_2$ பூடு எடை கொண்ட ரயில் வண்டித் தகட்டுக்கு வில்கள் எழுபதுமாய், மொத்தம் 850 பூடுகளைச் சேகரித்து வைத்தனர். உற்பத்தித் திறன் வழக்கமானதைப் போல் 300 சதவீதம்.

''சாதாரணமாய்த் தமது வேலை சலிப்பூட்டுவதாயும் அலுக்கச் செய்வதாயும் இருக்கும், ஆனால் இங்கே நாம் திடசித்தத்துடன் ஆர்வமாய் வேலை செய்தோம், இதுவே இந்த நிலைமைக்குக் காரணம் என்று தோழர்கள் விளக்கம் கூறுகிறார்கள். ஆனால் இனி அவர்கள் முறையான வேலை நேரத்தின் போது கம்யூனிஸ்டு சுபோத்னிக்கில் செய்ததை விடக் குறைவான அளவு வேலை செய்ய வெட்கப்படுவார்கள்.

''கட்சி உறுப்பினரல்லாத தொழிலாளர்கள் பலரும் தற்போது சுபோத்னிக்குகளில் பங்கு கொள்ள விரும்புவதாய்க் கூறுகிறார்கள். ரயில் இஞ்சின் ஊழியர்கள் சுபோத்னிக்குகளின் போது ரயில் இஞ்சினை 'இடுகாட்டிலிருந்து' வெளியே எடுத்துப் பழுது பார்த்துத் திரும்பவும் ஓட வைக்கத் தாமே மனமுவந்து முன்வருகிறார்கள்.

''இது போன்ற சுபோத்னிக்குகளுக்கு வியாஸ்மா ரயில் பாதைப் பிரிவிலும் ஏற்பாடு செய்யப்படும் என்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.''

இந்தக் கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளில் வேலை எப்படி நடைபெறுகிறது என்பதை ஜூன் 7ஆம் தேதி **பிராவ்தாவில் தோழர் அ. தியாச்செங்கோ சுபோத்னிக் தொழிலாளியின் குறிப்புகள்** என்ற தலைப்பில் தாம் எழுதும் கட்டுரையில்

விவரிக்கிருர். இக்கட்டுரையின் பிரதான வாசகங்களை மேற்கோளாய்த் தருகின்ருேம்.

''கட்சியின் ரயில்வே வட்டாரக் கமிட்டியின் முடிவுப்படி ஏற்பாடு செய்யப்பட்ட சுபோத்னிக்கில் எங்களுக் குரிய 'பங்கை' ஆற்ற, சிறிது நேரத்துக்கு, சில மணிகளுக்கு தலைக்கு ஒய்வும் தசைநார்களுக்குக் கொஞ்சம் பயிற்சியும் தர ஒரு தோழரும் நானும் மிக்க மகிழ்ச்சியுடன் சென்றிருந் தோம். ரயில்வே தச்சுத் தொழிலகத்துக்கு எங்களை அனுப்பி வைத்தனர். நாங்கள் அங்கே சென்றதும் எங்கள் ஆட்களில் பலரும் இருக்கக் கண்டோம். முகமன் கூறிக் கொண்டு, சற்று நேரம் கேலி செய்தபின் எங்கள் ஆள் பலத்தைக் கணக்கிட் டோம். முப்பது பேர் இருக்கிருேம் என்பது தெரிந்தது... எங்கள் முன்னே 'பூதம்' போன்ற ஒன்று கிடந்தது—அறுநூறு அல்லது எழுநூறு பூடுகளுக்குக் குறையாத எடையுள்ள நீராவிக் கொதிகலன் அது. நாங்கள் அதை 'நகர்த்திச் சென்ருக' வேண்டும், அதாவது கால் அல்லது மூன்றில் ஒரு வெர்ஸ்டா* தொலைவுக்கு உருட்டிச் சென்று அதன் மூலத் தளத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தாக வேண்டும். எங்களுக்குச் சந் தேகம் எழத் தொடங்கிற்று... ஆயினும் வேலையில் இறங் கினேம். சில தோழர்கள் கொதிகலனுக்கு அடியில் மர உருளை களை வைத்தனர், கொதிகலனில் இரு கயிறுகளைக் கட்டினர். நாங்கள் இழுக்க முற்பட்டோம்... மனமின்றி கொதிகலன் அசைந்து கொடுத்தது, ஆனல் முடிவில் மெள்ள நகர்ந்தது. நாங்கள் ஆனந்தம் அடைந்தோம். நாங்கள் அதிகம் பேர் இல்லை, மிகச் சிலர்தான்... எண்ணிக்கையில் எங்களைப் போல் மூன்று மடங்கிருந்த கம்யூனிஸ்டுகளல்லாத தொழிலாளர் கள் ஏறத்தாழ இரு வாரங்களாய்ச் செய்த முயற்சிகளை இக்கொதிகலன் எதிர்த்து நின்றது. நாங்கள் கை வைக்கும் வரையில் எதனுலும் அதை அசைக்க முடியவில்லை.... ஒரு மணி நேரம் நாங்கள் வேலை செய்தோம், பிரயாசையோடும் இசைவாகவும் எங்கள் 'போர்மனின்' ஆணைக்கு—'ஒன்று, இரண்டு, மூன்று'—ஏற்பவும் வேலை செய்தாம். கொதிகலன் உருண்டு நகர்ந்த வண்ணம் இருந்தது. திடுமென குழப்ப மாகிவிட்டது, எங்கள் தோழர்களில் பலர் விநோதமான முறையில் தரையிலே விழுந்து புரண்டனர். கயிறு அவர் களுக்கு 'துரோகம் புரிந்து விட்டது'... கணப் பொழுது தாமதிக்க வேண்டியதாயிற்று. மேலும் தடியான கயிறு அவ

* வெர்ஸ்டா—ருஷ்ய நீட்டல் அளவை, 1.06 கிலோ மீட்டருக்குச் சமம்.—(மொ-ர்.)

சரமாய்த் தயார் செய்யப்பட்டது... மாலைப் பொழுது. இருட்டாகி வந்தது, ஆனால் இன்னும் ஒரு சிறிய மேட்டைக் கடந்து சென்றால் போதும், எங்கள் வேலை விரைவில் முடிவுற்றுவிடும். எங்களுக்குக் கை வலித்தது, உள்ளங் கையில் எரிச்சல் எடுத்தது, உடம்பு கொதித்தது. முழு பலத்தையும் கொண்டு இழுத்தோம்—முன்னேற்றம் கண்டு வந்தோம். 'நிர்வாகத்தினர்' பார்த்துக்கொண்டு நின்றனர். எங்களுடைய வெற்றியைக் கண்டு ஓரளவு வெட்கமுற்ற அவர்கள் கயிற்றைப் பற்றிக் கொண்டனர்: 'உதவுங்கள், முன்னரே முன்வந்திருக்க வேண்டும்!' எங்களுடைய வேலையை செஞ்சேனை வீரன் ஒருவன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கையில் அக்கார்டியன் வாத்தியம் இருந்தது. மனத்துள் அவன் நினைத்தது என்ன? யார் இவர்கள்? சனிக்கிழமை, எல்லோரும் வீட்டிலே இருக்கிறார்கள், இவர்கள் மட்டும் வேலை செய்யக் காரணம் என்ன? அவனுடைய இந்தப் புதிருக்கு விடையாக, 'தோழனே, எங்களுக்குக் குதூகலப் பாட்டு ஒன்று வாசி நீ. நாங்கள் வேலைக்குப் புதியவர்களல்ல, மெய்யான கம்யூனிஸ்டுகள். எங்கள் கை பட்டதும் வேலை எவ்வளவு வேகமாய் நடந்தேறுகிறது பார்! நாங்கள் சோம்பி நிற்கவில்லை, பலம் கொண்ட மட்டும் இழுக்கிறோம்' என்று அவனிடம் கூறினேன். இதைக் கேட்டதும் செஞ்சேனை வீரன் தனது அக்கார்டியனை ஜாக்கிரதையாய்த் தரையில் வைத்து விட்டு வேகமாய் வந்து கயிற்று முனையைப் பற்றிக் கொண்டான்...

''திடீரெனத் தோழர் உ. தொழிலாளர் பாடலான துபீனுஷ்காவைப் பாடத் தொடங்கினார். சிறப்பான உச்ச ஸ்தாயியில் 'ஆங்கிலிச்சானின் முத்ரெத்ஸ்' என்று பாடினார். அவருடன் நாங்களும் சேர்ந்து கொண்டு இந்த உழைப்புக் கீதத்தின் பல்லவியைப் பாடினோம்: 'ஏ, துபீனுஷ்கா, ஊஹ்னெம், பத்யோர்னிம், பத்யோர்னிம்...'

''இத்தகைய வேலை செய்துப் பழக்கமில்லாதவர்கள் நாங்கள், தசைநார்கள் அயர்ந்துவிட்டன, தோள்களும் முதுகும் வலித்தன.... ஆனால் மறு தினம் விடுமுறை நாள், எங்கள் ஓய்வு நாள். வேண்டிய மட்டும் தூங்கலாம். இலக்கை நெருங்கி வந்துவிட்டோம், சற்றே தயங்கி விட்டுப் பூதம் போன்ற எங்கள் கொதிகலன் உருண்டு அனேகமாய் அதன் தளத்தை வந்து அடைந்து விட்டது. 'அடியில் பலகைகளைக் கொடுத்து அதைத் தளத்தின்மீது உயர்த்துங்கள், பல காலமாய் எதிர்பார்க்கப்பட்ட வேலையை அது செய்யட்டும்!' கூட்டமாய் நாங்கள் ஸ்தலக் கட்சிக் குழுவின் 'மன்ற அறைக்குச்' சென்றோம். அறையில் விளக்கொளி பிரகாசமாய் இருந்தது;

சுவரொட்டிகளால் சுவர்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன; சுற்றிலும் அறையினுள் துப்பாக்கிகள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. உணர்ச்சி பொங்க ''சர்வதேசியக் கீதம்'' பாடிவிட்டு நாங்கள் ஒரு கோப்பை தேநீரும் 'ரம்மும்' குடித் தோம். ரொட்டியும் கிடைத்தது. ஸ்தல தோழர்கள் எங் களுக்கு அளித்த இந்த விருந்து பிரயாசை மிக்க எங்க ளுடைய உழைப்புக்குப் பின் மிகவும் இனிமையாய் இருந்தது. எங்கள் தோழர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு அணி வகுத்து நடக்கலானேம். புரட்சிப் பாட்டுகளின் இன்னிசை இரவின் நிசப்தத்தில் உறங்கிய தெருக்களில் எதி ரொலித்தது. இந்த இசையின் தாளத்துக்கு ஒப்ப நடை போட்டோம். 'தோழர்களே, தாரைகள் ஒலிக்கின்றன,' 'பட்டினிக் கொடுஞ் சிறைக்குள் பதறுகின்ற மனிதர்கள், எழுங்கள்' என்னும் அகிலத்தின், உழைப்பின் பாட்டைப் பாடிச் சென்ருேம்.

''ஒரு வாரம் சென்றது. எங்கள் கைகளும் தோள்களும் திரும்பவும் சரியாயின. மற்ருெரு 'சுபோத்னிக்குக்குச்' சென் ருேம். இம்முறை ஒன்பது வெர்ஸ்டாக்களுக்கு அப்பால் சரக்கு ரயில் பெட்டிகளைப் பழுது பார்க்கச் சென்ருேம். பெரோவோதான் நாங்கள் போய்ச் சேர வேண்டிய இடம். தோழர்கள் 'அமெரிக்கக்' கூண்டுப் பெட்டியின் கூரைமீது ஏறிக் கொண்டு சர்வதேசிய கீதத்தை நன்ருகவும் முழு ஆர் வத்தோடும் பாடினர். ரயிலில் சென்றவர்கள் வியப்புற்றவர் களாய் எங்கள் பாட்டைக் கேட்டனர். ரயில் சக்கரங்கள் தாளம் தட்டின. கூரைமீது ஏறத் தவறிவிட்ட நாங்கள் 'எதற்கும் அஞ்சாத' பயணிகளாய்ப் படிகளிலே தொத்திக் கொண்டோம். ரயில் நின்றது. இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. நீண்ட தளத்தின் வழியே சென்ருேம். கமிசாரான தோழர் கி. எங்களை ஆர்வமுடன் வரவேற்ருர்.

''வேலை நிறைய இருக்கிறது, ஆட்கள்தான் குறைவு! நாங்கள் முப்பது பேரே இருக்கிருேம், ஆறு மணி நேரத்தில் பதின்மூன்று சரக்குப் பெட்டிகளுக்கு முறையான ரிப்பேர் வேலைகளை முடித்தாக வேண்டும்! இரட்டைச் சக்கரங்கள் ஏற்கெனவே குறியிடப்பட்டு இதோ இருக்கின்றன. காலிச் சரக்குப் பெட்டிகள் மட்டுமின்றி நிரப்பப்பட்ட டாங்கிப் பெட்டியும் ஒன்று இருக்கிறது... இருக்கட்டும் பரவாயில்லை! தோழர்களே, வாங்க, 'ஒரு கை பார்த்து விடலாம்'!

''வேலை மும்முரமாய் நடந்தேறியது. ஐந்து தோழர் களும் நானும் கடப்பாரைகளைக் கொண்டு வேலை செய்கி ருேம். இதோ ஒவ்வொன்றும் அறுபதிலிருந்து எழுபது பூடு எடை கொண்ட இரட்டைச் சக்கரங்கள். எங்கள் தோள்கள்,

இரண்டு தூக்கிப் பொறிகள் இவற்றின் வலிவுக்கு பணிந்து, 'போர்மனின்' மேற்பார்வையில், அவை மிகக் கச்சிதமாய் ஒரு தண்டவாளப் பாதையிலிருந்து உயர்ந்தெழுந்து மற்றொன்றில் அமர்கின்றன. ஒரு ஜோடி ஓடி மறைந்ததும் மற்றொன்று உரிய இடத்துக்கு உருண்டு வருகிறது. முடிவில் யாவும் அவற்றுக்கான இடங்களை வந்தடைந்தன. தேய்ந்து போன இந்தப் பழைய சக்கரங்களை வேகமாய் நாங்கள் ஒரு கொட்டகையினுள் அனுப்பி வைக்கிறோம்... ஒன்று, இரண்டு, மூன்று—இரும்பாலான சுழலும் தூக்கிப் பொறியால் இமைப் பொழுதில் அவை தூக்கப்பட்டுத் தண்டவாளங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. அங்கே இருட்டில் சம்மட்டி அடிகள் வேகமாய் விழக் கேட்கிறோம். சுறுசுறுப்பான தேனீக்கள் போலத் தோழர்கள் வேலை செய்கின்றனர், பழுதான சரக்குப் பெட்டிகளைச் சரிப்படுத்துகின்றனர். தோழர் கமிசாரும் நாங்களும் மகிழ்ச்சிப் பூரிப்பில் திளைக்கச் சிலர் தச்சு வேலைகள் செய்கின்றனர், வேறு சிலர் வர்ணம் பூசுகின்றனர், மற்றும் சிலர் கூரைகளைச் செப்பனிடுகின்றனர். கொல்லுப் பட்டறையாளர்கள் எங்களையும் உதவிக்கு வருமாறு அழைத்தனர். நடமாடும் பட்டறை உலை ஒன்றில் இணைப்புக் கொக்கியைக் கொண்ட இரும்புத் தண்டு பழுக்கக் காய்ந்து ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. கவனக் குறைவாய் ரயில் பெட்டிகள் தள்ளப்பட்டதால் தண்டு வளைந்து நெளிந்து போயிருந்தது. வெண்சுடர்கள் சிதற அது பட்டறைக் கல்மீது வைக்கப் பட்டது. அனுபவமிக்கக் கொல்லுப் பட்டறையாளரின் மேற் பார்வையில் எங்களுடைய குறி தவறாத சம்மட்டி அடிகள் அதன் கோணலைச் சரிசெய்கின்றன. பழுக்கச் சிவந்து, பொறிகள் பறந்த நிலையிலேயே அதை நாங்கள் தோளில் சுமந்து அவசரமாய் அதற்குரிய இடத்துக்கு எடுத்துச் செல்கிறோம். தண்டினை அதற்குரிய பொருத்துக் குழியில் வைத்து அழுத்துகிறோம். இரண்டொரு சம்மட்டி அடிகள் விழுந்ததும் கெட்டியாய்ப் பொருத்தப்பட்டு விடும். சரக்குப் பெட்டிக்கு அடியில் தவழ்ந்து செல்கிறோம். பெட்டிகளின் இணைப்பு அமைப்பு தோற்றத்துக்குத் தெரிவது போல அவ்வளவு சுலபமானதல்ல. ரிவெட்டுகளையும் சுருள்வில்களையும் கொண்ட பல வகையான கட்டமைப்புகளும் இருக்கின்றன...

''வேலைகள் மும்முரமாய் நடைபெறுகின்றன. இரவு ஆரம்பித்துவிட்டது. தீப்பந்தங்கள் முன்னிலும் பிரகாசமாய் எரிவதாய்த் தோன்றின. திரும்புவதற்குரிய நேரம் நெருங்கி விடும். சில தோழர்கள் சக்கரக் கட்டுகள் மீது சாய்ந்து கொண்டு சூடான தேநீர் அருந்தியபடி 'ஓய்வு' எடுத்துக் கொள்கின்றனர். மே மாத இரவு குளுமையாய் இருக்கிறது.

பளிச்சிடும் அரிவாளேப் போல விண்ணிலே பிறைச் சந்திரன் எழிலுருவாய் ஒளிர்ந்தது. யாவரும் தமாஷாய்ச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

'' 'தோழர் கி., போதும், பதின்மூன்று சரக்குப் பெட்டிகள் போதும்!'

''ஆனல் தோழர் கி. திருப்தியடையவில்லே.

''நாங்கள் தேநீர் குடித்துவிட்டு வெற்றிக் கீதங்கள் பாடியவாறு கதவை நோக்கி நடைபோடுகிறோம்...''

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளுக்கான'' இயக்கம் மாஸ்கோவுடன் நின்றுவிடவில்லே. ஜூன் 6ஆம் தேதி **பிராவ்தா** பின்வரும் தகவலே அறிவித்தது:

''மே 31, திவேரில் முதலாவது கம்யூனிஸ்டு சுபோத்னிக் நடைபெற்றது. நூற்று இருபத்தெட்டு கம்யூனிஸ்டுகள் ரயில்வேயில் வேலே செய்தனர். மூன்றரை மணி நேரத்தில் அவர்கள் பதினன்கு பெட்டிகளில் சரக்கு ஏற்றவும் இறக்கவும் செய்தனர், மூன்று ரயில் இஞ்சின்களேப் பழுது பார்த்தனர், பத்து சஜேன்* விறகு உடைத்தனர் மற்றும் இதர வேலேகள் செய்தனர். தேர்ச்சி வாய்ந்த கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களுடைய உழைப்பின் உற்பத்தித் திறன் வழக்கத்தைவிட பதின்மூன்று மடங்கு அதிகமாயிருந்தது.''

திரும்பவும் ஜூன் 8ல் **பிராவ்தாவில்** படித்தோம்:

கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்

''சராத்தவ், ஜூன் 5. இங்கே கம்யூனிஸ்டு ரயில்வேத் தொழிலாளர்கள் தமது மாஸ்கோ தோழர்களுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப கட்சியின் பொதுக் கூட்டத்தில், தேசப் பொருளாதாரத்துக்கு உதவும் பொருட்டு சனிக்கிழமைகளில் சம்பளமின்றி ஐந்து மணி நேரம் வேலே செய்வதெனத் தீர்மானம் செய்தனர்.''

* * *

கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளேப் பற்றி நான் முழு அளவில் மிகவும் விவரமாய்த் தகவல் அளித்திருக்கிறேன். ஏனெனில் இந்த இயக்கத்தில் சந்தேகத்துக்கு இடமின்றி கம்யூனிச

* சஜேன்—ருஷ்ய நீட்டல் அளவை, 2.13 மீட்டருக்குச் சமம்.— **(மொ-ர்.)**

நிர்மாணத்தின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றைக் காண் கிறோம். இதில் நமது பத்திரிகைகள் போதிய கவனம் செலுத்த வில்லை. நாம் எல்லோருமே இன்னமும் இதன் முக்கியத்து வத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை.

அரசியல் அதிர்வெடிகள் குறையட்டும், கம்யூனிச நிர் மாணத்தின் எளியவையே ஆயினும் உயிர் சக்தி கொண்ட உண்மைகளில், நடைமுறை வாழ்விலிருந்து எடுக்கப்பட்ட வையும் அதனுல் சோதிக்கப்பட்டவையுமான இவ்வுண்மை களில் செலுத்தப்படும் கவனம் அதிகமாகட்டும்—இதுவே நாம் எல்லோரும், நமது எழுத்தாளர்களும் கிளர்ச்சியாளர் களும் பிரசாரகர்களும் நிறுவன ஒழுங்கமைப்பாளர்களும் இன்ன பிறரும் ஓயாது திரும்பத் திரும்பக் கூற வேண்டிய கோஷமாகும்.

பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பிறகு முதலாவது கட் டத்தில் நாம் முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்பை அடக்கு வதென்னும், சுரண்டலாளர்களைத் தோற்கடிப்பதென்னும், அவர்களுடைய சதியை (பெத்ரோகிராதைச் சரணடையச் செய்வதற்காக ''அடிமையுடைமையாளர்கள்'' நடத்தியதை ஒத்த, கறுப்பு நூற்றுவர், காடேட்டுகள் ஆகியோர் முதல் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் வரை யிலான அனைவரும் சம்பந்தப்பட்டிருந்தார்களே அதை ஒத்த சதியை[111]) நசுக்குவதென்னும் பிரதானமான, அடிப்படை யான பணியில் முக்கியமாய் ஈடுபட வேண்டியிருந்தது. இது இயற்கையே, தவிர்க்க முடியாததே. ஆனால் இப்பணியுடன் கூடவே மற்றொரு பணியும் அதே போல தவிர்க்க முடியாம லும், காலம் செல்லச் செல்ல மேன்மேலும் அத்தியாவசிய மாகவும் முன்னிலைக்கு வருகிறது. நேரடியாய்க் கம்யூனிசத்தை நிர்மாணம் செய்யும், புதிய பொருளாதார உறவுகளை, ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் மிகவும் முக்கியத் துவமுள்ள பணி அது.

பல சந்தர்ப்பங்களில் நான் சுட்டிக் காட்டியிருப்பது போல, ஏனைய பல சந்தர்ப்பங்களுடன்கூட மார்ச் 12ல் பெத் ரோகிராத் சோவியத்தின் கூட்டத்தில் நிகழ்த்திய சொற் பொழிவில் நான் சுட்டிக் காட்டியது போல, பாட்டாளி

வர்க்கச் சர்வாதிகாரம் என்பது சுரண்டலாளர்களுக்கு எதிரான பலாத்காரப் பிரயோகம் மட்டுமல்ல, பிரதானமாய்க்கூட அது பலாத்காரப் பிரயோகம் அல்ல. பாட்டாளி வர்க்கமானது உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் மேலும் உயர்வான ஒரு ரகத்தின் பிரதிநிதியும் படைப்பாளனும் ஆகும் என்பதுதான் இந்தப் புரட்சிகரப் பலாத்காரப் பிரயோகத்துக்கான பொருளாதார அடிப்படை, இதன் பயனுடைமைக்கும் வெற்றிக்குமான உத்தரவாதம். முக்கியமானது இதுவே. கம்யூனிசப் பலத்தின் ஆதாரமும், அதன் இறுதி வெற்றி தவிர்க்க முடியாதது என்பதற்கான உத்தரவாதமும் இதுவே.

சமூக உழைப்புக்கான நிலப்பிரபுத்துவ ஒழுங்கமைப்பு குறுந்தடி மூலமான கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது; விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய நிலப்பிரபுக்களால் சூறையாடப்பட்டுக் கொடுங்கோன்மைக்கு உட்படுத்தப்பட்ட உழைப்பாளி மக்கள் அறியாமை இருளில் முற்றிலும் மூழ்கி ஒடுக்கப்பட்டோராய் இருந்தனர். சமூக உழைப்புக்கான முதலாளித்துவ ஒழுங்கமைப்பு பட்டினி மூலமான கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது; முதலாளித்துவக் கலாசாரமும் முதலாளித்துவ ஜனநாயகமும் எவ்வளவுதான் முன்னேறியிருப்பினும் மிகவும் முன்னேறிய, நாகரிகம் படைத்த, ஜனநாயகக் குடியரசுகளிலும் மிகப் பெருந் திரளான உழைப்பாளி மக்கள் அறியாமை இருளில் மூழ்கி மிதித்து நசுக்கப்படும் திரளான கூலியடிமைகள் அல்லது ஒடுக்கப்பட்ட விவசாயிகளாகவே இருந்தனர், விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய முதலாளிகளால் சூறையாடப்பட்டுக் கொடுங்கோன்மைக்கு உட்படுத்தப்பட்டனர். சமூக உழைப்புக்கான கம்யூனிச ஒழுங்கமைப்பு—இதற்கான முதற் படியே சோஷலிசம் எனப்படுவது—நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகிய இரு பாலரின் ஒடுக்கு முறையை வீழ்த்திவிட்ட உழைப்பாளி மக்கள் தாமே சுதந்திரமாகவும் உணர்வு பூர்வமாகவும் வகுத்துக் கொள்ளும் கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது, காலம் செல்லச் செல்ல மேலும் மேலும் அதையே ஆதாரமாய்க் கொள்ளும்.

இந்தப் புதிய கட்டுப்பாடு விண்ணிலிருந்து குதித்து விடுவதில்லை, ஆத்மார்த்திக விருப்பத்திலிருந்து பிறந்து விடுவதில்லை. பெரும் அளவு முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பொருளாயத நிலைமைகளில் மட்டுமிருந்தே இது வளர்ச்சியுறுகிறது. இந்நிலைமைகள் இல்லாமல் இது வளர்வது சாத்தியமல்ல. வரலாற்று வழி வந்த குறிப்பிட்ட ஒரு வர்க்கமே, பெருமளவு முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்டதும் ஒழுங்கமைக்கப்பட்டதும் ஒன்றுபடுத்தப்பட்டதும் பயிற்சியளிக்கப்பட்டதும் அறிவூட்டப்பட்டதும் உறுதியூட்டப்பட்டதுமான ஒரு வர்க்கமே இந்தப் பொருளாயத நிலைமைகளுக்குரிய இருப்பிடம் அல்லது சாதனம். பாட்டாளி வர்க்கம் தான் இந்த வர்க்கம்.

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்கிற லத்தீன், விஞ்ஞான, வரலாற்று-தத்துவவியல் தொடரை எளிய மொழியில் பெயர்த்திடுவோமாயின் பின்வருவதே அதன் பொருள்:

குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தால் மட்டும்தான், அதாவது நகரத் தொழிலாளர்கள், பொதுவில் ஆலை, தொழில்துறைத் தொழிலாளர்கள் ஆகியோரால் மட்டும் தான், மூலதனத்தின் ஒடுக்குமுறையை வீழ்த்துவதற்கான போராட்டத்திலும், நடைமுறையில் இந்த வீழ்த்துவதை நடத்திச் செல்வதிலும், வெற்றியைப் பாதுகாப்பதற்கும் உறுதி பெறச் செய்வதற்குமான போராட்டத்திலும், புதிய சோஷலிச சமூக அமைப்பை உருவாக்கும் பணியிலும், வர்க்கங்களை அறவே ஒழிப்பதற்கான போராட்டம் அனைத்திலும் உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களின் பெருந்திரள் முழுவதுக்கும் தலைமை தாங்க முடிகிறது. (சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையிலுள்ள விஞ்ஞான வழிப்பட்ட வேற்றுமை என்னவெனில் முதலாவது சொல் முதலாளித்துவத்திலிருந்து தோன்றும் புதிய சமுதாயத்தின் முதற் கட்டத்தையும், இரண்டாவது சொல் மேலும் உயர்வான அடுத்த கட்டத்தையும் சுட்டுகிறவை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிடலாம்.)

''பேர்ன்'', மஞ்சள் அகிலம்[112] புரியும் தவறு என்ன

வெனில், அதன் தலைவர்கள் வர்க்கப் போராட்டத்தையும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் சொல்லளவில் மட்டும்தான் ஏற்றுக் கொள்கிறார்கள், அதன் தர்க்க முடிவுக்குச் சிந்தித்துச் செல்ல அஞ்சுகிறார்கள். தவிர்க்க முடியாததான இந்த முடிவு முதலாளித்துவ வர்க்கத்துக்குக் குறிப்பாய் அச்சம் தருவதாயுள்ளது. இது அவர்களுக்குச் சிறிதும் ஏற்புடையதல்ல. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமானது வர்க்கப் போராட்டத்துக்கும் உரிய காலமாகும் என்பதை ஒத்துக் கொள்ள அவர்கள் அஞ்சுகிறார்கள். வர்க்கங்கள் ஒழிக்கப்படாது இருக்கும் வரை வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாததாகும், வடிவத்தில் மாற்றமுற்று அது மூலதனம் வீழ்த்தப்பட்டதும் உடனடியாய் அடுத்து வரும் கால கட்டத்தில் குறிப்பாய் மூர்க்கமடைந்து குறிப்பாய்த் தனி இயல்பு உடையதாகி விடுகிறது என்பதை ஒத்துக் கொள்ள அவர்கள் அஞ்சுகிறார்கள். பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியபின் வர்க்கப் போராட்டத்தை நிறுத்தி விடவில்லை, வர்க்கங்கள் ஒழிக்கப்படும் வரை தொடர்ந்து நடத்தியே செல்கிறது—ஆனால் போராட்டம் நடைபெறும் சூழ்நிலையும் போராட்ட வடிவமும் போராட்ட வழிகளும்தான் மாறுபடுகின்றன என்பது தெளிவு.

''வர்க்கங்கள் ஒழிக்கப்படுதல்'' என்பதன் பொருள் என்ன? இதுவே சோஷலிசத்தின் இறுதிக் குறிக்கோள் என்பதை தம்மை சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்வோர் எல்லோருமே அங்கீகரிக்கிறார்கள், ஆனால் அதன் உட்பொருள் குறித்து பலரும் சிந்திப்பதில்லை. வர்க்கங்கள் என்பவை வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமூகப் பொருளுற்பத்தி அமைப்பில் அவை வகிக்கும் இடத்தாலும், உற்பத்திச் சாதனங்களுடன் அவற்றுக்குள்ள உறவாலும் (மிக பெரும்பாலும் இது சட்டத்தால் நிலைநிறுத்தப்பட்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது), உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் அவற்றுக்குள்ள பாத்திரத்தாலும், ஆகவே சமூகச் செல்வத்தில் அவற்றின் செயலாட்சிக்கு உட்படும் பங்கின் பரிமாணங்களாலும், இந்தப் பங்கை அவை சுவாதீனமாக்கிக் கொள்

ளும் முறையினுலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் பெரும் மக்கள் பகுதிகளாகும். வர்க்கங்களானவை சமூகப் பொரு ளாதாரத்தின் குறிப்பிட்ட ஓர் அமைப்பில் தாம் வகிக்கும் வெவ்வேறு இடங்களின் காரணமாய் ஒன்று மற்றென்றின் உழைப்பைக் கைப்பற்றிக் கொள்ள முடியும் படியான மக்கள் பகுதிகளாகும்.

வர்க்கங்களை அறவே ஒழிப்பதற்குச் சுரண்டலாளர் களான நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் வீழ்த்தினல் மட்டும் போதாது, அவர்களுடைய சொத்துடைமை உரிமை களை ஒழித்தால் மட்டும் போதாது; உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை அனைத்தையும் ஒழிப்பது அவசியம், நக ருக்கும் கிராமத்துக்குமுள்ள பாகுபாட்டையும் உடல் உழைப் பாளர்களுக்கும் மூளை உழைப்பாளர்களுக்குமுள்ள பாகுபாட் டையும் ஒழிப்பது அவசியம் என்பது தெளிவு. இதற்கு நீண்ட நெடுங் காலம் தேவைப்படும். இதைச் சாதிப்பதற்கு உற் பத்தி சக்திகளின் வளர்ச்சியில் பிரம்மாண்டமான முன்னேற் றம் கண்டாக வேண்டும்; சிறிய அளவுப் பொருளுற்பத்தியின் எண்ணற்ற மீதமிச்சங்களின் எதிர்ப்பைச் சமாளிப்பது அவ சியம் (அடிக்கடி சாத்துவிகத் தன்மையதான இது மிகவும் பிடிவாதமானது, இதைச் சமாளிப்பது மிகவும் கடினமானது); இந்த மீதமிச்சங்களுடன் சம்பந்தப்பட்ட பழக்கத்தின், பழைமைப் பிடிப்பின் பிரம்மாண்ட சக்தியைச் சமாளிப்பது அவசியம்.

இந்தப் பணியைச் செய்யும் ஆற்றல் ''உழைப்பாளி மக் கள்'' அனைவருக்கும் சம அளவில் உண்டெனக் கொள்ளுதல் வெறும் பேச்சே ஆகும், அல்லது மார்க்சியத்துக்கு முற்காலத் திய, மிகப் பழங்காலத்திய சோஷலிஸ்டின் பிரமையே ஆகும். ஏனெனில், இந்த ஆற்றல் தானுகவே வந்துவிடும் ஒன்றல்ல, வரலாற்று வழியில் வளர்ந்து வருவதாகும், பெரும் அளவு முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பொருளாயத நிலைமை களிலிருந்து மட்டுமே வளர்வதாகும். முதலாளித்துவத் திலிருந்து சோஷலிசத்துக்குச் செல்லும் பாதையின் தொடக் கத்தில் இந்த ஆற்றலைப் பெற்றிருப்பது பாட்டாளி வர்க்கம் மட்டுமேதான். அது தன்னை எதிர்நோக்கும் பிரம்மாண்டப்

பணியை நிறைவேற்றும் ஆற்றலுடையதாய் இருக்கிறது. ஏனெனில் முதலாவதாக, நாகரிக சமுதாயங்களில் அதுவே மிகுந்த பலம் படைத்த மிக முன்னேறிய வர்க்கம்; இரண்டாவதாக, வளர்ச்சி பெற்ற மிகப் பெருவாரியான நாடுகளில் அது மக்கள் தொகையில் பெரும்பான்மையானது; மூன்ருவதாக, ருஷ்யாவைப் போன்ற பின்தங்கிய முதலாளித்துவ நாடுகளின் மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் அரைப் பாட்டாளி வர்க்கத்தினர், அதாவது ஆண்டில் ஒரு பகுதி முறையாய்ப் பாட்டாளி வர்க்க வழியில் வாழ்ந்து தமது ஜீவனேபாயத்தில் ஒரு பகுதியை முறையாய் முதலாளித்துவத் தொழில் நிலையங்களில் கூலி உழைப்பாளர்களாய் வேலை செய்து சம்பாதிக்கும் மக்கள்.

சுதந்திரம், சமத்துவம், பொதுப்படையான ஜனநாயகம், உழைப்பு ஜனநாயகத்தின் சமத்துவம், இன்ன பலவற்றையும் பற்றிய பொதுவான பேச்சின் அடிப்படையில் (காவுத்ஸ்கியும் மார்த்தவும் பேர்ன், மஞ்சள் அகிலத்தின் ஏனைய வீரர்களும் செய்வது போல) முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலுவோர் தமது குட்டி முதலாளித்துவ அற்பத்தனத்தைத்தான் வெளிப்படுத்திக் கொள்கிருர்கள், முதலாளித்துவ வர்க்கத்தின் வாலைப் பற்றிக் கொண்டு சித்தாந்த வழியில் அடிமைப்பட்டோராய் அதைப் பின்தொடர்ந்து செல்கிருர்கள். இந்தப் பிரச்சினைக்குரிய சரியான தீர்வினை அரசியல் ஆட்சியதிகாரம் வென்று பெற்ற குறிப்பிட்ட வர்க்கத்துக்கும், அதாவது பாட்டாளி வர்க்கத்துக்கும், பாட்டாளி வர்க்கத்தவர் அல்லாதோரும் மற்றும் அரைப் பாட்டாளி வர்க்கத்தவருமான உழைப்பாளி மக்கள் திரள் அனைத்துக்கும் இடையிலுள்ள குறிப்பிட்ட உறவுகளை ஸ்தூலமாய் ஆராய்வதன் அடிப்படையிலேதான் காண முடியும். இந்த உறவுகள் கற்பனுவாத இசைவு நிலவும் ''அதிசிரேஷ்ட'' நிலைமைகளில் உருவாவதில்லை, பல்வேருன மிகப் பல வடிவங்களை ஏற்கும் வெறித்தனமான முதலாளித்துவ வர்க்கத்து எதிர்ப்பின் மெய்யான நிலைமைகளில் உருவாகின்றன.

மூலதனத்தின் ஒடுக்குமுறையையும் அது நடத்தும் கொள்

ளையையும் புரியும் ஒவ்வொரு வகைக் கொடுங்கோன்மையை யும் ருஷ்யா அடங்கலாய் எல்லா முதலாளித்துவ நாடுகளி லும் மக்களில் மிகப் பெருவாரியானோர், இன்னும் முக்கிய மாய் உழைப்பாளி மக்களில் மிகப் பெருவாரியானோர் நேரில் தாமும் தமது உற்றார் உறவினர் மூலமும் ஆயிரக் கணக்கான முறை அனுபவித்திருக்கிறார்கள். ஏகாதிபத்தியப் போரானது, அதாவது அனைத்து உலகையும் சூறையாடுவதில் தலைமைப் பாத்திரம் செலுத்தப் போவது ஆங்கிலேய மூலதனமா அல்லது ஜெர்மன் மூலதனமா என்பதைத் தீர்மானிப்பதற் காக ஒரு கோடி மக்கள் கொன்று குவிக்கப்பட்ட படுகொலை யானது, இந்தக் கொடிய வேதனைகளை வெகுவாய்த் தீவிரப் படுத்தியுள்ளது, அவற்றை மேலும் அதிகப்படுத்தி ஆழமாக்கி யுள்ளது, மக்களை இவற்றின் பொருளை உணர்ந்து கொள் ளும்படிச் செய்துள்ளது. எனவேதான் மக்களில், குறிப்பாய் உழைப்பாளி மக்களில் மிகப் பெருவாரியானோர் தவிர்க்க முடியாத வகையில் பாட்டாளி வர்க்கத்திடம் அனுதாபம் காட்டுகின்றனர். ஏனெனில் அது தீரமிக்க நெஞ்சுறுதியோடும் புரட்சிகரச் சீற்றத்தோடும் மூலதனத்தின் ஒடுக்குமுறையை வீழ்த்தி, சுரண்டலாளர்களைக் கவிழ்த்து, அவர்களுடைய எதிர்ப்பை நசுக்கி வருகிறது, சுரண்டலாளர்களுக்கு இடமில்லாத ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் பாதையைச் செப்பனிடுவதற்காகத் தனது இரத்தத்தைச் சிந்துகிறது.

உழைப்பாளி மக்களின் பாட்டாளி வர்க்கத்தவரல்லாத, அரைப் பாட்டாளி வர்க்கப் பெருந் திரளினரின் குட்டி முத லாளித்துவ ஊசலாட்டங்களும் முதலாளித்துவ வர்க்கத்தின் ''குடையின்'' கீழ் முதலாளித்துவ ''நெறிமுறைக்குத்'' திரும்ப வேண்டுமென்ற அவர்களது போக்கும், பெரிய அள விலும் தவிர்க்க முடியாததாகவும் இருப்பினும், அவர்களால் பாட்டாளி வர்க்கத்தின் தார்மிக, அரசியல் மேலாண்மையை அங்கீகரிக்காது இருக்க முடியவில்லை. பாட்டாளி வர்க்கம் சுரண்டலாளர்களை வீழ்த்தி அவர்களுடைய எதிர்ப்பை நசுக்கு வதோடு அல்லாமல், ஒரு புதிய, உயர்வான சமூக பந்தத் தை, சமூகக் கட்டுப்பாட்டைக்கட்டியமைத்து வருகிறது,

வர்க்க உணர்வு படைத்த ஒன்றுபட்ட உழைப்பாளி மக்களின் கட்டுப்பாட்டை, தமது சொந்த ஒற்றுமையினுடையதை அன்றி, தம்மிலும் அதிக வர்க்க உணர்வு படைத்த அஞ்சா நெஞ்சங் கொண்ட உறுதிமிக்க புரட்சிகரமான, நிலையான தமது சொந்த முன்னணிப் படையினுடையதை அன்றி வேறு எந்தக் கட்டுத்தளையையும் மேலாண்மையையும் அறியாத உழைப்பாளி மக்களின் கட்டுப்பாட்டைக் கட்டியமைத்து வருகிறது.

வெற்றி பெறும் பொருட்டு, சோஷலிசத்தைக் கட்டியமைத்து அதை உறுதியாக்கும் பொருட்டு, பாட்டாளி வர்க்கம் இருபடியான அல்லது இரட்டையான ஒரு பணியை நிறைவேற்றியாக வேண்டும். முதலாவதாக, மூலதனத்துக்கு எதிரான புரட்சிப் போராட்டத்தில் அது தனது ஒப்பற்ற வீரதீரத்தால் உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களின் முழுத் திரளையும் தன் பக்கத்துக்கு கவர்ந்து இழுக்க வேண்டும், இத்திரளைத் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டு ஒழுங்கமைத்து, முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்கும் அவ்வர்க்கத்தின் எதிர்ப்பை அடியோடு நசுக்குவதற்குமான போராட்டத்தில் தலைமை தாங்கி அழைத்துச் செல்ல வேண்டும். இரண்டாவதாக, உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்கள் பெருந்திரள் அனைத்துக்கும் மற்றும் குட்டி முதலாளித்துவப் பகுதிகள் யாவற்றுக்கும் தலைமை தாங்கிப் புதிய பொருளாதார வளர்ச்சிக்குரிய பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும், ஒரு புதிய சமூகப் பிணைப்பை, ஒரு புதிய உழைப்புக் கட்டுப்பாட்டை நோக்கி, விஞ்ஞானமும் முதலாளித்துவத் தொழில்நுட்பமும் ஈட்டியுள்ள நவீன சாதனைகளை, பெரிய அளவு சோஷலிசத் தொழில் துறையைப் படைப்பித்து வரும் வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்களது வெகுஜன ஐக்கிய அமைப்புடன் இணைக்கவல்ல ஒரு புதிய உழைப்பு ஒழுங்கமைப்பை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும்.

இந்த இரண்டாவது பணி முதலாவதைக் காட்டிலும் கடினமானது. ஏனெனில் வீர உணர்ச்சி வேகங் கொண்ட தனிப்பட்ட செயல்களால் ஒருபோதும் நிறைவேற்ற முடி

யாத பணி அது; சர்வசாதாரண, அன்றாட வேலைகளில் மிகவும் நீடித்து, விடாமுயற்சியுடன் செயல்படும் மிகவும் கடினமான வெகுஜன வீரதீரம் இதற்கு அவசியமாகும். ஆயினும் இந்தப் பணிதான் முதலாவதைக் காட்டிலும் மிகவும் அத்தியாவசியமான பணி. ஏனெனில் முடிவாய்ப் பார்க்கையில், மேலும் உயர்வான ஒரு புதிய சமூகப் பொருளுற்பத்தி முறைதான், முதலாளித்துவ மற்றும் குட்டி முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குப் பதிலாய்ப் பெரிய அளவு சோஷலிசப் பொருளுற்பத்தியை நிறுவுதல்தான் முதலாளித்துவ வர்க்கத்தின்மீது வெற்றிகள் பெறுவதற்குரிய பலத்தின் மிக ஆழ்ந்த மூலாதாரமும், இந்த வெற்றிகளின் நிலைப்பாட்டுக்கும் நிரந்தரத்துக்குமான ஒரேயொரு உத்தரவாதமும் ஆகும்.

* * *

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' உழைப்பின் உற்பத்தித் திறனை வளரச் செய்வதில், புதிய உழைப்புக் கட்டுப்பாட்டைக் கைக்கொள்வதில், பொருளாதாரத்திலும் வாழ்க்கையிலும் சோஷலிச நிலைமைகளைத் தோற்றுவிப்பதில் தொழிலாளர்களுடைய உணர்வு பூர்வமான மனமுவந்த முன்முயற்சியைப் புலப்படுத்திக் காட்டுவதால்தான் அவை இவ்வளவு பிரம்மாண்ட வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றன.

யோ. யாக்கபி ஜெர்மன் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளில் 1870-71ஆம் ஆண்டுகளின் படிப்பினைகளுக்குப் பிற்பாடு தேசியவெறிக்கோ தேசிய-மிதவாதத்துக்கோ மாறுமல் சோஷலிசத்துக்கு மாறிய மிகச் சிலருள் ஒருவராவார்; மிக அரிய விதிவிலக்கானேரில் ஒருவர் எனக் கூறினுல் இன்னும் பொருத்தமாயிருக்கும். ஒரேயொரு தொழிற் சங்கம் நிறுவப் பட்டதானது சதோவாப் போரை[113] விட அதிக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததென முன்பொரு தரம் அவர் கூறினர். இது மெய்தான். ஜெர்மன் தேசிய முதலாளித்துவ அரசைத் தோற்றுவிப்பதில் இரு முதலாளித்துவ முடியரசுகளில் எது முதல் நிலை வகிக்கப் போகிறது, ஆஸ்திரிய முடியரசா அல்லது பிரஷ்ய முடியரசா என்பதை சதோவாப் போர்

தீர்மானித்தது. ஒரேயொரு தொழிற் சங்கம் நிறுவப்பட்ட தானது முதலாளித்துவ வர்க்கத்தின்மீது பாட்டாளி வர்க்கம் உலக அளவில் வெற்றி பெறுவதற்கான வழியில் ஒரு சிறு படியாய் அமைந்தது. இதையொத்த முறையில் இப்பொழுது நாம் 1919 மே 10ல் மாஸ்கோவில் மாஸ்கோ-கஸான் ரயில் வேத் தொழிலாளர்கள் ஏற்பாடு செய்த முதலாவது கம்யூ னிஸ்டு சுபோத்னிக் 1914-18 ஏகாதிபத்தியப் போரில் ஹிண் டன்பர்க் அல்லது ஃபோஷூம் ஆங்கிலேயரும் பெற்ற எந்த வெற்றியையும் காட்டிலும் அதிக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்று கூறலாம். ஏகாதிபத்தியவாதிகளின் வெற்றிகள் ஆங்கிலோ-அமெரிக்க, பிரெஞ்சுக் கோடீஸ்வரர் களுடைய லாபங்களுக்காக வேண்டி லட்சோப லட்சமாய்த் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்பதைக் குறிப்பவை, அளவு மீறி உண்டு ஊதிப் பருத்து உயிருள்ள நிலையிலே அழுகி முடைநாற்றம் வீசும் அந்திமக்கால முதலா ளித்துவம் புரியும் அட்டூழியங்களைக் குறிப்பவை. மாஸ்கோ -கஸான் ரயில்வேத் தொழிலாளர்கள் ஏற்பாடு செய்த கம்யூனிஸ்டு சுபோத்னிக் மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந் தும் யுத்தங்களிலிருந்தும் உலக மக்கள் அனைவருக்கும் விடுதலை கிட்டச் செய்யும் புதிய சோஷலிச சமுதாயத்தின் உயிரணுக்களில் ஒன்றாய்த் திகழ்வது.

முதலாளித்துவக் கனவான்களும், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் அடங்கிய அவர்களது பரி வாரத்தினரும்—''பொதுஜன அபிப்பிராயத்தின்'' பிரதிநிதி களாய் இவர்கள் பல காலமாய்த் தம்மைக் கருதிக்கொண்ட வர்கள்—இயல்பாகவே கம்யூனிஸ்டுகளின் நம்பிக்கைகளைக் கேலி செய்கின்றனர். ''மலர்க் கோப்பையில் நட்ட இலவம் பஞ்சு மரம்'' என்பதாய் அவர்கள் இந்த நம்பிக்கைகளைக் குறிப்பிடுகிறார்கள். திருட்டு, சோம்பல், குறைவான உற்பத்தித் திறன், மூலப் பொருள்களும் பண்டங்களும் முடிவற்று வீணாக்கப்படுதல் முதலான நிகழ்ச்சிகளின் மிகப் பெரிய எண் ணிக்கையுடன் ஒப்பிடுகையில் சுபோத்னிக்குகளின் எண்ணிக் கை அற்ப சொற்பமாய் இருப்பது குறித்து அவர்கள் ஏளனம் செய்கிறார்கள். இந்தக் கனவான்களுக்கு நாம் கூறும் பதில்

இதுவே: முதலாளித்துவ அறிவுஜீவிகள் தமது அறிவாற்றலை ருஷ்ய, அந்நிய முதலாளிகளது ஆட்சியதிகாரத்தைத் திரும்பவும் கொண்டுவரும் பொருட்டு இந்த முதலாளிகளுக்கு அளிப்பதற்குப் பதிலாய் உழைப்பாளி மக்களுக்கு உதவுவதற்காக அதை அர்ப்பணித்திருந்தார்களாயின், புரட்சி மேலும் விரைவாகவும், மேலும் சமாதான பூர்வமாகவும் நடந்தேறியிருக்கும். ஆனால், இது கற்பனாவாதமாகும். ஏனெனில் பிரச்சினை தீர்க்கப்படுவது வர்க்கப் போராட்டத்தால். அறிவுஜீவிகளில் பெரும்பாலோர் முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் தான் சாய்கின்றனர். பாட்டாளி வர்க்கம் வெற்றி வாகை சூடப் போவது அறிவுஜீவிகளின் உதவியால் அல்ல, அவர்களுடைய எதிர்ப்பை மீறித்தான் (எப்படியும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இப்படித்தான்). அவர்களில் திருத்த முடியாதபடி சீர்கேடுற்றோரை ஒதுக்கித் தள்ளியும், சஞ்சலவாதிகளைச் சீர்திருத்தியும் மறுகல்வியும் போதனையும் அளித்தும் கீழ்ப்படிய வைத்தும், அது படிப்படியாய் அவர்களில் மேலும் மேலும் அதிகமானோரைத் தம் பக்கத்துக்கு வென்று வெற்றி வாகை சூடப் போகிறது. புரட்சிக்கு ஏற்படும் இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் கண்டு ஆர்ப்பரித்து அகமகிழ்தல், பீதியைப் பரப்புதல், கடந்த காலத்துக்குத் திரும்பிவிட வேண்டுமெனப் பிரசாரம் செய்தல்—இவை யாவும் தான் வர்க்கப் போராட்டத்தில் முதலாளித்துவ அறிவுஜீவிகளின் ஆயுதங்களும் வழிமுறைகளும். இவற்றால் தான் ஏமாற்றப்படுவதற்குப் பாட்டாளி வர்க்கம் அனுமதிக்கப் போவதில்லை.

ஆனால் உண்மை விவரங்களைப் பரிசீலித்தால், புதிய பொருளுற்பத்தி முறை எதுவும் வரிசையாய்ப் பல தோல்விகளும் தவறுகளும் மறுதலிப்புகளும் இல்லாமல் உடனடியாகவே உறுதியாய் நிலைபெற்றதை வரலாற்றில் எப்பொழுதாவது கண்டதுண்டா? பண்ணை அடிமை முறை[114] ஒழிக்கப்பட்டு அரை நூற்றாண்டு கழிந்த பிறகும் ருஷ்யக் கிராமப்புறங்களில் பண்ணை அடிமை முறையின் மீதமிச்சங்கள் பலவும் இருந்தன. அமெரிக்காவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டு அரை நூற்றாண்டு ஆன பிறகும் நீக்ரோக்கள் பல

சந்தர்ப்பங்களில் அரை அடிமை நிலையிலேயே இருந்தனர். மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் அடங்கலான முதலாளித்துவ அறிவுஜீவிகள் மூலதனத்துக்குப் பணியாற்றுவதிலும் முழுக்க முழுக்கப் பொய்யான வாதங்களைத் தொடர்ந்து கையாளுவதிலும் இம்மியும் நெறி பிறழாதவர்களாகவே இருக்கின்றனர்—பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முன்பு அவர்கள் நாம் கற்பனவாதிகளாய் இருப்பதாய்க் குற்றம் கூறினர்; இந்தப் புரட்சிக்குப் பிறகு, கடந்த காலத்தின் சாயல்கள் யாவற்றையும் நாம் கற்பனு வேகத்தில் துடைத்தெறிய வேண்டுமெனக் கோருகின்றனர்!

ஆனல் நாம் கற்பனவாதிகள் அல்ல. முதலாளித்துவ ''வாதங்களின்'' உண்மை அர்த்தத்தை நாம் அறிவோம். புரட்சிக்குப் பிறகு சில காலத்துக்குப் பழைய அறநெறியின் சாயல்கள் புதியதன் இளங் குருத்துக்களை விஞ்சி நிச்சயமாக ஆதிக்கம் புரியவே செய்யும் என்பதையும் அறிவோம். புதியது இப்பொழுதுதான் பிறந்ததாய் இருக்கையில் குறிப்பிட்ட சிறிது காலத்துக்குப் பழையது அதைக் காட்டிலும் பலம் கொண்டதாகவே இருக்கும். இயற்கையிலும் சமூக வாழ்விலும் எப்பொழுதும் இப்படித்தான். புதியதன் இளங் குருத்துக்களின் வலுவின்மையை ஏளனம் செய்தலும், அறிவாளிகளின் கீழ்த்தரமான ஐயுறவு மனப்பான்மையும், இன்ன பிறவும் சாராம்சத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான முதலாளித்துவ வர்க்கப் போராட்ட முறைகளே ஆகும், சோஷலிசத்துக்கு எதிராய் முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதே ஆகும். புதியதன் வலுவில்லாத குருத்துக்களை நாம் கருத்துடன் ஆராய்ந்தாக வேண்டும். அவற்றின்பால் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அவற்றின் வளர்ச்சியை ஓங்கச் செய்யவும் அவற்றைப் ''பேணிக் காக்கவும்'' யாவும் செய்தாக வேண்டும். அவற்றில் சில தவிர்க்க முடியாதபடி மடிந்து விடலாம். ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' தான் குறிப்பிடத்தக்க முக்கிய பங்காற்றப் போகிறவை என்று நாம் உறுதிமொழி கூற முடியாது. ஆனல் அதுவல்ல விவகாரம். புதியதன் குருத்துக்கள் யாவற்றையும் ஒன்று விடாது பேணி வளர்த்திடுவதே இங்குள்ள விவகாரம். இவற்றுள் நிலைத்து

வாழத் தக்கனவற்றை வாழ்க்கை தேர்ந்தெடுத்துக் கொள்ளும். மனிதகுலம் மேக நோயை ஒழித்துக்கட்ட உதவும் பொருட்டு, ஜப்பானிய விஞ்ஞானிக்கு அறுநூற்று ஐந்து மருந்து தயாரிப்புகளைச் சோதித்துப் பார்த்துக் குறிப்பிட்ட தேவைகளுக்கு உகந்தபடி அமைந்த அறுநூற்று ஆருவது தயாரிப்பை உருவாக்கும் பொறுமை இருந்ததென்ருல், இதை விட கடினமான ஒரு பிரச்சினைக்கு, அதாவது முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டுவதென்ற பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புவோர் யாவற்றிலும் மிகப் பொருத்தமானதை உருவாக்கும் பொருட்டு நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் புதிய போராட்ட முறைகளையும் வழிகளையும் ஆயுதங்களையும் சோதித்துப் பார்க்கும்படியான விடாமுயற்சி உடையோராய் இருக்க வேண்டும்.

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' இவ்வளவு முக்கியமானவையாய் இருக்கக் காரணம் என்னவெனில், விதிவிலக்கான சிறந்த நிலைமைகளில் அமைந்தோராய் எவ்வகையிலும் கொள்ள முடியாத தொழிலாளர்களால் இவை ஆரம்பித்து வைக்கப்பட்டவை, சர்வசாதாரண நிலைமைகளில், அதாவது அளவு கடந்த கடின நிலைமைகளில் வாழும் பல்வேறு தேர்ச்சித் துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்களாலும் எந்தத் தேர்ச்சியுமில்லாத சாதாரணத் தொழிலாளர்களாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டவை. உழைப்பின் உற்பத்தித் திறன் சரிவதன் பிரதான காரணத்தை, ருஷ்யாவில் மட்டுமின்றி உலகெங்குமே காணக்கூடிய இந்தப் பிரதான காரணத்தை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். ஏகாதிபத்தியப் போரால் விளைந்த அழிவும் வறுமையும் கசப்பும் தளர்வும் தான் காரணம், நோயும் பட்டினியும்தான் காரணம். இறுதியாகச் சொன்னதே தலையாய முக்கியத்துவம் வாய்ந்தது. பட்டினி—இதுவே தான் காரணம். பட்டினியை ஒழிக்க விவசாயத்திலும், போக்குவரத்திலும், தொழில் துறையிலும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தியாக வேண்டும். இவ்வாறு, நாம் ஒரு நச்சுச் சுழலை அடைகிருேம்: உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த நாம் பட்டினியிலிருந்து காப்பாற்றிக் கொண்டாக வேண்டும், பட்டினியிலிருந்து நம்மைக்

காப்பாற்றிக் கொள்ள உழைப்பின் உற்பத்தித் திறனை நாம் உயர்த்தியாக வேண்டும்.

நச்சுச் சுழலை உடைப்பதே இத்தகைய முரண்பாடுகளை நடைமுறையில் தீர்ப்பதற்குரிய வழி என்பதை நாம் அறிவோம். மக்களுடைய மனோபாவத்தில் ஒரு தீவிர மாற்றத்தை உண்டாக்குவதே, இத்தகைய தீவிர மாற்றத்தின் பகைப் புலனில் அடிக்கடி தீர்மானகரமான பங்காற்றிடும் தனிப்பட்ட கோஷ்டிகளின் வீரமிக்க முன்முயற்சியே இதற்குரிய வழி என்பதை அறிவோம். மாஸ்கோ தேர்ச்சியற்ற தொழிலாளர்களும் ரயில்வேயில் வேலை செய்வோரும் (இவர்களில் பெரும்பான்மையோரையே மனதில் கொண்டுள்ளோம், மிகவும் சொற்பமான லாப வேட்டைக்காரர்களையும் அதிகாரிகளையும் பிற வெள்ளைப் படைத் தரப்பினரையும் அல்லவென்பதைக் கூற வேண்டியதில்லை) படுமோசமான மிகக் கடின நிலைமைகளில் வாழும் உழைப்பாளி மக்களாவர். எந்நேரமும் போதிய உணவில்லாதவர்கள்; புதிய அறுவடைக்கு முன்பான இந்நேரத்தில், பொதுவாகவே உணவு நிலைமை மோசமாயுள்ள இப்பொழுது மெய்யாகவே பட்டினி கிடப்பவர்கள். ஆயினும் பட்டினி கிடக்கும் இந்தத் தொழிலாளர்கள், முதலாளித்துவ வர்க்கத்தாரும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் நடத்தும் கேடுகெட்ட எதிர்ப் புரட்சிக் கிளர்ச்சியால் சூழப்பெற்றுள்ள இவர்கள் ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளுக்கு'' ஏற்பாடு செய்கின்றனர்; சம்பளம் இல்லாமலே வேலை நேரத்துக்குப் பிற்பாடு வேலை செய்கின்றனர்; போதிய உணவின்றி, ஓய்ந்து போய் வேதனைக்குள்ளாகி, பலமிழந்த நிலையில் இருப்பினும் உழைப்பின் உற்பத்தித் திறனில் மிகப் பெரிய அதிகரிப்பை உண்டாக்கி வருகிறார்கள். அருந்திறல் வீரமல்லவா இது? உலக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாற்றத்தின் தொடக்கமல்லவா?

புதிய சமுதாய அமைப்பு வெற்றி பெற, இறுதியாய்ப் பார்க்குமிடத்து, உழைப்பின் உற்பத்தித் திறன்தான் மிக முக்கியமானது, தலைமையானது. உழைப்பின் உற்பத்தித் திறனில் பண்ணையடிமை முறை அறியாத உயர் நிலையை

முதலாளித்துவம் உண்டாக்கிற்று. உழைப்பின் உற்பத்தித் திறனில் மேலும் மிக உயர்ந்த ஒரு புதிய நிலையை உண்டாக்குவதன் மூலம் சோஷலிசமானது முதலாளித்துவத்தை அடியோடு தோற்கடிக்க முடியும், தோற்கடிக்கவும் போகிறது. இது மிகவும் கடினமான பணி, இதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஆனால் இது துவக்கப்பட்டு விட்டது, இதுவே பிரதானமாகும். பட்டினி கிடக்கும் மாஸ்கோவில் பட்டினி கிடக்கும் தொழிலாளர்களால், சோதனை வாய்ந்த நான்கு ஆண்டுக் கால ஏகாதிபத்திய யுத்தத்தையும் பிறகு மேலும் பெருஞ் சோதனையாயிருந்த ஒன்றரை ஆண்டுக்கால உள்நாட்டுப் போரையும் கடந்து வந்த இத்தொழிலாளர்களால் 1919 கோடையில் இந்த மாபெரும் பணியினைத் துவக்க முடிந்ததெனில், பிற்பாடு நாம் உள்நாட்டுப் போரில் வாகை சூடி சமாதானம் வென்று கொள்ளும் போது எப்படிப்பட்ட வளர்ச்சி ஏற்படும்?

முன்னேறிய தொழில்நுட்ப முறைகளைக் கையாளும் வர்க்க உணர்வு படைத்த, ஒன்றுபட்ட தொழிலாளர்களின் மனமுவந்த உழைப்பின் உயர்வான—முதலாளித்துவத்தில் நிலவுவதுடன் ஒப்பிடுகையில்—உற்பத்தித் திறனே கம்யூனிசம். கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள் கம்யூனிசத்தின் மெய்யான தொடக்கமாய் அமைந்து அளவு கடந்த மதிப்புடையனவாகின்றன. இது அரிதினும் அரிய ஒன்று, ஏனெனில் (நமது கட்சி வேலைத்திட்டம்[115] முற்றிலும் சரியானபடி கூறுவது போல) நாம் ‘‘முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய முதல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்’’ கட்டத்தில்தான் இருக்கிறோம்.

சர்வசாதாரணமான தொழிலாளர்கள் கடின உழைப்பைக் கண்டு அஞ்சாமல் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில், ஒவ்வொரு பூடு தானியத்தையும் நிலக்கரியையும் இரும்பையும் பிற பொருள்களையும்—நேரடியாகத் தொழிலாளர்கள் கைக்கோ அவர்களது ‘‘நெருங்கிய’’ உற்றார் உறவினர் கைக்கோ அல்லாமல் ‘‘தொலைவான’’ உற்றார் உறவினர் கைக்கு, அதாவது சமுதாயம் அனைத்தின், முதலில் தனியொரு சோஷலிச அரசிலும், பிறகு சோவியத் குடியரசு

களது ஐக்கியத்திலும் ஒன்றுபட்ட கோடானு கோடியான மக்கள் அனைவரின் கைக்கு உரியனவாகிய இவற்றை—சேத மின்றிக் காப்பதில் ஆர்வமிக்க அக்கறை காட்டுகையில் கம்யூனிசம் தொடங்குகிறது.

சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் பற்றிய ஆடம் பரமான, பகட்டு ஆரவாரமான முதலாளித்துவ ஜனநாயக உரிமை சாசனத்தைக் கார்ல் மார்க்ஸ் மூலதனத்தில் எள்ளி நகையாடுகிறார். பொதுப்பட சுதந்திரம், சமத்துவம், சகோ தரத்துவம் என்று பேசப்படும் சொல் வீச்சுக்கள் யாவற்றை யும் அவர் எள்ளி நகையாடுகிறார். அவக்கேடு வாய்ந்த பேர்ன் அகிலத்தின் அவக்கேடு வாய்ந்த இன்றைய தலைவர்களும் அடங்கலாய் எல்லா நாடுகளின் குட்டி முதலாளித்துவ வர்க் கத்தாரையும் அற்பவாதிகளையும் இந்தச் சொல்வீச்சுக்கள் மதி மயங்கச் செய்து விடுகின்றன. இந்த ஆடம்பரமான உரிமைப் பிரகடனங்களுக்கு நேர் மாறாய்ப் பாட்டாளி வர்க் கம் பிரச்சினையை எடுத்துரைக்கும் பகட்டற்ற, நிதானமான, நடைமுறைச் செயல் சார்ந்த, எளிய முறையினை மார்க்ஸ் சுட்டிக் காட்டுகிறார்—வேலை நேரத்தைக் குறைப்பதற்காக அரசுச் சட்டம் இயற்றுதல் இத்தகைய செயல் முறைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். மார்க்ஸ் எடுத்துரைப் பது எவ்வளவு பொருத்தமானது, பொருட் செறிவு கொண் டது என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உள்ளடக்கம் கண்கூடாய்த் தெரியத் தெரிய மேலும் மேலும் தெளிவாக வும் வெளிப்படையாகவும் விளங்குகிறது. மெய்யான கம்யூ னிசத்தின் ''சூத்திரங்கள்'' காவுத்ஸ்கிகளும் மென்ஷிவிக்கு களும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் பேர்ன் அகிலத்தைச் சேர்ந்த அவர்களது அருமைச் ''சோதரர்களும்'' கையாளும் ஆடம்பரமான சிக்கல் வாய்ந்த புனிதச் சொல்லடுக்கு களிலிருந்து வேறுபடுகிறவை, எப்படியெனில் யாவற்றையும் அவை உழைப்பு நிலைமைகளாய்ச் சுருக்கிக் காட்டுகின்றன. ''உழைப்பு ஜனநாயகம்'', ''சுதந்திரம், சமத்துவம், சகோ தரத்துவம்'', ''மக்களாலான அரசாங்கம்'' இத்தியாதி வாய்ப் பேச்சுக்கள் எல்லாம் வேண்டாம். வர்க்க உணர்வு படைத்த இன்றைய தொழிலாளர்களும் விவசாயிகளும் முத

லாளித்துவ அறிவுஜீவிகளது இந்த ஆடம்பரச் சொல்லடுக்கு களின் அர்த்தத்தைக் கண்டு கொண்டு விடுகிருர்கள். ''தளுக்குப்பேர்வழியின்'' குறை சொல்ல முடியாத ''நேர்த்தியான'' பாவனையையும் அப்பழுக்கில்லாத தோற் றத்தையும் கண்ட மாத்திரத்திலே, சாதாரண பகுத்தறிவும் அனுபவமும் உடையவர் ஒருவர் பிழையற்றவாறு ''மோசடிக்காரனுய்த்தான் இருப்பான்'' என்று எடுத்த எடுப்பிலே எவ்வளவு சுலபமாய்ச் சொல்லி விடுகிருரோ அதே போலச் சுலபமாய் இவர்கள் இதிலுள்ள சூதைக் கண்டு கொண்டு விடுகிருர்கள்.

ஆடம்பரச் சொல்லடுக்குகள் குறைய வேண்டும், சர்வ சாதாரணமான அன்ருட வேலையும், ஒவ்வொரு பூடு தானியத் திலும் ஒவ்வொரு பூடு நிலக்கரியிலும் காட்டப்படும் அக் கறையும் ஓங்க வேண்டும்! பட்டினி கிடக்கும் தொழிலாளர் களுக்கும் கந்தல் உடுத்தி வெறுங் காலுடன் நிற்கும் விவசாயி களுக்கும் தேவைப்படுல் இந்தப் பூடு தானியத்தையும் பூடு நிலக்கரியையும் பேரம் பேசி அல்ல, முதலாளித்துவ வழியில் அல்ல, மாஸ்கோ-கஸான் ரயில் பாதையைச் சேர்ந்த தேர்ச்சியில்லாத வேலையாட்களேயும் ஊழியர்களேயும் போன்ற சாதாரண உழைப்பாளர்களின் உணர்வுபூர்வமான மனமுவந்த, அளவிலா வீரம் வாய்ந்த உழைப்பின் மூலம் அளித்திடுவதில் அக்கறை ஓங்க வேண்டும்.

புரட்சிப் பிரச்சினைகள் குறித்து முதலாளித்துவ அறிவு ஜீவிகள் அனுசரிக்கும் வாய்ச்சவடால் போக்கின் மீதமிச்சங் கள் எங்கும், நம்முடைய அணிகளிலேகூட காணப்படு கின்றன என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொண்டே ஆக வேண்டும். உதாரணமாய் நமது பத்திரிகைகள் அழுகிப் போன முதலாளித்துவ ஜனநாயகப் பழங் காலத்தின் இந்த அழுகிப் போன மீதமிச்சங்களே எதிர்த்துப் போராட அதிக மாய் எதுவும் செய்யவில்லை. மெய்யான கம்யூனிசத்தின் ஆடம் பரமற்ற, எளிய, சர்வசாதாரணமான, ஆனல் உயிர் சக்தி மிக்க குருத்துக்களே வளர்த்திட அவை அதிகமாய் எதுவும் செய்யவில்லை.

பெண்களின் நிலேயை எடுத்துக் கொள்வோம். ஆட்சியதி

காரத்துக்கு வந்த முதலாவதுஆண்டிலேயே இந்தத் துறையில் நாம் செய்ததில் நூற்றில் ஒரு பங்கைக்கூட உலகில் எந்த ஜனநாயகக் கட்சியும் மிகவும் முன்னேறிய முதலாளித்துவக் குடியரசிலுங்கூட பல பத்தாண்டுகளிலும் செய்ததில்லை. பெண்களை அசமத்துவ நிலையில் வைக்கும் இழிவான சட்டங்களை, திருமண ரத்துக்கு விலங்குகளிட்டும், அருவருக்கத் தக்க வினைமுறைகளால் அதைச் சுற்றிவளைத்தும், திருமணத்துக்குப் புறம்பாய்ப் பிறந்த குழந்தைகளுக்கு அங்கீகாரம் அளிக்க மறுத்தும், அவற்றின் தந்தையரைத் தேடிப் பிடிக்கும்படி விதித்தும், இன்ன பலவாருகவும் இழிமை செய்யும் சட்டங்களை மெய்யாகவே நாம் தகர்த்துத் தரை மட்டமாக்கினேம். இச்சட்டங்களின் எண்ணற்ற மீதமிச்சங்கள் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் வெட்கக் கேடாய் எல்லா நாகரிக நாடுகளிலும் இருக்கக் காணலாம். இத்துறையில் நாம் செய்திருப்பவை குறித்துப் பெருமைகொள்ள நமக்கு ஆயிரம் மடங்கு உரிமை உண்டு. பழைய முதலாளித்துவச் சட்டங்கள், ஏற்பாடுகளின் குப்பை கூளங்களை எவ்வளவுக்கு எவ்வளவு சுத்தமாய்க் கூட்டிப் பெருக்கி அறவே அகற்றினேமோ, கட்டியமைப்பதற்காகத் தரையைச் சுத்தம் செய்துள்ளோமே தவிர இன்னும் கட்டியமைத்தாகவில்லை என்பது நமக்கு அவ்வளவுக்கு அவ்வளவு தெளிவாய்த் தெரிகிறது.

பெண் விடுதலைச் சட்டங்கள் யாவும் இருந்த போதிலும் தொடர்ந்து அவள் இல்லத்து அடிமையாகவே வாழ்கிருள். ஏனெனில், அற்பத்தனமான வீட்டு வேலைகள் அவளை நசுக்கி நெரித்து மழுங்க வைத்து இழிவுறச் செய்கின்றன; அடுப்படியிலும் குழந்தைத் தொட்டிலுடனும் கட்டுண்டுவிடச் செய்கின்றன. உற்பத்தித் திறனில் படுகேவலமான கீழ்நிலைக்கு உரிய அற்ப வேலைகளில், உயிரை வதைக்கும், சிந்தனையை மழுங்கச் செய்யும், நசுக்கி ஒடுக்கும் ஓயாத நச்சரிப்பு வேலைகளில் அவள் தன் உழைப்பைப் பாழாக்குகிருள். இந்த அற்பத்தனமான வீட்டு வேலை நச்சரிப்பை எதிர்த்து எங்கே, எப்பொழுது முழு முனைப்பான போராட்டம் (அரசு ஆட்சியதிகாரம் செலுத்தும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில்)

தொடங்குகிறதோ, அல்லது இன்னும் சரிவரக் கூறுவோமா யின் பெரிய அளவு சோஷலிசப் பொருளாதாரமாய் அதன் முழு அளவிலான மாற்றம் தொடங்குகிறதோ, அங்கேதான், அப்பொழுதுதான் மெய்யான பெண் விடுதலே, மெய்யான கம்யூனிசம் தொடங்கும்.

மறுக்க முடியாத ஒன்ருய் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் தத்து வார்த்த அளவில் கருதும் இந்தப் பிரச்சினையில் நாம் நடை முறையில் போதிய கவனம் செலுத்துகிருேமா? இல்லவே இல்லே. கம்யூனிசத்தின் குருத்துக்கள் இத்துறையில் ஏற் கெனவே இருப்பவற்றை நாம் வேண்டிய அளவு பேணிக் காக்கிருேமா? இல்லே என்றே திரும்பவும் பதிலளிக்க வேண்டி யிருக்கிறது. பொது உணவு நிலேயங்கள், பிள்ளேப் பராமரிப் பகங்கள், குழந்தைப் பள்ளிகள்—இவைதாம் இந்தக் குருத்துக்களுக்கான உதாரணங்கள். ஆடம்பரமோ படா டோபமோ மினுக்கோ எதுவும் இல்லாத எளிய, அன்ருட சாதனங்கள் இவை—பெண்களே மெய்யாகவே விடுவிக்க வல் லவை, சமூகப் பொருளுற்பத்தியிலும் பொது வாழ்விலும் பெண்களின் பாத்திரத்தைப் பொருத்தவரை ஆடவர்களுக்கு அவர்கள் சரிசமத்துவமாய் இல்லாத நிலேயை மெய்யாகவே மட்டுப்படுத்தவும் ஒழிக்கவும் வல்லவை. இந்தச் சாதனங் கள் புதியவை அல்ல, (பொதுவாக சோஷலிசத்துக்கான எல்லா முன்தேவைகளேயும் போல) இவையும் பெருமளவு முதலாளித்துவத்தால் உண்டாக்கப்பட்டவையே. ஆனுல் முதலாளித்துவத்தில் இவை முதலாவதாக, அரிதாகவே இருந்தன; இரண்டாவதாக—இது குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்தது—லாபமடிக்கும் நிலேயங்களாய், ஊக வாணிபம், லாப வேட்டை, ஏமாற்று, மோசடி ஆகியவற்றின் படு மோசமான எல்லா இயல்புகளும் மிகுந்தவையாகவும், அல்லது "முதலாளித்துவக் கொடையின் கழைக்கூத்துகளாகி" சிறந்த தொழிலாளர்களது நியாயமான வெறுப்புக்கும் இகழ்ச்சிக்கும் உரியனவாகவும் இருந்தன.

நமது நாட்டில் இந்த நிலேயங்களின் எண்ணிக்கை வெகு வாய் அதிகரித்திருப்பதிலும், இந்நிலேயங்களின் தன்மை மாற்றமுறத் தொடங்கியிருப்பதிலும் சந்தேகமில்லே. தொழி

லாளி, விவசாயிப் பெண்களிடம் நாம் உணர்வதற்கும் கூடு தலான அளவில் நிறுவன ஒழுங்கமைப்புத் திறன் இருப்பதி லும், ஏராளமான தொழிலாளர்களது பங்குடனும் இன்னும் ஏராளமான நுகர்வாளர்களது பங்குடனும் நடைமுறைப் பணிக்கு ஏற்பாடு செய்யக்கூடியவர்கள் நாம் அறிந்ததைக் காட்டிலும் மிக அதிகம் பேர் இருப்பதிலும் சந்தேகமில்லை. பெருமையடித்துக் கொள்ளும் நமது ''அறிவுத் துறையின ரையோ'' அரை வேக்காட்டுக் ''கம்யூனிஸ்டுகளையோ'' ''பீடித்துக் கொண்டுவிடும்'' அபரிமிதமான வாய்ப் பேச்சும், அமளியும், சச்சரவும், திட்டங்களையும் அமைப்புகளையும் பிறவற்றையும் பற்றிய கூச்சலும் இல்லாமலே, இவர்கள் இப் பணிக்கு ஏற்பாடு செய்யக் கூடியவர்கள். ஆனால் புதியதன் இந்தக் குருத்துக்களை வேண்டிய அளவுக்கு நாம் பேணி வளர்த்திடவில்லை.

முதலாளித்துவ வர்க்கத்தாரைப் பாருங்கள். அவர்களுக் குத் தேவையானதை விளம்பரப்படுத்த எவ்வளவு நன்றாய்த் தெரிந்து வைத்திருக்கிறார்கள்! ''முன்மாதிரி'' நிலையங்களாய் முதலாளிகள் கருதுகிறவற்றை அவர்களுடைய செய்தியேடு களின் கோடிக் கணக்கான பிரதிகள் எப்படி மெச்சிப் புகழ் கின்றன பாருங்கள்! ''முன்மாதிரி'' முதலாளித்துவ நிறுவ னங்கள் எப்படித் தேசியப் பெருமைக்குரியனவாய் ஆக்கப் படுகின்றன பாருங்கள்! நமது பத்திரிகைகள் சிறந்த உணவு நிலையங்களையோ பிள்ளைப் பராமரிப்பகங்களையோ விவரித்துக் கூறி, தினசரி வற்புறுத்தலின் மூலம் அவற்றில் சிலவற்றை முன்மாதிரிகளாய் மாறச் செய்வதற்காக முயற்சி செய் வதில்லை, அல்லது மிக அரிதாகவே செய்கின்றன. நமது பத்திரிகைகள் அவற்றைப் போதிய அளவு விளம்பரப்படுத்து வதில்லை, முன்மாதிரியான கம்யூனிஸ்டுப் பணியால் எப்படி மனித உழைப்பை மிச்சப்படுத்த முடியும், நுகர்வாளர் களுக்கு வசதிகள் செய்து தர முடியும், பண்டங்களைச் சேமிக்க முடியும், இல்லத்து அடிமை வாழ்விலிருந்து பெண் களை விடுவிக்க முடியும், சுகாதார நிலைமைகளை மேம்படச் செய்ய முடியும், இச்சாதனைகளை சமுதாயம் அனைத்துக்கும் உழைப்பாளி மக்கள் எல்லோருக்கும் விரிந்து பரவச் செய்ய முடியும் என்பதை அவை விளக்கமாய் விவரிப்பதில்லை.

முன்மாதிரியான பொருளுற்பத்தி, முன்மாதிரியான கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள், ஒவ்வொரு பூடு தானியத்தையும் கொள்முதல் செய்வதிலும் வினியோகிப்பதிலும் முன்மாதிரியான கவனம், கடமையுணர்ச்சி, முன்மாதிரியான உணவு நிலையங்கள், இந்தத் தொகுதியில் இந்தத் தொழிலாளர் வீட்டில் காணக்கூடிய முன்மாதிரியான சுத்தம் முதலானவை யாவற்றிலும் நமது பத்திரிகைகளும் மற்றும் தொழிலாளர்கள், விவசாயிகளின் நிறுவனம் ஒவ்வொன்றும் தற்போது செலுத்துவதைக் காட்டிலும் பத்து மடங்கு கூடுதலான கவனமும் கருத்தும் செலுத்த வேண்டும். இவை எல்லாம் கம்யூனிசத்தின் குருத்துக்கள். இவற்றைப் பேணி வளர்த்திடுவது நமக்குரிய பொதுவான, தலையாய கடமை. நமது உணவு நிலைமையும் பொருளுற்பத்தி நிலைமையும் கடினமாகவே இருப்பினும், போல்ஷிவிக் ஆட்சியின் ஒன்றரை ஆண்டில் நிச்சயமாய் நெடுகிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது: தானியக் கொள்முதல் 3 கோடிப் பூடுகளிலிருந்து (1917 ஆகஸ்டு 1லிருந்து 1918 ஆகஸ்டு 1 வரை) 10 கோடிப் பூடுகளாய் (1918 ஆகஸ்டு 1லிருந்து 1919 மே 1 வரை) உயர்ந்திருக்கிறது; காய்கறிகள் பயிரிடுதல் விரிவடைந்திருக்கிறது; பயிரிடப்படாத நிலப்பரப்பு குறைந்திருக்கிறது; எரிபொருள் இடர்ப்பாடுகள் பெருமளவில் இருந்துங்கூட ரயில் போக்குவரத்து மேம்படத் தொடங்கியிருக்கிறது; மற்றும் பலவற்றையும் குறிப்பிடலாம். இந்தப் பொதுச் சூழலிலும் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தின் ஆதரவிலும் கம்யூனிசத்தின் குருத்துக்கள் காய்ந்து கருகிவிட மாட்டா, அவை வளர்ந்து முழுமையான கம்யூனிசமாய் மலரும்.

* * *

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளின்'' முக்கியத்துவத்தில் நாம் மிகப் பெரிய அளவில் கருத்து செலுத்தியாக வேண்டும், அப்பொழுதுதான் நாம் இந்த மாபெரும் தொடக்கத்திலிருந்து எழும் மிக முக்கிய நடைமுறைப் படிப்பினைகள் யாவற்றையும் பெற முடியும்.

முதலாவதும் முதன்மையானதுமான படிப்பினை என்ன

வென்ருல் இந்தத் தொடக்கத்துக்கு எல்லா வழிகளிலும் உதவி புரிய வேண்டும். ''கம்யூன்'' என்னும் சொல் மிகவும் தாராளமாய்க் கையாளப்பட்டு வருகிறது. கம்யூனிஸ்டு களால் துவக்கப்படும் அல்லது அவர்களுடைய பங்குடன் துவக்கப்படும் எந்த வகையான நிலையமும் உடனே ''கம்யூன்'' என்பதாய்ப் பறைசாற்றப்படுவது சகஜமாகிவிட்டது. இது விடாப்பிடியான நீண்ட நெடிய உழைப்பால், கம்யூனிச நிர் மாணத்தில் மெய்யான நடைமுறை சாதனை காண்பதால் பெற வேண்டிய மாண்பு மிக்க பட்டம் என்பது அடிக்கடி மறக்கப்பட்டு விடுகிறது.

எனவேதான் மக்கள் கமிசாரவையின் அரசாணையை ''நுகர்வாளர் கம்யூன்கள்''[116] என்கிற பெயரைப் பொருத்த மட்டில் ரத்து செய்வதென்ற தீர்மானம் மத்தியச் செயற் குழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானேரின் மனத் தில் உருவாகி முற்றியதானது என்றுடைய அபிப்பிராயத்தில் முற்றிலும் நியாயமே. பெயர் எளியதாகவே இருக்கட்டும்— புதிய ஒழுங்கமைப்புப் பணியின் துவக்கக் கட்டங்களில் காணக்கூடிய தவறுகளுக்கும் குறைபாடுகளுக்குமான பழி ''கம்யூன்கள்'' மீது சுமத்தப்படாமல் (நியாயமாய்ச் செய்யப்பட வேண்டியது போல) மோசமான கம்யூனிஸ்டுகள் மீதே சுமத்தப்படும். ''கம்யூன்'' என்னும் சொல்லை பொதுப் பிரயோகத்திலிருந்து விலக்கி, நினைத்தவர் எல்லாம் இதை எடுத்தாளாதபடித் தடை செய்வது நல்லது தான். தமது பணியைக் கம்யூனிஸ்டுக்குரிய பாணியில் ஒழுங்கமைத்துக் கொள்ளத் தக்கவை என்பதை நடைமுறையில் மெய்ப்பித் தும் (சுற்றிலுமுள்ள மக்கள் அனைவரின் ஒருமனதான அங்கீ காரத்தின் மூலம் நிரூபித்தும்) காட்டியுள்ள மெய்யான கம் யூன்கள் மட்டுமே இந்தப் பெயரைச் சூட்டிக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். சமுதாயத்தின் நலன்களுக்காக, உழைப்பாளி மக்கள் அனைவரின் நலன்களுக்காக ஊதியமின்றி உழைக்கக் கூடியவர் என்பதை முதலில் நிரூபித்துக் காட்டுங் கள், ''புரட்சிகர முறையில் வேலை செய்யக்'' கூடியவர்தான், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் முன்மாதிரியான முறையில் வேலையை ஒழுங்கமைக்கவும் கூடியவர்தான் என்

பதை நிரூபித்துக் காட்டுங்கள், பிறகு ''கம்யூன்'' என்ற மாண்புமிக்க பெயரைப் பெற முன்வாருங்கள்!

இந்த விவகாரத்தில் ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' மிகவும் உயர் மதிப்புக்குரிய விதிவிலக்கானவை. எப்படியெனில் மாஸ்கோ-கஸான் ரயில்பாதையின் தேர்ச்சியில்லா வேலையாட்களும் ஊழியர்களும் தாம் கம்யூனிஸ்டுகள் போல் வேலை செய்யக் கூடியவர்கள் என்பதைச் செயல்களின் வாயிலாய் முதலில் நிரூபித்துக் காட்டிவிட்டு, பிறகு தமது முன்முயற்சிக்குக் ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' என்று பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குரிய தகுதி உண்டென்பதைக் கடினமான உழைப்பாலும், நீடித்த செயற்பாட்டில் பெறும் நடைமுறை வெற்றியாலும், முன்மாதிரியான மெய்யான கம்யூனிஸ்டு ஒழுங்கமைப்பாலும் நிரூபித்துக் காட்டாதவர் எவரும் இனி தமது நிலையம் அல்லது அலுவலகம் அல்லது ஏற்பாட்டிற்குக் கம்யூன் என்று பெயரிட்டுக் கொள்வாராயின் அவர் ஈவிரக்கமின்றி ஏளனம் செய்யப்பட்டு மோசடிக்காரர் அல்லது வாய்ச்சவடால்காரரென நிந்திக்கப்படும்படி நாம் விழிப்புடன் இருந்து உறுதி செய்தாக வேண்டும்.

மாபெரும் தொடக்கமான ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளை'' மற்றொரு காரியத்துக்காகவும், அதாவது தகாதோரை நீக்கிக் கட்சியைத் தூய்மை ஆக்குவதற்காகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புரட்சியை அடுத்து ஆரம்பக் காலத்தில், ''நேர்மையான'' குட்டி முதலாளித்துவ மனப்பாங்கினர் மிகவும் சந்தேகங் கொண்டிருந்தபோது, முதலாளித்துவ அறிவுஜீவிகள்—மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் அடங்கலாய்த்தான்—ஒருவர் பாக்கியில்லாமல் முதலாளித்துவ வர்க்கத்தாரின் அடிவருடிகளாய்ச் செயல்பட்டு சீர்குலைவு வேலைகள் புரிந்தபோது, சாகசக்காரர்களும் ஏனைய தீயவர்களும் ஆளும் கட்சியுடன் ஒட்டிக் கொண்டு விட்டனர். இது சிறிதும் தவிர்க்க முடியாத நிகழ்ச்சியே. இது நடைபெறாத ஒரு புரட்சி என்றுமே இருந்ததில்லை, இருக்கவும் முடியாது. ஆளும் கட்சியானது வன்மையும் திண்மையும் வாய்ந்த முன்னேறிய வர்க்கத்தை ஆதாரமாய்க் கொண்டு தனது அணிகளிலிருந்து தகாதோரை நீக்கித்

தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் ஆற்றலுடையதாய் இருக்க வேண்டும்.

இந்தப் பணியை நாம் நெடுநாட்களுக்கு முன்பே தொடங்கினோம். இது முறையாகவும் அயராமலும் தொடர்ந்து நடைபெற வேண்டும். போருக்காகக் கம்யூனிஸ்டுகள் படை திரட்டப்பட்டதானது இத்துறையில் நமக்கு உதவியாய் இருந்தது: கட்சி அணிகளிலிருந்து கோழைகளும் கயவர்களும் ஓட்டம் பிடித்தனர். இவர்கள் ஒழிந்தது நல்லது தான்! கட்சி உறுப்பினர் தொகை இவ்வாறு குறைவதானது கட்சியின் வலிமையிலும் செல்வாக்கிலும் **பிரம்மாண்ட அதிகரிப்பைக்** குறிக்கிறது. தகாதோரைக் கழித்தொதுக்கும் வேலையை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும். புதிய தொடக்கமான ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளை'' இதற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; ''புரட்சிகர வழியில் வேலை செய்வதில்'' சில காலம், உதாரணமாய் ஆறு மாத காலம் ''சோதிக்கப்பட்ட'' அல்லது ''பரீட்சிக்கப்பட்ட'' பிறகே எவரும் கட்சியினுள் ஏற்கப்பட வேண்டும். 1917 அக்டோபர் 25க்குப் பிற்பாடு சேர்ந்து கொண்டோரும், தாம் முற்றிலும் நம்பத் தக்கவரே, பற்றுறுதி வாய்ந்தோரே, கம்யூனிஸ்டுகளாய் இருக்கத் தகுதியுடையோரே என்று விசேஷ வேலை அல்லது சேவையின் மூலம் நிரூபித்துக் காட்டாதோருமான கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் இது போன்ற சோதனைக்கு உள்ளாக வேண்டுமென்று கோருவது அவசியம்.

மெய்யான கம்யூனிஸ்டு வழியில் வேலை செய்வது குறித்து கட்சி இடையறாது மேலும் மேலும் **கூடுதலாய்க் கண்டிப்பான கோரிக்கைகளை** வைப்பதன் மூலம் தகாதோரைக் கழித்து விடுமாயின் அரசு இயந்திரம் மேம்பாடுற்றுச் செம்மையாகும்; விவசாயிகள் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் பக்கத்துக்கு **முடிவாய் மாறிவிடும் காலம்** மிகவும் நெருங்கி வந்துவிடும்.

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் அரசு இயந்திரத்தின் வர்க்க இயல்பை எடுப்பாய்த் தெரியச் செய்வதை இங்கு குறிப்பிடலாம். ''புரட்சிகர வழியில் செயலாற்றுவது'' குறித்து கட்சியின் மத்தியக்

கமிட்டி ஒரு கடிதம் தயாரித்தது.* 1,00,000லிருந்து 2,00,000 வரையிலான உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் மத்திய கமிட்டி இந்தக் கருத்தை முன்வைக்கிறது (தகாதோரைப் பூரணமாய்க் கழித்தபின் எஞ்சும் எண்ணிக்கை இதுவாகவே இருக்குமெனக் கொள்கிறேன்; தற்போது உறுப்பினர் தொகை அதிகமாகும்).

தொழிற் சங்கங்களில் ஒன்றுதிரண்டுள்ள தொழிலாளர்கள் இந்தக் கருத்தைப் பற்றிக் கொள்கிறார்கள். ருஷ்யாவிலும் உக்ரேனியாவிலும் இவர்களுடைய எண்ணிக்கை சுமார் நாற்பது லட்சமாகும். இவர்களில் மிகப் பெரும்பான்மையோர் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஆதரிப்பவர்கள். இரண்டு லட்சமும் நாற்பது லட்சமும், ''பற்சக்கரங்களுக்கு''—இப்படிக் கூறலாமெனில்—இடையிலுள்ள விகிதம் இவ்வாறு இருக்கிறது. பிறகு கோடானு கோடியான விவசாயிகள் உள்ளனர். இவர்கள் மூன்று பிரதான பகுதிகளாய்ப் பிரிந்திருக்கிறார்கள்: எண்ணிக்கையில் மிகுதியானதும் பாட்டாளி வர்க்கத்துக்கு மிக நெருங்கியதுமான அரைப் பாட்டாளி வர்க்கத்தினர் அல்லது ஏழை விவசாயிகளின் பகுதி; பிறகு நடுத்தர விவசாயிகளின் பகுதி; முடிவில் எண்ணிக்கையில் மிகச் சொற்பமான குலாக்குகள் அல்லது கிராமப்புற முதலாளித்துவ வர்க்கத்தினரின் பகுதி.

தானிய வியாபாரம் புரிந்து பஞ்சத்திலிருந்து லாபம் பெறுவது சாத்தியமாயிருக்கும் வரை விவசாயி பாதி உழைப்பாளியாகவும் பாதி லாப வேட்டைக்காரனாகவும் தான் இருப்பான் (பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் சில காலத்துக்கு இது தவிர்க்க முடியாததே). லாப வேட்டைக்காரன் என்ற முறையில் விவசாயி நமக்குப் பகைமையாய், பாட்டாளி வர்க்க அரசுக்குப் பகைமையாய் இருக்கிறான்; முதலாளித்துவ வர்க்கத்தாருடனும் அவர்களது விசுவாசமான அடிவருடிகளுடனும்—தானியத்தில் வர்த்தகச் சுதந்திரம் வேண்டுமெனக் கோரும் மென்ஷிவிக் ஷேரையும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் பி. செர்னெனன்கோவையும் உள்ளடக்கி—உடன்பாடு

* இதே தொகுதி, பக்கங்கள் 281-285.—ப-ர்.

கொள்ள விரும்புகிருன். ஆனல் உழைப்பாளி என்ற முறையில் விவசாயி பாட்டாளி வர்க்க அரசின் நண்பன், நிலப்பிரபுவுக்கும் முதலாளிக்கும் எதிரான போராட்டத்தில் தொழிலாளியின் மிகவும் விசுவாசமான கூட்டாளி. உழைப்பாளர்கள் என்ற முறையில் பெருந் திரளான விவசாயிகள், கோடானு கோடியான விவசாயிகள் இந்த அரசு ''இயந்திரத்தை''—பாட்டாளி வர்க்க முன்னணிப் படையின் ஒன்று அல்லது இரண்டு லட்சம் கம்யூனிஸ்டுகளால் தலைமை தாங்கப்பட்டதும், நிறுவன ஒழுங்கமைப்பு கொண்ட பத்துலட்சக் கணக்கான பாட்டாளி வர்க்கத்தாராலானதும் ஆகிய இந்த அரசு ''இயந்திரத்தை''—ஆதரிக்கின்றனர்.

இதைக் காட்டிலும் ஜனநாயகத் தன்மையதான—இச் சொல்லின் மெய்ப் பொருளில்—ஓர் அரசு, உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்கள் திரளுடன் இதைக் காட்டிலும் நெருக்கமாய் இணைந்த ஓர் அரசு இதற்கு முன் எப்போதும் இருந்ததில்லை.

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளில்'' செய்யப்படுவதைப் போன்ற இந்தப் பாட்டாளி வர்க்கத் தன்மையதான பணி தான் பாட்டாளி வர்க்க அரசுக்கு விவசாயிகளுடைய நன்மதிப்பையும் பாசத்தையும் முழு அளவில் பெற்றுத் தரப் போகிறது. இத்தகைய பணியேதான், இது மட்டுமே தான், நமது கட்சியே சரி, கம்யூனிசம்தான் சரி என்கிற உறுதியான முழு நம்பிக்கையை விவசாயிகளுக்கு உண்டாக்கி அவர்களை நமது பற்றுறுதி மிக்க கூட்டாளிகளாக்கப் போகிறது; இவ்வழியில் உணவுத் தட்டுப்பாடு அறவே ஒழிவதற்கும், தானிய உற்பத்தியிலும் வினியோகத்திலும் முதலாளித்துவத்தின் மீது கம்யூனிசம் முழு வெற்றி பெறுவதற்கும், கம்யூனிசம் தங்குதடையின்றி உறுதியடைவதற்கும் வழி செய்யப் போகிறது.

1919, ஜுன் 28

நூல் திரட்டு,
தொகுதி *39*,
பக்கங்கள் *5-29*

தெனீக்கினை எதிர்த்து முழுவேகப் போராட்டம்!

கட்சி நிறுவனங்களுக்கு
ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யின்
மத்தியக் கமிட்டி எழுதிய கடிதம்[117]

தோழர்களே,

சோஷலிஸ்டுப் புரட்சிக்கு இது ஒரு மிக நெருக்கடியான, உண்மையில் ஆக அதிக நெருக்கடியான தருணமாகும். ருஷ்யாவிலும் வெளிநாடுகளிலும் (முதற்படியாக பிரிட்டனிலும் பிரான்சிலும்) சுரண்டலாளர்கள், நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளைத் தாங்கி ஆதரித்து வருவோர் ருஷ்யாவில் மக்கள் உழைப்பின் பலன்களைப் பறித்து வருவோரின், நிலப்பிரபுக்கள் முதலாளிகளின் ஆட்சி அதிகாரத்தை மீட்டமைப்பதற்காக ஒரு மூர்க்கமான முயற்சி செய்து வருகிறார்கள். உலக முழுவதிலும் தேய்ந்து குன்றி வரும் அவர்களது ஆட்சி அதிகாரத்துக்கு முட்டுக் கொடுக்கும் பொருட்டு முயற்சி செய்து வருகிறார்கள். தமது சொந்தத் துருப்புக்களைப் பயன்படுத்தி உக்ரேனியாவைப் படையெடுத்துக் கைப்பற்றுவதற்கான திட்டத்தில் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு முதலாளிகள் தோல்வியடைந்து விட்டார்கள். சைபீரியாவில் கல்சாக்குக்கு ஆதரவு தரும் விஷயத்தில் அவர்கள் தோல்வியடைந்து விட்டார்கள். ஒரு மனிதனைப் போன்று எழுச்சியடைந்துள்ள உரால் தொழிலாளர்களின் உதவியுடன் செஞ்சேனை வீரம் செறிந்த முறையில் முன்னேறி வருகிறது. சைபீரியாவில் ஆட்சி நடத்தும் முதலாளிகளின் நம்பற்கரிய கொடுங்கோன்மை மற்றும் மிருகத்தனத்தில் இருந்து சைபீரியாவை விடுதலை செய்ய அதை நெருங்கி வருகிறது. ருஷ்ய முடியரசுவாதிகள், காடேட்டுகள், மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் (இதில் இடதுசாரி சோஷலிஸ்டு-

புரட்சியாளர்களும் கூட விலக்கல்ல) ஆகியோரின் பங்கேற்புடன் எதிர்ப்புரட்சி சதியின் மூலம் பெத்ரோகிராதைக் கைப்பற்றுவது என்ற தமது திட்டத்தில் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் இறுதியாகத் தோல்வியடைந்து விட்டார்கள்.

தெனீக்கினின் கடுந்தாக்குதல் மூலம் மூலதனத்தின் ஆதிக்கத்தை மீட்டமைக்க அன்னிய முதலாளிகள் இப்போது மூர்க்கமான முயற்சிகள் செய்து வருகிறார்கள். கல்ச்சாக்குக்கு அவர்கள் முன்பு ஒரு முறை செய்தது போல தெனீக்கினுக்கு அவர்கள் அதிகாரிகள், சாமான்கள், வெடிகள், டாங்கிகள் இத்தியாதிகளை வழங்கியிருக்கிறார்கள்.

உரால் மற்றும் சைபீரியாவுக்கு உள்ளே செஞ்சேனையின் வெற்றிகரமான முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தாமல், தெனீக்கினது கடுந்தாக்குதலை முறியடித்துப் பின்னடையச் செய்து அவரைத் தோல்வியுறச் செய்ய தொழிலாளர் விவசாயிகளின் சகல சக்திகளையும் சோவியத் குடியரசின் சகல சக்திகளையும் இணைத்து ஆயத்தம் செய்ய வேண்டும். இதுவே

இந்தத் தருணத்தின் பிரதானக் கடமை

முதலாவதாயும் முக்கியமாயும் எல்லாக் கம்யூனிஸ்டுகளும், அவர்களுடன் அனுதாபமுடையவர்கள் அனைவரும், நேர்மையான தொழிலாளர் விவசாயிகள் சகலரும், அனைத்து சோவியத் ஊழியர்களும் **படையாளிகளைப் போலத் தம்மைத் தாமே ஊக்குவித்துக்** கொள்ள வேண்டும், **போரின் நேரடியான கடமைகள் மீது,** தெனீக்கின் தாக்குதலை வேகமாக முறியடித்துப் பின்னடையச் செய்வதன் மீது தமது வேலையை, தமது முயற்சிகளை, தமது அக்கறையை அதிகப்பட்ச அளவுக்கு ஒரு முனைப்படுத்த வேண்டும். இந்தக் கடமைக்கு இடமளிக்கும் வகையில் தமது இதர செயல்பாடுகள் முழுவதையும் சுருக்கி மறு சீரமைத்துக் கொள்ள வேண்டும்.

சோவியத் குடியரசு விரோதியால் முற்றுகையிடப்பட்டுள்ளது. அது சொல்லில் அன்றிச் செயலில் **தனி ஒரு ராணுவ முகாமாக** வேண்டும்.

எல்லா நிறுவனங்களின் எல்லா வேலைகளும் போருக்குத் தகவமைக்கப்பட்டு ஒரு ராணுவ பாணியில் நிறுவப்பட வேண்டும்!

தொழிலாளர் விவசாயிகள் அரசின் விவகாரங்களை நடத்துவதற்கு கூட்டுமை வழிமுறைகள் அத்தியாவசியமானவை. ஆனால் இந்தக் கூட்டுமை வழிமுறைகளின் எந்தவொரு விரிவாக்கமும், சிவப்பு நாடாபோக்கு மற்றும் பொறுப்பின்மையை விளைத்திடும் எந்தவொரு புரட்டும் கூட்டுமை உறுப்புக்களை பேச்சு மண்டபமாக மாற்றும் எந்தவொரு செயலும் மிக்குயர் தீமையாகும், இந்தத் தீமையை எப்பாடுபட்டும் சாத்தியமான அளவு விரைவாகவும் எந்த முறைகளைக் கையாண்டும் சரி தடுத்து நிறுத்த வேண்டும்.

கமிட்டிகளில் இருக்கும் உறுப்பினர் எண்ணிக்கை, வேலைகளைத் திறம்படச் செய்தல் எனும் இரு விஷயங்களையும் பொருத்த வரை கூட்டுமை வழிமுறைகள் அற முழுமையாயும் இன்றியமையாத குறைந்தபட்சத்தை விஞ்சி விடக்கூடாது. ''பேச்சுக் கச்சேரிகள்'' தடை செய்யப்பட வேண்டும், கருத்துக்கள் சாத்தியமான வேகத்தில் பரிமாற்றம் செய்யப்பட வேண்டும், அவை தகவல் தருதல் மற்றும் துல்லியமாக வகுத்து முன்வைக்கப்பட்ட நடைமுறை யோசனைகள் என்பவற்றுக்குள் அடங்க வேண்டும்.

எப்பொழுதாயினும் மிகச் சிறிய சாத்தியப்பாடு இருக்குமானால், இத்தகைய வழிமுறைகள் மிகக் குறுகியதான கூட்டுமை உறுப்புக்களுக்குள் மிகவும் முக்கியமான பிரச்சினைகளை மிகச் சுருக்கமாக மட்டுமே விவாதிக்கும் அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும். அதே போதில் நடைமுறை வேலைகளை நடத்துவதில் தனது உறுதி, வைராக்கியம், துணிவு மற்றும் திறமையில் பிரசித்தமானவரும், மாபெரும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான ஒரு தோழரிடம் நிறுவனங்கள், தொழிலகங்கள், உற்பத்தி சாலைகள் அல்லது கடமைகளின் நடைமுறை நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும். எப்படியும், எல்லா சந்தர்ப்ப சூழல்களின் கீழும் எவ்வித விதிவிலக்கும் இன்றி, கூட்டுமை நிர்வாகத்தை ஒட்டி துல்லியமாயும் வரையறுக்கப்பட்ட ஒரு வேலைக்கு, ஒவ்வொரு தனிநபரும்

சொந்தமாகப் பொறுப்பேற்க வேண்டும் என்பது குறித்த ஆகத் துல்லியமான வரையறுப்புச் செய்யப்பட வேண்டும். பொறுப்பில்லாத் தனத்துக்கு சாக்குப் போக்காக கூட்டுமை வழிமுறைகளைக் குறிப்பிடுவது மிகவும் அபாயகரமான தீமை. இது திறமான கூட்டுமுறை வேலைகளில் மிகவும் விரிவான அனுபவம் இல்லாதவர்களை எல்லாம் அச்சுறுத்துவதாக இருக்கும். சேனையில் இது மிக அடிக்கடி தவிர்க்க முடியாத அவலம், குழப்பம், பீதி, அதிகார பலத்தில் பிளவு மற்றும் தோல்விக்கு இட்டுச் செல்லும்.

அபாயத்தில் சற்றும் குறையாத இன்னொரு தீமை அமைப்புத் துறைக் களேபரம் அல்லது அமைப்புத் துறைக் கற்பனை விசித்திரங்களாகும். போரினால் அவசியமாகி விட்டதான வேலை மறு சீரமைப்பு எந்தச் சூழ்நிலை காரணமாயும் நிறுவனங்களின் மறு சீரமைப்புக்கு இட்டுச் செல்லக் கூடாது, புதிய நிறுவனங்களை அவசரப்பட்டு உருவாக்குவதற்கு அறவே இட்டுச் செல்லக் கூடாது. இது முற்ற முழுமையாயும் அனுமதிக்கக் கூடியதல்ல, இது குழப்பத்திலேயே போய் முடியும். வேலையை மறு சீரமைப்பது என்பது, குறிப்பிட்ட காலத்துக்கு பரம அவசியமல்லாத நிறுவனங்களை இயங்காதபடி நிறுத்தி வைத்தல், அல்லது அவற்றின் எண்ணிக்கையை ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறைத்தல் என்பவற்றைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஆனால் போர் சம்பந்தமான எல்லா வேலைகளும் ஏற்கெனவே நிலவி வரும் ராணுவ நிறுவனங்களை மேம்படுத்தி வலுப்படுத்தி விரிவுபடுத்தி ஆதரிப்பது மூலமும் முழுமையாயும் தனிவிலக்கான முறையிலும் நடத்தப்பட வேண்டும். விசேஷப் ''பாதுகாப்புக் கமிட்டிகள்'' அல்லது ''புரட்சிகர கமிட்டிகள்'' (புரட்சிகர ராணுவக் கமிட்டிகள்) உருவாக்கப்படுவது முதலில் விதிவிலக்கு என்ற முறையில் மட்டும், இரண்டாவதாக சம்பந்தப்பட்ட ராணுவ அதிகாரக் குழு அல்லது உயர்மட்ட சோவியத் அதிகாரக் குழுவின் ஒப்புதலுடன் மட்டுமே, மூன்றாவதாக மேற்குறிப்பிட்ட நிபந்தனை ஒப்புக் கொள்ளப்பட்டால் மட்டுமே அனுமதிக்கப்படலாம்.

கல்சாக் மற்றும் தெனீக்கின் பற்றிய மெய்விவரம் மக்களுக்கு விளக்கப்பட வேண்டும்

கல்ச்சாக்கும் தெனீக்கினும் தான் சோவியத் குடியரசின் முக்கியமான தனி ஒரு கடுமையான விரோதிகளாவர். ஆன்டான்டிடம் (பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா) இருந்து அவர்கள் பெற்றுவரும் உதவி இல்லாதிருக்கும் பட்சத்தில் அவர்கள் நெடுங்கால முன்பே வீழ்ச்சியடைந்திருப்பார்கள். ஆன்டான்டின் உதவி மட்டுமே அவர்களை வலுப்படுத்தி உள்ளது. இருந்த போதிலும் அவர்கள் மக்களை ஏமாற்றும்படி இன்னும் நிர்ப்பந்திக்கப்படுகிறுர்கள், ''ஜனநாயகத்தை'', ஓர் ''அரசியல் நிர்ணய சபையை'', ''மக்கள் அரசாங்கத்தை'' அவர்கள் ஆதரிப்பதாக அடிக்கடி பாசாங்கு செய்கிறுர்கள். மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் ஏமாற்றப்பட எளிதில் இடங்கொடுக்கிறுர்கள்.

கல்ச்சாக் (மற்றும் அவரது இரட்டையர் தெனீக்கின்) பற்றிய மெய்விவரங்கள் இப்போது முழுமையாக வெளிப்பட்டு விட்டன. பத்தாயிரக் கணக்கான தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது. மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு புரட்சியாளர்களும் கூடச் சுட்டுக் கொல்லப்பட்டது. பல மாவட்டங்கள் பூராவிலும் விவசாயிகள் கசையடிபட்டது. பெண்கள் பகிரங்கமாகக் கசையடிபட்டது. நிலப்பிரபுக்களின் புதல்வர்கள். அதிகாரிகளின் வரம்பிலா கட்டற்ற அதிகார வீச்சு. எல்லையில்லாத சூறையாடல். இவையே கல்ச்சாக் மற்றும் தெனீக்கின் பற்றிய மெய்விவரம். தொழிலாளருக்குத் துரோகம் செய்து தாமே கல்ச்சாக் மற்றும் தெனீக்கினுடன் ஆதரவாக சேர்ந்து நின்ற மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மத்தியில் கூட மேலதிகமான பலர் இந்த மெய்விவரத்தை ஒப்புக் கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த மெய்விவரத்தை மக்களுக்கு அறிவிப்பதற்காகவே நமது கிளர்ச்சி மற்றும் பிரசாரம் அனைத்தும் பயன்பட வேண்டும். ஒன்று கல்ச்சாக்கும் தெனீக்கினும் அல்லது சோவியத் ஆட்சி அதிகாரம், தொழிலாளர்களின் ஆட்சி

அதிகாரம் (சர்வாதிகாரம்) இந்த இரண்டில் ஒன்றே உறுதி என்பதை விளக்க வேண்டும். நடுப்பாதை இல்லை, நடுப்பாதை இருக்க முடியாது. கல்ச்சாக் அல்லது தெனீக்கினுல் படையெடுத்துக் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் இருந்து வந்த போல்ஷிவிக் அல்லாதோரான மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மற்றும் கட்சி சார்பற்ற நபர்கள் நேரடிச் சாட்சியமளித்த அத்தாட்சிகள் குறிப்பாயும் பயன்படுத்தப்பட வேண்டும். போராட்டத்தின் பிரச்சினை என்ன, கல்ச்சாக் அல்லது தெனீக்கின் வெற்றி பெறும் பட்சத்தில் தமக்கு ஏற்படப் போவது என்ன என்பதை ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் அறியட்டும்.

இராணுவ சேவைக்குத் திரட்டப்பட்டோர் மத்தியில் வேலை

இராணுவ சேவைக்குத் திரட்டப்படக் கூடியவர்கள் மத்தியில், படைதிரட்டலுக்கு உதவியாக, ஏற்கெனவே பட்டாளத்தில் சேர்ந்து விட்டவர்கள் இடையே வேலை செய்வது என்பதே நாம் இப்போது பிரதானமாயும் அக்கறை கொள்ள வேண்டிய விஷயம். படைதிரட்டப்பட்டவர்கள் எங்கெல்லாம் ஒன்று குவிக்கப்பட்டிருக்கிறுர்களோ அல்லது எங்கே படைவீடுகள் குறிப்பாயும் பயிற்சி படைப் பிரிவுகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் அனுதாபியும் செயல்படும் படி வழி நடத்தப்பட வேண்டும். அவர்கள் எல்லோரும் எவ்வித விதிவிலக்கும் இன்றி ஒன்று சேர்ந்து வேலை செய்ய வேண்டும். படைதிரட்டலுக்கு உதவியாக, பட்டாளத்தில் சேர்ந்து விட்டவர்கள் இடையே, வட்டார படைவீட்டிலுள்ள படையாளிகள் மத்தியில் சிலர் தினந்தோறும் மற்றவர்கள் வாரம் சுமார் நான்கு அல்லது எட்டு மணி நேரமும் வேலை செய்ய வேண்டும். இந்த வேலை சரியானபடி ஒழுங்கமைந்த முறையில் செய்யப்பட வேண்டும். நிச்சயமாயும் ஒவ்வொரு நபருக்கும் வட்டாரக் கட்சி நிறுவனம் அல்லது இராணுவ அதிகாரிகளால் பொருத்தமான வேலை ஒதுக்கித்தரப்படும்.

கட்சி சார்பற்ற பேர்களோ, அல்லது கம்யூனிஸ்டுக்

கட்சி தவிர்த்த வேறு கட்சிகளின் உறுப்பினர்களோ தெனீக்கின் அல்லது கல்ச்சாக்குக்கு எதிரான சித்தாந்த விளக்க வேலையை நடத்திவரும் நிலையில் இல்லை என்பது இயல்பே. ஆனால் இந்தக் காரணத்துக்காக அவர்களை எல்லா வேலைகளில் இருந்தும் விடுவிப்பது என்பது அனுமதிக்க முடியாதது. படைதிரட்டலுக்கு அல்லது பட்டாளத்தில் சேர்ந்து விட்டவர்களுக்கு உதவுவதற்காக ஏதேனும் ஒரு வடிவில் தமது பங்கைச் செலுத்துமாறு மக்கள் தொகை முழுவதையும் (முதலாவதாயும் நகரிலும் நாட்டுப் புறத்திலுமுள்ள செல்வந்தப் பகுதிகளை) கட்டாயப்படுத்த எல்லா சாதனங்களையும் நாட வேண்டும்.

பட்டாளத்தில் சேர்ந்துவிட்டவர்களுக்கு ஆக விரைவான மிகவும் திறமான பயிற்சியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் இந்த உதவியில் தனி வகையாக இருக்க வேண்டும். சோவியத் ஆட்சி அதிகாரம் எல்லா மாஜி அதிகாரிகளையும் துணை அதிகாரிகளையும் பட்டாள சேவைக்கு அழைக்கிறது. முதலாவதாக பட்டாள சேவைக்குப் பதிவு செய்து கொள்ளாத எல்லா மாஜி அதிகாரிகளையும், துணை அதிகாரிகளையும் ஒன்று திரட்ட உதவுவது மூலமும், இரண்டாவதாக, கட்சி நிறுவனங்களின் கண்காணிப்பின் கீழ் அல்லது அவற்றுடன் இணைக்கப்பட்டதான ராணுவப் பயிற்சியில் தத்துவார்த்த அல்லது நடைமுறை (உதாரணமாக ஏகாதிபத்தியப் போரில்) அனுபவம் பெற்ற, தமது பங்கினை ஆற்றும் திறனுடையவர்களின் குழுக்களை நிறுவுவது மூலமும் கம்யூனிஸ்டு கட்சி, எல்லா அனுதாபிகளும் எல்லாத் தொழிலாளர்களும் தொழிலாளர் விவசாயிகளின் அரசுக்குத் துணை புரிய வேண்டும்.

துறந்தோடுவோர் மத்தியில் வேலை

துறந்தோடுவதை எதிர்த்த போராட்டத்தில் சமீப காலமாக நல்ல முறையிலான கண்கூடான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பல குபெர்னியாக்களில் சேனையில் இருந்து துறந்தோடியவர்கள் திரளாக சேனைக்குத் திரும்பி வரத் தொடங்கியுள்ளனர். துறந்தோடியவர்கள் செஞ்சேனையில் திரண்டு

சேர்ந்து வருகிறார்கள் என்பது மிகைபாடல்ல. இதற்கான காரணங்கள், முதலாவதாக கட்சித் தோழர்கள் மேலும் அதிகத் திறமையுடனும் முறையாகவும் வேலை செய்து வருகிறார்கள் என்பதும், இரண்டாவதாக, கல்ச்சாக் மற்றும் தெனீக்கின் என்றால் ஜாராட்சியை விடவும் மோசமான ஆட்சியை மீட்டமைப்பதாகும், தொழிலாளர் விவசாயிகளுக்கு அடிமை வாழ்வும், அதிகாரிகள் பிரபுத்துவ வழித் தோன்றல்களைப் பொருத்த வரை கசையடிகள், சூறையாடல் மற்றும் இழிவு செய்தலில் இறங்குவதும் மீட்டமைக்கப்படுவதாகும் என்பது குறித்த விவசாயிகளின் வளர்ந்து வரும் உணர்வும் ஆகும்.

எனவே துறந்தோடிகள் மத்தியில் வேலை செய்வது, அவர்களை சேனைக்குள்மீண்டும் கொண்டு வருவது ஆகியவை குறித்து எங்கும் விசேஷமாக வலியுறுத்த வேண்டும், இந்த வேலையில் சகல முயற்சிகளும் செய்தல் வேண்டும். அது இன்றைய முதற்படியான அவசரமான பணிகளில் ஒன்று.

இதற்கிடையில், துறந்தோடிகள் மீது இணங்குவித்தல் மூலம் செல்வாக்குச் செலுத்தலாம், இத்தகைய இணங்குவித்தல் பயனுடையது என்ற மெய்நடப்பு விவசாயிகள் பால் தொழிலாளர் அரசுக்கு ஒரு தனிப்பட்ட உறவு நிலை இருக்கிறது என்பதையும் இதில் அது நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ அரசில் இருந்து வேறுபடுகிறது என்பதையும் புலப்படுத்துகிறது. பின் குறிப்பிட்ட இரு வடிவங்களிலான அரசில் குண்டாந்தடி ஆட்சி அல்லது பட்டினியின் ஆட்சியே கட்டுப்பாட்டின் ஏக ஆதாரமாக அமைந்துள்ளது. ஒரு தொழிலாளர் அரசு அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் கட்டுப்பாட்டுக்கான ஒரு வேறுபட்ட ஆதாரம் சாத்தியம், அதாவது விவசாயிகள் தொழிலாளர்கள் மூலம் இணங்கவைத்தல், அவர்களிடையே ஒரு தோழமையான கூட்டணி அமைத்தல். இந்த இந்த குபேர்னியாவில் (உதாரணமாக ரியஸான்) ஆயிரம் ஆயிரமான துறந்தோடிகள் சுய விருப்பத்துடன் திரும்பி வருகிறார்கள் என்றும், ''துறந்தோடித் தோழர்களுக்கு'' என்று கூட்டங்களில் விடப்படும் வேண்டுகோள் சிலசமயம் வர்ணனைக் கடங்காத வகையில்

வெற்றியளித்து வருகிறது என்னும் நேரடிச் சாட்சியமளிப் போர் தரும் தகவல்களைக் கேட்கும்போது, தொழிலாளருக் கும் விவசாயிகளுக்கும் இடையிலான இந்தத் தோழமைக் கூட்டணியில் இன்னும் எடுத்துப் பயன்படுத்தப்படாத வலிமை எந்தளவுக்கு இருக்கிறது என்பதை உணரத் தொடங்கு கிறோம். விவசாயியிடம் அவரது தப்பெண்ணம் நிலவுகிறது. இது அவரை முதலாளியை, சோஷலிஸ்டு-புரட்சியாளரை, ''வாணிக சுதந்திரத்தை'' விரும்பி ஆதரிக்கும் படி செய் கிறது. ஆனல் அவரிடம் சரியான நுண்ணறிவாற்றலும் இருக் கிறது. இது அவரை தொழிலாளர்களுடனுன ஒரு கூட்டணியை நோக்கி மேலும் மேலும் உந்துவிக்கிறது.

சேனைக்கு நேரடி உதவி

நமது சேனைக்கு மிக மிகத் தேவையாக இருப்பது சப்ளை களே—உடைகள், காலணிகள், ஆயுதங்கள், வெடிகள். நாடு வறுமையில் வாடும் நிலையில் சேனையின் இந்தத் தேவை களை நிறைவு செய்ய அளவு கடந்த முயற்சி செய்தல் வேண் டும். சப்ளைகளிலான தட்டுப்பாடு காரணமாக தவிர்க்க முடி யாத வகையில் அழிவுக்காளாக வேண்டிய கல்ச்சாக்கையும் தெனீக்கினையும் முதலாளித்துவக் கொள்ளையரான பிரிட் டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் முதலாளிகள் வழங்கி வரும் உதவியே காப்பாற்றி வருகிறது.

ருஷ்யா வறுமைக்கு ஆளாகியிருந்த போதிலும் அதனி டம் இன்னும் எல்லையற்ற செல்வாதாரங்கள் இருக்கின்றன, இவற்றை நாம் இன்னும் பயன்படுத்தவில்லை, இவற்றைப் பயன்படுத்துவதற்கான ஆற்றலைப் பெரும்பாலும் வெளிக் காட்டவில்லை. இன்னும் பல பகிரங்கப்படுத்தப்படாத, பரிசீலிக்கப்படாத ராணுவ ஸ்டோர்கள் உள்ளன, உற்பத்தி உள்ளாற்றல்கள் ஏராளமாக இருக்கின்றன, இவை கவனியாது புறக்கணிக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் ஓரளவு அதி காரிகள் வேண்டுமென்றே செய்யும் நாசவேலையும் ஓரளவு சிவப்பு நாடா போக்கு, தகுதியின்மை மற்றும் திறமையின் மையும் ஆகும். ஒரு புதிய சமுதாய அமைப்புக்குள் ''பாய்ச்

சல்'' இடும் ஒவ்வொரு புரட்சியின் மீதும் தவிர்க்க முடியாத வகையிலும் மிகவும் கடுமையாகவும் அழுத்தும் ''பழைமையின் பொல்லாங்குகள்'' இவை.

இந்த விஷயத்தில் சேனைக்கு நேரடியாக உதவுவது என்பது குறிப்பாயும் முக்கியமானது. இதற்குப் பொறுப்பாக இருக்கும் நிறுவனங்களுக்குக் குறிப்பாயும் வெளி உதவியும், வட்டாரங்களில் தொழிலாளர் விவசாயிகளின் சுயவிருப்பமான, உக்கமிகுந்த, வீரஞ்செறிந்த முன்முயற்சியும் தரும் ''புதிய தென்பு'' தேவை.

வர்க்க உணர்வுடைய தொழிலாளர் விவசாயிகளும் எல்லா சோவியத் அலுவலர்களும் இம்முன்முயற்சி தோற்றுவிக்க வேண்டும் என்று நாம் சாத்தியமான அளவுக்கு விரிவான வேண்டுகோள் விடுக்க வேண்டும். இந்த விஷயத்தில் சேனைக்குக் கிட்டும் பல்வேறு வடிவங்களிலான உதவியை பல்வேறு வட்டாரங்களில், பல்வேறு செயற்களங்களில் சோதித்துப் பார்க்க வேண்டும். ''புரட்சிகர வழியில் வேலை செய்வது'' என்பது இங்கு இதர துறைகளைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே தென்படுகிறது, ஆயினும் ''புரட்சிகர வழியில் வேலை செய்வது'' இங்கு மிகவும் அதிகமாகத் தேவைப்படுகிறது.

மக்களிடமிருந்து ஆயுதங்களை திரட்டுவது என்பது இந்த வேலையின் முற்றிணக்கமான ஒரு பாகமாகும். நான்காண்டு கால ஏகாதிபத்தியப் போரின் ஊடே கடந்து சென்றுள்ள, இரண்டு மக்கள் புரட்சிகள் தொடர்ந்து நடைபெற்ற ஒரு நாட்டில் விவசாயிகளும், முதலாளித்துவ வர்க்கத்தினரும் ஏராளமான ஆயுதங்களை ஒளித்து வைத்திருப்பது இயல்பே —நடைபெற வேண்டும் என்பது தவிர்க்க முடியாததே. ஆனால் தெனீக்கினின் அபாயகரமான கொடுந்தாக்குதலை எதிரிட வேண்டிய இப்போது நாம் இதை எதிர்த்து நமது வலிமை முழுவதையும் கொண்டு போராட வேண்டும். ஆயுதங்களை ஒளித்து வைப்பவர் அல்லது ஒளித்து வைக்க உதவுகிறவர் தொழிலாளர் விவசாயிகளுக்கு எதிராக ஆபத்தான குற்றம் புரியும் பழிக் காளானவர் ஆவார், சுட்டுக் கொல்லத் தக்கவர் ஆவார், ஏனெனில் அத்தகையவர் ஆயிரக் கணக்

கான அரும் பெரும் செஞ்சேனை வீரர்களின் மரணத்துக்குப் பொறுப்பாளியாவார். போர் முனைகளில் ஆயுதங்கள் முட்டுப் பாட்டால் மட்டுமே இவர்கள் மடிவது என்பது அடிக்கடி சம்பவமாகும்.

கரூரான அமைப்புத் திரட்சியுள்ள பெருமளவிலான சோதனைகள் நடத்திய போது பெத்ரோகிராத் தோழர்கள் ஆயிரம் ஆயிரம் துப்பாக்கிகளை கண்டு பிடித்து வெளிக் கொணர்வதில் வெற்றி பெற்ருர்கள். ருஷ்யாவின் இதர பகுதி கள் பெத்ரோகிராதை விடப் பின்தங்கி நிற்கக் கூடாது. எப்பாடுபட்டும் அதைக் கடந்து மேற் சென்று அதையும் விஞ்சி விட வேண்டும்.

மறுபுறம் மிகப் பெரும் தொகையில் துப்பாக்கிகளை விவசாயிகள் ஒளித்து வைத்திருக்கிருர்கள் என்பதில் ஐயமில்லை. இதில் பெரும்பாலும் சிறிதளவும் கெட்ட நோக்கம் கிடையாது. எந்த ஒரு ''அரசு'' குறித்தும் அவர்களிடம் ஆழமாக வேர் பாய்ந்துள்ள அவநம்பிக்கையே இதற்கு ஏக காரண மாகும். நாம் இணங்குவித்தல், சாமர்த்தியமான கிளர்ச்சி மற்றும் சரியான அணுகுமுறை மூலமாக துறந்தோடியவர் களை சுயவிருப்பமுடன் செஞ்சேனைக்குத் திரும்பி வரும்படி செய்வதில் நாம் பெருமளவு (சிறந்த குபெர்னியாக்களில்) மிகப் பெருமளவு சாதிக்க முடிந்தது என்ருல், ஆயுதங்களைச் சுயவிருப்பமுடன் திருப்பித் தருவதை சாதனையாக்குவதில் இந்த அளவுக்கும் இல்லையேல் இதைவிட அதிகமாகவும் செய்ய முடியும், செய்ய வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

தொழிலாளர்களே, விவசாயிகளே! ஒளித்து வைக்கப் பட்டிருக்கும் துப்பாக்கிகளை தேடிக்கண்டு சேனையிடம் ஒப்ப டைப்பீர்! இவ்வாறு செய்வது மூலம் நீங்கள் கல்ச்சாக் மற்றும் தெனீக்கினுல் படுகொலை செய்யப்படுதல், சுடப்படுதல், ஒரேயடியாகக் கசையடிபடுதல் மற்றும் சூறையாடப் படுதலில் இருந்து உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ள முடியும்!

போருக்கு அல்ல வேலையைச் சுருக்குதல்

மேலே சுருக்கமாக உருவரை செய்யப்பட்ட வேலையின் ஒரு பகுதியையாவது செய்து முடிக்க நமக்கு மேலும் மேலும்

அதிக ஊழியர்கள் தேவை. அதோடு அவர்கள் மிகவும் நம்பகமான அர்ப்பணிப்புடைய ஊக்கமிகுந்த கம்யூனிஸ்டு களின் அணிகளில் இருந்து திரட்டப்பட வேண்டும். இத் தகைய ஊழியர்கள் போதாமை குறித்தும் அவர்கள் மிகை யான சோர்வினல் துயர்ப்படுவது குறித்தும் எழும் சர்வப் பொதுவான புகார்களேயும் கருத்தில் கொண்டு பார்த்தால் அவர்கள் எங்கிருந்து வர முடியும்?

இந்தப் புகார்கள் பெருமளவில் நியாயமானவை என் பதில் சந்தேகம் இல்லே. தொழிலாளர் விவசாயிகள் மக்கள் திரளின் ஆதரவோடும் அனுதாபத்தோடும் இந்தக் கடந்த இருபது மாதங்களாக ருஷ்யாவை நிர்வாகம் செய்து வந்த அந்த முன்னணித் தொழிலாளர் மற்றும் கம்யூனிஸ்டுகளின் அடுக்கு எவ்வளவு மெல்லியது என்பதை ஒருவர் சரிநுட்ப மாக அளவீடு செய்ய முடியுமாஞல் அது உண்மையிலேயே நம்பற்கரியதாகத் தோன்றும். இருப்பினும் நாம் வாப்பான வெற்றியுடன் நிர்வாகம் செய்தோம், சோஷலிசத்தை நிர் மாணித்தோம், இணேவரையற்ற இடர்ப்பாடுகளே வென்று சமாளித்தோம், முதலாளித்துவ வர்க்கத்துடன் நேரடியா கவோ மறைமுகமாகவோ தொடர்பு கொண்டிருந்து எல்லா இடங்களிலும் தலே காட்டிய விரோதிகளே முறியடித்தோம். ஆன்டான்டு எனும், சர்வ சக்தி வாய்ந்த பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கம் ஒன்றைத் தவிர்த்து இதர விரோதிகளே எல் லாம் நாம் ஏற்கெனவே முறியடித்து விட்டோம். இந்த விரோதியின் கரங்களில் ஒன்றைக் கூட—கல்ச்சாக்கை முறித்துவிட்டோம். அவனது இன்னெரு கரமான தெனீக் கினல் மட்டுமே அச்சுறுத்தப்படுகிறேம்.

அரசை நிர்வாகம் செய்வதற்கும் பாட்டாளி வர்க்க சர் வாதிகாரத்தின் பணிகளே செய்து முடிப்பதற்குமான புதிய உழைப்பு சக்தி தொழிலாளர் மற்றும் விவசாயி இளேஞர் உரு வில் துரிதமாக உதித்தெழுந்து வருகிறது. அவர்கள் மிகவும் அக்கறையோடும், பற்றுறுதியோடும், பேராவலுடனும் புதிய சமூக அமைப்பின் புதிய மனப்பதிகைகளேப் பயின்று ஜீரணித்து வருகிறுர்கள் பழைய முதலாளித்துவ, முதலாளித்

துவ ஜனநாயகத் தப்பெண்ணங்கள் எனும் மேல்தோலை வீசி எறிந்து விட்டு தம்மை பழைய தலைமுறையினரை விடவும் உறுதியான கம்யூனிஸ்டுகளாக உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள்.

ஆனால் இந்தப் புதிய அடுக்கு எவ்வளவு துரிதமாக உதித்தெழுந்தாலும் உள்நாட்டுப் போர் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தின் வெறித்தனமான எதிர்ப்பு எனும் தீயில் எவ்வளவு வேகமாகப் பயின்று முதிர்ச்சியடைந்த போதிலும் அடுத்த சில மாதங்களுக்குள் அரசை நிர்வாகம் செய்வதற்குரிய பயிற்சி பெற்ற அலுவலர்களை வழங்க அதனால் முடியாது. ஆயினும் அடுத்த சில மாதங்களே 1919ஆம் ஆண்டின் கோடை மற்றும் இலையுதிர்காலமுமே முக்கியமானவை. ஏனெனில் தெனீக்கினை எதிர்த்த போராட்டம் குறித்து முடிவெடுப்பது அத்தியாவசியம், மேலும் அது உடனடியாகவும் செய்யப்பட வேண்டும்.

போர் முயற்சியை வலுப்படுத்துவதற்கு நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களைப் பெருமளவில் பெறும் பொருட்டு நாம் போர் வேலைகள் செய்யாத அல்லது போருடன் நேரடியாக தொடர்பு கொண்டிராத சோவியத் வேலை செய்யும் பல பிரிவுகள் மற்றும் நிறுவனங்களின் அளவைக் குறைக்க வேண்டும். இந்த வழிகளில் (அதாவது குறைக்கும் வழிகளில்) பரமமாயும் இன்றியமையாதவை அல்லாத அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் அனைத்தையும் நாம் மறுசீரமைக்க வேண்டும்.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, உயர் பொருளாதாரக் கவுன்சிலின் விஞ்ஞான தொழில்நுட்பப் பிரிவை எடுத்துக் கொள்வோம். இது மிகவும் மதிப்பு வாய்ந்த அமைப்பு, முழு நிறை சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்கும், நமது விஞ்ஞான தொழில்நுட்ப சக்திகள் அனைத்தையும் சரிவரக் கணக்கிட்டுப் பகிர்ந்தளிக்கவும் இன்றியமையாத ஓர் அமைப்பு. ஆனால் இத்தகைய அமைப்பு அறவே இன்றியமையாததா? நிச்சயமாயும் இல்லை. இந்த அமைப்பிற்கு, சேனையிலோ அல்லது நேரடியாக சேனைக்குரியதோவான அவசர அவசியமான அறவே இன்றியமையாத கம்யூனிஸ்டு வேலையில் உடனடி

யாக ஈடுபடுத்தக் கூடிய கட்டாயம் ஈடுபடுத்த வேண்டிய நபர்களை ஒதுக்குவது என்பது அப்பட்டமான குற்றச் செயலாகும்.

மையத்திலும் வட்டாரங்களிலும் இத்தகைய நிறுவனங்களும் நிறுவனங்களின் பிரிவுகளும் மிகப்பலவாக உள்ளன. முழுநிறைவான சோஷலிசத்தை சாதனையாக்குவதற்கான நமது முயற்சியில் நாம் உடனடியாக இத்தகைய நிறுவனங்களைக் கட்டத் தொடங்க வேண்டும். ஆனால் தெனீக்கினின் கடுமையான தாக்குதலின் முன்னே, நாம் அறவே இன்றியமையாதது அல்லாத சகலத்தையும் நிறுத்திவைத்தல் மற்றும் குறைத்துவிடும் அத்தகைய வழியில் நமது அணிகளை சீரமைக்க இயலாது போகும் பட்சத்தில், நாம் முட்டாள்களாகவோ அல்லது குற்றவாளிகளாகவோதான் இருப்போம்.

நாம் பீதிக்கு இடமளித்தல் கூடாது, அமைப்புத்துறைத் தூண்டுதலுக்கு இரையாகக் கூடாது, எந்த நிறுவனங்களையும் ஒரு சேரப் புனரமைத்தலோ அல்லது மூடி விடுவதோ கூடாது, நாம் புதிய நிறுவனங்களைக் கட்டுவதற்கும் தொடங்கக் கூடாது—அவசரத்தில் இது செய்யப்பட்டால் குறிப்பாயும் தீங்கு விளைப்பதாகும். அறவே இன்றியமையாதவை அல்லாத, மையத்திலும் வட்டாரங்களிலும் உள்ள எல்லா நிறுவனங்களையும் நிறுவனங்களின் பிரிவுகளையும் மூன்று, நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு நிறுத்தம் செய்து வைப்பதே நாம் செய்ய வேண்டியதாகும் அல்லது அவற்றை ஒரு சேர செயல் நிறுத்தம் செய்வது சாத்தியமல்லாத பட்சம் அவற்றை (தோராயமாக) இதே கால அளவுக்கு குறைப்பது, சாத்தியமானவரை ஆக அதிக அளவுக்குக் குறைப்பது, வேறு சொற்களில் கூறினால், அறவே இன்றியமையாத குறைந்த பட்ச மட்டத்துக்கு வேலையைக் குறைப்பது அவசியம்.

இராணுவ வேலைக்காக நன்கு பயிற்றுவிக்கப்பட்ட, அனுபவமுடைய, அர்ப்பணிப்புள்ள, சோதனையில் புடம் போடப்பட்ட கம்யூனிஸ்டுகள் அல்லது சோஷலிஸ்டு ஆதரவாளர்களை உடனே பெற வேண்டும் என்பதே நமது பிரதான நோக்கம் என்ற காரணத்தால் நாம் மிகவும் கடுமையாகச் சுருக்கப்பட்டுள்ள பல நிறுவனங்களில் (அல்லது நிறு

வனங்களின் பிரிவுகள்) தற்காலிகமாக ஒரு கம்யூனிஸ்டு கூட இல்லாமலும் அவற்றை முழுமையாகவும் முதலாளித்துவ நிர்வாகிகள் கரங்களில் விட்டு வைப்பதுமான ஊறுபாட்டுக்கு உள்ளாகலாம். அது பெரிய ஊறுபாடு அல்ல. காரணம் இதில் சம்பந்தப்பட்டவை அறவே இன்றியமையாதவை அல்லாத நிறுவனங்கள் மட்டுமே. அவற்றின் (அறை குறை செயல் நிறுத்தம் செய்யப்பட்ட) செயல்பாடுகள் பலவீனப்படுத்தப் பட்டதால் ஏற்படும் இழப்பு நிச்சயமாயும் இருக்கும் என்ற போதிலும் இது மிகப் பெரிய இழப்பாக இருக்காது, எப்படியும் நமக்கு அழிவார்ந்ததாக இருக்காது. அதே போதில் போர் வேலைகளை வலுப்படுத்துவதிலும், அதை உடனடியாகவும் கணிசமாயும் வலுப்படுத்துவதிலும் போதியளவு ஊக்கம் இல்லாவிட்டால் அது நமக்கு அழிவார்ந்த விளைவை ஏற்படுத்தும். இது தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும், இதிலிருந்து அவசியமான முடிவுகள் யாவும் பெறப்பட வேண்டும்.

ஒவ்வொரு குபெர்னியாவிலும் உயெஸ்திலும் உள்ள ஓர் அரசாங்க இலாகாவின் அல்லது ஓர் அரசாங்க இலாகாவின் ஒரு பிரிவின் ஒவ்வொரு நிர்வாகியும், ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் குழுவும் ஒரு கணம்கூடக் கடத்தாமல், இன்ன இன்ன நிறுவனம், இன்ன இன்ன இலாகா அறவே இன்றியமையாததா? இதன் செயற்பாடுகளில் பத்தில் ஒன்பது பங்கை நாம் நிறுத்தம் செய்தோ குறைத்தோ விடுவதால் இவற்றில் கம்யூனிஸ்டுகள் எவருமே இல்லாதபடி விட்டுவிடுவதால் நாம் அழிந்து விடுவோமா? என்று கேட்கும் பட்சத்தில், இந்தக் கேள்வி முன்வைக்கப்படுவதைத் தொடர்ந்து வேகமாகவும் உறுதியாகவும் வேலைக் குறைப்பும், கம்யூனிஸ்டுகள் (தமது அறவே நம்பகமான—அனுதாபிகள் அல்லது கட்சி சார்பற்ற பேர்களின் மத்தியிலுள்ள—உதவியாளர்களுடன் சேர்ந்து ஒன்ருக) விலகிக் கொள்வதும் அமுலாகுமாளுல் மிகவும் குறுகிய காலத்தில் சேனையின் அரசியல் இலாகாவில் கமிசார்கள் இத்தியாதிகளாக வேலை செய்வதற்கு வேண்டிய நூறு நூறுக் கணக்கிலான ஆட்கள் நமக்குக் கிடைப்பார்கள். பிறகு நமக்கு மேலும் அதிக பலம் வாய்ந்த கல்ச்சாக்கை தோற்கடிப்

பதற்குக் கிட்டியது போன்றே, தெனீக்கினைத் தோற்கடிப்பதற்கான மிகவும் நல்லதோர் வாய்ப்பும் நிச்சயம் கிடைக்கும்.

போர் முனை மண்டலத்தில் வேலை

ருஷ்யாவின் சோஷலிஸ்டு கூட்டாட்சி சோவியத் குடியரசில் போர் முனை மண்டலம் கடந்த சில வாரங்களில் மிகவும் அதிகரித்துள்ளது, மிகவும் துரிதமான மாற்றத்தையும் அடைந்துள்ளது. இது போரின் நிர்ணயமான தருணத்தின், அது தனது இறுதிக் கட்டத்தை அணுகி வருவதன் கட்டியம் அல்லது உடனிணைவாகும்.

ஒரு புறத்தில், செஞ்சேனையின் வெற்றிகள், கல்சாக்கின் சீரழிவு மற்றும் கல்சாக்கியாவில் புரட்சியின் வளர்ச்சி காரணமாக உரால் அருகில், உரால் பகுதியில் பரந்த போர் மண்டலம் நமது போர் மண்டலமாக மாறிவிட்டது. மறு புறத்தில் பெத்ரோகிராத் அருகிலும் தெற்கிலுமான இன்னும் பெரியதான போர் மண்டலம் நமது இழப்புக்கள் காரணமாக, பெத்ரோகிராதை நோக்கியும், தென்பகுதியில் இருந்து உக்ரேனியாவுக்கும் ருஷ்யாவின் மத்தியப் பகுதியை நோக்கியும் விரோதி முன்னேறி இருப்பதாலும் ஒரு போர் மண்டலமாக மாறியுள்ளது.

போர் மண்டலத்திலான வேலை அச்சாணியான முக்கியத்துவம் பெற்றுள்ளது.

செஞ்சேனை வேகமாக முன்னேறிவரும் உரால் சுற்றுப் பகுதியில், புதிதாக வென்று மீட்கப்பட்ட இடங்களில் ஆக்கபூர்வமான சோவியத் வேலைகள் செய்வதற்கான ஆர்வம் ராணுவ ஊழியர்கள், கமிசார்கள், அரசியல் இலாகாக்களின் உறுப்பினர்கள் இத்தியாதி, அதைத் தொடர்ந்து ஸ்தல தொழிலாளிகள், விவசாயிகள் மத்தியில் இயற்கையாகவே தோன்றும். எந்தளவுக்கு போரால் ஏற்பட்ட சோர்வு அதிகமாக இருக்கிறதோ, எந்தளவுக்கு கல்சாக்கால் விளைக்கப்பட்ட நாசம் அதிக இடுக்கண் விளைப்பதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு இந்த ஆர்வம் அதிக இயற்கையானது. ஆனால் இந்த ஆர்வத்துக்கு பணிவது போன்ற அபாயகரமான செயல்

வேறு இல்லே, இது நமது எதிர்த்தாக்குதலே பலவீனப்படுத்தும், அதனேத் தடங்கல் செய்யும், தனது பலத்தை மீட்டுப் பெற கல்ச்சாக்குக்குள்ள வாய்ப்புகளே அதிகரிக்கும். நாம் சம்பந்தப்பட்ட வரை இது புரட்சிக்கு எதிரான அப்பட்டமான குற்றச் செயலாகும்.

எந்த ஒரு சந்தர்ப்ப சூழலிலும் கிழக்கு திசைச் சேனேயில் இருந்து வட்டார வேலேக்காக கூடுதல் ஊழியர் ஒருவர் கூட எடுத்துக் கொள்ளப்படலாகாது!* எந்த ஒரு சந்தர்ப்ப சூழலிலும் எதிர்த்தாக்குதலேப் பலவீனப்படுத்தக் கூடாது! உரால் பகுதியின் மக்கள் தொகை முழுவதும், கல்ச்சாக் ''ஜனநாயகத்தின்'' பயங்கரங்களே அனுபவித்தவர்கள் ஒருவர் தவருமல் இதில் கலந்து கொண்டு, சைபீரியாவில் புரட்சி பூரண வெற்றி பெறும் வரையில் சைபீரியாவுக்குள் எதிர்த்தாக்குதலேத் தொடர்ந்து நடத்துவது என்பதே பூரண வெற்றிக்குரிய ஒரே ஒரு வாய்ப்பாகும்.

உரால் சுற்றுப் பகுதி மற்றும் உரால் பகுதியிலான கட்டுமான வேலே தவக்கமடையட்டும், உள்ளூர் இளம் அனுபவமில்லா பலவீனமான சக்திகளால் இது செய்யப்படுவதால் இது குறைந்த முனேப்புடன் தொடர்ந்து நடைபெறட்டும். அதனுல் நாம் அழிந்துபட மாட்டோம். ஆனுல் உரால் பகுதியையும் சைபீரியாவையும் எதிர்த்த எதிர்த்தாக்குதலே நாம் பலவீனப்படுத்துவோமானுல் நாம் அழிந்துபடுவோம். உரால் பகுதியிலுள்ள எதிரெழுச்சி தொழிலாளர் படைகளேக் கொண்டும் உரால் சுற்றுப் பகுதியின் விவசாயிகளின் படைகளேக் கொண்டும் நாம் அந்த எதிர்த்தாக்குதலே வலுப்படுத்த வேண்டும். அவர்கள் மென்ஷிவிக் மாய்ஸ்கியின், சோஷலிஸ்டு-புரட்சியாளர் செர்னேவின் ''அரசியல் நிர்ணய'' வாக்குறுதிகளின் அர்த்தத்தை பாதிப்புக்காளாகி உணர்ந்தார்கள், இந்த வாக்குறுதிகளின் மெய்யான அர்த்தம் கல்ச்சாக் தான்.

உரால் மற்றும் சைபீரியாவுக்கு எதிரான எதிர்த்தாக்கு

---

* மிக அவசர அவசியம் இருந்தால் அல்லாமல் யாருமே எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. மாருக நபர்கள் மத்திய குபெர்னியாவில் இருந்து மாற்றப்பட வேண்டும்.

தலைப் பலவீனப்படுத்துவது என்பது புரட்சிக்குத் துரோகம் செய்வதாகும், கல்ச்சாக்கின் ஆதிக்கத்தில் இருந்து தொழிலாளர்களையும் விவசாயிகளையும் விமோசனப்படுத்தும் லட்சியப் பணியைக் காட்டிக் கொடுப்பதாகும்.

வெகு அண்மையில் மட்டுமே விடுதலை செய்யப்பட்டதான போர் முனை மண்டலத்தில் வேலை செய்வது தொடர்பாக, அங்குள்ள பிரதானப் பணி தொழிலாளர்கள் மட்டுமன்றி விவசாயிகளும் சோவியத் ஆட்சியில் நம்பிக்கை வைக்கும்படி செய்வதும், சோவியத் ஆட்சி அதிகாரம் என்பது தொழிலாளர் விவசாயிகள் ஆட்சி அதிகாரமே என்று நடைமுறையில் விளக்குவதும், இருபது மாதகால வேலையில் பெற்ற அனுபவத்தில் இருந்து கட்சி அனுசரித்த சரியான பாதையை உடனடியாகத் தேர்ந்து பின்பற்றும்படி கூறுவதும் தான் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். மகா ருஷ்யாவில் சில சமயங்களில் செய்யப்பட்டதும், நாம் வேகமாகத் தவிர்ப்பதற்குப் பயின்று வருவதுமான தவறுகளை உரால் பகுதியில் மீண்டும் செய்யக்கூடாது.

பெத்ரோகிராதுக்கு வெளியிலான போர் மண்டலத்திலும், உக்ரேனியாவிலும் தெற்கிலும் மிக வேகமாயும் அபாயகரமான முறையிலும் வளர்ந்து வரும் பரந்த போர் மண்டலத்திலும் சகலமும் முற்ற முழுமையாயும் போர்க்காலப் பாணியில் வைக்கப்பட வேண்டும், எல்லா வேலையும், எல்லா முயற்சிகளும், எல்லாச் சிந்தனைகளும் போருக்கு, போருக்கு மட்டுமே கீழடக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் தெனீக்கினது தாக்குதலை முறியடித்துப் பின்னடையும்படி செய்ய முடியாது. இது தெளிவானது. இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு முழுமையாகச் செயல்படுத்த வேண்டும்.

இதற்கிடையில் ஒரு விஷயம். தெனீக்கின் சேனையின் ஓர் அம்சம் அதில் மிகப்பல அதிகாரிகளும் கஸாக்குகளும் இருப்பதே. வெகுஜன சக்திகள் அதன்பின் இல்லாத காரணத்தால் இந்த சேனை திடீர் தாக்குகள், ராணுவச் சூதாட்டங்கள், மூர்க்கமான சாகசங்கள் ஆகியவற்றில் ஈடுபடக்கூடிய வாய்ப்பு அதிகம். பீதியை விதைக்கவும் நாசத்திற்காக நாசம் ஏற்படுத்தவும் முனையலாம்.

இத்தகைய விரோதியை எதிர்த்துப் போராடும் போது ஆக உயர் மட்டத்திலான ராணுவக் கட்டுப்பாடும் ராணுவ உஷார்த் தன்மையும் அவசியம். எதிர்பாராமலே அகப்பட்டுக் கொள்வது அல்லது குழப்பமடைவது எல்லாவற்றையும் இழப்பதில் கொண்டு போய்விடும். பொறுப்புள்ள கட்சி மற்றும் சோவியத்தின் ஊழியர் ஒவ்வொருவரும் இதை மனதில் இருத்த வேண்டும்.

இராணுவ மற்றும் இதர விவகாரங்கள் அனைத்திலும் ராணுவக் கட்டுப்பாடு!

எல்லா எச்சரிக்கை நடவடிக்கைகளைக் கையாள்வதிலும் ராணுவ விழிப்புணர்வு, கட்டுத்திட்டம் மற்றும் உறுதிப்பாடு!

இராணுவ நிபுணர்கள் பாலான தோரணை

பெத்ரோகிராதைச் சரணடைய வைக்கும் நோக்கத்துடன் கிராஸ்னயா கோர்க்காவில் திட்டமிடப்பட்ட பரவலான சதியாலோசனை ராணுவ நிபுணர்கள் பற்றியும் பின்னணியில் எதிர்ப் புரட்சியை எதிர்த்துப் போராடுவது பற்றியுமான பிரச்சினையை விசேஷ அழுத்தத்துடன் முன்னணிக்குக் கொண்டு வந்திருக்கிறது. உணவு நிலை மற்றும் போர் நிலைமை உக்கிரமடைவதானது தவிர்க்க முடியாத வகையில் எதிர்ப்புரட்சியாளர்களின் இன்னும் மேலதிகமான முயற்சிகளைத் தூண்டிவிடும், உடனடி எதிர் காலத்தில் தொடர்ந்து தூண்டிவிடும் என்பதில் சந்தேகமில்லை (பெத்ரோகிராத் சதியில் புத்துயிர்ப்பு கழகம்,[118] காடேட்டுகள், மென்ஷிவிக்குகள், வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் பங்கேற்றார்கள்; இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் தனிக்குழுவாகப் பங்கேற்றார்கள் என்பது மெய்தான் இருந்த போதிலும் அவர்களும் பங்கேற்றார்கள்). மேலும் ராணுவ நிபுணர்களும், குலாக்குகள், முதலாளித்துவ அறிவுஜீவிகள், மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களைப் போலவே அண்மை எதிர்காலத்தில் அதிக விகிதத்தில் துரோகிகளை தருவார்கள் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது.

ஆனல் இதன் காரணமாக சேனை பற்றிய நமது அடிப்

படைக் கொள்கையை மாற்றிக் கொள்வது சம்பந்தமான பிரச்சினையை எழுப்புவது சீர்படுத்த முடியாத பிழையும், மன்னிக்க முடியாத பலவீனத் தன்மையும் ஆகும். நூற்றுக் கணக்கான ராணுவ நிபுணர்கள் நமக்குத் துரோகம் செய்து வருகிறார்கள், இனி மேலும் கட்டாயம் துரோகம் செய்வார்கள்; நாம் அவர்களைக் கண்டுபிடித்துச் சுடுவோம் ஆனால் ஆயிரக்கணக்கான ராணுவ நிபுணர்கள் நமக்காக நீண்டகாலமாகவும் முறையாகவும் வேலைசெய்து வருகிறார்கள். அவர்கள் இல்லா விட்டால் நாம் செஞ்சேனையை நிறுவியிருக்க முடியாது. அச்சேனை தீங்கை நினைவூட்டும் கொரில்லாப் படையில் இருந்து வளர்ந்து வந்துள்ளது, கீழ்த்திசையில் எடுப்பான வெற்றிகளை ஈட்ட முடிந்துள்ளது. நமது போர் இலாகாவில் தலைமைப் பொறுப்பு வகித்து வரும் அனுபவமுள்ள நபர்கள் கீழ்கண்டவாறு முற்றிலும் சரியாக சுட்டிக்காட்டுகிறார்கள்: எங்கு ராணுவ நிபுணர்கள் குறித்து மற்றும் கொரில்லா உணர்வை அடியோடு அழிப்பது குறித்து கட்சிக் கொள்கை கறாராகக் கடைப்பிடிக்கப்படுகிறதோ, எங்கு கட்டுப்பாடு மிகவும் உறுதியாக இருக்கிறதோ, எங்கு துருப்புக்களிடையிலான அரசியல் வேலையும், கமிசார்களின் வேலையும் மிகவும் முழுநிறைவாகச் செய்யப்படுகிறதோ அங்கு, பொதுவாகச் சொன்னால், நமக்குத் துரோகம் விளைக்க எண்ணும் ராணுவ நிபுணர்கள் தொகை ஆகக் குறைவானதாக இருக்கிறது, அங்கு இந்த நாட்டத்துடன் தமது சூழ்ச்சி திட்டங்களை நிறைவேற்ற முயல்வோருக்கு மிகவும் அற்பசொற்பமான வாய்ப்புகளே உள்ளன, அங்கு சேனையில் எவ்வித பலவீனமும் கிடையாது, அங்கு அதன் அமைப்புத் திரட்சியும் கட்டுணர்வும் சிறப்பான முறையில் உள்ளன, அங்குதான் நமக்கு ஆக அதிகமான வெற்றிகள் கிட்டியுள்ளன. கொரில்லா உணர்வு, அதன் சாயல்கள், எச்சங்கள், மிச்சங்கள் ஆகியவை அளவிடற்கரிய ஆகப்பெரும் இன்னல்கள், சிதைவு, தோல்விகள், பெருவிபத்துகள், ஆட்கள் மற்றும் தளவாடங்கள் இழப்பு ஆகியவற்றை நமது சேனையிலும் உக்ரேனிய சேனையிலும் ராணுவ நிபுணர்களின் துரோகங்களை விடவும் அதிகமாக விளைவித்துள்ளன.

நமது கட்சியின் வேலைத்திட்டம் முதலாளித்துவ நிபுணர்கள் பற்றிய பொதுவான விஷயத்திலும் சரி, அவர்களில் ஒரு வகையினரான ராணுவ நிபுணர்கள் பற்றிய குறிப்பிட்ட பிரச்சினை சம்பந்தமாயும் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையை பரம துல்லியமாக வரையறுத்துள்ளது. ''முதலாளித்துவ நிபுணர்களிடமிருந்து கற்றுத் தெரிந்து கொள்ளாமலே, அவர்களது சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளாமலே, அவர்களுடன் அக்கம் பக்கமாக நீண்டகாலம் வேலைசெய்யும் பயிற்சியைப் பெறாமலே உழைக்கும் மக்கள் முதலாளித்துவத்தையும் முதலாளித்துவ சமுதாய அமைப்பு முறையையும் வென்று சமாளிக்கும் திறன் பெற்றவர்கள் எனச் சாற்றும், உள்ளபடியே அறியாமையையும் போலித் தற்பெருமையையும் காட்டும் போலி தீவிரக் கருத்துக்களை எதிர்த்து'' நமது கட்சி ஓர் இரக்கமற்ற போராட்டம் நடத்திவருகிறது, தொடர்ந்து நடத்திவரும்.

அதே சமயம், கட்சியானது ''மக்கள் தொகையில் இருக்கும் இந்த முதலாளித்துவ பகுதிக்கு அற்பசொற்பமான அரசியல் சலுகையையும் கூட '' விட்டுக் கொடுப்பதில்லை என்பது திண்ணம். ''இதன் தரப்பில் செய்யப்படும் எந்த ஒரு எதிர்ப்புரட்சி முயற்சியையும் கட்சி இரக்கமின்றி அடக்கும்'' தொடர்ந்து அடக்கி வரும், இத்தகைய ''முயற்சி'' செய்யப்படும் பொழுது அல்லது கிட்டத்தட்ட செய்யப்படலாம் எனும் பொழுது இயல்பாகவே அதன் ''இரக்கமற்ற அடக்கு முறைக்கு'' திட்டமிட்ட உறுதி ஆரம்ப முயற்சியாளரின் எச்சரிக்கை உணர்வு தவிர்த்த வேறு தன்மைகள் தேவை, இவை ''நீண்டகாலப் பயிற்சிக்கு'' அவசியம், இவற்றைப் பின்னது வற்புறுத்திப் பயிற்றுவிக்கிறது. இராணுவ நிபுணர்களுடன் ''அக்கம் பக்கமான நீண்டகால வேலையில்'' ஈடுபட்டுள்ள பேர்களின் போக்குக்கும், ராணுவ நிபுணர்களின் ''எதிர்ப் புரட்சி முயற்சிகளை இரக்கமின்றி ஒடுக்கும்'' நேரடிப் பணியில் மூழ்கிக் கிடக்கும் நபர்களின் போக்குக்கும் இடையிலான முரண்பாடு பிணக்குகளுக்கும் மோதல்களுக்கும் எளிதில் இட்டுச் செல்லலாம், உண்மையில் இட்டுச் செல்கிறது. பணியாளர்கள் விஷயத்திலான அவசியமான மாற்றங்கள், எதிர்ப்

புரட்சி ''முயற்சி'' சம்பவங்களாலும் மேலும் அதிகமாகப் பெருவீதச் சதித் திட்டங்களாலும் அவசியமாகிவிடும் பெரு மளவிலான ராணுவ நிபுணர்கள் இடப் பெயர்வு சில பொழுது நடை பெறுவதிலும் இது பொருந்தும்.

இத்தகைய பிணக்குகள் மற்றும் மோதல்களை கட்சி வழி யில் தீர்ப்போம், எதிர்காலத்திலும் தொடர்ந்து அப்படியே தீர்ப்போம். இதை எல்லாக் கட்சி நிறுவனங்களும் செய்ய வேண்டும் என்று கோருவோம். அதே சமயம், நடைமுறை வேலையில் சிறிதளவு பாதகமோ, அத்தியாவசிய நடவடிக் கைகளை மேற்கொள்வதில் சிறிதளவு தவக்கமோ நமது ராணுவக் கொள்கையின் நிலைநாட்டப்பட்டு விட்ட கோட் பாடுகளை அனுசரிப்பதில் தயக்கத்தின் எவ்விதச் சாயலோ அனுமதிக்கப்பட மாட்டாது என்பதையும் வலியுறுத்துவோம்.

இராணுவ நிபுணர்கள் மீது நமது கட்சி உறுப்புகள் சில ஒரு தவறான பான்மையைக் கையாளுமானால் (அண்மையில் பெத்ரோகிராதில் இப்படி நடந்தது) அல்லது சில இடங் களில் ராணுவ நிபுணர்களைப் பற்றிய ''விமர்சனம்'' அவர் களை வேலையில் அமர்த்தும் முறையான விடாப்பிடியான வேலைக்கு நேரடியான தடங்கல் ஏற்படுத்தியது என்றால், கட்சி உடனே திருத்திவிடும், இத்தகைய தவறுகளை நிச்சயம் திருத்திக் கொள்ளும்.

இவற்றைத் திருத்திக் கொள்வதற்கான முக்கியமும் பிர தானமுமான வழிகள் என்னவெனில், சேனையிலும் திரட்டப் பட்டோர் மத்தியிலும் அரசியல் வேலையை முனைப்பாக்கு வது, சேனையிலுள்ள கமிசார்களின் வேலையை மேம்படுத்து வது, மேலும் அதிக உயர் தகுதிகள் உள்ள கமிசார்களை நிய மித்தல், அவர்களது தரத்தை உயர்த்தல், கட்சியின் வேலைத் திட்டம் கோருவதை அவர்கள் நடைமுறையில் செய்து முடிக் கும்படி பார்த்துக் கொள்ளல்—இது பெரும்பாலும் போது மான அளவுக்கு நிறைவேற்றப்படுவதில்லை, அதாவது ''தொழிலாளி வர்க்கத்தின் கரங்களில் சேனையின் தளபதி கள் மீதான சர்வாம்ச கண்காணிப்பினை ஒருமுனைப்படுத்தல்'' என்பதே. இராணுவ நிபுணர்களை வெளியார் விமர்சனம் செய்வதும், ''திடீர் சோதனைகள்'' மூலம் விவகாரங்களை

திருத்த முயற்சிகள் செய்வதும் மிகவும் எளிதானவை, அதன் காரணமாக கவைக்குதவாதவை, தீங்கு விளைப்பவை. தமது அரசியல் பொறுப்பை உணர்ந்து அங்கீகரிக்கும் அனைவரும் நமது சேனையின் குறைபாடுகளை மனதிற்கொள்ளும் அனைவரும் தனிப்பட்ட படையாளிகளாகவோ அல்லது தளபதிகளாகவோ, அரசியல் ஊழியர்களாகவோ அல்லது கமிசார்களாகவோ அதன் அணிகளில் சேருவார்களாக. ஒவ்வொருவரும் சேனை அமைப்பில் அதன் மேம்பாட்டுக்காகப் பாடுபடுவாராக—ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் தமது திறமைக்குத் தக்கதான இடத்தை அதில் பெறலாம்.

போர்க் கலையை காரியநோக்குடன் கற்றுக் கரை காண் பதைத் தொழிலாளர்களுக்கு, பின்பு விவசாயிகளுக்கு, குறிப்பாக கம்யூனிஸ்டுகளுக்கு சாத்தியமாக்குவது சம்பந்த மாக சோவியத் அரசாங்கம் மிகப் பெரும் கவனம் செலுத்தி வருகிறது. இது பல அமைப்புக்களில், நிறுவனங்களில், பயிற்சி நிலையங்களில் செய்யப்பட்டு வருகிறது, ஆனல் இன் னும் மிகச் சொற்ப அளவில் தான் செய்யப்பட்டுள்ளது. சொந்த முன்முயற்சி, சொந்த ஊக்கம் ஆகியவற்றுக்கு இன்னும் பெருமளவு இடமிருக்கிறது. குறிப்பாகக் கம்யூனிஸ் டுகள் இயந்திர பீரங்கிகள், துப்பாக்கிப்படைக் கலங்கள், கவச மோட்டார்கள் இத்தியாதிகளைக் கையாளும் கலையை விடாப்பிடியாகப் பயில வேண்டும். காரணம் இந்தத் துறை யில் நமது பின்தங்கிய நிலை அதிக எடுப்பாகத் தெரிகிறது, இங்கு பெருமளவிலான அதிகாரிகளைக் கொண்ட நம் விரோ தியின் மேன்மை அதிகமாகத் தெரிகிறது. இங்கு ஒரு நம்பற் கியலாத ராணுவ நிபுணர் ஆபத்தான கேடு விளைப்பது சாத் தியம். இங்கு கம்யூனிஸ்டின் பாத்திரம் மிகமிக முக்கிய மானது.

பின்னணியில்
எதிர்ப்புரட்சியை எதிர்த்துப் போராட்டம்

சென்ற ஆண்டு ஜுலை மாதத்தில் செய்தது போலவே எதிர்ப்புரட்சியானது நமது பின்னணியிலும் நமது மத்தி யிலும் தலை காட்டி வருகிறது.

எதிர்ப்புரட்சி தோற்கடிக்கப்பட்டது ஆனல் எந்த வகையிலும் அழிக்கப்படவில்லே. எனவே அது இயல்பாகவே தெனீக்கினது வெற்றிகளேயும் உணவுத் தட்டுப்பாடு உக்கிரமடைந்திருப்பதையும் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டிருக்கிறது. நேரடியான பகிரங்கமான எதிர்ப்புரட்சியின் வழிப் போக்கில் எப்போதும் நிகழ்வது போல, தமது மூலதனத்திலும், ஆன்டான்டு ஏகாதிபத்தியத்துடனை தமது நேரடித் தொடர்புகளிலும் சர்வாதிகாரத்தின் தவிர்க்கவொண்ணுமையைப் புரிந்து கொள்வதிலும் கல்ச்சாக் வழிகளில் அதை செயல்படுத்துவதிலான அவர்களது திறமையிலும் தமது வலிமை கிடக்கக் காணும் கறுப்பு நூற்றுவர் மற்றும் காடேட்டுகளின் வழிப் போக்கில் ஊசலாடும் உறுதியற்ற தமது செயல்களேச் சொற்களால் அலங்கரிக்கும் மென்ஷிவிக்குகள், வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் பின்செல்லுகின்றனர்.

இதைப் பொருத்தவரை எவ்விதப் பிரமைகளும் வேண்டாம்! எதிர்ப்புரட்சி செயல்பாடுகள், திடீர் எழுச்சிகள், சதிச் செயல்களே இத்தியாதிகளேத் தோற்றுவிக்கும் ''சத்தூட்ட சாதனம்'' என்ன என்பதை நாம் முற்றிலும் நன்ருக அறிவோம். இதற்கான சாதனம் முதலாளித்துவ வர்க்கம் முதலாளித்துவ அறிவுஜீவிகள், நாட்டுப்புறப் பகுதிகளில் இருக்கும் குலாக்குகள், எங்கணும் காணப்பெறும் ,'கட்சி-சார்பற்ற'' பொதுஜனம், அதோடு சோஷலிஸ்டு புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் ஆவர். இந்த சாதனத்தின் மீதான நமது விழிப்பினே இரு மடங்காக்க வேண்டும், பத்து மடங்கு அதிகரிக்க வேண்டும். நமது உஷார்த்தன்மையினே பத்து மடங்கு பெருக்க வேண்டும். காரணம் குறிப்பாயும் இன்றைய தருணத்திலும் அண்மை எதிர்காலத்திலும் இந்தப் பக்கத்திலிருந்து எதிர்ப்புரட்சிகர முயற்சிகள் முற்ற முழுமையாயும் தவிர்க்க முடியாதபடி ஏற்படும். இந்தக் காரணத்தாலும் கூட பாலங்களே வெடிவைத்துத் தகர்த்தல், வேலேநிறுத்தங்களேத் தூண்டுதல், எல்லாவகையான வேவு பார்க்கும் வேலேகளில் ஈடுபடுதல் ஆகியவற்றுக்கான முயற்சிகள் அடிக்கடி நடத்தப்படுவது என்பது இயல்பே. எதிர்ப்புரட்

சிகளின் ''சத்துராட்ட சாதனம்'' எங்கு ''நிலவுவதற்கு'' ஆகக் குறைந்த வாய்ப்பிருக்கிறதோ அந்த எல்லா மையங்களிலும் எவ்வித விதிவிலக்கும் இன்றி மிகவும் முனைப்பான, முறையான, திரும்பத்திரும்ப எடுக்கப்படுவதான முழுமையான எதிர்பாராத வகையதான எச்சரிக்கை நடவடிக்கைகள் யாவும் அத்தியாவசியமானவை.

மென்ஷிவிக்குகள், இடதுசாரி மற்றும் வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களைப் பொருத்தவரை நாம் நமது மிகவும் அணித்தான அனுபவத்தில் இருந்து படிப்பினை பெற வேண்டும். அவர்களது ''வட்டத்தின்'' மத்தியில், அவர்கள் பால் ஈர்க்கப்படும் பொது ஜனங்கள் மத்தியில் கல்ச்சாக் மற்றும் தெனீக்கினிடமிருந்து விலகி சோவியத் ஆட்சி அதிகாரத்தின் பக்கமான பெயர்வு சந்தேகத்திற்கிடமின்றி உள்ளது. இந்தப் பெயர்வை நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறோம், அது உண்மையான உருவம் எதையும் பெறும் போதெல்லாம் அதைச் சந்திப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். எமது இந்தக் கொள்கையை நாம் எந்த ஒரு சுற்றுச் சூழலிலும் மாற்ற மாட்டோம். பொதுவாகக் கூறுமிடத்து கல்ச்சாக் மற்றும் தெனீக்கின் பக்கமாகச் சாயும் மென்ஷிவிசம், சோஷலிஸ்டு-புரட்சிவாதத்தின் வகையில் இருந்து சோவியத் ஆட்சி அதிகாரத்தின் பக்கமாகச் சாயும் மென்ஷிவிசம், சோஷலிஸ்டு-புரட்சிவாதத்தின் வகைக்கான ''இடம் பெயர்வோர்'' தொகை அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் இன்றைய சந்தியில் சோஷலிஸ்டுபுரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகளின் தலைமையிலான குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் எப்போதும் போலவே உறுதி இன்றியும், ஊசலாடியும் காற்று எந்தத் திசையில் அடிக்கிறது என்பதைப் பார்ப்பதில் கவனமாயிருக்கிறார்கள், வெற்றியாளர் தெனீக்கின் பக்கமாகச் சாய்ந்து பட்டு வருகிறார்கள். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், மென்ஷிவிக்குகள் (மார்த்தவ் வகையறா மாதிரியானவர்கள்), வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் (செர்னேவ் வகையறா மாதிரியானவர்கள்) ''அரசியல் தலைவர்கள்'' மற்றும் பொது

வாக அவர்களது இலக்கியப் பிரிவுகளைப் பொருத்தவரை இந்தப் போக்கு விசேஷமாயும் மெய்நடப்பாகியுள்ளது. இந்த இலக்கியப் பிரிவுகளின் உறுப்பினர்கள் இதர விஷயங்கள் எல்லாம் ஒருபுறமிருக்க தமது அரசியல் திவால் தன்மை குறித்து ஆழ்ந்த கடுப்புற்றிருக்கிறார்கள். எனவே, சோவியத் ஆட்சிக்கு எதிரான துணிச்சலான சாகசங்கள் அவர்களுக்கு கவர்ச்சியளிப்பதாக இருக்கின்றன, இதை அகற்றுவதென்பது மிகவும் அரிதாகும்.

அவர்களது தலைவர்களின் சொற்கள் அல்லது சித்தாந்தத்தாலோ, அவர்களது சொந்த நேர்மை அல்லது பாசாங்கைக் கொண்டோ ஏமாற்றப்படுவதற்கு நாம் இடம் தரக் கூடாது. இது அவர்களது தனிப்பட்ட வாழ்க்கை வரலாறுகளின் நோக்கு நிலையில் இருந்து முக்கியமானது. ஆனால் இது அரசியலின் நோக்கு நிலையில் இருந்து, அதாவது வர்க்கங்களுக்கு இடையிலான உறவுகள், லட்சோபலட்சம் மக்கள் இடையிலான உறவுகளைப் பொருத்தவரை இது முக்கியமல்ல. மார்த்தவ் வகையறா மத்தியக் கமிட்டியின் பெயரால் அவர்களது ''தீவிர ஊழியர்களை'' பக்தி சிரத்தையுடன் கண்டிக்கிறார்கள் அவர்களைக் கட்சியில் இருந்து விலக்கிவிடுவதாக அச்சுறுத்துகிறார்கள் (நிரந்தரமாக அச்சுறுத்துகிறார்கள்!). ஆனால் இந்தத் ''தீவிர ஊழியர்கள்'' மென்ஷிவிக்குகள் மத்தியில் எல்லோரையும் விட பலமாக இருக்கிறார்கள், அவர்கள் பின் ஒளிந்து கொள்கிறார்கள், கல்ச்சாக் மற்றும் தெனீகின் சார்பில் அவர்களது வேலைகளைச் செய்து வருகிறார்கள் எனும் மெய்நடப்பை இது எந்த வகையிலும் அகற்றிவிடவில்லை. வோல்ஸ்கி வகையறா அவ்க்சேன்தியெவ், செர்னேவ் வகையறாவைக் கண்டிக்கிறார்கள், ஆனால் இது பின்னவர்கள் வோல்ஸ்கியைவிடவும் பலமாக இருப்பதைச் சற்றும் தடை செய்யவில்லை. மேலும்''போல்ஷிவிக்குகளை வீழ்த்தப் போகிறவர்கள் நாம் அல்லாமல் வேறுயார் இப்போதே அல்லாமல் இருப்பின் பின்னர் எப்போது யார்?'' என்று சாற்றுவதில் இருந்து செர்னேவை இது தடுக்கவில்லை. பிற்போக்காளர்களுடன், செர்னேவ்களுடன் உடன்பாடு இன்றி இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ''சுயேச்சையாக'' ''வேலை

செய்வது'' சாத்தியமே. ஆனல் உண்மையில் அவர்கள் ''சித்தாந்த'' காரணங்களுக்காக செக்கோஸ்லொவாக்கிய ருக்கும் கல்ச்சாக்குக்கும் போர் முனையைத் திறந்துவிட்ட மாஜி தலைமைத் தளபதி காலம் சென்ற இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் முரவியோவ் போன்று தெனீக்கினின் நேச சக்தியாயும் அவரது சூதாட்டத்தில் பகடைக் காய்களாயும் இருக்கிறார்கள்.

மார்த்தவ், வோல்ஸ்கி வகையரு போரிடும் இரு தரப்புக் களுக்கும் ''மேநிலையில்'' இருப்பதாக ஜம்பமடிக்கிறார் கள். ''மூன்றும் தரப்பை'' உருவாக்கும் திறன் பெற்றவர் களாகத் தமக்குத் தாமே ஜம்பமடித்துக் கொள்கிறார்கள்.

இந்த விருப்பம் அது நேர்மையாக இருக்கும் போதும் கூட குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதி விஷயத்தில் இன்னும் ஒரு பிரமையாகவே நீடிக்கிறது. அவர் 1848க்குப் பின் எழுபதாண்டுகள் கடந்து சென்ற பிறகும் கூட ஒரு சர்வசாமானியமான உண்மையை கற்றுத் தெரிந்துகொள்ள வில்லை. முதலாளித்துவச் சுற்றுச் சூழலில் முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரம் அல்லது பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் மட்டுமே சாத்தியம், மூன்றும் பாதை இல்லை என்பதே இந்த உண்மை. மார்த்தவ் வகையரு இந்தப் பிரமையுடனேயே மடிந்து போகும் என்பது தெளிவு. அது அவர்கள் விவகாரம். நடைமுறையில் இந்த நபர்களைப் பொருத்தவரை ஊசலாட்டம் தவிர்க்க முடியாதது, இன்று தெனீக்கின் பக்கமாகவும் நாளை போல்ஷிவிக்குகளின் பக்க மாகவும் இருக்கலாம் என்பதை நினைவில் கொள்வது நமது விவகாரம். இன்று நாம் இந்த நாளின் பணியினை செய்ய வேண்டும்.

இந்தக் கேள்வியை பச்சையாக முன்வைப்பதே நமது பணி. எது நல்லது? காடேட்டுகள், கட்சி சார்பற்ற பேர்கள், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மத்தியில் இருந்து சோவியத் ஆட்சிக்கு எதிராக, வேறு சொற்களில் கூறினல் தெனீக்கினுக்கு ஆதரவாக (சிலர் கைகளில் ஆயுதங் களுடனும், வேறு சிலர் சதித் திட்டங்களுடனும், மற்றும் சிலர் மென்ஷிவிக் அச்சுத் தொழில் துறையினர் மற்றும் ரயில்வே

ஊழியர் போல படைதிரட்டலுக்கு எதிரான கிளர்ச்சியைச் செய்தும்) வெளிவருபவர்களான நூற்றுக்கணக்கில் இருக்கும் துரோகிகளை தேடிப்பிடித்து சிறைப்படுத்துவது, சில சமயம் சுட்டுத்தள்ளுவது என்பதா? அல்லது கல்ச்சாக்கும் தெனீக்கினும் பத்தாயிரக் கணக்கான தொழிலாளர் விவசாயிகளை வெட்டித் தள்ளியும், சுட்டும் கசையடி தந்தும் சாகடிப்பதற்கு முடியும் வகையில் நிகழ்ச்சிகள் போய் எட்டும்படி இடம் அளிப்பதா? இதில் எதைத் தேர்வது என்பது கடினமல்ல.

பிரச்சினை இப்படித்தான் இருக்கிறது, வேறு வகையில் அல்ல.

இதை எவரெல்லாம் இன்னும் புரிந்துகொள்ளவில்லையோ, இத்தகைய முடிவின் ''அநியாயம்'' பற்றி எவரெல்லாம் ஓலமிட முடிகிறதோ அவர்கள் எல்லோரும் கவைக்கு தவாதவர்கள் என்று கைவிடப்பட்டு பொது இகழ்ச்சிக்கும் அவமதிப்புக்கும் வசமாக்கப்பட வேண்டும்.

மக்கள் அனைவரும் போருக்கு ஒன்றுதிரட்டப்பட வேண்டும்

சோவியத் குடியரசு உலக முதலாளித்துவத்தால் முற்றுகையிடப்பட்டுள்ள ஒரு கோட்டையாகும். போரில் செயலூக்கமான பங்கு வகிப்போர் மற்றும் நமக்குச் சகல வழிகளிலும் உதவி செய்வோருக்கு மட்டுமே அதை கல்ச்சாக்கிடமிருந்து ஒரு புகலிடமாகப் பயன்படுத்தும் உரிமையையும், பொதுப்பட அதில் வாழும் உரிமையையும் நாம் வழங்கிட முடியும். எனவே போருக்கு மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டுவது நமது உரிமையும், நமது கடமையும் ஆகும். சிலர் இத்தொடரின் நேரடிப் பொருளில் சேனையில் வேலை செய்யவும், மற்றவர்கள் போருக்கு உதவியாக எல்லா விதமான துணைச் செயல்பாடுகளிலும் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இதைப் பூரணமாகச் செய்து முடிப்பதற்கு ஒரு லட்சிய அமைப்புத் தேவைப்படுகிறது. நமது அரசாங்க அமைப்பு இன்னும் செவ்வையாக இல்லாத காரணத்தால் (அதன்

இளமை, அதன் புதுமை, அதன் வளர்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட அசாதாரணமான இடர்ப்பாடுகளைக் கருதிப் பார்க்கும் போது இதில் சிறிதும் வியப்பில்லை) இந்தத் துறையில் முழுமையாகவோ அல்லது மிகவும் கணிச அளவுக்கோ எதையேனும் உடனடியாயும் விரிந்த அளவிலும் செய்ய முயல்வது விசித்திரமான அமைப்புத் துறைத் திட்டங்களில் மிகவும் அபாயகரமான அளவுக்கு மனம் போன போக்கில் இறங்குவதாகும்.

ஆனல், நம்மை இந்த லட்சியத்திற்கு நெருக்கமாகக் கொண்டு வருவதற்கு ஓரளவுக்கு பெரும் பணி ஆற்ற முடியும். இந்த விஷயத்தில் நமது கட்சி ஊழியர்கள் மற்றும் சோவியத் அலுவலர்கள் தோற்றுவித்துள்ள ''முன்முயற்சி'' மிக மிகப் போதாத ஒன்றாகும்.

இங்கு, இந்தப் பிரச்சினையை எழுப்பி இதன் பால் தோழர்களின் கவனத்தை ஈர்ப்பது மட்டுமே போதுமானது. பிரத்தியேகமான நெறிமுறைகளோ யோசனைகளோ தர வேண்டிய அவசியம் இல்லை.

சோவியத்துகளுக்கு மிகவும் நெருக்கமாக இருப்பவர்களும், பழக்க தோஷத்தால் தம்மை சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்கிறவர்களுமான குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளும், உதாரணமாக ஒரு சில ''இடதுசாரி'' மென்ஷிவிக்குகளும் அவர்களைப் போன்றாரும், பிணையாளிகளை பிடிக்கும், அவர்களது கருத்துப்படி காட்டுமிராண்டி வழக்கத்தைப் பற்றி குறிப்பாயும் திடீர்க் கோபாவேசப்படும் போக்கில் இருக்கிறார்கள் என்பதை மட்டுமே இங்கு கூறி வைப்போம்.

அவர்கள் திடீர்க் கோபாவேசப்படட்டும், ஆனல் இது செய்யப்படாவிடில் போரை நடத்த முடியாது, அபாயம் மேலும் கடுமையுறும் போதில் இந்த வழியைப் பயன்படுத்துவது எல்லா அர்த்தத்திலும் விஸ்தரிக்கப்பட வேண்டும், அதிகரிக்கப்பட வேண்டும். உதாரணமாக மென்ஷிவிக்குகள் அல்லது மஞ்சள் அச்சுத்துறையாளர், உயர் ரயில்வே உத்தியோகஸ்தர் அல்லது இரகசிய லாபக் கொள்ளையர், குலாக்குகள், நகரப்புற மற்றும் (நாட்டுப்புற) செல்வந்தர் பகுதிகள் இது

போன்ற பேர்வழிகள் கல்ச்சாக் மற்றும் தெனீக்கினுக்கு எதிரான தற்காப்பை வரம்பற்ற குற்றகரமான, வரம்பற்ற நாணக்கேடான ஓர் அசிரத்தைத் தோரணையுடன் பார்க்கிறார்கள், இது நாச வேலையாக வளர்ந்து விடுகிறது என்பதும் அடிக்கடி ஏற்படும் நிகழ்ச்சியாகி விட்டது. இத்தகைய பிரிவுகளின் பட்டியல்கள் தயாரிக்கப்பட வேண்டும் அல்லது (ஒவ்வொருவரும் எல்லோருக்கும் பதில் சொல்லக் கூடிய முறையில் அவர்கள் பிரிவுகளாக அமையும்படி கட்டாயப்படுத்தப்பட வேண்டும்), மேலும் அவர்களுக்கு அகழ்வுகள் வெட்டும் வேலை, சில சமயம் செயற்படுத்தப்படுவது போல மட்டும் தருவதோடு விடாமல், செஞ்சேனைக்கு பொருள்வகை உதவி செய்வதற்கான மிகவும் பல்வகைப்பட்ட சர்வாம்சமான கடமைகளையும் அவர்களுக்கு ஒதுக்க வேண்டும்.

இந்த வழிமுறையை நாம் மேலும் பரவலாகவும் மேலும் சர்வாம்சமான அளவிலும் மேலும் தேர்ச்சித் திறமையுடனும் கையாளுவோமானால், செஞ்சேனை வீரர்களின் நிலங்களில் மேலும் நல்ல முறையில் பயிர் செய்யப்படும், செஞ்சேனை வீரர்களுக்கு உணவு, புகையிலை மற்றும் இதரத் தேவைகள் மேலும் நல்ல முறையில் சப்ளை செய்ய ஏற்பாடு நடக்கும், தனி ஒரு சதிச் செயல் இத்தியாதி விளைவாக ஆயிரக் கணக்கான தொழிலாளர் விவசாயிகளுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்து பெருமளவுக்கு குறையும்.

''புரட்சிகர வழியில் வேலை செய்தல்''

மேலே கூறப்பட்டதைத் தொகுத்தளிக்கையில் நாம் ஒரு எளிதான முடிவை எட்டுகிறோம். எல்லாக் கம்யூனிஸ்டுகளிடமும், வர்க்க உணர்வுடைய எல்லாத் தொழிலாளர் விவசாயிகளிடமும், கல்ச்சாக்கும் தெனீக்கினும் வெற்றியடையக் கூடாது என்று விரும்பும் அனைவரிடமும் உடனடியாகவும் அடுத்த சில மாதங்களுக்குமாகக் கோரப்படுவது என்னவென்றால் உணர்ச்சியின் அசாதாரணமான உயர் வேற்றமே, தேவை என்னவென்றால் ''புரட்சிகர வழியில் வேலை செய்தல்'' தான்.

பட்டினி கிடந்து, வலிவிழந்து சோர்வுற்றுப் போன மாஸ்கோ ரயில்வே தொழிலாளர்கள், தேர்ச்சி பெற்றோர் தேர்ச்சியற்றோர் இரு தரப்பாரும் கல்ச்சாக்கை எதிர்த்து வெற்றி ஈட்டுவதன் பொருட்டு ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளை'' தொடங்கி வைத்தார்கள். கல்ச்சாக்கை எதிர்த்து வெற்றி பெறும் வரை ஒரு வாரத்தில் சில மணி நேரம் ஊதியம் பெருமல் வேலை செய்யும் திட்டம் இது. மேலும் அவர்கள் வழக்கமான உற்பத்தித் திறனைப் பல தடவை அதிகமாக்கி விஞ்சிடும் வகையில் முன் என்றும் கண்டிராத அளவுக்குத் தமது உற்பத்தித் திறனை வளர்த்துக் கொண்டிருக்கிருர்கள். இந்த விஷயத்தில் மிகப் பெருமளவுக்கு இன்னும் செய்ய முடியும் என்பதை இது காட்டுகிறது.

இதை நாம் கட்டாயம் செய்ய வேண்டும்.

பின்னர் நாம் நிச்சயம் வெல்வோம்.

ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யின்
மத்தியக் கமிட்டி

ரு.க.க(போ) ம.க. இஸ்வேஸ்தியா,
இதழ் 4, 1919, ஜூலை 9

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 44-63

பதிப்பாளர் குறிப்புகள்

[1] இரண்டாவது அகிலம் அல்லது சோஷலிஸ்டுக் கட்சிகளின் சர்வதேச நிறுவனம் 1889ல் தோற்றுவிக்கப்பட்டது. முதல் உலகப் போர் (1914-18) வெடித்தபோது இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் சோஷலிசத்துக்குத் துரோகம் செய்து தமது ஏகாதிபத்திய அரசாங்கங்களை ஆதரித்தார்கள். இரண்டாவது அகிலம் தகர்வுற்றது. இரண்டாவது அகிலத்தின் இடதுசாரிக் கட்சிகளும் குழுக்களும் 1919ல் மாஸ்கோவில் தோற்றுவிக்கப்பட்ட கம்யூனிஸ்டு (மூன்றாவது) அகிலத்தில் சேர்ந்தன.

1919ல் நடைபெற்ற பேர்ன் (ஸ்விட்சர்லாந்து) மாநாட்டில் இரண்டாவது அகிலம் மீண்டும் நிலைநாட்டப்பட்டது. அதில் சோஷலிஸ்டு இயக்கத்தின் வலதுசாரி, சந்தர்ப்பவாதக் கட்சிகள் மட்டுமே இடம் பெற்றிருந்தன.

பக்கம் 7

[2] சோத்சியால் டெமக்ராத் (''சமூக-ஜனநாயகவாதி'')—ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மத்திய ஏடாக விளங்கிய சட்ட விரோதச் செய்திப் பத்திரிகை. 1908 பிப்ரவரி முதல் 1917 ஜனவரி வரை வெளியிடப்பட்டது. இதன் முதல் இதழ் ருஷ்யாவிலும் பிந்திய இதழ்கள் பாரிசிலும் ஜினீவாவிலும் வெளியிடப்பட்டன. 1911 டிசம்பரில் இருந்து லெனின் இப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார்.

பக்கம் 7

[3] கம்யூனிஸ்டு—வி. இ. லெனினால் தோற்றுவிக்கப்பட்டு, ''சோத்சியால் டெமக்ராத்'' ஏட்டின் ஆசிரியர்கள் நிதி உதவியைச் சமர்ப்பித்த கி.லி. பியாத்தக்கோவ் மற்றும் ஐ.பி. போஷ் ஆகியோருடன் சேர்ந்து (ஆசிரியர் குழுவில்

நி. இ. புஹாரினும் இருந்தார்) வெளியிடப்பட்டதான சஞ்சிகை. ஒரே ஒரு (இரட்டை) இதழ் மட்டுமே (1915 செப்டம்பரில்) வெளியாயிற்று. 1916ல் புஹாரின், பியாத்தக்கோவ் மற்றும் போஷ் அனுசரித்த கட்சி விரோதக் கொள்கையின் காரணமாக சஞ்சிகையை இனி வெளியிட முடியாது என்று ''சோத்சியால் டெமக்ராத்'' ஏட்டின் ஆசிரியர்கள் லெனின் யோசனையின் படி அறிவித்தார்கள்.

பக்கம் 7

4 இங்கு குறிப்பிடப்படுவது **சோஷலிசமும் போரும் (போர் பற்றி ரு.ச.ஜ.தொ. கட்சியின் போக்கு)** எனும் சிற்றேடாகும்.
பக்கம் 7

5 **பாசெல் அறிக்கை**—பாசெல் நகரில் 1912 நவம்பர் 24—25 தேதிகளில் நடைபெற்ற விசேஷ சர்வதேச சோஷலிஸ்டு காங்கிரசில் போர் சம்பந்தமாக ஏற்கப்பட்டது. உலக ஏகாதிபத்தியப் போர் நெருங்கிவரும் அபாயத்தை எதிர்த்து இவ்வறிக்கை மக்களை எச்சரித்தது, இப்போரின் கொள்ளைக்கார நோக்கங்களை அம்பலப்படுத்தியது, சமாதானத்திற்கான வைராக்கியமான ஒரு போராட்டத்தை நடத்தும்படியும், ''முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் வலிமைக்கு எதிராய் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச ஒருமைப்பாட்டினை'' வைத்துப் போராடுமாறும் எல்லா நாடுகளின் தொழிலாளர்களையும் கேட்டுக் கொண்டது. இந்த பாசெல் அறிக்கையில், ஏகாதிபத்தியப் போர் மூளுமாயின் போரின் விளைவாக எழும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை சோஷலிஸ்டுகள் சாதகமாகப் பயன்படுத்தி சோஷலிஸ்டுப் புரட்சிக்காகப் பாடுபட வேண்டும் என்று கூறி ஷ்டுட்கார்ட் (1907) காங்கிரசில் லெனினுல் வகுத்து முன்வைக்கப்பட்ட தீர்மானத்தின் ஒரு ஷரத்தும் சேர்க்கப்பட்டிருந்தது.

பக்கம் 8

6 **மென்ஷிவிக்குகள்**—ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் நிலவிய குட்டி முதலாளித்துவ சந்தர்ப்பவாதப் போக்கைச் சேர்ந்தோர். மென்ஷிவிக்குகள் (சிறுபான்மையோர்) என்ற பெயரை அவர்கள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (1903) பெற்றனர். இந்தக் காங்கிரசின் இறுதியில் கட்சியின் மத்திய அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலில்

இவர்கள் காங்கிரஸ் பிரதிநிதிகளிடமிருந்து சிறு பான்மை வாக்குகளையே பெற்றனர். லெனின் தலைமையில் அமைந்த புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று போல்ஷிவிக்குகள் (பெரும்பான்மையோர்) என்று அழைக்கப்படலாயினர்.

மென்ஷிவிக்குகள் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும், தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயி மக்களுக்கும் இடையிலான கூட்டணியையும் எதிர்த்தனர். மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாருடன் சமரசம் செய்து கொள்ளும் கொள்கையை அனுசரித்தனர். 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து மென்ஷிவிக்குகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களாகி அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர், போல்ஷிவிக்குகளால் தயார் செய்யப்பட்டு வந்த சோஷலிஸ்டுப் புரட்சியை எதிர்த்துப் போராடினர்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் வெளிப்படையாகவே எதிர்ப்புரட்சிக் கட்சியாகி சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துச் சதிகளும் கலகங்களும் செய்தனர்.

பக்கம் 12

7 சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்—1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் ருஷ்யாவில் நிறுவப்பட்ட குட்டி முதலாளித்துவக் கட்சியின் உறுப்பினர்கள்.

சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்கள் தம்மைத் தாமே சோஷலிஸ்டுகள் என்று காட்டிக் கொள்ளச் செய்த முயற்சிகளை போல்ஷிவிக் கட்சி அம்பலப்படுத்தியது, விவசாயிகள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதற்காக அவர்களை எதிர்த்து கடுமையாகப் போராடியது, சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்களின் பாதகமான தனிநபர் பயங்கரவாதப் போர்த்தந்திரங்களின் தீங்கை வெளிப்படுத்தியது; அதே சமயம் ஜாராட்சிக்கு எதிரான போராட்டத்தில் போல்ஷிவிக்குகள் ஒரு சில சந்தர்ப்பங்களில் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடன் தற்காலிக உடன்பாடுகள் செய்து கொண்டார்கள். முதல் உலகப் போரின் போது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் முக்கிய பகுதியினர் சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டனர்.

1917 பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்

மென்ஷிவிக்குகள் மற்றும் காடேட்டுகளுடன் சேர்ந்து (குறிப்பு 33 ஐப் பார்க்க) எதிர்ப்புரட்சி முதலாளித்துவ-நிலவுடைமையாளர் இடைக்கால அரசாங்கத்தின் ஆதார சக்தியாக அமைந்தனர்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் முதலாளித்துவ வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள் மற்றும் அன்னியத் தலையீட்டாளர்களுடன் சேர்ந்து கொண்டு சோவியத் ஆட்சி அதிகாரத்தினை எதிர்த்து விடாப்பிடியாகப் போராடினர்.

பக்கம் 12

8 கார்ல் மார்க்ஸ் எழுதிய கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம் (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், 2ஆம் ருஷ்யப் பதிப்பு, தொகுதி 19, பக்கம் 27).

பக்கம் 14

9 பாரிஸ் கம்யூன்—வரலாற்றில் இது முதலாவது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமாக விளங்கிற்று. 1871ல் நடந்த பாட்டாளிப்புரட்சியின் விளைவாகப் பாரிஸ் நகரத் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட தொழிலாளி வர்க்க அரசாங்கம். 1871 மார்ச்சு 18 முதல் மே 28 வரை 72 நாட்களுக்குப் பாரிஸ் கம்யூன் நீடித்தது.

பக்கம் 14

10 1875 மார்ச் 18-28 ஔகுஸ்ட் பெபெலுக்கு பி. எங்கெல்ஸ் எழுதிய கடிதம் பார்க்க (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், 2ஆம் ருஷ்யப் பதிப்பு, தொகுதி 34, பக்கம் 103).

பக்கம் 21

11 கா. மார்க்ஸ் எழுதிய பிரான்சில் உள்நாட்டுப் போர் எனும் நூலுக்கான தமது முகவுரையில் பி. எங்கெல்ஸ் வெளியிட்டுள்ள கருத்தை லெனின் இங்கு குறிப்பிடுகிறார் (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, மாஸ்கோ, 1973, பக்கங்கள் 185-186).

பக்கம் 25

12 அதிகார பலம் குறித்து எனும் பி. எங்கெல்சின் கட்டுரையில் இருந்து லெனின் மேற்கோள் காட்டுகிறார் (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, மாஸ்கோ, 1973, பக்கம் 379)

பக்கம் 26

13 *1871* ஏப்ரல் *12*ல் லுத்விக் குகல்மனுக்கு கா. மார்க்ஸ் எழுதிய கடிதம், கா. மார்க்ஸ் எழுதிய **பிரான்சில் உள்நாட்டுப் போர்** மற்றும் இந்த நூலுக்கு *1891*ல் பி. எங்கெல்ஸ் எழுதிய முகவுரை பார்க்க (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி *2*, மாஸ்கோ, *1973* பக்கம் *420*, பக்கங்கள் *187-188*, பக்கம் *217*).

பக்கம் *26*

14 **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** ஜெர்மன் பதிப்புக்கு *1872*ல் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் எழுதிய முகவுரை இங்கு குறிப்பிடப்படுகிறது (கா. மார்க்ஸ் , பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி *1*, மாஸ்கோ, *1973*, பக்கம் *98-99*).

பக்கம் *26*

15 *1914* ஆகஸ்ட் *4*ந் தேதி ஜெர்மன் ரைஹ்ஸ்டாக் (நாடாளுமன்றம்) சமூக-ஜனநாயகவாதிகள் குழு கெய்ஸர் அரசாங்கத்துக்குப் போர்க் காலக் கடன்கள் வழங்கும் தீர்மானத்திற்கு வாக்களித்தது.

பக்கம் *27*

16 பிரெடரிக் எங்கெல்ஸ் எழுதிய **குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** எனும் நூலைப் பார்க்க (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி *3*, மாஸ்கோ, *1973*, பக்கம் *328*).

பக்கம் *30*

17 விக்குகள் மற்றும் டோரிகள்—*17*ஆம் நூற்றுண்டின் *70-80*க்களில் இங்கிலாந்தில் தோற்றுவிக்கப்பட்ட அரசியல் கட்சிகள். இவை ஒன்றை ஒன்று மாறி மாறி ஆட்சி அதிகாரத்தில் இருந்தன. விக்குகள் நிதி அதிபர் வட்டங்கள், வர்த்தக முதலாளித்துவம், முதலாளிகளாகிவிட்ட பிரபுத்துவப் பகுதிகளின் நலன்களை வலியுறுத்தினர். பின்னுல் அவர்கள் மிதவாதக் கட்சியை நிறுவினர். டோரிகள் பெரிய நிலப்பிரபுக்களையும் ஆங்கில சமய பீடத்தவரின் உயர் அடுக்குகளையும் பிரதிநிதித்துவப்படுத்தினர். அவர்கள் நிலப்பிரபுத்துவ சமுதாய மரபுகளை ஆதரித்து நின்று, மிதவாத மற்றும் முற்போக்குக் கோரிக்கைகளை எதிர்த்தார்கள். பின்னுல் டோரிகள் கன்சர்வேடிவ் கட்சியாக மாறினுர்கள்.

பக்கம் *33*

18 பிரெஞ்சு இராணுவத் தலைமையகத்தின் அதிகாரியான

டிரைஃபஸ் என்னும் யூதர் மீது பிரெஞ்சு இராணுவ வெறியர்களின் பிற்போக்கு முடியரசுவாத வட்டத்தினர் வேண்டுமென்றே ஒரு பொய்வழக்கைத் தொடுத்தனர். அந்நிய நாட்டுக்காக வேவு பார்த்ததாயும் அரசுக்குத் துரோகம் செய்ததாகவும் அவர் மீது குற்றம் சாட்டப் பட்டது. இராணுவ விசாரணையில் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பிரான்சில் யூத எதிர்ப்பு வெறியைத் தூண்டி விடுவதற்கும், குடியரசு ஆட்சி முறையையும் ஜனநாயக உரிமைகளையும் தாக்குவதற்கும் இந்த விவகாரம் முழுவதையும் பிரெஞ்சு பிற்போக்கு வட்டத்தினர் ஒரு சாக்காகப் பயன்படுத்தினர். 1899ல் பொது ஜனக் கிளர்ச்சியின் நிர்ப்பந்தத்தின் கீழ் டிரைஃபஸ் மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். 1906ல் தான் நீதிமன்றம் மனு விசாரணையில் குற்றமற்றவர் என்று தீர்ப்பு வழங்கியது சேனையில் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்.

பக்கம் 34

19 பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து நாட்டை விடுவிக்கும் நோக்கமுடன் 1916ல் வெடித்த ஐரிஷ் புரட்சி மிருகத்தனமாக ஒடுக்கப்பட்ட சம்பவம் இங்கு குறிப்பிடப்படுகிறது.

அல்ஸ்டர்—அயர்லாந்தின் வட கிழக்குப் பகுதி. இதன் மக்கள் தொகையில் பெரும்பான்மை ஆங்கிலேயர்களே. ஐரிஷ் மக்கள் புரட்சியை ஒடுக்க அல்ஸ்டர் துருப்புகள் ஆங்கிலேயப் படைகளுடன் சேர்ந்து கொண்டன.

பக்கம் 34

20 **அரசாங்க டூமா**—1905ஆம் ஆண்டின் புரட்சி நிகழ்ச்சிகளின் காரணமாய் ஜார் அரசாங்கம் கூட்ட வேண்டியதாகிய பிரதிநிதித்துவ சபை. சட்ட மன்றமாயிருந்த அரசாங்க டூமா மெய்யான அதிகாரம் எதுவும் இல்லாததாகவே இருந்து வந்தது. அரசாங்க டூமாவுக்கான தேர்தல்கள் நேரடியானவையாகவோ, சமத்துவ வாக்குரிமையுடையதாகவோ, குடிமக்கள் அனைவருக்குமானதாகவோ இருக்கவில்லை. உழைப்பாளி மக்களுக்கும் ருஷ்யாவிலிருந்த ருஷ்யரல்லாத பிற இனத்தோருக்கும் வாக்குரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தது. ஏராளமான தொழிலாளர்களும் விவசாயிகளும் வாக்குரிமையற்றோராகவே இருந்தனர். முதலாவது டூமாவும் (1906 ஏப்ரல்-ஜூலை) இரண்டாவது டூமாவும் (1907 பிப்ரவரி-ஜூன்) ஜார் அரசாங்கத்தால் கலைக்கப்பட்டன. 1907 ஜூன்

3ல் ஆட்சிக்கு வந்த ஸ்தொலீபின் சர்க்கார் புதிய தேர்தல் சட்டத்தைப் பிறப்பித்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், நகரக் குட்டி முதலாளிகளின் வாக்குரிமையை இச்சட்டம் மேலும் குறையச் செய்தது. இதனல் நிலப் பிரபுக்கள், பெரு முதலாளிகளது பிற்போக்குக் கூட்டணி மூன்ருவது டூமாவிலும் (1907-12) நான்காவது டூமாவிலும் (1912-17) ஆதிக்கம் வகிக்க முடிந்தது.

பக்கம் 35

21 ஷைலக்—ஷேக்ஸ்பியரின் இன்பியல் நாடகமான வெனிஸ் நகரத்து வணிகன் கதையில் வரும் ஒரு பாத்திரம். இந்தக் குரூரமான கல்மனம் படைத்த கடுவட்டிக்காரன் தன்னிடம் கடன்பட்டவனிடம் ஈவிரக்கமின்றி பறிமுதலான ஒரு பவுண்டு சதையை வெட்டித்தரும்படி கோரினுன்.

பக்கம் 41

22 கா. மார்க்ஸ் எழுதிய அரசியல் அசிரத்தைப் பற்றி என்ற கட்டுரை பார்க்க (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், 2ஆம் ருஷ்யப் பதிப்பு, தொகுதி 18, பக்கம் 297).

பக்கம் 43

23 அதிகார பலம் குறித்து எனும் பி. எங்கெல்சின் கட்டுரையைப் பார்க்க (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, மாஸ்கோ, 1973, பக்கம் 379).

பக்கம் 44

24 வெர்சேய் படைகள்—அ. தியேரின் பிரெஞ்சு எதிர்ப் புரட்சி முதலாளித்துவ அரசாங்கத்தின் ஆதரவாளர்கள். 1871 பாரிஸ் கம்யூன் வெற்றிக்குப் பிறகு இது வெர்சேயை தலைநகரமாகக் கொண்டு இருந்தது. பாரிஸ் தொழிலாளர் புரட்சி எழுச்சியை ஒடுக்க பிரஷ்ய படைகளுடன் இராணுவக் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டனர் இவர்கள்.

பக்கம் 47

25 அவுகியஸ் லாயங்கள்—கிரேக்கப் புராணக் கதையின் படி எலீஸ் மன்னனை அவுகியசின் குதிரை லாயங்கள் மிகப் பல ஆண்டுகளாகச் சுத்தம் செய்யப்படாமல் கிடந்தபின் முடிவில் ஹெர்க்குலஸ் வீரனல் சடுதியில் சுத்தம் செய்யப் பட்டது. குப்பை சேர்ந்து அழுக்கடைந்து விட்ட எதையுமோ, கவனியாது விடப்பட்டுக் கெட்டுப் போன காரியத்தையோ குறிக்கும் தொடர்.

பக்கம் 49

26 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு ஒரு நிர்ணயமான தேதியில்—1917 நவம்பர் 12 (25) தேதியன்று அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் நடைபெற்றன. அக்டோபர் புரட்சிக்கு முன்னுல் தயாரிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரமும், இடைக்கால அரசாங்கம் அங்கீகரித்த விதிகளுக்கு ஏற்பவும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சோஷலிஸ்டுப் புரட்சியின் முக்கியத்துவத்தைப் பெருந்திரளான மக்கள் இன்னும் அறிந்தேற்றுக் கொள்ளாத ஒரு சமயத்தில் தேர்தல்கள் நடைபெற்றன. வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் இதைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தலைநகரில் இருந்தும் தொழிற் துறை மையங்களில் இருந்தும் தொலைவாக இருந்த பகுதிகளில் பெரும்பான்மை வாக்குகள் பெற ஏற்பாடு செய்து கொண்டனர். அரசியல் நிர்ணய சபை சோவியத் அரசாங்கத்தால் கூட்டப்பட்டது, பெத்ரோகிராதில் 1918 ஜனவரி 5 (18)ந் தேதி ஆரம்பமாயிற்று. இந்த சபையின் எதிர்ப் புரட்சி பெரும்பான்மை, அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் சமர்ப்பிக்கப்பட்ட ''உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பிரகடனத்தை'' நிராகரித்தது, சமாதானம் நிலம் மற்றும் சோவியத்துகளுக்கு ஆட்சி அதிகாரத்தை மாற்றி வழங்குவது பற்றிய சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரசின் ஆணைகளையும் ஏற்க மறுத்தது எனவே அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி ஜனவரி 6(19)ந் தேதிய தனது ஆணையின் மூலம் அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தது.

பக்கம் 52

27 இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் — இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளரின் (சர்வதேசியவாதிகள்) இக்கட்சி 1917 நவம்பர் 19 முதல் 28 வரை (டிசம்பர் 2 முதல் 11 வரை) நடைபெற்ற அதன் முதல் அகில ருஷ்ய காங்கிரசில் சம்பிரதாயமாக அமைக்கப்பட்டது. அதுவரையில் அவர்கள் முதல் உலகப் போரின் போது தோன்றிய சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் இடதுசாரிப் பிரிவாக இருந்து வந்தனர்.

சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் பிரிவில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் பெரும்பான்மையாக இருந்தனர். காங்கிரசில் பங்கேற்பது சம்பந்தமாக இந்தப் பிரிவில் பிளவு ஏற்பட்டது: வலதுசாரி சோஷலிஸ்டு

-புரட்சியாளர்கள் தமது கட்சியின் மத்தியக் கமிட்டியின் நெறிமுறைப்படி செயல்பட்டு காங்கிரசில் இருந்து வெளியேறினர் அதேபோதில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் தொடர்ந்து கலந்து கொண்டு நிகழ்ச்சி நிரலில் இருந்த பிரதான இனங்கள் மீது போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து வாக்களித்தனர். அந்த சமயத்தில் விவசாயிகள் மத்தியில் பல ஆதரவாளர்களைக் கொண்டிருந்த இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடன் ஒரு கூட்டணி நிறுவுவது அவசியம் என்று போல்ஷிவிக்குகள் கருதினார்கள், எனவே இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை சோவியத் அரசாங்கத்தில் சேர்ந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தனர். ஆயினும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சேர மறுத்து விட்டார்கள். 1917 நவம்பரிலும் டிசம்பர் துவக்கத்திலும் நடைபெற்ற பேச்சுக்களின் விளைவாக அரசாங்கத்தில் அவர்கள் பங்கேற்பது பற்றிய ஓர் உடன்பாடு எட்டப்பட்டது. இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மக்கள் கமிசாரவையின் பொதுவான கொள்கையை அனுசரிப்பதாக ஒப்புக்கொண்டு பல மக்கள் கமிசாரகங்களின் அலுவல் அமைப்புகளில் பதவி ஏற்றுர்கள்.

போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைத்து வந்த அதே பொழுதில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சோஷலிஸ்டு நிர்மாணம் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகளில் அவர்களுடன் வேறுபட்டார்கள், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்தார்கள்.

1918 ஜனவரி-பிப்ரவரியில் அவர்களது மத்தியக் கமிட்டி பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதை எதிர்த்து இயக்கம் தொடங்கியது. இந்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு மார்ச் மாதத்தில் சோவியத்துகளின் நாலாவது காங்கிரசால் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு அவர்கள் மக்கள் கமிசாரவையில் இருந்து விலகிக் கொண்டார்கள். 1918 கோடை நாட்டுப்புறப் பகுதிகளில் சோஷலிஸ்டுப் புரட்சி வளர்ச்சியுற்றதையும், ஏழை விவசாயிகள் கமிட்டிகள் ஒழுங்கமைக்கப்பட்டதையும் தொடர்ந்து இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் மத்தியில் சோவியத் எதிர்ப்பு மனப்போக்குகள் மேலும் வலுவடைந்தன. ஜூலையில் அவர்களது மத்தியக் கமிட்டி மாஸ்கோவில் ஜெர்மன் தூதர் மிர்பாக் சதிக்கொலையும் சோவியத் ஆட்சிக்கு எதிரான ஆயுதக் கலகமும் ஏற்பாடு செய்தது. சமாதான உடன்பாட்டைக் குலைக்கவும் சோவியத் ருஷ்யாவுக்கும்

ஜெர்மனிக்கும் இடையே போரைத் தூண்டி விடவும் கருதி இது ஏற்பாடு செய்யப்பட்டது. ஜூலை கலகம் அடக்கப்பட்ட பிறகு நடைபெற்ற சோவியத்துகளின் ஐந்தாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் அவர்களது தலைமையின் கருத்துக்களை ஆதரிக்கும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை சோவியத்துகளில் இருந்து வெளியேற்றுவது என்று முடிவு செய்தது. மக்கள் திரள் மத்தியில் சகல ஆதரவையும் இழந்துவிட்ட இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி சோவியத் ஆட்சிக்கு எதிராக ஆயுதமேந்திய போராட்டத்தைத் துவங்கியது. போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைக்க விரும்பிய சில இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ''நரோத்னிக் கம்யூனிஸ்டுகள்'', ''புரட்சிகரக் கம்யூனிஸ்டுகள்'' கட்சிகளை அமைத்தனர். இவர்களில் கணிசமானவர்கள் பின்னல் கம்யூனிஸ்டு கட்சியில் சேர்ந்தார்கள்.

பக்கம் 54

28 ஜாரை வீழ்த்தியதான *1917* பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியையே இங்கு லெனின் மனதிற் கொண்டிருந்தார்.

பக்கம் 54

29 **பிரான்சில் உள்நாட்டுப் போர்** எனும் கா. மார்க்சின் நூலுக்கு பி. எங்கெல்ஸ் எழுதிய முகவுரையை இங்கு லெனின் குறிப்பிடுகிருர் (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** தொகுதி *2*, மாஸ்கோ, *1973*, பக்கம் *188*).

பக்கம் 58

30 **பிராவ்தா** (''உண்மை'')—சட்டபூர்வமான போல்ஷிவிக்கு நாளேடு. *1912* ஏப்ரல் *22* (மே *5*)ல் இதன் முதல் இதழ் பீட்டர்ஸ்பர்கில் வெளிவந்தது.

தொழிலாளர்கள் தம்மிடமிருந்து திரட்டித் தந்த நிதியைக் கொண்டு இந்த நாளேடு வெளியிடப்பட்டது. *40* ஆயிரம் பிரதிகள் அச்சாகி வந்தன. சில தனி இதழ்கள் *60* ஆயிரம் பிரதிகள் வரை அச்சாயின.

பிராவ்தா போலீசாரின் தாக்குதலுக்குத் தொடர்ந்து இலக்காகி வந்தது. *1914* ஜூலை *8* (*21*)ல் பத்திரிகை மூடப்பட்டது.

1917 பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பின்புதான் அது மீண்டும் வெளியாகத் தொடங்கியது. *1917* மார்ச் *5* (*18*)க்குப் பிறகு **பிராவ்தா** மத்தியக்

கமிட்டி மற்றும் ரு.ச.ஜ.தொ. கட்சியின் பீட்டர்ஸ்பர்க் கமிட்டியின் ஏடாக ஆயிற்று. ஏப்ரல் 5 (18)ல் லெனின் வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்த பிறகு அதன் ஆசிரியர் குழு உறுப்பினராயும் அதன் தலைவராயும் இருந்தார். 1917 ஜூலை-அக்டோபரில் எதிர்ப்புரட்சி முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு இலக்கான **பிராவ்தா** பல முறை தனது பெயரை மாற்றிக் கொண்டு வெளிவந்தது. அது ''லிஸ்தோக் பிராவ்து'', ''பாட்டாளி'', ''தொழிலாளி'', ''தொழிலாளர் வழி'' எனும் பெயர்களில் வெளியிடப்பட்டது. அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சியின் வெற்றிக்குப் பிறகு 1917 அக்டோபர் 27 (நவம்பர் 9) முதல் கட்சியின் மத்திய ஏடு அதன் முந்தைய **பிராவ்தா** எனும் பெயரால் வெளியிடப்பட்டது.

பக்கம் 63

31 **ருஷ்யாவில் இருக்கும் அரசியல் கட்சிகளும் பாட்டாளி வர்க்கத்தின் பணிகளும்** எனும் லெனினது சிறுபிரசுரம் இங்கு குறிக்கப்படுகிறது. இது 1918 ஜனவரி 15ல் *The Evening Post* பத்திரிகையிலும், அமெரிக்க சோஷலிஸ்டுக் கட்சி இடதுசாரிப் பிரிவின் ஏடான *The Class Struggle*, இதழ் 4 (1917 நவம்பர்-டிசம்பர்)லும் வெளியிடப்பட்டது. தனிப் பதிப்பாகவும் வெளிவந்தது.

The Evening Post—1801 முதல் நியூயார்க்கில் இருந்து வெளியிடப்பட்ட அமெரிக்க செய்திப் பத்திரிகை.

பக்கம் 66

32 ரு.ச.ஜ.தொ. கட்சி (போ)யின் ஏழாவது (ஏப்ரல்) அகில ருஷ்ய மாநாட்டில் ஏற்கப்பட்ட கட்சி வேலைத்திட்டத் திருத்தம் பற்றிய தீர்மானத்தையே இங்கு லெனின் மனதிற் கொண்டிருந்தார். இந்தத் தீர்மானத்தின் வாசகம் லெனினுல் எழுதப்பட்டது.

பக்கம் 66

33 **அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சி (காடேட்டுகள்)** — ருஷ்ய மிதவாத முடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் முதன்மையான கட்சியாக இருந்தது. இக்கட்சி 1905 அக்டோபரில் நிறுவப்பட்டது. முதலாளித்துவ வர்க்கத்தினர், ஸெம்ஸ்துவோ உறுப்பினர்களான நிலப்பிரபுக்கள், முதலாளித்துவப் படிப்பாளர் பகுதியினர் அதில் சேர்ந்திருந்தனர். பிறகு காடேட்டுகள் ஏகாதிபத்திய முதலாளித்துவக் கட்சியாக மாறிவிட்டனர்.

முதலாவது உலகப் போரின் போது அவர்கள் ஜார்

அரசாங்கத்தின் நாடுபிடிக்கும் கொள்கையை ஆதரித்தார்கள். 1917 பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் போது காடேட்டுகள் முடியரசைக் காப்பாற்ற முயன்றனர். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் தலைமை பதவிகள் வகித்த அவர்கள் மக்களுக்குப் பகைமையான எதிர்ப்புரட்சிக் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். மாபெரும் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு காடேட்டுகள் சோவியத் ஆட்சிக்கு தீவிர பகைவர்களாயினர், எல்லா ஆயுத எதிர்ப்புரட்சி எழுச்சிகளிலும் வெளிநாட்டு படையெடுப்புகளிலும் பங்கு பெற்றனர்கள்.

பக்கம் **71**

34 அகில ருஷ்ய ஜனநாயக மாநாடு *1917* செப்டம்பரில் பெத்ரோகிராதில் நடந்தது. ஆட்சி அதிகாரம் சம்பந்தமான பிரச்சினை குறித்து விவாதிக்க சோவியத்துகளின் மென்ஷிவிக் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் மத்திய நிர்வாகக் கமிட்டியால் இது ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் இதனை ஏற்பாடு செய்தவர்களால் முன்வைக்கப்பட்ட இந்த மாநாட்டின் மெய்யான நோக்கம் பெருகி வரும் புரட்சியிடமிருந்து மக்கள் திரளின் கவனத்தை திசை திருப்புவதேயாகும். 1500க்கும் அதிகமானோர் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். தொழிலாளர், விவசாயிகள் சோவியத்துகளின் பிரதிநிதிகள் எண்ணிக்கையைக்குறைத்து, வெவ்வேறு குட்டி முதலாளித்துவ, முதலாளித்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகள் எண்ணிக்கையை அதிகரித்து மாநாட்டில் பெரும்பான்மை பெறும் பொருட்டு மென்ஷிவிக் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் தலைவர்கள் சகல வாய்ப்புகளையும் பயன்படுத்தினர். பூர்வாங்க நாடாளுமன்றத்தை (குடியரசின் இடைக்கால சோவியத்தை) நிறுவுவது என்று இந்த ஜனநாயக மாநாடு முடிவு செய்தது. ருஷ்யாவில் நாடாளுமன்ற முறையினைத் தோற்றுவிப்பதற்கான முயற்சி இது. ஆனால் இடைக்கால அரசாங்கத்தால் ஊர்ஜிதம் செய்யப்பட்ட தீர்மானத்தின் படி பூர்வாங்க நாடாளுமன்றம் அரசாங்கத்தின் அகத்தேயான ஓர் ஆலோசக அமைப்பாக மட்டுமே இருக்கும்.

பக்கம் **75**

35 **கர்னீலவ் கலகம்**—*1917* ஆகஸ்டில் ருஷ்ய முதலாளித்துவ வர்க்கத்தினரும் நிலப்பிரபுக்களும் நடத்திய ஓர் எதிர்ப்புரட்சிக் கலகம். இதற்கு ஜாராட்சி ஜெனரல்

கர்னீலவ் தலைமை தாங்கினன். புரட்சிகர பெத்ரோகிராதைப் பிடித்துக் கொள்வது, போல்ஷிவிக் கட்சியை ஒடுக்குவது, சோவியத்துக்களைக் கலைப்பது, ராணுவச் சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பது, அதன் மூலம் நாட்டில் முடியாட்சியை மீண்டும் நிலைநாட்டுவது என்பதே கலகக்காரர்களின் திட்டம். இக்கலகம் ஆகஸ்ட் 25 (செப்டம்பர் 7)ல் ஆரம்பித்தது.

போல்ஷிவிக் மத்தியக் கமிட்டியின் வேண்டுகோளுக்கு இணங்க பெத்ரோகிராத் தொழிலாளரும், புரட்சிகரப் படையாளிகள், கடற்படைவீரரும் கலகக்காரர்களை எதிர்த்து போராடப் பொங்கி எழுந்தனர். பெத்ரோகிராத் தொழிலாளர் உடனடி செங்காவலர் படைப் பிரிவுகளை உருவாக்கினர். பல வட்டாரங்களில் புரட்சிகரக் கமிட்டிகள் நிறுவப்பட்டன. கர்னீலவ் படைகளின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது போல்ஷிவிக் பிரசாரத்தால் அவற்றின் கட்டுணர்வு குலைக்கப்பட்டது. மக்களின் நிர்ப்பந்தத்தின் கீழ் இடைக்கால அரசாங்கம் கர்னீலவையும் அவனது கூட்டாளிகளையும் கைதுசெய்து வழக்குத் தொடுக்க நேர்ந்தது.

பக்கம் 77

36 பெத்ருஷ்கா—ருஷ்ய நாவலாசிரியர் நி. வ. கோகல் ''இறந்த ஆன்மாக்கள்'' என்னும் நவீனத்தில் வரும் ஒரு பாத்திரம். அவனல் எழுத்துக் கூட்டி மட்டுமே படிக்க முடியும் எனவே புத்தகத்தின் உள்ளடக்கம் பற்றி எண்ணிப்பாராமலே படிப்பதை மட்டுமே அனுபவித்தான் அவன்.

பக்கம் 78

37 இங்கு குறிப்பிடப்படுவது செக்கோஸ்லொவாக் படைப் பிரிவின் எதிர்ப்புரட்சி ஆயுதக் கலகமாகும். இந்தப் படைப் பிரிவு அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கு முன்பு ருஷ்யாவில் செக் மற்றும் ஸ்லொவாக் போர்க் கைதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது. இந்தக் கலகம் ஆன்டான்டு ஏகாதிபத்தியவாதிகளால் திட்டமிடப்பட்டு மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் முனைப்பான ஆதரவைப் பெற்று 1918 மே மாதம் வெடித்தது. வெண்காவலர்கள், குலாக்குகளுடன் நெருக்கமான தொடர்பு பூண்டு செயல்பட்ட கலகக்காரர்கள் உரால், வோல்கா பகுதி, சைபீரியாவின் விரிவான பிரதேசத்தைப் பற்றுடல் செய்தனர், எல்லா இடங்களிலும் முதலாளித்துவ ஆட்சியை மீட்டமைத்தனர்.

1918 முன்பனிக் காலத்தில் வோல்கா பகுதி செஞ் சேனையால் விடுவிக்கப்பட்டது 1919 இறுதியில் வெண் காவலர் செக்குகள் முழுமையாக முறியடிக்கப்பட்டார் கள்.

பக்கம் 79

38 இங்கு லெனின் தமது **சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்** எனும் கட்டுரையைக் குறிப்பிடுகிருர் (இதே பதிப்பு, தொகுதி 8, பக்கங்கள் 50-122 பார்க்க).

பக்கம் 82

39 **ஜூடாஸ் கொலவ்லியோவ்**—ருஷ்ய எழுத்தாளர் மி.எ. சல்திக்கோவ்-ஷெத்ரின் எழுதியுள்ள கொலவ்லியோவ் குடும்பம் எனும் நவீனத்தில் வரும் பிரதான பாத்திரம். நிலப்பிரபுவான இவர் தமது கபடம், புறவேடப் பெருமை மற்றும் இதயமற்ற தன்மை காரணமாக ஜூடாஸ் எனும் சாட்டுப் பெயர் சூட்டப்பட்டார்.

பக்கம் 84

40 **லீபெர்டான்கள்**—எம். இ. லீபெர், எஃப. இ. டான் இவ் விரு மென்ஷிவிக்குத் தலைவர்களையும் அவர்களது ஆதர வாளர்களையும் குறிக்கும் கேலிப் பெயர். ''லீபெர்டான்'' என்று தலைப்பிட்டு தெம்யான் பேத்னி எழுதிய கிண்டல் கதை வெளியானதைத் தொடர்ந்து இந்தக் கேலிப் பெயர் இவர்களுக்கு உரியதாகியது.

பக்கம் 84

41 **தீவிர ஊழியர்கள்**—மென்ஷிவிக் கட்சியில் இருந்த அதி தீவிர வலதுசாரிப் பிரிவினர். இவர்கள் சோவியத் ஆட்சி யதிகாரத்துக்கு எதிரான ஆயுதமேந்திய போராட்ட முறைகளை ஏற்றதோடு வாஸ்வதத்தில் அவற்றைக் கையாளவும் செய்தனர். அன்னியத் தலையீட்டாளர்களின் ராணுவ மற்றும் நிதி உதவியைச் சார்ந்து நின்று இந்த தீவிர ஊழியர்கள் பல்வேறு எதிர்ப்புரட்சி மற்றும் பயங் கரச் செயல்களில் பங்கேற்ருர்கள்.

பக்கம் 84

42 ஒளகுஸ்ட் பெபெல் இதைப் பற்றி 1910 செப்டம்பர் 20ல் நடைபெற்ற ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் மக்டெபர்க் காங்கிரசில் பேசினுர்.

பக்கம் 86

43 *Frankfurter Zeitung* (''ஃபிராங்ஃபுர்ட் பத்திரிகை'')

—ஒரு தினசரி செய்திப் பத்திரிகை, பெரிய ஜெர்மன் பங்கு மார்க்கெட் தரகர்களின் ஆதரவு ஏடு. 1856 முதல் 1943 வரை மைன் நதிக் கரையிலுள்ள ஃபிராங்ஃபுர்ட் நகரிலிருந்து வெளிவந்தது.

பக்கம் 87

44 *Vorwärts* (''முன்னேற்றம்'')—தினசரி செய்திப் பத்திரிகை ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் மத்திய ஏடு. 1891 முதல் 1933 வரை பெர்லினில் வெளியிடப்பட்டது.

பக்கம் 87

45 இங்கு குறிப்பிடப்படுவது, 1918 அக்டோபர் 21ந் தேதிய *Vorwärts* இதழ் 290ல் வெளியிடப்பட்டதான ''சர்வாதிகாரமா அல்லது ஜனநாயகமா'' என்ற தலையங்கமாகும்.

பக்கம் 87

46 1903 ஜூலை 30 (ஆகஸ்டு 12)ந் தேதி ரு.ச. ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசில் கட்சியின் வேலைத்திட்டம் குறித்த விவாதத்தின் போது நிகழ்த்தப்பட்ட பிளெஹானவின் உரையை லெனின் மனதிற் கொண்டிருந்தார்.

பக்கம் 90

47 **ஸிம்மர்வால்டு அல்லது முதலாவது சர்வதேச சோஷலிஸ்டு மாநாடு** 1915 செப்டம்பர் 5-8ல் நடந்தது.

மாநாடு ''ஐரோப்பாவின் பாட்டாளி வர்க்கத்துக்கு'' என்னும் அறிக்கையை நிறைவேற்றியது. லெனினும் இடதுசாரிச் சமூக-ஜனநாயகவாதிகளும் மேற்கொண்ட முயற்சிகளால் புரட்சிகர மார்க்சியத்தின் அடிப்படையான கோட்பாடுகள் பலவும் இதில் சேர்க்கப்பட்டன. மேலும், ஜெர்மன் மற்றும் பிரெஞ்சுப் பிரதிநிதிக் குழுக்களின் கூட்டு அறிக்கையையும், போர்க் கொடுமைகளுக்குப் பலியானேருடனும் அரசியல் நடவடிக்கைகளுக்காகத் துன்புறுத்தப்பட்டு வந்த போராட்ட வீரர்களுடனும் அன்பு காட்டும் தீர்மானத்தையும் அது நிறைவேற்றியது.

பக்கம் 92

48 **ஸிம்மர்வால்டு இடதுசாரிகள் பிரிவு**—லெனினது முன்முயற்சியால் 1915 செப்டம்பரில் ஸிம்மர்வால்டில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டு மாநாட்டில் நிறுவப்பட்டது. இது ரு. ச. ஜ. தொ. கட்சியின் மத்தியக் கமிட்டி,

ஸ்வீடன், நார்வே, ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி நாடுகளின் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள், போலந்தின் சமூக-ஜனநாயக எதிர்க்கட்சி, லத்வியாவின் சமூக-ஜனநாயகவாதிகள் ஆகியவற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எட்டுப் பிரதிநிதிகளை ஒற்றுமைப்படுத்தியது. லெனினது தலைமையில் ஸிம்மர்வால்டு இடதுசாரி பிரிவு மாநாட்டின் மத்தியவாதப் பெரும்பான்மையை எதிர்த்துப் போராடியது. இதன் வழிகாட்டு சக்தியாக போல்ஷிவிக்குகள் இருந்தார்கள், இவர்கள் மட்டுமே முரணற்ற சர்வதேச நிலை மேற்கொண்டனர்.

பக்கம் 95

49 கா. மார்க்சின் பிரான்சில் உள்நாட்டுப் போர் எனும் நூலுக்கு பி. எங்கெல்ஸ் எழுதிய முகவுரையில் இருந்து லெனின் மேற்கோள் காட்டுகிறார் (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, மாஸ்கோ, 1973, பக்கங்கள் 179-180).

பக்கம் 97

50 கா.மார்க்ஸ், பிரான்சில் உள்நாட்டுப் போர் கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, மாஸ்கோ, 1973, பக்கங்கள் 219-220).

பக்கம் 97

51 **தல்ஸ்த்தோய்வாதிகள்**—மாபெரும் ருஷ்ய எழுத்தாளர் தல்ஸ்த்தோயின் அறநெறி தத்துவஞான போதனைகளைப் பின்பற்றுவோர். இதில் முக்கியமான கூறு தீமையை வன்முறையால் எதிர்க்காமை என்பதாகும்.

பக்கம் 96

52 **லொங்கேயிஸ்டுகள்**—ழான் லொங்கேயின் தலைமையில் இருந்த பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி சிறுபான்மைவாதிகள். 1914-18ஆம் ஆண்டுகளின் ஏகாதிபத்தியப் போரின் போது லொங்கேயிஸ்டுகள் சமூக-தேசியவெறியினர்பால் இணக்கம் கொள்ளும் கொள்கையைப் பின்பற்றினர். புரட்சிப் போராட்டத்தை நிராகரித்து விட்டு, ஏகாதிபத்தியப் போரில் ''தாயகப் பாதுகாப்பு'' நிலையை மேற்கொண்டனர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிற்பாடு லொங்கேயிஸ்டுகள் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்டனர்; ஆனால் உண்மையில் இந்தச் சர்வாதிகாரத்தின் எதிரிகளாய் இருந்தனர். 1920 டிசம்பரில் லொங்கேயிஸ்டுகள் பகிரங்கமான சீர்திருத்தவாதிகளுடன் சேர்ந்து கட்சி

யிலிருந்து வெளியேறி, இரண்டரையாவது அகிலத்தில் சேர்ந்து கொண்டனர்.

பக்கம் 102

53 இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்—குறிப்பு 27 பார்க்க.

54 ''இடதுசாரி கம்யூனிஸ்டுகள்''—1918ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் (பிரேஸ்த் சமாதான ஒப்பந்தம்) செய்து கொள்வது சம்பந்தமாய்த் தோன்றிய கட்சி விரோத கோஷ்டி. புரட்சி யுத்தம் என்பதான இடதுசாரிச் சொல்வீச்சுகளின் திரை மறைவில், இன்னும் ஒரு சேனையைப் பெற்றிராத இளம் சோவியத் குடியரசை ஏகாதிபத்திய ஜெர்மனியுடன் யுத்தத்தில் இழுத்துவிட்டு நாசமடைந்துவிடும் அபாயத்துக்கு அதை உட்படுத்திய சாகசவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். ''இடதுசாரி கம்யூனிஸ்டுகள்'' ஓராள் நிர்வாக முறையையும் தொழில் கட்டுப்பாட்டையும் எதிர்த்தார்கள்; தொழில் துறையில் முதலாளித்துவ நிபுணர்கள் உபயோகித்துக் கொள்ளப்படுவதை எதிர்த்தார்கள். லெனின் தலைமையில் இருந்த கட்சியானது ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுடைய'' கொள்கைக்கு வைராக்கியமான எதிரடி கொடுத்தது.

பக்கம் 104

55 ஸ்பார்ட்டகிஸ்டுகள்—ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளது புரட்சிகர நிறுவனத்தின் உறுப்பினர்கள். ஏகாதிபத்திய உலகப் போரின் தொடக்கத்தில் கார்ல் லீப்க்னெஹ்ட், ரோஸா லுக்சம்பர்க் ஆகியவர்களின் தலைமையின் கீழ் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. அவர்கள் பொதுமக்களிடையில் புரட்சிப் பிரசாரம் நடத்தினார்கள்; வெகுஜன அளவில் போர் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் வேலை நிறுத்தங்களுக்கும் ஏற்பாடு செய்தனர்; உலகப் போரின் ஏகாதிபத்தியத் தன்மையையும் சமூக-ஜனநாயகக் கட்சியின் சந்தர்ப்பவாத தலைவர்களுடைய துரோகத்தையும் அம்பலப்படுத்தினார்கள். ஆயினும் இவர்கள் முக்கியமான தத்துவார்த்த, அரசியல் தவறுகளைச் செய்தார்கள். 1917 ஏப்ரலில் ஸ்பார்ட்டகிஸ்டுகள் மையவாத ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தனர்; ஆனால் தமது நிறுவனச் சுதந்திரத்தை விட்டுவிடாமல் தம்மிடம் இருத்திக் கொண்டனர். 1918 நவம்பரில் ஜெர்மனியில் நடந்த புரட்சியின்

போது இவர்கள் ஸ்பார்ட்டகஸ் சங்கத்தை நிறுவினர். 1918 டிசம்பர் 14ல் தமது வேலைத்திட்டத்தை வெளியிட்டபின் ''சுயேச்சையாளர்களிடமிருந்து'' பிரிந்து சென்றனர். 1918 டிசம்பர் 30லிருந்து 1919 ஜனவாரி 1 வரை நடைபெற்ற துவக்கக் காங்கிரசில் இவர்கள் ஜெர்மன் கம்யூனிஸ்டு கட்சியை அமைத்தார்கள்.

பக்கம் 109

56 லெனின் இங்கு குறிப்பிடுவது ''ருஷ்யப் புரட்சிக்கான இயக்கு சக்தியும் வருங்கால வாய்ப்புகளும்'' எனும் காவுத்ஸ்கியின் கட்டுரையாகும். இது 1906 டிசம்பரில் ருஷ்ய மொழியில் சிறுபிரசுரமாக வெளியிடப்பட்டது. லெனின் இக்கட்டுரையைப் பதிப்புச் செய்து ஒரு முன்னுரையும் வழங்கினர்.

பக்கம் 115

57 முதலாளித்துவ வர்க்கமும் எதிர்ப்புரட்சியும் எனும் கா. மார்க்சின் கட்டுரையைப் பார்க்க (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, மாஸ்கோ, 1973, பக்கங்கள் 138-41)

பக்கம் 116

58 இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஜெர்மன் தூதர் மிர்பாக் கோமகனை ஆத்திரமூட்டும் வகையில் படுகொலைசெய்த பின்னர், அவர்களது 1918 ஜுலை 6-7 கலகத்துக்கு பின்னர் (குறிப்பு 27 பார்க்க), இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி ''நரோத்னிக் கம்யூனிஸ்டுகள்'' மற்றும் ''புரட்சிகரக் கம்யூனிஸ்டுகள்'' எனும் இரண்டு கட்சிகளாகப் பிளவுற்றது.

நரோத்னிக் கம்யூனிஸ்டுகள் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் சோவியத் எதிர்ப்புச் செயல்களைக் கண்டனம் செய்து 1918 செப்டம்பரில் நடைபெற்ற மாநாட்டில் தமது சொந்தக் கட்சியை நிறுவினர். 1918 நவம்பர் 6ந் தேதி நடைபெற்ற அதன் விசேஷ காங்கிரஸ் இக்கட்சியைக் கலைத்து ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யில்இணைந்து விடுவதென ஒருமுகமாக முடிவு செய்தது.

புரட்சிகர கம்யூனிஸ்டுக் கட்சி 1918 செப்டம்பர் 25-30 தேதிகளில் மாஸ்கோவில் நடைபெற்ற ''வோலாத்ருதா'' என்னும் பத்திரிகை ஆதரவாளர்களின் காங்கிரசில் நிறுவப்பட்டது.''புரட்சிகர கம்யூனிஸ்டுக் கட்சி'' 1920 வரையில் சிறு பிரிவாக நிலவியது. 1920 செப்டம்

பரில் நடைபெற்ற இக்கட்சியின் ஆறாவது காங்கிரஸ் இக்கட்சியை ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யுடன் இணைத்து விடுவது என்ற முடிவை ஏற்றது. இதே ஆண்டு அக்டோபரில் ''புரட்சிகர கம்யூனிஸ்டுக் கட்சியின்'' முன்னாள் உறுப்பினர்களைத் தமது அணிகளில் சேர்த்துக் கொள்ளுமாறு ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போ)யின் மத்திய கமிட்டி கட்சி அமைப்புகளுக்கு அனுமதி வழங்கியது.

பக்கம் *117*

59 லுத்விக் குகல்மனுக்கு *1871* ஏப்ரல் *12*ந் தேதி கா. மார்க்ஸ் எழுதிய கடிதம் பார்க்க (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், *2*ஆம் ருஷ்யப் பதிப்பு, தொகுதி *33*, பக்கம் *172*).

பக்கம் *124*

60 ஏழை விவசாயிகள் கமிட்டிகள் *1918* ஜூன் மாதத்தில் நிறுவப்பட்டன. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணை மூலம் அவற்றிடம் விவசாயிக் குடும்பங்களின் உணவு சப்ளைகளை இருப்பெடுத்தல், குலாக்குகளின் உணவுப் பொருள் ஆதாரங்கள் மற்றும் உபரிகளை உறுதியாக அறிதல், இந்த உபரிகளை எடுத்துக் கொள்வதிலும், குலாக் பண்ணைகளின் செலவில் ஏழை மக்களுக்கு உணவு சப்ளை செய்வதிலும், பண்ணைக் கருவிகள் மற்றும் செய்முறைப் பண்டங்களின் வினியோகத்திலும் சோவியத் வழங்கு துறை அமைப்புகளுக்கு உதவி புரிதல் போன்ற பணிகள் ஒப்படைக்கப்பட்டன. ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் செயல்பாடுகள் நாட்டுப்புறப் பகுதியிலான வேலைகளின் எல்லா அம்சங்களையும் தழுவியனவாக இருந்தன: உண்மையில் அவை அங்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பலக்கோட்டைகளாயும் உறுப்புகளாயும் விளங்கின.

1918 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் தமது லட்சியப் பணியை நிறைவேற்றி முடித்து ஸ்தல சோவியத்துகளுடன் இணைக்கப்பட்டன.

பக்கம் *128*

61 ஜூலை நெருக்கடி என்ற தொடர் மூலம் லெனின் அன்னியத் தலையீட்டாளர்களின் ஆதரவுடன் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் *1918* கோடையில் ருஷ்யாவின் மத்திய குபெர்னியாக்களில், வோல்கா பிரதேசம், உரால், சைபீரியா ஆகியவற்றில் ஏற்பாடு

செய்த குலாக்கு எதிர்ப்புரட்சிக் கலகங்களையே சுட்டுகிறார்.

பக்கம் 129

62 **பிளாங்கிவாதம்**—புகழ் வாய்ந்த புரட்சி வீரரும், பிரெஞ்சுக் கற்பனாவாதக் கம்யூனிசத்தின் பிரபல பிரதிநிதியுமான லுயீ ஒகுஸ்ட் பிளாங்கி (1805-1881) தலைமை தாங்கிய பிரெஞ்சு சோஷலிச இயக்கத்தில் ஒரு போக்கு. புரட்சிகர கட்சியின் பணிகளுக்குப் பதிலாய் இரகசியச் சதிகாரக் குறுங்குழுவின் செயற்பாட்டை ஆதரித்த இவர்கள் எழுச்சியின் வெற்றிக்கு அவசியமான பிரத்தியேக நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. பிளாங்கிவாதிகள் வெகுஜனங்களுடன் தொடர்புகளைப் புறக்கணித்தனர்.

பிளாங்கிவாதிகள் வர்க்கப் போராட்டத்தை எதிர்த்து ''கூலி அடிமை நிலையிலிருந்து மனித இனத்தை விடுவிப்பதற்கான பாதை பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம் அல்ல, சிறுபான்மையினரான அறிவுத்துறையினரது சிறு குழுவின் சூழ்ச்சிகளே'' என்று கருதினர் (வி.இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 13, பக்கம் 76).

பக்கம் 131

63 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குச் சில நாட்கள் முன்பாக இடைக்கால அரசாங்கத்திற்கு விவசாயத் துறை அமைச்சர் எஸ்.எல். மாஸ்லவ் சமர்ப்பித்த சோஷலிஸ்டு-புரட்சியாளர் வகைப்பட்ட மசோதாவை இது குறிக்கிறது. இது நிலக் கமிட்டிகளின் கீழ் ஒரு விசேஷ நிலச் சேமம் உருவாக்கப்படுவதை முன் அனுமானித்தது. இதனிடம் அரசுக்குச் சொந்தமானதும் சமய நிறுனங்களுக்குச் சொந்தமானதுமான நிலங்கள் மாற்றி வழங்கப்படும். நிலப்பிரபுத்துவ சொத்துடைமை அப்படியே நீடிக்கும். ''குத்தகைக்கு விட்ட நிலம்'' என்பதாக விவசாயிகளிடம் முன்னால் குத்தகைக்குவிட்டு அதற்கான செலுத்தல்கள் பெற்ற நிலத்தை மட்டுமே இந்தத் தற்காலிக நிலச் சேமத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

விவசாயிகளின் கலகங்கள் மற்றும் நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகள் கைப்பற்றப்பட்டதன் விளைவாக இடைக்கால அரசாங்கம் நிலக் கமிட்டிகளின் உறுப்பினர்களைக் கைது செய்தது.

பக்கம் 132

64 முடிக்குரிய நிலங்கள்—ஜார் முதலாம் பால் 1797ல் விடுத்த சாசனத்தின்படி ஜார் குடும்ப உறுப்பினர்களுக்கு பயிர்செய்துவந்த விவசாயிகளையும் சேர்த்து வழங்கப் பட்ட நிலங்களாகும்.

பக்கம் 135

65 இங்கு குறிப்பிடப்படுவது நிலம் பற்றியதான "விவசாயி கள் தீர்ப்புக் கட்டளை". இது 242 உள்ளூர் விவசாயிகள் தீர்ப்புக் கட்டளைகள் அடிப்படையில் வரையப்பட்டது. 1917 அக்டோபர் 26ல் (நவம்பர் 8ல்) சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்ய காங்கிரசால் ஏற்கப்பட்ட தான நிலம் பற்றிய அரசாணையில் இணைக்கப்பட்டது. இந்த அரசாணை நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகளைக் கலைத்து நிலத்தை விவசாயிகளுக்கு மாற்றி வழங்கியது.

பக்கம் 135

66 சோவியத்துகளின் மூன்றாவது அகில ருஷ்ய காங்கிரசால் 1918 ஜனவரி 13 (31)ல் ஏற்கப்பட்ட "நிலத்தைச் சமு தாயமயமாக்கல் பற்றிய பிரதானச் சட்டத்தை" இங்கு லெனின் குறிப்பிடுகிறார்.

பக்கம் 136

67 இங்கு குறிப்பிடப்படுவது **1905-07 முதல் ருஷ்யப் புரட்சி யில் சமூக-ஜனநாயகத்தின் நிலம் பற்றிய வேலைத்திட்டம்** எனும் லெனின் எழுதிய நூலாகும்.

பக்கம் 138

68 துருதொவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மற் றும் "மக்கள் சோஷலிஸ்டுகள்" எனும் நரோத்னிக் மாதிரியிலான மூன்று குட்டி முதலாளித்துவக் கட்சிகளைச் சுட்டிக் காட்ட "நரோத்னிக்" என்ற சொல்லை லெனின் கையாள்கிறார்.

பக்கம் 143

69 கா. மார்க்ஸ் எழுதியுள்ள **உபரி மதிப்பின் தத்துவங்கள்**, 2ஆம் பாகம் (கா.மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல் கள்**, 2ஆம் ருஷ்யப் பதிப்பு, தொகுதி 26, 2ஆம் பாகம், பக்கங்கள் 38-39).

பக்கம் 145

70 **கிராமச் சமுதாயத்தினர்**—தமது பங்கு நிலம் குடிவாழ் கூட்டுக்களுக்குச் சொந்தமாக இருக்கும் விவசாயிகள். **குடும்பப் பண்ணை விவசாயிகள்**—தமது பங்கு நிலத்தைச் சொந்தச் சொத்தாக வைத்திருந்தவர்கள்.

பக்கம் 146

71 கூட்டில் அடைந்த மனிதர்—இத்தலைப்பிலுள்ள ருஷ்ய எழுத்தாளரான சேகவ் சிறு கதையின் தலைமைப் பாத்திரம். புதியவற்றைக் கண்டதும் பயந்து நடுங்கும் குறுகிய மனப்பான்மையுள்ள நபரைக் குறிக்கும் தொடராக வழங்கி வருகிறது.

பக்கம் *151*

72 இங்கு ஜெர்மனியில் *1918* நவம்பரில் ஏற்பட்ட புரட்சியை லெனின் குறிப்பிட்டார்.

கீல் என்னும் நகரத்தில் *1918* நவம்பர் 3ந் தேதி புரட்சி வெடித்தது. இங்கு கடற்படையினர் புரட்சி எழுச்சியை ஆரம்பித்தனர். கடலோர நகரங்கள் ஒன்றன் பின் ஒன்ருக புரட்சி எழுச்சியாளர்களை ஆதரித்தன. வடக்கு ஜெர்மனியை சூழ்ந்துகொண்ட இப்புரட்சி குறுகிய காலத்தில் மத்திய மற்றும் தெற்கு மாவட்டங்களுக்குப் பரவியது. நவம்பர் 9ந் தேதி பெர்லினில் ஒரு பொது வேலைநிறுத்தம் தொடங்கியது. அது விரைவில் ஓர் ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியாகியது. இந்தப் புரட்சி எழுச்சியின் விளைவாக இரண்டாவது வில்ஹெல்மின் முடியாட்சி வீழ்த்தப்பட்டது. அவர் பதவிதுறந்து வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். பெர்லின் சோவியத்தின் முழுக்கூட்டத்தில் நவம்பர் 10ந் தேதி நிறுவப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் (பி. எபெர்ட், பி. ஷெய்டெமன், ஒ. லாண்ட்ஸ்பர்க்) மற்றும் ''சுயேச்சை'' சமூக-ஜனநாயகவாதிகள் (கி. ஹாஸே மற்றும் பிறர்) இடம் பெற்றிருந்தனர். பின்னவர்கள் பிற்பாடு விலகிக் கொண்டனர். அரசாங்கத்தின் வேலைத்திட்டம் முதலாளித்துவ ஆட்சியின் கீழிலான சமுதாய சீர்திருத்தங்களின் வரம்புகளை மீறவில்லை. *1918* டிசம்பர் *16-21*ல் பெர்லினில் நடைபெற்ற சோவியத்துகளின் முதல் அகில ஜெர்மன் காங்கிரசில் வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்கள், அரசாங்கத்துக்கு சட்டமியற்றும் மற்றும் நிர்வாக அதிகாரங்களை மாற்றி வழங்கவும், அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் நடத்தவுமான தீர்மானத்தை நிறைவேற்ற முடிந்தது. உண்மையில் இது சோவியத்துகளை அகற்றுவதாகும்.

கம்யூனிஸ்டுக் கட்சியை அழிக்கவும் தொழிலாளி வர்க்கத்தை தோற்கடிக்கவும் உத்தேசம் கொண்ட ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கம் பக்குவநிலை இன்னும் வராமலே ஓர் ஆயுதம் தாங்கிய புரட்சி எழுச்சியைத் தொடங்குமாறு தொழிலாளி வர்க்கத்தைத் தூண்டி

விட்டது. பெர்லினில் ஜனவரி 6ந் தேதி தொடங்கிய இந்தப் புரட்சி எழுச்சியில் ''சுயேச்சையாளர்'' தலைமையைக் கைப்பற்றிக் கொண்டனர். துவக்க முதலே அவர்கள் ஒரு விரைவான தீர்மானகரமான தாக்குதலுக்கு ஏற்பாடு செய்யவில்லை. பிறகு அரசாங்கத்துடன் வஞ்சகமாகப் பேச்சுக்கள் தொடங்கினர். வலதுசாரி சமூக-ஜனநாயகவாதியும் ராணுவ அமைச்சருமான நோஸ்கேயால் தலைமை தாங்கப்பட்ட எதிர்ப்புரட்சிப் படைகள் பெர்லின் பாட்டாளிகளின் புரட்சி எழுச்சியைக் கடுமையாக ஒடுக்கின. ஜனவரி 15ந் தேதி ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர்களான ரோஸா லுக்சம்பர்க்கும் கார்ல் லீப்க்னெஹ்டும் கைது செய்யப்பட்டு ஆயுதமேந்திய கொலைகாரர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

பக்கம் 154

73 சர்வதேச சோஷலிஸ்டு குழுமம்—இரண்டாவது அகிலத்தின் ஒரு முறையான நிர்வாக-தகவல் பணிகளுக்கான ஓர் உறுப்பு. 1900ம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1914ல் இதன் நடவடிக்கைகள் நின்று போயின.

பக்கம் 155

74 ஔகுஸ்ட் பெபெலுக்கு 1875 மார்ச் 18-28ல் பி. எங்கெல்ஸ் எழுதிய கடிதம் பார்க்க (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், 2ஆம் ருஷ்யப் பதிப்பு, தொகுதி 34, பக்கங்கள் 103-104).

பக்கம் 163

75 இங்கு லெனின் குறிப்பிடுவது, மி. ஒஸ்த்ரகோர்ஸ்கி எழுதிய *La Democratie et les Partis Politiques* (''ஜனநாயகமும் அரசியல் கட்சிகளும்'') எனும் நூலாகும். இது 1903ல் முதன் முறையாக பாரிசில் வெளியிடப்பட்டது. முதலாளித்துவ ஜனநாயகத்தின் பொய்மையையும் போலித்தனத்தையும் அம்பலப்படுத்தி பிரிட்டன் மற்றும் அமெரிக்காவின் வரலாற்றில் இருந்து மிகவும் செழுமையான பல மெய்யான விஷயாதாரங்களை இந்நூல் வெளியிட்டது.

பக்கம் 165

76 கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது காங்கிரஸ் 1919 மார்ச் 2 முதல் 6 வரை மாஸ்கோவில் நடந்தது.

காங்கிரசுக்கு முன்பாக லெனினது வழிகாட்டுதலின் கீழ் பெரும் அளவிலான தயாரிப்பு வேலை செய்யப்பட்டது. லெனினது நெறிமுறைகளுக்கு ஏற்பவும் அவரது பங்

கேற்புடனும் ''கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது காங்கிரசுக்கு'' எனும் வேண்டுகோள் உரை வகுத்துரு வாக்கப்பட்டது. இதில் புதிய அகிலத்தின் கோட்பாடு கள் வகுத்து முன்வைக்கப்பட்டன.

இந்தக் காங்கிரசை லெனின் துவக்கி வைத்தார். நாடுகளில் இருந்து பெறப்பட்ட அறிக்கைகளுக்குப் பிறகு கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைத் திட்டம் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிகழ்ச்சி நிரலில் இருந்த பிரதான விஷயம் முதலாளித்துவ ஜன நாயகம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற் றிய பிரச்சினையாகும். இதன் மீது 1919 மார்ச் 4ல் லெனின் அறிக்கை செய்தார். காங்கிரஸ் அவரது ஆய்வுரைகளை ஒருமனதாக ஒப்புக்கொண்டு எல்லா நாடுகளுக்கும் சுற் றுக்கு விடும்படி கம்யூனிஸ்டுஅகிலத்தின் நிர்வாகக் கமிட்டி குழுமத்திடம் சமர்ப்பித்தது. இந்த ஆய்வுரைகளுக்கு அனுபந்தமாக லெனின் பிரேரேபித்த தீர்மானத்தையும் ஏற்றுக் கொண்டது. அதே நாளில் மூன்றாவது, கம்யூ னிஸ்டு அகிலத்தை நிறுவுவது என்ற முடிவையும் காங் கிரஸ் ஏற்றது. லெனினது யோசனைப்படி ஸிம்மர்வால்டு சங்கத்தைக் கலைத்து விடுவது என்ற ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. உலக முழுதுமுள்ள தொழிலாளர்களுக் கான ஒரு கொள்கை அறிக்கையையும் பல இதர தீர் மானங்கள், முடிவுகளையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் முத லாவது காங்கிரஸ் அங்கீகரித்தது.

கம்யூனிஸ்டு அகிலம் 1919 முதல் 1943 வரை நில வியது. நிலைமைகள் மாறிவிட்டன, தனி ஒரு மையத்தில் இருந்து சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்குத் தலைமை வகிப்பது சாத்தியமல்ல என்பதாலும் அதன் நிர்வாகக் கமிட்டியின் தலைமைக்குழு எல்லாக் கம்யூனிஸ் டுக் கட்சிகளின் ஒப்புதலுடன் கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைத்துவிடுவது என்ற முடிவை எடுத்தது.

பக்கம் 166

77 **பேர்ன் மாநாடு**—இரண்டாவது அகிலத்தை மீட்டமைக் கும் நோக்கத்துடன், கூட்டப்பெற்ற சமூக-தேசியவெறிக் கட்சிகள் மற்றும் மையவாதக் கட்சிகளின் முதல் போர் பிற்கால மாநாடு ஆகும். இது பேர்ன் நகரத்தில் 1919 பிப்ரவரி 3 முதல் 10ந் தேதி வரை நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலில் இருந்த பிரதான விஷயங்களில் ஒன்று ஜனநாயகம் மற்றும் சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினை யாகும். கா. பிரான்டிங் எனும் ஒரு மையவாதி இந்தப்

பிரச்சினை மீது பேசினர். சோஷலிஸ்டுப் புரட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் சோஷலிசத்துக்கு இட்டுச் செல்ல முடியாது என்று காட்டுவதற்கு முயன்றார். இந்த மாநாடு போல்ஷிவிசத்தையும் ருஷ்யாவில் நடந்த சோஷலிஸ்டுப் புரட்சியையும் கண்டனம் செய்ய வேண்டும் என்று கா. காவுத்ஸ்கியும் எ. பெர்ன்ஷ்டைனும் வற்புறுத்தினர்கள். பிரான்டிங் பிரேரேபித்த ஒரு தீர்மானம், ருஷ்யா, ஆஸ்திரிய-ஹங்கேரி மற்றும் ஜெர்மனியில் நடந்த புரட்சிகளுக்குப் பாசாங்குத்தனமாக வாழ்த்துத் தெரிவித்த பிறகு சாரத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கண்டித்தது, முதலாளித்துவ ஜனநாயகத்தைப் புகழ்ந்தது. இது பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரஸ் "'சோஷலிஸ்டு' போக்குகள் மற்றும் பேர்ன் மாநாடு சம்பந்தமான உறவு நிலை பற்றி" ஒரு விசேஷத் தீர்மானத்தை ஏற்றது. இத்தீர்மானம் பேர்ன் தீர்மானங்களைக் கண்டித்து விமர்சித்தது. குறிப்பாயும் சோவியத் ருஷ்யாவுக்கு விரோதமாக ஆயுதமேந்திய ஏகாதிபத்தியத் தலையீடு நடத்த இரண்டாம் அகிலத்துக்கு ஒரு திரையாக உதவும் ஒரு தீர்மானத்தை பேர்ன் மாநாடு ஏற்கும்படி செய்ய வலதுசாரி சோஷலிஸ்டுத் தலைவர்கள் நடத்திய முயற்சிகளைக் கண்டித்தது.

பக்கம் *166*

78 கா. மார்க்சின் **பிரான்சில் உள்நாட்டுப் போர்** எனும் நூலுக்கு பி. எங்கெல்ஸ் எழுதிய முகவுரை காண்க (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, 2ஆம் ருஷ்யப் பதிப்பு, தொகுதி *22*, பக்கங்கள் *200-201*).

பக்கம் *168*

79 கா. மார்க்சின் **பிரான்சில் உள்நாட்டுப் போர்** எனும் நூல் காண்க (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, 2ஆம் ருஷ்யப் பதிப்பு, தொகுதி *17*, பக்கம் *344*).

பக்கம் *169*

80 **ஆன்டான்ட்**—ஏகாதிபத்திய அரசுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜார் ருஷ்யா ஆகியவற்றின் கூட்டு ஆகும். முதல் உலகப் போரின் போது இந்த ஆன்டான்டில் அமெரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் இத்தாலியும் வேறு பல நாடுகளும் சேர்ந்து கொண்டன.

பக்கம் *174*

81 **ஷாப் ஸ்டீவர்டுகள் கமிட்டிகள்** *(Shop-Stewards Committees)*— கிரேட் பிரிட்டனில் பல்வேறு தொழில்களில் நிறுவப் பட்டிருந்த தேர்வு செய்யப்படும் தொழிலாளர் அமைப்புகள். முதலாம் உலகப் போரின் போது இவை மிகவும் பரவலாக இருந்தன. சமரசவாத தொழிற்சங் கங்களைப் போன்று ''சிவில் சமாதானக்'' கொள்கையைப் பின்பற்றி வேலைநிறுத்தப் போராட்டங்களைக் கைவிடும் பாதையில் இவை செல்லவில்லை. மாறாக, தொழிலாளர் களின் நலன்களையும் கோரிக்கைகளையும் இக்கமிட்டிகள் ஆதரித்துப் போராடின, வேலைநிறுத்தங்களைத் தலைமை தாங்கி நடத்தின, போர் எதிர்ப்புப் பிரசாரம் நடத்தின. ஸ்டீவர்டுகள் ஆலை, மாவட்ட மற்றும் நகரக் கமிட்டி களில் ஒன்று சேர்ந்தார்கள். 1916ல் தேசிய ஸ்டீவர்டு கள் கமிட்டி அமைக்கப்பட்டது.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீடு நடந்த சமயம், ஷாப் ஸ்டீவர்டுகள் கமிட்டிகள் சோவி யத் ருஷ்யாவைச் செயலூக்கமுடன் ஆதரித்தன. ஷாப் ஸ்டீவர்டுகள் கமிட்டிகளின் பல உறுப்பினர்கள் (வி. கல ஹர், ஹா. பாலிட், அ. மாக்மானுஸ் இன்னும் பிறர்) இங்கிலாந்தின் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார்கள்.

பக்கம் 179

82 *Die Freiheit* (''சுதந்திரம்'')—தினசரி செய்திப் பத் திரிகை, ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் ஏடு, 1918 நவம்பர் முதல் 1922 அக்டோபர் வரை பெர் லினில் இருந்து வெளியிடப்பட்டது.

பக்கம் 182

83 **ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி**—1917 ஏப் ரலில் கோத்தா நகரில் கூடிய காங்கிரசில் துவக்கப்பட்ட மையவாதக் கட்சி. மையவாதச் சொல்வீச்சடித்து இதன் மறைவில் ''சுயேச்சையாளர்கள்'' சமூக-தேசியவெறி யர்களுடன் ஐக்கியம் வேண்டும் என்று போதித்தார்கள், வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு விடும் நிலைக்குச் சரிந்தார்கள்.

1920 அக்டோபரில் ஹாலே நகரில் நடந்த காங்கிர சில் அந்தக் கட்சியில் பிளவு ஏற்பட்டது; 1920 டிசம் பரில் ''சுயேச்சையாளர்களில்'' ஒரு பெரும் பகுதியினர் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தனர்.

வலதுசாரி நபர்கள் ஒரு தனிக் கட்சி அமைத்துக் கொண்டனர், அது ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜன

நாயகக் கட்சி எனும் பழைய பெயரையே எடுத்துக் கொண்டது. அது 1922ல் கலைக்கப்பட்டது.

பக்கம் 182

84 கட்சியின் பெயரையும் அதன் வேலைத்திட்டத்தையும் மாற்றுவது பற்றி 1918 மார்ச் 6-8 தேதிகளில் நடந்த ரு.க.க.(போ)யின் ஏழாவது காங்கிரசின் தீர்மானத்தை லெனின் மனதிற்கொண்டிருந்தார்.

பக்கம் 184

85 கஸேத்தா பெச்சாத்னிக்கவ் (''அச்சுத் தொழிலாளர் செய்திப் பத்திரிகை'')—மாஸ்கோ அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் ஏடு. 1918 டிசம்பர் 8 முதல் வெளிவந்தது. அந்த சமயம் இந்தத் தொழிற்சங்கம் மென்ஷிவிக்குகள் செல்வாக்கின் கீழ் இருந்தது. 1919 மார்ச்சில் இதன் சோவியத் எதிர்ப்பு பிரசாரம் காரணமாக இப்பத்திரிகை மூடப்பட்டது.

பக்கம் 188

86 1918 அக்டோபர் 31ல் நள்ளிரவு கழிந்த பின் ஹங்கேரியில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடைபெற்றது. இதன் விளைவாக ஆட்சி அதிகாரம் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்திடம் வந்து சேர்ந்தது, அது சமூக-ஜனநாயகக் கட்சியுடன் உடன்பாடு செய்துகொண்டது. இப்புதிய அரசாங்கம் தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயி மக்களின் நிலைமையை மேம்படுத்தக் கூடியதான எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இது உழைக்கும் மக்கள் மத்தியில் அதிருப்தியை உண்டாக்கியது. அவர்கள் தமது சொந்த புரட்சிகரமான அதிகார உறுப்புக்களான தொழிலாளர், விவசாயிகள் மற்றும் படையாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளை நிறுவத் தொடங்கினர். நவம்பர் 16ல் ஹங்கேரி குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. பழைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. ஓர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்காக முதலாளித்துவக் கட்சிகள் பரவலான கிளர்ச்சியைத் தொடங்கின. 1918 நவம்பர் 20ல் தோற்றுவிக்கப்பட்ட ஹங்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சி ''எல்லா ஆட்சி அதிகாரமும் சோவியத்துகளுக்கே!'' என்ற கோஷத்தை முன்வைத்தது. 1918 இறுதியிலும் 1919 துவக்கத்திலும் ஹங்கேரியப் பாட்டாளிகளின் பல வெகுஜனப் போராட்டங்களுக்கு இக்கட்சி தலைமை தாங்கியது. ஹங்கேரியில் ஒரு புரட்சிகரமான நிலைமை எழுந்தது (குறிப்பு 109 பார்க்க).

*1917-1919*ல் ருஷ்யாவின் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் செல்வாக்கின் கீழ் ஸ்விட்சர்லாந்திலும் கூட தொழிலாளி வர்க்க இயக்கத்தின் எழுச்சி நடைபெற்றது. *1918* நவம்பரில் சோவியத் ருஷ்யாவுக்கு ஆதரவாக அரசியல் பொது வேலைநிறுத்தம் வெடித்தது. ஸ்விஸ் சோஷலிஸ்டுக் கட்சியில் இருந்த இடதுசாரி புரட்சிகர நபர்கள் கம்யூனிஸ்டு குழுவை உருவாக்கினர். தொழிலாளர், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளை நிறுவும்படி தமது சிறுபிரசுரங்கள், சிறுநூல்களில் வலியுறுத்தினர். ஜூரிச்சில் இருந்த தொழிலாளர் பிரதிநிதிகள் சோவியத் ''கம்யூனிஸ்டு வேலைத்திட்டத்தைத் தமது கொள்கைத் திட்டமாக'' அங்கீகரித்தது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரசில் ஸ்விஸ் கம்யூனிஸ்டுக் குழுவின் பிரதிநிதி அறிவித்தார்.

பக்கம் *191*

87 இங்கு லெனின் ரோஸா லுக்சம்பர்கின் *Der Anfang* (''துவக்கம்'') எனும் கட்டுரையைக் குறிப்பிடுகிறார். இது *Die Rote Fahne* (''செங்கொடி'') பத்திரிகை, இதழ் *3*ல் *1918* நவம்பர் *18*ல் வெளியிடப்பட்டது.

Die Rote Fahne (''செங்கொடி'') எனும் செய்திப் பத்திரிகை ஸ்பார்ட்டகஸ் சங்கத்தின் மத்திய ஏடாக கார்ல் லீப்க்னெஹ்ட் மற்றும் ரோஸா லுக்சம்பர்கால் துவக்கப்பட்டது. பிறகு இது ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய ஏடாகியது. *1918* நவம்பர் *9*க்குப் பின் பெர்லினிலிருந்து வெளியிடப்பட்டது.

பக்கம் *191*

88 குறிப்பு *65* பார்க்க.

89 ரு.க.க.(போ)யின் எட்டாவது காங்கிரஸ் *1919* மார்ச் *18* முதல் *23* வரை மாஸ்கோவில் நடைபெற்றது.

இந்தக் காங்கிரசை லெனின் துவக்கிவைத்தார், முடித்தும் வைத்தார். மத்தியக் கமிட்டியின் சார்பில் அறிக்கை சமர்ப்பித்தார். கட்சியின் வேலைத்திட்டம், நாட்டுப்புறத்தில் கட்சிப் பணி மற்றும் இராணுவப் பிரச்சினை பற்றிய அறிக்கைகளை சமர்ப்பித்தார்.

நிகழ்ச்சி நிரலில் இருந்த பிரதான விஷயம் புதிய கட்சி வேலைத்திட்டம் பற்றிய விவாதமும் அங்கீகாரமும் ஆகும். இதற்கான நகலை லெனின் தலைமையிலான ஒரு வேலைத்திட்டக் கமிஷன் தயாரித்தது. இக்கமிஷன் ரு.க.க.(போ)யின் ஏழாவது காங்கிரசில் தேர்ந்தெடுக்கப்

பட்டிருந்தது. வேலைத்திட்டத்தின் முக்கிய பகுதிகள் யாவும் லெனினால் எழுதப்பட்டன. புதிய வேலைத்திட்டத்தில் முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் கட்டத்திற்கான கட்சியின் பிரதான குறிக்கோள்கள் இடம் பெற்றிருந்தன.

நகல் வேலைத்திட்டத்தின் மீதான விவாதத்தின் போது வேலைத்திட்டத்தில் ஏகபோக கட்டத்துக்கு முந்திய முதலாளித்துவம் மற்றும் சாமான்ய பண்ட உற்பத்தி பற்றிய தன்மைக் குறிப்பை ஏகாதிபத்தியம் பற்றிய வரையறுப்புடன் சேர்த்துக் கொடுக்கப்பட்டிருப்பதைப் புஹாரின் எதிர்த்தார். அவர் எடுத்த நிலை முற்றும் தவறானது, லெனினது சோஷலிஸ்டுப் புரட்சி பற்றிய தத்துவத்துக்கு முரணானது. இந்த நிலை, ஜனநாயக இயக்கங்களைப் பாட்டாளிகள் அவசியம் ஆதரிக்க வேண்டும் என்பதையும் சோஷலிசத்தைக் கட்டுவதில் பாட்டாளிகளுக்கும் உழைக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஒற்றுமை அவசியம் என்பதையும் மறுதலித்தது. தவிரவும் இந்த நிலை சிறுவீத உற்பத்தியில் இருந்து முதலாளித்துவ நபர்கள் தோன்றி வளர்வதை அசட்டை செய்தது, குலாக்குகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டது. வேலைத்திட்டத்தில் இருந்து தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பாராவை நீக்கம் செய்துவிட வேண்டும் என்று புஹாரினும் பியாத்தக்கோவும் வலியுறுத்தினர்கள். இந்த மகா-வல்லரசு தேசியவெறித் தன்மை கொண்ட யோசனை மக்களின் ஒருமைப்பாட்டை நோக்கியதான கட்சியின் தேசியக் கொள்கையின் அடித்தளத்துக்கும் சோவியத் நாட்டின் சர்வதேச செல்வாக்கினுக்கும் வேட்டு வைத்தது.

காங்கிரஸ் புஹாரின் மற்றும் பியாத்தக்கோவின் யோசனையை நிராகரித்து, லெனினது வேலைத்திட்டத்தை ஒப்புக் கொண்டது.

நிகழ்ச்சி நிரலில் இருந்த முக்கியமான விஷயங்களில் ஒன்று நடுத்தர விவசாயிகளின் பால் உறவுநிலை பற்றிய பிரச்சினையாகும். வெகு முன்பாகவே, 1918 இலையுதிர் காலத்திலேயே நடுத்தர விவசாயிகள் சோவியத் அரசதிகாரத்தின் பக்கமாகத் திரும்பத் தொடங்கிய சமயம், இந்தத் திருப்பத்தை உறுதிப்படுத்துவதும், நடுத்தர விவசாயிகளை நடுநிலைப்படுத்துவது என்பதில் இருந்து தொழிலாளி வர்க்கத்துக்கும் நடுத்தர விவசாயிகளுக்கும் இடையிலான ஒற்றுமையைக் கெட்டிப்படுத்துவதும், ஏழை விவசாயிகள் ஆதரவுடன் குலாக்குகளை எதிர்த்துப்

போராடுவதும், இந்த ஒற்றுமையில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தைக் கட்டிக்காப்பதும் அவசியம் என்று லெனின் சுட்டிக் காட்டியிருந்தார். ''நடுத்தர விவசாயிகள் பலான உறவு நிலை'' குறித்த லெனினது தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு எட்டாவது காங்கிரஸ் இந்தக் கொள்கையை ஊர்ஜிதம் செய்தது.

பக்கம் *194*

90 **முப்பதாண்டுப் போர்** *(1618-1648)*—முதலாவது பொது ஐரோப்பிய யுத்தம். ஐரோப்பிய அரசுகளது பல்வேறு கூட்டுகளுக்கும் இடையே முரண்பாடுகள் கடுமையாகியதால் இந்த யுத்தம் எழுந்தது. புரோட்டஸ்டென்டுகளுக்கும் கத்தோலிக்கர்களுக்குமான போராட்டத்தின் வடிவத்தில் இது வெளியாகியது. ஜெர்மனிதான் பிரதான போர் அரங்கும், இராணுவச் சூறையாடலுக்கும் கொள்ளைக்காரக் கோரிக்கைகளுக்குமான இலக்கும் ஆயிற்று. இந்த யுத்தம் வெஸ்ட்ஃபாலிய சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகியதுடன் முடிவுற்றது *(1648)*. ஜெர்மனி அரசியல் வழியில் சின்னபின்னமாய்த் துண்டாடப்பட்டிருந்ததை இந்த ஒப்பந்தம் சட்ட வடிவம் பெறச் செய்தது.

பக்கம் *195*

91 பி. எங்கெல்ஸ், **பர்க்ஹீம் எழுதிய ''(1806-1807)ன் ஜெர்மன் பெரும் தேசபக்தர்கள் நினைவாக'' எனும் சிற்றேட்டுக்கான முகவுரை** (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி *21*, பக்கம் *361*).

பக்கம் *195*

92 கா. மார்க்ஸ், **மூலதனம்**, தொகுதி *1* (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி *23*, பக்கம் *381*).

பக்கம் *199*

93 குறிப்பு *55* பார்க்க.

94 **ஸ்மோல்னி** — பெத்ரோகிராதில் இருந்த முன்னாள் ஸ்மோல்னி கல்லூரியின் கட்டிடம், *1918* மார்ச்சில் மாஸ்கோவுக்குப் பெயர்ந்து செல்லும் வரை சோவியத் அரசாங்கத்தின் தலைமையகம்.

பக்கம் *204*

95 பின்லாந்தின் சுதந்திரத்தை அங்கீகாரம் செய்யும் மக்கள் கமிசாரவையின் அரசாணையை *1917* டிசம்பர் *18(31)*ல்

லெனின் பின்னிஷ் முதலாளித்துவ அரசாங்கத்தின் தலைவரான ஸ்வின்ஹூவுட் இடம் கொடுத்தார். இந்த அரசாணை *1917* டிசம்பர் *22*ல் (*1918* ஜனவரி *4*ல்) அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

பக்கம் *204*

96 *1919* மார்ச்சில் பஷ்கீரிய சுயாட்சி சோவியத் குடியரசு நிறுவப்படுவது பற்றி நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை லெனின் இங்கு குறிப்பிடுகிருர். இவற்றின் விளைவாக ஓர் உடன்பாடு கையெழுத்தாகியது. இதன்படி சோவியத் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் பஷ்கீரிய சுயாட்சி சோவியத் குடியரசு நிறுவப்பட்டது, அதன் எல்லைகளும் நிர்வாகப் பிரிவுகளும் வரை செய்யப்பட்டன. இந்த உடன்பாடு *1919*, மார்ச் *23*ல் ''அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ்தியா'', №*63*ல் வெளியிடப்பட்டது.

பக்கம் *204*

97 தொழிலாளர் பிரதிநிதிகளின் வார்சா சோவியத் *1918* நவம்பர் *11*ந் தேதி தோற்றுவிக்கப்பட்டது. தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகள் போலந்தின் இதர நகரங்களிலும் தொழில்துறை மையங்களிலும் உதித்தெழுந்தன. தொழிலாளர் பிரதிநிதிகளின் வார்சா சோவியத் எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் 8 மணி நேரத்தைக் கொண்டுவரத் தொடங்கியது, அதிபர்கள் நாசவேலையை எதிர்த்துப் போராடியது, புரட்சிகர ருஷ்யாவுடனை உறவு குறித்து ஒரு முடிவையும் சமர்ப்பித்தது. *1919* கோடையில் போலந்தின் முதலாளித்துவ அரசாங்கம் இந்த சோவியத்துகளைத் துடைதொழித்தது.

பக்கம் *209*

98 *1919* மார்ச் *16*ல் மக்கள் கமிசாரவை நிறைவேற்றிய அரசாணை, நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து ஒரே வினியோக அமைப்பாக்கி அதற்கு ''நுகர்வாளர் கம்யூன்'' என்று பெயர் சூட்டியது. ஆனல் இந்தப் புதிய பெயரால் குழப்பம் ஏற்பட்டு இந்த அரசாணை தவருகப் புரிந்து கொள்ளப்பட்டது. எனவே *1919* ஜூன் *30*ல் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டி நிறைவேற்றிய ''தொழிலாளர், விவசாயிகளது நுகர்வாளர் சங்கங்களைப் பற்றிய'' தீர்மானம் ''நுகர்வாளர் கம்யூன்'' என்ற

பெயரை எல்லாலார்க்கும் தெரிந்த பெயரான ‘‘நுகர் வாளர் சங்கம்’’ என்று மாற்றியது.

பக்கம் 213

99 **‘‘நோவயா ஷிஸின்காரர்கள்’’** — ‘‘நோவயா ஷிஸின்’’ (‘‘புதிய வாழ்வு’’) என்ற செய்தித்தாளைச் சூழ்ந்து குழு வாயிருந்த மென்ஷிவிக் சர்வதேசீயவாதிகள். ‘‘நோவய ஷிஸின்’’ ஆதரவாளர்களைத் தன்மைக்குறிப்பாக சிலே டையில் குறிப்பிட்ட லெனின் ‘‘இருந்தால் போல் சர்வ தேசியவாதிகள்’’, ‘‘அவர்களும் மார்க்சியவாதிகள்’’ என்று அழைத்தார்.

பக்கம் 221

100 1918 ஜூலையில் சோவியத்துகளின் ஐந்தாவது அகில ருஷ்ய காங்கிரசில் ஏற்கப்பட்டதான ரு.சோ.சோ.கூ. குடியரசின் அரசியல் சட்டம் சோவியத்துகளுக்கான தேர்தல்களில் பாட்டாளிகளுக்கு அனுகூலங்களை வழங் கியது.

இந்த நிலைமை சோவியத் யூனியன் சோவியத்துகளின் எட்டாவது காங்கிரஸ் வரை நடைமுறையில் இருந்தது. 1936ல் இந்தக் காங்கிரஸ் புதிய அரசியல் சட்டத்தை ஏற்றது. இதன்படி எல்லாக் குடிமக்களும் தேர்ந்தெடுக்க வும் தேர்ந்தெடுக்கப்படவுமான சம உரிமைகளை அனுப வித்தார்கள்.

பக்கம் 225

101 குறிப்பு 65 பார்க்க.

102 **எர்ஃபுர்ட் வேலைத்திட்டம்**—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் வேலைத்திட்டம், 1891 அக்டோபரில் எர்ஃபுர்ட் நகரில் நடந்த காங்கிரசில் நிறைவேற்றப்பட்டது.

பக்கம் 236

103 குறிப்பு 81 பார்க்க.

104 இங்கு குறிப்பிடப்படுவது 1918 ஜனவரி பிற்பகுதியில் தொழிலாளருக்கு ஆட்சி அதிகாரம் மாற்றப்பட்டதை ஒட்டிப் பிரகடனம் செய்யப்பட்டதான பின்னிஷ் சோஷ லிஸ்டு குடியரசு ஆகும். 1918, மார்ச் 1ந் தேதி பெத் ரோகிராதில் பின்னிஷ் சோஷலிஸ்டு தொழிலாளர் குடி யரசுக்கும் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷ லிஸ்டு குடியரசுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை கை யெழுத்தாகியது. பூரண சமத்துவம், இரு நாடுகளின் அரசுரிமையையும் மதிப்பது என்ற கோட்பாடுகளை ஆதாரமாக்கிய இந்த உடன்படிக்கை சோஷலிஸ்டு

அரசுகளுக்கு இடையிலான முதல் உடன்படிக்கையாகும். 1918 மேயில் ஜெர்மன் ஆயுதப் படைகளின் தலையீட்டால் மூர்க்கமான உள்நாட்டுப் போருக்குப் பிறகு பின்னிஷ் புரட்சி அடக்கப்பட்டது.

பக்கம் 243

105 சோஷலிஸ்டு நிலவுரிமை மற்றும் சோஷலிஸ்டு பயிர்ச் சாகுபடி முறைக்கு மாறிச் செல்வதற்கான நடவடிக்கைகள் பற்றிய சட்டம் 1919 பிப்ரவரியில் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் ஏற்கப்பட்டது. இதற்கான அடிப்படை நிலத்துறை நிறுவனங்கள், ஏழை விவசாயிகள் கமிட்டிகள் மற்றும் நிலக் கம்யூன்களின் முதல் அகில ருஷ்யக் காங்கிரஸ் 1918 டிசம்பரில் எடுத்த முடிவுகளில் இருந்து உருவாயிற்று. இந்தச் சட்டத்தை வகுப்பதிலும் அதைச் சரிவரப் பதிப்பதிலும் லெனின் நேரடியாக பங்கு பற்றினர். இந்தச் சட்டம் விவசாயத்தில் உற்பத்தித் திறனை உயர்த்தல், சாகுபடிக்குரிய நிலத்தை விஸ்தரித்தல், விவசாயத்தில் சோஷலிஸ்டு சீர்திருத்தங்கள் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு பல ஏற்பாடுகளைச் செய்ய உத்தேசித்திருந்தது.

பக்கம் 255

106 பி. எங்கெல்ஸ், **பிரான்சில் விவசாயிகள் பிரச்சினை** (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, 2ஆம் ருஷ்யப் பதிப்பு, தொகுதி 22, பக்கங்கள் 483-505).

பக்கம் 258

107 **கன்வென்ஷன்**—18ஆம் நூற்றாண்டு இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் போதிருந்த தேசிய சட்டமன்றம்.

பக்கம் 259

108 நீஷ்னி நொவ்கரோத் கட்சி நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் காங்கிரஸ் தலைமைக் குழுவிடம் ஒரு குறிப்பைத் தந்தனர். அதில் அவர்கள் ''பொதுவாக நடுத்தர விவசாயிகள்'' என்ற வாசகம் அச்சுப் பிழை எனவும் சரியான வாசகம் ''நடுத்தர விவசாயிகளில் சிலர்'' என்று இருக்க வேண்டும் எனவும் சுட்டியிருந்தனர்.

பக்கம் 262

109 1919, மார்ச் 21ல் ஹங்கேரியில் சோவியத் குடியரசு நிலைநாட்டப்பட்டது. ஹங்கேரியில் நடைபெற்ற சோஷலிஸ்டுப் புரட்சி ஒப்பளவு சமாதான முறையில் இருந்

தது, முதலாளித்துவ வர்க்கத்தால் மக்களை எதிர்க்க இயலவில்லை. உள்நாட்டு, வெளிநாட்டு இடர்ப்பாடுகளைத் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் அது புரட்சி வளர்ச்சியடைவதைத் தடுக்கும் கருத்துடன் சில காலம் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளிடம் அரசதிகாரத்தை ஒப்படைக்க முடிவு செய்தது. எனினும் இதற்கிடையில் ஹங்கேரிய கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு மக்கள் திரளின் மத்தியில் வெகுவாக வளர்ந்து விட்டிருந்தது. கம்யூனிஸ்டுகளுடன் ஒற்றுமை வேண்டும் சமூக-ஜனநாயக அணிகளின் கோரிக்கை மிகவும் விடாப்பிடியாக இருந்தது. இதன் விளைவாக சமூக-ஜனநாயகத் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருந்த கம்யூனிஸ்டுத் தலைவர்களிடம் கூட்டு அரசாங்கம் அமைக்கும் யோசனையை முன்வைத்தனர். பேச்சுவார்த்தைகளின் போது சமூக-ஜனநாயகத் தலைவர்கள் கம்யூனிஸ்டுகள் முன்வைத்த பின்வரும் நிபந்தனைகளை ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது: சோவியத் அரசாங்கத்தை அமைத்தல், முதலாளித்துவ வர்க்கத்தை நிராயுதராக்குதல், செஞ்சேனையையும் மக்கள் மிலீஷியாவையும் உருவாக்குதல், நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகளைப் பறிமுதல் செய்தல், தொழில்துறையைத் தேசவுடைமையாக்கல், சோவியத் ருஷ்யாவுடன் கூட்டணி சேருதல் இத்தியாதி இதிலுட்படும். இதே சமயம் இரு கட்சிகளையும் ஹங்கேரிய சோஷலிஸ்டு கட்சியாக இணைப்பது குறித்த உடன்பாட்டில் கையொப்பமிடப்பட்டது. இந்த இணைப்பு நடைமுறையின் போது தவறுகள் செய்யப்பட்டன, அவை பின்னால் பாதித்தன. சீர்திருத்தவாத நபர்களை விலக்கித்தனிமைப்படுத்தாமல் இந்த இணைப்பு இயாந்திரிக முறையில் நிறைவேற்றப் பட்டது.

1919 ஆகஸ்ட் *1*ல் அன்னிய ஏகாதிபத்தியத் தலையீட்டாளர்கள் மற்றும் உள்நாட்டு எதிர்ப்புரட்சியாளர்களின் கூட்டு நடவடிக்கைகளின் விளைவாக ஹங்கேரியில் இருந்த சோவியத் ஆட்சியதிகாரம் வீழ்த்தப்பட்டது.

பக்கம் *286*

110 கா. மார்க்ஸ், கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம், (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி *19*, பக்கம் *27*).

பக்கம் *289*

111 இங்கு குறிப்பிடப்படுவது ''தேசிய மையம்'' எனும் எதிர்ப்புரட்சி அமைப்பின் தலைமையில் பெத்ரோகிரா

தைச் சரணடையும்படி செய்வதற்கு நடத்தப்பட்ட சதியாகும். இந்த அமைப்பு சோவியத் எதிர்ப்பு மற்றும் இரகசிய உளவுக்காரக் கும்பல்களை ஒன்று சேர்த்திருந்தது. 1919 ஜூன் 13ந் தேதி இரவில் இந்தச் சதிகாரர்கள் கிராஸ்னயா கோர்க்கா (செங் குன்றம்) கோட்டையில் கலகத்தை கிளப்பிவிட்டனர். இந்த இடம் பெத்ரோகிராதுக்கு அருகில் இருப்பது. இந்தக் கலகக்காரர்களை எதிர்த்து கடலோரப் பாதுகாப்புப் படை, பால்டிக்கப்பற்படை போக்கப்பல்கள், ராணுவ விமானங்கள், தொண்டர் படைப் பிரிவுகள் அனுப்பிவைக்கப்பட்டன. ஜூன் 16 இரவில் கடலோரப் பாதுகாப்பு படைகள் இக்கோட்டையைக் கைப்பற்றின. சதித்திட்டத்துக்குத் தலைமை தாங்கிய எதிர்ப்புரட்சி அமைப்பு கண்டு பிடிக்கப்பட்டு ஒழித்துக் கட்டப்பட்டது.

கறுப்பு நூற்றுவர்—புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராட வேண்டி ஜாராட்சி போலீசார் நிறுவிய முடியாட்சி ஆதரிப்பு கும்பல்கள்.

பக்கம் 309

112 குறிப்பு 77 பார்க்க.

113 சதோவாச் சண்டை 1866 ஜூலை 3ல் நடைபெற்றது. ஆஸ்திரியாவை எதிர்த்து பிரஷ்யா வெற்றியுறுவதில் இது முடிந்தது, ஆஸ்திரிய-பிரஷ்ய போரின் முடிவை நிர்ணயித்தது.

பக்கம் 317

114 ருஷ்யாவில் பண்ணை அடிமை முறை 1861ல் ஒழிக்கப்பட்டது.

பக்கம் 319

115 இங்கு குறிப்பிடப்படுவது 1919ல் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யின் எட்டாவது காங்கிரசில் ஏற்கப்பட்ட கட்சியின் வேலைத்திட்டம்.

பக்கம் 323

116 குறிப்பு 98 பார்க்க.

117 தெனிக்கினை எதிர்த்து முழுவேகப் போராட்டம் எனும் கடிதம் லெனினுல் எழுதப்பட்டது. 1919 ஜூலை 3-4ல் நடந்த ரு.க.க.(போ)இன் பிளீனம் கூட்டத்தின் முடிவுகள் சம்பந்தமாக இது எழுதப்பட்டது. இக்கூட்டம் புதிய ஏகாதிபத்தியப் போர் வினைகளால் சோவியத் குடியரசு

எதிரிட நேர்ந்த பிரதானப் பிரச்சினைகளை விவாதித்தது.

பக்கம் 335

118 ருஷ்யாவின் புத்துயிர்ப்பு கழகம்—*1918*ல் நிறுவப்பட்ட ஓர் எதிர்ப்புரட்சி அமைப்பு. இதில் காடேட்டுகள், ''மக்கள் சோஷலிஸ்டுகள்'', வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷிவிக்குகள் இருந்தார்கள். இதற்கு வெளிநாட்டு தூதரகங்களுடனும் உளவு சேவை அமைப்புகளுடனும் நேரடியான தொடர்புகள் இருந்தன.

பக்கம் 353

பெயர்க் குறிப்பகராதி

அக்செல்ரோத் [Axelrod], பாவெல் பரீசவிச் *(1850-1928)*— மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது அமைதிவாதச் சொற் தொடர்களைத் திரையாகப் பயன்படுத்தி மெய்யாகவே ஒரு சமூக-தேசிய வெறி நிலை மேற்கொண்டார். 1917 பிப்ரவரி முதலாளித் துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். அவர் முத லாளித்துவ இடைக்கால அரசாங்கத்தை ஆதரித்தார். அக் டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் பால் பகைமையுடன் நடந்து கொண்டார். நாடு கடந்து வாழும் போது சோவி யத் ருஷ்யாவுக்கு எதிராய் ராணுவத் தலையீடு அவசியம் என்று பிரசாரம் செய்தார்.—*55, 65, 66, 150.*

அவ்க்சேன்தியெவ் [Avksentyev], நிக்கலாய் திமீத்ரியெவிச் *(1878-1943)* — சோஷலிஸ்டுப்-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். அக்கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பின் விவசாயிகள் பிரதிநிதிகளது அகில ருஷ்ய சோவியத்தின் செயற் குழுத் தலைவர். கேரென்ஸ்கி அர சாங்கத்தில் உள்துறை அமைச்சராக இருந்தார். பின்னல் எதிர்ப்புரட்சி ''ருஷ்ய குடியரசின் இடைக்காலக் கவுன் சிலின்'' தலைவராக இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சிக் கலகங்களை ஏற்பாடு செய்தார்; வெள்ளை வெளியேறியானுர்.—*127, 360.*

அ.மு.—*295, 300.*

ஆல்பர்ட்—எபர்லேன், ஹியூகோ பார்க்க.

எங்கெல்ஸ் [Engels], ஃபிரீட்ரிஹ் *(1820-1895)*—*14, 21, 23, 25, 26, 27, 30, 31, 43, 44, 49, 52, 58, 68, 89, 90,*

97, 103, 116, 156, 157, 159 160, 161, 163, 168, 195, 257, 258.

எபர்லேன் [Eberlein], ஹியூகோ (எம். ஆல்பர்ட்) *(1887-1944)*—ஜெர்மன் கம்யூனிஸ்டு. ஸ்பார்ட்டகஸ் கழகத்தின் தலைவருள் ஒருவர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் உறுப்பினர். கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது காங்கிரசில் பிரதிநிதியாக இருந்தார்.—*191, 192.*

ஒசின்ஸ்கி, என். (ஒபலேன்ஸ்கி, வலெரியான் வலெரியானவிச்) *(1887-1938)—1907* முதல் போல்ஷிவிக் கட்சியின் உறுப்பினர்.

அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சிக்குப் பின்னர் அரசு பணிகளிலும் கட்சி வேலையிலும் நிர்வாகத்திலும் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டவர். *1920-1921*ல் கட்சி விரோத ''ஜனநாயக மையவாதக்'' குழுவில் ஊக்கமாகப் பணியாற்றினார்; பின்னால் திரோத்ஸ்கிய எதிர்த்தரப்பில் சேர்ந்து கொண்டார்.—*187.*

ஒபலேன்ஸ்கி, வ.வ.—ஒசின்ஸ்கி, என். பார்க்க.

ஒஸ்த்ரகோர்ஸ்கி [Ostrogorsky], மி. யா. *(பி. 1854)*—முதலாளித்துவ வகைப்பட்ட மிதவாத பொதுவிவகார எழுத்தாளர், வழக்கறிஞர், முதல் அரசாங்க டூமா உறுப்பினர். “La démocratie et les partis politiques” (''ஜனநாயகமும் அரசியல் கட்சிகளும்'') எனும் நூலின் ஆசிரியர். இதில் அவர் ஆங்கில மற்றும் அமெரிக்க வரலாற்றில் இருந்து பல தகவல்களை முன்வைத்து முதலாளித்துவ ஜனநாயகத்தின் சாரத்தை வெளிப்படுத்தினார்.—*164.*

ஃபோஷ் [Foch], ஃபெர்டினாண்டு *(1851-1929)*—பிரெஞ்சு ராணுவ இயலாளர், மார்ஷல். முதல் உலகப் போரின் போது பிரெஞ்சு சேனைகளின் தளபதி, பிறகு பிரெஞ்சு இராணுவத் தலைமையகத் தலைவர், ஆன்டாண்டு ஆயுதப் படைகளின் பிரதம தளபதி. *1918-1920*ல் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீட்டைத் தீவிரமாக ஏற்பாடு செய்தவருள் ஒருவர். ஒன்றியத்தின் உயர் இராணுவக் கவுன்சிலின் தலைவர், வெர்சேய் உடன்படிக்கையின் கர்த்தாக்களில் ஒருவர்.—*318.*

கர்னீலவ் [Kornilov], லாவ்ர் கியோர்கியெவிச் *(1870-1918)*—ஜாரிஸ்டு ஜெனரல், முடியாட்சிவாதி. *1917* ஜூலை-ஆகஸ்டு மாதங்களில் ருஷ்யப் படைகள் எல்லாவற்றின் தலைவர். *1917* ஆகஸ்டு இடைக்கால அரசாங்கத்தைக்

கவிழ்த்து இராணுவச் சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான கலத்துக்குத் தலைமை தாங்கினுர். இக்கலகம் ஒடுக்கப்பட்ட பிறகு கைது செய்யப்பட்டார். ஆனுல் தப்பி தோன் பிரதேசத்திற்கு ஓடினுர். அங்கு வெண்காவலர் தொண்டர் படையினை நிறுவி அதன் தலைவருமானுர். எக்கதெரினதார் நகருக்கு அருகில் நடைபெற்ற இராணுவ மோதலில் கொல்லப்பட்டார்.—*77, 96, 125, 153.*

கலேதின் [Kaledin], அலெக்சேய் மக்சீமவிச் *(1861-1918)*— ஜாராட்சி ஜெனரல், தோன் கஸாக்குகள் தலைவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு தோன் பிரதேசத்தில் கஸாக்குகள் எதிர்ப்புரட்சித் தலைவருள் ஒருவர். வெண்காவலர் ''தொண்டர்'' படையினை உருவாக்குவதில் பங்கு பற்றினுர். கஸாக்குகள் கலகத்துக்குத் தலைமை தாங்கினுர்.—*71.*

கல்ச்சாக் [Kolchak], அலெக்சாந்தர் வசிலியெவிச் *(1873-1920)*—ஜார் காலத்திய கடற்படைத் தலைவர். முடியாட்சிவாதி. *1918-1919*ல் ருஷ்யாவில் இருந்த எதிர்ப்புரட்சியின் முக்கியத் தலைவருள் ஒருவர். ஆன்டான்டின் கையாள். அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சிக்குப் பிறகு அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்சின் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடன் ருஷ்யாவின் தலைமை அதிபதியாகத் தம்மைப் பிரகடனம் செய்து கொண்டு உரால், சைபீரியா, தொலைகிழக்குப் பகுதிகளில் ராணுவ முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரத்திற்கு தலைமை தாங்கினுர். செஞ்சேனையின் முன்னேற்றமும் புரட்சிகர கொரில்லா இயக்கமும் கல்ச்சாக்கின் எதிர்ப்புரட்சிக்கு முடிவு கட்டின. கல்ச்சாக் சிறைப்படுத்தப்பட்டுச் சுடப்பட்டார்.—*252, 281, 285, 294, 296, 300, 301, 335, 336, 339, 340, 341, 342, 343, 345, 346, 349, 350, 351, 352, 359, 361, 362, 364, 365.*

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் *(1854-1938)* — ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். தொடக்கத்தில் மார்க்சியவாதி, பிற்காலத்தில் மார்க்சியத்தைக் கைவிட்டு மிகவும் அபாயகரமான கேடுவிளைக்கும் சந்தர்ப்பவாத வகைப்பட்டமையவாதத்தின் சித்தாந்தவாதியானுர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பாட்டாளி வர்க்கப் புரட்சியையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும்,

போல்ஷிவிக் கட்சியையும் சோவியத் அரசையும் பகிரங்கமாக எதிர்த்தார்.—*7-165, 184, 185, 190, 257, 286, 290, 314, 324.*

கிரஸ்னேவ் [Krasnov], பியோத்தர் நிக்கலாயெவிச் (*1869-1947*)—ஜாரிஸ்டு ஜெனரல். *1917* ஆகஸ்டில் நடந்த கர்னீலவ் கலகத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார். *1917* அக்டோபர் இறுதியில் சோவியத் எதிர்ப்பு கலகத்தின் போது கேரென்ஸ்கியால் பெத்ரோகிராதுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கஸாக்கு படைப் பிரிவின் தளபதியாக இருந்தார். *1918-1919*ல் தோன் பிரதேசத்து எதிர்ப்புரட்சி கஸாக்குப் படைகளுக்குத் தலைமை தாங்கினர்.—*79, 85, 153.*

கிராபர் [Graber], எர்னேஸ்ட் போல் (பி. *1875*)—ஸ்விட்சர்லாந்து சமூக-ஜனநாயகவாதி. முதலாம் உலகப் போரின் துவக்கத்தில் சர்வதேசியவாதிகளுடன் சேர்ந்தார். *1917* ஆரம்ப முதல் ஒரு மையவாத-அமைதிவாத நிலை மேற்கொண்டார். *1918*ல் இறுதியாக ஸ்விட்சர்லாந்தின் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளுடன் சேர்ந்து கொண்டார்.—*92.*

கிரிம் [Grimm], ராபர்ட் (*1881-1958*)—ஸ்விட்சர்லாந்து சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது மையவாதி. மையவாத இரண்டரை அகிலத்தின் நிறுவகர்களில் ஒருவர்.—*92.*

கிளெமன்சோ [Clemanceau], ஜார்ஜ் பென்ஜமென் (*1841-1929*)—பிரெஞ்சு அரசியல்வாதி, அரசு அறிஞர். *1906-1909* மற்றும் *1917-1920* ஆண்டுகளில் பிரெஞ்சு அரசாங்கத்தின் தலைவராக இருந்தார். முதல் உலகப் போரின் போது தீவிர தேசியவெறி நிலை மேற்கொண்டார். சோவியத் குடியரசுக்கு எதிராக முற்றுகை மற்றும் தலையீட்டை ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர்.—*33, 100.*

கெட்டு [Guesde], ழூல் (*1845-1922*)—பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கம் மற்றும் இரண்டாவது அகிலத்தின் நிறுவகர்கள், தலைவர்களில் ஒருவர். முதலாம் உலகப் போரின் துவக்கத்தின் முதல் சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டார், பிரான்சில் இருந்த முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்துகொண்டார். *1920*ல் அகிலத்துடன் சேருவது என்ற முடிவை எடுத்த பிரெஞ்சு சோஷலிஸ்டு கட்சியின் டூர் காங்கிரசில் பெரும்பான்மையுடன் சேராமல் விலகி நின்றார்.—*163.*

கேரென்ஸ்கி [Kerensky], அலெக்சாந்தர் ஃபியோதரவிச் *(1881-1970)*—ருஷ்யாவின் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ இடைக் கால அரசாங்கத்தில் நீதி, இராணுவ மற்றும் கடற்படை அமைச்சராகவும் பிற்பாடு தலைமை அமைச்சராகவும் உச்சப் படைத் தலைவராகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் சோவியத் ஆட்சிக்கு எதி ராகப் போராடினார், *1918*ல் வெளிநாடுகளுக்கு ஓடிவிட் டார்.—*77, 93, 96, 98, 125, 127, 152, 192.*

கோகல் [Gogol], நிக்கலாய் வசீலியெவிச் *(1809-1852)*—மாபெரும் ருஷ்ய எழுத்தாளர்.—*78.*

கோம்பர்ஸ் [Gompers], சமுவெல் *(1850-1924)*—அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கத்தின் சந்தர்ப்பவாதத் தலைவருள் ஒருவர். அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனத்தின் நிரந்தரத் தலைவர்களில் ஒருவர். முதலாளிகளுடன் வர்க்க ஒற்றுமை கோரும் கொள்கையை ஆதரித்தார். புரட்சி கரத் தொழிலாளர் போராட்டத்தை எதிர்த்தார். அக் டோபர் புரட்சியின் பாலும் சோவியத் அரசிடத்தும் பகைமையுடன் நடந்து கொண்டார்.—*101.*

கொலிகாயெவ் [Kolegayev], அந்திரேய் லுக்கிச் *(1887-1937)*—இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர். *1917* டிசம்ப ரில் விவசாயத் துறை மக்கள் கமிசாராக சோவியத் அர சாங்கத்தில் பிரவேசித்தார். *1918* மார்ச்சில் பிரேஸ்த் உடன்படிக்கையில் கையொப்பமிட்டது பற்றிய கருத்து வேற்றுமை காரணமாக மக்கள் கமிசாரவையில் இருந்து விலகினர். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கலகம் அடக்கப்பட்ட பிறகு இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியா ளர் கட்சியில் இருந்து வெளியேறி போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தார். *1920*ல் போக்குவரத்து துறை மக்கள் கமி சாரகத்தின் தலைவர்களில் ஒருவர்.—*118.*

கோல்ப் [Kolb], வில்ஹெல்ம் *(1870-1918)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. சந்தர்ப்பவாதியும் திருத்தல்வாதியுமா வார். முதல் உலகப் போரின் போது சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டார்.—*89.*

க்ருப் [Krupp]—பெரிய தொழிலதிபர் குடும்பம். ஜெர்மனியில் இராணுவ-உலோகத்துறை தொழில் நிறுவனத்தின் தலை மை உரிமை கொண்டது. ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின்

பிரதான ஆயுதக் களஞ்சியங்களில் ஒன்று இந்த நிறுவனம்.—*33*.

சாவின்கவ் [Savinkov], **பரீஸ் வீக்தரவிச்** *(1879-1925)*— சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சித் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் உதவி இராணுவ அமைச்சர், பிறகு பெத்ரோகிராதின் கவர்னர் ஜெனரல். அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சிக் கலகங்களை ஏற்பாடு செய்தார், சோவியத் குடியரசுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீட்டுக்கு உதவி புரிந்தார். வெள்ளை வெளியேறியானுர்.—*84, 125*.

சான்-சிமோன் [Saint-Simon], **அன்ரி குளோட்** *(1760-1825)*— மாபெரும் பிரெஞ்சு கற்பனுவாத சோஷலிஸ்டு.—*163*.

சுனீத்ஸா [Sunitsa], **எல்.பி.** *(பி. 1887)*—*1905* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சிக்குப் பிறகு கட்சிப் பணி மற்றும் ஆசிரியர் பணி புரிந்து வந்தார்.—*230*.

செர்னென்கோவ் [Chernenkov], **பி.என்.** *(பி. 1883)*—*1903* முதல் சோஷலிஸ்டு-புரட்சியாளர். அரசியல் நிர்ணய சபை உறுப்பினர், *1918*ல் ஊஃபா அரசு மாநாட்டில் கலந்து கொண்டார். ஊஃபா எதிர்ப்புரட்சி நிர்வாகத்தில் விவசாயத் துறை அமைச்சர். *1919*ல் ''மக்கள்'' எனும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் பிரிவுடன் சேர்ந்தார்.—*333*.

செர்னேவ் [Chernov], **வீக்தர் மிஹாய்லவிச்** *(1876-1952)*— சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவருள், தத்துவாளருள் ஒருவர். *1917* மே-ஆகஸ்டு கட்டத்தில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் விவசாயத் துறை அமைச்சராக இருந்தார். நிலப்பிரபுக்களின் நிலங்களை எடுத்துக் கொண்ட விவசாயிகளை எதிர்த்து மூர்க்கமான அடக்கு முறைக் கொள்கையை அமுல் நடத்தினுர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் எதிர்ப்பு கலகங்களை ஏற்பாடு செய்தார். *1920*க்குப் பிறகு நாடுகடந்த வெண்காவலர்.—*351, 360*.

டான் (கூர்விச்) [Dan (Gurvich)], **ஃபியோதர் இலீச்** *(1871-1947)*—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டித் தலைவராகவும் மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைமைக் குழு உறுப்

பினராகவும் இருந்தார். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தை ஆதரித்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராடினர்.—*240*.

டிரைஃபஸ் [Dreyfus], ஆல்ஃபிரேட் *(1859-1935))*—பிரெஞ்சு இராணுவத் தலைமை அகத்தின் அதிகாரி. அரசுத் துரோகப் பொய்க் குற்றம் சாட்டப்பட்டு 1894ல் கடுங்காவல் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார். இதை எதிர்த்து பிரெஞ்சு நாட்டின் ஜனநாயகப் பகுதியினர் நடத்திய பரவலான இயக்கத்தின் விளைவாய் 1899ல் இவர் விடுதலை செய்யப்பட்டார். 1906ல் தம் பதவியையும் உரிமைகளையும் திரும்பப் பெற்றுர்.—*34, 174*.

டுராட்டி [Turati], ஃபிலிப்போ *(1857-1932)*—இத்தாலியத் தொழிலாளர் இயக்கத்தில் பங்கு பற்றியவர். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் ஒருவர், அதன் வலதுசாரி சீர்திருத்தவாதப் பிரிவின் தலைவர். முதல் உலகப் போரின் போது மையவாதி. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் பால் பகைமையுடன் நடந்து கொண்டார். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியில் பிளவு ஏற்பட்ட பிறகு *(1922)* சீர்திருத்தவாத யூனிட்டாரி சோஷலிஸ்டுக் கட்சிக்குத் தலைமை தாங்கினர்.—*92, 93, 98, 101, 102*.

தல்ஸ்த்தோய் [Tolstoy], லேவ் நிக்கலாயெவிச் *(1828-1910)*—மாபெரும் ருஷ்ய எழுத்தாளர்.—*99*.

தியாச்செங்கோ [Dyachenko], அந்திரேய் பாவ்லவிச் *(1875-1952)*—*1917* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். *1919* மாஸ்கோ-கஸான் ரயில் பாதை அமைப்பில் டாக்டரின் உதவியாளராக இருந்தார். உள்நாட்டுப் போருக்குப் பிறகு அல்தாயில் பொது சுகாதார சேவைத் துறையில் பணி புரிந்தார்.—*303*.

தூத்தவ் [Dutov], அலெக்சாந்தர் இலிச் *(1864-1921)*—ஜாராட்சி கர்னல், ஒரென்பர்க் கஸாக்குகளின் தலைமையாளர். கஸாக் எதிர்ப்புரட்சியின் தலைவருள் ஒருவர்.—*79, 151, 143*.

தெனீக்கின் [Denikin], அந்தோன் இவானவிச் *(1872-1947)*—ஜாராட்சியில் ஜெனரல், வெளிநாட்டு இராணுவ தலையீடு, உள்நாட்டுப் போரின் போது *(1918-20)* வெண்காவலர் இயக்கத்தின் தலைவருள் ஒருவர், தெற்கு ருஷ்யாவில்

சோவியத் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த ஆயுதப் படைகளின் பிரதம தளபதியானார். சோவியத் ராணுவத்தால் அவை முறியடிக்கப்பட்ட பிறகு அவர் வெளிநாடு சென்றார்.—*294, 335-354.*

தெஸெரெத்தேலி [Tsereteli], **இராக்லி கியோர்கியெவிச்** *(1882-1959)*—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1917 மேயில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சரானார், முதலில் தபால் தந்தித் துறை அமைச்சராகவும் பிறகு உள்விவகாரத் துறை அமைச்சராயும் இருந்தார். போல்ஷிவிக்குகளுக்கு எதிரான கொடிய அடக்குமுறையைத் தூண்டியோரில் ஒருவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின்பு ஜார்ஜியாவில் மென்ஷிவிக்குகளின் எதிர்ப்புரட்சி அரசாங்கத்தின் தலைவர்களில் ஒருவர். ஜார்ஜியாவில் சோவியத் ஆட்சி அதிகாரம் வெற்றியடைந்த பிறகு நாடு கடந்த வெண்காவலர் ஆனார்.—*127.*

நிக்கலாய் இரண்டாவது (ரமானவ்) [Nickolas II (Romanov)] *(1868-1918)*—ருஷ்யாவின் கடைசி பேரரசர். 1894 முதல் 1917 பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி வரை அரசாண்டார்.—*149.*

நேன் [Naine], **ஷார்ல்** *(1874-1926)*—ஸ்விட்சர்லாந்து சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவருள் ஒருவர். முதல் உலகப் போரின் துவக்கத்தில் சர்வதேசியவாதியாகவும், பின்னர் மையவாதியாகவும் இருந்தார். பின்னல் ஸ்விட்சர்லாந்து சமூக-ஜனநாயகவாதிகளின் வலதுசாரிகளை ஆதரித்தார். 1919ல் இரண்டாம் அகிலத்தை மீட்டமைத்தலை ஆதரித்து முன்வந்தார். 1919-1921ல் மையவாத இரண்டரையாம் அகிலத்தை நிறுவுவதில் பங்கேற்றார்.—*92.*

நோப்ஸ் [Nobs], **எர்னேஸ்டு** *(1886-1957)*—ஸ்விட்சர்லாந்து சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவருள் ஒருவர். முதல் உலகப் போரின் போது சர்வதேசியவாதியாக இருந்தார். 1917ல் மையவாத-அமைதிவாத நிலை மேற்கொண்டார். இருபதாம் ஆண்டுகளில் ஸ்விட்சர்லாந்து சமூக-ஜனநாயகவாதிகளின் வலதுசாரிகளுக்கு ஆதரவாக இருந்தார்.—*92.*

பத்பேல்ஸ்கி [Podbelski], **வதீம் நிக்கலாயெவிச்** *(1887-1920)*—சோவியத் அரசியலாளர், கட்சி ஊழியர். 1918 மே மாதம் முதல் ரு.சோ. கூ.சோ. குடியரசில் தபால் தந்தித் துறை மக்கள் கமிசாராக இருந்தார்.—*229, 240.*

பத்ரேசவ் [Potresov], **அலெக்சாந்தர் நிக்கலாயெவிச்** *(1869-1934)*—மென்ஷிவிக் தலைவருள் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு நாடு கடந்து சென்றார். வெளிநாட்டில் இருந்த போது சோவியத் ருஷ்யாவை எதிர்த்தார்.—*84.*

பியாத்தக்கோவ் [Pyatakov], **கியோர்கி லியொனீதவிச்** *(1890-1937)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, போல்ஷிவிக்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியைத் தொடர்ந்து உக்ரேனிய சோவியத் அரசாங்கத்தின் உறுப்பினர். 1920 முதல் அரசாங்க நிர்வாகப் பதவிகள் வகித்தார். மீண்டும் மீண்டும் கட்சியின் லெனினியக் கொள்கையை எதிர்த்தார். அதற்காக கட்சி அணிகளில் இருந்து விலக்கப்பட்டார்.—*230, 240, 241, 242, 245.*

பிரான்டிங் [Branting], **கார்ல் யால்மார்** *(1860-1925)*—ஸ்வீடன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர். இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர், சந்தர்ப்பவாதி. முதல் உலகப் போரின் போது சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டார். சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான இராணுவத் தலையீட்டை ஆதரித்தார். பல முறை சமூக-ஜனநாயக அரசாங்கத்தின் தலைமையில் இருந்தார்.—*182.*

பிரெண்டானோ [Brentano], **லூஜோ** *(1844-1931)*—ஜெர்மன் முதலாளித்துவ பொருளியலாளர், ''அரசாங்க சோஷலிசத்தின்'' ஆதரவாளர். வர்க்கப் போராட்டத்தை நிராகரிப்பதை ஆதரித்தார், சீர்திருத்தங்கள் மூலமும் முதலாளிகள் மற்றும் தொழிலாளர் நலன்களைச் சமரசப்படுத்தியும் முதலாளித்துவத்தின் கட்டுக்கோப்புக்குள்ளேயே சமுதாய சமத்துவத்தை அடைய முடியும் என்று நிரூபிக்க முயன்றார், முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்குத் தொழிலாளி வர்க்க இயக்கத்தை அடிப்படுத்த முயன்றார்.—*8.*

பிளாங் [Blanc], **லூயி** *(1811-1882)*—ஒரு பிரெஞ்சு குட்டி முதலாளித்துவ சோஷலிஸ்டு, வரலாற்றாசிரியர். 1848 பிரெஞ்சுப் புரட்சியின் போது இடைக்கால அரசாங்கத்தில் பதவி ஏற்று ''தொழிலாளர் பிரச்சினை பற்றி ஆய்வு செய்யும்'' கமிஷன் தலைவரானார். அவரது இணக்கப்படுத்தும் நடைமுறைத் தந்திரங்கள் தொழிலாளர்களை புரட்சிகரப் போராட்டத்தில் இருந்து திசை திருப்புவதற்கு முதலாளித்துவ வர்க்கத்துக்கு உதவின.—*25.*

பிளாட்டன் [Platten], **ஃபிரீட்ரிஹ் (ஃபிரிட்ஸ்)** *(1883-1942)*— ஸ்விஸ் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதி, பின்னல் கம்யூனிஸ்டு ஆனர். முதல் உலகப் போரின் போது சர்வதேசிய வாதி நிலை மேற்கொண்டார். ஸிம்மர்வால்டு, கிந்தால் சோஷலிஸ்டு மாநாடுகளில் கலந்து கொண்டு ஸிம்மர்வால்டு இடதுசாரிகளை ஆதரித்தார். 1919ல் மூன்ருவது கம்யூனிஸ்டு அகிலத்தை நிறுவும் பணியில் பங்கேற்ருர். ஸ்விஸ் கம்யூனிஸ்டுக் கட்சியின் அமைப்பாளரில் ஒருவர், 1921-23ல் அதன் செயலாளர்.—*191, 192.*

பிளெஹானவ் [Plekhanov], **கியோர்கி வலென்தீனவிச்** *(1856-1918)*—ருஷ்யாவின் மற்றும் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலை சிறந்த தலைவர். ருஷ்யாவில் மார்க்சியத்தின் முதல் பிரசாரகர். ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு (1903) சந்தர்ப்பவாதத்துடன் சமரச நிலை மேற்கொண்டார், பிறகு மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்தார். முதல் உலகப் போரின் போது சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக் பாதுகாப்புவாதிகளின் தீவிர வலதுசாரிப் பிரிவான ''யெதீன்ஸ்த்வோ''வுக்குத் தலைமை வகித்தார். ருஷ்யா சோஷலிசத்துக்குரிய பக்குவம் பெறவில்லை என்று கருதி சோஷலிஸ்டுப் புரட்சிக்குத் தயார் செய்து வந்த போல்ஷிவிக்குகளை எதிர்த்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியை அவர் ஏற்கவில்லை. ஆனல் சோவியத் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் எவ்விதப் பங்கும் கொள்ளவில்லை.—*8, 69, 90, 115.*

பிஸ்மார்க் [Bismark], **ஓட்டோ எடுவார்ட் லியப்போல்ட்** *(1815-1898)*—பிரஷ்ய, ஜெர்மன் அரசுத்துறையாளர், அரசுறவாளர், 1871-1890ஆம் ஆண்டுகளில் ஜெர்மன் பேரரசின் சான்ஸலர். பிரஷ்யாவின் மேலாதிக்கத்தின் கீழ் தனிப்பட்டு இருந்த ஜெர்மன் அரசுகளை தனி ஒரு ஜெர்மன் சாம்ராஜ்யமாக ஒன்றிணைத்தார்.—*78.*

புஹாரின் [Bukharin], **நிக்கலாய் இவானவிச்** *(1888-1938)*—ருஷ்யப் பொதுத்துறை எழுத்தாளர், பொருளியலாளர். 1906லிருந்து ரு.ச.ஜ.தொ. கட்சியின் உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பிராவ்தா ஆசிரியராகவும், மத்தியக் கமிட்டியின் அரசியல் குழுமத்தின் உறுப்பினராயும் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினராகவும் இருந்தார். கட்சியின் லெனினியக்

கொள்கையைத் திரும்பத் திரும்ப எதிர்த்தார். *1918*ல் கட்சி எதிர்ப்பு "இடதுசாரி கம்யூனிஸ்டுகள்" குழுவின் தலைவர். தொழிற்சங்கங்கள் பற்றிய விவாதத்தின் போது *(1920-1921)* முதலில் "இடைப்பட்ட" நிலை எடுத்து பின்னர் திரோத்ஸ்கியின் குழுவுடன் சேர்ந்தார். *1928* முதல் வலதுசாரி எதிர்க்கட்சியின் தலைவராக இருந்தார். *1937*ல் கட்சிக்குப் பகைமையான நடவடிக்கைகளுக்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—*194, 196, 198, 199, 202, 203, 204, 205, 228, 229, 241.*

புரோஷ்யான் [Proshian], புரோஷ் பேர்ச்செவிச் *(1883-1918)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர். *1917* டிசம்பரில் தபால் தந்தித்துறை மக்கள் கமிசாராக மக்கள் கமிசாரவையில் இடம் பெற்ருர். *1918* மார்ச்சில் பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது பற்றி எழுந்த கருத்து வேற்றுமை காரணமாக பதவி விலகினுர். மாஸ்கோவில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கலகத்தில் கலந்து கொண்டார்.—*127.*

பெபெல் [Bebel], ஔகுஸ்ட் *(1840-1913)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகம் மற்றும் இரண்டாம் அகிலத்தின் முக்கியமான தலைவர்களில் ஒருவர். *1890*ஆம் ஆண்டுகளிலும், *1900*ஆம் ஆண்டுகளின் துவக்கத்திலும் ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தில் நிலவிய சீர்திருத்தப் போக்கையும் திருத்தல்வாதத்தையும் எதிர்த்தார். ஆற்றல் மிக்க ஒழுங்கமைப்பாளர், பொது விவகார எழுத்தாளரான அவர் ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் மாபெரும் செல்வாக்குச் செலுத்தினுர்.—*31, 68, 79, 86, 103.*

பெர்ன்ஷ்டைன் [Bernstein], எடுவார்ட் *(1850-1932)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகம் மற்றும் இரண்டாம் அகிலத்தின் கடைக்கோடி சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர், சீர்திருத்தப் போக்கு மற்றும் திருத்தல்வாதத்தின் சிந்தாந்தவாதி. முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதை ஆதரித்தார். "இயக்கமே சர்வமும் இறுதி நோக்கம் எதுவும் இல்லை" என்ற சந்தர்ப்பவாத கோஷத்தை முன்வைத்தார். முதல் உலகப் போரின் போது தமது சமூக-தேசியவெறியை சர்வதேசியத் தொடர்களால் மூடி மறைத்து ஒரு மையவாதி நிலை மேற்கொண்டார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியையும் சோவியத் அரசையும் எதிர்த்தார்.—*12, 28, 89.*

பௌவர் [Bauer], ஓட்டோ *(வேபெர், ஹென்ரி) (1882-1938)*—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகம் மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவருள் ஒருவர். ''ஆஸ்திரோ-மார்க்சியம்'' எனப்படுவதன் சித்தாந்தவாதி. இது மார்க்சிய சொல்லடுக்கின் கீழ் புரட்சிகர மார்க்சியமும் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டமும் நிராகரிக்கப்படுவதை மூடிமறைத்தது.—*121*.

மாக்டொனல்டு [MacDonald], ஜேம்ஸ் ராம்சே *(1866-1937)*—பிரிட்டிஷ் அரசியலாளர், சுயேச்சை தொழிற் கட்சி மற்றும் தொழிற் கட்சியின் நிறுவகர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். மிகு சந்தர்ப்பவாதக் கொள்கையினைக் கடைப்பிடித்தவர். வர்க்க ஒத்துழைப்பு மற்றும் முதலாளித்துவமே படிப்படியாக சோஷலிசமாக வளர்ந்து வருவது பற்றிய தத்துவத்தைப் பிரசாரம் செய்தார். *1918-1920*ல் சோவியத் விரோத தலையீட்டை எதிர்த்து முன்வந்த ஆங்கிலத் தொழிலாளர்களின் போராட்டத்தைத் தடங்கல் செய்ய முயன்றார். *1927*ல் மற்றும் *1929-31*ல் பிரதம மந்திரியாக இருந்தார்.—*87, 88, 92, 112, 121*.

மாய்ஸ்கி [Maisky], இவான் மிஹாய்லவிச் *(1884-1975)*—சோவியத் அரசுறவாளர், வரலாற்றாசிரியர், பேரவை அறிஞர். *1903* முதல் ரு.ச.ஜ.தொ. கட்சி உறுப்பினர், *1918* வரையில் மென்ஷிவிக். *1921*ல் மென்ஷிவிக்குகளை விட்டு விலகி ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யின் உறுப்பினரானார். *1922*க்குப் பிறகு அரசுறவுத் துறைப் பதவிகள் வகித்தார்.—*351*.

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818-1883)—10-28, 30, 31, 42, 43, 44, 52, 53, 58, 68, 69, 81, 89, 90, 97, 103, 107, 116, 124, 145, 146, 156, 157, 159, 160, 161, 168, 169, 182, 199, 248, 253, 257, 289, 291, 313, 324*.

மார்த்தவ், லே. (ஸெதர்பாவும், யூலி ஓசிப்பவிச்) [Martov, L. (Tsederbaum)] *(1873-1923)*—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது மையவாதி. *1917* பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பின் தொழிலாளர், படையாளிகள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியை

எதிர்த்தார். *1920*ல் அவர் நாடுவிட்டு ஜெர்மனிக்குச் சென்றார்.—*55, 56, 60, 62, 314, 361.*

மாஸ்லவ் [Maslov], பியோத்தர் பாவ்லவிச் *(1867-1946)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, பொருளியலாளர். நிலப் பிரச்சினை குறித்துப் பல நூல்கள் எழுதினர். அவற்றில் மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைத் திருத்தல் செய்ய முயன்றார்.—*116, 119, 127, 141, 142, 145.*

மாஸ்லவ் [Maslov], ஸெமியோன் லியோன்தியெவிச் *(பி. 1873)*—வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர். *1917* செப்டம்பர்-அக்டோபரில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் விவசாயத்துறை அமைச்சர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பொருளாதார மற்றும் விஞ்ஞான அமைப்புகளில் பணி புரிந்தார்.—*127, 132, 142.*

மில்யுக்கோவ் [Milyukov], பாவெல் நிக்கலாயெவிச் *(1859-1943)*—காடேட்டுகள் கட்சியின் நிறுவகர்கள் மற்றும் தலைவர்களில் ஒருவர். *1917*ல் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் அயல் விவகாரத் துறை அமைச்சர். ஏகாதிபத்தியப் போரை ''வெற்றிகரமான முடிவுக்குக்'' கொண்டு வரும் கொள்கையைக் கடைப்பிடித்தார். *1917* ஆகஸ்டில் கர்னீலவ் கலகத்துக்கு ஊக்கமளித்தவருள் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக ஆயதமேந்திய தலையீட்டை ஏற்பாடு செய்வதில் பங்கேற்றார்.—*77.*

முரவியோவ் [Muraviyev], மி.அ. *(1880-1918)*—ஜாராட்சி அதிகாரி. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளருடன் சேர்ந்தார். *1918* ஜூலையில் கிழக்குப் போர் முனை சேனைத் தலைவராக இருந்த போது சோவியத் ஆட்சிக்கு துரோகம் செய்து சேனையில் கலகம் ஏற்படுத்த முயன்றார். இச்சதி கண்டு பிடிக்கப்பட்டு ஒழிக்கப்பட்டது.—*127, 361.*

மேங்கர் [Menger], அந்தோன் *(1841-1906)*—ஆஸ்திரிய வழக்கறிஞர். ''சட்டம் சார்ந்த சோஷலிசம்'' எனப்படுவதன் பிரதிநிதி. இது முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதில் சட்டம் சார்ந்த அமைப்பு முறையினை வகுத்திடும் நோக்கம் கொண்டதாக இருந்தது.—*163.*

யாக்கபி [Jacoby], யோஹன் *(1805-1877)*—ஜெர்மன் பொது விவகார எழுத்தாளர், அரசாளர், முதலாளித்துவ ஜன நாயகவாதி. அறுபதாம் ஆண்டுகளில் ''முற்போக்காளர்'' கட்சியின் பக்கம் ஆதரவாக இருந்தார், பிஸ்மார்க்கின் கொள்கையை மறுத்தார். 1872ல் சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தார். யாக்கபி ஒரு மார்க்சியவாதி அல்ல. ஆனால் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் பல பிரச்சினைகளில் அவருடன் வேறுபட்டார்கள் ஆயினும் அவரை ஒரு ஜனநாயக வாதி என்ற முறையில், பாட்டாளி வர்க்க இயக்கத்துடன் ஆதரவு கொண்டிருந்தார் என்ற முறையில் உயர்வாக மதித்தார்கள்.—*317*.

ரிஹ்டர் [Richter], எவ்கேனி *(1838-1906)*—ஜெர்மனியின் ''சுதந்திர சிந்தனையாளர் கட்சியின்'' தலைவருள் ஒருவர். இக்கட்சி மிதவாத முதலாளிகளின், சோஷலிசத்தின் எதிரிகளின் கருத்துக்களை பிரதிபலித்தது. இவர் எழுதிய *Sozial—demokratische Zukunftsbilder* (''எதிர் காலம் குறித்த சமூக-ஜனநாயக சித்திரங்கள்'') எனும் நூல் சமூக-ஜனநாயகவாதிகளை எதிர்ப்பதாகும். இந்த நூலில் ''சிக்கன அக்னிஸ்'' கதையைக் கூறும் ரிஹ்டர் தொழிலாளர், முதலாளிகள் சமத்துவத்தை நிரூபிக்க முயல்கிறார்.—*86*.

ரீக்கவ் [Rykov], அலெக்சேய் இவானவிச் *(1881-1938)*—ருஷ்யாவின் சமூக-ஜனநாயகக் கட்சியில் 1899ல் சேர்ந்து கொண்டார்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பல முக்கியமான அரசாங்கப் பதவிகளை வகித்தார். கட்சியின் மத்தியக் கமிட்டி அரசியல் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார். திரும்பத் திரும்ப கட்சியின் லெனினியக் கொள்கையை எதிர்த்து வந்தார். கட்சி விரோத செயற்பாடுகளுக்காக 1937ல் கட்சியிலிருந்து தள்ளப்பட்டார்.—*233, 234*.

ரெனௌடேல் [Renaudel], பியேர் *(1871-1935)*—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது சமூக-தேசியவெறியர். 1914-1920ல் *L'Humanité* (''மனித குலம்'') பத்திரிகையின் ஆசிரியர். 1914-1919லும் 1924லும் நாடாளுமன்ற உறுப்பினர்.—*33, 87, 101, 112*.

ரோட்பெர்டஸ்-யாகெட்ஸோவ் [Rodbertus-Jagetzow], இயோஹான் கார்ல் *(1805-1875)*—ஜெர்மன் விஞ்ஞானக் கேடான

பொருளியலாளர், அரசியலாளர். பிரஷ்ய ''அரசு சோஷலிசத்தின்'' பிற்போக்குக் கருத்துக்களின் ஆதர வாளர்.—*145*.

லிட்ரே [Littre], எமீல் *(1801-1881)*—பிரெஞ்சு முதலாளித் துவ வகைப்பட்ட தத்துவவியலாளர், கதம்பவாதி. *Dictionnaire de la langue française* (''பிரெஞ்சு மொழி அகராதி'')யின் ஆசிரியர். இதன் முதல் பதிப்பு 1863-1877ல் வெளியிடப்பட்டது.—*160*.

லிபெர் (கோல்ட்மன்) [Liber (Goldman)], மிஹயீல் இஸாக்கவிச் *(1880-1937)*—பூந்த் தலைவருள் ஒருவர். அக்டோபர் புரட்சி மீது பகைமையுணர்வு தோற்றுவித்தவர். சோவியத் ஆட்சியின் கடுமையான விரோதி. பின்னாட்களில் அர சியல் நடவடிக்கைகளை கைவிட்டு நிர்வாகப் பதவி வகித் தார்.—*84*.

லீப்க்னெஹ்ட் [Liebknecht], கார்ல் *(1871-1919)*—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலை சிறந்த பிரமுகர். ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் இடதுசாரி பிரிவின் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது புரட்சிகர சர்வதேசியவாதி. ஸ்பார்ட்ட கஸ் பிரிவின் அமைப்பாளர் மற்றும் தலைவருள் ஒருவர். 1918 நவம்பர் புரட்சியின் போது ஜெர்மனியில் ரோஸா லுக்சம்பர்குடன் சேர்ந்து தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி கர முன்னணிப்படையின் தலைவராக விளங்கினார். ஜெர் மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் ஒருவர். 1919 பெர்லின் தொழிலாளர் புரட்சி எழுச்சியின் தலைவர்களில் ஒருவர். இந்தப் புரட்சி எழுச்சி ஒடுக்கப்பட்ட பிறகு லீப்க் னெஹ்ட் எதிர்ப்புரட்சியாளர்களால் மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டார்.—*109, 110, 175*.

லுக்சம்பர்க் [Luxemburg], ரோசா *(1871-1919)*—ஜெர்மனி, போலந்து மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக் கத்தில் முக்கியப் பிரமுகர். இரண்டாம் அகிலத்தின் இடது சாரி பிரிவின் தலைவருள் ஒருவர். ஸ்பார்ட்டகஸ் பிரிவின் அமைப்பாளர்களில் ஒருவர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி யின் நிறுவகர்களில் ஒருவர். ஜெர்மனியின் 1918 நவம் பர் புரட்சியின் போது தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி கர முன்னணிப்படையின் தலைவராக விளங்கினார். 1919 ஜனவரியில் எதிர்ப்புரட்சியாளரால் கைதுசெய்யப்பட்டு கொல்லப்பட்டார்.—*27, 175*.

லெனின் (உலியானவ்) [Lenin (Ulianov)], விளதீமிர் இலீச் (லெனின் நி.) *(1870-1924)—7, 9, 65, 149, 198.*

லொங்கே [Longuet], மூான் *(1876-1938)*—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி மற்றும் இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியில் இருந்த மையவாத-அமைதிவாதச் சிறுபான்மைக்குத் தலைமை தாங்கினர். பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி அகிலத்தோடு சேருவதையும், பிரான்சில் கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவப்படுவதையும் எதிர்த்தார். *1921* முதல் இரண்டரையாம் அகிலத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர். *1923* முதல் சோஷலிஸ்டு தொழிலாளர் அகிலம் எனப்படுவதன் தலைவர்களில் ஒருவர்.—*33, 87, 88, 92, 93, 98, 101, 102, 110, 112, 121.*

வண்டர்வேல்டு [Vandervelde], எமீல் *(1866-1938)*—பெல்ஜிய தொழிலாளர் கட்சித் தலைவருள் ஒருவர், இரண்டாம் அகிலத்தின் சர்வதேசச் சோஷலிசக் குழுவின் தலைவர், சந்தர்ப்பவாதி. முதல் உலகப் போரின் போது சமூக-தேசிய வெறியராகி, பெல்ஜிய முதலாளித்துவ அரசாங்கத்தில் அமைச்சரானுர். அக்டோபர் புரட்சிக்குப் பகைமையாளராக இருந்தார்; சோவியத் ருஷ்யாவை எதிராக ஏற்பட்ட ஆயுதமேந்திய தலையீட்டுக்கு ஆக்கபூர்வமாக உதவி செய்தார்.—*155-165.*

வில்சன் [Wilson], வுட்ரோ *(1856-1924)—1913-1921*ஆம் ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனதிபதி. சோவியத் ருஷ்யாவை எதிர்த்து அன்னியத் தலையீட்டைத் தூண்டியவர்.—*207, 244.*

வில்ஹெல்ம் [Wilhelm], இரண்டாவது (ஹோஹன்ஸோலர்ன்) *(1859-1941)* — ஜெர்மன் பேரரசர், பிரஷ்யாவின் மன்னர் *(1888-1918)—100.*

வெப்பு [Webb] பியாட்ரீஸ் *(1858-1943)*, **ஸிட்னேய்** *(1859-1947)*—ஆங்கில அரசியலாளர்கள், சீர்திருத்தவாதிகள்; ஃபேபியன் கழகத்தின் நிறுவகர்கள். ஆங்கிலத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாறு மற்றும் தத்துவம் குறித்த பல நூல்களின் ஆசிரியர்கள். முதல் உலகப் போரின் போது *(1914-1918)* சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டார்கள்.—*33.*

வேபெர், ஹென்ரிஹ்—பௌவர், ஒட்டோ பார்க்க.

வைத்லிங் [Weitling], வில்ஹெல்ம் *(1808-1871)*—ஜெர்மன் தையல் தொழிலாளி, ஆரம்ப நாட்களில் ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கியமாக இருந்தார், கற்பனாவாத ''சமத்துவவாத'' கம்யூனிசத்தின் தத்துவாசிரியர். ''நீதியாளர் சங்கத்''தின் தீவிர உறுப்பினர்.—*29.*

வோல்ஸ்கி [Volsky], வி.கா. *(பி.1877)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர். அரசியல் நிர்ணய சபை உறுப்பினர். சமாராவில் இருந்த அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களின் எதிர்ப்புரட்சி கமிட்டியின் தலைவர். இக்கமிட்டி 1918 கோடையில் அன்னியத் தலையீட்டாளர்களின் உதவியுடன் வோல்கா உரால் மாவட்டங்களில் தனது அரசதிகாரத்தை நிறுவியது. பின்னுல் சோவியத் ஆட்சியை எதிர்த்த போராட்டத்தைக் கைவிட்டார்.—*360, 361.*

ஷெய்டெமன் [Scheidemann], ஃபிலிப் *(1865-1939)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் கடைகோடியான வலதுசாரி, சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். 1918 நவம்பர் மாதத்தில் ஜெர்மனியில் புரட்சி நடந்தபோது மக்கள் பிரதிநிதிகள் கவுன்சில் எனப்பட்டதன் உறுப்பினர். இதன் செயல்பாடுகள் எதிர்ப்புரட்சி முதலாளிகளின் நலன்களுக்கு ஏற்ப நடைபெற்றன. 1919 பிப்ரவரி-ஜூன் கட்டத்தில் வெய்மார் குடியரசின் கூட்டு அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கினுர், 1918-1921ல் ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தை எதிர்த்து மூர்க்கமான அடக்குமுறையை ஏற்பாடு செய்தவருள் ஒருவர்.—*33, 87, 90, 91, 98, 101, 109, 110, 112, 113, 182, 183, 191, 202, 207.*

ஷேர் [Sher], வி.வி. *(1884-1940)*—சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மத்திய சங்கம், தலைமை பொருளாதார கவுன்சில் மற்றும் அரசு வங்கியில் பணி புரிந்தார்.—*333.*

ஷ்டைன் (ருபின்ஷ்டைன்), அ. *(1881-1948)*—மென்ஷிவிக். 1906ல் ருஷ்யாவில் இருந்து ஜெர்மனிக்குக் குடியேறினுர். 1917ல் ஜெர்மனியின் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தார். அதன் மத்திய ஏடான *Freiheit* (''சுதந்திரம்'') பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கு எதிராக ஜெர்மன் மையவாதிகள் நடத்திய அவதூறுப் பிரசாரத்தில் தீவிரப் பங்கு பற்றினுர்.—*55, 66, 67, 150.*

ஷ்மித் [Shmidt], வசிலி விளதீமிரவிச் *(1886-1940)*—1905 முதல் போல்ஷிவிக், 1918-1928ல் தொழிற்சங்கங்களின்

அகில ருஷ்ய மத்திய கவுன்சில் செயலாளராகவும் பிறகு தொழில் கமிசாராகவும் பணி புரிந்தார். *1928* முதல் சோவியத் யூனியன் மக்கள் கமிசாரவையின் உதவித் தலைவராக இருந்தார்.—*220.*

ஸாக்ஸ் [Zax], **கி. தி.** *(1882-1937)*—சோஷலிஸ்டுபுரட்சி யாளர். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் அமைப்பாளருள் ஒருவர். *1918* ஜூலை இடதுசாரி சோஷ லிஸ்டு-புரட்சியாளர் கலகத்தில் தீவிரமான பங்கு பற்றி னர். *1918* நவம்பரில் போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தார். —*118.*

ஸினேவியெவ் (ரடோமீஸ்லிஸ்கி) [Zinoviev (Radomyslysky)], **கிரிகோரி யெவ்சேயெவிச்** *(1883-1936)*—*1901* முதல் ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குத் தயாரிப்பு நடை பெற்ற காலத்தில் ஊசலாடினர், ஆயுதமேந்திய எழுச்சியை எதிர்த்து நின்றார். ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியைப் பிரகடனம் செய்த மத்தியக் கமிட்டியின் தீர்மானத்தை ஏற்க மறுத்து அரை மென்ஷிவிக் பத்திரிகையான ''புது வாழ்வு'' ஏட்டில் காமெனெவ் தன் பெயராலும் ஸினேவியெவின் பெயராலும் அறிக்கை வெளியிட்டது மூலம் கட்சியின் இரகசிய முடிவை வெளிப்படுத்தியது புரட்சிக்கு விளைத்த துரோகமாகும்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பல முக்கிய பதவிகள் வகித்தார். பல முறை கட்சியின் லெனி னியக் கொள்கையை எதிர்த்துப் பேசினர். *1917* நவம் பரில் மென்ஷிவிக்குகளும், சோஷலிஸ்டு-புரட்சியாளரும் பங்கு பெறக் கூடியதான கூட்டு அரசாங்கம் உருவாக்கப் படுவதை ஆதரித்தார். *1925* ''புதிய எதிர்ப்பணி'' அமைப் பாளரில் ஒருவராக இருந்தார். *1926*ல் கட்சி விரோத திரோத்ஸ்கி-ஸினேவியெவ் கூட்டின் தலைவர்களில் ஒரு வர். *1934*ல் அவரது கட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளுக் காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—*7, 9.*

ஸ்துரூவே [Struve], **பியோத்தர் பெர்ங்கார்தவிச்** *(1870-1944)*— ருஷ்ய முதலாளித்துவப் பொருளியலாளர், பொது விவகார எழுத்தாளர். காடேட்டுகள் கட்சியின் தலைவர் களில் ஒருவர். *1890*ஆம் ஆண்டுகளில் ''சட்ட பூர்வ மார்க்சிய''த்தின் — பெர்ன்ஷ்டைன்வாதத்தின் அடிப் படையில் ருஷ்யாவில் ஏற்பட்ட போக்கின்—தலைசிறந்த பிரதிநிதி. ருஷ்யாவின் ஏகாதிபத்தியத்தின் சித்தாந்தவாதி

களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு விருங்கலின் எதிர்ப்புரட்சி அரசாங்கத்தின் உறுப்பினர். பின்னுல் நாட்டைவிட்டு வெளியேறினுர்.—*8.*

ஸ்வின்ஹுஃவுட் [Svinhufvud], பேர் எவீன்ட் *(1861-1944)*—பின்லாந்தின் அரசியலாளர், அரசறிஞர். *1917-1918*ல் பின்னிஷ் முதலாளித்துவ அரசாங்கத் தலைவர். இந்த அரசாங்கம் பின்னிஷ் தொழிலாளர் புரட்சிக்கு எதிராகக் கடுமையான பயங்கர அடக்குமுறைகளை ஏவிவிட்டது.—*204.*

ஹாஸே [Haase], குகோ *(1863-1919)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் ஒரு சந்தர்ப்பவாதத் தலைவர். முதல் உலகப் போரின் போது மையவாதி. *1917* ஏப்ரலில் ஜெர்மனியில் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியை நிறுவும் பணியில் பங்கு கொண்டார். *1918* நவம்பர் புரட்சியின் போது ஹாஸே மக்கள் பிரதிநிதிகள் கவுன்சில் எனப்படுவதன் உறுப்பினராக இருந்தார். இந்த அமைப்பு உண்மையில் புரட்சி இயக்கத்தை அடக்கும் கொள்கையை நிறைவேற்றியது.—*93, 102.*

ஹில்ஃபெர்டிங் [Hilferding], ருடோல்ஃப் *(1877-1941)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகம் இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவருள் ஒருவர். சந்தர்ப்பவாதத்தில் ஒரு போக்கான ஆஸ்திரோ-மார்க்சியம் எனப்படுவதன் தத்துவாசிரியர். *1917* முதல் ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயக கட்சியின் தலைவர்.—*185, 190.*

ஹின்டன்பர்க் [Hindenburg], பாவுல் *(1847-1934)*—ஜெர்மன் அரசியல் மற்றும் இராணுவப் பிரமுகர், ஜெனரல் பீல்டு மார்ஷல். ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் தேசியவெறி பிற்போக்கு ஆகியவற்றின் பிரதிநிதி. முதல் உலகப் போரின் போது கீழ்த்திசைப் போர் முனையில் ஜெர்மன் சேனையின் தலைவர். பிறகு இராணுவத் தலைமை அகத்தின் தலைவர். சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீட்டை ஏற்பாடு செய்தவர். ஜெர்மனியில் *1918* நவம்பர் புரட்சியை அடக்குவதில் பங்கு பற்றினுர். *1925-1934*ல் வெய்மார் குடியரசின் அதிபர்.—*318.*

ஹெண்டர்சன் [Henderson], ஆர்தர் *(1863-1935)*—பிரிட்டிஷ் அரசியல்வாதி, தொழிற் கட்சி மற்றும் ஆங்கிலத் தொழிற்சங்க இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர். *1917* முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கிளர்ச்சி செய்

வதற்காக ருஷ்யாவுக்கு வந்தார். 1919 பேர்ன் அகிலத்தினை நிறுவியவர்களில் ஒருவர். பல தடவைகள் பிரிட்டனின் முதலாளித்துவ அரசாங்கங்களில் பதவி வகித்தார். — *33, 87, 101, 112.*

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41. பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600 098.

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600 002.

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625 001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641 001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620 008.
செர்ரி ரோடு, சேலம்—636 001.

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

அடுத்து வரும் வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பத்தாவது தொகுதியில் அரசு, பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளியலும் அரசியலும், ''இடதுசாரி'' கம்யூனிசம் இளம் பருவக் கோளாறு முதலியவை இடம் பெறுகின்றன.